# ZION

# INTERNATIONAL SEMINARY

MATURE AND SERVE

## B.Th.

# மேய்ப்புபணி இறையியல்

## V Semester

ziontheology@gmail.com  9994172553

# ZION
# INTERNATIONAL SEMINARY

MATURE AND SERVE

# B.Th.

## <u>ஆய்வுக் கட்டுரைகள்</u>

# மேய்ப்புபணி இறையியல்

1. மேய்ப்புபணி இறையியலில், பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரிகள் மற்றும் மேய்ப்பனின் பண்புகள் என்கிற தலைப்புகளின் அடிப்படையில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் ஆய்வு கட்டுரை எழுதுக.

2. மேய்ப்புபணி இறையியலில் மேய்ப்பனின் செயல்பாடுகள் மற்றும் மேய்ப்பனுக்கான சவால்களும் சோதனைகளும் என்கிற தலைப்புகளின் அடிப்படையில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் ஆய்வுக்கட்டுரை எழுதுக.

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - 1

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். மேய்ப்புபணி இறையியல் என்ற பாடத்தை நாம் தொடர்ந்து கற்றுக்கொள்ளப்போகிறோம். மேய்ப்புபணி இறையியல் மிக மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. அதன் முக்கியத்துவம், அதை படிப்பதினால் நமக்கு ஏற்படுகின்ற ஆசீர்வாதங்கள், வேதத்தில் அதைக்குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கிறது? நாம் அதை எந்தளவுக்கு கடைப்பிடிக்கிறோம்? எந்தளவுக்கு கடைப்பிடிக்கவில்லை, மட்டுமல்ல இனிவரும் காலங்களில் என்ன செய்யப்போகிறோம்? என்றெல்லாம் படிக்க இருக்கிறோம். மேய்ப்புபணி என்றவுடன், நீங்கள் போதகரை மட்டும் நினைக்காமல், ஒருவேளை நீங்கள் இருக்கிற இடங்களிலே, இது பயனுள்ளதாக இருக்கிறது என்ற கண்ணோட்டத்துடன் படிக்கவேண்டியது அவசியம். மேய்ப்பர்களுக்கு இது அதிக, அதிகமாக உதவியாக இருக்கப்போகிறது, மேய்ப்பர்களுக்கு, போதகர்களுக்கு, ஊழியம் செய்கிறவர்களுக்கு பயனுள்ள பாடம் இது.

நீங்களும் ஊழியம் செய்ய வாஞ்சையுள்ளவர்கள்தான், ஊழியம் செய்துகொண்டிருக்கிறவர்களும் படிக்கிறீர்கள். ஆக, உங்களுடைய ஊழியம் எதுவாக இருந்தாலும் இது நிச்சயமாய் உதவியாகத்தான் இருக்கப்போகிறது. ஆகவே, மிகக் கவனமாக கற்றுக்கொள்ளுங்கள். பாடங்களை கவனமாக கற்றுக்கொண்டு, தேவைப்பட்டால், குறிப்புகளையும் எடுத்துக்கொள்ளுங்கள். புதிதாய் கற்றுக்கொண்ட காரியங்களை எழுதிவைத்துக்கொண்டு, உங்கள் ஊழியங்களில் பயன்படுத்திப் பாருங்கள், அது ஆசீர்வாதமாக இருக்கும். மேய்ப்புபணி இறையியல் என்றால் என்ன? என்பதை முதலாவது நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மேய்ப்புபணி இறையியல் என்று நாம் சொல்லும்போது, அதுவொரு மேய்ப்பனுடைய பொறுப்புகள், மேய்ப்பனுடைய செயல்பாடுகள், அதைப்போல மேய்ப்பனுடைய வாழ்க்கை போன்ற எல்லாவற்றையும் குறித்து படிக்கின்ற, போதிக்கின்ற ஒன்றுதான் மேய்ப்புபணி இறையியல்.

ஒரு மேய்ப்பனுடைய வாழ்வை முற்றிலுமாக இது நிர்ணயித்து சொல்லித் தருகிறது. இதைப்படிக்கும்போது, ஒரு ஊழியனுடைய வாழ்வைப் புரிந்துகொள்ள முடியும். மேய்ப்பனாக என்ன செய்யவேண்டும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். ஏனெனில் இது உங்களுடைய செயல்பாடுகளை, பொறுப்புகளை மற்றும் பணிகளைக் குறித்தும், எவ்விதமாக வாழவேண்டும் என்பதையும் இது கற்றுத் தருகிறது. இருளின் அந்தகாரத்திலும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலையாக்கும் ஒரு முக்கியமான

ஊழியம்தான் மேய்ப்புப்பணி ஊழியம். ஜனங்களை மகிழ்ச்சி நிறைந்த பாக்கியமுள்ள வாழ்வுக்குள் வழிநடத்துகிற ஒரு ஊழியம் இது. அதேவேளையில் ஜனங்களை பாவத்திலிருந்து மீட்டெடுத்த அந்த காரியத்தோடு அது நின்றுவிடாமல், சீஷத்துவ வாழ்க்கையை இந்த மேய்ப்பன்தான் கற்றுக்கொடுக்கிறார். பரிசுத்தம் நிறைந்த வாழ்க்கைக்குள்ளாக, இவர்தான் போதித்து, ஆலோசனை கொடுத்து வழிநடத்துகிறார். ஒரு பெரிய பொறுப்பை ஆற்றவேண்டிய இடத்திலே மேய்ப்பன் இருக்கிறார்.

மேய்ப்பனுடைய பணியைப் பற்றிய இந்த இறையியல், தனித்துவம் உள்ளதாக இருக்கிறது. ஏனைய படிப்புகளை நாம் படித்திருக்கிறோம். மேய்ப்பு ஆலோசனைப்பணி, பிரசங்கவியல், உளவியல், மனிதவியல் போன்ற அநேக பாடங்களை கடந்த பருவங்களில் படித்திருக்கிறீர்கள், அது உங்களுக்கு நினைவிருக்கலாம். அதோடுகூட இந்த மேய்ப்புபணி இறையியல் தொடர்புள்ளதாகத்தானிருக்கிறது. ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும், எல்லா இறையியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவே இருக்கும். ஏனெனில் எல்லாமே ஊழியத்தைக் குறித்துதான் சொல்லுகிறது. ஆகவே பிரிக்க முடியாத தொடர்புகள் ஒன்றுக்கொன்று காணப்படுகிறது. ஆனாலும் நாம், இந்த மேய்ப்புபணி இறையியல் ஒரு விசேஷித்த இறையியல் என்று சொல்லலாம். எவ்வாறென்றால், இறையியலில் காணப்படுகிற வெவ்வேறு நெறிகளை ஒன்றுதிரட்டி, சிறப்பான கிறிஸ்தவ சேவையை நோக்கி கொண்டுசெல்லுகின்ற ஒன்றுதான் மேய்ப்பு பணி இறையியல். ஆக, எல்லா இறையியல் பிரிவுகளையும், ஒன்றாக சேர்த்து ஒரு சிறப்பான கிறிஸ்தவ ஊழியத்தை, தேவனுடைய பணியை செய்கிறதுதான் மேய்ப்புபணி இறையியல் என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இந்த மேய்ப்புபணி இறையியல் என்ற பதத்தை நாம் சற்று கவனமாக ஆராயும்போது, 2 விஷயங்களை தெளிவாக அறிந்துகொள்ள முடியும். அது இறையியலை அதாவது, மேய்ப்புபணி இறையியல் என்று சொல்கிறதினால், அதில் இறையியல் இருக்கிறது. இவைகளைப் பற்றிய படிப்புதான் இறையியல் என்று ஏற்கனவே நாம் படித்திருக்கிறோம். ஆகவே, இதுவொரு மேய்ப்புபணி செய்கின்ற, இறைப்பணி செய்கின்றதைக் குறித்த உபதேசமாய் இருக்கின்றது. இயேசுகிறிஸ்துவினுடைய பிறப்பு, மட்டுமல்ல தேவனுடைய காரியங்கள் எல்லாம், சரித்திரத்தோடு தொடர்புடைய காரியங்கள். வரலாற்றுக்கும், தேவனுக்கும் சம்பந்தம் இருக்கிறது. இதை, நாம் இயற்கையாகவே உண்டானது என்றுதான் நாம் படிக்கிறோம். ஆனால் வேதம் சொல்லுகிறது, ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் படைத்தார் என்றுதான் நாம் ஆதியாகமத்திலிருந்து வாசிக்கிறோம் அவர்தான் இந்த பூமியை உண்டாக்கினார். அவர் ஆரம்பித்த வரலாறு, இனி வரப்போகிற நிகழ்வுகள், நோக்கிப்போகிற வரலாறு எல்லாம் அதில் இருக்கிறது. இறைவனுடைய இயல்பு அல்லது தன்மை மேய்ப்பு பணியிலும் வெளிப்பட வேண்டும்

என்றுதான் நிறைய காரியங்களை, அதாவது, ஒரு மேய்ப்பர் எவ்விதமாக இருக்கவேண்டும்? என்ன பணியை எடுத்து, நிர்வாகத்தை செய்யவேண்டும்? என்பதைப் பற்றி நமக்கு கற்றுத்தருவதினால், இது இறைவனிடமிருந்து பெறப்பட்ட காரியமாக இருக்கிறபடியால், இதுவொரு இறையியல்.

மேய்ப்பு பணி என்பது ஒரு இறையியல். அதோடுகூட ஒரு மேய்ப்பனுடைய பதவி, பணிகள், செய்யவேண்டிய கடமைகள் போன்றவற்றை இது ஆராய்ந்து நமக்கு போதிக்கிறபடியினால், இதை மேய்ப்பு பணி என்று நாமறிகிறோம், புரிந்துகொள்கிறோம். மேய்க்கின்ற பணி இதில் காணப்படுகிறது. அதைப்போல, இந்த மேய்க்கின்ற பணியானது எவ்விதமாய் தேவன் எதிர்பார்க்கின்ற விதமாய் இது செயல்படவேண்டுமென்று சொல்லுகின்றபடியால், இது இறையியலாய் இருக்கின்றது. ஆகவே மேய்ப்புபணி இறையியல் என்ற சொல், இவ்விதமான அர்த்தம் உடையதாய் காணப்படுகிறது. பிரியமானவர்களே, மேய்ப்பன் தேவனுடைய பணியைச் செய்கிறவர் என்று நமக்குத் தெரியும். ஆனால், தம் இஷ்டப்படி வாழ்வதற்காக, தனிப்பட்ட ஒருவரின் விருப்பு, வெறுப்பின்படி வாழ்வதற்காக செய்யப்படுகிற ஊழியமல்ல அது. வேதத்தின்படி, தேவ திட்டத்தின்படி சபையில் செய்யவேண்டிய பணி அது. இந்த மேய்ப்பு பணி இறையியலை நாம் செயல்முறை இறையியல்(Practical Theology) என்றும் சொல்லலாம். ஆக, இது நடைமுறையான ஒரு இறையியலாகவும் இருக்கிறது. ஏனெனில், வேதத்தில் நாம் பயிலுகின்ற காரியங்களை அல்லது ஒரு போதகர், மேய்ப்பன் என்ன செய்ய வேண்டுமென்று போதிக்கப்பட்ட காரியத்தை அவர் செயல் வடிவத்திற்கு கொண்டு வருகிறார். அவர், செயல் வடிவத்தில் கொண்டுவருகிறது மாத்திரமல்ல, சபையின் நிகழ்வுகள் ஒவ்வொன்றையும், வேதத்தின் அடிப்படையிலேயே அமைக்கிறார். வேத தியானம், வேதாகம கற்றல்(Bible Study), பிரசங்கம், சாக்கிரமந்துகள், சபை ஒழுங்கு, நிர்வாகம், சபை மேம்பாட்டிற்காக செய்கிற காரியங்கள் போன்ற ஒவ்வொன்றையும் வேதத்தின் அடிப்படையில் செயல்பாட்டுக்கு கொண்டுவருகிறார். அதை நடைமுறைப்படுத்துகிறார். செயல்முறையாக மாற்றுகின்றபடியால், இது செயல்முறை இறையியல் என்றும் சொல்வார்கள்.

இந்த மேய்ப்பு பணி இறையியல் எதைச் சொல்லிக் கொடுக்கிறது என்றால், எந்த வகையான செயல்கள் சபையில் செய்யப்பட வேண்டும், அது யாரால் செய்யப்பட வேண்டும்? ஏன் செய்யப்பட வேண்டும்? எப்படி செய்யப்பட வேண்டும்? என்கிற அனைத்தையும் இந்த இறையியல் தெளிவுபடுத்துகிறது. இந்த பாடத்தைப் படிக்கிற நீங்கள், இதையெல்லாம் கற்றுக்கொள்ளப்போகிறீர்கள். ஒரு சபையில் நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்தாலும், இது உங்களுக்கு தேவைதான். சபையின் காரியங்கள் எப்படிப் போகவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்பதின் அடிப்படையில் நீங்கள் கற்றுக்

கொள்வதினால், ஒரு சபையின் நிர்வாகம் இப்படிப்போகும் என்று நீங்கள் கற்றுக்கொள்ள முடியும், பயன்படுத்த முடியும். ஆகவே இதையெல்லாம் சொல்லித்தருகிற ஊழியர்களைப் பயிற்றுவிக்கிற ஒரு இறையியல்தான் இந்த மேய்ப்பு பணி இறையியல் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். குறிப்பாக நீங்கள் கவனிக்க வேண்டுமானால், இது மேய்ப்பு பணி இறையியல் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். குறிப்பாக நீங்கள் கவனிக்கவேண்டுமானால், இந்த மேய்ப்புபணி இறையியல், சபையின் ஒவ்வொரு காரியங்களிலும், ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் நமக்கு உதவியாக இருக்கிறது. அதைச் செய்வதற்கு விசுவாசிகளை, ஊழியர்களை இந்த, மேய்ப்பு பணி இறையியல்தான் பயிற்சி கொடுக்கிறது. குறிப்பாக பிரசங்கயியல் என்ற பாடத்தை நீங்கள் படித்திருக்கிறீர்கள். இதன் வழியாக, எப்படி தேவனுடைய வார்த்தையை ஒரு விசுவாசி, ஊழியர் பகுத்து போதிக்கவேண்டுமென்பதை இந்த மேய்ப்பு பணி இறையியல் சொல்லிக் கொடுக்கிறது. அவ்வாறு கற்பித்தல் பணி செய்கையில், வெவ்வேறு வயதுடைய மக்கள் சபையில் இருப்பார்கள். அவர்கள் செய்யவேண்டிய பணியை கற்றுக்கொடுப்பது, இந்த மேய்ப்புபணி இறையியல்தான். அதைப்போல, சபையை பராமரிப்பது, ஆலோசனை கொடுத்து, அந்த மக்களின் ஆத்துமாக்களை நடத்துவது போன்ற பணியை மேய்ப்பு பணி என்ற இறையியல் பாடத்தின் வழியாக, அந்த போதனைகள் வழியாகத்தான் செய்கிறார்கள். இல்லாவிட்டால் அந்த ஊழியருக்கு அந்த பயிற்சியைக் கொடுத்து செயல்பட வைக்கிறார்கள். சாக்கிரமந்துகள், சபை ஒழுங்குகள் போன்ற காரியங்களை எப்படி நடத்துவது என்பது பற்றியும் இந்த மேய்ப்பு பணி இறையியல்தான் சொல்லிக் கொடுக்கிறது.

இன்னும்கூட சபை என்பது தனிப்பட்ட காரியமல்ல, அதுவொரு சமூகத்தோடு இணைந்தது. ஆனால் இன்றைக்கு பார்க்கும்போது, சபையை, சமூகத்தைவிட்டு பிரித்து, அவர்கள் ஒரு தனி இராஜ்ஜியமாக, தனிக்குடும்பமாக வாழ்வதுபோல இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் நீங்கள் சமூகத்தோடு, சமூக நற்பணியில் ஈடுபட்டால்தான், ஆத்துமாக்களை சேகரிக்க முடியும், மட்டுமல்ல அந்த மக்களோடு இணைந்ததுதான் இந்த மேய்ப்பு பணி இறையியல்தான். ஆம், சமுதாய மேம்பாட்டிற்கான வழிமுறைகள் என்ன? அதற்கான திட்டங்கள் என்னென்ன என்று சொல்லித் தருவதுதான், இந்த மேய்ப்புபணி இறையியல். இதிலிருந்து மேய்ப்பு பணி இறையியல் என்பது, வெறுமனே ஒரு படிப்பு, வெறுமனே சொல்லித்தருகிற வரைவிலக்கணங்கள் என்று நீங்கள் நினைக்க இயலாது என்பதைப் புரிந்து இருப்பீர்கள். எவற்றை, யார், எப்படி செய்ய வேண்டும்? என்கிற காரியங்களை இது சொல்லித் தருகிறதோடுகூட, நடைமுறையாக, செயல்முறையாக, செயல்படுத்தக்கூடிய ஒரு இறையியலாக இந்த மேய்ப்பு பணி இறையியல் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள். மேய்ப்பு பணி என்பது இறையியலோடு சம்பந்தப்பட்ட விஷயம். அதில் பிரசங்கவியல், கற்பித்தல் பணி, மேய்ப்பு ஆலோசனைப் பணி, அதைப்போல சாக்கிரமந்துகள், சபை ஒழுங்குகள் எல்லாவற்றையும்

இந்த இறையியல்தான் உங்களுக்கு சபைக்குள்ளாக கற்றுத் தருகிறது. ஆகவே இறையியலை ஒதுக்கிவிட்டு, நாம் மேய்ப்பு பணியினை செய்ய முடியாது. இன்றைக்கு இறையியலைப் படிக்காத எத்தனையோ ஊழியர்கள், ஊழியம் செய்ய விரும்புகிறார்கள், ஊழியம் செய்கிறார்கள். நீங்கள் நல்லவர்கள், ஏனெனில் இப்போது படித்துக்கொண்டு இருக்கிறீர்கள். அவ்வாறு இறையியலைப் படிக்காமல் ஊழியம் செய்வது, முழுமையான ஊழியமாக இருக்க முடியாது பிரியமானவர்களே. ஆகவே, இறையியலை ஒதுக்கிவிட்டு, ஒரு மேய்ப்புபணி செய்வது என்பது ஒரு முழுமையான பணியல்ல. நம்முடைய மேய்ப்பு பணியில், குறிப்பாக சபை ஊழியம் செய்கிற மேய்ப்பர்கள், இறையியல் அல்லது வேதாகமம் அடிப்படையிலான ஒரு ஊழியத்தைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. இறையியல் அடிப்படையில் செய்யவேண்டும். இறையியல் என்றால் என்ன? வேதத்தினுடைய உபதேசத்தின் அடிப்படையில் இந்த மேய்ப்பு பணி அமைய வேண்டும். மேய்ப்பு பணி என்றால் என்ன என்றே தெரியாமல் அநேகர் மேய்ப்பர்களாய் இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் சொல்கிற விஷயம், ஆவியானவர் என்னை அனுப்பினார் என்கிறார்கள். நல்லது, ஊழியர்களை அனுப்புவது ஆவியானவர்தான். ஆனால் அதற்காக வேதத்தைப் படிக்க கூடாது என்று கர்த்தர் சொல்லவில்லையே. வேதத்தை முழுமையாகவும், சரியாகவும் அறிவதற்கு உதவுவதுதான் இந்த இறையியல் வேதாகம கல்லூரி. ஆகவே, நீங்கள் இதை முழுமையாகப் பயன்படுத்துகிறீர்கள். அநேகரைப் பயன்படுத்தவும், தயவுசெய்து நமது கல்லூரிக்கு அவர்களை அழைத்து வாருங்கள், அறிமுகம் செய்து வையுங்கள்.

அடுத்து, மேய்ப்புபணி ஊழியத்திற்கான வேதாகம அடிப்படையை சற்று பார்ப்போம். எந்தவொரு காரியமாக இருந்தாலும் அது வேதத்தின் அடிப்படையில் இருந்தால்தான், நாம் நம்பவேண்டும், விசுவாசிக்க வேண்டும், அதை வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டும். வேதத்தின் அடிப்படையில் இல்லாததையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. எந்தவொரு உபதேசமாகவும் இருக்கட்டும், ஊழியமாக இருக்கட்டும், அது வேதாகம அடிப்படையில் இல்லையென்றால், அது குழப்பத்தையும், வெறுமையையுமே கொண்டுவந்துவிடும். அது மனித மூளையில் உருவான காரியமாக இருக்கும். அது தேவன் எதிர்பார்க்கிற விளைவைத் தராது. ஆனால் இந்த மேய்ப்பு பணி ஊழியம் நிச்சயமாய் வேதத்தின் அடிப்படையிலானது என்பதை நாம் இப்போது சற்று சிந்திக்கப் போகிறோம். இன்றைய காலகட்டத்தில் அநேக உபதேசங்கள், பலதரப்பட்ட குழப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். ஏற்கனவே மக்கள் நோய் பீதியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற நேரம். கொரோனா என்ற நோயினால் மக்கள் பயந்து நடுங்கி வெளியே வருவதற்கே வாய்ப்பில்லாதபடி, வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கிற ஒரு காலகட்டத்தில் நாமிருக்கிறோம். அதற்கு மத்தியில் எல்லோருமே ஆன்லைனில் இஷ்டம்போல, ஆடியோவை, வீடியோவை ஏற்றிவிடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஒரு

காலகட்டத்தில், சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர், அதற்கு சரியான ஸ்டுடியோ இருந்து, அதைப் பதிந்து, அதை யூடியூப்பில் ஏற்றிவிடுவதற்கு யாருக்கும் தெரியாது. அப்படியொரு வாய்ப்பும் அந்த காலகட்டத்தில் இல்லை. அந்த காலத்தில் சிடி தான் வெளியிட வேண்டும். அதை சிடி பிளேயர் வைத்து, அதிலுள்ளவைகளைப் பார்க்க வேண்டும். இவ்வாறு பல காரியங்கள் இருந்ததினால், மீடியா ஊழியங்கள் அதிக வளர்ச்சியைப் பெறாமல் காணப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஒரு ஆன்ட்ராய்டு மொபைல் மட்டும் இருந்தால் போதும். அப்படியே நல்லதொரு வீடியோவை பதிந்து, டிரைவில் சேமித்துவிட்டு, அதனுடைய லிங்கை பகிர்ந்துவிட்டு, கேளுங்கள் என் செய்தியை என்று சொல்லப்படுகிற இடத்தில் இன்றைக்கு நாம் இருக்கிறோம்.

ஆகவே, பயிற்சி பெறாத ஊழியர்களும், இந்த ஆன்லைன் ஊழியத்தில் வந்துவிடுகிறார்கள். தங்களுக்கு தெரிந்த ஏதோவொரு போதனையை வெளியிடுகிறார்கள். மக்களை கவர்ந்து இழுப்பதற்காக ஆடிப்பாடி, விசிலடித்து கொண்டாடி, இப்படி வேதத்தை தவிர மற்ற எல்லா கேடுகளையும் செய்துவிடுகிறார்கள். அதனால் உபதேச குழப்பங்கள் நிரம்பிய ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். வேதாகமம் போதிக்கிற அடிப்படையான சத்தியங்கள் இன்றைக்கு போதிக்கப்படவில்லை. மிக அடிப்படையான சத்தியங்கள்கூட இன்றைக்கு அசைக்கப்படுகின்றன, காரணம் அவர் மூலமாக சில அற்புதங்கள் நிகழ்ந்து விடுகிறது. ஆக, இப்போது அவர் சொல்லுகிறதுதான் வேதம். வேதம் சொல்லுகிறதுகூட முக்கியமல்ல, அந்த ஊழியர் சொல்லிவிட்டார் அல்வா? அவர் மூலமாக கர்த்தர் எத்தனையோ பேர்களை சுகமாக்கியிருக்கிறார், என்று சொல்லி அவர்களின் போதனைகளை வேதவாக்காக எடுக்கிற காலம் இது. அவர் என்ன உபதேசத்தைச் சொன்னாலும் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். பிரியமானவர்களே, அற்புதத்தை வைத்து நீங்கள் கணக்கிடாதீர்கள். வேதத்தை அவர் எந்தளவுக்கு உபதேசிக்கிறார் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். யார் உபதேசித்தாலும், சரியாக, வேதத்தில் சொல்லப்பட்டபடிதான் பேசுகிறாரா? என்று பார்க்க வேண்டியது அவசியம்.

இன்றைய ஊழியங்கள் வேதத்தின் அடிப்படையில் காணப்படாதபடி அநேகம் காணப்படுகிறது என்பது நமக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் இன்று நாம் படிக்கிறோமே, மேய்ப்பு பணி இறையியல், அதாவது மேய்ப்பனுடைய ஊழியத்தை செய்கிறவர்களுடைய அந்த ஊழியம் இறையியல் அடிப்படையிலானது, வேதத்தின் அடிப்படையிலானது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொண்டால்தான், நாம் அப்படியே நம்பி செயல்படுத்த முடியும். ஆகவே அந்த தெளிவைப் பெற்றுக் கொள்வதற்காக ஒருசில காரியங்களை நாம் இங்கு கற்றுக்கொள்ளப்போகிறோம். வேதாகமத்தினுடைய வசனத்தின் வெளிச்சத்திலே நாம் அதை காணவேண்டும். அதனடிப்படையில் எந்தவொரு

ஊழியர்களாக இருந்தாலும், நாம் அதை முழு ஈடுபாட்டோடு செய்யலாம். ஆனால் இந்த மேய்ப்பு பணி இறையியலை நாம் படிக்கும்போது, நாம் உண்மையாகவே, அதைத் தெள்ளத்தெளிவாக வேதத்தின் அடிப்படையிலானது என்பதை நாம் பார்க்க முடிகிறது. பழைய ஏற்பாட்டிலிருந்து முதலில் சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

மேய்ப்பு பணியைக் குறித்து நாம் பழைய ஏற்பாட்டை ஆராயும்போது, அதில் அநேக ஆதாரங்கள் இருக்கிறதை நாம் பார்க்க முடிகிறது. தேவன் தாம் தெரிந்தெடுத்த ஜனங்களை பராமரித்து, வளர்ப்பதற்காக அநேக ஊழியர்களை ஏற்படுத்தி, நியமித்து நடத்தினதை நாம் பார்க்கிறோம். உதாரணமாக, மோசே, யோசுவா, மற்றும் அநேக நியாயாதிபதிகளை நாம் பார்க்க முடியும். எண்.27:18-23 போன்ற வசனங்களை சற்று வாசித்துப் பாருங்கள். அதைப்போல எரேமியா, எசேக்கியேல் போன்ற நூல்களில் நீங்கள் பார்க்கும்போது, ஜனங்களின் தலைவர்கள், மேய்ப்பர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். மேய்ப்பர் என்று அன்றே அழைக்கப்பட்டு, அவர்கள் ஜனங்களை நடத்துவதற்காக தேவன் பயன்படுத்தினதைப் பார்க்கிறோம். இதில் அநேக தலைவர்களான மேய்ப்பர்கள் சரியாய் நடத்தினவர்களும் உண்டு, சிலர் தவறான வழிகளில் சென்று அவர்களும் வீழ்ந்துபோய், மற்றவர்களையும் வாழ்வுபெறச்செய்த சம்பவங்களையும் நாம் பார்க்க முடிகிறது. நீங்கள் இதற்கு உதாரணமாக எரே.3:15, 10:21, 12:10, 23:1-4 போன்ற வசனங்கள் மற்றும் எசேக்கியேல் 34-ம் அதிகாரம் போன்ற வசனங்களில் பார்க்க முடியும். சபையானது கட்டுக்கோப்புக்குள் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த காரியங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதை நாம் பார்க்க முடியும். நியாயாதிபதி, தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், இராஜாக்கள் போன்ற அநேகரை கர்த்தர் ஏற்படுத்தி, அநேக ஒழுக்கநெறிகளை கற்றுக்கொடுத்து அவர்கள் அதை மீறிப்போகும்போது, கண்டித்து உணர்த்தி, அதையும் தாண்டிப்போகும்போது, தண்டித்து உணர்த்தி மனந்திரும்பும்போது, அவர்களை சரியான வழியில் கொண்டு சென்றதையும் நாம் பார்க்கிறோம். கர்த்தர் இந்த மனிதர்களையெல்லாம் பயன்படுத்தி, தம்முடைய ஜனங்களை பராமரிக்கிறதிலும், நடத்துகிறதிலும், அழைத்த அழைப்பில் அவர்களை சரியாய் கொண்டுபோய்ச் சென்று அவர்களை நடத்திச் செல்வதற்கு பயன்படுத்தினதையும் நாம் பார்க்கிறோம்.

நீங்கள் பஞ்சாகமத்தில் பார்த்தீர்களானால், அதாவது வேதாகமத்தின் முதல் 5 ஆகமங்களில் பார்ப்பீர்களானால், அநேக சட்டதிட்டங்களும், அநேக அறிவுறுத்தல்களும் தேவனிடமிருந்து வருகிறதையும், அதை மோசே போன்ற தேவ மனிதர்கள் சொல்லி மக்களை நடத்துகிறதையும் நீங்கள் பார்க்க முடியும். இதுதான் மேய்ப்பனுடைய பணிக்கு அடிப்படையாய் இருக்கிறது. இன்னும் பல காரியங்களையும் நாம் பார்க்கலாம். பழைய ஏற்பாட்டில் நீங்கள் தீர்க்கதரிசிகளைப் பார்ப்பீர்களானால், அவர்கள் அநேக காரியங்களை இராஜாக்கள் முன்பு வந்து நின்று சொல்லுகிறதை, எச்சரிக்கிறதை நாம் வாசித்துப் பார்க்க

முடியும். பெரிய மற்றும் சிறிய தீர்க்கதரிசிகள் போன்ற எல்லோருமே இந்த ஊழியத்தை செய்தார்கள். கர்த்தர் அவர்களை பயன்படுத்தினார். அவர்களைக்கொண்டு, அதாவது தீர்க்கதரிசிகளைக் கொண்டு சமூக ரீதியிலான காரியங்களை மதம் சம்பந்தப்பட்ட யெகோவா தேவன் சொல்லுகின்ற அந்த காரியங்களைக் கூறி, மாறுதலை ஏற்படுத்த தேவன் விரும்பினார். அவர்களைக் கருவியாக கர்த்தர் பயன்படுத்தினதை நாம் பார்க்கிறோம்.

மட்டுமல்ல, அன்று தேவன் எவ்விதமாய்ச் செயல்பட்டாரோ, அதேப்போல் இன்றும் பரிசுத்தம், நீதியை அடிப்படையாகக் கொண்டே கர்த்தர் மக்களிடம் தீர்க்கதரிசிகளைக் கொண்டு எச்சரிக்கிறதை நாம் பார்க்கிறோம். தீர்க்கதரிசனம் என்றால், எச்சரிப்பும் இருக்க வேண்டும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் அநேக ஆசீர்வாதங்களை மட்டும் கூறிக்கொண்டிருக்கிற தீர்க்கதரிசிகளைப் பார்க்கிறோம். ஆனால் பொதுவாக, தீர்க்கதரிசன வார்த்தைகளில் எச்சரிப்பும் இருக்கவேண்டும், ஆசீர்வாதங்களும் இருக்கவேண்டும் என்பதை மறந்துபோகாதிருங்கள். அதைப்போல நல்ல மேய்ப்பன் ஆடுகளை சரியான வழியில் வழிநடத்துகிறான். புல்லுள்ள இடங்களில் மேய்க்கிறான், அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் நடத்துகிறான். அதற்கு தேவையான இரையை, மரத்திலிருந்து கொண்டுவந்து கொடுக்கிறான். மட்டுமல்ல, அதற்குத் தேவையான தண்ணீரைக் கொடுத்து, அதை சரியான இடங்களில் மேய்த்து, அதற்கு தேவையான ஓய்வைக் கொடுத்து எல்லாவற்றையும் செய்கிறவன் நல்ல மேய்ப்பன். ஆக, பழைய ஏற்பாட்டில் தாவீதுகூட *23*-ம் சங்கீதத்தில், மேய்ப்பனுக்கும், அதைப்போல எஜமானனுக்கும் இருக்கிற உறவைப்போல, தம்மை நல்ல ஆடாகவும், மேய்ப்பனாக கர்த்தரையும் சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம். முழு பொறுப்பு, அதிகாரப் பொறுப்பு கர்த்தரிடத்தில் இருக்கிறதாக நாம் அறிய முடிகிறது. அதைப்போலத்தான் புதிய ஏற்பாட்டில் இந்த மேய்ப்பு பணியானது, அதிகாரம் நிறைந்த பொறுப்பான பணியாக இருந்தது என்று வேதத்தின் அடிப்படையில் நாமறிகிறோம், அதாவது, ஆளுகை செய்கிற முழு பொறுப்பும் மேய்ப்பனுக்கு இருக்கிறது. அவன் நல்ல மேய்ப்பனாக இருந்து, ஆளுகை செய்யவேண்டும் என்றுதான் கர்த்தர் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இன்றுகூட அதே நல்ல மேய்ப்பர்கள் தேவை என்றுதான் தேவனுடைய கண்கள் தேடிக்கொண்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கும்போது, கர்த்தரே ஒரு நல்ல மேய்ப்பனைப்போல செயல்படுகிறதை, மட்டுமல்ல நடத்துகிறதை நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம். சங்கீதங்களின் புத்தகம் மற்றும் தீர்க்கதரிசன புத்தகங்களிலே நாம் இந்த விளக்கங்களைத் தெளிவாகப் பார்க்கிறோம். தேவன் நீதியுள்ளவராகவும், பரிசுத்தம் உள்ளவராகவும் இருக்கின்றபடியால், கீழ்ப்படியாமல் செல்லுகிற தமது ஜனங்களை அவர் நீதிக்கு நேராய்க்கொண்டு வர, அவர்களை மனந்திரும்ப சொல்லுகிறார். பரிசுத்தமுள்ள ஒரு வாழ்வை நடத்த சொல்லுகிறார். அதைக்கொண்டு வருவதற்காக தம்முடைய தீர்க்கதரிசிகளை, ஊழியர்களை, மேய்ப்பர்களை பயன்படுத்தினார். அதற்காக அவரும் செயல்பட்டார் என்றுதான் நாம் வேதத்தில் பார்க்கிறோம். காலசூழ்நிலை,

இல்லாவிட்டால் எதிராளிகளை எழும்பி வரச்செய்வது, யுத்தங்களை அனுமதிப்பது, சிறையிருப்புகளுக்கு அவர்களை அனுமதித்து அனுப்பிவிடுவது, அனுமதித்து என்றால், எதிராளிகளின் கைகளில் ஒப்புக்கொடுத்து, அவர்களை சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தது போன்ற காரியங்களில், நாம் இதை உணர முடிகிறது. நல்ல மேய்ப்பனாக இருந்து, மக்களை சீர்திருத்த தேவனே செயல்பட்டார். ஆடுமேய்க்கிற அந்த மேய்ப்பனுடைய கோல் 2 விதத்தில் பயன்படுத்தப்பட்டது. 1) ஆடுகளுக்கு தேவையான இரையை மரத்திலிருந்து பறித்துக்கொடுப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. அதே கோல், ஏனெனில் அது வளைந்திருக்கும், அதைக்கொண்டு இரை, தளைகளைப் பறித்துப் போடுவதற்கு பயன்படுத்தப்பட்டது. 2) அதோடுகூட அந்த தடியைக் கொண்டு, அந்த ஆடுகள் வழிதப்பும்போது, இலேசாக தட்டி, அதை நல்வழிப்படுத்துகிறதையும் அது குறிக்கிறது. அதையேதான் கர்த்தர் சொல்லுகிறார், அதேதான் பக்தனும் பாடுகிறார், என்னைத் தண்டியும், ஆனாலும் மட்டாய்த் தண்டியும் என்று சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம், இல்லையா? மட்டாய் என்றால் மெதுவாக, அதேவேளையில் என்னைத் தண்டித்து உம்முடைய வழியில், நேர்வழியில் செல்ல எனக்கு உதவி செய்யும் என்று சங்கீதக்காரன் சொல்வதுபோல, கர்த்தாவே என்னை நேர்வழியில் நடத்தும் என்று சொல்லி ஒப்புக்கொடுக்கிறதுதான் ஒரு ஆட்டின் வேலை. நல்ல மேய்ப்பன் இவ்விதமாக தன்னுடைய ஆடுகளை சீர்திருத்தி வருவதற்காக. மனந்திரும்பி வருவதற்காக, அநேக சூழ்நிலைகளை அனுமதித்து, லேசாக அந்த தடியை வைத்து அடித்து. தம்முடைய சரியான பாதையில் நடத்திச் செல்லுகிறதைப் பார்க்கிறோம்.

இஸ்ரவேல் ஜனங்களோடு தனக்கிருக்கிற உறவை தேவன் காண்பிக்கும் பொருட்டாக மேய்ப்பன் என்னும் பதத்தை, பழைய ஏற்பாட்டில் அவர் அடிக்கடியாய் பயன்படுத்தயிருக்கிறதைக் காண்பீர்கள். ஒரு உண்மையான, கரிசனையான மேய்ப்பனாக, தன்னைக் காண்பிக்கும் பொருட்டு, அவர் தம்மை முற்றிலுமாக வெளிப்படுத்துகிறதை நீங்கள் சங்.95:6-7 வரையுள்ள வசனங்கள், சங்கீதம் 100-ம் அதிகாரம் மற்றும் எசேக்கியேல் 34:11-15 போன்ற வசனங்களில் நல்ல மேய்ப்பனைப் பார்க்க முடியும். இந்த அதிகாரங்களில் கர்த்தர் நல்ல மேய்ப்பனைக் குறித்து சொல்லுகிறதைப் பார்க்க முடியும். கர்த்தரே மேய்ப்பராக, சிறந்த விதத்தில் நடத்துகிற காரியங்களையும் குறித்து நீங்கள் பார்க்க முடியும். இவைகள் முக்கியமான வசனங்களாக இருக்கிறது. மட்டுமல்ல, பழைய ஏற்பாட்டில் இவ்விதமாக மேய்ப்பர்களைப் பற்றிய சிறப்பானதொரு கண்ணோட்டத்தை நாம் பார்க்க முடியும். தேவன் மேய்ப்பனாக இருக்கிறது மட்டுமல்ல, நல்ல மேய்ப்பராக இருந்து, செயல்படுங்கள் என்று சொல்லுகிறதையும் எசே.34-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். மேய்ப்பனின் பணியைக் குறித்து பழைய ஏற்பாடு நல்ல ஆதாரங்களை உடையதாய் இருக்கிறது. மேய்ப்பனின் பணி என்பது, வேதத்தின் அடிப்படையிலானது. தொடர்ந்து நாம் அவர்களைப் பற்றி கற்றுக்கொள்ளப்போகிறோம். அவர்கள் எவ்வாறு செயல்பட

வேண்டும், திட்டமிட வேண்டும்? எவ்விதமாக செயல்படக்கூடாது? என்றெல்லாம் கற்றுக்கொள்வோம். அந்தப் பணி முதலாவது வேதத்தின் அடிப்படையிலானதா? ஆமாம், என்கிற பதிலைப் பற்றி நாம் அறிய வேண்டியது அவசியம். மேய்ப்பனின் பணியை நீங்கள் செய்வீர்களனால், அல்லது செய்ய விரும்புவீர்களானால், அது வேதத்தின் படியானது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

அடுத்து, புதிய ஏற்பாடு எந்தளவுக்கு மேய்ப்பனின் பணியைக் குறித்து சொல்லியிருக்கிறது? என்பதைப் பார்ப்போம். நாம் புதிய ஏற்பாட்டை பார்க்கும்போது, மேய்ப்புபணியைக் குறித்து மிக சிறந்த விளக்கத்தையுடையதாக இருக்கிறது என்பதை நாமறிவோம். இயேசுகிறிஸ்துவின் ஊழியம், மற்றும் அப்போஸ்தலர்களின் ஊழியம் போன்ற எல்லாமே, மேய்ப்பு பணி தொடர்பான தெளிவான விஷயத்தை நமக்கு முன்வைத்து சொல்லுகிறது. அது மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தியுள்ள சில முக்கியமான பதங்கள், அதாவது வார்த்தைகள் மேய்ப்பு பணியின் தன்மைகளைக் குறித்து மிகவும் அதிகமாகச் சொல்லுகிறது. நீங்கள் அந்த வார்த்தையை வைத்தே ஒரு மேய்ப்பன் எவ்விதம் இருக்கவேண்டும்? என்று வேதம் சொல்லுகிறது என்பதை புரிந்துகொள்ள முடியம். மேய்ப்பு பணியினை, ஊழியக்காரனின் பணியோடு தொடர்புபடுத்தி பேசுகிறதையும் நீங்கள் பார்க்கலாம். மேய்ப்பு பணி என்பது ஒரு அதிகாரியின் பணி. அதுவொரு ஊழியக்காரனாகிய வேலைக்காரனின் பணியோடு புதிய ஏற்பாட்டில் விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். மேய்ப்பன் என்பவன் ஊழியக்காரன், வேலைக்காரன், அதாவது கர்த்தருடைய, எஜமானனுடைய திராட்சைத் தோட்டத்திலே பணிபுரிகிறவர். ஆனால், இன்றைய காலகட்டத்தில் நீங்கள் பார்க்கும்போது, மேய்ப்பர்கள் என்று சொல்லுகிறவர்கள் சிலரைப் பற்றி பார்க்கிறோம், எல்லோரையும் நாம் தவறாய் சொல்ல முடியாது. சிலர், தங்களின் மந்தையை இறுமாப்பாய் ஆளுகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் கையில் அதிகாரம் கொடுக்கப்பட்டதை அவர்கள் தவறாய் பயன்படுத்துகிறதைப் பார்க்க முடிகிறது. அவர் நினைக்கிறதை செய்ய விரும்புகிறார். மட்டுமல்ல எல்லோரும் அவருடைய சொல்லுக்கு மதிப்பு கொடுக்கிறதினால், அவர் இப்படித்தான் என்று கருதி, ஒரு சுதந்திரம்கூட கொடுக்காமல், மிகக் கடுமையாக சில வேளைகளில் செயல்படுகிறதை நாம் பார்க்க முடிகிறது. இல்லாவிட்டால், தகுதியற்ற நபரிடத்தில் ஒருவேளை கர்த்தர் கொடுத்து விட்டாரோ, என்று நினைக்கிற அளவில் காணப்படுகிறது. அனால் ஒரு தவறான மேய்ப்பனின் கையில் மாட்டிக்கொண்ட ஆடுகள் பாவம்தான்.

ஆம் பிரியமானவர்களே, நாம் ஒரு நல்ல மேய்ப்பனாக இருந்து பணிபுரிய கர்த்தர் எதிர்பார்க்கிறார். நாம் தேவனுடைய திராட்சை தோட்டதில் பணிபுரிகிற வேலைக்காரர்கள் என்பதை புரிந்துகொள்ளுங்கள். புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட முதலாவது வார்த்தையை நாம் பார்க்கும்பொது, அது ‘Diakonos’ என்ற கிரேக்க வார்த்தை

பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை பந்தியில் பரிமாறுகிற ஒரு நபரைக் குறிப்பிடுகிறதாக இரக்கிறது. இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து, லூக்கா 22:27-ல் இவ்வாறாக கூறுகிறார், 'பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும் உங்கள் நடுவில் பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்' என்று இயேசு கூறுகிறதைப் பாருங்கள். இயேசுவே தம்மைப் பற்றி இவ்விதமாகக் கூறுகிறார். பந்தியில் பரிமாறுகிறவன்போல மிக எளிமையான, தாழ்மையான ஒரு இடத்தைக் குறித்து இங்கே சொல்லுகிறதைப் பார்க்கிறோம். ஏனெனில், பந்தியிருக்கிறவன்தான், அங்கே முக்கியமானவன், பணிவிடை செய்கிறவன் தாழ்ந்தவன். அப்படியொரு ஊழியன் இருக்கவேண்டும் என்றுதான் லூக்கா 22:27-ம் வசனத்தில் வாசித்து புரிந்துகொள்கிறோம். பிரியமானவர்களே, நம்முடைய வாழ்வில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஊழியக்காரன், மேய்ப்பு பணி செய்கிறவன், ஒரு பந்தி பரிமாறுகிறவனைப்போல இருக்கிறான். அதைப்போல, அப். பவுல் தன்னை தேவனுடைய ஊழியக்காரன் என குறிப்பிடுகிறதை 2 கொரி.6:3-ல் பார்க்க முடியும். மேலும், ரோமர் 15:8-ல் இயேசு ஊழியக்காரரானார் என பவுல் கூறுகிறதை நாம் பார்க்கிறோம். ஆக, இயேசுகிறிஸ்துவே ஊழியக்காரராக மாறுகிறார், அவரே எடுத்துக்காட்டாக, பந்தியில் பரிமாறுகிறவனைப்போல தன்னை வெளிப்படுத்துகிறதைப் பார்க்கிறோம். ஆனால், இன்றைய நாட்களில் குருவை மிஞ்சிய சீஷர்களைத்தான் பார்க்கிறோம். இயேசுவே ஊழியக்காரரானார், ஆனால் இன்று, எஜமான்கள்தான் அநேக இடங்களில் இருக்கிறார்கள். ஆனால், இதைப் படிக்கிற நீங்கள் இப்படி இருக்கக்கூடாது பிரியமானவர்களே. இயேசுவைப் போன்ற ஒரு தாழ்ந்த சிந்தை நமக்கு தேவை. அதுவே அநேகரை இயேசுவண்டை கொண்டுவருகிற நல்லதொரு குணமாகவும் இருக்கிறது.

இரண்டாவது வார்த்தையைக் குறித்து சிந்திப்போம். 'Dulos' என்ற கிரேக்க வார்த்தை ஊழியக்காரனுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேய்ப்புபணியினைச் செய்கிற ஊழியக்காரனுக்கு, அவ்விதமாய் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். ஊழியக்காரன் என்பதனைவிட, அடிமை என்கிற கருத்தை தருகிற ஒரு சொல்லாக 'Dulos' இருக்கிறது. ஊழியக்காரன் 'அடிமை' என்கிற அளவுக்கு தன்னைத் தாழ்த்த வேண்டுமென்று பவுல் தன்னை முதலாவது எடுத்துக்காட்டாக வைக்கிறார். அடிமை என்பவன் யார்? அவனுக்கு எந்த உரிமையும் கிடையாது. எந்தவிதமான ஊழியமும் இல்லாமல், பணிபுரிகிற காலகட்டம் அது. முற்றிலுமாக அவர்களுக்கென்று எந்த உரிமையும் இல்லாமல், அவர்களை ஒரு அறையிலே பூட்டி வைத்திருப்பார்கள். ஆடு, மாடுகளைப்போல அவர்கள் நடத்தப்பட்டார்கள் என்றுதான் அன்றைய காலகட்டத்திலுள்ள அடிமைகளைக் குறித்து நாம் பார்க்கிறோம். அந்த சூழ்நிலையில்தான் பவுல் சொல்லுகிறார். ஆக, பவுலும், மற்ற அப்போஸ்தலர்களும், தங்களை தேவனுடைய அல்லது கிறிஸ்துவின் அடிமை என

குறிப்பிடுகிறதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். ரோமர் 1:1, கலா.1:10, கொலோ.4:12, தீத்து 1:1, யாக்கோபு 1:1, 2 பேதுரு 1:1 போன்ற வசனங்களில் குறிப்பாக நாம் பார்க்க முடியும். இந்த வார்த்தைகளெல்லாம் மேய்ப்பு பணியைக் குறித்து, புதிய ஏற்பாட்டில் சொல்லப்படுகிற சில எடுத்துக்காட்டான வசனங்கள். இன்னும் மேய்ப்பு பணியைக் குறித்து விசேஷமாக என்னென்ன பதங்கள் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் தொடர்ந்து வருகிற பாடங்களில் படிக்கவிருக்கிறோம். ஆனாலும் குறிப்பாக சில காரியங்களை சொல்வதற்காக இந்த வார்த்தைகளைப் பற்றி இதுவரை கற்றோம்.

நாம் பவுலின் நிருபங்களை எடுத்து பார்க்கும்போது, பவுலை ஒரு சிறந்த மிஷனெரியாக, போதகராக மட்டுமல்ல ஒரு மேய்ப்பனாகவும் நாம் பார்க்ககூடிய அளவில்தான் அவர் இருக்கிறார். பிரச்சனைகளோடு இருக்கிற சபைகள், அந்த கால கட்டத்தில் அநேகம் காணப்பட்டது. அந்த பிரச்சனைகளுக்கேற்ற ஆலோசனைகளை பவுல் வழங்கினார் என்பதையும் நாம் பார்க்கிறோம். மக்களை தைரியப்படுத்தி, கிறிஸ்தவ வாழ்க்கைக்குள்ளாக கட்டியெழுப்பி, அந்த விசுவாசிகள் தவறுகளைச் செய்யும்போது, கண்டனம் செய்து, அவர்களை மனந்திரும்பி மீண்டும் கர்த்தரண்டை வருவதற்கு ஊக்குவித்து, செயல்பட்டார் என்று அப். பவுலைக் குறித்து பல கோணங்களில் பார்க்க முடிகிறது. அவர் ஒரு நல்ல மேய்ப்பனாக காணக்கூடியவராகவே இருக்கிறார்.

அடுத்து, நாம் இயேசுகிறிஸ்துவை ஒரு எடுத்துக்காட்டாகவே பார்ப்போம். இயேசுகிறிஸ்துவே நம்முடைய பிரதான மேய்ப்பன் என்று நாம் பார்க்க முடிகிறது. அதைக்குறித்து வசனம் இவ்விதமாய் சொல்லுகிறது. 1 பேதுரு 5:4, 'அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது, மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்' என்று பேதுரு எழுதுகிறார். ஆக, இயேசுகிறிஸ்துதான் பிரதான மேய்ப்பர். அவரே மேய்ப்பு பணிக்கு, சிறந்த மாதிரியாக, நியமமாக இருக்கிறார். அதைவிடமேலாக, திருச்சபையின் பணியானது. இயேசு கிறிஸ்துவினுடைய மேய்ப்பு பணியின் ஊழியத்தின் தொடர்ச்சியான பணியாகத்தானிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஆக, பிரதான மேய்ப்பர் இயேசுதான், நமக்கு எல்லாவற்றுக்கும் எடுத்துக்காட்டு. நீதியா? அதற்கு இயேசுகிறிஸ்துதான், அன்பா? அதற்கும் இயேசுகிறிஸ்துதான், பரிசுத்தத்தைப் பற்றி பேச வேண்டுமென்றால், அதற்கும் முழுமையான எடுத்துக்காட்டு இயேசுதான். மேய்ப்பு பணிக்கும் இயேசு கிறிஸ்துதான். அதைக்குறித்து T.W. மேன்சன் என்ற வேதவல்லுநர் கூறும்போது, 'கிறிஸ்தவ ஊழியமானது இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தையே ஆரம்பமாக கொண்டிருக்கிறது. மட்டுமல்ல அதன் தொடர்ச்சியாகவும் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பூலோக ஊழியத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய அநேக மாதிரிகள் இருக்கிறது. தனது போதனை மற்றும் வாழ்க்கை மூலமும், இந்த மேய்ப்பு பணியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினார்' என்று கூறுகிறார். அவருடைய

ஊழியம் எல்லாவற்றுக்கும் எடுத்துக் காட்டாக, முன்மாதிரியாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மேய்ப்பு பணி குறித்து வேதாகமத்தில் எங்கெங்கே சொல்லப்பட்டிருக்கிறது என்று சற்று நாம் சிந்தித்தோமானால், நமக்கு அது நிச்சயமாக ஒரு உதாரணத்தைக் கொடுப்பது மட்டுமல்ல, அதைப் பின்பற்றுவதற்கு நம்மை உற்சாகப்படுத்துகிறதாகவும், மேய்ப்பு பணியில் அதைப்போல செயல்பட வேண்டுமென்ற எண்ணத்தை பெறுகின்ற ஒன்றாகவும் அது இருக்கும்.

**முதலாவது காரியம்**, மக்களுடைய வாழ்வைக் குறித்து காண்பித்த ஆழ்ந்த கரிசனையாய், அவருடைய மேய்ப்புபணி இருந்தது. இயேசுகிறிஸ்து மக்களுடைய பூரண வாழ்வை எதிர்பார்த்தார். மக்களைப் பாதிக்கின்ற ஒவ்வொரு காரியங்களைக் குறித்தும் கரிசனையுள்ளவராக இருந்தார் என்று லூக்கா *4*, மற்றும் ஏசாயா *61*-ம் அதிகாரம் போன்ற இடங்களில் பார்க்க முடியும். மக்களை எவையெல்லாம் பாதிக்கிறதோ, அதைக்குறித்து அவர் மிகக் கரிசனையுள்ளவராக இருந்தார். அடுத்து மக்களை நெருக்கும் சட்ட திட்டங்களிலிருந்து மக்களை விடுவிக்க முயற்சி செய்தார் என்று நாம் *அப்.13:38-39* வரையுள்ள வசனங்களிலும், மத்தேயு *5*-ம் அதிகாரத்திலும் பார்க்கின்றோம். மக்களை நெருக்குகின்ற சமுதாய காரியங்கள், அரசாங்கத்தின் காரியங்கள் போன்றவற்றிலிருந்து விடுவிக்கிற ஒரு நல்ல மேய்ப்பனாக, ஆழ்ந்த கரிசனையுள்ள மேய்ப்பனாக அவர் காணப்பட்டார்.

**இரண்டாவது காரியம்**, மக்களைக் குறித்து மனதுருக்கம் உள்ளவராக, அவர் அவரது மேய்ப்பு பணி செய்த காலத்தில் காணப்பட்டார். அநேக இடங்களில், அவர் மனதுருகினார் என்று நாம் வாசித்துப் பார்க்கிறோம். *மத்.9:35-36*, மாற்கு *15:32*, *1:40-42* போன்ற வசனங்களில் நீங்கள் பார்ப்பீர்களானால், அவருடைய மனதுருக்கத்தை நாம் காணமுடிகிறது. அந்த மனதுருக்கத்தில் சில வேளைகளில் அதிகாரமும் கலந்திருந்தது என்பதை நாம் பார்க்கலாம். ஏனெனில் சில வேளைகளில், சிலர் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்த கூடும். நீங்கள் மாற்கு *15:32*-ஐ வாசிக்கும்போது, ‘பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் பரியாசம் பண்ணுகிறதை’ பார்க்கிறோம். பரியாசம் செய்யும்போது, அவர்கள் நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக, இஸ்ரவேலுக்கு இராஜாவாக கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கட்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்’ என்று படிக்கிறோம். அவர்கள் அவ்வாறு சொன்னதினால், இயேசு சிலுவையிலிருந்து இறங்கிவரவில்லை. மனதுருகி அவர் அப்படியே இறங்கி வந்துவிட்டார் என்று சொல்ல முடியாது. காரணம், அதிகாரத்தை அவர்கள் தவறாய்ப் பயன்படுத்துகிறார்கள். இது கேலி செய்கிற விஷயமாய் இருக்கிறது. இவர்களுடைய நோக்கம் தவறாக இருந்தபடியால், அவர் மனதுருகி ஒன்றும் அணுகவில்லை, செயல்படவில்லை என்றும் பார்க்கிறோம். மனதுருக்கம் என்பது, சரியான விதத்தில், சரியான இடங்களில் வரவேண்டியது அவசியம். அதேவேளை, மக்கள்

சிதறடிக்கப்பட்ட நிலையைப் பார்க்கும்போது, அதாவது மத்.9:36-ம் வசனத்தைப் பாருங்கள், ‘அவர் திரளான ஜனங்களைக் கண்டபோது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல தொய்ந்து போனவர்களும், சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி’ என்று வாசிக்கிறோம். ஆக, எப்போது மனதுருகவேண்டுமோ, அப்போது அவர் மனதுருகினார். ஒரு மேய்ப்பன் என்பவன், மனதுருகுகிறவனாய் இருக்கவேண்டியது அவசியம்தான், ஆனால் எதற்காக மனதுருகவேண்டும்? எப்படி மனதுருக வேண்டுமென்று தெரிந்திருக்க வேண்டியதும் அவசியம் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

**மூன்றாவது காரியம்**, இயேசுகிறிஸ்துவானவர் நல்ல மேய்ப்பனாக, மக்களை இருந்தவண்ணமாகவே ஏற்றுக்கொண்டார் என்று நாம் பார்க்கிறோம். ஒரு நல்ல மேய்ப்பன் அவ்விதமாகத்தானிருக்க வேண்டும். மக்களை வேதத்தின் அடிப்படையில், வேதத்தின் அண்டையில் கொண்டுவர வேண்டியது அவசியம். ஆனால், அதே வேளையில், மக்களுடைய உணர்வுகளை மதிக்க பழக வேண்டும். இயேசுகிறிஸ்துவானவர் மனித உணர்வுகளை மதித்தார் என்பதற்கு, விபச்சார ஸ்திரீயை அவர் மதித்ததைப் பார்க்கிறோம். அவளுக்குள்ளும் ஆத்துமா இருந்ததை, இயேசுகிறிஸ்துவானவர் கண்டு, அவளும் மனந்திரும்ப வேண்டுமென்று, அவளுடைய உணர்வை மதித்துப் பேசுகிறதைப் பார்க்க வேண்டும். மற்றவர்களெல்லாம் ஏளனம் செய்யும்போது, மற்றவர்களெல்லாம் கல்லெறியச் சொல்லும்போது. அவர் அவள் மனந்திரும்பி வாழவேண்டுமென்று, அவளையும் மதித்து, மற்றவர்களைப் போல ஏளனமாக நினைக்காமல், தள்ளாமல் ஏற்றுக்கொண்டதொரு நல்ல மேய்ப்பன்தான் இயேசுகிறிஸ்து. இன்றைக்கு நாம் எப்படியிருக்கிறோம்? ஒரு நல்ல மேய்ப்பன் எவ்விதமாகக் காணப்பட வேண்டும்? இயேசுகிறிஸ்து போல நீங்கள் இருக்க வேண்டுமென்றால். மற்றவர்களின் உணர்வுகளை முதலாவது மதிப்பதற்கு பழக வேண்டும். நாம் எவ்வாறு இருக்கிறோம் என்றால், நான் மட்டும் பரிசுத்தவான், மற்றவர்கள் எல்லாம் பரிசுத்தமற்றவர்கள், அவர்கள் ஒருபோதும் தேவனிடம் வரமுடியாது என்றதொரு பார்வை. இவன் ஜெபத்தையெல்லாம், கர்த்தர் எப்படிக் கேட்பார்? என்று கீழ்த்தரமாக நினைக்கிற சில ஊழியர்களை நாம் ஆங்காங்கே பார்க்க முடியும். பிரியமானவர்களே, எல்லோரையும் மதிக்கிறவர் நம்முடைய இயேசுகிறிஸ்துவானர். எப்படிப்பட்ட ஒரு அருமையான ஊழியக்காரனாய், மேய்ப்பனாக அவர் இருக்கிறார் பாருங்கள். மனிதனை, மனிதனாகவே ஏற்றுக்கொண்டார் என்று நாம் மாற்கு 10:46-52 வரை பார்க்க முடியும். அதைப்போல மாற்கு 19:1-10, லூக்கா 15:1-2, யோவான் 3, லூக்கா 7:36-50, யோவான் 4 போன்ற வசனங்கள் மற்றும் அதிகாரங்களைப் பார்க்கும்போது, அவர் மனிதர்களுடைய சூழ்நிலைகளை உணர்ந்தவராக, மனிதர்களை மனிதனாகவே ஏற்றுக்கொண்டார். இன்றைய ஊழியர்கள் சிலபேர், தங்களை அவர்கள் தேவதூதர்களாகப் பார்க்கிறார்கள். மற்றவர்களை இவனெல்லாம் ஒன்றுக்கும் பயன்பட மாட்டான் என்பதுபோல நினைக்கிற ஒரு பண்பை நாம் பார்க்கிறோம். இவற்றையெல்லாம் புரிந்துகொள்வதற்கான கருத்துகளாக இவைகளை

கற்றுக்கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவோ, தேவக்குமாரனோ, மனிதனை மனிதனாகவே ஏற்றுக்கொண்டார். அவனுடைய பெலவீனங்களைக் குறித்து, அற்பமாய் எண்ணாமல் அவர்களுடைய சூழ்நிலைகளைப் புரிந்தவொரு பிரதான ஆசாரியராய் நமக்கிருக்கிறார். கிருபாசனத்தண்டைக்கு தைரியமாய் அழைக்கிற ஒரு தேவனை உடையவர்களாக நாம் இருக்கின்றோம். நம்மைப்போல அவர் சோதிக்கப்பட்ட, பாடுபட்ட தேவனாய் இருக்கிறபடியினால், நம்மை அற்பமாய் எண்ணாத ஒரு இயேசுகிறிஸ்து நமக்கிருக்கிறார், அந்த நல்ல மேய்ப்பன்தான், நமது பிரதான மேய்ப்பன்.

**நான்காவது காரியமாய்**, நல்ல மேய்ப்பனாய் இயேசுவைப் பார்க்கும்போது, அவர் பாகுபாடற்றவராக நடந்துகொண்டார் என்று நாம் பார்க்கிறோம். மத்.*8:10-12, 14* போன்ற வசனங்களைப் பார்க்கும்போது, புறஜாதியான ஒருவரை அவர் பாராட்டுகிறதை நாம் பார்க்கிறோம். யூத கலாச்சாரத்தில், புறஜாதியாரை மதிக்கிறதே இல்லை. அவர்களோடு பழக மாட்டார்கள், பேச மாட்டார்கள், அவர்களுக்கு தண்ணீர்கூட கொடுக்கமாட்டார்கள், அவர்கள் வழி கேட்டால்கூட, வழி சொல்லமாட்டார்கள். அவ்வளவு கீழ்த்தரமாகத்தான் புறஜாதியாரை, அதாவது யூதர்கள் அல்லாதவர்களை நடத்தினார்கள். அந்த இடத்தில் யூதர்கள் வழிவந்த இயேசுகிறிஸ்துவானவர் எப்படி செயல்படுகிறார் பாருங்கள். பிற ஜாதியான் ஒருவனைப் பாராட்டுகிறார், அவர்களை ஏற்றுக்கொண்டதை நாம் பார்க்கிறோம். வேதத்திலுள்ள புதிய ஏற்பாட்டு பகுதிகளில் இயேசு பலரை அரவணைக்கிறதைப் பார்கிறோம். இன்று உங்கள் சபை எப்படியிருக்கிறது? கிறிஸ்தவ சபைகள் எப்படியிருக்கிறது என்பதை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஏகப்பட்ட ஜாதிபிரிவினைகளை நாம் சபைகள் மத்தியில் பார்க்கிறோம். மேல் ஜாதி, கீழ் ஜாதி என்பதை சபைக்குள்ளும் இன்று கொண்டுவந்து விட்டார்கள். சில ஜாதி மக்கள் அந்த குறிப்பிட்ட சபைக்குள் வருகிறதில்லை. அவர்கள் தங்களுக்கென ஒரு தனி சபை வேண்டுமென்று கேட்கிறார்கள். எங்களுக்கு, எங்களுடைய ஜாதிப் போதகர்தான் வேண்டுமென்று கேட்கிற சபைப் பிரிவினரை நாம் பார்க்க முடிகிறது. ஆனால் இயேசு கிறிஸ்து ஒரு நல்ல மேய்ப்பராக இருந்து, எப்படி செயல்பட்டிருக்கிறார் என்பதை கவனித்துப் பாருங்கள். பாகுபாடற்றவராக, அவர் காணப்பட்ட தன்மையை மேய்ப்பர்களாகிய நாம் சற்று உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம், மட்டுமல்ல சபைக்குள் உறுப்பினர்களாக இருக்கிற மக்களும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஜாதி, இனம், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்றதொரு பாகுபாடு இல்லாத ஒரு கிறிஸ்தவம் வேண்டுமென்றுதான் வேதம் சொல்லுகிறது.

தொடர்ந்து, இவ்விதமான அநேக காரியங்களை அடுத்த பாடத்திலும் கற்றுக்கொள்ளப்போகிறோம். இயேசு ஒரு நல்ல மேய்ப்பனாகயிருந்து, செயல்பட்டதைக்

குறித்து கற்றுக்கொள்வோம். ஜெபத்தோடு கற்றுக்கொள்ளுங்கள். கர்த்தர் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:-</u>**

1) மேய்ப்புபணி இறையியல் என்றால் என்ன? ஏன் இது விசேஷமானது?
2) மேய்ப்புபணி இறையியல் என்ற பதத்தை ஆராயும்போது, நாம் தெளிவாக அறிந்துகொள்கிற இரண்டு விஷயங்கள் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
3) மேய்ப்புபணி இறையியல், எவ்வாறு செயல்முறை இறையியலாகவும் (Practical Theology) இருக்கிறது என்பதனை கூறுக?
4) மேய்ப்புபணி இறையியலில், நாம் எவைகளையெல்லாம் கற்றுக்கொள்கிறோம் என்பதனைக் கூறுக? (தலைப்புகள் மட்டும்)
5) சமுதாய மேம்பாட்டில் மேய்ப்புபணி இறையியல் குறித்து கூறுக?
6) மேய்ப்புபணி இறையியலின் வேதாகம அடிப்படையில், பழைய ஏற்பாட்டு ஆதாரங்களை வசன இருப்பிடங்களுடன் விளக்கமாக கூறுக?
7) ஆடுகளை மேய்க்கின்ற மேய்ப்பனுடைய கோல் பயன்படுத்தப்படுகிற இரண்டு விதங்களை சற்று விளக்கமாக கூறுக?
8) மேய்ப்புபணி இறையியலின் வேதாகம ஆதாரங்களில், புதிய ஏற்பாட்டு ஆதாரங்களை வசன இருப்பிடங்களுடனும், அதற்கான கிரேக்க வார்த்தைகளின் அர்த்தங்களுடன் விளக்கமாக கூறுக?
9) இயேசுகிறிஸ்துவின் மேய்ப்புபணி குறித்து வேதவல்லுநர் T.W. மேன்சன் கூறும் கூற்றினை கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - 2

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நாம் இந்த பாடத்தில், கடந்த பாடத்தின் தொடர்ச்சியை கற்றுக்கொள்ளப் போகிறோம். இயேசுகிறிஸ்து நம்முடைய பிரதான மேய்ப்பராய் இருக்கிறார். அவர் எந்த விதத்தில் இருக்கிறார் என்று கடந்த பாடத்தில் படித்தோம் அல்லவா? அவர் மக்களுடைய வாழ்க்கையைக் குறித்து மிகுந்த ஆழமான கரிசனையுடையவராக, தன்னுடைய மேய்ப்பனின் பணியைச் செய்தார். மக்களைக் குறித்த மனதுருக்கம் உடையவராக இருந்தார். மக்களை இருந்த வண்ணமாகவே ஏற்றுக்கொண்டார். பாகுபாடு அற்றவராக, புறஜாதியாய் காணப்பட்ட அவர்களையும், யூத பின்னணியில் இருந்து வந்து, அவர் ஏற்றுக்கொண்டார் என்றெல்லாம் கடந்த பாடத்தில் கற்றோம்.

இந்த பாடத்திலும், அதன் தொடர்ச்சியாக, **ஐந்தாவது காரியமாக**, தேவை உள்ளவர்களுக்கு உதவிசெய்ய எப்போதும் ஆயத்தமாய் இருந்த மேய்ப்பனாக அவர் இருந்தார் என்று பார்க்க இருக்கிறோம். ஒரு மேய்ப்பன் என்பவன், தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்ய, எப்போதும் ஆயத்தமாய் இருக்க வேண்டியது அவசியம். இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள், அவர் அப்பொழுதுதான் ஒரு ஊழியத்தை செய்து வந்திருப்பார். ஓய்வு எடுக்காமல்கூட, உடனே அடுத்த ஊழியத்திற்கு கடந்துபோகிறதை நாம் பார்க்கிறோம். சில வேளைகளில் நாம் நினைப்போம், அவருக்கென்ன? அவர் தேவகுமாரன் என்றெல்லாம் நாம் சொல்லக்கூடும், ஆனால் ஒன்றை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும், அவர் 100 சதவீதம் தெய்வத்தில் தெய்வமானவர், 100 சதவீதம் மனிதனில் மனிதனானவராகவே வாழ்ந்தார். அதாவது மனிதனுக்குள்ள அனைத்து பலவீனங்களும் அவருக்கு இருந்தது, பசி உணர்வு இருந்தது, தாகம் இருந்தது, எல்லாமே இருந்தது. அவருக்கும் களைப்பு என்பது இருந்தது, அவர் தம்முடைய தெய்வீகத்தன்மையை, எப்பொழுதும் வெளிக்காட்டவில்லை என்பதைத்தான், நாம் வேதத்திலே பார்க்கிறோம். அவர் நினைத்திருந்தால், தம்முடைய வல்லமையினால், இது உண்டாகக்கடவது என்று சொல்லியிருந்தால், அது உண்டாகி இருந்திருக்கும். உதாரணமாக, இந்த கல்லுகள் அப்பங்கள் ஆகும்படி செய்யும், என்று பிசாசு சோதிக்கும்போதுகூட, அவர் நினைத்திருந்தால், உண்டாகட்டும் என்று சொல்லியிருந்தால், எல்லாமே அப்பங்களாக மாறியிருந்திருக்கும். ஆக ஒன்றைப் புரிந்து கொள்ள முடிகிறது. அவர் தன்னுடைய இலாபத்திற்காக, தம்முடைய மகிமைக்காக, அற்புதங்களைச் செய்கிறது இல்லை. அவர் நினைத்திருந்தால், அப்படிச் செய்திருக்கலாமே, ஒரு சொகுசான வாழ்க்கையை இந்த உலகத்தில் அவரால் நடத்த முடிந்திருக்குமே, ஏன் முடியாது? எல்லா வல்லமையும் அவருக்கு இருக்கிறது.

ஆக, இந்த மாதிரி உண்டாகட்டும், எதிராளிகள் இப்படி வீழ்ந்து போவார்களாக, வெட்டப்பட்டு அழிவார்களாக என்று சொல்லியிருந்தால், எல்லாம் முடிந்திருக்கும். ஆனால், அவர் அப்படியெல்லாம் செய்யவே இல்லை. குறிப்பாக, தனக்காக என்று அவர் அற்புதங்களைச் செய்யவில்லை, மக்களுக்காக, மற்றவர்களுக்காக, பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்துவதற்காகத்தான் அவர் அற்புதங்களைச் செய்திருக்கிறார். ஆகவே, அவர் தேவை உள்ளவர்களுக்கு உதவி செய்வதில் எப்போதும் ஆயத்தமாய் இருந்தார், அதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். களைப்படைந்தவராய் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிற வேளையிலே, ஓய்வு எடுக்கவேண்டுமென்று அவர் போகவில்லை. பார்த்த ஜனங்களுக்காக மனதுருகி, உடனுக்குடன், தொடர்ந்து பயணங்கள் மேற்கொண்டு, தொடர்ந்து ஊழியங்களைச் செய்தவொரு நல்ல பிரதான மேய்ப்பன்தான், நம்முடைய இயேசுகிறிஸ்து. நீங்கள் அதைக்குறித்து, மாற்கு *1:33-39* வரையுள்ள பகுதிகளில் பார்க்கலாம். பிசாசு பிடித்தவர்கள், நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், இப்படி பல தேவைகளோடு வந்த மக்களுக்கு, அவர் தொடர்ந்து உதவி செய்தார் என்று பார்க்கின்றோம். அதுபோல, மாற்கு *5:21-40*, *6:30-32* வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். இன்னும் சுவிசேஷ புத்தகங்கள் முழுவதிலும் நீங்கள் பார்த்தீர்களானால், இரவு முழுவதும் அவர் விழித்திருந்து ஜெபிக்கிறதை பார்க்கலாம். அதிகாலையிலே ஜெபிக்க சென்றதைப் பார்க்கிறோம். அவ்வாறு ஜெபம், ஜெபம், ஜெபம், பிறகு ஊழியம், ஊழியம். எவ்வளவு தூரம் அவருடைய சரீரத்தில் களைப்படைந்தவராய் இருந்தாலும், எப்போதும் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்ய ஆயத்தமுள்ள ஒரு நல்ல மேய்ப்பராக அவர் இருந்தார். நீங்களும், நானும் எப்படியிருக்கிறோம்? என்று சற்று யோசித்துப் பாருங்கள். தேவையுள்ளவர்களுக்கு ஒரு நல்ல மேய்ப்பனாக நீங்கள் இருக்கவேண்டுமானால், எப்போதும் உதவிசெய்ய ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று இயேசுவின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்கிறோம்.

**ஆறாவது காரியம்**, தனிப்பட்டவர்களுக்கும், அவர் கரிசனை எடுத்து உதவியும், ஆலோசனையும் கொடுப்பதற்கு ஆயத்தமுள்ளவராய் இருந்தார் என்று பார்க்கிறோம். உதாரணமாக, சமாரியப்பெண். அந்தவொரு பெண்ணுக்காக, சமாரியா வரை வந்து ஊழியம் செய்கிறார். அதைப்போல, நிக்கோதேமு, சகேயு, விபச்சார பெண், குஷ்டரோகி போன்ற மக்களுக்காக, தனிநபர்களுக்காக அவர் நேரம் செலவழித்தார், ஊழியம் செய்தார், அதற்கு ஆயத்தமாய் இருந்தார். இன்றைக்கு சில ஊழியர்களையெல்லாம் பார்த்தால் கூட்டம், இல்லையென்றால், உடனே மிகவும் சோர்ந்து போய் விடுகிறார்கள். நான் எவ்வளவு பெரிய ஊழியன், இங்கு வந்திருக்கிற *10* அல்லது *100* பேர்கள் வந்திருக்கிற கூட்டத்திற்கெல்லாம் நீங்கள் என்னை கூப்பிட்டிருக்கிறீர்களே என்று சலித்துக்கொள்கிற அநேக ஊழியர்களை இன்று பார்க்கிறோம்.

ஒரு தலைவனுடைய அதிகாரம் என்பது, அவனுடைய வல்லமையோ, பலமோ அல்ல. சிலர் நினைக்கிறார்கள், நான் தலைமை பதவியில் இருக்கிறேன், நான் ஒரு பெரிய

தலைவர் என்று சொல்லி, அவர் வல்லமையையும், பலத்தையும் காண்பிக்க விரும்புகிறார். ஆனால், உண்மையில் ஒரு தலைவனின் அதிகாரம், அதிலில்லை. 10 பேர், 100 பேர் வந்திருக்கிற இந்த கூட்டத்திற்கெல்லாம் என்னை கூப்பிட்டிருக்கிறீர்களே, என்று சலித்துக்கொள்கிற அநேக ஊழியர்களை இன்று பார்க்கிறோம். ஒரு தலைவனுடைய அதிகாரம் என்பது, அவனுடைய வல்லமையோ, பலமோ அல்ல. சிலர் நினைக்கிறார்கள், நான் தலைமைத்துவத்திலே இருக்கிறேன், நான் ஒரு பெரிய தலைவர், என்று கருதி தனது வல்லமையையும், பலத்தையும் காண்பிக்க விரும்புகிறார்கள். ஆனால், உண்மையிலே ஒரு தலைவனின் அதிகாரம், அதில் இல்லை. அவன் எந்தளவுக்கு அன்பாக, தாழ்மையாக மற்றவர்களேடு பழகுகிறானோ, அந்தளவிற்கு அந்த தலைமைத்துவம் மதிக்கப்படுகிறதாக இருக்கும். ஆக, நீங்கள் ஏதாவது ஒரு தலைமைத்துவத்தில் இருப்பீர்களானால், அதிகாரத்தை பயன்படுத்தி, அப்படி, இப்படி என்று சத்தம்போடுகிற ஒரு நபராக இருப்பீர்களானால், உங்களுக்கான மதிப்பு குறைவானதே. சும்மா பயப்படுகிற மாதிரி நடிப்பார்கள், ஆனால், உங்களிடத்திலே அன்பும், தாழ்மையும் அதிகமாக இருந்தால், நீங்கள் மற்றவர்களால் மதிக்கப்படுகிற இடத்தில் இருப்பீர்கள். இயேசுகிறிஸ்துவின் தலைமைத்துவம், அப்படியான மாதிரியை நமக்கு வெளிப்படுத்தி காண்பிக்கிறதைக் கவனித்துப் பாருங்கள். பிரியமானவர்களே. ஒரு நபருக்காக கூட அவர் உதவியும், ஆலோசனையையும் கொடுப்பதற்கு கடந்து சென்றார், ஆயத்தம் உள்ளவராய் இருந்தார். காரணம், அந்த ஒரு நபரைச் சந்தித்து, அவரைக்கொண்டு, அந்த ஊரிலுள்ளவர்களை சந்திக்க முடியும் என்று அவருக்குத் தெரியும். சமாரியப்பெண், இயேசுகிறிஸ்துவால் சந்திக்கப்பட்டு, அந்த ஊர் முழுவதும் அவரிடத்தில் வந்ததாக நாம் வாசிக்கிறோம். இப்படி ஒவ்வொரு காரியமாக நாம் பார்க்கும்போது, நாம் கிறிஸ்துவை நம்புவோம், ஆனால் நம்மைக்கொண்டு சந்திக்கப்படுகிற ஒவ்வொரு நபரும்கூட, அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாய் மாறுவார் என்ற நம்பிக்கை நமக்கு வரும். ஒரு நல்ல மேய்ப்பன் இவ்வாறான ஒரு மனப்பாங்கு உடையவராக இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொடுக்கிறார்.

**ஏழாவது காரியம்**, அவர் எப்போதும் திறந்த மனதுடையவராக, நேர்மை உள்ளவராக இருந்தார் என்று பார்க்கிறோம். ஒரு திறந்த மனது, பரந்த மனது, இயேசுவுக்கு இருந்தது, நமக்கும் அது தேவை. இன்றைய காலகட்டத்தில், ஊழியர்களுக்கும் அந்த பரந்த மனது, திறந்த மனது இல்லை. நாம் ஏதோவொரு காரியத்தை கரிசனையோடு கூறினோம், ஆனால் அவர்கள் பார்க்கிற விதம் என்னவென்றால், இவர் ஏன் இப்படி செயல்படுகிறார்? இவர் இதை சொல்லக்காரணம் ஏதோ இருக்கிறது, ஏதோவொரு உள்நோக்கத்தோடு இவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். இல்லாவிட்டால் இவருக்கு ஏதாவது இலாபம் இல்லாமல் இதைச் செய்வாரா? என்றுதான் பார்க்கிற அநேக ஊழியர்களை இன்று பார்க்கிறோம். பிரியமானவர்களே, நம்முடைய இலாபம், நம்முடைய பங்கு எல்லாம், கர்த்தரிடத்திலிருந்து வருகிறதாய் இருக்கிறது. நாம் கரிசனையோடு, மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுப்பதற்கு,

மற்றவர்களுக்கு உதவிசெய்வதற்கு, நமக்கு மனது தேவை. எல்லாவற்றையும் குறுகிய மனதோடு பார்க்ககூடாது. இயேசுவைப்போல, ஒரு பரந்த மனதுடையவர்களாக, நேர்மையுள்ளவர்களாக, நேர்மறையாக பார்க்கிறவர்களாகக் காணப்படவேண்டும். எதைச் சொன்னாலும் நல்ல நோக்கத்தோடு அவர் சொல்லுகிறார் என்ற பார்வை நமக்குத் தேவை. அப்பொழுதுதான், நம்முடைய பார்வையில், களங்கம் இருக்காது. மட்டுமல்ல, நமக்கு நிம்மதி இருக்கும். அதை விடுத்து, இதுவாக இருக்குமோ, அதுவாக இருக்குமோ என்று பல தவறான கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது, நிம்மதி இழக்கிறது. இதற்கு தேவனோ, மற்றவர்களோ காரணமல்ல என்பதை நீங்கள் முதலில் புரிந்துகொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவுக்கு அந்த திறந்த மனது இருந்தது. யாருக்காக? உங்களுக்காக, எனக்காக, அதை சொல்லித்தருவதற்காக, அப்படிப்பட்டவராய் காணப்பட்டார். அவர் எதையும் மறைக்கவோ, புரட்டவோ இல்லை என்பதை நாம் பார்க்க வேண்டும். எதையும் சமாளித்து பேசவில்லை, உள்ளதை உள்ளதாகப் பேசினார், மறைத்து பேசவில்லை, புரட்டி பேசவில்லை. நயவஞ்சகத்தோடு பேசவில்லை, ஏனெனில், அவரிடம் நேர்மை இருந்தது. ஆகவே, எல்லாவற்றையும் திறந்த மனதோடு, நேர்மறையாக, நேர்மையாக பேசினார் என்று பார்க்கிறோம்.

இன்றைய காலகட்டத்தை நீங்கள் பார்க்கும்போது, விசுவாசிகள் வெளித்தோற்றத்தைத்தான் பார்க்கிறார்கள். ஒரு கூடுகை என்று வைத்தாலே, அதிலே நல்ல வண்ணவிளக்குகள் அமைத்து, ஒரு சினிமா தியேட்டர் போல அந்த இடம் இருக்கவேண்டும் என்று, விசுவாசிகள் ஆடம்பரப்பிரியர்களாய் மாறிவிட்டார்கள். கோயம்புத்தூரிலுள்ள ஒரு சபைக்கு சென்றிருந்தேன், நான் சபைக்கு சென்றிருக்கிறேனா, அல்லது தியேட்டரில் இருக்கிறேனா என்று நினைக்குமளவிற்கு, விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு, சபையின் போதகர் பிரசங்கமேடை முன் நின்று பிரசங்கிக்கும்பொழுது, அவருக்கு மட்டும் வெளிச்சம் வருகிறது. மீதி எல்லாமே இருட்டாக வைத்திருந்தார்கள். இசை மற்றும் பாடல் பாடுகிறபோது, அதற்கு நேராக விளக்குகள் திருப்பப்பட்டது. இப்படி வித்தியாசமான, ஒரு காலகட்டத்திலே நாம் வாழ்கிறோம். வெளித்தோற்றத்தை, அதைப்போல, ஒரு நபரைப் பாாக்கும்போதும், அவருடைய வெளித்தோற்ற ஆளுமையைப் பார்க்கிறார்கள். அவரின் வெளிப்புறத் தோற்றம் எப்படியிருக்கிறது? கோட் மற்றும் சூட் அணிந்து, வளர்த்தியாக, கனத்த நல்ல தோற்றத்தோடு, பெரிய மீசை வைத்துக்கொண்டு, பார்ப்பதற்கு ஒரு அதிகாரி தோரணை இருக்கவேண்டும் என்று அநேக விசுவாச மக்களும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அவருடைய குணாதிசயத்தை அவர்கள் பார்க்கிறது இல்லை. தேவனோ, இருதயத்தை பார்க்கிறார் என்றுதான் நாம் வேதத்திலே பார்க்கிறோம். மனிதன் முகத்தைப் பார்க்கிறான், வெளிப்புறத்தைப் பார்க்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்து மக்களுடைய மனதைப் பார்க்கிறார், நேர்மறையாகச் செயல்பட்டார் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

**எட்டாவது காரியம்**, இயேசுகிறிஸ்து பிரதான மேய்ப்பராக, கடின உழைப்பும், விடா முயற்சியும் உள்ளவராக போதித்தார். அவரிடம் கடின உழைப்பு இருந்தது, விடா முயற்சி

இருந்தது, அவருடைய ஊழியத்திலே போதனை இருந்தது என்று பார்க்கிறோம். இன்னொரு வார்த்தையில் கூறவேண்டுமானால், அவர் சிறந்த முறையில் தொடர்பு கொள்ளுகிறவராக இருந்தார் என்று நாம் சொல்லலாம். அவர் மற்றவர்களை விட மாறுபட்ட விதத்திலே போதித்தார். சிறப்பாக சத்தியத்தை போதித்தார், பிரசங்கித்தார். அவருடைய போதனையை கவனிக்கும்போது, இலகுவாக இருந்தது. அவ்வாறு இலகுவாக பிரசங்கிக்க, அவர் பல முறைகளை, யுக்திகளை கையாண்டார். நமது ஆசிரியர்கள் பயன்படுத்துவதுபோல, அவர் பல கற்றுக்கொடுத்தலுக்கான உபகரணங்களை, போதனைக்காக பயன்படுத்தினார். காகங்களைக் கவனித்து பாருங்கள், காட்டு புஷ்பங்களை கவனித்துப் பாருங்கள் என்று, அவர் பல பொருட்களைக் காண்பித்து, அதைப்போல திராட்சை செடியைக் காண்பித்து, என்னுடைய பிதா, திராட்சை தோட்டக்காரர், நான், நானே மெய்யான திராட்சை செடி, நீங்களெல்லாம் கொடிகள் என்று பொருட்களை வைத்து, விளக்கம் காண்பிக்கிற ஒரு நல்ல போதகர் அவர். உரையாடல், உவமைக்கதைகள், கேள்வி பதில், ஆலோசனைகள் எல்லாம் அவருடைய போதனையில் காணப்பட்டது. அநேகமுறைகள், அவர் கேள்வி கேட்டு, கேள்வியையே பதிலாக தருகிற ஒரு தேவனாக, இயேசுகிறிஸ்து காணப்பட்டார் என்பதை நீங்கள் பார்க்க முடியும். நகைச்சுவையாய் பேசுகிற ஒரு பண்பை உடையவர் நம்முடைய இயேசுகிறிஸ்து. அநேக எடுத்துக்காட்டுகள் எல்லாம் இருக்கிறது, நகைச்சுவையாய், சிலவழிகளில் கடிந்துகொண்டு, சில வேளைகளில், ஆலோசனையாக, உவமைகளை கையாண்டு, சிலவேளைகளில், மக்களோடு உரையாடல் செய்து, வேதத்தை அழகாக புரிய வைத்தவர்தான் நம்முடைய தேவனாகிய இயேசுகிறிஸ்து. அதற்கெல்லாம் கடின உழைப்பு தேவை இல்லையா? நாம் மிகவும் எளிமையாக இன்று ஊழியம் செய்ய விரும்புகிறோம். சிலர் எளிதாக மேடையில் வந்து உட்கார்ந்து, பிரசங்கத்திற்கான குறிப்புகளைக்கூட எடுத்துக்கொண்டு வருகிறதில்லை, பிரசங்கத்தை ஆயத்தப்படுத்திவிட்டும் வருகிறது இல்லை. வேதம்தானே நமக்கு தெரியாதா? என்று கருதி, மனந்திரும்பவேண்டும், கர்த்தருக்கென்று காணிக்கை கொடுக்கவேண்டும், ஒழுங்காக ஜெபம் செய்ய வேண்டும் என்று பிரசங்கிப்பதற்கான நான்கு வசனங்களை வைத்துக்கொண்டு சிலர் பேசுகிறதைப் பார்க்கிறோம். ஆனால் ஜெபத்தோடு கடின உழைப்போடு, விடா முயற்சியோடு, நீங்கள் போதனையை, பிரசங்கத்தை ஆயத்தப்படுத்தி வந்திருப்பீர்களானால், சிறப்பாக மக்களுக்கு சத்தியத்தைக் கொடுப்பீர்கள். அப்போது, எப்படி இயேசுகிறிஸ்து ஒரு மேய்ப்பனைப்போல, கடினமாக உழைத்து, விடாமுயற்சியோடு செயல்பட்டு, போதனைகளைக் கொடுத்து, எப்படியாவது தம்முடைய பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்க்க வேண்டும், சத்தியத்தைக் கைக்கொள்வதிலே உருவாக்கவேண்டும் என்பதிலே அவர் உறுதியாக இருந்தாரோ, அதைப்போல நாமும் உறுதியாக இருக்க வேண்டியது அவசியம் பிரியமானவர்களே. அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கிற எடுத்துக்காட்டுகளில், ஒரு சிறு பகுதியைத்தான் நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்று நானும்கூட ஒருசில சமயங்களில் உணருகிறேன். வேதாகம கல்லூரிக்கு வெறும் புத்தகத்தை மட்டும் கொடுத்து, படியுங்கள் என்று சொல்லிக் கொடுக்கலாம். ஆனால், அது

போதாது, மக்கள் சத்தியத்தை புரிந்துகொள்ள வேண்டும். இந்த இறையியல் பாடத்தை வீட்டிலிருந்தே, அவர்கள் கேட்கிற அளவுக்கு, நாம் ஆடியோவில் கொடுக்கவேண்டும் என்று நாங்கள் இரவு, பகலாக பதிவு செய்து, அதை தட்டச்சு செய்து, அநேக புத்தகங்களைப் படித்து, ஆங்கில இறையியல் சம்பந்தமான புத்தகங்களையெல்லாம் படித்து, மூன்று அல்லது நான்கு புதத்தகங்களை ஒன்றாக இணைத்து, தமிழில் மொழிபெயர்த்து, திரும்பவும் தட்டச்சு செய்து, ஆடியோவில் பதிந்து, உங்களுக்கு தருகிறோம் என்றால், இயேசுகிறிஸ்துவின் அந்த கடினமான உழைப்பிலே, ஒரு சிறு துளியை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம் என்ற ஒரு திருப்தியை அடைவதற்காகத்தான் பிரியமானவர்களே.

போதகர்களாகிய நீங்களும், உங்களது சபையாருக்காக எந்தளவிற்கு கடின உழைப்பு உள்ளவர்களாக இருக்கிறீர்கள்? விடாமுயற்சி தேவை. எப்படியாவது சத்தியத்தை அவர்களுக்கு புரிய வைத்துவிட வேண்டும். ஏழைகளாக இருக்கலாம், புரியாதவர்களாக இருக்கலாம். ஆவியானவர் புரியவைத்து விடுவார் என்ற ஒரு விசுவாசத்தோடு, வேதத்தை நீங்கள் பலவிதங்களில் விளக்கிக்காண்பிக்க தயாராக இருக்க வேண்டும். அவர்களுக்கு புரிகிற வண்ணமாய் ஒரே பிரசங்க முறையை மட்டும் நீங்கள் பின்பற்றாமல், கடிந்துகொள்ளுதல் என்ற ஒரே முறையை மட்டும் வைத்துக்கொண்டு போதிக்காமல், உரையாடல் மூலமாக, உவமை மூலமாக, கதை மூலமாக, நாடகம் மூலமாக, கேள்வி பதில் மூலமாக, ஆலோசனைகள் மூலமாக, பல்வேறு உபகரணங்களின் உதவியோடுகூட, நீங்கள் உபதேசிக்கலாம், சொல்லிக் கொடுக்கலாம், நல்ல மேய்ப்பனாக இயேசுகிறிஸ்து இவ்விதமாக காணப்பட்டார். நீங்களும் இவ்விதமாய் இருக்கிறீர்கள் என்று, இந்த இடத்திலே கொஞ்சம் உங்களை வைத்து, சற்று சிந்தித்து பாருங்கள்.

**ஒன்பதாவது காரியம்**, ஒரு பொறுப்பை செய்துமுடிக்கும் வரை தன்னை அதற்கு ஒப்புக்கொடுத்து, அதை முடிக்கும்வரை உறுதியாக இருந்து, தனது இலக்கை அடைந்து காண்பித்தவர் நம்முடைய பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்து. உதாரணமாக சிலுவைப்பாடுகளை நாம் இந்த இடத்திலே நினைவுகூற முடியும். அந்த சிலுவை பாடுகளை எவ்வளவாய் ஏற்றுக்கொண்டு, நமக்காய் சகித்தார் என்பதை யோசித்து பாருங்கள். அவர் மரிப்பதற்காகத்தான் இந்த உலகிலே பிறந்தார். எனக்கென்று ஒரு சரீரத்தை நீர் ஆயத்தப்படுத்தியிருக்கிறீர், இதோ உம்முடைய சித்தப்படி செய்ய வருகிறேன் என்று இயேசுவானவர் பரலோகத்திலிருந்து பிதாவின் சித்தம் செய்யவே இந்த உலகிற்கு வந்தார். மரியாளின் வயிற்றிலிருந்து ஒரு சரீரத்தைப் பெற்றுக்கொண்டு, அந்த சரீரத்தைக்கொண்டு, சிலுவையிலே மரித்து, பூரணபலியாகி, உங்களை, என்னை மீட்பதற்காக அவர் வந்தார். அந்த பொறுப்பை, பிதாவினிடத்தில் பெற்று, அவர் பூமிக்கு வந்தார், அதைச் செய்து முடிக்கிற வரையிலே, எவ்வளவு தூரம் உறுதியாக இருந்தார் என்று பாருங்கள்.

பிசாசானவன் எவ்வளவோ வஞ்சித்துப் பார்த்தான். மேலும், சிலுவைப்பாடு இல்லாமல், சாஷ்டாங்கமாக என் காலில் விழுந்து, பணிந்துகொண்டால், நானே இந்த

உலகத்தை தந்திடப்போகிறேன், அதற்கு சிலுவையிலே மரிக்கவேண்டுமா? என்றெல்லாம் அவன் சோதனை செய்து பார்த்தான், அநேக எதிர்ப்புகள், யூதர்கள் கல்லெறிய, கொலைசெய்ய முன்வந்தார்கள். அவ்வாறு கொலை செய்ய முயற்சித்த முயற்சியின் கடைசி காரியம்தான் சிலுவை. அதுவரையிலும் அவர் உறுதியாகவே இருந்தார். அப்படியே சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுத்தார், சிலுவையின் மரணபரியந்தம், தம்மைத்தாமே வெறுமையாக்கினார் என்று பவுல் மூலமாய் ஆவியானவர் சொன்ன வார்த்தையின்படி, தம்மமைத்தாமே முற்றிலும் வெறுமையாக்கினார். தேவன் தம்மை, தம்முடைய வல்லமையை அங்கே விளங்கப்பண்ணவே இல்லை, நினைத்திருந்தால் செய்திருக்கலாம், ஆனால் செய்யவில்லை, தன்னை வெறுமையாக்கி, அதை செய்து முடிக்கிற வரையில் உறுதியாய் இருந்து தனது இலக்கை அடைந்தவர் இயேசுகிறிஸ்து. இதிலிருந்து நமக்கு எதைக் காண்பிக்கிறார்? பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்து எதை நமக்கு சொல்லித்தருகிறார்? நீங்களும், நானும் இந்த உலகிலே நமக்கு தந்த ஊழியத்தை நிறைவேற்றுவதில் முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்று சொன்ன அவருடைய வார்த்தைகளின் படி, நீங்களும், நானும் நமக்கு கொடுத்த பொறுப்பை, ஊழியத்தை முடிக்கும் வரையிலும் உறுதியாக இருந்து, அந்த இலக்கை எப்படியாவது அடையவேண்டும், சாதித்தே தீரவேண்டும் என்று பெரிய மேய்ப்பர் நமக்கு சொல்லி தருகிறார். அவர் நல்ல மேய்ப்பராகவும், உறுதியான மேய்ப்பராகவும் இருந்தார்.

**பத்தாவது காரியம்**, மற்றவர்களைப் புகழ்ந்து பாராட்ட ஒருபோதும் அவர் மறந்துபோனதில்லை. இயேசுகிறிஸ்துவைப் பார்க்கும்போது, அவர் புகழ்ந்தார் என்று சொல்வதைவிட, அவர் பாராட்டினார், அவர்கள் செய்த காரியத்தைப் பாராட்டினார். முகஸ்துதி வேறு, புகழ்ந்து பாராட்டுவது என்பது வேறு. அவர்கள் செய்த காரியத்தை, அந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, சிறப்பாக செய்தீர்கள் என்று சொல்கிறது என்பது புகழ்ந்து பாராட்டுவது. இயேசுகிறிஸ்துவை எடுத்துக்கொள்ளுங்கள், நூற்றுக்கு அதிபதியை எவ்வளவாய் பாராட்டினார் பாருங்கள், கானானிய ஸ்திரீயை எவ்வளவாய் பாராட்டினார், அவர்களை சரியான நேரத்தில் சுட்டிக்காட்டி, சிறப்பாக செய்தீர்கள் என்று சொல்லுகிறதை சற்று கவனித்துப் பாருங்கள். லூக்கா 7:9-ல், அந்த நூற்றுக்கு அதிபதியை இயேசு இவ்விதமாய் பாராட்டுகிறார், 'இஸ்ரவேலருக்குள்ளும், நான் இப்படிப்பட்ட விசுவாசத்தை காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்' என்று வாசிக்கிறோம். ஆக, மற்றவர்களை புகழ்ந்து பாராட்டுவது ஒரு நல்ல மேய்ப்பனுடைய தன்மை. சிலருக்கு புகழ்ந்து பாராட்டுகிற அந்த தன்மையே இல்லை என்பதுதான் வருந்தத்தக்க விஷயம். சிலர் செய்த காரியங்களை கொஞ்சம் பாராட்டி சொன்னால், அவர்களுக்கு சந்தோஷமாக இருக்கும். எல்லோருடைய உள்ளமும், அதை எதிர்பார்க்கிறது என்பதை புரிந்துகொள்ளுங்கள். நீங்களாகவே இருந்தாலும், ஒரு ஊழியத்தை செய்கிறீர்கள் என்றால், ஒரு பிரசங்கத்தை பண்ணுகிறீர்கள் என்றால், ஒருவர் வந்து நன்றாக பண்ணினீர்கள் சகோதரரே, சகோதரியே, மிகவும் அழகாக இருந்தது, என்று சொன்னால், உங்களுக்கு

எவ்வளவு சந்தோஷமாக இருக்கும், இல்லையா? அதில் நீங்கள் பெருமை கொள்ளாதபடி, உங்களைக் காத்துக்கொள்ள வேண்டியது உண்மைதான், ஆனால், இவ்விதமான ஒரு புகழ்ந்து பாராட்டுகிறது என்பது, உற்சாகமூட்டுகிற ஒரு விஷயம். நீங்கள் உங்கள் மனைவியை பாராட்ட வேண்டும். மனைவி கணவனை பாராட்ட வேண்டும், வேற எதையாவது நீங்கள் சொல்லிக்கொண்டு இருப்பீர்கள் என்றால் அது பிரச்சனைகளை உருவாக்கலாம். என் கணவர் ஒரு திறமையானவர், அவரிடமே நேரடியாக, நன்றாக செய்கிறீர்கள் என்று சொன்னால், அவருக்கு இன்னும் சந்தோஷம். என் மனைவி என்மீது எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார், என்ற அந்த ஆனந்தத்திலேயே அதிகமாய் செயல்படுவார். ஆகவே, ஒருவருடைய அந்த பணியை சிறக்க வைப்பதற்கு, இந்த பாராட்டுதல் என்பது மிகவும் தேவையான விஷயம். இயேசுகிறிஸ்துவானவர், அதை நன்றாக அறிந்து பல இடங்களில் பாராட்டுகிறதை நீங்கள் பார்க்க முடியும். எதற்காக இதைச்செய்தார்? நீங்களும், நானும் அதைச்செய்து, மற்றவர்களை உற்சாகப்படுத்தவேண்டும், விசுவாசிகளை அதிகமாய் சாதிப்பதற்கு தங்களை ஒப்புக்கொடுப்பார்கள், முன்னேறி வருவார்கள்.

**பதினோராவது காரியம்**, பெரிய மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவானவர் என்ன செய்தார்? சரீர குணமாக்குதல், ஆன்மீக குணமாக்குதல், ஆகிய இரண்டுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை அவர் காண்பித்தார், அதனுடைய வித்தியாசத்தை விளங்கப்பண்ணினார் என்றும் பார்க்கிறோம். நீங்கள் மத்.9:5-6 வரையான வசனங்களை வாசிக்கையில், 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நட என்று சொல்வதோ, எது எளிது? பூமியில் பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி, நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப்போ' என்று இயேசு சொல்லுகிறதை வாசிக்க முடியும். ஆக, பாவம் மன்னிக்கிற அந்த காரியத்தை, சரீரப்பிரகாரமான அந்த சுகமாக்குதலை, வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறார். ஆத்துமாவில் சுகம், சரீரத்தில் சுகம், பாவமன்னிப்பு, ஆத்துமாவில் ஏற்படுகிற சுகம், ஆகியவற்றை வித்தியாசப்படுத்தி காண்பித்த அவர், ஒரு பெரிய மேய்ப்பன், நம்முடைய இயேசு. இன்றைக்கு வித்தியாசம் தெரியாதபடி அநேகர் காணப்படுகிறார்கள். மொத்தத்தில், உலக ஆசீர்வாதத்தை மட்டும் பேசுகிற அநேக போதகர்கள், அநேக சுவிசேஷகர்கள், அநேக ஊழியர்கள், நாம் இரட்சிக்கப்படவேண்டும், நம்முடைய ஆத்துமா வெளியே வந்து, நாம் பரலோகம்போய்ச் சேரவேண்டும், நாம் பரலோக குடிமக்கள், அதுதான் முக்கியம் என்று சொல்லக்கூடாத அளவுக்கு, அநேகர் காணப்படுகிறார்கள். அதைக்குறித்து சொல்வதில்லை, ஆனால், பெரிய மேய்ப்பருடைய வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உலக வாழ்வில் ஆவிக்குரிய வாழ்வுதான் முக்கியம், உலக வாழ்வு என்பது இரண்டாம் இடம்தான் என்பதை சொல்லிக்கொடுக்க தயங்கக்கூடாது. நாம் அவ்வாறு சொன்னால், அவர்கள் சபைக்கு வராமல் போய் விடுவார்களோ, என்று பயந்து நடுங்கக் கூடாது. நாம்

சரியாக சொல்லி, அவர்களை வளர்த்தோமானால், கிறிஸ்துவில் நிலைத்து நிற்பார்கள். அவ்வாறு இல்லாமல், உன் கடன் மாற, உன் நோய் மாற, இயேசுவிடம் வா, என்று சொன்ன உடனே, கடனோ, நோயோ மாறின உடனேயே, அவர்கள் இயேசுவை விட்டுவிட்டு போய்விடுவார்கள். ஆனால், அதைவிட்டு ஐயா, உலக ஆசீர்வாதத்தைவிட, ஆவிக்குரிய ஆசீர்வாதம் மிகவும் முக்கியம், பரலோகம்தான் முக்கியம், இந்த உலக வாழ்வு அழிந்து போகக்கூடியது என்று வித்தியாசப்படுத்தி, நாம் கற்றுக்கொடுத்தோமானால், ஒரு நித்தியமான, வளர்ச்சியானதொரு சபையை நீங்கள் பெற்றவர்களாய் இருப்பீர்கள். ஆத்துமாக்கள் சரியான கண்ணோட்டத்தோடு வளர்வார்கள்.

**பன்னிரெண்டாவது காரியம்**, அவர் மக்களுக்கு வல்லமையூட்டினார். பெரிய மேய்ப்பனாகிய இயேசுகிறிஸ்து, மக்களுக்கு வல்லமையூட்டினார். வல்லமையூட்டுதல் என்பது, உற்சாகப்படுத்துதலின் ஒரு பகுதிதான், அதாவது நாம் சற்று முன்னார் பார்த்தோம், அவர் புகழ்ந்து பாராட்டினார். அது ஒருபக்கம், ஆனால், இன்னொரு விதம், வல்லமையூட்டுதல், அதாவது, உற்சாகமூட்டுதல்(Motivation) என்பதற்கு ஒரு உதாரணத்தை பார்ப்பீர்களானால், பேதுருவை, இயேசு உற்சாகப்படுத்தி சொல்லுகிறதை நாம் யோவான் 9-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். நீ இதுவரை நாணல்போன்ற ஒருவனாய் இருந்தாய். சீமோன் என்பதற்கு, நாணல் என்று அர்த்தம். ஆக, இனி பேதுருவாய் இருப்பாய் என்று அவர் கூறினார். அதாவது, கற்பாறை போல நீ இருப்பாய். ஆக, முன்னே நீ விசுவாசத்தில் இல்லை, ஆரம்பகட்ட நாணல் போலத்தான் இருக்கின்றாய், ஆனால் இனியொரு காலம் வருகிறது, அப்பொழுது கற்பாறைபோல காணப்படுவாய். இயேசுகிறிஸ்துவின் மரணம் வரையில், இயேசுகிறிஸ்துவை காட்டிக்கொடுத்தபோதுகூட, நாணல்போலத்தான், அவர் விசுவாசத்தில் காணப்பட்டார். பேதுருவின் வாழ்வை, நீங்கள் எடுத்து, ஒரு வரைபடத்தை வரைந்து பார்க்கையில், அவரது விசுவாசம் திடீரென்று பயங்கரமாக மேல்நோக்கி செல்கிற ஒன்றாக இருக்கும், அடுத்த வரியில்(லைனில்) முற்றிலும் விசுவாசம் அனைத்தும் காலியான நிலையில் இருப்பதைக் காணமுடியும். ஆக, அந்த வரைபடத்தின் கோடுகளில், அவரது விசுவாச கோடு மேலும், கீழுமாக காணப்படும். திடீரென்று, நான் உமக்காக சாகவும் தயார் என்பார், பிறகு அந்த மனுஷனையே நான் அறியேன் என்று சொல்லிவிட்டு போய்விடுவார். ஆகவே, இப்படிப்பட்ட மனுஷன்தான் பேதுரு. ஆனால், அந்த மனுஷனை பார்த்துதான் இயேசு சொன்னார், நீ இவ்வாறு நாணல் மாதிரி அங்கேயும், இங்கேயும் விசுவாசத்திலே ஆடிக்கொண்டு இருப்பாய், ஆனால் ஆவியின் அபிஷேகம் பெற்ற பிறகு, நீ கற்பாறைபோல காணப்படுவாய் என்று கூறினார். அதைப்போலவே, அவன் விசுவாசத்திலும், ஊழியத்திலும், மரணத்திலும் கற்பாறை போலவே உறுதியாய் காணப்பட்டதைப் பார்க்கிறோம்.

ஆகவே, நாம் யாராக இருக்கிறோம் என்பது முக்கியமல்ல, யாராக இனி மாறப்போகின்றோம் என்பதைத்தான் இயேசுவானவர் பார்க்கிறார். நீங்கள் இப்போது இருக்கிற நிலை, வீணாக இருக்கலாம். ஆனால், ஆவியின் அபிஷேகத்தோடு நீங்கள்

உங்களை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கும்போது, அவருடைய சித்தத்தில் இணையும்போது, உங்கள் வாழ்வு ஒரு மாற்றத்தை அடையும். இனி வருகிற நாட்கள் ஒரு மாற்றமடைந்த கற்பாறை போன்ற, உறுதியான வாழ்வாய் மாறும். ஏனெனில், அன்பிலே வேரூன்றி, நீங்கள் அந்த கன்மலையிலே, கிறிஸ்துவிலே அஸ்திபாரத்தை மிகவும் உறுதியாக போடப்பட்ட ஒரு வாழ்வுக்கு வரும்போது, நீங்கள் விசுவாசத்திலே உறுதியாய் நிற்பீர்கள். கிறிஸ்துவுக்காய் பெரிய காரியங்களை செய்கிறவர்களாய் காணப்படுவீர்கள். அந்த காரியத்தை இயேசுகிறிஸ்துவானவர், தம்முடைய சீஷனாகிய பேதுருவுக்கு விளங்கப்பண்ணி, உற்சாகம் கொடுத்து, வல்லமையூட்டி, அவன் வாழ்வை முற்றிலுமாய் ஆசீர்வாதமாய் மாற்றினார். ஒரு பெரிய மேய்ப்பனிடமிருந்து நீங்கள் இதைக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் இப்போது இருக்கிற நிலையை உங்கள் விசுவாசிகள் வாழ்விலே பார்க்காதீர்கள். இனி என்னவாய், கிறிஸ்துவுக்குள் வரும் அவர்கள், மாறுவார்கள் என்ற கண்ணோட்டத்தோடு பாருங்கள். வேதத்திலிருந்து அப்படி சொல்லிக்கொடுங்கள். ஆவியானவர் அதை செய்து முடிப்பார், உருவாக்கித் தருவார் என்ற கண்ணோட்டத்தோடு காணப்படுங்கள். பெரிய மேய்ப்பர் உங்கள் வாழ்விலும், பெரிய காரியங்களை செய்வார். இயேசுகிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக இவ்விதமாக காணப்படுகிறார். அவர் மக்களுக்கு வல்லமையூட்டினார். நாணல்போல் இருந்த பேதுருவை, கற்பாறைபோல நீ ஆவாய் என்ற அர்த்தத்திலே பெயரை மாற்றி அழைத்தார். நீங்களும் அவ்விதமாக உற்சாகப்படுத்த முடிவு செய்தமைக்காக உங்களுக்கு நன்றி சொல்கிறோம்.

தொடர்ந்து, இயேசுவின் இருவிதமான ஊழியங்களைக் குறித்து நாம் சற்று சிந்திக்கப் போகிறோம். ஒரு ஊழியக்காரனாக, எப்படி காணப்பட்டார்? ஒரு மேய்ப்பனாக எவ்விதமாக காணப்பட்டார்? என்று பார்த்து சிந்திப்பது நமக்கு மிகவும் ஆசீர்வாதமானதாக இருக்கும். நம்முடைய ஊழிய பாதையிலே நிச்சயமாய் அது உதவி செய்கிறதாய் இருக்கும். முதலாவது, ஒரு ஊழியக்காரனாக இயேசுகிறிஸ்துவை நாம் பார்ப்போம். இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு ஊழியக்காரனுக்குரிய இருதயம் இருந்ததே. அதை நாம் மாற்கு *10:45*, யோவான் *13:1-5* வரையுள்ள வசனங்களில் பார்க்க முடியும். அது நமக்கு அறைகூவலாய் காணப்படுகிற வசனங்களாய் இருக்கிறது. மாற்கு *10:45*-ம் வசனத்தை வாசிப்போம், 'அப்படியே மனுஷகுமாரனும், ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாக, தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்' என்று இயேசு கூறுகிறதைப் பாருங்கள். தேவ குமாரன் சொல்லுகிறார், அவர் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யும்படி வந்தேன், அநேகரை மீட்பதற்காக என்னுடைய ஜீவனைக் கொடுக்கவும் நான் வந்தேன் என்று கூறுகிறார். ஆகவே, இதுதான் ஒரு ஊழியக்காரனுடைய இருதயமாக இருக்க வேண்டும். நாம் ஊழியம் கொள்ளும்படி, ஊழியர்களாய் கர்த்தர் நம்மை நியமிக்கவில்லை, அநேகருக்கு ஊழியம் செய்ய நியமித்திருக்கிறார். அதற்காக மற்றவர்களை எந்த வேலையும் நாம் செய்ய வைக்கக்கூடாது என்று அர்த்தமல்ல. நாம் நமக்கு கொடுத்த ஊழியத்தை, நாம்தான்

செய்யவேண்டும். எல்லாவற்றையும் மற்றவர்களை செய்யவைத்து நாம் சும்மா, ஓய்வெடுக்க கர்த்தர் நம்மை ஏற்படுத்தவில்லை, நமக்கு கர்த்தர் கொடுத்த அழைப்பின் அடிப்படையிலே, நாம் அந்த ஊழியங்களை செய்ய வேண்டும். மற்றவர்களை அவர்கள் அழைப்பின் அடிப்படையிலே உங்கள் சபையில், வீட்டிலிருக்கிற இடங்களில் ஊழியம் செய்யும்படி நீங்கள் உற்சாகப்படுத்த வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

ஆக, அந்தவொரு ஊழியக்காரனுடைய தாழ்ந்த சிந்தை, அதாவது ஒரு வேலைக்காரன்போல, இயேசுவின் இருதயம் காணப்பட்டது, உங்கள் இருதயம் அவ்வாறு காணப்படுகிறதா? இதனை பின்பற்றாவிட்டால், தேவனுடைய ஊழியத்தில், உங்களுக்கு, எனக்கு வெற்றி இல்லை. நாம் ஒரு ஊழியக்காரனுடைய இருதயத்தோடு, இவ்விதமாய் இயேசுவைப்போல ஊழியம் கொள்ளும்படி வரவில்லை என்ற எண்ணத்தோடு, ஊழியம் செய்யவே நம்மை அனுப்பி இருக்கிறார் என்ற எண்ணத்தோடு, நாம் செயல்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. யோவான் 13:3-5 வரையுள்ள வசனங்களையும் வாசிக்கலாம், 'தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தார் என்பதையும், தான் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்கு போகிறதையும் இயேசு அறிந்து, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களை கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீரை வார்த்து, சீஷர்களுடைய கால்களை கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும், தொடங்கினார்' என்று பார்க்கிறோம். ஆம் பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலே அநேக இடங்களிலே மிகவும் தாழ்ந்த ஒரு சிந்தை வேண்டுமென்றுதான் கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஊழியக்காரனுடைய அந்த இருதயம் தாழ்ந்த சிந்தையோடு காணப்படுகிற இருதயமாக இருந்தது. இந்த ஊழியக்காரன் என்ற வார்த்தையை நீங்கள் பேதுருவின் பிரசங்கத்தில் பார்க்கலாம். அப்.3:13 மற்றும் 26 போன்ற வசனங்கள், 4:27 மற்றும் 30 போன்ற வசனங்கள், ஏசாயா 42-ம் அதிகாரத்திலும் நீங்கள் இந்த மேசியாவை, ஒரு ஊழியக்காரனாக, தாசனாக காணமுடியும்.

இவ்விதமாக ஊழியக்காரன் என்பவன், இப்படி இருக்கவேண்டுமென்று இந்த வசனங்கள் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. இயேசுகிறிஸ்து இதை தாமாகவே விரும்பி செய்தார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஊழியம் என்பது நாமாகவே முன்வந்து செய்கிற விஷயம். யாரும் கட்டாயப்படுத்துவதினால், இந்த ஊழியத்தை நாம் செய்துவிட முடியாது, தேவனுடைய பணியை நாமாகவே ஆர்வமாக எடுத்து செய்யாவிட்டால், மற்ற எந்த விதத்திலும் செய்ய இயலாது. இயேசுகிறிஸ்து தாமாகவே முன்வந்து அடிமையின் ரூபம் எடுத்தார். அதாவது மனுக்குலம், இந்த மனுக்குலத்திலே ஒரு மானிடப் பிறவியாய் இறங்கியதே அடிமையின் ரூபம் மட்டுமல்ல, தம்மைத்தாமே வெறுமையாக்கி, அந்த அடிமையின் ரூபம் எடுத்தார் என்று பிலிப்பியர் நிருபத்திலே பவுல் கூறுகிறதை இங்கே பார்க்க முடியும். நீங்கள் இயேசு கிறிஸ்துவினுடைய தாழ்மைக்கு சிறந்த உதாரணமாக, யோவான் 13:1-5 வரையுள்ள வசனங்களில் அவருடைய தாழ்மையைப் பார்க்க முடியும்.

சீஷர்களின் கால்களை கழுவினார். இதிலே தாழ்ந்த சிந்தை எவ்வளவுதூரம் வெளிப்படுகிறது என்பதைப் பாருங்கள், அதை வைத்துதான் பவுல் எழுதுகிறார். ‘கிறிஸ்துவிலிருந்த சிந்தையே, உங்களிலும் இருக்கக்கடவது’ என பிலி.*2:6-8* வரையுள்ள வசனங்களில் பார்க்க முடிகிறது. கால்களை கழுவுதல் என்பது, சுயத்தை வெறுத்து, தாழ்மையோடு செய்யப்படுகிற ஒரு ஊழியமாக, பணியாக பார்க்கப்படுகிறது. அவருடைய ஊழியக்காரராகிய நீங்களும், நானும் இவ்விதமான ஒரு மாதிரியைப் பின்பற்றி போகவேண்டும் என்பதற்காக, இயேசு இதை செய்து காண்பித்து வைத்திருக்கிறார். அவருடைய காலடிகளை அப்படியே பின்பற்றத்தான் அவர் எதிர்பார்க்கிறார். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? கொஞ்சம் யோசித்து பாருங்கள். நம்முடைய வாழ்க்கையிலே ஒருவேளை பெருமை காணப்பட்டு, ஏற்கனவே கூறியதுபோல சிலர், எல்லோரையும் அல்ல, அதுவும் புரிந்துகொள்வதற்காக சொல்லுகிறோம், பெருமையுள்ள ஊழியக்காரர்களாக, போதகர்களாக, சுவிசேஷகர்களாக இருக்கிறார்கள். அமைச்சர்களைக்கூட பார்த்துவிடலாம், ஆனால் இவர்களைப் பார்க்கவே முடியாமலிருக்கிறது, அவர்கள் காட்டுகிற பந்தா இருக்கிறதே, அதைச் சகிக்க முடியாது, அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதுபோல காண்பித்துக்கொண்டு, அவர்களைப் பார்க்க முடியவில்லை என்று பந்தா காட்டுகிறார்கள். அவ்வாறு இல்லையென்றாலும், அவருக்கு கீழேயிருக்கிற சில ஊழியர்கள், அதை அவ்விதமாய் செய்கிறதை நாம் பார்க்கிறோம். இயேசு அவ்வாறு இருந்தாரா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பிறர் அனைவரும் அவரை அணுகுகிற தூரத்திலே இருந்தார். ஆனபடியினால்தான், அவர் குதிரையின்மேல் வராமல், கழுதையின்மேல் வந்தார். அணுகக்கூடிய வேகத்திலே, அணுகக்கூடிய தூரத்திலே, இயேசு சாந்தமுள்ளவராய் வந்தார். அவர் ஒரு ஊழியக்காரனாக நமக்கு அநேக மாதிரிகளை வைத்துப்போயிருக்கிறார். வேதத்திலே வாசித்து பாருங்கள், அவருடைய அந்த ஊழியத்தின் மாதிரியை எடுத்துக் கொள்ளுங்கள்.

இரண்டாவது ஒரு காரியம், ஒரு மேய்ப்பனாக, ஒரு வேலைக்காரனாக அவர் காணப்பட்டார். யோவான் *10:11*, *1* பேதுரு *2:25* போன்ற வசனங்களை நீங்கள் பாருங்கள். யோவான் *10:11*-ம் வசனத்தை வாசிக்கலாம், ‘நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுக்கிறான்.’ அடுத்து *1* பேதுரு *2:25*-ம் வசனம், ‘சிதறுண்ட ஆடுகளைப்போல் இருந்தீர்கள், இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு, மேய்ப்பரும், கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்’ என்று அழகாக பேதுரு எழுதுகிறார். நாம் சிதறுண்ட ஆடுகளைப்போல இருந்தோம் அல்லவா? ஆனால், இப்போது எங்கே வந்திருக்கிறோம். நம்முடைய ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரான, இயேசுகிறிஸ்துவினிடத்தில் வந்திருக்கிறோம், அவர் கண்காணியுமாய் இருக்கிறார். நம்மை கவனித்து, நம்மை சரியானபடி மேய்த்து, புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையிலே கொண்டுவிடுவதற்கு, கண்காணிக்கிறவரிடத்தில், அதாவது மேற்பார்வை செய்கிறவரிடத்தில், நாம் திருப்பப்பட்டிருக்கிறோம், வந்திருக்கிறோம். அவர்

அதை செய்கின்றார். இந்த மேய்ப்பு என்ற சொல்லுக்கான இலத்தீன் வார்த்தை 'pastories' என்பதாகும். 'pastories' என்பதற்கு என்ன அர்த்தம் என்றால், 'போஷிப்பது' என்பதாகும். போஷிக்கிறவன் என்பதின் அர்த்தம், ஆடுகளுக்கு மேய்ச்சலைக் காண்பிப்பவன் என்று அர்த்தமாகும். ஆக, இயேசுகிறிஸ்துவானவர் இவ்விதமாய் சபையை, ஆத்துமாக்களை போஷிக்கிறார், அவர் கண்காணிக்கிறார். தன் ஆடுகள் என்ன செய்யவேண்டுமென்று கண்காணித்து பார்த்துக்கொண்டேயிருக்கிறார். அவருடைய கண்கள் பதிந்தவைகளாய் இருக்கிறது, மட்டுமல்ல ஆத்துமாக்களை அவர் மேய்க்கிற ஒரு மேய்ப்பனிடத்தில் வந்திருக்கிறோம். ஆக, அவர் அத்துமாவையும் போஷிக்கிறார், சரீரத்தையும் போஷிக்கிறார். இப்படிப்பட்ட நல்ல மேய்ப்பனை நீங்களும், நானும் உடையவர்களாய் இருக்கிறோம்.

யோவான் 10:1-16 வரையுள்ள வசனங்களை பார்க்கையில், மேய்ப்பனின் பண்புகளை நாம் பார்க்க முடியும். அதில் 9 தன்மைகள் இருப்பதை நாம் பட்டியலிட முடியும். மேய்ப்பன் எப்படிப்பட்டவனாக இருக்கிறான், அதேபோல், வசனம் 3-ன் அடிப்படையில், முன்பாக வழிநடத்திக்கொண்டு செல்கிற மேய்ப்பனாய் இருக்கிறான். 8-ம் வசனத்தின் அடிப்படையிலே, இந்த மேய்ப்பன் உண்மையாகவே, ஆடுகள் மீது கரிசனை கொண்டிருப்பவனாய் இருக்கிறான். 9-வது வசனத்தின் அடிப்படையில், அவன் மேய்க்கிறவன், அதாவது போஷிக்கிறவன், மேய்ச்சலைக் காண்பிக்கிறவன், சத்தியத்தை மேய்ந்துகொள் என்று சொல்லப்படுகிறதே, அவ்விதமாக ஒரு மேய்ப்பன், சத்தியத்தை மேய்கிறான். மற்றவர்களை சத்திய மேய்ச்சலுக்கு நேராய் நடத்துகிறான். சத்தியத்தில் மேயவைக்கிறார் என்று நாம் அர்த்தம்பட சொல்ல முடியும். ஆகவே, அவன் மேய்க்கிறவன். ஐந்தாவது காரியம், அவன் பாதுகாப்பவன், ஆடுகளை பாதுகாக்கிறவன் அவன்தான். ஆறாவது காரியம், 11-ம் வசனத்தின் அடிப்படையிலே, யோவான் 10:11-ன் அடிப்படையிலே, அவன் நல்லவனாய் இருக்கிறான். இன்று கூலிக்கு வேலை செய்கிற சிலர் இருக்கிறார்கள். இயேசுவும் அதே அதிகாரத்தில், இவ்விதமாய் கூறுகிறார், கூலிக்கு வேலை செய்கிற மேய்ப்பர்கள், அதாவது சம்பளத்துக்காக செய்கிறவர்கள்.

பிரியமானவர்களே, நீங்கள் ஆத்துமாவைக் குறித்து நீங்களாகவே பாரமுடையவர்களாக இருக்கவேண்டும், அப்போதுதான் நீங்கள் சீரிய முறையில் செயல்படுவீர்கள். நாம் கர்த்தருக்காய் அவ்வாறு செயல்படுகிறபோது, நம்முடைய பலன் எல்லாமே பரலோகத்திலிருந்து வருகிறதாய் இருக்கிறது. இன்றைக்கு அநேகர் ஊழியம் செய்ய விரும்புகிறது இல்லை, காரணம் ஊழியம் செய்தால், எனக்கு என்ன இலாபம்? எனக்கு இலட்சம் தருவாரா? கோடி தருவாரா? என் கடனை மாற்றுவாரா? உலகப் பிரகாரமாய் பண விஷயத்திலேயே நாம் பலனை எதிர்பார்க்கிறோம். எதற்கெடுத்தாலும், நான் கர்த்தருக்கு காணிக்கை கொடுத்தால், 100 சதவீதம் தருவாரா? என்பதிலேயே குறியாக இருக்கிறோம். உங்களைப் படைத்த கர்த்தர், அதைவிட அதிகமாய் தர வல்லவர். ஆனால் நீங்கள் நான் கொடுத்தை, நீர் தருவீரா? என்று கேட்கிறது, அதுவொரு வியாபார

ரீதியாய் போய்விடும். என்னுடையதெல்லாம், உம்முடையது கர்த்தாவே என்று ஒரு அர்ப்பணிப்புக்குள் நீங்கள் வரும்போது, உங்கள் காரியங்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறார். ஒரு கிறிஸ்தவன், நல்லவனாய் இருக்கவேண்டும். நல்ல மனப்பாங்குடையவனாய் இருக்கவேண்டும். அந்த நல்ல மனப்பாங்கை, இந்த ஊழியர்கள் கெடுத்துவிட்டார்கள் என்றுதான் நான் ஊழியர்களை குறை சொல்லவேண்டும், நானும் ஊழியக்காரனாகத்தான் இருக்கிறேன். அந்த தைரியத்தில் தான் சொல்கின்றேன். அநேக ஊழியர்கள், நல்ல மனதோடு ஊழியம் செய்யாதபடி, தனக்கென்ன இலாபம் வரும்? இந்த ஊழியத்தை செய்வதினாலே, இதை என்னோடு வைத்துக்கொள்வதினால், என்ன இலாபம் என்பதைக் குறித்து அதிகமாய் கரிசனம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

ஏழாவது காரியம், நல்ல மேய்ப்பன், தன் ஜீவனையும் கொடுக்கிறவனாய் இருக்கிறான். தன் ஆடுகளுக்காக ஜீவனையும் கொடுப்பவன், அந்தளவுக்கு தனது மந்தையை நேசிப்பான். எட்டாவது காரியம், மந்தைக்குள் வராத ஆடுகளையும் தன் மந்தைக்குள் சேர்த்துக்கொள்ள விருப்பமுடையவனாய் இருப்பான். அதாவது, வழிதப்பி திரிகிற, சிதறுண்டு அலைகிற ஆடுகளை, தன்னுடைய மந்தையில் சேர்க்க, அதாவது, கர்த்தருடைய மந்தையில் சேர்க்க, அவன் முயற்சி எடுக்கிறவன், ஏனெனில், அந்த அதிகாரத்தில் இவ்விதமாக இயேசு கூறுகிறார். ஒன்பதாவது காரியம், ஆடுகள் தொலைந்து போனால், அதைக்குறித்து கவலைப்படுகிறவனும், தேடுகிறவனுமாய் இருப்பான். ஆத்துமாக்கள் தொலைந்து போனால், கவலைப்படுகிறவனும், தேடுகிறவனுமாய் இருக்கிறவன்தான் நல்ல மேய்ப்பன். ஐயோ, அந்த மனிதன் மீண்டும் பாவத்தில் விழுந்துவிட்டானே, பாவத்தை நோக்கி செல்கின்றானே என்று சொல்லி, தேடுகிறவன். இயேசுகிறிஸ்து இந்த காரியங்களை எல்லாம், யோவான் 10-ம் அதிகாரத்தில் மிக விளக்கமாக, அருமையாக சொல்லுகிறார். பிரியமானவர்களே, நீங்கள் நல்ல ஊழியனாய் விளங்க, அந்த பண்புகளை எல்லாம் கற்றுக்கொள்ளுங்கள். அதை உங்கள் வாழ்க்கையிலே, பின்பற்ற முயற்சி எடுங்கள். இயேசுகிறிஸ்து அதை முன்மாதிரியாக செய்து காண்பித்தார். ஒரு மேய்ப்பனாக இவ்விதமாக செயல்பட்டு காண்பித்தார். இயேசுவின் இரண்டுவிதமான ஊழியங்களைக் குறித்து நாம் சிந்தித்து கொண்டிருக்கிறோம்.

பிரியமானவர்களே, நமது எஜமான் யார்? என்று சொல்லி, சில வசனங்கள் அடிப்படையிலே நான் உங்களுக்கு சொல்ல விரும்புகின்றேன். இந்த மேய்ப்பன் என்பவன், 1 பேதுரு 5:4-ன்படி, மக்களை வழிநடத்த தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன். மேய்ப்பன் மக்களின் சேவகன், இருந்தபோதிலும் அவர்கள் அவனது எஜமான்கள் அல்ல. தேவனே அவனது எஜமான், அதாவது மக்கள் அந்த ஊழியக்காரனுக்கு எஜமான்கள் அல்ல. தேவன்தான் அந்த ஊழியக்காரனுக்கு, மேய்ப்பனுக்கு எஜமான் என்ற அர்த்தத்திலே அவர் கூறுகின்றார். 1 பேதுரு 5:2-4 வரையுள்ள வசனங்களை வாசிக்கலாம், 'உங்களிடத்தில் உள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாய், அவலட்சணமான ஆதாயத்துக்காக அல்ல, உற்சாகமனதோடும், சுதந்திரத்தை இறுமாப்பாய்

ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள், அப்படி செய்தால், பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது, மகிமையுள்ள கிரீடத்தை பெறுவீர்கள்' என்று பேதுரு எழுதுகிறார். எவ்வளவு சுருக்கமான வார்த்தைகளில், பெருக்கமான அர்த்தத்தைக் கொடுத்திருக்கிறார் பாருங்கள். ஆக, நம்முடைய மந்தையை, அதாவது ஊழியத்தை கட்டாயமாய் செய்யக்கூடாது, யாரோ கட்டாயப்படுத்துகிறார்கள் என்கிற அர்த்தத்தில், அந்த மனதோடு செய்யவே கூடாது, மனப்பூர்வமாக செய்யவேண்டும். ஊழியத்தை மனப்பூர்வமாக, மனதார செய்யவேண்டும். மட்டுமல்ல, அந்த ஊழியம் செய்வதின் நோக்கத்தை தெளிவாக கூறுகிறார். அவலட்சணமான ஆதாயத்திற்காக ஊழியம் செய்யகூடாது, ஆதாயம் இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஆத்துமாக்கள் சந்திக்கப்படுகிறார்கள் என்ற உற்சாக மனதோடு ஊழியம் செய்யவேண்டும். பிறகு உங்களுக்கு, ஆத்துமாக்களை கர்த்தர் தரும்போது, நீங்கள் அந்த சுதந்திரத்தை, இறுமாப்பாய் ஆளக்கூடாது. இன்றைக்கு அதுதான், நிறையபேர் செய்கிறார்கள், சரியாக இல்லாத போதகர்கள் கையில் மாட்டிக்கொண்ட விசுவாசிகள், பாவம் என்றுதான் சொல்ல வேண்டும். பெருமையுள்ள போதகர்கள், குருவானவர்கள், ஊழியர்கள் கையில் மாட்டிக்கொண்டவர்கள், பரிதாபத்திற்குரியவர்கள். கர்த்தருடைய வார்த்தையை சொல்லி, மிரட்டி, இப்படி செய், அப்படி செய் என்று சொல்லி, மிக பரிதாபமாய் நடத்துகிறார்கள். சுதந்திரத்தை நீங்கள் இறுமாப்பாய் ஆளக்கூடாது. நீங்களே அந்த மந்தைக்கு மாதிரிகளாக இருங்கள், மாதிரிகளாயிருந்து கண்காணிப்பு செய்யுங்கள், அவ்வாறு செய்தால், உங்களுக்கு மேலேயிருக்கிற பிதான மேய்ப்பர், ஒருநாளில் வெளிப்பட போகிறார், நீங்கள் அவருக்குத்தான் கணக்கு ஒப்புவிக்க போகிறீர்கள். உங்கள் மேல், மக்கள் எஜமான்கள் அல்ல. அவர்தான் எஜமான் என்று சொல்லி, இந்த மாதிரியான நோக்கத்தோடு, நீங்கள் ஊழியம் செய்தீர்களானால், மகிமையுள்ள வாடாத கிரீடத்தை பெறுவீர்கள் என்று, ஒரு நிவாரணம் பற்றியும் சொல்கின்றார். இப்படி ஊழியம் செய்தால், நமக்கு பலன் உண்டாகிறதாய் இருக்கிறது. நம்முடைய கிரியைகளுக்கு, ஊழியத்திற்கு பலன் உண்டு, சன்மானம் உண்டு.

பிரியமானவர்களே, தொடர்ந்து நாம் வருகிற பாடங்களிலும், இதைக்குறித்து சிந்திக்க இருக்கின்றோம். விசவாசத்தோடு, நாம் இந்த ஆசீர்வாதங்களை சுதந்தரித்து கொள்வோம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து, இந்த நல்ல மேய்ப்பு பணியிலே, ஊழியத்திலே, உங்களை உருவாக்குவாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1) மேய்ப்புபணி இறையியலில், இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
2) இயேசுவின் இருவிதமான ஊழியங்களை(ஊழியக்காரர், மேய்ப்பர்) குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?

3) மேய்ப்பு என்பதற்கான இலத்தீன் வார்த்தையையும், அதற்கான விளக்கத்தையும் கூறுக?
4) யோவான் 10:1-16 வரையுள்ள வசனங்களின் அடிப்படையில், மேய்ப்பனின் ஒன்பது பண்புகளைக் கூறுக? (தலைப்புகள் மட்டும்)
5) யோவான் 10:1-16 வரையுள்ள வசனங்களின் அடிப்படையில், மேய்ப்பனின் ஒன்பது பண்புகளைக் குறித்து வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
6) மேய்ப்பர்களின் எஜமான் யார்? என்பதனை வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - 3

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நாம் இந்த பாடத்தில், மேய்ப்பன் என்பவர் யார்? என்பதைக் குறித்து தொடர்ந்து சிந்தித்து, மேலும் ஒருசில காரியங்களைக் கற்கபோகிறோம். கடந்த பாடத்தில் மேய்ப்பன் என்பவன் யார் என்று 1 பேதுரு 5:2-4 வசனங்களின் அடிப்படையில் சிறிது கற்றுக்கொண்டோம். மேய்ப்பன் என்பவன் விசுவாசிகளை வழிநடத்த தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன். மேய்ப்பன் என்பவன் மக்களுடைய சேவகன். அவன் அதிகாரியல்ல, அதேவேளையில், மக்கள் அந்த மேய்ப்பனுக்கு எஜமான்களல்ல, தேவன்தான் அந்த மேய்ப்பனுக்கு எஜமான் என்று சில காரியங்களைக் கற்றுக்கொண்டோம்.

இந்த மேய்ப்பு ஊழியமானது, தேவனால் உண்டாக்கப்பட்டது என்பதை நாம் நன்றாக உணரவேண்டும். கிறிஸ்துதான், மேய்ப்பனாய் இருக்கும்படி, தனிப்பட்ட முறையில் தன்னை அழைக்கிறார் என்பதையும், அவரே வழிநடத்திக்கொண்டுபோய், அந்த ஊழியத்தை செய்ய வைக்கிறார். அதை சிறப்பாக செய்ய வைத்து, முற்றுமுடிய இரட்சித்து காத்து, அவரே அதை நடத்துகிறார். இந்த ஊழியம் தேவனிடத்திலிருந்தே வருகிறது என்றதொரு எண்ணமும், அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றதொரு ஒரு தெளிவும் ஒரு மேய்ப்பனுக்கு இருக்கும்போது, அந்த மேய்ப்பனுடைய ஊழியம் பலன் மிக்கதாய் இருக்கிறது, மிகவும் சிறந்ததாயும் இருக்கிறது. மிகத் தெளிவாகவும், கவனமாகவும் அந்த மேய்ப்பன் ஊழியம் செய்வார். ஏனெனில் அதிகாரம் பரத்திலிருந்து வருகிறது என்று ஒரு ஊழியன் உணரும்போது, நிச்சயமாக அதற்கு கவனமாகவே செயல்படுவான் என்பதிலே சந்தேகமில்லை. தாமஸ் சி. ஓமன் என்ற தேவ மனிதர், மேய்ப்பனைப் பற்றி இவ்விதமாகக் கூறுகின்றார், ‘கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டு, சபையினால் திருநிலைப்படுத்தல் மூலம் வேறாகப் பிரிக்கப்பட்டு, கடவுளின் வார்த்தையைப் பிரசங்கிக்கவும், சாக்கிரமந்துகளைக் கொடுக்கவும், சபையை வழிநடத்தவும், போஷிக்கவும் கூடிய பொறுப்பை கர்த்தரிடமிருந்து பெற்றவர்தான் மேய்ப்பனானவன்’ என்று கூறுகிறார். அதாவது கிறிஸ்துவினால் அழைக்கப்படுகிறார், சபையினால் திருநிலைப்படுத்தப்படுகிறார். பிதாவினால், பொறுப்பில் வைக்கப்படுகிறார். ஜெபத்தோடு அதற்கு அபிஷேகம் பண்ணப்படுகிறார் என்று அர்த்தம். அவ்விதமாக மற்ற பணிகளிலிருந்து அவர் வேறுபிரிக்கப்பட்டு, கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கிக்கிறார். சபையில் சாக்கிரமந்துகளைக் கொடுக்கிறார், அதாவது திருவிருந்து, ஞானஸ்நானம் போன்ற காரியங்களைச் செய்து, சபையை வழிநடத்துகிறார், போஷிக்கிறார்,

இந்த பொறுப்புகளை கர்த்தரிடமிருந்து பெற்றதாக உணர்ந்து செயல்படுகிற ஒரு மேய்ப்பன் இருக்கிறார் என்று நாம் இதனடிப்படையில் புரிந்துகொள்கிறோம்.

மேய்ப்பு பணியானது, சகல கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட ஊழியம் என்பதனை நாம் பின்வரும் வேத பகுதிகளின் மூலமாகவும் உறுதிசெய்துகொள்ள முடியும். *கலா.5:13, 6:2,* எபே.*4:2, 4:32,* கொலோ.*3:14, 1* தெச.*3:12, 4:9, 18* போன்ற வசனங்கள், *1* பேதுரு *4:9, 5:5* போன்ற வசனங்களிலும் நாம் பார்க்கிறோம். எல்லோருக்கும் மேய்ப்பு பணி உரியது. சபையில் போதகராக ஏற்படுத்தப்பட்ட பிறகுதான் மேய்ப்பன் என்று இல்லை. அது சபையை மேய்ப்பதற்காக முற்றிலும் ஏற்படுத்தப்பட்ட பணி. இது தவிர மேய்ப்பனும், போதகனுமாய் கர்த்தர் ஏற்படுத்தி அநேகரை தம்முடைய ஊழியத்தில் ஆங்காங்கே வைத்து, அநேகரை மேய்க்கின்ற பணியைச் செய்கிறார். எல்லா கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட ஊழியம், ஆனால் அதேவேளையில் திருச்சபையானது, சபை ஊழியத்திற்கென்று ஒருசிலரை வேறுபிரித்து, இவ்விதமான மேய்ப்பு பணிக்காக, மேய்ப்பனாக வைக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்பொழுதுதான் ஊழியம் சரியாய் நடைபெறும்.

அடுத்து, மேய்ப்பு பணி குறித்து எசே.*34:16*-ல் பார்க்கிறோம். அது மிகத்தெளிவாக சில காரியங்களை நமக்கு கற்றுத்தருகிறது. நான் காணாமல் போனதைத் தேடி, துரத்துண்டதை திரும்ப கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல் கொண்டதை திடப்படுத்துவேன். நியாயத்திற்கு தக்கதாய் அவைகளை மேய்த்து, புஷ்டியும், பெலமுமுள்ளவைகளை அழிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இந்த வசனத்தின் அடிப்படையில் ஒரு மேய்ப்பனுடைய முக்கியமான செயல்பாடுகளை நாம் *6* காரியங்களாய் பட்டியலிட முடியும். *1)* ஆடுகளை தேடுதல் *2)* ஆடுகளை வழி நடத்துகிறவன் *3)* ஆடுகளை குணமாக்குகிறவன் *4)* ஆடுகளை போஷிக்கிறவன் *5)* ஆடுகளைத் தாங்குகிறவன் *6)* ஆடுகளை ஒப்புரவாக்கி நடத்துகிறவன். இந்த *6* முக்கியமான பணிகளை செய்வதாக இங்கே எசே.*34:16*-ன் அடிப்படையில் கற்றுக் கொள்கிறோம். பிரியமானவர்களே, இந்த பாடங்களை எல்லாம் சரியாய், முழுமையாய் பயிலும்போது, நல்ல மேய்ப்பு பணியை நீங்கள் இருக்கிற இடங்களில் செய்வீர்கள். அநேக ஆத்துமாக்களை நீங்கள் கர்த்தரண்டை நடத்துவீர்கள். இங்கே சொல்லப்பட்டதுபோல, ஆத்துமாக்களைத் தேடி வழிநடத்தி, குணமாக்கி, போஷித்து, தாங்கி, கிறிஸ்துவோடு ஒப்புரவாக்கி, ஆத்துமாக்களை பெலப்படுத்துவீர்கள். உங்களுடைய சபைகளில் ஆரோக்கியமான ஊழியம் நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை.

தொடர்ந்து மேய்ப்பு பணியை விளக்கும் சில வார்த்தைகளைப் பற்றி நாம் கற்றுக்கொள்வோம்.

*1)* ***மூப்பர்:-*** ஆங்கிலத்தில் Elder, என்று அழைக்கப்படுகிற வார்த்தை. இவர் முதிர்ச்சியும், அனுபவமும், ஞானமுமுள்ள ஊழியராக இருக்கிறார். ஆவிக்குரிய வழிகாட்டுதலை காண்பிக்கிறவர் என்று நாம் வசனத்தின் அடிப்படையில் பார்க்கிறோம். அந்த வசனங்களை வாசிக்கலாம். அப்.*15:6*, ''அப்போஸ்தலரும், மூப்பரும் இந்த காரியத்தைக் குறித்து ஆலோசனைபண்ணும்படி கூடினார்கள்' என்று வாசிக்கிறோம். *1* தீமோ.*5:17*, 'நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை விசேஷமாக, திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராக எண்ணவேண்டும்' என்று பவுல் கூறுகிறார். யாக்.*5:4*, 'உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்' என்று வாசிக்கிறோம். அதைப்போல *1* பேதுரு *5:1-4* வரையான வசனங்கள். இந்த வசனங்கள் மிக விளக்கமாக மேய்ப்பரைப் பற்றி, மூப்பரைப்பற்றி தெளிவாக கூறுகிறதைப் பாருங்கள். 'உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்கு சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால், உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்' *(1* பேதுரு *5:1-4)* என்று பேதுரு எழுதுகிறார். மூப்பர் என்று இவர்கள் அழைக்கப்படுகிறார்கள், போதகர் என்றும் அழைக்கப்பட்டு, இவர்கள் மேய்ப்பு பணியைச் செய்கிறவர்கள்.

*2)* ***கண்காணி:-*** Bishop, Overseer என்று சொல்லப்படுகிற இந்த வார்த்தையைக் குறித்து பார்க்கலாம். இதை 'episcopos' என்றும் நாம் பார்க்கிறோம். மேற்பார்வையாளர், கண்காணி என்பவன் யார்? மேற்ப்பார்வையாளர், அதாவது வழிகாட்டுகிறவர் தலைமைத்துவத்தை பொறுப்பேற்று நடத்துகிறவர். இவ்விதமாக பொறுப்பேற்று நடத்துகிறவரைக் குறிக்கிறதுதான் இந்த கண்காணி. அப்.*20:28*-ம் வசனத்தை வாசிக்கலாம், 'ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் உங்களை கண்காணிகளாக வைத்து மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள்' என்று நாம் வாசிக்கிறோம்.

இங்கே கண்காணி என்று சொல்லப்படுகிற அந்த வார்த்தைக்கு ஆங்கிலத்தில் Overseer என்று King James Version-னில் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்க முடியும்.

அடுத்து பிலி.*1:1*, 'இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரரும், தீமோத்தேயுவும் பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவரும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது' என்று 'கண்காணிகள்' பற்றி சொல்லப்படுகிறதை கவனித்துப் பாருங்கள். இங்கே கண்காணி என்பதற்கு சொல்லப்பட்ட வார்த்தை Bishops(KJV), Overseer, Bishop, கண்காணி என்ற அர்த்தத்தில் வருகிறது. இவர்கள் மேற்பார்வையிடுகிறவர்கள். தலைமைத்துவ பொறுப்பெடுத்து, சபையை போஷிக்கிறவர்கள், போதிக்கிறவர்கள். *1* தீமோ.*3:2-5* வரையுள்ள வசனங்கள், இங்கே பவுல் விளக்கமாக கூறுகிறதை நீங்கள் பார்க்க முடியும், 'ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாய் இருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? என்று வாசிக்கிறோம். மேலும், தீத்து *1:7*-ல், 'ஏனெனில் கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றம் சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபம் இல்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்' என்று வாசிக்கிறோம். ஆக, இவ்விதமாய் கண்காணியானவன் செயல்படுகிறான். அவனுடைய தகுதி என்ன? என்று *1* தீமோ.*3:2-5* வரையுள்ள வசனங்களில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

*3)* ***மேய்ப்பன்:-*** Shepherd, ποιμεν என்று சொல்லப்படுகிற வார்த்தைகளாய் இது இருக்கிறது. இந்த ποιμεν என்ற வார்த்தை, shepherd, பாஸ்டர் போன்ற வார்த்தைக்கு இணையான கிரேக்க வார்த்தை. ஆக, மேய்ப்பன் என்பவன் தலைமைத்துவத்தை எடுத்துச் செய்கிறவனாய் இருக்கிறான். மட்டுமல்ல, வழிகாட்டுகிற அதிகாரத்தை உடையவனாய் இருக்கிறான். மந்தையைப் போஷிக்கிறவனாக இருக்கிறான். ஆகவே *3* முக்கிய பொறுப்புகளை உடைய ஒருவருடைய பதவியை இது குறிக்கிறது, தலைமைத்துவம், வழிகாட்டல் மற்றும் மந்தையைப் போஷித்தல். Leadership, authority and Feeding அகிய இந்த மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து செய்கிறவர்தான் மேய்ப்பன் என்று பார்க்கிறோம். பிரியமானவர்களே, மேய்ப்பு பணியைக் குறித்து வேதம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதை நாம் அப்படியே பின்பற்றி செய்வோமானால், நாம் மிகச் சிறந்த மேய்ப்பு பணி

ஊழியத்தை செய்துவிடலாம். குறிப்பாக, நாம் இதுவரை பார்த்த வேதபகுதிகளைப் பார்க்கும்போது, அதிலேயே மிக அதிகதிகமான பொறுப்புகளையும், அதிகாரங்களையும், செயல்பாடுகளையும் குறித்து வேதம் சொல்லியிருக்கிறதை நீங்கள் தியானிக்க முடியும். அதைக் கைக்கொள்ளவும் வேண்டுமென்று வேதம் சொல்லுகிறது.

இதனைத் தொடர்ந்து நாம் மேய்ப்பனுடைய அழைப்பு குறித்தும், திருநிலைப்படுத்தலைக் குறித்தும் சற்று சிந்திப்போம். மேய்ப்பு பணி என்ற ஊழியத்திற்கு கர்த்தர் அழைக்கிறார். அது எவ்விதமாய் நடைபெறுகிறது? அதை இரண்டு விதங்களில் நாம் பார்க்க முடியும். தேவனுடைய அழைப்பு என்பதைக் குறித்து பார்க்கும்போது, அது வித்தியாசப்பட்ட விதங்களில் நமக்கு நடைபெறுகிறது. ஒவ்வொருவரையும் தேவன் ஒவ்வொரு விதமாக அழைக்கிறார். சிலரைக் கஷ்டத்தின் மத்தியில், அவர்கள் தேவனைத்தேட வந்திருப்பார்கள். அங்கே தேவன் அவர்களை அழைத்திருக்கிறதை நாம் பார்க்க முடியும். சிலர் நல்ல நிலையில் இருப்பார்கள், ஆனால் மன நிம்மதியில்லாமல் இருப்பார்கள். சிலருக்கு அவர்களுடைய மனநிலைக்கேற்றபடி செயல்படுகிறதையும் நாம் பார்க்க முடியும். பல வேதனைகள், நஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள், கண்ணீர் அல்லது மனதில் வெறுமையான நிலை அல்லது சிலருக்கு என்னதான் வாழ்விலிருக்கிறது? என்று எல்லாமிருந்தும் ஒரு மன நிம்மதியற்ற, சமாதானமற்ற நிலையிலே தேவனைத் தேடி வந்த அநேகரை நாம் பார்க்க முடியும். இவ்விதமாக அழைப்பு எந்த சூழ்நிலையிலும் நடக்கலாம். ஆனால் பொதுவான ஒரு அழைப்பு இருக்கிறது. பகிரங்க அழைப்பு ஒன்று இருக்கிறது. அது இரட்சிப்புக்கான அழைப்பு. *மத்.11:28*-ல் அந்த பொதுவான அழைப்பை, இரட்சிப்பிற்கான அழைப்பைக் குறித்து நாம் பார்க்கிறோம். 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்பது பகிரங்கமான அழைப்பு, பொதுவான அழைப்பு. இன்னும்கூட யோவான் *1:12*-ல், 'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் உள்ளவர்களாய், அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்' என்று வாசிக்கிறோம். இவ்விதமாக தேவன் பொதுவான அழைப்பைக் கொடுக்கிறார். தம்முடைய நாமத்தின்மேல், இயேசுகிறிஸ்து என்னும் நாமத்தின்மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள்ள அவர் எதிர்பார்க்கிறார். அவ்விதமாக ஏற்றுக்கொண்டவர்களைத்தான், அவர் பிள்ளைகளாக மாற்றுகிறார், அதிகாரத்தைக் கொடுக்கிறார். அப்படி பிள்ளைகளானவர்கள்தான் கிறிஸ்து மூலமாய் கிடைக்கிற தேவனுடைய கிருபைகளை, ஆசீர்வாதங்களை, அதிகாரங்களை சொந்த வாழ்வில் பெற்றவர்கள், அவர்களே இரட்சிக்கப்பட்டவர்கள். ஆக, இரட்சிப்பு என்றால் சிலர் அதையொரு பெரிய காரியமாய் நினைத்துக்கொண்டு, புரியாமலேயே இருக்கிறார்கள்.

அதுவொரு பெரிய விஷயமாகவே இல்லை. உங்கள் வாழ்க்கையை இயேசுகிறிஸ்துவின் கையில் ஒப்புக்கொடுத்து, ஆண்டவரே நான் பாவியான மனிதன், என் பாவங்களை எனக்கு மன்னிக்க வேண்டும், நான் எப்படியாவது அதிலிருந்து வெளியே வந்து, உமக்காய் வாழவேண்டும், நான் உம்முடைய நாமத்தை விசுவாசிக்கிறேன். நீர் உம்மிடத்திற்கு வரும்படி எங்களைக் கூப்பிடுகிறீர். என்னுடைய இஷ்டம்போல் வழிதப்பி திரிந்தேன். காணாமல்போன ஆடுபோல் காணப்பட்டேன், எனக்கு நீர் வேண்டும் ஆண்டவரே, கட்டாயம் வேண்டும் என்று உங்களை அர்ப்பணிக்கும்போது, மனதார ஜெபிக்கும்போது, கர்த்தர் உங்களை நிச்சயமாக இரட்சிப்புக்குள் நடத்துகிறார். அது உங்கள் இருதயத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, சமாதானமான நிம்மதியைக் கொடுக்கிறது.

இவ்விதமாக இரட்சிப்பைப் பெற்ற ஒருவர்தான் எந்தவொரு ஊழியத்தையும் செய்ய தகுதியுள்ளவர், மட்டுமல்லாமல், அநேக ஊழியங்கள் இருக்கிறது. அவைகளைப்பற்றி தொடர்ந்து வருகிற பாடங்களில் பயிலுவீர்கள். எந்தவொரு ஊழியத்தை செய்ய வேண்டுமாயினும், அவர் கட்டாயமாய் இரட்சிக்கப்பட்டவராக இருக்கவேண்டியது அவசியம். நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? என்பதை ஒருமுறை நீங்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இரட்சிக்கப்படாமல் வேதாகமக் கல்லூரிக்கு வந்திருக்க மாட்டீர்கள். ஆனாலும் ஒரு அரைகுறை அர்ப்பணிப்பு ஒருவேளை இருக்கக்கூடும். நீங்கள் முழுவதுமாய் கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள், ஆண்டவருக்காகத்தான் இந்த உலகில் வாழவேண்டும். அதற்குத்தான் இந்த உலகிற்கு அவர் அனுப்பியிருக்கிறார். உலகத்தோற்றத்திற்கு முன்னே உங்களை தெரிந்துகொண்டார். அதை இப்பொழுது தெரிந்து கொண்டீர்கள். ஆகவே அவர் வழியில் செல்ல உங்களை ஒப்புக்கொடுத்து விடுங்கள்.

இரண்டாவது, சேவிப்பதற்கான அழைப்பைத் தருகிறார். *1 பேதுரு 2:9, எபே.2:10* போன்ற வசனங்களில் இதைப் பார்க்கிறோம். நாம் சேவிப்பதற்காகவே, அதாவது ஊழியம் செய்வதற்காகவே இரட்சிக்கப்பட்டுள்ளோம். We are saved to serve என்று சொல்வர்கள். வில்லியம் பூத் என்ற ஊழியர், அவ்விதமாகத்தான் 'we are saved to serve' என்கிறார். வசனங்களை வாசித்து, அதை அவற்றின் அடிப்படையில் புரிந்துகொள்ளலாம், *2 பேதுரு 2:9*, 'நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.' என்று வாசிக்கிறோம். நீங்கள் முன்னே அந்தகாரத்திலிருந்தீர்கள், இருளில் இருந்தீர்கள். ஆனால் இப்பொழுது உங்களை ஆச்சரியமான ஒளியில் தேவன் கொண்டு வந்திருக்கிறார், எதற்காக கொண்டுவந்திருக்கிறார்? அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு உங்களை தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாய், ராஜரீகமான ஆசாரிய கூட்டமாய், பரிசுத்த ஜாதியாய், அவருக்கு சொந்தமான

ஜனமாய் உங்களை வைத்திருக்கிறார் என்பதை வசனத்திலிருந்து அறிந்து, புரிந்துகொள்ள முடிகிறது. புண்ணியங்களை அறிவிப்பதற்கு உங்களை அவர் உருவாக்கினார் இல்லாவிட்டால் தெரிந்து கொண்டார். நீங்கள் ஆசாரியக் கூட்டமாய், ஊழியம் செய்கிற கூட்டமாய் இருக்கிறீர்கள்.

பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஊழியம் செய்தார்கள். அதேபோல் நீங்கள் இப்பொழுது அவருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியக்கூட்டமாய், பரிசுத்த ஜாதியாய் உங்களை ஏற்படுத்தியிருக்கிறார். பரிசுத்தம் என்றால் என்ன? தேவனுக்காய் வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கை நடத்துவது என்பதாகும். இவ்விதமாக ஒரு சேவிப்பதற்கான அழைப்பை கர்த்தர் தந்திருக்கிறார். அவர் நம்மை இரட்சிப்பிற்கு அழைத்திருக்கிறார் என்று முதலாவது பார்த்தோம். இரண்டாவது, அவருக்கு சேவை செய்வதற்காக, ஊழியம் செய்வதற்காக அழைத்திருக்கிறார் என்று பார்க்கிறோம். எபேசியர் *2:10*-ம் வசனம், 'ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம், அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.' என்று வாசிக்கிறோம். நற்கிரியைகளை செய்கிறதற்குத்தான் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டோம் என்று பவுல் எழுதுகிறார். தேவன் நமக்கு என்ன செய்தார்? என்னுடைய வாழ்வில் அவர் தம்முடைய அன்பை எவ்விதமாய் விளங்கப் பண்ணினார்? எனக்காக சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்தார், மட்டுமல்ல இரட்சிப்பைத் தந்திருக்கிறார், என்பதையெல்லாம் நாம் தனிப்பட்ட விதத்தில் தேவனிடத்தில் வந்து, அதை ருசித்துப் பார்த்து, பிறகு ருசித்துப் பார்த்த அனுபவத்தை மற்றவர்களுக்கு கூறவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அதற்கு கடமைப்பட்டவர்களாக நாம் இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அதை மறைத்து வைப்பது பாவம், இதன் பொருட்டு தான் பரிசுத்த ஆவியானவர் நமக்கு வரங்களைத் தந்திருக்கிறார், அபிஷேகத்தை தந்திருக்கிறார், அபிஷேகத்தைக் கொடுத்து வல்லமை, வரங்கள் எல்லாம் எதற்கு தந்தார் என்றால் நாம் அவருக்காக சேவைசெய்யவே, இவையெல்லாவற்றையும் கர்த்தர் தந்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் வரங்களைக் கொடுப்பது நமது தனிப்பட்ட சந்தோஷத்திற்காக அல்ல, அல்லது நம்முடைய பெயரை, புகழை உயர்த்திக்கொள்வதற்காக அல்ல. அநேகர் நினைக்கிறார்கள், எனக்கு வல்லமை, வரங்கள், அதிகாரங்கள் இருக்கும்போது நான் சிறப்பாக அற்புதம் செய்வேன். அப்பொழுது என்னை உலகமே போற்றும், மதிக்கும் என்ற எண்ணத்தோடு அநேக ஊழியர்கள் செயல்படுகிறதை நாம் பார்க்கிறோம். சிலர் அவ்விதமாகச் சொல்வார்கள்.

ஒரு வாலிப தம்பியை நான் அவ்விதமாய் நடத்தினேன். தம்பி நீ கர்த்தருக்காய் ஊழியம் செய்யவேண்டும் என்றபோது, அவன் இவ்விதமாய் கூறினான். அண்ணே, நான் உங்களை மாதிரியெல்லாம் ஊழியம் செய்ய மாட்டேன், நான் ஹெலிகாப்டரிலேயே சென்று

மேடை பக்கத்தில்போய் இறங்குகிற ஒரு உயர்ந்த ஊழியத்தைச் செய்வேன். நான் என்னுடைய கைகளை நீட்டினால், அப்படி மக்கள் பொத், பொத்தென்று விழவேண்டும், நான் பெரிய ஆளாக, கர்த்தர் என் மூலம் கிரியை செய்வார், அதற்குத்தான் காத்திருக்கிறேன் என்று, அவன் தன்னுடைய பெயர், புகழை சொல்வதைக் குறித்தே பேசினதைப் பார்த்தேன். இப்படி தனிப்பட்ட புகழுக்காகவோ, பெயருக்காகவோ, சம்பாத்தியத்திற்காகவோ, ஊழியம் இல்லை. ஏனெனில், அநேகர் தங்களுடைய ஊழியத்தில் நான்கு அற்புதங்களைச் செய்துவிட்டால், அநேக காணிக்கை வரும் என்று நினைக்கிறதையும் பார்க்க முடியும். இவ்விதமாக, பணத்திற்காகவோ, புகழுக்காகவோ, தேவன் வல்லமை, வரங்களை, ஆவியின் அபிஷேகத்தை தரவில்லை. தனிப்பட்ட சந்தோஷத்திற்காக மட்டுமல்ல, மாறாக, உங்களைக்கொண்டு சபையில் பக்தி விருத்தியைக் கொண்டு வருவதற்காகத்தான், உங்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், வல்லமை, வரங்கள், அதிகாரங்களையும் தந்திருக்கிறார்.

அடுத்து, குறிப்பான ஊழியத்திற்கான அழைப்பு: என்ற தலைப்பின் கீழே மூன்றாவது அழைப்பைக் குறித்து நாம் பார்க்கிறோம். அதாவது நம்மை இரட்சிப்புக்கு அழைக்கிறார், அடுத்து ஊழியம் செய்ய அழைக்கிறார். எல்லோரும் ஊழியம் செய்ய வேண்டுமென்று வேதத்தின் அடிப்படையில் பார்த்தோம். குறிப்பாக 1 பேதுரு 2:9-ல் கூறியிருக்கிறார் அல்லவா? நாம் எல்லோரும் தேவனுடைய ஊழியத்தைச் செய்ய அழைக்கப்பட்டவர்கள். ஆனால், எல்லோரும் போதகர்கள் அல்ல, எல்லோரும் மேய்ப்பன் அல்ல. அந்த அழைப்பை நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம். குறிப்பாக, இந்த இடத்தில் ஒரு காரியத்தை கூற விரும்புகிறேன். ஊழியத்தில் 2 வகை இருக்கிறது. 1) தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு அடுத்த ஊழியம் 2) சரீரமாகிய சபைக்கடுத்த ஊழியம். தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு அடுத்த ஊழியம் என்ற அழைப்பில் 5 வகையான ஊழிய அழைப்பு. அதில், தீர்க்கதரிசி, அப்போஸ்தலர், சுவிசேஷகன், மேய்ப்பன் மற்றும் போதகன். 5 fold ministries என்று சொல்வார்கள். 5 விதமான ஊழிய அழைப்பு. தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு அடுத்த ஊழிய அழைப்பு.

அடுத்து, சரீரமாகிய சபைக்கு அடுத்த ஊழியம், அதாவது சபைக்கடுத்த ஊழியம். இதில், அற்புதம் செய்கிற ஊழியம், பாடல் ஊழியம், உதவி செய்கிற ஊழியம், ஆலோசனை ஊழியம், கொடுக்கிற ஊழியம் போன்றவற்றைப் பார்க்கிறோம். சிலரை கொடுப்பதற்கென்றே ஏற்படுத்தி, அவர்களைப் பயன்படுத்துகிறார். நன்றாக சம்பாதிப்பார்கள், ஊழியத்திற்கென கொடுப்பார்கள், கொடுக்கிற ஊழியம், இரக்கம் செய்கிற ஊழியம். நீங்கள், ரோமருக்கு எழுதின நிருபம் 12-ம் அதிகாரத்தில், இப்படிப்பட்ட சரீரமாகிய சபைக்கு அடுத்த ஊழியங்களை அதிகமாய்ப் பார்க்க முடியும். அதைப்போல இசை மற்றும் பாடல் பாடுகிறவர்கள். சபையில் பாய் விரிக்கிற செயல் முதற்கொண்டு,

நிர்வாகத்தில் உதவி செய்கிற மூப்பர் வரை சபைக்கு அடுத்த ஊழியம் செய்கிறவர்கள். இரண்டு விதமாக ஊழியத்தைப் பார்க்கிறோம். இந்த இரண்டில் ஏதோவொரு இடத்தில் நீங்கள் இருப்பீர்கள், இருக்க வேண்டும். எல்லோரும் ஊழியம் செய்ய வேண்டும். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் ஊழியம் செய்யத்தான் தேவன் அழைத்திருக்கிறார் என்று 'வில்லியம் பூத்' என்ற ஊழியரின் வார்த்தையிலிருந்து கற்றோம். ஊழியம் செய்வதற்காகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். ஊழியம் எல்லோருக்குமுரியது. ஆனால், எந்த ஊழியம் என்பது முக்கியம். அதை நீங்கள் தான் ஜெபம் பண்ணி, கர்த்தரிடத்தில் ஆண்டவரே, ஏதோவொரு ஊழியத்திற்கு என்னை அழைத்திருக்கிறீர், ஆனால் என்னுடைய ஊழிய அழைப்பு என்ன? என்று எனக்கு சொல்லுங்கள், குறிப்பாக சொல்லும் என்று நீங்கள் கேட்கும்போது, நீங்கள் அதை உறுதிசெய்துகொள்ள முடியும். கர்த்தர் நிச்சயமாய் பேசுவார், தரிசனம் தருவார். இல்லாவிட்டால் உங்கள் ஊழியம் எவ்விதமாய் செயல்படுகிறது என்பதை வைத்துக்கொண்டு, அதைக் கண்டுகொள்ள முடியும். நீங்கள் ஒருவேளை பிரசங்கிக்கிற ஊழியத்திற்கு, அதாவது போதனை ஊழியத்திற்கு கர்த்தர் உங்களை அழைத்திருப்பார் என்றால், நீங்கள் போதித்து முடித்தவுடன், உங்கள் சபையார் வந்து சொல்வார்கள். மிகவும் ஆழமாக, சரியாகப் பேசினீர்கள் ஐயா, எனக்கு நீங்கள் பேசிய அனைத்தும் நன்றாக விளங்கிற்று என்று ஒருவர் சொல்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு போதக ஊழிய அழைப்பு இருக்கிறது என்பதை உறுதி செய்துகொள்ள முடியும். உங்களது தாலந்துகள் வெளிப்படும்போது, நீங்கள் செய்கிற ஊழியத்தில் ஏற்படுகிற கனிகளை வைத்தும் கணக்கிட முடியும் பிரியமானவர்களே.

ஆக, ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைக் குறித்த தெளிவான ஒரு நடத்துதல் உங்களுக்குத் தேவை. அநேகர் அதில் தடுமாறுகிறார்கள், சிலரைப் பார்த்தால், *10* முதல் *20* ஆண்டுகள் ஊழியம் செய்த பிறகு எனக்கு இந்த ஊழிய அழைப்பைத்தான் கர்த்தர் தந்திருக்கிறாரா? எனக்கு கொஞ்சம் ஜெபம் செய்து சொல்லுங்கள் என்று சில ஊழியர்களிடம் சென்று கேட்பார்கள். பிரியமானவர்களே, நீங்கள் எதை உறுதிசெய்து கொண்டீர்களோ, அந்த ஊழியத்தில் உறுதியாக இருக்க வேண்டும். நிச்சயமாக தேவன் அவர் விரும்பாத இடத்தில் வைக்கவே மாட்டார். நீங்கள் ஜெபம் பண்ணவேண்டும், இல்லையென்றால், ஆண்டவரே, நீங்கள் அழைக்காத ஊழியத்தை நான் செய்யக்கூடாது, உமக்கு சித்தமானதை மாத்திரம் செய்ய உதவி செய்யும், நான் என்னை அர்ப்பணிக்கிறேன், என்று உறுதியாய் ஜெபம் செய்து பாருங்கள். உங்களை சரியான இடத்தில் வைத்து, சரியான விதத்தில் கர்த்தர் பயன்படுத்துவார். தேவனுடைய அழைப்பை உறுதிசெய்வது மிகவும் எளிதான காரியம்தான். ஆனால் உங்களிடம் உள்ள உறுதியைப் பொறுத்துதான் அது நடக்கும். ஆனால் அநேகர் அதைக்குறித்து அவ்வளவாய்க் கவலைப்படுகிறது இல்லை. ஏதோவொரு ஊழியத்தைச் செய்தால் போதும், அவருடைய நாமத்தினால் ஏதோவொரு ஊழியத்தை செய்துவிட்டு, அதுவும் ஊழியம்தானே என்று சொல்லி, எதையோ

ஒன்றை தாங்கள் செய்வதாக முடிவுசெய்து கொள்கிறார்கள். அப்படியில்லை பிரியமானவர்களே, நீங்களாகவே முடிவு செய்வதற்கு தேவன் விரும்புகிறதில்லை, அதாவது தேவனுடைய அழைப்பின் அடிப்படையில் நீங்கள் ஊழியம் செய்ய வேண்டுமென்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும், அதுதான் உறுதியானது. ஏனெனில் தேவனுடைய சித்தத்தின்படி ஊழியம் செய்யாதவர்களை, கடைசிநாளில் அவர் அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள், நான் உங்களை அறியேன் என்பார். அதற்கு அவர்கள், நாங்கள் உம் நாமத்தினால் தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? நாங்கள் பேய்களைத் துரத்தினோம் அல்லவா? அற்புதம் செய்தோம் அல்லவா? என்று பல விஷயங்களைச் சொன்னாலும், நீங்கள் ஏதோ விதத்தில் ஊழியம் செய்தீர்கள், ஆனால் பிதாவின் சித்தத்தின்படி செய்தீர்களா? எங்கே வைத்து பிதா உங்களை பயன்படுத்த விரும்பினாரோ, அங்கே நீங்கள் இருக்காமல், உங்களுக்கு பிரியமான இடத்தில் உட்கார்ந்துகொண்டு, நீங்கள் விரும்பினபடி கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துகொண்டு, பிறகு என்னைத் தெரியுமா? என்று கேட்க வந்திருக்கிறீர்கள் என்பார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசித்து விடலாம் என்று எண்ணுகிறீர்கள் என்பார். நான் உங்களை அறியேன் என்று சொல்லி, அவர்களை நரகத்தில் போடுவார் என்பதை நாம் அறிய முடிகிறது.

பிரியமானவர்களே, ஊழியம் செய்தாலும் சரியான இடத்தில், சரியான விதத்தில், குறிப்பாக கர்த்தருடைய ஊழிய அழைப்பை அறிந்து செய்ய வேண்டும். அதுவொரு கடினமான விஷயமல்ல என்று மீண்டும், மீண்டும் நாம் அறிவது அவசியம். அதை எப்படி உறுதிசெய்துகொள்ள முடியும்? பரலோக தேவன் அதை எப்படிச் சொல்வார்? என்று அநேகர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன், நானும் ஜெபம் செய்துதான் பார்க்கிறேன், எதுவும் புரியவில்லை, என்கிறார்கள். இல்லை, பிரியமானவர்களே, உங்களுடைய வாக்குத்தத்தத்தைப் பாருங்கள், உங்களுக்கு ஆயுள் முழுவதுக்குமான வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருப்பாரே, அதிலேயே அவர் சொல்லியிருப்பதை நீங்கள் பார்க்க முடியும். எனக்கு யோசுவா *1*-ம் அதிகாரத்திலிருந்து பேசினார், உன்னை மேய்ப்பனும், போதகனுமாய் ஏற்படுத்தியிருக்கிறேன் என்று தேவன் சொன்னார். இன்னும்கூட, வெளி. *3*-ம் அதிகாரத்திலிருந்து கூறினார், வெளி.*3:8*, ‘உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்கு கொஞ்சம் பெலனிருந்தும், என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தை கைக்கொண்டபடியால், இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான், இதோ யூதரல்லாதிருந்தும், தங்களை யூதர் என்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்கு கொடுப்பேன். இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன் வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன் என்றெல்லாம் அவர் கூறினார்.

என்னுடைய ஊழியம் யூதரல்லாதிருந்தும், தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய, சாத்தானுடைய கூட்டத்தாரின் மத்தியிலிருக்கும் என்பதை அவர் கூறினார். அதாவது, கிறிஸ்தவர்களாயிருந்தும், கிறிஸ்தவர்களாயில்லாத மக்கள் மத்தியில் இருக்கும். அது உண்மையான கிறிஸ்தவர்களை உருவாக்க வேண்டும், அதாவது தேவனுடைய பக்திக்குரிய பிள்ளைகளை உருவாக்க வேண்டும் என்று அவர் எனக்கு விளங்கப்பண்ணினார். இவ்விதமாக, வாக்குத்தத்தத்திலே, நமது ஊழியத்தை தெளிவுபடுத்துவார், வெளிப்படுத்துவார். பிரியமானவர்களே, இன்னும் பல காரியங்கள் இருந்தாலும், சுருக்கமாக இவைகளை உங்களுக்கு விளக்கியிருக்கிறேன். ஆகவே, நீங்கள் ஜெபம் செய்யும்போது, அவரே வந்து உங்களுக்கு வாக்கு தருவார். எனக்கு இந்த ஊழியத்தை தாரும், அந்த ஊழியத்தை தாரும் என்றெல்லாம் ஜெபம்பண்ண வேண்டியதில்லை. உண்மையாக, சீரிய முறையில் அவரை அறிய வேண்டும். அவருக்கு பிரியமாக வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு வாழ்ந்தால் போதும், அவரே வலிய வந்து சொல்லுவார், வாக்குத்தத்தம் செய்வார். அதில் நடத்த அவர் வல்லவராயிருக்கிறார். உங்களுக்கு சொல்லித்தந்து, உங்களை நடத்துவார்.

பிரியமானவர்களே, குறிப்பான ஊழிய அழைப்பை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பழைய ஏற்பாட்டை எடுத்துப்பாருங்கள். அதிலுள்ள சில மனிதர்களை, சில குறிப்பிட்ட பணிக்கென தேவன் அழைத்து பயன்படுத்தினதைப் பார்க்கிறோம். அதுபோல புதிய ஏற்பாட்டிலும் தேவன் தம்முடைய சபையை கட்டியெழுப்புவதற்காக அநேகரைத் தெரிந்துகொண்டார். அதைக்குறித்து நாம் எபேசியர் *4:11-13* வரையுள்ள வசனங்களில் பார்க்கிறோம், 'மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் ஏற்படுத்தினார்.' என்று வாசிக்கிறோம், பார்த்தீர்களா? இங்கே, ஊழியத்தைச் செய்வதற்கு குறிப்பாக என்ன நோக்கத்திற்காக ஊழியர்களை ஏற்படுத்துகிறார் என்று இங்கு தெளிவுபட கூறுகிறார். பரிசுத்தவான்கள் சீர்பொருந்த வேண்டும், சுவிசேஷ ஊழியத்தின் வேலை நடக்க வேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய இந்த சபையானது பக்திவிருத்தியடைய வேண்டும். எல்லோரும் விசுவாசத்தில் வளரவேண்டும் என்று வசனம் *4:11*-ல் பார்க்கிறோம். இவ்விதமாக விசுவாச வளர்ச்சிக்காக, பரிசுத்தவான்கள் சீர்பொருந்துவதற்காக, பக்திவிருத்திக்காக அவர் ஊழியர்களை பல விதங்களில், பல அழைப்பு பெற்றவர்களை ஏற்படுத்துகிறாராம். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள் என்று தேவன் ஏற்படுத்துகிறார். ஆக, ஏற்படுத்தினார் என்று

சொல்லப்படுகிறதினால், அவரே இதைச் செய்கிறார். தேவனே தெரிந்துகொண்டு, தேவனே நியமிக்கிறார் என்பதை நாம் தெளிவாகப் பார்க்கிறோம்.

நாம் செய்யவேண்டியது, இந்த ஊழியம், அந்த ஊழியம் தாரும் என்று கேட்கிறதைக் காட்டிலும், அவர் ஏற்படுத்துகிறவர், ஆகவே வேதம் வாசிக்கிறதை, ஜெபம் செய்கிறதை, ஒழுங்காக செய்யவேண்டும். நம்முடைய நோக்கமெல்லாம் ஒரு ஊழியத்தைக் கட்டியெழுப்புகிறதற்கு வருகிறதாக ஒருபோதும் இருக்க கூடாது. நான் இயேசுவை அறிய வேண்டும், வேதத்தைப் புரியவேண்டும், அவருக்காக வாழ வேண்டும், கனிகொடுக்க வேண்டும். இதற்குமேல் அவர் தருகிற பொறுப்பை நான் நிறைவேற்ற வேண்டும். இதைச் செய்யும்போது, அவரே ஏற்படுத்துகிறார். ஊழியத்திற்கான அழைப்பு, ஊழியத்திற்கான பொறுப்பு தேவனிடத்திலிருந்தே வருகிறது என்பதை நீங்கள் இந்த வசனங்களிலிருந்து தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். தேவனுடைய அழைப்பு இல்லாமல், அவருடைய சித்தம் இல்லாமல், நாம் எந்தவொரு குறிப்பான ஊழியத்தையும் செய்யக்கூடாது. அதற்கு முன்னர், இயேசு உங்களை நேசிக்கிறார் என்று சொல்லி, தனித்தாள் ஊழியத்தை ஆரம்பிக்கலாம். உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு இயேசுவைப்பற்றி சொல்லலாம், தெரிந்த வேதவசனங்களை விளக்கம் கொடுக்கலாம், அவற்றையெல்லாம் செய்யலாம். ஆனால், ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்கான அழைப்பைப் பற்றி நாம் இப்போது படித்துக் கொண்டிருக்கிறோம். அந்த குறிப்பிட்ட அழைப்பு தேவனிடத்திலிருந்தே வருகிறது. தேவராஜ்ஜியத்திற்கு அடுத்த ஊழியங்கள், இந்த ஐந்து ஊழியங்கள். அடுத்து, தேவகிருபையினால் சரீரமாகிய சபைக்கு, அதாவது சபைக்கடுத்த ஊழியத்தில் தேவன் ஒருவேளை உங்களை ஏற்படுத்தியிருக்கலாம். இந்த காரியங்களையெல்லாம் நீங்கள்தான் ஜெபிக்கும்போது, கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். அதை நீங்கள் பெற்று, தேவனுடைய சித்தத்தை அறிந்து ஊழியம் செய்யவேண்டியது அவசியம். மேய்ப்பு பணியைப் பொறுத்த மட்டில், குறிப்பாக மேய்ப்பனும், போதகனுமாய் ஏற்படுத்தினார் என்று பார்த்ததுபோல, மேய்ப்பு பணிக்கு, கர்த்தருடைய அழைப்பு நிச்சயமாய் இருந்தால் மாத்திரம் அதைச் செய்யுங்கள். அதை தேவன் நிச்சயமாய் வெளிப்படுத்துவார். அதை எவ்விதமாய் நீங்கள் உறுதிப்படுத்த முடியும் என்பதையும் நீங்கள் இப்போது அறிந்து இருக்கிறீர்கள்.

உங்களுக்கு அப்படிப்பட்ட பாரம் இருக்கிறதா? ஐயோ, ஆத்துமாக்கள் அழிகிறதே, அதுவும் சத்தியம் தெரியாமல் அழிகிறார்களே, என்ற பாரம் இருக்கிறதா? சரியான சத்தியத்தில் நடத்தி, முதிர்ச்சிக்கு நேராய் நடத்த வேண்டும் என்ற பாரம் உங்களுக்கு இருக்கிறதா? பரந்த மனது உங்களுக்கு இருக்கிறதா? எந்த சபையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பரவாயில்லை, அவர்கள் கிறிஸ்துவுக்குள் வளரவேண்டும், என்றதொரு பாரம் இருக்கிறதா? ஏனெனில் இயேசுகிறிஸ்துவானவர் மக்களைப் பார்க்கும் போது,

மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல அவர்கள் சிதறடிக்கப்பட்டவர்களாக, பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறதைப் பார்க்கும்போது, அவர் மனதுருகினார் என்று பார்க்கிறோம், அல்லவா? ஆம், அதைப்போல, ஐயோ! ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு, அநேகருடைய சுவிசேஷ ஊழியத்தினால் வந்துவிட்டார்கள். ஆனால், அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல சிதறடிக்கப்பட்டவர்களாய், சரியான போதனையை அடையாத இடத்தில் இருக்கிறார்களே என்று பாரமடைகிறீர்களா? இதுவெல்லாம், மேய்ப்பருடைய ஊழியத்திற்கு உங்களை அழைக்கிறது, நடத்துகிறது, இல்லாவிட்டால், தேவன் அப்படிப்பட்ட அழைப்பை தந்திருக்கிறார் என்பதற்கு அடையாளமான ஒருசில விஷயங்கள் இவைகளாகும். நல்ல போதகத்தைக் கொடுத்து அவர்களை அரவணைத்து, அவர்களுடைய காரியங்களிலே, சுக துக்கங்களில் ஈடுபட்டு, எப்படியாவது தூக்கி நிறுத்தி, கர்த்தருக்குள் வளர்க்க வேண்டுமென்ற பாரம். இவைகளெல்லாமே உங்களை மேய்ப்பு பணிக்கு உறுதிப்படுத்துகிறது. குடும்பங்களை கட்டியெழுப்பவேண்டும், ஐக்கியமாக நாம் இருக்கவேண்டும் என்றெல்லாம் நினைக்கிற நினைவுகள் அதை உறுதிப்படுத்துகிறது.

இன்னும்கூட தொடர்ந்து அழைப்பைக் குறித்து சிந்திப்போம். ஜான் மெக் ஆர்தர், என்பவர் அழைப்பைக் குறித்து தெளிவாகவும், அருமையாகவும் போதித்து இருக்கிறார், அவருடைய கருத்தை நாம் சற்று ஆராய்ந்து படிக்கும்போது, இந்த மேய்ப்பு பணிக்கு, கர்த்தர் உங்களை ஏற்படுத்தியிருக்கிறாரா? அந்த பாரம் உங்களுக்கிருந்து, அதைச் செய்யாது இருக்கிறீர்களா? என்பதையெல்லாம் பார்க்க முடியும். குறிப்பாக, CALL என்ற இந்த 4 எழுத்துக்களில் அவர் விளக்குகிறார். முதலாவது, C – Confirmation, உறுதிப்பாடு வேண்டும். அழைப்பில் முதலாவது உறுதிப்பாடு இருக்க வேண்டும். அடுத்து A – Ability, அந்த அழைப்பை நிறைவேற்றுகிற ஆற்றல் உள்ளதா? அடுத்து, L – Longings – வாஞ்சை, தாகம் அதிலே இருக்கிறதா? அடுத்து, L – Life – உங்கள் வாழ்வில் அந்த அழைப்புக்கேற்ற வாழ்க்கைத்தரம் இருக்கிறதா? உத்தமம், நேர்மை போன்றவை இருக்கிறதா? 1 தீமோ.4:16-ம் வசனம் அதை வலியுறுத்துகிறதல்லவா? உறுதிப்பாடு இருக்கவேண்டும். அழைப்பில், தேவனின் சபையினால், உறுதிப்பாட்டை நீங்கள் பெறவேண்டும். அடுத்து, அதைச் செய்வதற்கு ஆற்றல் உள்ளதா? என்று பார்க்க வேண்டும். அடுத்து, அதைச் செய்வதற்கு, வாஞ்சையும், தாகமும், தீராத ஒரு பற்றியெரிகிற அக்கினி போன்ற அனுபவம் இருக்கிறதா? அடுத்து, அவரின் வாழ்க்கை அதற்கேற்ப இருக்கிறதா? இந்த 4 காரியங்களை வைத்து உங்களது ஊழிய அழைப்பை உறதிப்படுத்த முடியும் என்று ஜான் மேக் ஆர்தர் என்ற சிறந்த ஊழியர் கூறுகிறார். அதைக் குறித்து தொடர்ந்து சற்று விளக்கமாக கற்றுக்கொள்வோம்.

முதலாவது, ஏனையோரால் உறுதிப்பாடு, Confirmation என்ற C-யின் எழுத்துக்கு விளக்கம் தருகிறது. ஏனையோரால் உறுதிப்பாடு நமக்கு வேண்டும். Confirmation by others. *அப்.14:1-2* வசனங்களைப் பார்க்கையில், 'இக்கோனியா பட்டணத்திலே அவர்கள் இருவரும் யூதருடைய ஜெபஆலயத்தில் பிரவேசித்து, யூதரிலும் கிரேக்கரிலும் திரளான ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தார்கள். விசுவாசியாத யூதர்கள், சகோதரருக்கு விரோதமாகப் புறஜாதியாருடைய மனதை எழுப்பிவிட்டு, பகையுண்டாக்கினார்கள்.' என்று தீமோத்தேயுவைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். பவுல் தன்னோடு கூட்டிச்செல்ல முயற்சித்தார். நாம் ஏற்கனவே பார்த்ததுபோல, தீமோத்தேயு, பவுலினால் இரட்சிப்புக்குள் வழிநடத்தப்பட்ட ஒரு சகோதரன். *1 தீமோ.1-ம்* அதிகாரத்தில், தீமோத்தேயுவைக் குறித்து சொல்லும்போது, விசுவாசத்தில் உத்தமகுமாரன் என்று சொல்லுகிறார். அவ்விதமாக ஒரு நற்சாட்சி பெற்றதொரு ஊழியக்காரன்தான் தீமோத்தேயு. அந்த தீமோத்தேயுவை, பவுல் தன்னுடைய ஊழியத்தில் தன்னோடுகூட, அழைத்துச்செல்ல விரும்பினார் என்று நாம் *அப்.16:3-ல்* வாசிக்கிறோம். ஆக, இவ்விதமாக தனிப்பட்டதான ஒரு அழைப்பை பெற்றவரை, மற்றொரு நபரான பவுல் அங்கே அங்கீகரித்து அழைத்துச் செல்லுகிறதைப் பார்க்கிறோம். இவ்விதமாக, உங்களுக்கு, மற்றவர்களுக்கு எழும்புகின்ற அல்லது தரப்படுகின்ற அழைப்பை மற்றவர்கள் அல்லது சபையானது உறுதிப்படுத்த வேண்டும், இதுதான் நல்லதொரு அடையாளமாக இருக்கிறது.

அடுத்து, தேவனால் உறுதிப்பாடு, Confirmation by God. தேவனாலும் உங்களுடைய அழைப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம். அழைப்பும், வரங்களும் பெற்ற மனிதர்களுக்கு தேவன் சகலத்தையும் அருளுகிறார். அந்த ஊழியத்தைச் செய்வதற்கேற்ற நல்ல சூழ்நிலைகளைத் தருகிறார். அதற்கான தேவைகளைச் சந்திக்கிறார், என்றெல்லாம் நாம் சொல்ல முடியும். ஊழியத்தைச் செய்ய வாஞ்சையையும், வரங்களையும் அவர் கொடுத்து உற்சாகப்படுத்துகிறார். தேவனால் இது உறுதிப்படுத்தப்படுகிறதின் அடையாளமாய் இருக்கிறது. உங்களுக்கு வாஞ்சை, வரங்கள், வல்லமைகள் மட்டுமல்ல, அதற்கேற்ற சூழ்நிலைகள், அதற்கேற்ற வாய்ப்புள்ள இடத்தில் கர்த்தர் உங்களை வைக்கிறார் என்றால், நீங்கள் அதை வைத்தும் உறுதிசெய்துகொள்ள முடியும். அதேவேளையில் ஊழியத்தின் விளைவுகளை வைத்தும் தேவன் ஆசீர்வதிக்கிறாரா? இல்லையா? என்று சொல்ல முடியாது. நீ ஊழியத்தில் தேவனால் வைக்கப்பட்டால், பயங்கரமாக ஊழியம் வளரும் என்று சொல்லி, சிலர் சொல்வார்கள். அப்படி நாம் உறுதிசெய்துவிட முடியாது. வளர்ச்சியின் அடிப்படையில், பயங்கரமான விளைவு ஏற்படுகிறது, ஆசீர்வதிக்கப்படுகிறது என்பதின் அடிப்படையில் மாத்திரம் நாம் கணக்கிட முடியாது.

உதாரணமாக, எரேமியாவின் ஊழியத்தை எடுத்துப் பாருங்கள். அவர் செய்கிற ஊழியத்தில் நல்ல பலன் உண்டாயிற்றா? இல்லை. அவர் சொன்னதை இராஜாவும், மற்றவர்களும், மக்களும் கேட்டார்களா? இல்லை. ஒரு பெரிய விளைவு, தேவன் கொடுத்த அந்த தரிசனம் எரேமியாவின் மூலம் உரைக்கப்பட்ட வார்த்தைகள் கேட்கப்படாமலே போயிற்று. ஆகவே விளைவை வைத்து, நாம் ஊழியத்தை முடிவுசெய்ய முடியாது, விளையச் செய்கிறது தேவன். நமக்கு என்ன சொல்லுகிறாரோ? அதைச் செய்ய வேண்டும், அவ்வளவுதான். கர்த்தர் சொன்னதைச் செய்ய வேண்டும், விளையச் செய்கிறது தேவன். அதுதான் நம்முடைய கணக்கீடாக இருக்க வேண்டும். நம்முடைய ஊழியத்தில் பெரிய வளர்ச்சயில்லை, ஆகையால் தேவன் அழைத்த ஊழியத்தை நீ செய்யவில்லை என்று நாம் சொல்ல முடியாது. அவ்வாறு நீங்கள் ஒருபோதும் கணக்கீடு செய்யாதீர்கள், விளைவு தேவனுடையது என்ற கண்ணோட்டத்தோடு ஊழியம் செய்யுங்கள்.

தொடர்ந்து வருகிற பாடத்திலும் நாம் தேவனுடைய அழைப்பைக் குறித்து கற்றுக்கொள்ளப்போகிறோம். மேய்ப்பனும், போதகனுமாய், தேவன் உங்களை ஏற்படுத்தியது, எவ்வாறு அழைப்பை உறுதிசெய்து கொள்வது? என்றெல்லாம் தொடர்ந்து கற்றுக்கொள்வோம். நிச்சயமாய் இந்த பாடம் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நீங்கள், மீண்டும், மீண்டும் இவற்றைப் படித்து, தேவனுடைய ஆசீர்வாதத்தை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய ஊழியத்தில் முன்னேறிச் செல்வதற்கு இது மிக மிக உதவியாய் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:-</u>**

1) தாமஸ் சி. ஓமன் என்ற தேவமனிதர், மேய்ப்பனைக் குறித்து கூறும் கூற்றினை கூறுக?
2) மேய்ப்பு பணியானது, சகல கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட ஊழியம் என்பதனை உறுதிசெய்துகொள்ள ஆதாரமாக காணப்படுகிற வேத வசன பகுதிகளைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
3) எசேக்கியேல் 34:16-ன்படி, மேய்ப்பனுடைய முக்கியமான ஆறு செயல்பாடுகள் யாவை? (தலைப்புகள் மட்டும்)
4) மேய்ப்பு பணியைக் குறிக்கும் சில வார்த்தைகளையும், அதற்கான விளக்கங்களையும் வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
5) மேய்ப்பனுடைய வாழ்வில் காணப்படுகிற அழைப்பின் வகைகளைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?

6) இராஜ்ஜியத்திற்கு அடுத்த ஐந்து விதமான ஊழிய அழைப்புகள் யாவை? (Five Fold Ministries) அவைகள் ஏற்படுத்தப்பட்டதின் நோக்கங்கள் யாவை? வசன ஆதாரத்துடன் கூறுக?
7) சபைக்கடுத்த ஊழியங்கள் என்றால் என்ன? அதற்கான சில உதாரணங்களை கூறுக?
8) ஜான் மெக் ஆர்தர் என்பவர் அழைப்பைக் குறித்து, CALL என்ற ஆங்கில வார்த்தையிலிருந்து கூறும் நான்கு வார்த்தைகள் யாவை?
9) ஜான் மெக் ஆர்தர் என்பவர் CALL என்ற ஆங்கில வார்த்தையிலிருந்து கூறும் வார்த்தைகள் ‘C’ என்பதற்கான Confirmation – அழைப்பில் உறுதி என்பதனைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - 4

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நாம் இந்த பாடத்தில், சென்ற பாடத்தின் இறுதியில் சிந்தித்த காரியமான தேவனால் உறுதிப்படுத்தப்படுதல் என்பதின் தொர்ச்சியை கற்றுக்கொள்ளப்போகிறோம். நம்முடைய அழைப்பை நாம் உறுதி செய்துகொள்ள வேண்டுமென்ற 4 காரியங்களை கற்றுக்கொள்ள ஆரம்பித்தோம். தேவனால் மற்றும் சபையினால் உறுதிப்பாடு இருக்கிறதா? கர்த்தர் அழைத்த ஊழியத்தைச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளதா? அந்த ஊழியத்தை நிறைவேற்றுகிற வாஞ்சை மற்றும் தாகம் உள்ளதா? அடுத்து, வாழ்க்கை உத்தமமாய், நேர்மையாய் இருக்கிறதா? என்று CALL என்ற 4 எழுத்துக்களிலுள்ள கருத்துக்களை கற்றோம். C – Confirmation, A – Ability, L – Longings மற்றும் L – Lifestyle. இதில் கடந்த பாடத்தின் இறுதிப்பகுதியில் தேவனால் நம்முடைய அழைப்பு உறுதிசெய்யப்பட ண்டும் என்று பார்த்தோம். அதிலே ஏற்படுகிற விளைவை வைத்து நாம் கணக்கிட முடியாது, அதாவது ஊழியத்தின் விளைவுகளை வைத்து தேவன் ஆசீர்வதித்திருக்கிறாரா? இல்லையா? என்று நாம் சொல்ல முடியாது. ஏனெனில் எரேமியாவின் ஊழியம் ஒரு கனி நிறைந்ததாக இல்லை. அவர் நினைத்தது போன்ற விளைவை ஏற்படுத்தவில்லை. அதனால், விளைவு கர்த்தருடையது என்று சிந்தித்துக்கொண்டிருந்தோம். அதன் தொடர்ச்சியை நாம் தொடர்ந்து கற்றுக்கொள்வோம்.

தேவன் ஊழியத்தை உறுதிப்படுத்துகிறார், உதாரணமாக, அப்.13:2-3 போன்ற வசனங்கள், 'அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.' என்று வாசிக்கிறோம். ஆக, இங்கே ஜெபிக்கிறார்கள், அவர்கள் ஆராதனை செய்கிறார்கள். அந்த உபவாச ஜெபத்தில், கர்த்தருடைய ஆவியானவர் தலையிட்டு சொல்கிறார், நான் அழைத்த ஊழியத்திற்கு அவர்களைப் பிரித்து விடுங்கள். நான் புறஜாதிகள் மத்தியில் ஊழியம் செய்ய அவர்களை அழைத்து இருக்கிறேன். ஆகவே இவர்களை சபையிலேயே வைத்துக்கொள்ளாமல், பிரித்து, விட்டுவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றி பதில் சொன்னதைப் பார்க்கிறோம். அதற்கு சபையார் கீழ்ப்படிந்து அவர்களை அனுப்பி வைத்தார்கள் என்று பார்க்கிறோம். ஆகவே, தேவன் அவற்றை உறுதிசெய்கிறார். இவர்கள் புறஜாதிகள் மத்தியில் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டவர்கள் என்று உறுதிப்படுத்தி, அதை தெரியவும்படுத்தி அனுப்புகிறதைப் பார்க்கிறோம்.

நீங்கள் உங்களுடைய அழைப்பைக் குறித்து பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் அந்த சபையில் தங்கியிருந்தார்கள், ஜெபித்தார்கள். அதற்கு கர்த்தருடைய ஆவியானவர், பிரித்துவிடச் சொன்னார். அவ்விதமாகச் சபையாரும் பிரித்துவிட்டார்கள், உங்கள் ஊழியத்தை நிர்ணயிக்கிற முக்கியமான காரியம் தேவனிடமிருக்கிறது. அதனையடுத்து, சபையாரிடம் இருக்கிறது. மற்றவர்கள் உங்கள் ஊழியத்தை, உங்களை எந்த இடத்தில் வைக்கவேண்டும்? என்பதற்கு, அவர்களை அழையாமலே நடத்தப்பட்டு, உங்களை அந்த குறிப்பிட்ட இடத்திலே, சரியான இடத்திலே வைத்து பயன்படுத்துகிற காரியத்தை கர்த்தர் சரியாய் செய்வார். ஆனால், நீங்களே உங்கள் அழைப்பை உறுதிசெய்வதற்கு ஒருசில காரியங்களைப் பற்றி பார்க்கலாம். தேவன் உறுதிப்படுத்துகிறார். அதேவேளையில் நீங்களும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. எல்லாவற்றையும் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று நாம் அமைதியாய் இருந்துவிட்டாலும், காரியம் நடக்காது. பரிசுத்த வாழ்வாக இருந்தாலும், ஊழியமாக இருந்தாலும், தேவனும், நீங்களும் சேர்ந்து நடத்துகிறதுதான், பரிசுத்த வாழ்வு, ஊழியம் எல்லாம். அவரே எல்லாவற்றையும் செய்துவிட்டால், நாம் எதற்கு? நாம் ஒரு ரோபோட் போல, அவரால் பயன்படுத்தப்படுகிற ஒன்றாய் இருப்போம். அப்படியல்ல, சுய சித்தத்தை நமக்கு தந்து இருக்கிறார். நாமே மனமுவந்து, கர்த்தாவே, நான் உம்முடைய சித்தம் செய்ய வருகிறேன் என்று அர்ப்பணிக்கும்போது, பயன்படுத்துகிறார். அது மிகவும் முக்கியமான விஷயம். உங்கள் அழைப்பை உறுதிப்படுத்துவதற்கு மிக, மிக முக்கியமானதொரு காரியம். உங்களுடைய தாகம், வாஞ்சை என்று ஏற்கனவே பார்த்தோம், இல்லையா?

அடுத்து, கர்த்தர் உங்களை குறிப்பிட்ட ஊழியத்திற்கு நேராக நிச்சயமாய் பயிற்றுவித்திருப்பார். பயிற்சி கொடுக்காமல் யாரையும், குறிப்பிட்ட ஊழியத்திற்கு அழைக்கிறதில்லை, அனுப்புகிறதில்லை. நீங்கள் மத்.10-ம் அதிகாரத்தில் பார்க்கும்போது, 12 சீஷர்களை தம்மோடுகூட அவர் அழைத்துச்சென்று, பயிற்சி கொடுத்த, பிறகு ஊழியத்திற்கு அனுப்பினதைப் பார்க்கிறோம். இயேசு அவர்களுக்கு 3 ½ ஆண்டுகள் கூடவே வைத்து, பயிற்சி கொடுத்தது மாத்திரமல்ல, மத்.10:5-ல், 'பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்கு கட்டளையிட்டு சொன்னது என்னவென்றால், நீங்கள் புறஜாதியார் நாட்டுக்கு போகாமல், சமாரியா பட்டணங்களில் பிரவேசியாமலும்' என்று சொல்லுகிறார், அதாவது, அந்த பன்னிருவரையும் இயேசு அனுப்பினார், சொல்லிக்கொடுத்தார், கூடவே வைத்து பயிற்சி கொடுத்தார், அதன் பின்பு அப்படியே அவர்களை இருக்க வைக்கவில்லை, அவர்களை ஊழியம் செய்ய அனுப்பிவிட்டார். தேவன் உங்களுக்கும், நீங்கள் இருக்கிற இடங்களில் பயிற்சி கொடுக்கிறது மாத்திரமல்ல, அவர் எதற்கு பயிற்சி கொடுத்தாரோ, அதற்கு அனுப்புகிற தேவனாக இருக்கிறார். ஆகவே உங்களுடைய அழைப்பு இதுவாக இருக்கலாம் என்று, எதை நீங்கள் உறுதிபண்ணுகிறீர்களோ, அதை செயலில் காட்ட

ஆரம்பிக்க வேண்டும். ஒருவேளை உங்களுக்கு மேய்ப்புபணி, போதக பணியை கர்த்தர் தந்திருக்கிறார் என்று ஓரளவு முடிவுசெய்துகொள்ள முடிகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு சபையில் போய் பிரசங்கம்பண்ண ஆரம்பிக்கலாம், அங்கே நோயாளிகளை பார்வையிட்டு, அவர்களோடு சேர்ந்து, ஜெபிக்க நீங்கள் செல்லலாம். அவ்வாறு போகும்போது, கர்த்தர் உங்களைப் பயன்படுத்த ஆரம்பிப்பார்.

முதலாவது படியை நீங்கள் எடுத்துவையுங்கள், தேவன் உங்கள் அழைப்பை பயன்படுத்துகிறதை நீங்கள் பார்க்க முடியும். அவர் *12* பேரை பயிற்சி கொடுத்து, பின்பு அனுப்பினார் என்ற சத்தியத்தை நீங்கள் ஆழமாக புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் முதல் படியை எடுத்து வைத்து செயல்பட ஆரம்பியுங்கள். எனக்கு இந்த மாதிரியான பாரம் இருக்கிறது என்று பாரப்பட்டு, அதைக்குறித்து அழுது, ஜெபம் செய்கிறீர்களோ, இல்லாவிட்டால் உங்களுக்கு தரிசனமாய் தோன்றுகிதோ, சபை என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும், இல்லை என்னுடைய ஊழியம் இப்படியிருக்கவேண்டுமென்று, எதைக்குறித்து அதிக பாரமடைகிறீர்களோ, அந்த ஊழியத்தைச் செய்வதற்கு எழுந்து புறப்பட்டு போங்கள். அதற்குபின்பு கர்த்தர் அற்புதமாய் வழிநடத்துகிறதை நீங்கள் பார்க்க முடியும், மட்டுமல்ல, அந்த ஊழியத்தைச் செய்யும் முன்னர், அந்த ஊழியத்தில் அனுபவமுள்ள அவர்களோடு நீங்கள் பேசுங்கள், ஒருவேளை போதக ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்றால், போதகர்களோடு அதிகமாய் பழகுங்கள். எப்படி நீங்கள் ஊழியத்திற்கு வந்தீர்கள்? எப்படி கர்த்தர் உங்களை அழைத்தார்? எப்படி அதை உறுதிப்படுத்தினார்? எவ்விதமாக நீங்கள் இந்தச் சபையை ஸ்தாபித்தீர்கள்? என்கிற கேள்விக்கான பதிலை அறிய, பல ஊழிய அனுபவம் உள்ளவர்களோடு, கேட்டு பெறவேண்டும். உங்களுடைய சந்தேகத்தைச் சொல்லவேண்டும், கர்த்தர் அவ்விதமாய் நடத்துகிறதை நீங்கள் பார்க்க முடியும். சரியாய் நடத்திச்செல்கிற தேவன் உங்களுக்கு இருக்கிறார். ஆனால் ஒரு படியை எடுத்துவைக்க முதலாவது நீங்கள் முடிவுசெய்ய வேண்டும்.

நீங்கள் வலதுபுறமாவது, இடதுபுறமாவது சாயும்போது, வழி இதுவே என்று சொல்லுகிற சத்தத்தைக் கேட்பீர்கள் என்று வேதம் சொல்லுகிறபடி நீங்கள் வலதுபுறமாவது, இடதுபுறமாவது முதலில் சாயுங்கள். எதுவென்று தெரியாத பட்சத்தில் ஏதோவொரு பகுதியில் செயல்பட ஆரம்பித்தீர்களானால், ஆவியானவர் வழி இதுதான் என்று சொல்வார், எதையுமே செய்யாமல் வீட்டில் உட்கார்ந்துகொண்டு, கர்த்தரே நமது அழைப்பை நிறைவேற்றுவார் என்று சொல்லிக்கொண்டிருக்க கூடாது.

அடுத்து, உங்களது கனியைக் கொண்டு உறுதிசெய்துகொள்ள முடியும். முதலாவது உங்களுக்கு எந்த ஊழியத்தில் அதிக துடிப்பும், வாஞ்சையும் இருக்கிறதோ, அதிலே உங்களது அழைப்பு இருக்கிறது என்பதை முடிவுசெய்து கொள்ளுங்கள். அதனையடுத்து

நீங்கள், தேவன் உங்களுக்கு கடந்த ஆண்டுகளில் தந்த அனுபவத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, எதிலே அதிகமான பயிற்சியை கொடுத்திருக்கிறார் என்பதை உட்கார்ந்து யோசித்து, ஜெபித்து, அதைச்செய்ய ஒரு படியையாவது எடுத்து வையுங்கள். கர்த்தர் உங்களைப் பயன்படுத்துகிறதைப் பார்க்கலாம். அதற்கு பின்பு, உங்கள் ஊழியத்தில் உண்டாகிற கனியைக்கொண்டு, உங்களுடைய அழைப்பை உறுதிசெய்துகொள்ள முடியும். ஏனெனில் யோவான் 15:5-ம் வசனம் இவ்விதமாய்ச் சொல்லுகிறது, 'நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' என்று இயேசு கூறுகிறதைப் பார்க்க முடியும். ஆகவே, இயேசு நம்மில் நிலைத்திருந்தால், நாம் அவரில் நிலைத்திருந்தால், அதன் வெளிப்பாடு என்ன? மிகுந்த கனிகளை நம்முடைய ஊழியத்தில் பார்ப்போம். இயேசு கிறிஸ்துவாலன்றி, நம்மால் எதுவுமே செய்ய முடியாது. அவர் இல்லாமல் அவருடைய அழைப்பில் நீங்கள் போகாமல், ஒரு முடிவையும் பார்க்க முடியாது, ஆனால், அவரின் அழைப்பில் செல்லும்போது, அந்த ஊழியத்தில் எதிர்ப்பு இருக்கலாம், பல தடைகள் இருக்கலாம், அதை நீங்கள் முக்கியப்படுத்தாதீர்கள், இறுதி விளைவு கனி உண்டாகிறதா? என்பதை பாருங்கள். நீங்கள் செய்த ஊழியத்தில் பலன் உண்டாகிறதா? என்பதை மட்டும் கவனம் செய்யுங்கள். பயப்படாமல் நீங்கள் செயல்பட ஆரம்பியுங்கள். முதலில் ஒருவேளை, சில இடங்களில் தவறுதலாய் சில அடிகளை எடுத்துவைத்து செயல்படுகிறதாக இருக்கலாம், சில முடிவுகள் தவறானதுபோல இருக்கலாம். ஆனால் எந்த விதத்திலும் கர்த்தர் சரியான அனுபவத்தைத் தருவார். நீங்கள் தினமும் ஜெபம் செய்யவேண்டும், உமக்கு சித்தமில்லாத இடத்தில் நான் போகவும் கூடாது, உங்களது சித்தமில்லாத எந்த ஊழியத்தையும் நான் செய்யவும் கூடாது, நான் என்ன செய்ய சித்தமாக இருக்கிறீர் என்று தினமும் காலையில் ஜெபித்து, அவரிடத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டும். உம்முடைய சித்தம் செய்வதற்கு என்னை நேர்வழியாய் நடத்தும் கர்த்தாவே! என்று கேளுங்கள். ஏனெனில், நாம் ஜீவனுள்ள தேவனை வணங்குகிறோம். அந்த ஜீவனுள்ள தேவனுடைய சித்தம் செய்வதற்கு நம்மை அர்ப்பணித்து இருக்கிறோம். அவர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தவில்லை என்றால், நீங்கள் எப்படி அவருடைய சித்தத்தை செய்ய முடியும்? ஆகவே, அவரிடம் கேட்க வேண்டும். அவரிடத்தில் உறுதிபட கேட்கவேண்டும். உமக்கு சித்தமில்லாத எதையும் செய்துவிடாதபடி காத்துக்கொள்ளும் கர்த்தாவே. ஏனெனில் உம்முடைய சித்தப்படி செய்கிறவன்தான் பரலோகம் வந்துசேர முடியும் என்று உறுதிபட கூறியிருக்கிறீர். அவ்வாறு இருக்கிறபடியால், உம் சித்தத்தை மீறாதபடி காத்துக்கொள்ளும் என்று கேட்டு செயல்படுகிற உங்களுக்கு தம்முடைய சித்தத்தை தேவன் நிச்சயமாய் வெளிப்படுத்துவார்.

அடுத்து, ஊழியத்தில் சில கடினமான பாதையில் உங்களை, அழைப்புக்கு நேராய், சரியாய் நடத்துகிறதைப் பார்க்க முடியும். ஊழியம் என்பது நிச்சயமாய் ஒரு கடினமான

பாதைதான். ஏனெனில், உங்களது விருப்பு, வெறுப்புகளைத் தாண்டி செயல்பட வேண்டும், தியாகமாய் செயல்பட வேண்டும். ஏனெனில் உங்கள் நலனுக்காக நீங்கள் செயல்படவில்லை, நீங்கள் மற்றவர்களுடைய நலனுக்காக செயல்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். ஆத்துமாக்கள் இயேசுவண்டை வரமேண்டுமென்கிற நல்ல நோக்கத்திற்காக செயல்படுகிறீர்கள். இதிலொரு பெரிய நன்மை அல்லது இலாபம் என்றெல்லாம் எதுவுமில்லை. இதற்கு தியாகமான அன்பு வேண்டும். கர்த்தருடைய ஆவியானவர் அதை நம்முடைய இருதயத்தில் நிச்சயமாய் தருகிறார். அதேவேளையில், தேவனுடைய பணியைச் செய்வதற்கு பலதரப்பட்ட பாடுகள், உபத்திரவங்கள் ஒருவேளை, சில இடங்களில் உண்டாகிறது. நாம் நினைத்ததுபோல மனிதர்கள் ஒத்துழைப்பு தராமல் இருக்கலாம். ஏனெனில் யாக்.1:2-4 வரையுள்ள வசனங்களில் நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம், ‘என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து. அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.’ ஆக, பொறுமையாய் இருங்கள், அவ்வாறு பொறுமையாக இருந்தால், நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் இருப்பீர்கள் என்று இங்கே வேத வசனம் மிக உறுதிபட கூறுகிறதை கவனித்துப் பாருங்கள். இந்த கடினமான வாழ்வின் சூழ்நிலைகளில் எவ்விதமாய் நம்முடைய நல்ல குணம் வெளிப்படுகிறது? என்பதற்காக தேவன் பயிற்சியளிக்கிறார். மிகக் கடினமான சூழ்நிலையில், மிகவும் உறுதியாக நீங்கள் இருப்பதற்கு பயிற்சி கொடுக்கிறார். மிகக் கடினமான சூழ்நிலையில்தான் ஊழியத்திற்கான பயிற்சியை அதிகமாகப் பெறுகிறீர்கள். எதிர்ப்பு வரும்போது, உங்கள் இருதயம் கலங்காமல் இருக்கும். உங்களுடைய சபையில் உங்களைக் குறித்து தேவையற்ற வதந்திகளைப் பேசும்போது. நீங்கள் அஞ்சமாட்டீர்கள். நீங்கள் ஒருவேளை ஒழுங்காக சில காரியங்களை செய்துகொண்டு இருப்பீர்கள். கர்த்தர் அந்த கடினமான சூழ்நிலையின் வழியாக அதை விடச்சொல்லி, உங்களுக்கு கற்றுக்கொடுப்பார். உங்களுடைய பொருளாதார நிலையில், சில வேளைகளில் காணப்படுகிற குறைவுகளை கையாளுவதற்கும் கற்றுக்கொடுப்பார். உங்களுடைய வாழ்க்கையில் சில தவறான பாவங்கள் இருந்தாலும்கூட, இந்த கடினமான சூழ்நிலையின் வழியாக உங்களுக்கு உணர்த்தி அதை விடவைக்கிறார்.

நீங்களும், நானும் வணங்குகிற தேவன் சாதாரண தேவனல்ல. ஏதோ நீங்கள் ஜெபிக்கும்போது, பதில் தந்துவிட்டு, அப்படியே ஓரமாக இருக்கிற தேவனல்ல. செயல்படுகிற தேவன், உங்கள் வாழ்வில் பயிற்சி கொடுக்கிற தேவன். இந்த பூமியில் இருக்கும்போது, 12 சீஷர்களுக்கு தன்னோடு வைத்து 3 ½ ஆண்டுகள் பயிற்சி கொடுத்து

இருக்கிறார். அப். நடபடிகளை பார்க்கும்போது, சவுலாக இருந்து, பவுலாக மாறின அந்த அப்போஸ்தலனின் வாழ்வில் எவ்வளவாய் செயல்பட்டார் பாருங்கள். அநேக காரியங்களைக் கற்றுக்கொடுத்தார். அவர் தன்னை முற்றிலும் வெறுமையாக்குகிற இடத்திற்கு வந்து செயல்பட்டதை நாம் பார்க்கிறோம். இன்றும் அவர் பயிற்சி கொடுக்கிற தேவன். 'I will make you fishers of men' என்றுதான் அவர் சீஷர்களை அழைக்கும்போது சொல்லி அழைக்கின்றார். நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக உருவாக்குவேன் என்று ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் உருவாக்குவாராம். மட்டுமல்ல, நூதன சீஷனயிருக்க கூடாது என்று அப். பவுல் *1* தீமோ. *3:6*-ல் கூறுகிறார். அந்த வசனத்தை வாசிக்கலாம், 'அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையில் விளாதபடிக்கு நூதன சீஷனாக இருக்க கூடாது.' நூதன் சீஷன் என்றால், பயிற்சி பெறாத சீஷன் என்று அர்த்தம். பயிற்சி பெறாமலும் சிலர் சீஷத்துவத்திற்கு வருகிறார்கள், அதாவது ஊழியத்திற்கு வருவார்கள். பெருமைக்காக, பணத்திற்காக, புகழுக்காக, அந்த பாஸ்டர் இப்படிச் செய்கிறார், அந்த சபை இப்படிச் செய்துதான் ஆரம்பிக்கப்பட்டது, எவ்வளவு வளர்ச்சியை பெற்றிருக்கிறது. எனக்கும் அந்த மாதிரியான பெயர், புகழ், பணம், வசதி போன்றவற்றை நான் உருவாக்குவதற்காக தேவன் அழைத்தாரோ, இல்லையோ, அதற்காக செயல்படுகிற அநேகர் உண்டு. அவர்களின் ஊழியத்தில், இந்த பிசாசுகளின் தூண்டுதலின் அடிப்படையில் அவர்கள் செயல்பட்டு, பயிற்சி பெறாமல், தேவனிடத்தில் ஜெபிக்காமல், காத்திருக்காமல், அவர் சொல்லித்தராமல், இவர்களாகவே இது என்ன பெரிய விஷயமா? வேதத்தை எடுத்து, போதிக்கவேண்டும், அவ்வளவுதானே. அதுவும் இன்றைய காலகட்டத்தில் பிரசங்கம் மிகவும் எளிதாகப்போய் விட்டது. அந்த வசனத்தை அப்படியே எடுத்துக்கொண்டு, அப்படி கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கப்போகிறார் என்றுதான் சொல்லவேண்டும். வேறு விதமாகச் சொன்னால் நன்றாக இருக்காது அல்லவா? என்று நினைக்கிறார்கள். வசனத்தை எவ்வளவு ஆழமாக படிக்க வேண்டியிருக்கிறது? பின்னணி என்ன? அதனுடைய மூல பாஷையில் எவ்விதம் காணப்படுகிறது? ஆழமான அர்த்தத்தை அந்த அதிகாரத்தின் துவக்கத்திலிருந்து பார்க்க வேண்டும், குறைந்தது அந்த புத்தகத்தினுடைய பின்னணியத்தைப் பார்க்க வேண்டும். ஏகப்பட்ட வேலையிருக்கிறது, ஆனால் இன்றைக்கு அதையெல்லாம் பார்க்காமல் அநேகர் பிரசங்கிக்கிறார்கள்.

ஒரு வசனத்தை எடுக்க வேண்டியது, அதை எடுத்து வாழ்வில் அப்பியாசம் செய்யவேண்டியது அவ்வளவுதான். நான் உங்களை கனப்படுத்துவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், ஆகவே பிரியமானவர்களே, நீங்கள் ஒருவேளை இன்றைக்கு கனவீனமாக இருக்கிறீர்களா? கவலையோடு இருக்கிறீர்களா? கனப்படுத்தப்போகிறார், இவ்வளவுதான் என்று சொல்வது பெரிய பிரசங்கமாய் இருக்க முடியாது. பிரியமானவர்களே, அப்படித்தானே என்று கருதி, அநேகர் இன்று ஊழியத்தை ஆரம்பிக்கின்றார்கள். நூதன

சீஷனாக தேவனிடத்தில் காத்திருக்காமல், தேவன் எடுத்து பயன்படுத்துவதற்கு 'போ' என்று சொல்லும் முன்னர், இவர்களே செயல்பட ஆரம்பிக்கிறவர்கள். 3 ½ ஆண்டுகள் சீஷர்கள் இயேசுவோடேகூட இருந்தார்கள். நூதன சீஷர்கள் திடீரென்று இரட்சிக்கப்பட்டவர்களாய் தங்களை அறிவித்துக்கொள்வார்கள், திடீரென்று ஆத்தும பாரம் இவர்களுக்கு அதிகமாய் வரும். திடீரென்று ஊழியம் செய்ய ஆரம்பிப்பார்கள், பிறகு சபையை விட்டுவிட்டு போய்விடுவார்கள். பிரியமானவர்களே, கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நூதன சீஷனாய் இருக்க கூடாது. என்ன சொல்லுகிறோம் என்றால், தேவன் உங்களை பயிற்றுவிக்கிற தேவன், உங்கள் வழியாக, பலதரப்பட்ட எதிர்ப்புகள் வழியாக, அநேக தோல்விகள், அநேக வெற்றிகள் போன்ற இவற்றின் மத்தியிலே நீங்கள் சமநிலையாகச் செல்கிறீர்களா? சிலரைப் பார்த்தால், வெற்றி பெற்றவுடன் பயங்கரமாக குதிப்பார்கள், தோல்வி வந்தால், உடனே துவண்டு விடுவார்கள். ஆகவே, வெற்றியும், தோல்வியும் மாறி, மாறி வரும்போது, நீங்கள் உறுதியான இருதயமுடையவர்களாய் உருவாக்கப்பட உங்களை தேவன் பயன்படுத்துகிறார். இதன் வழியாக நீங்கள் தேவனுடைய ஊழியத்தை கண்டுகொள்ள முடியும். அதற்கு, நிச்சயமாய் நீங்கள் வேதத்தை நாடவேண்டும், கர்த்தரை நாடவேண்டும், மூத்த ஊழியர்களையும் நீங்கள் நாடி ஆலோசனை பெறலாம்.

ஊழியம் என்பது ஒரு எளிதான பாதையல்ல, ஆனால் இன்பமான பாதை. நெருக்கங்கள், தேவைகள் வரும்போது, தேவன் மிகவும் நேர்த்தியாக, உங்கள் கண்கள் காண செயல்படுகிறதைப் பார்க்க முடியும், அதுதான் வேண்டும். உலகத்தில் அதிகமான செல்வம் இருந்து, நிம்மதியில்லாமல் கஷ்டப்பட்டால் என்ன பயன்? உலகத்தில் பார்த்தால், செல்வத்தை சேர்க்க எத்தனை கஷ்டப்படுகிறார்கள் தெரியுமா? நீங்கள் ஊழியம் செய்வதுதான் கஷ்டமாக இருக்கிறது என்று நினைக்கிறீர்கள். உயிரைப் பணயம் வைத்து எத்தனைபேர் வேலைசெய்கிறார்கள், பணத்துக்காக, இரவு, பகலாக பயணப்படுகிறார்கள், ஆபத்தான வேலைகளைச் செய்கிறார்கள். நிலக்கரி சுரங்கங்களில், அல்லது தங்க சுரங்கங்களில் உயிரைப் பணயம் வைத்து செயல்படுகிறார்கள். நாம் ஊழியத்திற்காக சில காரியங்களைச் செய்வதற்கு எவ்வளவோ கஷ்டப்படுகிறோம் என்று நினைத்துக் கொள்கிறோம், இல்லை பிரியமானவர்களே. உலக மனிதர்கள் பணத்திற்காக உங்களைவிட அதிகமாக கஷ்டப்படுகிறார்கள். ஆனால் அது அவர்களுக்கு பெரிய விஷயமாகத் தெரியவில்லை. அது நமக்குத்தான் பெரிய விஷயமாகத் தெரிகிறது. கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும், சிந்திக்க வேண்டும், செயல்பட வேண்டும். பொதுவாக, ஊழியமானது, இலகுவானதாக இருக்க வாய்ப்பு இல்லை. ஏனெனில், ஆத்துமாக்களைக் கொண்டுவரவேண்டும், அவர்களை வழிநடத்த வேண்டும், அவர்கள் சொல்லுகிற குறைகளைக் கேட்க வேண்டும், அதற்கு மத்தியில் தாங்கிக்கொண்டு ஓடவேண்டும்.

ஆகவே ஊழியம் என்பது மிகவும் வாய்ப்பு நிறைந்ததாகவும் இருக்காது, இலாபம் நிறைந்த ஒரு தொழில் போலவும் இருக்காது. நீங்கள்தான் அதிகநேரம் செலவழிக்க வேண்டியதாக இருக்கும். நீங்கள்தான் உங்களுடைய நேரம், பணம், தகுதி ஆகியவற்றை விட்டு, இறங்கி செய்ய வேண்டியதாக இருக்கும். ஆனால், தேவன் உங்களோடகூட இருக்கின்றதை அடிக்கடியாய் உறுதிப்படுத்துகிறதை பார்க்க முடியும். ஏனென்றால், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டு போங்கள் என்று சொன்ன தேவன், உங்களோடேயேதான் இருப்பார். நீங்கள் புறப்பட்டுபோனபடியால், உங்களோடே அவர் சொன்னபடி இருப்பார். உங்களுடைய அழைப்பை உறுதிசெய்துகொள்வதற்காக நீங்கள் இன்னும் சில கேள்விகளைக் கேட்கலாம்.

மற்றவர்கள் எனது தலைமைத்துவ தகுதிகளை, வரங்களை அங்கீகரிக்கிறார்களா? அடுத்து நான் பிரசங்கத்தின் மூலம் அல்லது கற்பித்தல் வழியாக நான் தேவனுடைய சத்தியங்களை கூறக்கூடியவனாக இருக்கிறேனா? அதைச் சிறப்பாக செய்துகொண்டு இருக்கிறேனா? நான் அவ்விதமாய் பிரசங்கிக்கும்போது. மக்கள் எந்தளவுக்கு என்னுடைய பிரசங்கத்தில் சந்திக்கப்படுகிறார்கள்? நான் போதிக்கும்போது, அவர்களுக்கு உண்மையாகவே கருகலான, கடினமான சத்தியங்களெல்லாம் புரிகிறதா? அடுத்து, என்னைப்பார்த்து, உங்கள் அழைப்பை கொஞ்சம் பரிசோதித்து பாருங்கள் என்று யாராவது சொன்னதுண்டா? உங்களுடைய ஊழியத்தை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று யாராவது வந்து சொன்னதுண்டா? இவ்வாறான பல கேள்விகளை, பல சூழ்நிலைகளில் உங்களைக் கேட்டு உறுதிசெய்துகொள்ள வேண்டும். கர்த்தர் அதை நிச்சயமாய் உறுதிப்படுத்த வல்லவராய் இருக்கிறார், உறுதிப்படுத்துவார். ஊழியம் உங்களுக்குள் இருக்கிறதையும், அதில் ஏற்படவேண்டிய உறுதிப்பாட்டையும் தருகிறவர் தேவன், உறுதிப்பாடு இருக்கவேண்டும். நீங்கள் உறுதிசெய்துகொண்டு அதில் முன்னேற வேண்டும். மற்றவர்கள் உங்களைக் கண்டு, உங்களுடைய ஊழியத்தைக் கண்டு வளருவதற்கு உதவி செய்யதக்கதாக, தைரியப்படத்தக்கதாக, ஈவுகளையும், ஆற்றல்களையும் நீங்கள் பயன்படுத்துகிறீர்களா? என்று சற்று அவ்வப்பொழுது பரிசோதித்துப் பாருங்கள். நான் செய்கிற ஊழியத்தில் அநேகர் உற்சாகப்படுகிறார்களா? தொடப்படுகிறார்களா? என்றும் சோதித்துப் பாருங்கள்.

அடுத்து, என்னுடைய ஊழியத்தில், என்னுடைய அழைப்பை செய்யுமளவிற்கு ஆற்றல் உள்ளதா? என்று உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாக இருக்கிறது. Are there abilities? ஆற்றல் உள்ளதா? CALL என்பதில், முதலாவது C – confirmation என்பதைப் பற்றி பார்த்து விட்டோம்.

அடுத்து A – ability – அழைப்பை நிறைவேற்றுகிற ஆற்றல். பழைய ஏற்பாட்டில் பார்த்தால், தேவன் பலவிதமான மக்களை எடுத்து, தம்முடைய பணியை நிறைவேற்ற பயன்படுத்தியிருக்கிறார். நியாயாதிபதிகள், தீர்க்கதரிசிகள், பலதரப்பட் இராஜாக்கள், மனிதர்களை அவர் பயன்படுத்தியிருக்கிறார். அதைப்போல புதிய ஏற்பாட்டிலும் அவ்விதமாகவே இந்த சபைக் காலத்தில், தம்முடைய பணிகளை நிறைவேற்றக்கூடிய நபர்களை, அவர் தெரிவுசெய்து பயன்படுத்துகிறார். அதைத்தான் எபே.*4:12-13* வசனங்களில் வாசிக்கிறோம். மீண்டும் ஒருமுறை அந்த வசனத்தை வாசிப்போம், 'பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமான சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்' பார்த்தீர்களா? வித்தியாசமான பணிகளுக்கு, வித்தியாசமான நபர்களை தேர்ந்தெடுத்து, அவர் பயன்படுத்துகிறதாக வேதம் நமக்கு கூறுகிறது. எதற்காக, சுவிசேஷ ஊழியத்திற்காக, சீர்பொருந்தும் ஊழியத்தைச் செய்வதற்காக, மற்றவர்களை பக்திவிருத்திக்கு ஏதுவாக நடத்தும் பணிக்காக இவர்களை தேவன் பயன்படுத்துகிறார். அந்த ஊழியத்தைச் செய்யும்முன் இந்த மக்களும் பக்திவிருத்தி உண்டாக்கிக்கொள்ள வேண்டும். அதாவது, இவர்களும் முதலாவது உருவாக்கப்பட வேண்டும், அதாவது நீங்கள் உருவாக்கப்பட வேண்டுமானால், உலகப்பிரகாரமான கல்வியும் அவசியம்தான். தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு, ஏன் படிப்பு, என்று சிலவேளைகளில் நீங்கள் நினைப்பீர்கள். இல்லை பிரியமானவர்களே, நீங்கள் ஒருவேளை வயது சென்றவர்களாய் இருந்தால்கூட, தபாலிலாவது மற்ற காரியங்களைப் படியுங்கள். தபால்வழி மூலம் உள்ள படிப்புகளை ஏற்று படிக்கலாம். ஏன் படிக்க கூடாது? ஏன் உழைக்க கூடாது? எதற்காக இவ்வாறு சொல்லுகிறோம் என்றால், கர்த்தர் கிருபையாய் எங்களைப் படிக்க வைத்தார், படித்ததினால் அநேக ஆங்கில வேதகம விளக்கவுரைகளைப் படிக்க முடிகிறது. மட்டுமல்ல அநேக மக்களுக்கு போதிக்க முடிகிறது. படிக்காதவர்களை நாம் குறையாகச் சொல்லவில்லை. நீங்கள் ஏன் அதற்கு முயற்சிக்க கூடாது என்பதற்காகத்தான் கூறுகிறோம்.

உலகப்பிரகாரமான கல்வி அவசியம், அனுபவம் அவசியம், அது உங்களுடைய ஊழியத்தில் பல விதங்களில் உதவியாக இருக்கும். மட்டுமல்ல. இந்த உலக அறிவு மட்டும் போதாது, ஊழியத்திற்கென அழைக்கப்பட்ட நீங்கள், ஆவிக்குரிய வரங்களை, வல்லமைகளைப் பெற்றிருக்கவேண்டிய அவசியமாய் இருக்கிறது. வெறும், சாதாரணமான உலக ஞானம் உதவி செய்யாது. நாம் செய்யப்போகிறது ஆவிக்குரிய ஊழியம், அதாவது ஆவிக்குரிய வேலையை செய்யப்போகிறீர்கள். அதற்கு ஆவிக்குரிய ரீதியிலுள்ள வல்லமை, வரங்கள் தேவனிடமிருந்து தரப்பட வேண்டியது அவசியம். இப்போது நீங்கள் மின்சாரம் சார்ந்த வேலைகளைச் செய்யப்போகிறீர்கள் என்றால், அதற்கேற்ற கருவிகள்

தேவை, மின்சாரம் வருகிறதா, என்று பார்ப்பதற்கு, டெஸ்டர் தேவைப்படுகிறது. அதை கை வைத்து பார்க்க முடியாது, இல்லையா? அதற்கான கருவிகளை வைத்து, நீங்கள் பார்க்கிறீர்கள். அதற்கு அனுபவம் தேவை, அதில் நீங்கள் படித்து பயிற்சி பெற்றால்தான் அவற்றைச் செய்ய முடியும். அதைப்போல ஆவிக்குரிய ஊழியம் அல்லது காரியங்களை செய்யவேண்டுமென்றால், அது மனித ஞானத்தினால் செய்யப்படுகிற விஷயமல்ல, அது அந்தகாரத்திற்கெதிராக, தேவ உதவியோடு செய்யப்படுகிற ஒரு யுத்தம். அதற்கு தேவ வரங்கள், வல்லமை, அதிகாரங்கள் தேவை. அதற்கு ஆவியின் அபிஷேகம் அடிப்படையாய் தேவை. அது இருந்தால், எல்லாமே வந்துவிடும். வல்லமை, வரங்கள், அதிகாரங்கள் எல்லாமே, அதோடு சேர்ந்து வந்துவிடும். ஆவியின் அபிஷேகத்திற்காக ஜெபம்செய்ய வேண்டும். பரிசுத்த ஆவியானவரை நீங்கள் வாஞ்சித்து, உபவாசித்து கேட்க வேண்டும். எனக்கு கட்டாயமாய் ஆவியின் அபிஷேகம் தாரும், உம்முடைய வல்லமை இல்லாமல், வரங்கள் இல்லாமல், அதிகாரம் இல்லாமல் என்னால் ஊழியம் செய்ய முடியாது என்று நீங்கள் விருப்பப்பட்டு, வாஞ்சையோடு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் உங்களை நிரப்புவதைப் பார்க்க முடியும். அதையும் நீங்கள் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

நீங்கள் ஒருவேளை, நான் ஊழியத்திற்கு பொருத்தமானவன் என்று நினைக்கலாம், எனக்கு பிரசங்கிக்க தெரிகிறது, எனக்கு வேதத்தை நன்றாக வாசிக்கத் தெரியும், நான் என்னுடைய அறிவினால் பேசிவிடலாம் என்றெல்லாம் நினைக்கலாம். ஆனால் தேவனால் வரம்பெற்றாலொழிய நாம் செய்கிற ஊழியம் வீணாக இருக்கும். சங்கீதம் *127:1*-ஐ வாசிக்கலாம், 'கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா' என்று அங்கே பார்க்கிறோம். நீங்கள் தேவனுடைய வீட்டைக் கட்டினாலும் சரி, உங்களுடைய சொந்த வீட்டைக் கட்டினாலும் சரி, அதை உங்களுடைய பெலத்தினால் கட்டினால், அது வீண். கர்த்தருடைய உதவியோடு, சபையை, வீட்டை கட்டுவோமாகில், அது பயனுள்ளதாக மாறும் என்றுதான் வேதவசனம் சொல்கிறது.

முதலாவது, ஆற்றல் எவ்வாறு இருக்கவேண்டுமென்றால், போதக சமர்த்தனாக இருக்கவேண்டும். Able to teach, அதாவது இது தேவனுடைய கிருபையினால் உங்களுக்கு உண்டாகவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாக உங்களுக்கு அந்த கிருபையைத் தருகிறார். அதோடுகூட நீங்கள் பிரசங்கிக்கிற கிருபையை மெருகூட்ட வேண்டியது அவசியம், அதாவது, பொதுவாக சொல்வார்கள், தேவ வார்த்தை ஒரு பொறிபோல நமக்கு கிடைக்கிறது. ஒரு சிறிய தகவலை முக்கியமான கருப்பொருளை கர்த்தர் தருகிறார். அந்த கருவைக்கொண்டு, அடுத்து நமக்கு கர்த்தர் கற்றுக்கொடுத்த சத்தியம், அனுபவம், நமக்கு கொடுத்த பாரம் எல்லாவற்றையும் அதோடு இணைத்து, அதைச் செய்தியாக நாம் உருவாக்க வேண்டும். அதில் செய்தி தயாரித்தல் போன்ற

அநேக காரியங்கள் இருக்கிறது. அதைக்குறித்து மற்ற பாடங்களிலும், இன்னும்கூட சிறப்பாக பிரசங்கிப்பது எப்படி? என்ற பாடங்கள் ஆடியோவில் நமக்குண்டு. அது வழியாகவும் உங்களுடைய திறமைகளை உருவாக்கிக்கொள்ளலாம். ஆவியானவர்தான் உங்களைக்கொண்டு பேசுகிறார். அதேவேளையில், அதன் திறமைகளை வளர்த்துக்கொள்கிற பொறுப்பை உங்கள் கையில் கொடுத்திருக்கிறார். சிறப்பாக பிரசங்கிப்பது, சிறப்பாக வார்த்தைகளைப் பயன்படுத்துவது, ஏற்ற இறக்கம், சத்தம், தொனி போன்ற பல காரியங்கள் இருக்கிறது. மேலும் போதக சமர்த்தனாக இருப்பதற்கு வேதம் மிகவும் முக்கியம், வேதத்தின் அடிப்படையில் பிரசங்கம் கற்பித்தல் செய்ய வேண்டுமென்று எபே.4:11-13 வரையுள்ள வசனங்களில் நீங்கள் பார்க்க முடியும்.

நம் பிரசங்கத்தின் மூலமாக, கற்பித்தலின் மூலமாக விசுவாசிகளை தேவனுடைய கிருபையில், விசுவாசத்தில் பெருகச்செய்ய வேண்டும். மட்டுமல்ல, அவர்கள் சீர்பொருந்த வேண்டும், பக்திவிருத்தியடைய வேண்டும். கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சிக்கு தக்க அளவுக்கு பூரணபுருஷராகும் வரையிலான ஒரு வளர்ச்சியைப் பெறவேண்டும். இதற்கு பிரசங்கமும், கற்பித்தலும் அவசியம் என்று கருதிதான், அவர் அப்போஸ்தலர்களை, தீர்க்கதரிசிகளை, சுவிசேஷகர்களை, மேய்ப்பர்களை, போதகர்களை ஏற்படுத்துகிறதாக அங்கே வாசிக்கிறோம். இன்னும்கூட 1 தீமோ.5:17-ம் வசனம் இவ்விதமாய்ச் சொல்லுகிறது, 'நன்றாய் விசாரணை செய்கிறவர்களை, விசேஷமாக திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராக எண்ணவேண்டும்' என்று இங்கே சொல்லப்படுகிறதைக் கவனித்துப் பாருங்கள். மூப்பர்கள் மேய்ப்பு பணிக்கென்று அழைக்கப்பட்டார்கள் என்று நாம் ஏற்கனவே படித்திருக்கிறோம். ஒரு மேய்ப்பன் இவ்விதமாக திருவசனத்தில், உபதேசத்தில், மற்றவர்களை வளர்க்க அவர் பிரயாசப்பட வேண்டியவராய் இருக்கிறார், பிரயாசம் எடுக்கிறார். மேலும் 1 தீமோ.3:2 என்ன சொல்லுகிறதென்றால், 'ஆகையால் கண்காணியானவன் குற்றம் சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதை உள்ளவனும், அன்னியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டும்' என்று மிகத் தெளிவாக சொல்லுகிறது. Able to teach. போதிக்க முடிந்தவராக இருக்கவேண்டும், நன்றாகப் போதிக்கிறவராக இருக்க வேண்டும், அதுதான் அர்த்தம். ஆகவே போதக சமர்த்தனாக இருக்கவேண்டுமென்று பவுல் எழுதுகிறார். ஆற்றல் இருக்கிறதா? மேய்ப்பு பணி செய்கின்றவர்களுக்கு முக்கியமான ஆற்றல், போதக சமர்த்தனாக இருப்பதுதான். நன்றாகப் பிரசங்கிக்க தெரியவேண்டும்.

உங்களுக்கு ஒருவேளை அந்த ஆற்றலைப் பெறவில்லை என்ற கவலை இருக்குமானால், ஜெபத்தோடு முயற்சி செய்யுங்கள். கர்த்தர் உங்களுக்கு நிச்சயமாய் வேத வசனத்தை வெளிப்படுத்துகிறார். வெளிப்படுத்தினதை, சொல்லத் தெரிய வேண்டும்.

அதுதான் பிரசங்கம். எல்லோரும்தான் பிரசங்கிக்கிறார்கள், ஆனால் சிலருடைய பிரசங்கம்தானே எடுபடுகிறது. காரணமென்ன? அந்த பிரசங்கம் பண்ணுவதிலுள்ள சிறப்புதான் முக்கியம். சொல்லவேண்டியதை, நயம்பட, அருமையாக சொல்லத் தெரிவதுதான் அவசியம். உங்களுடைய திறமை கேட்க வைப்பது மட்டுமல்ல, கர்த்தர் தந்திருக்கிற அந்த திறமையை நீங்கள் கூர்மையாக்கி, பயன்படுத்த வேண்டியது அவசியம். ஒரு பிரசங்கியாராய் இருக்கிறவர்தான் சிறந்த மேய்ப்பனாய் இருக்க முடியும்.

இரண்டாவது காரியம், மேய்ப்பு பணி செய்யக்கூடிய ஆற்றல் அவருக்கு இருக்கவேண்டும். *அப்.20:20-21* போன்ற வசனங்களை வாசிப்போம், 'பிரயோஜனமானவைகளில் நான் ஒன்றையும் உங்களுக்கு மறைத்து வைக்காமல், வெளியரங்கமாய் வீடுகள்தோறும் பிரசங்கம் செய்து பிரசங்கம்பண்ணி தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் நான் யூதருக்கும், கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்' என்று கூறுகிறார். பவுல் தன்னுடைய ஊழியத்தைக் குறித்து தெளிவாக கூறுகிறார், பாருங்கள். நான் எதையுமே மறைத்துவைக்கவில்லை. உங்களுக்கு எது மிகவும் தேவையானதோ. பிரயோஜனமானதோ, அதையெல்லாம் நான் மறைத்து வைக்காமல் வீடுகள்தோறும் உங்களுக்கு பிரசங்கித்தேன். தேவனிடம் மனந்திரும்புவது என்றால் என்ன? என்பதைச் சொல்லிக்கொடுத்தேன். அவரை விசுவாசிப்பதைக் குறித்து சொல்லிக் கொடுத்தேன். அதை உங்களுக்கு மட்டுமல்ல, கிரேக்கருக்கும் மற்றும் அநேகருக்கும் நான் சாட்சியாக அறிவித்திருக்கிறேன் என்று கூறுகிறார்.

மேய்ப்புபணி என்பது இதுதான். எவ்வளவு கடினமாக வீடுகள்தோறும் போய் பிரசங்கம் செய்திருக்கிறார், பாருங்கள். மட்டுமல்ல, பிரயோஜனமான எல்லாவற்றையும்கூட உபதேசம் பண்ணியிருக்கிறார். அதைப்போல *1* பேதுரு *5:2*-ம் வசனம், 'உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாயல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்துக்காகவும் அல்ல, உற்சாக மனதோடும், மேய்க்க வேண்டும். அந்த சுதந்திரத்தை நீங்கள் இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல. மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள் என்று பேதுரு எழுதுகிறார், பார்த்தீர்களா? ஆகவே, மேய்ப்பு பணி செய்யக்கூடிய ஒரு ஆற்றல், ஒரு தியாகம், விடாப்பிடியான முயற்சி, கடின உழைப்பு எல்லாம் தேவை என்று இந்த வசனங்கள் நமக்கு வலியுறுத்துகிறது. ஆக, மந்தையை மனப்பூர்வமாய் நடத்தக் கூடிய ஒரு எண்ணம் வேண்டும், அந்த மந்தையைப் போஷிக்கவேண்டும். குறிப்பாக சத்தியத்தில் போஷிக்கவேண்டும், சரீரப்பிரகாரமான தேவைகளில் உதவிசெய்யவேண்டும், சரீரப்பிரகாரமான தேவைகளில் உதவிசெய்ய வேண்டும். எல்லாமே இருக்கிறது, நீங்கள் வெறும் போதனையை மட்டும் செய்துவிட்டு, அவர்களுடைய அன்றாட வாழ்வில் எவ்வித

உதவியும் இல்லாமல் இருப்பீர்களானால், நீங்கள் உண்மையாக அவர்களிடம் அன்புகூறவில்லை என்றுதான் அர்த்தம். ஏதோவொரு விதத்தில் அவர்களுடைய தேவையை சந்திப்பதற்கு உங்களுடைய தகுதியை, படிப்பை, உங்களுடைய ஞானத்தை உங்களுக்கு கர்த்தர் தந்த அந்த காரியங்களை, உதவியாக உலகப்பிரகாரமாகவும் உதவிசெய்ய வேண்டும். தேவைகளில் உங்களுடைய பகுதி என்னவோ, அதை எடுத்துச்செய்ய வேண்டுமென்றுதான் கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆக, தியாகமான ஒரு எண்ணம், தியாகமான செயல்பாடு, மனப்பூர்வமாய் செயல்படுகிற ஒரு காரியம் என்றெல்லாம் நாம் அறியமுடிகிறது.

மேய்ப்புபணி அவலட்சணமான ஆதாயத்துக்கானதல்ல, உற்சாகமனதோடு கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறேன், என்ற எண்ணத்தோடு செய்யவேண்டிய காரியம். மந்தைக்கு மாதிரியாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது, பாருங்கள். உங்களது செயல்பாடு, நடவடிக்கைகள் எல்லாம் ஒரு மாதிரிபோல் அவர்களுக்கு இருக்க வேண்டும். எவ்வளவு பணிகள் இருக்கிறது என்று பாருங்கள். இவற்றையெல்லாம் நீங்கள் சேர்த்து செய்கிறதினால் தேவனுடைய மந்தையைப் போஷிக்கிற, ஒரு மேய்ப்புபணி செய்கிற ஆற்றல் உடையவர்களாக இருக்கிறீர்கள். பிரியமானவர்களே, மேய்ப்பு பணி செய்வதற்கான ஆற்றல்வேண்டும் என்று இதுவரை நாம் கற்று இருக்கிறோம்.

மூன்றாவதாக, நிர்வகிக்ககூடிய ஆற்றல் என்னிடத்தில் இருக்கிறதா? என்று நீங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது அவசியம். புதிய ஏற்பாட்டு தலைவர்களுடைய அடிப்படையான, முக்கியமான செயல்பாடு என்னவென்றால், கண்காணிப்பு செய்தல் ஆகும். Overseer, Supervision செய்யவேண்டிய முக்கியமான பொறுப்பு இருக்கிறது. மந்தையை நீங்கள் மேய்க்கும்போது, நீங்கள் கண்காணிப்பு செய்யவேண்டியதாக இருக்கிறது. ஒரு ஆட்டு மந்தைதான் வைத்து இருக்கிறீர்கள் என்று வையுங்கள். அதைக்குறித்து எவ்வளவு கவனமாக இருக்கவேண்டியிருக்கிறது. எந்த ஆடு பெலவீனமாய் இருக்கிறது? அதற்கு தேவையான இரை கிடைத்ததா? தண்ணீர் ஒழுங்காக அதற்கு கிடைக்கிறதா? அதற்கு தேவையான பராமரிப்பு, பாதுகாப்பு, தங்குமிடம் போன்ற எல்லாம் ஒரு ஆட்டுமந்தைக்கே தேவையாக இருக்கும்போது. ஆத்துமாக்களுக்கு எவ்வளவு தேவையாக இருக்கிறது, இல்லையா? உங்களது சபையைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும், மந்தையைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும் என்று வேதம் சொல்வதுபோல, நாம் நமது சபையைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும். அவர்களுக்கு சத்தான சத்தியத்தை நான் கொடுக்கிறேனா? இல்லாவிட்டால் மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள் என்று சொல்லுகிறேனா? அல்லது சிலர் சாபமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, விசுவாசிகளை மிரட்டுகிறார்கள், நீங்களெல்லாம், கர்த்தருடைய சத்தியத்திற்கு கீழ்ப்படியவில்லை என்றால், தசம பாகத்தை ஒழுங்காக கொடுக்கவில்லையென்றால், உங்களது தொழில் எவ்வாறு

ஆசீர்வாதமாக இருக்கும்? என்று நேரடியாக மிரட்டுகிற சில ஊழியர்களை நான் பார்த்து இருக்கிறேன். பிரியமானவர்களே, நாம் சத்தியத்தை சொல்லிக்கொடுத்தால், நிச்சயமாய் ஊழியத்தை அவர்கள் தாங்குவார்கள். ஊழியத்தை தாங்குவதற்காக, ஆத்துமாக்களை நாம் வளர்க்கவில்லை, கிறிஸ்துவில் அவர்கள் வளரவேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கம். அதைச் செய்யும்போது, கர்த்தர் உங்களது தேவைகளைச் சந்திப்பதற்கு ஆட்களை எப்படியாவது உண்டாக்குவார். ஏனெனில் எங்களது வாழ்வில், ஊழியத்தில், அதைத்தான் பார்க்கிறோம், அதைத்தான் அனுபவமாய் மக்களுக்கு போதித்து, கற்றுக்கொடுக்கிறோம். எல்லா இடத்திலும் பணத்தை எதிர்பார்த்து செய்யவில்லை.

ஊழியத்தை முதலாவது செய்கிறோம், ஊழியத்தில் இதைச் செய் என்று கர்த்தர் சொல்வாரானால், அதையெடுத்து இறங்கி செய்கிறோம், தேவையை அவர் சந்திப்பார் என்ற மாபெரும் நம்பிக்கையை தந்திருக்கிறார். உங்களுக்கு அவ்வாறான நம்பிக்கை இல்லையென்று சொல்லவில்லை, ஆனால் நீங்கள் உங்களது செயல்பாட்டில், பேச்சில் கவனமாக கையாள வேண்டியது அவசியம், அதாவது பணத்துக்காக ஊழியத்தைச் செய்யவில்லை என்பதை உங்களது செயல்பாடுகள், உங்களது பேச்சு வெளிப்படுத்த வேண்டுமென்று கூற விரும்புகிறோம். *1* பேதுரு *5:2*-ஐ வாசித்துப் பார்த்தது உங்களுக்கு நினைவிருக்கும். நீங்கள் இறுமாப்பாய் ஆளக்கூடாது என்று அந்த வசனம் சொல்லுகிறதை நீங்கள் கற்றீர்கள். இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, என்றால் என்ன அர்த்தம்? ஆளுகை இருக்கிறது என்று அர்த்தம், நிர்வாகம் இருக்கிறது, கண்காணிப்பு இருக்கிறது. ஆளுகை செய்தலை, Rule பண்ணுவது என்று சொல்கிறோம். நிர்வகிக்ககூடிய ஆற்றல் எனக்கிருக்கிறதா? *3* காரியத்தை கற்றுக்கொண்டிருக்கிறோம். *1)* போதக சமர்த்தனாக இருக்க வேண்டும். *2)* மேய்ப்பு பணி செய்யக்கூடிய ஆற்றல் வேண்டும், போஷித்தல், கற்பித்தல், மந்தையை போஷித்து காப்பாற்றுவது *3)* நிர்வகிக்கக் கூடிய ஆற்றல். உங்களின் ஆளுமைத்திறன் எப்படியிருக்கிறது? இறுமாப்பாய் ஆளக்கூடியது. அது பொதுவாக நமக்கு வந்துவிடும் என்பதினால்தான், வேதம் அவ்வாறு சொல்லுகிறது. எப்பொழுதுமே இதைச் செய்யுங்கள் என்று சொன்னால், அது நமக்கு வராது என்று அர்த்தம். களவு செய்யாதிருப்பீர்களாக, என்று சொல்லப்படுகிறது என்றால், நாம் களவு செய்ய தூண்டப்படுவோம், நமக்கு அந்த மனது இருக்கும் என்பதினால்தான் வேதம் அவ்வாறு சொல்லுகிறது, இல்லையா? அதைப்போலத்தான், இங்கே பார்க்கிறோம், இறுமாப்பாய் ஆளாதீர்கள் என்றால், சபை என்று வந்தவுடன் நமக்கு இறுமாப்பு மற்றும் பெருமை வந்துவிடும் என்று வேதம் கருதுகிறது. ஏனெனில் நமக்கு கீழே, நமது சொல்லைத் தட்டாமல் பணிபுரிகிற அநேக மக்கள் நமக்கிருக்கிறார்கள். மந்தை என்பது ஆடு போன்றதுதானே, அது அப்படியே அடிபணிகிறது, ஏனெனில் வேதமும் அடிபணியத்தான் சொல்லுகிறது, அதனால் அவர்கள் அடிபணிவார்கள். ஆனால் நீங்கள் சரியானதொரு போதகராய் இல்லாதபடி இறுமாப்பாய் ஆளுகிறவர்களாய் இருந்தால், அந்த

மந்தையை தவறாக நடத்திவிடுவீர்கள். உங்களது கையில் எல்லா அதிகாரமும் இருக்கிறதுபோல, நீங்கள் உணர்ந்து செயல்படும்போது, நீங்கள் நான்தான் பெரியவன் என்கிற மாதிரியான ஒரு எண்ணம் வந்துவிட்டால், நீங்கள் தவறாய் மந்தையை நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அதனால்தான் வேதம் தெளிவுபட நமக்கு சொல்லுகிறது, உனக்கு ஆளுகை, உன் கையில் தரப்படுகிறது. ஆத்துமாக்களை மேய்க்கிறதும், கண்டிப்பதும், திருத்துவதும், கனிகொடுக்க வைப்பதும், இவ்வாறான பல காரியங்களை உனக்கு பொறுப்பாய் தந்திருக்கிறேன், ஆகவே நீ அதை இறுமாப்பாய் ஆளுகை செய்யாதே, பெருமையோடு ஆளாதே, கண்டிப்பதற்கு உனக்கு உரிமையிருக்கிறது. ஆனால் அதே வேளையிலே, எதற்காக கண்டிக்கிறாய் என்பது மிக முக்கியம். உன் குடும்பத்திலுள்ள பிள்ளைகளை எப்படி கண்டிப்பாயோ, அதைப்போல சபையிலுள்ள மக்களையும் உன் பிள்ளையைப்போல நினைத்து, கண்டித்து உணர்த்து, திருத்து. நாம் ஆத்துமாக்களை இஷ்டம்போல நடத்துவோம். நீ சபைக்குள்ளே வராதே, போ என்று பேசுவோம். ஆனால் உன்னுடைய சொந்த பிள்ளையைப் பார்த்து நீ அவ்வாறு சொல்லுவாயா? என்று ஒரு ஊழியரைப் பார்த்து, மூத்த போதகர் ஒருவர் கேட்டார். உன் சொந்தப்பிள்ளையாக இருந்தால், நீ உடனே வெளியே போ என்று துரத்திவிடுவாயா? எவ்வளவுதூரம் கரிசனையாக, கனிவாக நடத்துகிறாய், இல்லையா? ஆம் பிரியமானவர்களே, நாம் இறுமாப்பாய் சபையை ஆளுகை செய்யாதபடி, மந்தையை இறுமாப்பாய் கட்டளை கொடுத்து, கடுமையாக, கொடுமையாக நடத்தாதபடி தாழ்ந்த சிந்தையோடு, கிறிஸ்துவின் மேலுள்ள சிந்தையோடு, ஆத்தும பாரத்தோடு, நடத்த கர்த்தர் எதிர்பார்க்கிறார். அந்த ஆற்றல் எனக்கிருக்கிறதா? இந்தியாவை ஆளுகை செய்வதற்கு, இந்தியர்களுக்கு தகுதியில்லை, போதுமான பயிற்சி இல்லை என்று சொல்லி ஆங்கிலேயர்கள் அந்த காலகட்டத்தில் சொன்னார்கள். அது உண்மைதான் என்று அநேக பிரச்சனைகள் வந்தபின்பு தான் தெரிந்தது. இப்பொழுது பரவாயில்லை, ஆனாலும் எவ்வளவு பிரச்சனை பாருங்கள். அதைப்போல, சிலருக்கு கொஞ்சம் அதிகாரம் கொடுத்துவிட்டால் போதும், அதிகாரம் உண்டாயிற்றால் போச்சு, பெருமையாக செயல்படுவார்கள். உங்களுக்கு நிர்வகிக்க கூடிய தாழ்மையான ஆற்றல் இருக்கிறதா? கொஞ்சம் யோசித்து பாருங்கள். தாழ்மையுள்ள சேவகர்களாக நாம் கண்காணிப்பு செய்ய கர்த்தர் எதிர்பார்க்கிறார். இன்னும்கூட இந்த கேள்விகளை நீங்கள் உங்களுக்குள்ளே கேட்டுப் பாருங்கள். எனது கற்பித்தல், பிரசங்கம் செய்யக்கூடிய ஆற்றல் எப்படிப்பட்டதாய் இருக்கிறது? என்று உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள்.

அடுத்து, தேவனுடைய சத்தியங்களை நான் மிகச் சரியாக விளக்கம் கொடுத்து நடத்துகிறேனா? அவ்விதமாக சத்தியங்களைப் போதிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேனா? அடுத்துவொரு கேள்வியை கேட்டுப் பார்க்கலாம், எனது தலைமைத்துவ திறமைகள்

எப்படியாக இருக்கிறது? எந்த இடத்தில் என்னுடைய திறமைகள் இல்லாமலிருக்கிறது? அதை SWOT Analysis என்று கூறுவார்கள். பொதுவாக கம்பெனிகளில் செய்வார்கள், அதாவது SWOT, அதிலுள்ள S – என்பது Strength, W – என்பது Weakness, O – என்பது Opportunity மற்றும T – என்பது Threats என்கிற அர்த்தங்களைக் கொடுக்கிறது. இந்த 4 காரியங்களையும் வைத்து நீங்கள் அடிக்கடி சோதித்து பார்க்க வேண்டும். எனக்கிருக்கிற பலம் என்ன? நான் எதில் பலவீனமாக இருக்கிறேன்? என்னுடைய ஊழியத்திற்கான தருணம் அல்லது வாய்ப்புகள் என்னென்ன இருக்கிறது? அடுத்து, என் ஊழியத்திற்கு காணப்படுகிற அபாயங்கள் என்னென்ன? என்னென்ன ஆபத்துக்கள், பயமுறுத்தல்கள், இடையூறுகள் இருக்கின்றன? இவற்றை நீங்கள் அடிக்கடியாய் உட்கார்ந்து சோதித்து எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். ஆக, நீங்கள் அதைப் புரிந்துகொண்டீர்கள் என்றால், அந்த குறிப்பிட்ட பகுதியில் கவனம் செய்து, அதை நீங்கள் முன்னேற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதில் வளர்ச்சியுறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இந்த வாய்ப்புகள் எல்லாம் எனக்கு இருக்கிறது. நான் அவற்றை பயன்படுத்தினேனா? என்று நீங்கள் சோதித்து பார்ப்பீர்களானால், அந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்த ஆரம்பிப்பீர்கள். எதிலெல்லாம் ஆபத்து இருக்கிறது? என்று நீங்கள் பார்த்தீர்களானால், அதை சரிசெய்ய பார்ப்பீர்கள். இவ்வாறெல்லாம் நீங்கள் உங்களை சோதித்து பார்த்து வளர்ச்சியடைய வேண்டியது அவசியம்.

அடுத்து, எனது மேய்ப்புபணி எப்படியாக இருக்கிறது என்று கொஞ்சம் கருத்துக்களைப்பெற வேண்டும். மக்களிடம் அதை நீங்கள் எப்படிக் கேட்பீர்களோ, கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். உங்கள் நண்பர்களிடம் கேளுங்கள். என்னுடைய மேய்ப்புபணி ஊழியம் எப்படிப்போய்க்கொண்டிருக்கிறது? உம்முடைய பார்வையில் எப்படி தெரிகிறது? என்றெல்லாம் கேட்கலாம்? அதைப்போல மக்களைக்குறித்த ஒரு பாரமான இருதயம் எனக்கு இருக்கிறதா? என்கிற உண்மையான கரிசனை இருக்கிறதா? உண்மையான கரிசனையோடுதான் என்னுடைய செயல்பாடு போய்க்கொண்டு இருக்கிறதா? என்று அடிக்கடியாய் கேள்விகளை கேட்கலாம். அடுத்து மேய்ப்பனில்லாமல், காணாமல்போன ஆடுகளைக் குறித்து எனக்கு கவலை இருக்கிறதா? அதாவது ஆத்துமபாரம் இருக்கிறதா? ஐயோ, அந்த ஆத்துமா அழிந்துபோகிறதே, எப்படியாவது, அந்த ஆத்துமாவையும், குடும்பத்தையும் கிறிஸ்துவுக்குள் கொண்டுவரவேண்டும், சபைக்குள் கொண்டுவருவதற்கு நான் எப்படி அவர்களை சந்திப்பது, அவர்களுக்காய் முயற்சிப்பது, அன்பைக் காண்பிப்பது, பழகத்தேவையான நடவடிக்கைகளை எடுப்பது போன்றவற்றில் செயல்படுகிறேனா? என்பதை உங்களை நீங்களே கேட்டுப் பாருங்கள்.

பிரியமானவர்களே, இப்படிப்பட்ட காரியங்களோடு, நீங்கள் செயல்பட்டீர்களானால் உங்களது மேய்ப்புபணி சிறப்பாக நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை. ஆக, ஆற்றல்

உள்ளதா? என்ற காரியத்தைக் குறித்து கற்றோம். அடுத்த பாடத்தில் எனக்கு வாஞ்சை, தாகம் இருக்கிறதா? என்பதை கற்றுக்கொள்வோம். ஜெபத்தோடு இந்த பாடத்தை கற்றுக் கொள்ளுங்கள். நல்ல மேய்ப்புபணி செய்கிறவர்களாக விளங்குவதற்கு உங்களுக்கு தேவன் உதவிசெய்து ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## **கேள்விகள்:-**

1) தேவன் எவ்வாறு நம்முடைய அழைப்பையும், அதற்கான ஊழியத்தையும் உறுதிப்படுத்துகிறார் என்பதனை வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
2) தேவனுடைய அழைப்பை நாம் எவ்வாறு உறுதிசெய்துகொள்ள வேண்டும் என்பதனைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
3) ஜான் மெக் ஆர்தர் என்பவர் அழைப்பைக் குறித்து, CALL என்ற ஆங்கில வார்த்தையிலிருந்து கூறும் கருத்துக்களில் ‘A’ என்பதற்கான Ability – (அழைப்பை நிறைவேற்றுவதற்கான ஆற்றல்) குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
4) அழைப்பை நிறைவேற்றுவதற்கு அவசியமான மிக முக்கியமான மூன்று ஆற்றல்கள் யாவை?
5) SWOT Analysis குறித்து சற்று விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - 5

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த பாடத்தின் தொடர்ச்சியை கற்றுக் கொள்ளப்போகிறோம், குறிப்பாக CALL என்பதின் விரிவாக்கத்தைக் குறித்த சில காரியங்களைக் கற்றுக்கொண்டு வந்தோம். கடந்த பாடத்தில் ஜான் மெக் ஆர்தர் என்ற அந்த ஊழியர் CALL என்பதை வைத்து, சில காரியங்களை நமக்கு போதித்திருக்கிறார் என்று பார்த்தோம். C – என்பதற்கு Confirmation, அதாவது உறுதிப்பாடு, இல்லாவிட்டால் தேவனால், சபையினால், உங்கள் அழைப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறதா? என்று அர்த்தம் கொள்கிறது. அடுத்து A - என்பதற்கு Ability, அதாவது இந்த ஊழியத்தைச் செய்வதற்கான ஆற்றல் உள்ளதா? என்பதைக் குறித்தும் கற்றுக்கொண்டோம்.

தொடர்ந்து, L – என்பதற்கு Longings, அதாவது வாஞ்சை மற்றும் தாகம் உள்ளதா? இந்த மேய்ப்பு பணிக்கு உங்களுக்கு வாஞ்சை மற்றும் தாகம் இருக்கிறதா? எந்தவொரு காரியமாக இருந்தாலும், அதை அடையவேண்டுமென்ற ஒரு விருப்பமிருந்தால்தான், அதை செய்ய முடியும். உதாரணமாக, ஒரு ஓட்டப்பந்தய வீரர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் தான் இறுதியில் வெற்றி பெறுகிற, அந்த முடிவை வாஞ்சித்து செயல்பட்டுக்கொண்டிருப்பார், அதற்காக அவர் பயிற்சி எடுப்பார், தன் உடலைக் கட்டுப்படுத்துவார், உணவைக் கட்டுப்படுத்துவார், பயிற்சி கடினமாக இருந்தாலும், அதைத்தொடர்ந்து செய்வார். காரணம், எப்படியாவது அதை அடையவேண்டும், வெற்றி என்ற அந்த வாஞ்சை மற்றும் தாகம்தான், அவரை தூண்டுகிறது. பிரியமானவர்களே, உங்கள் வாழ்வில்கூட, தேவனுடைய ஊழியர்களாக மேய்ப்பு பணியின் உங்கள் இருதயத்தை அப்படி வைக்கிறீர்களா? மனதார செய்யவேண்டுமென்று வாஞ்சை இருக்கிறதா? என்று சொல்லி, கொஞ்சம் முதலாவது சிந்திக்க வேண்டியது அவசியம். சிறியதொரு பொறுப்பைக் கொடுத்தால்கூட, அதில் அஜாக்கிரதையாக செயல்படக்கூடாது. மட்டுமல்ல, சின்ன பொறுப்பைக்கூட, சின்ன வேலையை, கர்த்தருக்காக செய்ய மனதில்லை என்றால், நிச்சயமாக ஊழியம் செய்ய உங்களுக்கு விருப்பமில்லை என்றுதான் அர்த்தம். எதைச் செய்தாலும், அதைக் கர்த்தருக்கென்று செய்ய வேண்டும். கர்த்தர் எனக்கு என்ன தருவார்? என்று எதிர்பார்க்க கூடாது. கர்த்தரை நம்பி, நாம் ஊழியம் செய்தால், நிச்சயம் பரலோகத்திலிருந்து எனக்கு பலன் உண்டாகும் என்ற எண்ணம், விசுவாசம் முதலாவது தேவை. ஏனெனில், வேலைக்காரன் கூலிக்கு பாத்திரவானாய் இருக்கிறான் என்றுதான் வேதம் நமக்கு உறுதிபட சொல்கிறது. ஆகவே, நீங்கள் வேலை செய்கிறதை, பரலோகம்

பார்த்துக்கொண்டிருக்கிறது. உங்களுக்குரிய கூலிக்கு அவர் உத்திரவாரம் அளிக்கிறார், மட்டுமல்ல, யாருக்கும் அவர் கடன்பட மாட்டார். நீங்கள் வேலை செய்தால், பிறகு எப்படியாயினும் அந்த கூலியை தந்துவிடுவார். கிருபை என்பது, நீங்கள் கிரியை செய்யாமலே, கர்த்தர் உங்களுக்கு தருகிற காரியம். ஆக, கர்த்தர் நமக்கு கட்டாயமாய் ஆசீர்வாதத்தை தருவார். நாம் செய்யவேண்டியதெல்லாம், ஊழியம், பிரசங்கம் செய்து, மக்களை மேய்க்கவேண்டும், சரியான வழியில் நடத்தவேண்டும், என்ற தீராத வாஞ்சையை நீங்கள் பெற்றிருந்தால், தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தில் நிலைத்திருக்க முடியும். வசனங்கள் என்ன சொல்லுகிறது? பவுல், தீமோத்தேயுவுக்கு இவ்விதமாக எழுதுகிறதை நாம் *1 தீமோ.3:1*-ல் படிக்கலாம், 'கண்காணிப்பை விரும்புகிறவன், நல்ல வேலையை விரும்புகிறான்.' இதிலுள்ள 'விரும்புகிறான்' என்ற வார்த்தையைக் கவனியுங்கள். விரும்புகிறவன் நல்ல வேலையை, சிறந்த வேலையையே விரும்புகிற வேலை இது. அநேகர் ஊழியம் செய்வதை பாடுகளாகத்தான் நினைக்கிறார்கள். சபை போதகர் என்றால், பெரிய ஆசீர்வாதமானதா? எவ்வளவோ கஷ்டப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்று கருதுகிறார்கள்.

பிரியமானவர்களே, உலகிலே கஷ்டமில்லாதது என்று ஒன்றுமே இல்லை. நீங்கள் ஒரு உலக வேலையை எடுத்துக்கொண்டாலும் சரி, ஆவிக்குரிய விதமான ஊழியமாக இருந்தாலும் சரி, பாடுகள், வேதனைகள் என்பது அநேகம் இருக்கத்தான் செய்கிறது. நீங்கள் நம்முடைய முதலமைச்சருக்கு, இல்லாவிட்டால், பிரதம மந்திரிக்கு, இல்லாவிட்டால், அமெரிக்காவின் ஜனாதிபதிக்கு, எந்தவித பிரச்சினைகளும் இல்லை என்று நினைக்கிறீர்களா? அவர்களுக்கு எவ்வித அழுத்தமும், சிக்கலும் இல்லை என்று நினைக்கிறீர்களா? ஜாலியாக அப்படியே போய்விட்டு, வருகிறார்கள், நினைத்த இடத்திற்கு போகிறார்கள், என்று ஒருவேளை நீங்கள் நினைக்கக்கூடும். இல்லை, அப்படியில்லை, ஒரு வீட்டிலுள்ள நபர்களின் பிரச்சினைகளையே சமாளிக்க நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். அவர்கள் தேசம் முழுமைக்கும் உள்ள குடும்பங்களின் பிரச்சினைகளை சமாளிக்க வேண்டும். இதில், எதிர்கட்சிகள் வேறு, ஏகப்பட்ட, விமர்சனம், குறைகள் கூறி, அவர்களுக்கு அழுத்தத்தைக் கொடுப்பார்கள், அதையும் சமாளிக்க வேண்டும், தைரியமாக முடிவு எடுக்கவேண்டும். அவர்கள் எடுக்கிற ஒரு முடிவு, தேசம் முழுமைக்கும் பாதிப்பை தரக்கூடும், இல்லாவிட்டால், ஆசீர்வாதத்தை தரக்கூடும். எவ்வளவு பயந்து, பயந்து, கவனமாக இந்த வேலையைச் செய்யலாம், இல்லையா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், சிந்தித்து பாருங்கள்.

ஆகவே, உலகத்தில் எல்லா காரியங்களிலும், ஒரு பத்து பைசா சம்பாதிக்க வேண்டுமென்றாலும், அதிலே பாடுகள் இருக்கிறது. சும்மா எதுவும் வந்துவிடாதே. இவற்றை நாங்கள் உங்களை உற்சாகப்படுத்துவதற்காகத்தான், கற்றுக்கொடுக்கிறோம், சோர்ந்து போகச்செய்வதற்காக அல்ல என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள்.

அதாவது, பாடுகள் அல்லது முயற்சி என்பது, வேலை என்பது, தியாகம் என்பது எல்லா இடங்களிலும் கண்டிப்பாக தேவைப்படுகிறது. எல்லாவற்றையும் என் சவுகரியத்திற்கு செய்வேன், என்று நாம் நினைத்தோமானால், நாம் எதையுமே சாதிக்க முடியாது. நம்முடைய சவுகரியங்கள், அநேக காரியங்களை நாம் விட்டுக்கொடுக்க வேண்டும், ஊழியத்தின் காரியமாக இருந்தாலும், உலக வேலையாக இருந்தாலும் விட்டுக்கொடுக்க வேண்டும். ஒவ்வொரு கம்பெனியிலும் எவ்வளவு நேரம் அவர்கள் வேலை செய்கிறார்கள், இந்த காலகட்டத்தை யோசித்துபாருங்களேன், சம்பளம் குறைவு, வேலை போய்விடக்கூடாது என்பதற்காக, இரவு, பகலாக, தகவல் தொழில் நுட்பத்துறை சார்ந்த வேலைகளில் எல்லாம் பார்ப்பீர்களானால், பல ஆயிரங்கள் சம்பளம் கொடுக்கிறார்கள் என்று நாம் நினைக்கிறோம், ஆனால் அதில் வேலைசெய்கிறவர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று அவர்களோடே பேசி பார்த்தால்தான் தெரியும். விடிய, விடிய வேலைகளைச் செய்கிறார்கள், நன்றாக தூங்க முடியவில்லை, அவர்களுடைய சிந்தனை எல்லாம் வறட்சியாகி விடுகிறது, என்பதுதான் உண்மை. வேறே எதைக்குறித்தும் சிந்திக்க அவர்களால் முடியவில்லை. பல ஆயிரங்கள் வந்தால் என்ன? இடர்கள் இருக்கிறது.

ஆகவே, கண்காணிப்பை விரும்புகிறவனுக்கு, விருப்பம் வேண்டும் என்று நாம் வசனத்தில் பார்க்கிறோம். அதாவது, மேய்ப்பனாக, கண்காணிப்பு செய்கிறவனாக இருக்கிற ஒருவனுக்கு பாஸ்டர் என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது என்பதை, நாம் ஏற்கனவே கற்று இருக்கிறோம். ஆகவே, இதேமாதிரி கண்காணிப்பு செய்யவேண்டுமென்று விரும்புகிறான் என்றால், நல்ல வேலையை விரும்புகிறான், அதற்கொரு வாஞ்சை இருக்கவேண்டும். மேய்ப்பனுடைய ஊழியத்தை செய்ய நீங்கள் விரும்புவீர்களானால், நீங்கள் நல்ல வேலையை வாஞ்சிக்கிறீர்கள், விரும்புகிறீர்கள். அதைப்போல, *1* பேதுரு *5:2*-ம் வசனம், ‘உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள்.’ என்று வாசிக்கிறோம், பார்த்தீர்களா? மனப்பூர்வமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறதைக் கவனியுங்கள். அப்படியென்றால், வாஞ்சித்து செய்யவேண்டும், உற்சாக மனதோடு செய்யவேண்டும். ஆக, விருப்பம் இருந்தால்தானே, உற்சாகம் இருக்கும். இவ்விதமாக தேவனுடைய பணியிலே, உங்களுக்கு வாஞ்சை, விருப்பம் வேண்டும், அவ்வாறு இருந்தால், நீங்கள் நிச்சயமாக, இந்த மேய்ப்பு பணிக்கு தகுதியான ஒரு நபர்தான், கர்த்தர் உங்களைப் பயன்படுத்துவார். நீங்கள் பதவியை அல்ல, ஊழியத்தையே வாஞ்சிக்கிறீர்கள், இறுமாப்பாய் ஆளக்கூடாது. ஆகவே, உங்கள் ஆளுகைக்கு உள்ளவர்கள் மீது நீங்கள் விருப்பமாய் செயல்படவில்லை என்றாலே, என்ன அர்த்தம் என்றால், உங்களுக்கு ஆளுகைமீது விருப்பம் இல்லை என்று அர்த்தம். ஆகவே, அதைத்தான் இங்கே சொல்கிறார், பதவி அல்ல, ஊழியமே உங்கள் வாஞ்சையாய்

இருக்கும். உங்களுடைய உள்ளான வாஞ்சை, ஒரே மனதாய், தேவனுடைய பணியை நிறைவேற்ற வேண்டும். ஆத்துமாக்களை எப்படியாவது கிறிஸ்துவண்டை சேர்க்கவேண்டும், வளர வைக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள்ளே, இதுதான் உங்களுடைய வாஞ்சையாக இருக்கும். அப்படிப்பட்ட வாஞ்சை, தாகம் உங்களுக்கு இருக்குமானால், இந்த பாடத்தைப் படிக்கிற நீங்கள் சற்று ஜெபத்தோடு சிந்தித்து பாருங்கள். அவ்வாறு இல்லையென்றால், வாஞ்சை உங்களுக்கு கொஞ்சம்தான் இருக்கிறது என்றால், அது வளர்வது, வேறு எங்கிருந்தும் வளர்ந்து விடாது, வேதம் வாசிக்க வாசிக்க, தேவன் மீது அன்பு பெருகப் பெருக, அவருடைய ஊழியத்தின் மீதும், அன்பு பெருகும், வாஞ்சை பெருகும், விருப்பம் பெருகும். ஆகவே, தேவ அன்பில் பெருக வேண்டியது அவசியம். அப்போது வாஞ்சை தானாக வரும். இயேசுவின் மீது ஒரு வாஞ்சை, விருப்பம் உண்டானால், ஊழியத்தின் மீதும், வாஞ்சையும், விருப்பமும் வந்துவிடும். நீங்கள், இயேசுவின் முகத்தைப் பார்க்க பழகுவீர்களானால், அந்த முகத்துக்காக வேலை செய்ய முயற்சி செய்வீர்கள். அவ்வாறு இல்லாமல், அவருடைய கையையே பார்க்கிறீர்கள் என்று வையுங்கள், இன்றைக்கு அநேகர் அவருடைய கையைத்தான் பார்க்கிறார்கள், எனக்கு என்ன தருவீர் ஆண்டவரே? எனக்கு வீடு தருவீரா? என்னை பெரிய பணக்காரனாக வைப்பீரா? என்று கேட்பார்கள்.

பிரியமானவர்களே, அப்படிப்பட்ட நோக்கத்திற்காக நாம் இயேசுவை தொழுதுகொள்ளக்கூடாது, அவர் தருவார், இயேசு உங்களுக்கு வீடு தரமாட்டார் என்று சொல்லவில்லை, உங்களை உயர்த்த மாட்டார் என்று சொல்லவில்லை, அது தானாகவே நடக்கும் என்றுதான் நம்முடைய போதனைகளில் எல்லாம் சொல்கிறோம். வேதத்தின் அடிப்படையிலான போதனை அதைத்தான் செய்துகொண்டிருக்கிறது. அதை விட்டுவிட்டு, முதலாவது தேவனுடைய இராஜ்ஜியம் என்ற போதனையை ஒதுக்கிவிட்டு, எதற்கெடுத்தாலும், வேத வசனத்திலிருந்து, நீங்கள் பெரிய கோடீஸ்வரனாய் மாறப்போகிறீர்கள், என்று பேசுகிற பிரசங்கங்கள்தான், இன்று முக்கியமான இடத்திலே இருக்கிறது, மக்களுடைய வரவேற்பை பெறுகிறது. அது தவறான உபதேசம்,

பிரியமானவர்களே, ஆக, நீங்கள் புரிந்துகொள்ளுங்கள், உங்களுக்கு தேவனுடைய ஊழியம்தான் முக்கியமான வாஞ்சையாக இருக்கும். அவருடைய நாமம் மகிமைப்படுகிறதைத்தான் முக்கியமான இடத்தில் நீங்கள் வைப்பீர்கள். எப்போதும், நான் அவருடைய சிலுவை சுமந்து, என் சுயத்திற்கு நான் மரித்து, தேவ நாமம் மகிமைக்காய் வாழவேண்டுமென்ற எண்ணத்தோடு வாழ்வீர்கள். அந்த வாஞ்சையும், தாகமும், வேதத்தின் மூலமாகப் பெற்று, இயேசுவின்மீது வைக்கிற அந்த வாஞ்சை வரும். அவருடைய கைகளைப் பார்க்காமல், முகத்தை நோக்கிப் பாருங்கள் என்று கற்றுக்கொண்டிருக்கிறோம். என் பிரச்சனை தீரவேண்டும், என் பாரம் தீரவேண்டும், என்பதற்காக மட்டும் நான் இயேசுவிடம் வரவில்லை. இயேசுவின் ஆத்தும பாரத்தை சுமக்க, நான் புதிய பொறுப்பான

பாரத்தை, ஏற்றுக்கொள்கிற இடத்திலிருக்கிறேன். அதுதான் சீஷத்துவம் என்று பார்க்கிறோம்.

அடுத்து, கடைசியான L – என்பதற்கு Lifestyle எப்படி இருக்கிறது? அல்லது வாழ்க்கை முறை எப்படியிருக்கிறது? உத்தமமாய் இருக்கிறதா? இப்போது, ஜான் மெக் ஆர்தர் சொன்னதில், அநேக காரியங்களைக் கூறியிருக்கிறார், நாம் CALL என்பதைப் பற்றி மாத்திரம் கற்றுக்கொண்டிருக்கிறோம். கடைசியான L – Lifestyle என்பதாகும். இது ஒரு மேய்ப்பனுக்கு உத்ததமமான வாழ்க்கை அவசியம் என்பதை குறிக்கிறது. ஏனெனில், உத்தமத்திற்கு மாதிரியாக நீங்கள் செயல்பட வேண்டும், அதற்க கர்த்தர் அழைக்கிறார். நீங்கள்தான் அதற்கு மாதிரி. உங்களைப் பார்த்துதான், அந்த மக்கள் உருவாகவேண்டும். நீங்கள் எவ்வாறு பேசுகிறீர்கள்? அவ்வாறுதான் அவர்கள் பேசுவார்கள். நீங்கள் எதை விரும்புவீர்களோ, அதைத்தான் அவர்களும் விரும்புவார்கள்? ஆக, நீங்கள்தான் அவர்களுக்கான மாதிரியாக இருக்கிறீர்கள். நீங்கள் தாறுமாறாக பேசுகிறீர்கள், கோபமான வார்த்தைகளை உபயோகிக்கிறீர்கள் என்றால், உங்களைப் பார்ப்பவர்கள், அல்லது விசுவாசிகள், பாஸ்டர் பேசுகிறது தப்பில்லைபோல இருக்கிறது, பாஸ்டரே, இப்படித்தான் பேசுகிறார், அப்போது இயேசு அவர்களை மன்னிக்கிறார், அல்லவா? நல்லாத்தானே இருக்கிறார். அவர் அவ்வாறு பேசினதினாலே ஒன்றும் குறைந்துபோகவில்லையே. அப்படியென்றால், இயேசு என்னைத் தண்டிக்க மாட்டார், நானும் அவ்வாறு பேசலாம் என்று கருதி, உங்களைத்தான் மாதிரியாக வைத்து, உங்கள் விசுவாசிகள் வளர்வார்கள். ஆக, நீங்கள் அவிசுவாசமாகவே பேசிக்கொண்டு இருந்தால், உங்களது விசுவாசியும், அவிசுவாசமாகத்தான் பேசிக்கொண்டு இருப்பார்கள். நீங்கள், அசாத்தியமான விசுவாசத்தை மட்டும் பேசிக்கொண்டு இருப்பீர்களானால், உங்களது விசுவாசிகளும் அசாத்தியமான விசுவாசத்தை பேசுவார்கள்.

ஆக, உங்கள் மாதிரித்தான், உங்களுடைய ஆடுகளும் பின்பற்றும். மந்தைக்கு மாதிரியாகவும் நீங்கள் வைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் வாழ்வு உத்தமமாய் இருக்க வேண்டியது அவசியம். உங்கள் வாழ்வின் நடவடிக்கைகளைக் குறித்து எப்பொழுதும் கவனமாக இருக்கிறீர்களா? என் பேச்சு எப்படியிருக்கிறது? நான் நேர்மறையாகப் பேசி மக்களை உற்சாகப்படுத்துகிறேனா? இல்லாவிட்டால், எதிர்மறையாகவே பேசுகிற குணங்கள் எல்லாம் எனக்கிருக்கிறதா? நிறைய விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. என்னுடைய வாழ்வு எனக்கு மட்டுமல்ல, என்னுடைய சமுதாயத்திற்குரியது, அதாவது, கிறிஸ்தவ சமுதாயத்திற்கு உரியது. என்னுடைய செயல்பாட்டினால் சிலர் ஒருவேளை உற்சாகம் அடைவார்கள், என்னுடைய தவறான செய்கையினால் அநேகர் பின்வாங்கிப்போவார்கள். இதை எப்பொழுதும் நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அதனால்தான், யாக்கோபு எழுதும்போது, தன்னுடைய

நிருபத்தில், *3:1*-ல் இவ்விதமாய் சொல்லுகின்றார், ‘என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.’ என்று கூறுகிறார். ஏன் அதிகம் ஆக்கினை வருகிறது? இரண்டாம் வசனத்தில் சொல்கிறார், நாம் எல்லோரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம். ஒருவன் சொல் தவறாதவனானால், அவன் பூரண புருஷனும், தன் சரீரம் முழுவதையும், கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாய் இருக்கிறான், என்று கூறுகிறார். உங்களுடைய தவறுதல், மற்றவர்களுக்கு தவறுதலை உண்டாக்கும். நீங்கள் சொல் தவறாதவராக இருக்கவேண்டியது அவசியம். அவ்வாறு நீங்கள் இருந்தால்தான், அதிக ஆக்கினையை அடைய மாட்டீர்கள். ஆனால், அநேகர் சொல் தவறுகிறார்கள்.

மெய்ப்பொருளாய் இருக்கிறவர்கள், தவறுகிற விஷயம், எவ்வளவு கடினம் மற்றும் எவ்வளவு பிரச்சனைக்குரியது என்று இங்கு யாக்கோபு, தன்னுடைய நிருபத்தில் எழுதுகிறார். அவ்வளவு பிரச்சனைக்குரியது, அது எதுவென்றால், நாம் ஒன்றைச் சொல்லிவிட்டு, நாளைக்கு மாற்றினால், அல்லது அவ்வாறெல்லாம் சொல்லவில்லை, என்று நேரத்திற்கு நேரம் பேசிக்கொண்டிருப்போமானால், நாம் பொய் பேசுகிறவர்களாக எண்ணப்படுவோம், அல்லது சமாளிக்கிற வார்த்தைகளைப் பேசி, ஒருமுறை வேண்டுமானால், பிரச்சனையைத் தீர்க்கலாம். ஆனால், அடுத்த முறை மக்கள் உங்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். அவர், தான் சொன்னபடி எதையுமே செய்ய மாட்டார், நன்றாக பேசுவார், அதிகமாகப் பேசுவார், செய்து முடித்து விடுகிற மாதிரி பேசுவார், கடைசி நேரத்தில் அவர் காணாமல் போய்விடுவார். ஆகவே, உங்களிடம் உத்தமம் காணப்பட வேண்டும். சொன்னதை, சொன்னபடி, நிறைவேற்றுகிற தன்மை உங்களிடத்திலே இருக்கவேண்டும். உங்களுடைய உத்தமமான வாழ்க்கை, அவ்வாறு இல்லையென்றால், மக்கள் உங்களைவிட்டு பின்வாங்கி போவார்கள். நீங்கள் வேதத்தைக்கூட கவனித்துப் பார்த்தீர்களானால், ஒரு தலைவன் என்ன செய்யவேண்டும்? என்று வேதத்திலே அதிகமாக சொல்லப்படவில்லை, அவன் எப்படி இருக்கவேண்டும்? என்பதைக் குறித்து வேதம் அதிகமாக சொல்லியிருக்கிறது என்பதை நீங்கள் வேதத்தில் பார்க்க முடியும்.

ஆக, கர்த்தர் எதை முக்கியப்படுத்துகிறார் என்பதை நாம் கவனிக்கவேண்டும், அவன் எனக்கு இதையெல்லாம் செய்யவேண்டும், அந்த வேலையைச் செய்யவேண்டும், இந்த வேலையைச் செய்யவேண்டும் என்று சொல்வதைவிட, ஐயா, நீ இப்படிப்பட்டவனாய் இரு, என்பதைத்தான் இயேசு முக்கியப்படுத்துகிறார். உங்களது வாழ்வில், நான் அதைச் சாதித்தேன், இதைச் சாதித்தேன் என்று சொல்வதைவிட, கர்த்தாவே நான் உம்மைப்போல ஒரு பரிசுத்த ஜீவியம் செய்வதற்கு முயற்சி எடுத்து, செயல்பட்டு, என்னால் இயன்றதை உமக்கென்று செய்து முடித்தேன் என்று சொல்லுகிறதை, தேவன் விரும்புகிறார். ஒரு கூட்டம் அப்படித்தான் வந்து பெருமை பாராட்டும், ஆண்டவரே, உம்முடைய நாமத்தினால்,

தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா, பேய்களைத் துரத்தினோமல்லவா, அந்த அற்புதங்களைச் செய்தோமல்லவா, என்று சொல்லுகிறவர்களைப் பார்த்து, கர்த்தர் சொல்வார்: அக்கிரமச் செய்கைக்காரர்களே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று சொல்வார். காரணம், அவர்கள் ஊழியம், கிரியை எல்லாம் செய்தார்கள். ஆனால், தேவச்சித்தப்படி வாழாத மக்களாக இருந்தார்கள். தேவனுடைய சித்தப்படி வாழ்கிறது என்றால் என்ன? வேத வசனத்தின்படி வாழ்கிற வாழ்க்கை. வேதவசனம் எதைக் கற்றுக்கொடுக்கிறது? உத்தமமான வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்கிறது. ஆக, இந்த உத்தமமான, நல்ல, நேர்மையான, நீதியான வாழ்க்கை இல்லாமல், அநேக ஊழியங்களை செய்து, அதன் மூலமாக நீங்கள், ஒரு பெரிய ஊழியத்தை, வேலையைச் செய்தவர்களாயிருந்தாலும், குணம் மாறாமல் இருந்தால், ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒரு மனிதனுடைய, அதாவது ஒரு ஊழியனுடைய அனுபவங்கள் ஏராளமாக இருக்கலாம். ஆனால், வேதம் எதிர்பார்க்கிற ஒரு அறநெறியை அவர் கொண்டவராக இருக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அவர் தலைவனாக இருப்பதற்கு தகுதியற்றவர் என்று, *1 தீமோ.4:16* கூறுகிறதை நாம் பார்க்க முடியும். ‘உன்னைக்குறித்தும், உபதேசத்தைக் குறித்தும், எச்சரிக்கையாய் இரு. இவைகளில் நிலைகொண்டு, இப்படிச்செய்வாயானால், உன்னையும், உன் உபதேசத்தை கேட்பவர்களையும், இரட்சித்துக்கொள்ளுவாய்’ என்று பவுல் எழுதுகிறார். அதாவது, நீ எதை உபதேசிக்கிறாயோ, வேதத்தின் அடிப்படையில், அதில் எச்சரிக்கையாய் இருந்து, அதில் நிலைகொண்டு, அதன்படி செய், அப்படிச் செய்யவில்லை என்றால், உன் உபதேசத்தைக் கேட்பவர்களை இரட்சித்துக்கொள்ள முடியாது. நீ மேய்க்கிற, அந்த ஆத்துமாக்களை இரட்சிப்பிற்கு கொண்டுவர முடியாது. ஆனால், நீ இவைகளைச் செய்வாயானால், உன்னையும், உபதேசத்தைக் கேட்கிற, உன்னால் மேய்க்கப்படுகிற மக்களையும், இரட்சிப்பிலே நடத்திவிடுவாய் என்றுதான், வேதம் சொல்லுகிறது, குறிப்பாக இந்த வசனம் சொல்லுகிறது.

பிரியமானவர்களே, உங்களது போதனைக்கும், உங்கள் வாழ்வுக்கும், ஒரு விசுவாசியினுடைய வாழ்க்கைக்கும் சம்பந்தம் இருக்கிறது. நீங்கள் நினைப்பீர்கள், நான் என் இஷ்டம்போல பேசுகிறேன், என்னை எதற்காக அவன் பார்க்கிறான்? கர்த்தரை பார்க்க வேண்டியதுதானே? என்று சொல்ல முடியாது. நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள் என்று பவுல் சொல்லுகிற அளவுக்கு, நீங்களும் வளர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு மேய்ப்பனாய் காணப்படவேண்டும் என்று வேதம் சொல்லுகிற உபதேசத்தை நான் உங்களுக்கு கற்றுக்கொடுக்கிறேன். ஆக, உங்களையும், உங்களது உபதேசத்தை கேட்கிறவர்களையும் இரட்சிப்புக்குள்ளே கொண்டுவரவேண்டுமென்றால், நீங்கள் இவைகளில் நிலைகொண்டு இருக்கவேண்டும். வேதத்தின்படி செய்கிறவரிடத்தில் இருக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்கின்றார். ஹென்றி மார்ட்டின் என்ற தேவ ஊழியர் இவ்விதமாகக் கூறுகிறார், ‘குணாதிசயம் இல்லாத

ஆவிக்குரிய தலைமைத்துவத்தை, ஒருவர் ஏற்று செய்வாரானால், அது வெறும் மத கிரியையாக அல்லது வெறும் கிரியையாக அல்லது அதனைவிட ஒருபடி மேலான மாய்மாலமானதாக இருக்கும் என்றும், என்னுடைய ஆத்துமாவை பரிசுத்தமாக்குகிறதே நான் பூமியில் செய்யும் முதலாவது பெரிய அலுவல்' என்றும் கூறுகின்றார். ஆகவே, ஒரு குணாதிசயம் இல்லாத, குணத்தில் மாற்றம் ஏற்படாத ஒரு தலைவன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட தலைவன் எப்படியிருப்பான்? அவன் மதச்சடங்குகளைச் செய்கிற, ஒரு மத கிரியை செய்கிற ஒரு ஊழியனாக இருப்பான். இல்லாவிட்டால், அதைவிட மோசமாகப் போய், மாயமான ஒரு மனிதனாக இருப்பான். பேசுகிறது ஒன்று, செய்கிறது ஒன்றாக இருக்கும், அது இருக்கக்கூடாது என்று ஹென்றி மார்ட்டின் கூறுகிறார். உங்களது வாழ்க்கையிலே, குணத்திலே மாற்றம் ஏற்பட முயற்சி எடுங்கள். அதற்கு முயற்சி எடுத்து, நீங்கள் மாற்றிவிட முடியாது. தேவனுடைய அன்பு, உங்கள் இருதயங்களில் ஊற்றப்பட வேண்டும், ஊற்றப்பட்டிருக்கிறதே என்று, பவுல் ரோம விசுவாசிகளுக்கு எழுதும்போது கூறுகிறதைப் பார்க்கலாம். பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய வார்த்தையைக் கொண்டு, உங்கள் சிந்தையை மாற்றிவிடுவார். உங்களுடைய வாழ்வின் நடவடிக்கைகளை மாற்றுகிற ஒரு தேவன் நமக்கிருக்கிறார். ஆகவே, அதற்கு நீங்கள் ஒப்புக்கொடுக்க வேண்டும். உத்தமமான வாழ்க்கை வாழ, ஒரு அர்ப்பணிப்பு தேவை. நம்முடைய மனது எப்பொழுதும், ஆமா, அவன் யோக்கியமா? இவன் யோக்கியமா? அந்த ஊழியர் சரியா? இவர் செய்தது சரியா? இப்படி பேசுகிற ஒரு இடத்தில் இருக்கும் என்றால், ஒருபோதும் நாம் நம்மை சரிசெய்துகொள்ள மாட்டோம். ஆனால், கர்த்தாவே, யாரு எப்படி இருந்தால் எனக்கென்ன? நான் பரலோகம் வரவேண்டும், மற்றவர்களைப் பார்த்து, பார்த்து, நான் விழுந்து போய்விடக்கூடாது. ஆகவே, என்னை தயவாய் உம்முடைய வழியில் நடத்தும், என்று அர்ப்பணிப்போடு சொல்கிறவர்கள், எப்பொழுதும், கர்த்தருக்கு உண்மையாக, உத்தமமான வாழ்வை அவர்கள் நடத்துவார்கள். அவர்களே, நல்ல மேய்ப்பனாய் இருக்க முடியும், என்று இங்கே ஜான் மெக் ஆர்தர் கூறுகிறார். ஒருபோதும் நாம் நம்மை சரிசெய்துகொள்ள மாட்டோம். நீங்கள் எப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறீர்கள்? ஒரு உத்தமமான வாழ்வு, ஒரு மாற்றம் உங்கள் வாழ்விலே இருக்கிறதா? சத்தியத்தில் அப்படியே வாழ்க்கையை கட்டி எழுப்புகிறீர்களா? கொஞ்சம் யோசித்து பாருங்கள். அதுதான் நல்ல மேய்ப்பனுக்கு அடையாளம், நல்ல விழிப்புணர்வு இருக்கிற ஒருவருக்கு, முக்கியமான தகுதியாக இருக்கிறது.

அடுத்து, மேய்ப்பனுடைய திருநிலைப்படுத்தப்படுதல்(Ordination) பற்றி சிந்திக்கப்போகிறோம். திருநிலைப்படுத்தப்படுதல்(Ordination) என்ற வார்த்தையைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம். ஊழியம் செய்ய அழைக்கப்பட்ட ஒருவரை, மீட்பு பணிக்கு Ordination செய்வதுதான் அது. போதகராக அபிஷேகம் செய்வது, இது கட்டாயம்

நடக்கவேண்டிய ஒன்று. நீங்கள் இருக்கிற இடங்களில், மக்களை மேய்க்கலாம், சத்தியத்தில் நடத்தலாம், போதிக்கலாம், ஆலோசனை கொடுக்கலாம், எல்லாமே செய்யலாம். அநேகர் அப்படிப்பட்ட ஊழியத்தைச் செய்தாலும், சபைக்கு இந்த திருநிலைப்படுத்தப்பட்ட ஒருவர் அல்லது போதகர் அவசியம் தேவை. மேய்ப்பர் Ordination செய்துவைக்கப்பட வேண்டியது அவசியம். ஆகவே, நீங்கள் மேய்ப்பனாக உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம். இந்த திருநிலைப்படுத்தலை நாமே கொடுக்கிறோம், அதற்கான பயிற்சி கொடுக்கிறோம். அந்த பயிற்சி குறைந்தது ஆறு மாதத்திற்கான பயிற்சியாக இருக்கிறது. இதற்கான பாடங்களை அவர்களுக்கு கற்று கொடுக்கிறோம். இந்த ஆறு மாத பயிற்சியை பெற்ற பின்பதாக, அவர்களுக்கு உரிமம் பெற்ற ஊழியர் (Licence Minister) என்பதற்கான சான்றிதழையும் கொடுக்கிறோம். அதற்கு அவர்கள் விரும்பி விண்ணப்பிக்கும்போது, நாம் Ordinaton-ஐ முதலாவது கொடுக்கிறோம். அதற்கு பின்பதாக B.Th., படிப்பதற்கு உற்சாகப்படுத்துகிறோம். அதைப் படித்து முடித்த பிறகு, அவர்களுக்கு போதகர், மேய்ப்பர், சுவிசேஷகர், மற்றும் குருத்துவ அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் போன்றவற்றை, தேவனிடத்திலிருந்து பெற்ற அழைப்பிற்கு இணங்க, அவருடைய தகுதி, அனுபவம், மற்றும் அவர்களின் சாட்சி, ஆகியவற்றின் அடிப்படையிலும், நாம் இவ்விதமாக திருநிலைப்படுத்தலை செய்கின்றோம். இந்த ordination கொடுக்கிறோம், இது மிகவும் முக்கியம். ஏனெனில், அவர்கள் இந்த பயிற்சியைப் பெற்று, ordination-ஐ பெற்று, சபையை ஆரம்பிக்கலாம். இல்லாவிட்டால, சில சபைகளில் ஊழியம் செய்ய விண்ணப்பித்து, அங்கே தியாகமான போதகர்களாய், செயலாற்ற முடியும் என்பதைப்பொறுத்து, அதற்கான எல்லா காரியங்களையும், சான்றிதழ்களையும் நாங்கள் ஏற்பாடு செய்து கொடுக்கிறோம். அவர் 30 வயது நிரம்பினவராக இருக்க வேண்டும். இதே காரியத்தைத்தான் கி.பி.314-ல் சிசேரியாவில் கூடிய திருச்சபை கவுன்சில் தீர்மானம் எடுத்து நிறைவேற்றியது. அதாவது, திருநிலைப்படுத்தப்பட வேண்டிய வயது 30-ஆக இருக்கவேண்டுமென்று அந்த கவுன்சில் நிர்ணயித்தது.

அந்த மேய்ப்பன் தன்னுடைய உள்ளான அழைப்பு குறித்து, தெளிவான உணர்வு உடையவராக இருக்கவேண்டும். அதாவது தனிப்பட்ட முறையில் தேவனோடு, தன்னுடைய அழைப்பை, அவர் உறுதிசெய்து கொண்டவராக இருக்கவேண்டும். தனிப்பட்ட வரங்களைப் பற்றியதொரு அறிவு, அவருக்கு இருக்க வேண்டும். நான் என்ன வரங்களை உடையவனாக இருக்கிறேன்? எனக்கிருக்கிற வல்லமை என்ன? வரங்கள் என்ன? தேவன் எனக்கு என்னென்ன காரியத்தை செய்திருக்கிறார், தந்திருக்கிறார்? என்பதை அவர் கண்டுபிடித்து வைத்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் அதற்கேற்றபடி அவர் செயல்படுவார். ஆகவே, தனிப்பட்ட வரங்கள், நல்ல ஆரோக்கியம் வேண்டும். குணாதிசயத்திலே மாற்றம், அதாவது வேத வசனத்தின் அடிப்படையிலான ஒரு

குணாதிசயம் இருக்க வேண்டும். பிரசங்கிக்கக்கூடிய, வேதத்தைக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஆற்றல், அவருக்கு அவசியம், மட்டுமல்ல, கல்வி அறிவும் ஓரளவிற்கு தேவை. ஓரளவாவது இருக்க வேண்டும். பெரிய பட்டம் என்றெல்லாம் தேவையில்லை, ஆனால் கொஞ்சமாவது கல்வித்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். அதைக்கொண்டு, வேதாகம கல்லூரி பட்டப்படிப்பையாவது படிக்கலாமே. அதைத்தான் உங்களுக்கு வீடு தேடி கொண்டுவந்து, தந்து கொண்டிருக்கிறோமே. எந்த படிப்பையும் பார்க்காமல் நல்ல ஊழியம் செய்கிற ஊழியருக்கு 8-ம் வகுப்பு படித்தால் கூட, சரி வாருங்கள், B.Th., படியுங்கள் என்று கருதி, அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறோம், ஏன்? அப்படியாவது, அவர்கள் தேறினவர்களாக, தேவனுடைய ஊழியத்தை சிறப்பாக செய்யட்டும் என்பதுதான் அதனுடைய நோக்கம்.

பிரியமானவர்களே, இவ்விதமாக, திருநிலைப்படுத்தப்பட அவர் ஆயத்தப்படுகிறார். அதற்குப்பின்பு, சபையானது திருநிலைப்படுத்துகிறது. இல்லாவிட்டால், எங்களைப்போன்ற இயங்கங்கள் திருநிலைப்படுத்துகிறது. இது மற்ற பொதுவான ஊழியங்களிலிருந்து இந்த திருநிலைப்படுத்தப்பட்ட ஊழியருடைய ஊழியம் வேறுபட்டதாய் இருக்கிறது. ஆராய்ந்து செய்கிற இவருடைய ஊழியம் வேறுவிதமாக இருக்கும். அதனால்தான் ordination-ஐ பெறுங்கள் என்று சொல்லுகிறோம். ஏனெனில் அதற்கான பயிற்சியெல்லாம் கொடுக்கிறோமே, இதை யார்? உங்களுக்கு சொல்லித்தருகிறார்கள், கொஞ்சம் யோசித்துப் பாருங்களேன், நாங்கதான் செய்கிறோம் என்று பெருமைபாராட்டுவதற்காக சொல்லவில்லை. அநேக வேதாகம கல்லூரிகளில் பட்டத்தைக் கொடுக்கிறார்கள். ஆனால், இந்த ஊழியத்தை சொல்லிக் கொடுக்கிறதில்லை, தேவன் கொடுத்த பாரத்தினால் நாங்கள் இதைச் செய்கிறோம், அவ்வளவுதான். அப்படி சரியான பயிற்சி பெற்று, வேதத்தை எப்படி உபதேசிக்க வேண்டும்? என்று சொல்லிக்கொடுக்கிறோம். தலைமைத்துவம் எப்படியிருக்க வேண்டும்? எப்படி சுவிசேஷ ஊழியம் செய்யவேண்டும்? என்பதுபோன்ற பல காரியங்களை கற்றுக்கொடுத்து, அதற்குப் பிறகு திருநிலைப்படுத்தி, அவர்களை ஊழியத்தில் ஏற்படுத்துவது பாக்கியமான அனுபவம். ஜெபித்து, அபிஷேகித்து அவர்களை திருநிலைப்படுத்துகிறோம், இதுவொரு ஆசீர்வாதமான விஷயம், அவருடைய ஊழியம் நிச்சயமாய் விசேஷமானதாக இருக்கும் என்பதிலே சந்தேகமில்லை. இதைக்குறித்து நாம் இன்னும் விளக்கமாக கற்றுக்கொள்வோம். அதாவது, திருநிலைப்படுத்தப்படல், எவ்விதமாய் நடைபெறவேண்டும்? அது எந்த விதத்தில் ஆசீர்வாதமான காரியமாக இருக்கிறது? என்றெல்லாம் இன்று தொடர்ந்து படிக்க இருக்கிறோம்.

அதற்கு முன்பு, நாம் ஏற்கனவே பார்த்ததுபோல, மேய்ப்பனின் ஊழியத்திற்கு நீங்கள் அழைக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்யவேண்டியது அவசியம். அதற்கு CALL என்ற வார்த்தைக்கு மெக் ஆர்தர் சொன்ன, விளக்கங்களைக் கொண்டு, உங்களுடைய அழைப்பை

உறுதிசெய்து கொள்ளலாம் என்று பார்த்தோம். ஆக, ஊழியத்திற்கு ஆயத்தப்பட வேண்டும், அழைக்கப்பட்டதை உறுதிசெய்து விட்டோம். அழைக்கப்பட்டதை உறுதிசெய்யும் முன்னர், ஆயத்தம் என்பது ஆங்காங்கே நடைபெற்றிருக்கும், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் குறிப்பிட்ட பணியை, குறிப்பிட்ட ஊழியத்தை கர்த்தர் தந்திருக்கிறார் என்று அறிந்தபிறகு, அதற்காக விசேஷமாக நாம் ஆயத்தப்பட முடியும். பொதுவாக நீங்கள் ஊழியத்திற்கு ஆயத்தப்படுவதற்கும், குறிப்பிட்ட ஊழியத்திற்கு ஆயத்தப்படுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. உதாரணமாக, சிலர் வேலைக்காக முயற்சி செய்வார்கள். பொதுவாக, ஒரு அரசாங்க வேலைக்கு செல்ல விரும்புபவர்கள், செய்தித்தாளில் வருகிற பொது அறிவிப்புத்தளங்களையும் படிப்பார்கள். ஆனால், ஒரு குறிப்பிட்ட ஒரு வேலைக்கென்று அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பு வரும்பொழுது, இல்லாவிட்டால் அதற்கென பரீட்சை எழுதும்போது, அதற்கான புத்தகங்களை தெளிவாக படித்து ஆயத்தப்படுவார்கள். உதாரணமாக, IAS எழுதுவதற்கு ஒருவர் முற்படுகிறார் என்றால், அது சம்பந்தப்பட்ட அனைத்து புத்தகங்களையும் வாசித்து, இப்படிப்பட்ட கேள்விகள் வரும். இப்படிப்பட்ட பரீட்சை எதிர்பார்ப்புகள், நேர்காணல் எல்லாம் இருக்கும் என்று சொல்லி, அதற்கென விசேஷித்த பயிற்சி மேற்கொள்வார்கள், இல்லையா? அதைப்போல, பொதுவாக தேவனுடைய ஊழியத்திற்கு, நீங்கள் ஒருவேளை இதுவரை அழைக்கப்பட்டதை உறுதிசெய்யும் முன்னர், நீங்கள் ஆயத்தப்பட்டிருப்பீர்கள். வேதம் வாசித்து, ஜெபித்து பரிசுத்த வாழ்வு வாழ்ந்து, கர்த்தருடைய முகத்தை தேடி கர்த்தருக்காக வாழ்வதற்காக உங்களை அர்ப்பணித்திருப்பது நடந்திருக்கும். எப்படியாவது, கர்த்தருக்காக வாழவேண்டும் என்று, ஒரு தியாகமான வாழ்வுக்கு முடிவு செய்திருப்பீர்கள், ஆயத்தங்கள் நடைபெற்றிருக்கும். ஆனால், இப்பொழுது உங்கள் அழைப்பை உறுதிசெய்து விட்டீர்கள்.

எனக்கு மேய்ப்பு பணிதான், இந்த ஊழியம்தான் என்று உறுதி செய்து விட்டீர்கள். எனவே அதற்கென ஆயத்தப்பட வேண்டிய சில காரியங்கள் உண்டு. அதைக்குறித்து நாம் சற்று கற்கப்போகிறோம். மிகவும் முக்கியமான காரியங்களை மட்டும் பார்ப்போம். **முதலாவது அதிகமாக வாசிக்க வேண்டும்**. இந்தவொரு ஆயத்தம் நமக்கு தேவை, தேவ மீட்பு பணிக்கு நாம் செல்ல வேண்டும். ஆக, இப்பொழுது வேதத்தை வாசித்தால் மட்டும் போதாது, மிக அதிகமான ஆவிக்குரிய புத்தகங்களை வாசிக்க வேண்டியது அவசியம். அதிலே மிக கவனமாக, தரமான புத்தகங்களை வாசிக்க பழக வேண்டும். பெரும்பாலும் தரமான புத்தகங்கள், ஆங்கிலத்தில்தான் இருக்கிறது, இலவசமாகவும் கிடைக்கிறது. ஆக, அதற்கு நீங்கள் உங்கள் ஆங்கில அறிவை பெருக்கிக்கொள்ள வேண்டியது அவசியம். ஊழியத்திற்கு வந்தாச்சு, இனிமேல் படிப்பு எதற்கு? நீங்கள் ஒருவேளை இவ்வாறு நினைக்கலாம். இல்லை, பிரியமானவர்களே, நாம் ஒரு சிறந்த பணியை செய்யப்போகிறோம், மிகச்சிறந்த பணியை, கர்த்தர் உங்களை நம்பித்தருகிறார்.

மிகச்சிறந்த விதத்தில், கொடுப்பதற்கு அதிகமாய் கற்று இருக்கவேண்டும், அதிகமாய் படிக்கவேண்டும், ஆங்கிலம் ஏன் படிக்க இயலாது, படிக்க இயலும், என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே, எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்று அறிக்கையிட்டு கேட்டு, அவ்வாறு சொல்லுகிறது மாத்திரமல்ல, முயற்சித்துப் பாருங்கள். உங்களால் ஆங்கிலம் படிக்க இயலும், பேச இயலும், முயற்சி செய்யுங்கள். அதற்கென பல பயிற்சிகளை எடுங்கள். எதையுமே பயிற்சி செய்யாமல், முயற்சி செய்யாமல், நாம் சாதிக்க முடியாது. தினமும் 25 வார்த்தை, ஆங்கில வார்த்தைகளை மனப்பாடம் செய்யுங்கள். ஆங்கில பத்திரிக்கை, ஆங்கில டிவி செய்திகள், இல்லாவிட்டால் ரேடியோவில் கேளுங்கள், நிறைய தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள். ஆங்கிலத்தோடு, அதைக்கொண்டு, online உங்களுக்கு கையில் இருக்கிறது. வலைதளங்களில் போய் நிறைய பிரசங்கங்கள், புத்தகங்கள், வேதாகம விளக்கப் புத்தகங்கள், அகராதி எல்லாமே இலவசமாக இருக்கிறது, நிறைய படிக்கவேண்டும். ஆனால் தேவனுடைய ஊழியத்தை சிறந்ததாக மதிக்காமல், இருக்கிறது போதும், படித்தது போதும், ஆவியானவர் திரும்ப நம்மைக் கொண்டு பேசுவார் என்றெல்லாம் நினைக்காதீர்கள்.

பிரியமானவர்களே, உங்கள் வாழ்விலே நீங்கள் சிறந்த விதமாய் பயிலும்போது, ஆவியானவர் இன்னும் வல்லமையாய் பயன்படுத்துகிறதை, நீங்கள் பார்க்க முடியும். உங்களுடைய சுயபலத்தை சார்ந்து வாழ சொல்லவில்லை. ஆனால், நமக்கு என்று தாலந்துகளை பிறகு எதற்கு தேவன் தருகிறார், கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். எல்லாமே அவரே பேசி, எல்லாமே அவரே செய்வார் என்றால், உங்களிடம் ஒரு காரியமும், ஒரு பலனும், ஒரு தாலந்தையும் அவர் கொடுத்திருக்க மாட்டாரே, படிக்கிற அறிவு, சிந்திக்கிற அறிவு, செயல்படுகிற அறிவு, எல்லாம் நமக்கு எதற்கு தந்திருக்கிறார்? நமக்கு ஒரு பொறி போன்றதொரு சிறிய காரியத்தை, ஒரு வெளிப்பாட்டை கொடுத்த பிறகு, அதை நீங்கள் முன்னேற்றம் செய்து, அந்த கருத்தை, வேதத்தின் அடிப்படையிலே, உங்கள் ஞானத்தோடு தேவன் தந்த வெளிப்பாட்டோடு இணைத்து, அதை பெரிய செய்தியாய் மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்றுதான் தாலந்துகள் கொடுத்திருக்கிறார். ஆக, இந்த தாலந்துகளை நீங்கள் பயன்படுத்துவதற்கு, எல்லாமே ஆவியானவர் செய்வார் என்று நினைத்து, படிக்கவும், முயற்சிக்கவும் இல்லாமலிருந்தால், சும்மா இருந்தீர்களானால், அதற்கு என்ன அர்த்தம்? அது நம்முடைய சோம்பேறித்தனத்தையே காட்டுகிறது. இதை குறைகூறுவதற்காக கூறவில்லை. இன்று அநேகர் தங்களை சோம்பேறிகளாய் மாற்றிவிட்டார்கள். இல்லாவிட்டால், சோம்பேறியாய் இருப்பதைவிட, சுறுசுறுப்பாக கூட இருப்பார்கள், ஆனால், அவர்கள் வேற வழியில் சுறுசுறுப்பாக இருப்பார்கள். முழு நேரமும் ஊழியம், ஊழியம் செய்ய சுறுசுறுப்பாக இருப்பார்கள். ஆனால், கற்றுக்கொள்ள ஆயத்தப்பட மாட்டார்கள், வேதாகமக கல்லூரியில் படிப்பதற்கு விரும்பமாட்டார்கள், வேதத்தைப் பற்றி எழுதப்பட்டிருக்கிற இறையியில் புத்தகங்கள், அநேக அருமையான

புத்தகங்களை படிக்காமல், வேதம் மட்டும் போதும், என்று நினைத்து, வேதத்தையும் எப்பொழுதாவது வாசித்துக்கொண்டு, ஊழியம் செய்கிற மக்களை நாம் பார்க்கிறோம்.

பிரியமானவர்களே, நாம் ஊழியத்திற்கு ஆயத்தப்பட வேண்டும், அதற்கு நீங்கள் அதிகமாக வாசிக்க வேண்டும். அதிகமான இறையியல் புத்தகங்கள் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது, தமிழிலும் இருக்கிறது, அதிகமாக வர ஆரம்பித்திருக்கிறது. வாழ்வியல் வேதாகமம் போன்ற சில புத்தகங்கள், மிகவும் குறைந்தளவிலே கிடைக்கிறது. அதைக்குறித்த தகவலை, நாங்கள் தர தயாராக இருக்கிறோம். ஆக, நீங்கள் நிறைய படிக்கவேண்டும், குறிப்பாக உங்களுக்கு விருப்பமான புத்தகங்களையே படிப்பதைக் காட்டிலும், கொஞ்சம் உங்களுக்கு பிடிக்காத புத்தகங்களையும் படிக்கவேண்டும். அதாவது, ஆவிக்குரிய புத்தகங்களில், சில காரியங்களைப் பார்த்தீர்களானால், நீங்கள் எதிர்பார்க்கிற மாதிரியில்லாமல், வேற மாதிரி எழுதியிருப்பார்கள். ஆனால், அது ஏன்? எதற்கு? எப்படி? என்று கொஞ்சம் சிந்தித்து, நீங்கள் படிக்கவேண்டுமென்று கர்த்தர் அழைக்கிறார். அப்போதுதான் உங்களுக்கு தெரியும், இப்படியும் தவறான கருத்துக்கள் உலகில் இருக்கிறது என்பதை கண்டுபிடிக்க முடியும். அதாவது, எந்தவொரு காரியமாயினும், அதில் ஒன்றை கற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது. அதாவது, ஒருவரிடம் நீங்கள் பழகுகிறீர்கள் என்றால், அவர் அதிகமாகப் பேசுகிறவராய், நன்றாக உங்களை சோர்வடையச்செய்கிற ஒருவராக இருக்கிறார் என்று அவரைப்பற்றி நினைக்கிறீர்கள் என்று வையுங்கள். அவரிடம் அதற்காக பேசாமல் விட்டுவிடக்கூடாது, அவர் பேசும்போது, நீங்கள் அவரிடம் கற்றுக் கொள்ளவேண்டும், எப்படி அறுக்கக்கூடாது? அதாவது சலிப்பு தட்டுகிற மாதிரி பேசக்கூடாது என்று நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஆக, யாரிடம் பேசினாலும், யாரிடம் பழகினாலும், எந்த புத்தகத்தை படித்தாலும், அதிலே நிச்சயமாய் ஒரு காரியம் நமக்கு பிரயோஜனம் இருக்கிறது என்ற விதத்திலே படியுங்கள். இப்போது, இதில் சுருக்கமாக சொல்ல விரும்புகிற விஷயம் என்னவென்றால், அதிகமாகப் படியுங்கள், அதிகமாகப் படித்து, உங்களுக்கு போதுமான அளவு, வேத ஞானம், வேதத்தை சுற்றியுள்ள விளக்க ஞானமெல்லாம் இருந்தால்தான், நீங்கள் பேச ஆரம்பித்தவுடன், அதிக கருத்துக்களை உங்களால் கொடுக்க முடியும். உங்களது பிரசங்கம் அப்போது மக்களுக்கு மிகவும் சுவையானதாக இருக்கும். எங்களது போதகர் பேச ஆரம்பித்தால் போதும், அவ்வளவு ஆழமாக பேசுவார், அவ்வளவு வேத வசனங்களை, அவ்வளவு விளக்கங்களை சுட்டிக்காட்டி பேசுவார் என்கிற இடத்தை நீங்கள் பெற்றால்தான், நீங்கள் நல்ல மேய்ப்பனாக விளங்க முடியும். ஏதோ கடமைக்காக, ஏதோ ஒரு பிரசங்கத்தை, போரடிக்கிற மாதிரியான, மக்கள் தூங்குகிற அளவுக்கு பிரசங்கிக்கிற ஒரு இடத்தில் நீங்கள் இருப்பீர்களானால், உங்களது சபையில் எப்படி வளர்ச்சி உண்டாக முடியும்? என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஆகவே, ஆயத்தப்படவேண்டும். கர்த்தர் உங்களை அந்த ஊழியத்திற்கு கொண்டுபோகும் முன்னர், ஆயத்தப்பட வேண்டும். அங்கே சென்ற பிறகு, ஊழியத்தை

ஆரம்பித்த பிறகு, நீங்கள் ஆயத்தப்பட்டீர்களானால், காலம் வீணாய்ப் போய்விடும். அநேக ஆண்டுகள், உங்கள் ஊழியத்திலே வளர்ச்சி பெறுவதற்கு ஆகிவிடும். ஆகவே உங்கள் ஊழியத்தை உறுதிப்படுத்தியவுடன் அந்த குறிப்பிட்ட ஊழியத்தை ஆயத்தப்படுத்த ஆரம்பித்துவிட வேண்டும். அதற்கு அதிக புத்தகங்களைப் படியுங்கள். ஆவிக்குரிய புத்தகங்கள், இறையியல் புத்தகங்கள், விளக்கவுரை புத்தகங்கள், அகராதிகள், NKJV திறந்த வேதாகமம் போன்றவற்றை படியுங்கள். இவ்வாறான நிறைய புத்தகங்கள் இருக்கிறது. அவற்றையெல்லாம் நீங்கள் படிக்கும்போது, உங்கள் வேத அறிவும் பெருகும், வேதத்தை அணுகுகிற விதமும் பெருகும். திரும்பவும் நீங்கள் வேதத்தை வாசிக்கும்போது, அந்த ஆசிரியர் போலவே வேதத்தை அணுகுகிற ஒரு முறை, உங்களுக்கு தானாகவே வந்துவிடும். ஆகவே, புதிய கோணத்திலே நீங்கள் வேதத்தை ஆழமாக சரியாக படித்து, புரிந்து மக்களுக்கு போதிப்பீர்கள். ஆகவே அதிகம் வாசிக்க வேண்டுமென்று முடிவுசெய்து, வாசிக்க ஆரம்பியுங்கள்.

அடுத்து, இன்னொரு காரியத்தை நீங்கள் ஊழியத்திற்கு ஆயத்தமாய் செய்ய வேண்டும். பேசுவதற்கும், எழுதுவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். எந்த ஒரு ஊழியர் பேசுவதிலும், எழுதுவதிலும் திறமையாக காணப்படுகிறாரோ, அவர் தன்னுடைய ஊழியத்தில் மேன்மையான இடத்திற்கு வருவார் என்பதிலே, எந்த விதத்திலும் சந்தேகமேயில்லை. இன்று ஊழியத்திலே முக்கியமான இடத்திலே இருக்கிறவர்களைப் பாருங்கள். நான்றாக பேசுகிறவர்கள், தைரியமாக பேசுகிறவர்கள், தங்களுடைய கருத்துக்களை அழமாக, சரியானபடி எடுத்துரைக்கிறவர்கள், பலர் சிறப்பாக எழுதுகிறவர்கள், முக்கிய இடத்தில் இருக்கிறார்கள். அவ்வாறு இல்லாமல் இருப்பீர்களனால், நீங்களே உங்களை கீழே தாழ்த்தி விட்டு விடுவீர்கள். பேச ப் பயப்படுகிறீர்கள், எழுதுவதற்கு பயப்படுகிறீர்கள், மக்களுக்கு சொல்வதற்கு யோசிக்கிறீர்கள், இவ்வாறு தெளிவுபட ஒரு கருத்தை உங்களுக்கு சொல்ல தெரியவில்லை என்றால், உங்களை நீங்களே கீழே தள்ளிவிடுகிறீர்கள் என்றுதான் அர்த்தம். அதைத்தான், திருவள்ளுவர் கூறும்போது, ஒருவன் என்னதான் கற்றிருந்தாலும், தான் கற்றதைச் சொல்ல தெரியவில்லை என்றால், விளக்கம் செய்ய தெரியவில்லை என்றால், அவன் படித்து என்ன பயன்? என்று கேட்கிறதை நீங்கள் வாசித்து பார்த்திருப்பீர்கள். நிறைய படித்திருக்கலாம், ஆனால் அதை மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்ல முடியவில்லை என்றால், படித்தது எல்லாமே வீண்தான். சிலரைப் பார்த்தீர்களானால், படித்து, அதில் முன்னேற்றமான இடத்தில் இருப்பார்கள், ஆனால், பேசத் தெரியாது, தாங்கள் படித்த கருத்தை சொல்ல தெரியாது. அந்த மாதிரியான பிரச்சனை ஊழியர்களான உங்களுக்கு இருக்ககூடாது. வேதத்தை எந்தளவுக்கு உங்களுக்கு ஆழமாக படிக்கத்தெரிகிறதோ, அந்தளவுக்கு ஆழமாக விளக்கவும் தெரியவேண்டும். நீங்கள் சொல்கிறது ஒன்றுமே புரியவில்லை, எங்கள் போதகர் நல்ல கருத்து சொல்கிறார், ஆனால் எங்களுக்கு எதுவும் சரியாக புரியவில்லை

என்று அவர்கள் சொல்வார்களானால், என்ன பிரயோஜனம்? மீட்பு பணிக்கு போகும் முன்னர், பேசி பழகவேண்டும். அதற்கு முதலில் சின்ன வகுப்பு பிள்ளைகளுக்கு, ஞாயிறு பள்ளி பிள்ளைகளுக்கு கூட, நீங்கள் சிறிய அளவில் ஊழியத்தை எடுத்து பழகலாம். ஏன் அவ்வாறு சொல்கிறோம் என்றால், அந்த பிள்ளைகளுடைய மனது, மற்றும் மூளை அறிவின் நிலை, மிகவும் குறைந்த நிலையாக இருப்பதினால், நீங்கள் பேசுகிறது, அவர்களுக்கு புரிந்துகொள்வதற்காக, நீங்கள் இறங்கி வந்து ஆகவேண்டும். ஆக, இறங்கிவந்து, அவர்களுக்கு புரியவைப்பதற்காக, ஒரு பெரிய கருத்தை சொல்லுவதற்கு, நீங்கள் முயற்சி எடுப்பீர்கள். அப்படியே அந்த பயிற்சியை எடுக்க, எடுக்க, உங்களுடைய விசுவாசிகளோடும், அந்தளவுக்கு, அவர்களின் நிலைக்கு இறங்கி வந்து பேசி, உங்களுடைய கருத்தை சொல்ல, உங்களுக்கு தெரிய ஆரம்பிக்கும். ஏன் அவ்வாறாக சொல்கிறோம்? நமக்கு வேதம் நன்றாக தெரியும், ஆனால், புதிதாய் வந்த விசுவாசிகளுக்கு அந்தளவுக்கு சத்தியத்தை ஆழமாக விளக்கவும் தெரியவேண்டும். நீங்கள் சொல்லுகிறது எதுவுமே புரியவில்லையென்றால், சத்தியத்தைக் கற்றுக்கொள்வதற்கு, கொஞ்சம் கடினமான விஷயமாகத்தான் இருக்கும். சபையைப் பொறுத்தமட்டில், ஒரு கருத்தை நீங்கள் நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும், அதாவது. சபையிலே மூத்த விசுவாசிகளும் இருப்பார்கள், கொஞ்சம் வளர்ந்த விசுவாசிகளும் இருப்பார்கள், அர்ப்பணித்த விசுவாசிகளும், அர்ப்பணிக்காத, புதிதாக வந்தவர்களும் இருப்பார்கள். நீங்கள் நேற்று சுவிசேஷம் சொல்லி, இன்றைக்கு சபைக்கு வந்தவர்களும் இருப்பார்கள். ஆகவே, இப்படியான பலதரப்பட்ட மக்கள் இருப்பதனால், நீங்கள் எல்லோரையும் இணைத்துதான் பேசவேண்டும். அவர்களுக்கு புரிய வேண்டும். பழைய, முதிர்ச்சியான விசுவாசிகளுக்கும், ஆழமாகவும் பேசவேண்டும். நேற்று சுவிசேஷம் அறிவிக்க, அதைக் கேட்டவர்களும் சபைக்கு வந்திருப்பார்கள், அவர்களுக்கும் புரியவேண்டும். நடுநிலையில் இருக்கிற மக்களுக்கும், உங்களுடைய சத்தியம், நீங்கள் பிரசங்கிக்கிற பிரசங்கம் புரியவேண்டும். ஆக, எல்லாவற்றையும் கணக்கிட்டு, நீங்கள் பேசவேண்டும். உங்களுக்கு பேசத்தெரிந்திருக்க வேண்டும், கடினமாகவும் பேசிவிடக் கூடாது. அதேவேளையில், மிகவும் இறங்கி வந்து பேசவேண்டும், அதற்காக இவர் என்ன இவ்வாறு பயப்படுகிறார்? என்று சொல்கிற இடத்திலேயும் இருக்ககூடாது. அன்பு என்று வேதம் சொல்கிற கருத்தின் அடிப்படையிலே, நாம் இருக்கவேண்டும். ஆனால், அதே வேளையிலே, ஏமாளியாகவும் இருக்க கூடாது. ஆக, எவ்வளவு கரிசனையான ஒரு கூட்டமாக, நாம் காணப்பட வேண்டியிருக்கிறது பாருங்கள். விவேகமாகவும் இருக்கவேண்டும், கபடற்றவர்களாகவும் இருக்கவேண்டும். அதேவேளையில், உலகம் அறிந்தவர்களாகவும் இருக்கவேண்டும். உலகம் அறிந்துகொண்டவர்களாக, அதிகமான மக்களைக் குறித்து விமர்சனம் செய்கிற இடத்தில் நீங்கள் இருக்க கூடாது. அதாவது, அவர் மிகவும் சிந்திப்பார், மிகவும் மோசமானவர் என்று சொல்லப்படாத இடத்திலே நீங்கள் இருக்கவேண்டும். இப்படி பல காரியங்கள் இருக்கிறது,

அல்லவா? ஆகவே, நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும், சாட்சியுள்ள பிள்ளைகளாகவும் விளங்கவேண்டும். அதேவேளையில், நீங்கள் மற்றவர்களால் வஞ்சிக்கப்படுகிற இடத்திலேயே இருக்க கூடாது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, சரியானபடி பேசி பழகுங்கள், அதற்கு பயிற்சி எடுக்கவேண்டும், ஜெபம் பண்ணவேண்டும். பிறகு மக்களிடத்திலே கருத்தை, நீங்கள் அடிக்கடியாக விளக்கி காட்டுங்கள். சரியாக நீங்கள் சொல்கிறது, அவர்களுக்கு புரிகிறதா? என்பதையும் அவர்களின் கருத்தை வாங்கி, அவர்களிடத்திலே உங்களுடைய பிரசங்கத்தின் விளைவுகளை கேட்டறிந்து சரிசெய்து கொள்ளுங்கள். மட்டுமல்ல, சிறந்த நடையிலே எழுதிப்பாருங்கள். ஆங்கிலத்தில், தமிழில் எழுதிப் பாருங்கள். எழுத்துக்களில் தவறு இல்லாதபடி இருக்கவேண்டும். ஏனெனில், நீங்கள் கடிதம் கொடுக்கவேண்டியிருக்கும். உங்களது சபையாக இருக்கும், அப்போது, எழுத்துப்பிழையோடு, இலக்கண தவறுகளோடு, நீங்கள் கொடுத்தீர்களானால், அடுத்த சபைக்கு அது போகும்போது, இல்லாவிட்டால், உங்களது விசுவாசி, அதைக்கொண்டுபோகும்போது, உங்களை எப்படி நினைப்பார்? என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

பிரியமானவர்களே, சபை ஊழியம் என்பது, பல விதங்களில், பல சபையோடு தொடர்புள்ள ஊழியங்கள். போதகர்கள் என்று ஏதோவொரு ஓரமாக உட்கார்ந்து, நாம் செய்கிற விஷயம் அல்ல. நம் சபையிலுள்ள ஒரு சகோதரிக்கு, இன்னொரு சபையிலுள்ள சகோதரனோடு, திருமணம் செய்துவைக்க வேண்டியிருக்கும். அப்போது, முறைப்படி கடிதங்கள் கொடுக்க வேண்டியதாக இருக்கும். நீங்கள் கையெழுத்திட வேண்டியதாக இருக்கும், எழுதவேண்டியதாக இருக்கும், எல்லாவற்றையும் யோசித்துக்கொள்ளுங்கள். இவற்றையெல்லாம் உங்களை பயப்படுத்துவதற்கு நாம் சொல்லவில்லை. ஆனால் ஒரு சவாலை உங்களுக்கு முன்பாக வைக்கிறோம். ஏன் உருவாகிக்கொள்ளக்கூடாது? என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். நல்ல கையெழுத்தோடு எழுதி, எழுதிப்பாருங்கள். அதிக, அதிகமான முயற்சியெடுங்கள். எதிலும் உங்களால் சாதிக்க முடியும். கர்த்தருடைய உதவியோடு இன்னும் தொடர்ந்து, அதிக காரியங்களை வருகிற பாடத்திலும் கற்றுக்கொள்வோம். ஊழியத்திற்கு நாம் எவ்விதமாய் ஆயத்தப்பட வேண்டும்? மற்ற ஆயத்தங்களெல்லாம் இருக்கிறது. வேதம் வாசிக்கவேண்டும், ஜெபம் செய்யவேண்டும், தியானம் பண்ணவேண்டும், பயபக்திக்குரிய வாழ்வு வேண்டும். இவையெல்லாம் ஆயத்தம்தான். ஆனால், இந்த மாதிரி காரியங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நாம் கற்று இருக்கிறோம்.

தொடர்ந்து ஜெபத்தோடு படியுங்கள். நிச்சயமாய் இதன்படி உருவாகுங்கள், கர்த்தர் உங்களை வல்லமையாய், சிறந்த போதகர்களாய் உருவாக்கப் போகிறார். அவ்விதமாக

செய்யப்போகிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக. கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## **<u>கேள்விகள்:-</u>**

1) மேய்ப்புபணியினை விளக்குவதற்காக ஜான் மெக் ஆர்தர் என்பவர் பயன்படுத்தின CALL என்ற ஆங்கில வார்த்தையில் 'L' என்பதற்கான Longings(வாஞ்சை மற்றும் தாகம்) குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
2) மேய்ப்பு பணியினை விளக்குவதற்காக ஜான் மெக் ஆர்தர் என்பவர் பயன்படுத்தின CALL என்ற ஆங்கில வார்த்தையில் 'L' என்பதற்கான Life Style (வாழ்க்கை முறை) குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
3) ஊழியத்திற்கான விருப்பம் இருக்கவேண்டியதைக் குறித்து, அப். பவுல் குறிப்பிட்டுள்ள வசனத்தைக் கூறுக?
4) ஊழியத்திற்கான விருப்பம் மற்றும் வாஞ்சை இருக்கவேண்டியதைக் குறித்து அப். பேதுரு கூறியுள்ள வசனத்தை கூறுக?
5) மேய்ப்பு பணியின் ஜாக்கிரதையை காண்பிக்கும் பொருட்டு, யாக்கோபு கூறும் வசனத்தை கூறுக?
6) மேய்ப்பனின் குணாதிசயத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக, ஹென்றி மார்ட்டின் என்ற தேவ ஊழியர் கூறும் கூற்றினைக் கூறுக?
7) திருநிலைப்படுத்தப்படுதல்(Ordination) என்றால் என்ன?
8) திருநிலைப்படுத்தப்படுதலின்(Ordination) அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
9) ஊழியர் திருநிலைப்படுத்தப்படுத்தலுக்கான ஆயத்தத்தில், வாசித்தல் மற்றும் கற்றுக்கொள்ளுதல் என்கிற ஆயத்தத்தைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - 6

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில், ஊழியத்திற்கு ஆயத்தப்படுவதைக் குறித்து சிந்திக்கப்போகிறோம். கடந்த நாளின் இறுதி நிகழ்ச்சியிலே, அதைக் குறித்து அதிகமாக கற்றோம். நிச்சயமாகவே, ஊழியத்திற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிற உங்கள் ஒவ்வொருவருக்கும், இது ஆசீர்வாதமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. **இரண்டாவதாக, எந்தவொரு பதவிக்கும் அல்லது பொறுப்பிற்கும் ஒருவர் வந்தாலும், அவர் முன்பு இருந்ததைவிட சற்று அதிகமாக பயிற்சி எடுத்து, அந்த பொறுப்புக்கு தகுதியுள்ளவர்களாக மாறவேண்டியது அவசியம்.** என்னுடைய வாழ்விலே நடந்த விஷயத்தை நான் உங்களுக்கு உதாரணமாக கூற விரும்புகிறேன்.

நான் முன்பு மும்பையிலே, முதலாவது ஆசிரியராக பணிபுரிந்தேன். பிறகு இன்னொரு பள்ளியிலே எனக்கு முதல்வராக பணிபுரிகிற ஒரு பாக்கியத்தை கர்த்தர் கொடுத்தார். அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பதாக, என்னுடைய மனைவி, நீங்கள் அந்த பதவிக்கு வரப்போகிறீர்கள். ஆகவே, இந்த மே மாதத்திலே நீங்கள் அதற்கென உங்களுடைய சிந்தையை அதன்மீது வைக்கவேண்டும். மட்டுமல்ல அதைக்குறித்து, அந்த பதவியிலிருந்து நான் எவ்விதமாய் பேசவேண்டும்? பழகவேண்டும் என்பதைக் குறித்து சில காரியங்களைக் கூறினார். ஏனெனில், நீங்கள் முன்பு ஆசிரியராக இருக்கும்போது, மாணவ, மாணவிகளிடம் மிகவும் நெருக்கமாக பழகுவீர்கள், அன்பாக பழகுவீர்கள். ஆனால், இப்போது நீங்கள் முதல்வராக்கப்பட்டிருக்கிறீர்கள். இப்போதும், அதேமாதிரியான போக்கை கடைப்பிடிப்பீர்களானால், பள்ளியினுடைய ஒழுக்கமும், ஒழுங்கும் கொஞ்சம் கேள்விக்குறியாக மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அன்பாக பழகுங்கள், அதே சமயம், அவர்கள் ஆசிரியர்களுக்கு கட்டுப்படாமல் போய்விடக்கூடாது, உங்களுக்கும் கட்டுப்படாமல் போய்விடாதபடிக்கு பார்த்துக்கொள்ளவேண்டும். ஆசிரியர்கள், வீட்டுப்பாடம் கொடுக்கிறபோது, அவர்கள் அதைச் செய்துமுடிக்காமல், நாங்கள் முதல்வரிடம் சொல்லிக் கொள்வோம் என்று சாக்குப்போக்குகளை சொல்ல நேரிடும், ஆகவே மிகவும் கவனமாக, அதற்கேற்றபடி, நீங்கள் இனிமேல் மாறவேண்டுமென்று சொன்னதைப் புரிந்துகொண்டு, என்னுடைய பேச்சு, என்னுடைய செயல்பாடு, என்னுடைய நடவடிக்கைகள் அனைத்தையும் நான் மாற்றிக்கொண்டேன். அதற்கு பின்பதாக எங்கள் பள்ளி நல்ல பெயரை வாங்கத்தக்கதாக, மும்பை நகரிலே, அந்த பள்ளியை சிறப்பாக நடத்த கர்த்தர் உதவினார்.

பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையில், அந்தந்த தகுதிக்கேற்ப, நம்மை உருவாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம். அதற்காக பெருமைகொள்ள வேண்டுமென்றுறோ, நாம் நம்முடைய இயல்பான, இயற்கையான சுபாவத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றோ அர்த்தமல்ல. தேவ சுபாவத்தை நாம் உருவாக்க வேண்டும். அதே வேளையிலே, அந்த இடத்திலிருந்து, நாம் எவ்விதமாய் செயல்பட்டால், சரியாக இருக்குமென்று, நிதானித்து, அறிந்து செயல்பட வேண்டியது அவசியம். ஆகவேதான், இவற்றை நாம் கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். நீங்கள் இப்பொழுது, ஒரு போதகராய் மாறப்போகிறீர்கள், அல்லது ஊழியம் செய்துகொண்டிருக்கிறீர்கள். அவ்வாறான நிலையில், நீங்கள் தொடர்ந்து ஒரு ஊழியனைப்போல, சாதாரண விசுவாசிபோல நீங்கள் செயல்பட முடியாது. உங்கள் பேச்சு, அநேகரால் கவனிக்கப்படுகிற இடத்திற்கு வந்துவிடும். ஒரு போதகர் என்ற முறையிலே, சபை முழுவதும் உங்களைப் பார்ப்பார்கள். அந்த போதகர் எவ்வாறு பேசுகிறார் பாருங்களேன், என்னை ஒரு சாதாரணமான நபரைப் போன்று கடுமையாக பேசுகிறார், என்றெல்லாம் கவனிக்கிற இடத்தில் நீங்கள் வந்துவிடுவீர்கள் என்று நான் கூறுகிறேன். ஆகவே, உங்களுடைய பேச்சு, உங்களுடைய எழுத்து, உங்கள் நடை, உடை, பாவனை, எல்லாம் மிக மிக ஒழுக்கமானதாக, விசுவாசம் நிறைந்த வார்த்தைகளாக, மிகவும் தரமான வார்த்தைகளாக, மற்றவர்களை மதித்துப் பேசுகிற, சிறியவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும், அனைவரையும் மதித்துப் பேசுவது நல்லது. இல்லாவிட்டால், அந்த பாஸ்டர் அப்படி, அந்த பையனை திட்டிவிட்டார். அவ்வாறெல்லாம் கேட்கிற ஒரு இடத்திற்கு நீங்கள் வரவேகூடாது.

நீங்கள் மந்தைக்கு மாதிரிகளாக வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று பேதுரு எழுதுகிறார். நீங்கள்தான் மாதிரியாக இருக்கிறீர்கள். நீங்கள் எவ்வாறு ஒரு கலாச்சாரத்தை சபையில் உருவாக்குகிறீர்களோ, அதைப்போலத்தான், அந்த சபையார், தங்களுடைய குடும்பங்களுக்கிடையே, அந்த உறுப்பினர்களுக்கிடையே, சபை உறுப்பினர்களுக்கிடையே, ஆரோக்கியமான விதத்திலே பேசுவார்கள், ஆரோக்கியமான விதத்தில் பழகுவார்கள், எல்லாமே உங்களைக் சார்ந்தே, அந்த சபையினுடைய காரியங்கள், ஒழுக்கம் எல்லாமே இருக்கிறது என்பதை மறந்து போகாதீர்கள். ஆகவே, நீங்கள் அவற்றை கவனிக்க வேண்டியது அவசியம், தேவனுடைய பணிதானே என்று எளிதாக விட்டுவிடக்கூடாது. தேவனுடைய பணிதானே, எல்லா இரக்கமும், தயவும், கிருபையும் கர்த்தர் பாராட்டுவார் என்று, நீங்கள் ஒரு கீழான நிலையில் உங்களது சபையை வைத்து விடாதீர்கள். நல்ல உயர்ந்த இடத்தில் உங்களைப் பார்க்கிற, உங்கள் சபையைப் பார்க்கிற புறஜாதியார், அவர்கள் எவ்வளவாய் அன்பாக, அழகாக, நேர்த்தியாக பழகுகிறார்கள்? சகோதர சிநேகத்தில் ஒருவருக்கொருவர் அழகாய் பழகுகிறார்கள், நாம் அந்த சபைக்கு போகவேண்டும் என்று நினைக்கிற ஒரு மாதிரியை உருவாக்குங்கள்.

**மூன்றாவது காரியமாக, நாம் இப்பொழுது சிந்திக்க இருக்கிற விஷயம், உங்களால் எதைச் சிறப்பாக செய்ய முடிகிறது என்று கண்டுகொண்டு, அதிலே முன்னேற வேண்டும்.** என்னால் எதை சிறப்பாக செய்ய முடிகிறது? என்று சிந்தித்து அதிலே நீங்கள் இன்னும் அதிகமாக கவனம் செலுத்தி, அதை சிறப்பாக செய்ய பழகிக்கொள்ளலாம், ஆயத்தப்படலாம், நீங்கள் மீட்பு பணிக்கு, ஊழியத்திற்கு வருகிறீர்கள். ஆக, உங்களுடைய திறமை என்ன? தாலந்து என்ன? என்னால் எதைச் சிறப்பாக செய்ய முடியும்? மற்றும் என்னால் எதைச் சிறப்பாக செய்ய முடியாது? ஒரு போதகர் என்பவர் கட்டாயமாக பிரசங்கம் செய்வதில் தேர்ச்சிபெற வேண்டும். நீங்கள் தேர்ச்சி இல்லாதபடி, பாதிநேரம் வெளியிலிருந்தே, ஊழியர்களைக் கூப்பிட்டு பயன்படுத்துவீர்களானால், உங்களை, உங்களுடைய சபையார் மிக முக்கியமான இடத்தில் வைக்க மாட்டார்கள். அதனால், நீங்கள் உங்களை அதற்கு ஆயத்தப்படுத்துங்கள், உங்களால் முடியும், வேதத்தை வாசித்து, ஜெபத்தோடு, ஆவியானவர் உதவியோடு, உங்களால் சிறப்பாக பிரசங்கிக்க முடியும். அநேக சாட்சிகளை நாங்கள் கேட்டிருக்கிறோம், பார்த்திருக்கிறோம். ஒரு படிப்புகூட படிக்காத சகோதரிகள், சகோதாரர்கள் தேவனிடத்திலே வைராக்கியம் கொண்டு, ஆண்டவரே, எனக்கு நீங்கள் அதிகமாய் வேண்டும் என்று ஜெபித்து, கர்த்தருடைய முகத்தை தேடி, சிறப்பாக இன்று பிரசங்கிக்கிற அநேகரை நாங்கள் அறிந்திருக்கிறோம். கண் தெரியாதவர்கள் வசனத்தை அப்படியே மனப்பாடம் செய்து, பேசுகிற கிருபையை தேவன் கொடுத்திருக்கிறதை நாமெல்லாரும் அறிந்திருக்கிறோம். எனக்குத் தெரிந்த ஒரு ஊழியர்கூட, படிப்பறிவே இல்லாதவர். ஆனால், முழுவதும் மனப்பாடமாகவே வசனங்களை, இருப்பிடத்தோடு சொல்லி, சொல்லி பிரசங்கிப்பார். பாருங்கள், இதையெல்லாம் தேவன் செய்யக்கூடுமானால், உங்களால் ஏன் சிறப்பாக ஒவ்வொரு காரியத்தைச் செய்ய முடியாது. குறிப்பாக, பிரசங்கிக்க முடியாது, கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உங்களால் சிறப்பாக கற்றுக்கொடுக்க முடியும், பிரசங்கிக்க முடியும், உபதேசிக்க முடியும், இதற்கு கொஞ்சம் காலமாகலாம். எடுத்த உடனே எல்லா காரியத்திலும் சிறப்பாக செய்துவிட முடியாது. அதற்கு சில காலங்கள் ஆகலாம். ஆனால், ஆரம்பத்தில், சில வழிகளில் நீங்கள் நினைப்பீர்கள், எல்லாம் எளிதுதான், என்னால் செய்ய முடியும் என்று நினைப்பீர்கள். ஆனால், நெருங்கிப்போய் பார்த்தால்தான் தெரியும், சில காரியங்களை உங்களால் செய்ய முடியாது.

ஆகவே, என்ன செய்ய வேண்டும்? மிக கடினமாக, அதற்கு முயற்சியெடுத்து, எது முடியாது? கடினமாய் இருக்கிறது என்று காண்கிறீர்களோ, அதை அதிக முயற்சியெடுத்து கற்றுக்கொள்ளுங்கள். தேவன் எந்தெந்த விதங்களில் உங்களுடைய காரியங்களை ஆசீர்வதிக்கிறாரோ, அந்தந்த வழிகளிலேயே நீங்கள் தொடர்ந்து செய்து, அதில் குறிப்பிட்ட பகுதியிலே முன்னேறி செல்லுங்கள். அப்போது, உங்களால் எதை சிறப்பாக செய்ய முடியும் என்பதை நீங்களே உங்களைக்குறித்து அறிந்துகொள்ளுவீர்கள். அதில் அதிகமாய்

தேர்ச்சியடைவீர்கள். ஆனாலும், புதிய கலைகளை நீங்கள் கற்றுக்கொள்ளக்கூடாது என்று சொல்லவில்லை. ஒரு போதகர் என்பவர், எல்லா துறைகளிலும், அனுபவமுடையவராக இருக்கவேண்டியது அவசியம். ஏனெனில், போதகரைப் பொறுத்தவரை, அவருக்கு சபை நிர்வாகம் முழுவதும் இருக்கிறது. மக்களுடைய ஆத்துமாக்களை கண்காணிக்கிற பொறுப்பு, அவர்களுக்காக ஜெபிக்கிறது, மனதிறங்குகிறது, உதவிசெய்கிறது போன்ற அனைத்தையும் செய்யவேண்டும். உலக விஷயங்களிலும் அவர்களுக்கு ஆலோசனை கொடுத்து நடத்துவது, போன்ற பல பணிகள் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, அதையெல்லாம் செய்யக்கூடிய அளவுக்கு உங்களுக்கான திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது. *2 தீமோ.2:14*-ம் வசனம் இவ்விதமாய் சொல்கிறது, ‘நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய், பகுத்து, போதிக்கறவனாயும், வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து, போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பாக, உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாய் இரு’ என்று பவுல் எழுதுகிறார். ஆக, நீ வெட்கப்படாத ஊழியக்காரனாக இருக்கவேண்டும். எந்த இடத்திலேயும், நீ வெட்கம் அடையக்கூடாது, தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். சத்திய வார்த்தையை நிதானமாக பகுத்து போதிக்கிற, அந்த கிருபையுடையவனாய் இருக்கவேண்டும். ஆகவே, ஒரு போதகருக்கு, நன்றாக பிரசங்கிக்க தெரியவேண்டும், வேத வசனத்தை நன்றாக கற்றுக்கொண்டு, அதை தெளிவாக பிரசங்கிக்க வேண்டும். சரியாக போதிக்கவில்லை என்றால், நாம் மக்களுடைய விசுவாச வளர்ச்சிக்கு தடைக்கல்லாக இருக்கிறோம் என்று அர்த்தம்.

ஒரு பள்ளியில் பணிபுரிகிற ஆங்கில ஆசிரியர், சரியான முறையில் ஆங்கிலத்தை கற்றுக்கொடுக்கவில்லை என்றால், அந்த பிள்ளைகள் எல்லோருமே, ஆங்கிலத்தில் பலவீனமாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு வாசிக்கத் தெரியாது. இலக்கணம் தெரியாது, நல்ல மதிப்பெண்கள் எடுக்கமாட்டார்கள். ஆக, ஒரு வகுப்பினுடைய எல்லா பிள்ளைகளின் படிப்பையும் கெடுத்தது யார்? ஒரு ஆசிரியர். அதேபோலத்தான், சபைக்கு வருகிற மக்களை ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சியடைவதற்கு தடையாக இருப்பது யார்? நாம் தான், ஊழியர்கள்தான், போதகர்கள்தான். ஏன் அவ்வாறு என்றால், வேதம் தானே, நமக்கு அது நமக்கு நன்றாகத்தெரியும் என்று எளிதாக நினைக்கிறோம். ஆனால், நம்முடைய காரியம் என்றால், எவ்வளவு சிறப்பாக செய்ய யோசிக்கிறோம்? உதாரணமாக, ஒரு வியாபாரத்தை செய்கிறீர்கள் என்றால், என்னிடம்தான், சிறந்தது இருக்கவேண்டும். என்னுடைய தயாரிப்புதான் முதலிடத்தில் இருக்கவேண்டும் என்றெல்லாம் நினைக்கிறோம். ஊழியத்திலேயும் அதே மாதிரியான ஆர்வம் இருக்கவேண்டும். இது என் சபை, என் ஆத்துமாக்கள், நான் இவர்களை சிறந்த விதத்தில் வளர்க்க வேண்டும் என்று ஆர்வம் கொள்ளவேண்டும். அது கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிற ஊழியமாக இருக்கிறது. ஏனெனில், இங்கே சொல்லப்படுகிற வார்த்தையை நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன்,

அர்த்தத்தை சொல்ல விரும்புகிறேன். உன்னை தேவனுக்கு முன்பாக, உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாய் இரு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாம் ஆங்கிலத்தில் இவ்வாறு வாசிக்க முடியும், 'Do your best to present yourself to God an approved worker. Who has nothing to be as same are handling the word of truth with precision' என்று சொல்லப்பட்டிருக்கிறது. Do your best. நீ சிறந்த விதமாகச் செய், எந்த விஷயத்தில் என்றால், தேவனுடைய காரியத்தில். அவ்வாறு செய்து அங்கீகரிக்கப்பட்ட ஊழியனாக இரு என்று வசனம் கூறுகிறது. நீங்கள் தேவனுக்கு முன்பாக, குற்றமற்ற, உத்தமாக நிறுத்தப்படுவதற்கு, சிறந்ததைச் செய்யுங்கள். உங்களுடைய சிறந்த காரியத்தை, இல்லாவிட்டால், சிறந்த விதத்தில் எதையும் செய்யுங்கள் என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே, இதற்கு நீங்கள் உங்களை அர்ப்பணியுங்கள். எதைச் செய்தாலும், தேவனுடைய பணியில் சிறப்பாய் செய்வேன் என்ற உறுதியோடு செயல்படுவோம். உங்களுக்கு எதைச் சிறப்பாக செய்ய முடிகிறதோ, அதை கணக்கிட்டு, மதிப்பிட்டு, அதில் தேர்ச்சி பெறுங்கள். அதேவேளையில், வேறெந்த காரியத்தையும் புதிதாக கற்றுக்கொள்ள மாட்டேன் என்று இருக்காதீர்கள், உங்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும். குறிப்பாக சொன்னேன், ஒரு மேய்ப்பன், ஒரு போதகன், ஒரு ஊழியன் எல்லா துறையிலும் அவன் அறிவு பெற்றவனாக இருந்தால்தான், அது சபை முழுமையான வளர்ச்சியைப் பெற முடியும். நீங்கள் எந்த பகுதியில் பெலவீனமாக இருக்கிறீர்களோ, அதே பகுதியில், அந்த சபை முழுவதும் பெலவீனமாய் மாறிவிடும். ஆகவே, நீங்கள் மாதிரியாக இருந்து செயல்படுங்கள் என்று கற்றோம்.

**நான்காவது, ஊழியர் என்பவர் வளைந்துகொடுக்கிறவராய் இருக்க வேண்டும். சில விஷயங்களில் விட்டுக்கொடுத்து, சூழ்நிலைக்கேற்றபடி செயல்பட வேண்டும்.** இன்று அநேகர் வளைந்து கொடுக்கிறது இல்லை. மூத்த ஊழியர் ஒருவர் இவ்வாறு சொல்வார், வளைந்துகொடுக்கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் முறிந்துபோவதில்லை என்பார். வேத வசனம் மாதிரியே இருக்கிறதல்லவா? ஆமாம், வளைந்து கொடுக்கிறவர்கள், பாக்கியவான்கள், அவர்கள் முறிந்துபோக மாட்டார்கள். சிலர், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று பிடிவாதமாக சொல்வார்கள். அதுவும் இந்த மீட்பு பணிக்கு வருகிறவர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். உங்களை நம்பி ஒரு பெரிய மந்தையை கர்த்தர் தரப்போகிறார், தருகிறார். அநேகரை மேய்க்கும்போது, பெருமையடைவதற்கு வாய்ப்பிருக்கிறது. இல்லாவிட்டால், நான் சொல்லுகிற அனைத்தையும் அவர்கள் செய்ய வேண்டுமென்றதொரு எண்ணம் வருவதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது. அதில் அநேகர் மாட்டி சிக்கிக்கொள்கிறதை நாம் பார்க்கிறோம். ஏனெனில், தகுதியில்லாத நமக்கு மிகப்பெரிய பொறுப்பை தருகிறார். யார், உங்களது பேச்சைக்கேட்டு, உங்களுக்கு

பின்னால் வருவார்கள், கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஒரு பெரிய மேலாளராக இருந்தால், ஒரு பெரிய கம்பெனியின் முதலாளியாக இருந்தால்கூட, ஒரு கூட்டம் மதிக்கும். ஆனால், இதற்காக, இவ்வாறு தலையாட்டிக்கொண்டு பின்னால் வரமாட்டார்கள். ஏனெனில், நீங்கள் கொடுக்கிற சம்பளத்திற்காக எந்தளவுக்கு மதிப்புகொடுக்க வேண்டுமோ, அந்தளவுக்கு மதிப்பு கொடுத்துவிட்டு, அவர்கள் போவார்கள், அவ்வளவுதான். அடிபணிந்து இருக்கமாட்டார்கள். ஆனால், கர்த்தருடைய அன்பினிமித்தம், வார்த்தையின் நிமித்தம், மெய்ப்பொருளை மதிக்கவேண்டும், அவர்களைக் கனப்படுத்தவேண்டும் என்பதினாலும், ஊழியத்தினிமித்தமும், அதிகமாய் மதிக்கிற ஒரு கூட்டத்தை, உங்களுக்கு, எனக்கு கர்த்தர் தந்திருக்கிறார். ஆக, அவர்கள் அனைவருக்கும் பொருத்தமானவர்களாக நடக்க வேண்டும், இல்லையா?

எனவே பெருமையில்லாதவர்களாக காணப்பட்டு, இணக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியம். அதாவது, வளைந்துகொடுக்கிற ஒரு வாழ்வு உங்களுக்கும், எனக்கும் இருக்கவேண்டும். அதை இப்பொழுதே நீங்கள் கற்றுக்கொடுக்க வேண்டும். வளைந்து கொடுத்தல் என்பதற்கான அநேக வேத வசனங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகளாக இருக்கிறது. நமக்கொரு தாழ்ந்த சிந்தை வேண்டும். தன்னைத்தான் தாழ்த்துகிறவன், உயர்த்தப்படுவான் என்று இயேசு அடிப்படையானதொரு முக்கியமான காரியத்தைச் சொல்லி இருக்கிறார். தலைவனாக இருக்க விரும்புகிறவன், கடமையுணர்வுள்ளவனாக, தாழ்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில், அந்தளவுக்கு இறங்கி போகிற ஒரு இணக்கமான, விட்டுக்கொடுக்கிற ஒரு இடத்திற்கு வருகிறவன்தான் ஒரு ஊழியன், அது சபையை சிறப்பாக கட்டியெழுப்புவதற்கு உதவி செய்யும். ஆகவே, இயேசுகிறிஸ்துவின் பண்பைப் பாருங்கள். அவர் ஒரு மேய்ப்பனாக, போதகராகயிருந்தபோதும் கூட, தேவனுடைய குமாரனாக இருந்தபோதும்கூட, ஒரு மாபெரும் அற்புதத்தையும், அடையாளத்தையும் செய்து, திரளான கூட்டத்தை தன்பின்னே வரக்கண்ட, இயேசுகிறிஸ்து எப்படியிருந்தார், பாருங்கள். சீலையைக் கட்டிக்கொண்டு, தன்னுடைய சீஷர்களின் பாதங்களை கழுவத் தொடாங்கினார். உங்களுக்கு அவ்வளவு தூரம் தாழ்மை இருக்கவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

பிரியமானவர்களே, தப்பாக நினைக்காதீர்கள், அது இருக்கவேண்டும், ஆனால், குறைந்தது பெருமையில்லாதவர்களாய், ஆத்துமாக்களை எப்படியாவது கரை சேரவேண்டும் என்ற பாரத்தோடு, நீங்கள் காணப்படவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதற்கு நீங்கள் ஆயத்தப்படுங்கள், அதுதான் உங்களது வாழ்க்கையில் இன்னும் உயர்த்துகிற ஒன்றாய், வேதம் சொல்கிறதுபோல, உங்களை தாழ்த்துகிறதுபோது, உயர்வு ஏற்படும். ஏற்றவேளையில், இன்னும் உயர்த்தப்பட்ட இடத்திலே வைக்கப்படுவீர்கள். நீங்கள் சொல்கிறது, இன்னும் அதிகமாய் மதிப்பார்கள், செயல்படுவார்கள், கிறிஸ்துவிலே

வளர்வார்கள், இந்த மாபெரும் பாக்கியத்தை, நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். இந்த காலகட்டத்திலே உருவாகுகின்ற, ஆயத்தப்படுகிற நீங்கள் இதையெல்லாம் இப்போதே கற்றுக்கொள்ள வேண்டும். இப்போது கற்றுக்கொள்ளாத விஷயங்கள், பின்னாளில் வரவே வராது. பிறகு, ஊழியத்திலே இறங்கிய பிறகு, நீங்கள் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் குறைவு. இப்பொழுதே ஜெபத்தோடு, ஒரு உறுதியாக கர்த்தாவே என்னை எந்தளவுக்கு உயர்த்துகிறீர்களோ, அந்தளவுக்கு கர்த்தாவே, நான் தாழ்ந்த சிந்தையோடு காணப்படுவேன் என்று மட்டுமல்ல, நான் வளைந்துகொடுப்பேன். சபையை வளர்த்து கொடுப்பதற்காக, என்னுடைய கருத்துக்களை சில இடத்திலே விட்டுக்கொடுக்க வேண்டுமானால், அங்கேயும் விட்டுக்கொடுக்கிறேன். என்னால் இடையூறு வருகிறது என்றால், அந்த கருத்தை நான் விட்டுக்கொடுத்து, சபை வளர்ச்சிக்காக, மக்களுடைய பக்தி விருத்திக்காக, என்ன செய்ய வேண்டுமோ, அதை நான் செய்வேன். இப்பொழுதே என்னை ஒப்புக்கொடுக்கிறேன் என்று, நீங்கள் ஒப்புக்கொடுத்து, வளரவேண்டியது அவசியம்.

**ஐந்தாவது காரியம், நாம் சுயத்திற்கு மரித்தவர்களாக இருக்க வேண்டும்.** பொதுவாக, நீங்கள் இதை அறிந்திருப்பீர்கள், ஆனாலும் முக்கியமான சத்தியம் என்பதினால், மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். சுயத்திற்கு மரித்த வாழ்வு, அவர்களே சீஷர்கள். ஆகவே, ஒரு சீஷனாக நாம் நிச்சயமாய் இருக்கவேண்டியது அவசியம், விசுவாசிகளாய் இருப்பது பெரிய காரியமல்ல. விசுவாசிகள் என்றால் யார்? தங்களுடைய இலாபத்திற்காக இயேசுவை நம்புகிறவர்கள். வேதவசனத்தை தங்களுக்கு ஏற்றபடி மாற்றியமைக்க விரும்புகிறவர்கள், எனக்கென்ன இலாபம் என்று நினைக்கிறவர்கள். அவர்கள்தான் விசுவாசிகள். ஊழியம் செய்தால், எனக்கு என்ன இலாபம்? வேதம் வாசித்தால், எனக்கு என்ன இலாபம்? அதைச்செய்த எனக்கு, கர்த்தர் என்ன தருவார்? அதாவது, உலகப்பிரகாரமாய் சிந்திக்கிற விஷயத்தைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறார். தேவனிடத்தில் ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கிறது நல்ல விஷயம், அதைப்பற்றி நாம் குறைசொல்ல முடியாது. ஆனால், இதைச் செய்தால், எனக்கு கர்த்தர் என் கடனை மாற்றுவாரா? எனக்கு இலட்சம் தருவாரா? கோடி தருவாரா? என்று நினைக்கிற நினைப்புகள் தவறு. எதை எடுத்தாலும் ஆசீர்வாதத்தை பண விஷயத்தில் அளவுகோலாய் கொள்ளக்கூடாது. பணம் தருவீரா? செல்வம் தருவீரா? என்று உலக விஷயமாய் ஆசீர்வாதத்தை அளக்கிற அளவுகோலாய் எப்பொழுதும் கொள்ளக் கூடாது. உலக ஆசீர்வாதம் என்பது ஒரு பகுதிதான். ஆனால், உண்மையான ஆசீர்வாதம் என்பது என்ன? தேவ வல்லமையோடு, வரங்களோடு, அவருடைய சித்தப்படி, அவருக்காய் வாழ்வதுதான் ஆசீர்வாதம். அவர் சொன்ன இடத்திலிருந்து, அவர் சொன்ன விதமாய் ஊழியம் செய்வதுதான் ஆசீர்வாதம். அவர் சித்தம் செய்கிறவர்கள்தான் பரலோகம் போகமுடியும். அதைவிடுத்து, ஆண்டவரிடத்திலே நான் இவ்வளவு ஜெபித்ததால், எனக்கு இத்தனை இலட்சங்களை, கோடிகளை தந்தார். ஆகவே, கர்த்தாவே என் ஜெபத்தையெல்லாம்

கேட்டீர் அல்லவா? இவ்வளவாய் ஆசீர்வதித்து, எங்களது ஊரிலியே பெரிய பணக்காரனாய் வைத்தீர் அல்லவா? என்னை பரலோகத்துக்கு கொண்டுபோய்விடும் என்று சொல்லி கேட்க முடியாது பிரியமானவர்களே.

தேவ சித்தம் செய்தவர்கள்தான் பரலோகம் போகமுடியும். நீங்கள் ஜெபம் பண்ணுவதெல்லாம் கிடைத்துவிட்டது என்பதற்காக, கர்த்தர் நீங்கள் செய்வதையெல்லாம் அங்கீகரிக்கிறார் என்று எடுத்துக் கொள்ளாதிருங்கள். அதுதான் இன்றைக்கு நடக்கிற பெரிய தவறு. நாம் ஜெபம் செய்வதை எல்லாம் அவர் கேட்கிறார், இல்லையா? ஆகவே, அவர் என்னுடைய காரியங்களையெல்லாம் அங்கீகரிக்கிறார், என்று நினைக்கிற தவறைச் செய்து விடுகிறோம். அவர் மிகவும் தாராள மனதுள்ள தேவன், நம்முடைய தேவன். உங்களை ஒரு பெரிய கோடீஸ்வரன் என்று கருதி, கொஞ்சம் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏகப்பட்ட சொத்து இருக்கிறது. எனவே, இந்த நிலையில், ஒரு ஏழை மனிதன் உங்களிடத்தில் வந்து, ஐயா, ஒரு 100 ரூபாய் தாருங்கள், பசியாக இருக்கிறது என்று கேட்டால், நீங்கள் அதை எடுத்து கொடுக்கிறது, கடினமான விஷயமாக இருக்காது. ஏனெனில், பரிபூரணமாக இருக்கிறீர்கள். அதேபோலத்தான், நம்முடைய தேவன். இந்த பூமியும், அதன் நிறைவும் கர்த்தருடையது, எல்லாமே அவருடையதுதான். அவரிடத்தில் நீங்கள் கேட்கிற ஆசீர்வாதத்தை, அவர் தருகிறது சாதாரண விஷயம். ஆக, பெறுகிற ஆசீர்வாதங்களைக் கொண்டு, கர்த்தர் என்னுடைய செய்கைகளை அங்கீகரிக்கிறார் என்று எண்ணுவது தவறான விஷயம். ஆகவே, சீஷன் என்றதொரு இடத்திலே, நீங்கள் இருக்க வேண்டும். குறிப்பாக, நீங்கள் ஊழியம் செய்யப் போகிறவர்கள், சீடனாக இருக்கவேண்டும், தேவசித்தம் செய்கிறதை பாக்கியமாய் கொள்கிறவன்தான் சீஷன். குரு எங்கு சென்றாலும், பின்பற்றுகிறவன்தான் சீஷன். சிலுவை சுமந்துகொண்டு கிறிஸ்துவின் பின்னே போகிறவன்தான் சீஷன். ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, அனுதினமும் பின்பற்றக்கடவன் என்று இயேசு கூறியது உங்களுக்கு நினைவிலிருக்கும். ஆக, சிலுவையில் தன்னை அறைய ஒப்புக்கொடுத்தது போன்ற சுயத்திற்கு மரித்த ஒரு சீஷனாய் நீங்கள் கட்டாயம் மாறவேண்டும்.

பிரியமானவர்களே, எல்லாம் அவர் கிருபையென்று சொல்கிற இடத்தில் நீங்கள் வளரவேண்டும். நான் செய்தேன் என்று ஒருபோதும் உங்களது மனதிலிருந்து, வாயிலிருந்து வராதபடி காத்துக்கொள்ளுங்கள். என் மகிமையை, வேறொருவருக்கும் கொடேன் என்றெல்லவா கர்த்தர் சொல்கிறார். ஆக, நீங்கள் அவருடைய மகிமையை எடுத்துக் கொண்டீர்களானால், நான் செய்தேன். நான் ஜெபித்ததினால்தான், இது நடந்தது என்று, ஒருவிதமாய், நீங்கள் உங்களை அறியாமலே, ஒரு பெருமையில் வாழ்ந்தீர்களானால், நீங்கள் தேவனுடைய மகிமையை எடுக்கிறீர்கள் என்று அர்த்தம். அவருக்கு கொடுக்க

வேண்டிய கனத்தை, நீங்கள் எடுக்கிறீர்கள் என்று அர்த்தம். ஆகவே, கர்த்தாவே, நான் அப்பிரயோஜனமான ஊழியக்காரன், நான் செய்யவேண்டியதைச் செய்தேன், எல்லா மகிமையையும், கனத்தையும் உமக்கு செலுத்துகிறேன் என்று சொல்லி, மனதார மகிமையை கர்த்தருக்கு செலுத்த பழகிக்கொள்ள வேண்டும். உங்களை, நீங்கள் யோவான் சொன்னதுபோல், நான் சிறுகவும், அவர் பெருகவும் வேண்டும் என்று கருத வேண்டும். அதாவது, நீங்கள் குறுகிக்கொண்டே போகவேண்டுமானால், உங்களை தாழ்த்திக்கொண்டே அவர் நாமத்தை உயர்த்திக்கொண்டே போகவேண்டும். அப்படிப்பட்ட ஊழியர்களே, சிறந்த சாதனையை செய்வார்கள். தன்னைத்தான் வெறுத்து என்று சொல்கிறதின் அர்த்தம் என்ன? நம்முடைய சுயத்திற்கு வெறுத்து, நம்மை இரண்டாவது இடத்திலே வைத்து, கர்த்தரை முதலிடத்திலே வைக்கிறதின் பெயர்தான், சுயத்திற்கு சாகுதல் என்று பொருள்படும். ஆக, அனுதினமும் சிலுவையை எடுத்துக்கொண்டு போகிறதுதான், அதனுடைய அர்த்தம். அவரை முக்கியப்படுத்த வேண்டும், மேன்மைப்படுத்த வேண்டும், நம்மை இரண்டாவது இடத்தில் வைக்கவேண்டும்.

தேவ திட்டம் எதுவோ, அதை முதலிடத்தில் வைக்கவேண்டும். என்னுடைய மனதிலே தோன்றுகிற ஆசைகள் என்னவென்றால், நான் ஊழியத்தில்கூட இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும், அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிற காரியத்தைக் கூட இரண்டாவது இடத்தில் வைத்தே, ஆசீர்வாதத்தை பெறுவேன். அதுதான், சுயத்திற்கு மரித்த வாழ்வு. இதற்கு ஒரு மேய்ப்பன், முதலாவது தம்மை, ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியம். சுயத்திற்கு மரிக்காத போதகர்களால்தான் இன்று அநேக பிரச்சனைகள். சபைகளிலே நான் சொல்லி, அவன் கேட்க மாட்டேன் என்கிறான் என்பதாக போதகர்கள் தவறாக நினைக்கிறார்கள். அனைவரையும் நாம் குறைசொல்ல முடியாது, சிலரைச் சொல்கிறோம். இவற்றையெல்லாம், நாம் புரிந்துகொள்வதற்காகத்தான் கற்றுக்கொண்டு இருக்கிறோம். அதற்காக நாம் சொன்னதை, சபையார் கேட்கக்கூடாது, கீழ்ப்படியாமல் இருக்கட்டும் என்ற அர்த்தத்திலே இவற்றை சொல்லவில்லை. போதகர், தான் சொல்கிற சில விஷயங்களைக் காட்டிலும், சபையார் சொல்கிற விஷயம் ஒரு விதத்தில் மிகவும் தேவையானதாக இருந்தால், அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிற மனது நமக்கு வேண்டும். நாம் சொன்னால் போதகர் நலமாயிருந்தால், ஏற்றுக்கொள்வார் என்ற இடத்தில் நீங்கள் இருக்கவேண்டியது அவசியம். ஆக, என் சுய நன்மதிப்பு, நான் சொன்னது என்ன ஆகும் என்று உலக மனிதர்கள்போல் சிந்திக்காதபடி, என்னுடைய வார்த்தையைவிட கர்த்தரின் வார்த்தையை ஜெபித்து முடிவு எடுக்கிற காரியம் சபையின் நலனைக் காப்பதற்கு மிகவும் முக்கியம். சுயத்திற்கு மரித்த நல்ல போதகர்களாய் நீங்கள் ஆயத்தப்பட வேண்டியது அவசியம் பிரியமானவர்களே.

**ஆறாவது காரியம், பொறாமைக்கு உங்களை விலக்கிக் காத்துக் கொள்ளுங்கள்.** *1* கொரி. *13:4*-ம் வசனம், ‘அன்புக்கு பொறாமையில்லை’ என்று கூறுகிறது. இந்த வசனத்தை நாம் அறிந்திருந்திருந்தோமானால், நம்மில் உண்மையிலேயே தெய்வ அன்பு நிறைந்திருக்கும். ஏனெனில், தெய்வ அன்பு உங்கள் இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறதே என்று பவுல் மூலமாக ஆவியானவர் கூறுகிறார். அந்த தேவ அன்பு ஊற்றப்பட்டு இருப்பது உண்மையென்றால், அந்த அன்புக்கு பொறாமை இருக்காது. ஆனால், பொதுவாக நமக்கு பொறாமை வருகிறது. உலக விஷயத்திலிருந்து வந்துவிட்டோம். ஆனால் ஊழியத்தில்கூட பொறாமைப்படுகிற மக்களாய் சிலர் உருவாகி இருக்கிறதைப் பார்க்க முடியும். அவரெல்லாம் என்ன ஊழியர்? என்னமோ அப்படி, இப்படி என்று பேசுகிறார், பெரிய பேனர் எல்லாம் வைக்கிறார். பெரிய அளவில் முன்னேறியிருந்தால், பந்தாவெல்லாம் காட்ட வேண்டுமா? என்ன, என்றெல்லாம் மக்கள் மத்தியிலேயே நாம் அவரைப் பற்றி குறை கூறுகின்றோம். அவர்மேல் உள்ள கோபத்தினால், ஒருவர்மீது உள்ள பொறாமையினால், எரிச்சலினால், நல்லவிதமாய் அவரைப் பற்றி கூற முடிவதில்லை. நாம் இவ்விதமாய் கூறும்போது, என்ன நடக்கும் என்றால், உங்கள் முன்னே இருக்கிற விசுவாசிகள், உங்களை தவறாக நினைப்பார்கள். இவ்விதமாக குறை கூறினதும், உடனே அந்த விசுவாசி இவர் இப்போதுதான் வளர்ந்து வருகிறார், அவரைப்போய், அந்த பாஸ்டர் ஏதோ ஒன்றைச் சொன்னார் என்று வையுங்களேன், அவர் சொல்வதை, அவரைப்பற்றி எனக்கு தெரியாதா? அவன் சின்ன வயதில் எப்படி இருந்தான், எனக்கு தெரியாதா? என்று பிறகு அந்த போதகர் உங்களைக் குறித்து குறை சொல்வார். ஆக, மாற்றி, மாற்றி இரண்டுபேருடைய குறையையும் பற்றி, யாரிடம் சொல்வீர்கள் என்றால், சபையிலுள்ள விசுவாசிகளிடம். அங்குள்ள விசுவாசிகள், அதைப்பற்றி யோசிப்பார்கள், இரண்டு போதகர்களும் சரியில்லையே என்று சிந்திக்கும்போது, அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை விட்டே போய்விடுகிற நிலையைத்தான் இன்றைக்கு அநேக சபைகளில் பார்க்கிறோம்.

நாமே நம்முடைய அழிவுக்குக் காரணமாய் இருக்கிறோம். பிரியமானவர்களே, குறை கூறக்கூடாது, குறிப்பாக பொறாமை இருந்தால், ஒருவரைப் பற்றி குறை கூறுகிற நிலை வந்துவிடும். அதனால் நம்முடைய சந்தோஷம் பாதிக்கப்படும் என்பதையும் நீங்கள் மறந்து போகக் கூடாது. அந்த சபை, அந்த ஊழியம், பெரிதாக இருக்கிறது, நாம் இங்கு இருப்பது, ஒன்றும் பலன் தராது என்றோ, அல்லது குறைந்த விசுவாசிகள் இருக்கின்ற சபையைக் குறித்து, ஆத்துமாக்கள் அங்கில்லை, அவர் என்னதான் செய்கிறார்? என்றோ, அல்லது ஓ, அந்த சபையில் என்ன பணம் கொட்டுகிறது, வேன் வைத்து விசுவாசிகளை சபைக்கு கொண்டுவருகிறார்கள், என்று அவற்றைப் பற்றி ஏதோவொரு விதத்தில், நாம் பொறாமையினால் பேசும்போது, சிந்திக்கும்போது, நம்முடைய மகிழ்ச்சிதான் பறிபோகும் என்பதை மறந்து போகாதீர்கள். உலகத்திலேயே நீங்கள்தான், பரிதாபமான மனிதராய்

மாறிப்போவீர்கள் என்று மறந்து போகாதீர்கள். நல்ல போதகராய் உருவாகுங்கள். எந்த சபையில் ஆத்துமாக்கள் இருந்தால் என்ன? அல்லது இல்லாவிட்டால் என்ன? கர்த்தர் ஆத்துமாக்களை அங்கே ஏற்படுத்தி கொடுக்கிறார், அவர் அங்கிருந்து வளரட்டும், நல்லது. எனக்கென்று கர்த்தர் ஆத்துமாக்களைத் தருவார் என்ற விசுவாசத்தோடு ஒரு போதகர் பேச வேண்டும், நினைக்க வேண்டும். அதுவே நல்ல ஆரோக்கியமான ஊழியத்தை உங்களுக்கு தரும் பிரியமானவர்களே. இவ்விதமாக பொறாமையானது உங்களிடமிருந்து நீக்கப்பட வேண்டுமென்றால், நீங்கள் அன்புள்ளவர்களாய் இருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் அனைவரையும் சகோதரர்களாய் கருதுகிற அனுபவம் இருந்ததானால், அவர்கள் நன்றாக இருக்கட்டும், என்ற எண்ணம் உங்களுக்கு உண்டாகவேண்டும். அந்த சபை வளரட்டும், எப்படியாவது, விசுவாசிகள் பரலோகம் வந்து சேரட்டும் என்ற பாரம்தான் உங்களுக்கு இருக்கும் பிரியமானவர்களே.

**ஏழாவது காரியம், சில காரியத்தை சிறப்பாக செய்யவேண்டும், சில காரியத்தை முடிந்தவரை செய்யவேண்டும். அதில் வித்தியாசத்தை நீங்கள் உருவாக்க வேண்டியது அவசியம்.** சபையிலே, எல்லா காரியத்தையும், நீங்களே செய்துவிட முடியாது. சிலர் அப்படித்தான் நினைக்கிறார்கள், எல்லாவற்றையும் நான்தான் செய்யவேண்டும். சபையை திறந்துவிடுவதிலிருந்து, அதைப் பெருக்கி, அங்கு பாய் போடுகிறது, மேஜையை தயார் செய்வது போன்ற எல்லாவற்றையும் நான்தான் செய்வேன் என்று கூறுகிற சில போதகர்களை நாம் பார்க்க முடியும். அவ்வாறெல்லாம் செய்யவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஏனெனில், ஊழியத்தில் மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிப்பது அவசியம். எல்லாவற்றையும் நீங்கள் செய்யும்போது, சிறப்பாய் செய்ய முடியாது. எனக்கு ஒரு போதகரைத் தெரியும். அவர் பெரியதாக ஒரு கூட்டத்தை நடத்த விரும்பி, செய்தியும் கொடுக்க வேண்டுமென்று நினைப்பார். அதேவேளையில், வருகிற அனைவருக்கும், அவர்தான் சமையலும் செய்ய வேண்டும் என்பார். எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். மேலும், எங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஒரு போதகர், தன்னுடைய சபைக்கு வெளியூரிலிருந்து அநேகரை அழைத்து வருவார். ஆனால், சபையின் ஆராதனையை நடத்த மற்றொருவரை நடத்த சொல்லிவிட்டு, அவர் சமையல் வேலையைப் பார்த்துக்கொண்டு இருப்பார், காய்கறிகளை வெட்டிக்கொண்டு இருப்பார். பின்பு, செய்துகொண்டிருந்த வேலையை தடபுடலாக முடித்துவிட்டு, செய்தி வேளைக்காக ஓடி வருவார். அவருடைய செய்திவேளை எவ்வாறு இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். அவர் பிரசங்கத்தை கோட்டை விட்டு விடுவார். கர்த்தர் தந்த செய்தியை சரியாக சொல்ல முடியாது. ஏனெனில், மூன்று நாளைக்கு முன்பிருந்தே, பெரிய கூடுகைக்கான ஆயத்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விடுவார், விறகு வாங்குவது முதற்கொண்டு, எல்லாவற்றையும் அவரே கவனம் செலுத்தி, கடைசியில் முக்கியமாக செய்யவேண்டிய, அந்த வேத வசன பிரசங்கத்தை சரியாக செய்யாமல் சொதப்பி விடுவார். எவ்வளவு

நஷ்டம் பாருங்கள். சோறு ருசியாக இருந்து என்ன பிரயோஜனம், அதற்காகவா நீங்களும், நானும் ஊழியம் செய்ய வந்திருக்கிறோம்? நன்றாக சமைத்து, சாப்பாடு கொடுத்து, மக்களுக்கு விருந்து வைத்து அனுப்புவதற்காகவா நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இவற்றையெல்லாம் குறைசொல்வதற்காக அல்ல, நடைமுறையில், செயல்பாடுகளை பார்த்து, அறிந்து, அதிலுள்ள விளைவுகள் இவ்வாறுதான் இருக்கிறது என்ற விபரத்தை, அனைவரும் பயன்பெற வேண்டுமென்பதற்காக இங்கு கற்பிக்கிறோம். ஒரு ஊழியனுடைய முக்கிய நோக்கம், மக்களுக்கு உணவு கொடுப்பதல்ல, வேத வசனத்தை போதித்து, மக்களை நல்வழிப்படுத்துவது அல்லவா? ஆக, அவ்வாறான சூழ்நிலையில், பணிகளை பிரித்து, பகிர்ந்து கொடுத்து, தலைவர்களை ஆங்காங்கே ஏற்படுத்த வேண்டியது அவசியம். தலைமைத்துவத்தில் வருகிறவர்கள்தான், பிறகு உங்களைப் பின்பற்றி, உங்களைப்போல அநேக காரியங்களைக் கற்றுக்கொண்டு, உங்களது சபை விரிவாக்கத்தின்போது, உதவி போதகர்களாய் அவர்களைப் பயன்படுத்துவதற்கு உதவியாய் மாறுவார்கள். காரணம், நீங்கள் பொறுப்பு கொடுத்து, எந்தளவுக்கு அவர்களை மிகவும் நேர்மையாக, அருமையாக நடத்துகிறீர்கள் என்பதை அவர்கள் பார்ப்பார்கள். போதகர் சொன்னார், ஆகவே அதைச் செய்யவேண்டும், நல்ல தேவ மனிதர் என்று கருதி, நீங்கள் சொல்வதற்காக, ஜெபித்து, தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு, உங்களது ஊழியத்தில் உற்ற துணையாய் மாறுவார்கள். அவ்வாறு இல்லாமல், எல்லாவற்றையும், யாரையும் நம்பாமல், நீங்களே செய்துவிட்டு, தலைவர்களை உருவாக்காமல் விட்டுவிடுவீர்களானால், உங்கள் ஊழியத்தையும் சரியாகச் செய்யமுடியாது, வருங்காலத்தில் சபையில் ஊழியம் செய்வதற்கான நபர்களையும் ஏற்படுத்தாமல் போய்விடுவீர்கள். அதுபோல, நீங்கள் ஊழியத்தை சரியான முறையில் செய்யாது இருக்கிறீர்கள் என்று அர்த்தம். ஆகவே, நாம் மிகச் சிறப்பாக, சில காரியத்தைச் செய்தால் போதும் என்பதற்கான, ஒருசில மாதிரி பட்டியலை நீங்கள் தயாரிக்க வேண்டும். அதை குறிப்பாக சொல்ல வேண்டுமானால், அதிகாரப்பகிர்வு செய்வதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். உங்களுக்கு சபை ஆராதனையில், பாடல் நடத்த தெரியவில்லையென்றாலும், அல்லது நன்றாக நடத்த தெரிந்திருந்தாலும், அதற்கென்று சபையிலுள்ள திறமையானவர்களை ஏற்படுத்துங்கள். சபையிலுள்ள விசுவாச மக்கள் சபை நடவடிக்கையில் பங்கெடுக்க வாய்ப்பு கொடுங்கள். பாடலுக்கு, மற்றும் ஜெபவேளை கூட நடத்துவதற்கும், கொஞ்சம், கொஞ்சமாக பிரித்துக் கொடுத்தால், உங்கள் சபையிலே தலைவர்கள் உருவாகுவார்கள். மட்டுமல்ல, உங்கள் ஆராதனை வேளையானது, யதார்த்தமானதாக, உயிரோட்டமுள்ள ஆராதனையாக இருக்கும். எல்லோருமே விடுதலையோடு, மிகவும் ஆர்வமாக ஈடுபட்டு, தேவனுடைய பணியை செய்யவேண்டுமென்று, ஆர்வமாக வளர்க்கப்பட்டு, உங்களுடைய சபையிலே காணப்படுவார்கள். அவர்கள்தான், ஆத்துமாக்களை வெளியிலிருந்தும்

கொண்டுவருவார்கள். அங்கு சபை வளரும், வருகின்ற மக்களும் உண்மையான ஆர்வத்தோடு உங்கள் ஆராதனையில் பங்கு பெறுவார்கள்.

**எட்டாவது காரியம், நீங்கள் அதிகமாய் வெளி பயணங்களை செய்ய வேண்டியது அவசியம்**. சபையார் அதனை நிறுத்துவதற்கு முற்படலாம். ஆனால், கர்த்தர் உங்களுக்கு தருகிற வாய்ப்பின் அடிப்படையில், வெளி மாநிலங்களுக்கோ, அல்லது வெளி தேசங்களுக்கோ சென்று வரவேண்டும். ஏனென்றால், ஊழியத்தினிமித்தம் அதிக பிரயாணம் செய்தவர்களின் மனது பரந்து விரிந்ததாய் மாறும். பல கலாச்சாரங்களைப் பார்க்கும்போது, பல மாநிலத்தின் நிலையைப் பார்க்கும்போது, தேசத்தின் நிலையைப் பார்க்கும்போது, அவரோடு பழகும்போது, உங்களுடைய மனம் மிகவும் விரிந்ததாய் மாறும் என்பதில் சந்தேகமில்லை. இது நடைமுறையான ஆலோசனையாகும். கர்த்தர் என்னையும் இலங்கை தேசத்திற்கும், அந்தமான் நிக்கோபார் போன்ற பகுதிகளுக்கு கொண்டுசென்று, அநேக ஊழியங்களைச் செய்ய வைத்தார். ஓமான் தேசத்திலும் ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இந்த பகுதிகளிலே இருக்கும்போது இருந்த மனநிலையைக் காட்டிலும், வெளிதேசங்களெல்லாம் சென்று வந்த பிறகு, மனநிலை மிகவும் விரிவடைந்ததை என்னால் பார்க்க முடிகிறது, அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

ஆக, உலகம் முழுவதற்கும் இயேசு தேவை என்பதை அறிவீர்கள், மட்டுமல்ல உங்கள் மனநிலை சின்ன சின்ன காரியத்திற்கும் வருத்தப்படுகிற இடத்தில் இருக்காது. பரந்து விரிந்த மனதாய் மாறிவிட்டதால் எல்லோரையும் மிகவும் அழகாக நேசித்து நடத்துவீர்கள். அது உங்கள் சபை வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று ஒரு காரணத்தை நான் அறிந்ததை சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, கிறிஸ்துவை நீங்கள் பரந்த மனதோடு அறிவிக்கத்தக்கதாய் உங்கள் குணநலத்தை மாற்ற வேண்டும். ஏனென்றால் நற்குணத்தில், ஆவியின் கனி வெளிப்படும் என்று வேதம் சொல்லுகிறது. எனக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார், வல்லமை இருக்கிறது, வரங்கள் இருக்கிறது என்று சொல்லுகிறது பெரிய விஷயம் இல்லை. நல்லகுணம் என்பது ஆவியின் கனிகளால் உங்களுக்கு உண்டாயிருக்க வேண்டும், அன்பு இருக்கவேண்டும். சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், இச்சையடக்கம் போன்ற அனைத்தும் வந்திருக்கவேண்டும். அது வராமல், வல்லமை மட்டும் செயல்படுகிறதாய் இருக்க வேண்டுமென்று சிலர் அதைத்தான் முக்கியப்படுத்துகிறார்கள். கனி மிகவும் முக்கியம், அற்புதம் செய்யாமல்கூட பரலோகம் போகலாம், ஆனால் கனி இல்லாமல் பரலோகம் போக முடியாது. ஆக, எதை முக்கியப்படுத்தி நாம் வாழ்கிறோம் என்பதை நீங்கள் புரிந்து வாழவேண்டும் பிரியமானவர்களே.

**ஒன்பதாவது காரியம், ஊழியத்தை இப்பொழுது செய்யுங்கள். ஊழியத்தை இப்பொழுது, இந்த நிமிடமே செய்ய ஆரம்பிக்க வேண்டும்.** அநேகர் சொல்லுவார்கள்,

கர்த்தர் அழைத்த பிறகு செய்ய ஆரம்பிக்கிறேன், பிறகு நான் புறப்பட்டு வட இந்தியா சென்ற பிறகு, ஊழியம் செய்ய ஆரம்பிப்பேன் என்பார்கள். ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும், இன்று ஊழியம் செய்யவில்லை என்றால், நீங்கள் பிறகு எப்போது ஊழியம் செய்யப்போகிறீர்கள். இங்கே எந்த பயிற்சியும் பெறாமல், எப்படி வட இந்தியாவிற்கு போன உடனே, தானாக வரும்? மிஷனெரி ஊழியம் என்று அனுப்பப்பட்டால், ஊழியம் வந்துவிடுமா? இல்லை. ஒரு மிஷனெரி பயிற்சியாக ஒரு 3 மாதம் பெற்றுவிட்டால், அதனால் ஊழியம் தானாக வந்துவிடுமா? இல்லை பிரியமானவர்களே. இன்று நீங்கள் ஊழியம் செய்ய வேண்டும், இப்போது இருக்கிற சபையில் ஞாயிறு பள்ளி எடுக்கவேண்டும், வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்யவேண்டும், பெரியவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டும், நோய்வாய்ப்பட்ட அந்த ஜனங்களை நீங்கள் சந்திக்கலாம். உங்களது சபையில் போதகர்கூட சென்று, சின்ன சின்ன தோட்ட வேலைகளை செய்தாலும், அதில்கூட நாம் செயல்படலாம், ஈடுபடலாம். எல்லாமே உங்களுக்கு உதவியாக மாறும், நாம் நினைக்கிறோம், தோட்ட வேலை என்பது மிகவும் எளிதான வேலை என்று நினைக்கிறோம். ஒரு செடியை வைத்து வளர்ப்பதற்கு எவ்வளவு காரியம் செய்யவேண்டியிருக்கிறது. அதை நீங்கள் இறங்கிசெய்து பார்த்தால்தான் தெரியும். ஆக, நாளைக்கு நீங்கள் உங்களது சபையில் ஒரு நல்ல தோட்டத்தை வைக்கவேண்டும் என்று நினைத்தால்கூட, இப்போது, நீங்கள் அந்த அறிவை, ஞானத்தை, பெலனை எப்படி அந்த காலகட்டத்தில், தோட்டத்தில், இந்தந்த செடிகளை எப்படியெல்லாம் வைக்கவேண்டும் என்று சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். அதைப்போல், வருங்கால ஊழியத்திற்காக, இப்பொழுதே கிடைக்கிற தருணங்களையெல்லாம் பயன்படுத்தி, சிந்திக்க வேண்டும், தூங்கி நேரத்தை வீணாக்கக்கூடாது என்றுதான் கர்த்தர் விரும்புகிறார். சுறுசுறுப்பாய் இருக்கிறவர்களுக்கு கர்த்தர் உதவுகிறார். ஆதாம், ஏவாளைப் படைத்து அவர்களை சும்மா, ஒரு தோட்டத்தில் வைத்து, கதை சொல்லிக்கொடுக்கவில்லை, தூதர்கள் கதை, தேவதைகள் கதை என்று சொல்லி, ஆடிப்பாடி மகிழப்பண்ணினவர் நம் தேவன் இல்லை. அவர் முதல் மனிதனையே பணிசெய்ய வைத்தவர், ஏதேன் தோட்டத்தை பண்படுத்த, பாதுகாக்க வைத்தார் என்று பார்க்கிறோம். பாவம் பிறப்பதற்கு முன்பேகூட, கர்த்தர் எதிர்பார்த்த விஷயம், மனிதன் செயல்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும், பயன்படுத்த வேண்டும் என்பதுதான். உங்கள் சபையை பண்படுத்தவேண்டும், காக்கவேண்டும், உங்கள் சபையிலும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

ஆகவே, நீங்கள் பணிபுரிந்துகொண்டிருக்க வேண்டும், இப்போது ஊழியத்திற்கு ஆயத்தப்படுகிற காலத்தில்கூட நீங்கள் ஒருவேளை போதகராக நியமிக்கப்படாமல் இருக்கலாம், அல்லது சுவிசேஷகனாக நியமிக்காமல் இருக்கலாம், எந்த ஊழிய பொறுப்பும்கூட கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் இந்த வேலையை செய்வதற்கு பொறுப்பு கொடுக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை, நானே செய்ய வருகிறேன் என்று

ஞாயிறு பாடசாலையில் வகுப்புகளை நடத்த முன்வந்தால், யாரும் தடுக்கப்போகிறது இல்லை. இல்லையென்றால், ஊழியப்பயிற்சியை நீங்களே முதலாவது உருவாக்கிக் கொள்ளுங்கள். தேவனுக்கு இப்பொழுது ஊழியம் செய்யுங்கள். பிறகு என்று ஒருபோதும் சொல்லாதிருங்கள், பிறகு பார்ப்பேன், இந்த நாளுக்கு பிறகு செய்வேன் என்று சொல்லாதீர்கள். உங்களுக்கு சம்பளத்தோடுகூட வேலை கிடைக்கவில்லை என்றால், உடனே நாளைக்கு புறப்பட்டுப்போய் அந்த வேலையைப் போய் செய்கிறீர்கள் இல்லையா? ஆக, உங்களுடைய வேலை முக்கியமான விஷயமாய் இருந்தது. அதைப்போன்று தேவனுடைய வேலையும் எவ்வளவு முக்கியமான வேலையாக இருக்கிறது. கொஞ்சத்திலே உண்மையாக இருக்கிற மனுஷனைத்தான் கர்த்தர், அநேகத்திலும் அதிகாரியாக வைப்பார் என்பதுதான் சத்தியம். ஆகவே, இப்போதிருக்கிற கொஞ்ச காரியத்திலும் உண்மையாய் இருங்கள். உங்களுக்கு பெரிய காரியம், பெரிய பலனாக காத்திருக்கிறது. வேதாகம கல்லூரியில் பயில வேண்டியது அவசியம் பிரியமானவர்களே. இன்றைய காலகட்டத்தில் ஒருவேளை, வேதாகமக் கல்லூரி என்றவுடனே, அநேகர் அதை வெறுக்கிறார்கள். ஆனால் சரியான வேதாகமக் கல்லூரி நிச்சயமாய் நல்ல ஊழியர்களை உருவாக்குகிறது என்பதற்கு நாங்களே சான்று. ஏனென்றால் நான் எம்.ஏ.பி.எட். படித்து, ஆசிரியர் வேலை பார்த்தவன். ஆனால் கர்த்தர் எனக்கு ஊழிய அழைப்பை தந்தபோது, முழுநேர ஊழியத்திற்கு வந்தேன். அப்போது, தேவன் வேதாகம கல்லூரியில் படிக்கும் வாய்ப்பை எனக்கு கொடுத்தார். சிலர் என்னை உற்சாகப்படுத்தினபடியால், நான் அதை படிக்க முடிவுசெய்து, படித்தேன்.

உண்மையிலேயே, அதன் மூலமாக எவ்வளவு சிறந்த ஊழியர்களை உருவாக்க முடியும் என்று கற்றுக்கொண்டேன். ஆனபடியால்தான், அநேகர் ஒரு குறிப்பிட்ட ஊழியரிடம் மட்டும்தான் வேதாகமக் கல்லூரி பயிலவேண்டும், இது இல்லாமல் ஒவ்வொரு விசுவாசியும் வேதாகமக் கல்லூரியில் பயிலவேண்டும் என்ற மாபெரும் தரிசனத்தை கர்த்தர் எனக்கு கொடுத்தார். அதனால்தான், நாங்கள் ஆன்லைனின் கொண்டுவந்தோம். கர்த்தருடைய கிருபையினால், இன்று உலகம் முழுவதிலும் அநேகர் பயில கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். இந்த மக்களெல்லாம் இவ்வாறு ஆன்லைனில் வேதாகம கல்லூரி இல்லையென்றால், படிக்க மாட்டார்கள். இவர்களெல்லாம் நேரடி வேதாகம கல்லூரிக்கு கட்டாயமாக போக மாட்டார்கள். ஏனெனில் வேலையோடுகூட ஊழியம் செய்கிற மக்கள் நம்மிடத்தில் பயில்கிறார்கள். குடும்ப தலைவிகள், வாலிப தம்பி, தங்கைகள் எல்லோரும் படிக்கிறார்கள். ஆக, அவர்கள் நல்ல சீஷர்களை உருவாக்க வாய்ப்பாக மாறிவிட்டது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நல்ல வேதாகமக் கல்லூரிகள் இருக்கிறது. நாங்கள் அதைச் செய்கிறோம், விசவாசத்தை தூண்டக்கூடிய, இரட்சிக்கப்பட்ட ஆவியின் அபிஷேகம் பெற்ற ஊழியம் செய்கிற மக்களை உருவாக்க முனைகிறோம். இறையியல் வழியாக வேதத்தை நாங்கள் ஆழமாகப் படிக்கப் போகிறோம். எல்லா விசுவாசிகளும் ஊழியம் செய்யவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். ஆக, நம்முடைய வேதாகமக்

கல்லூரி வேதாகமத்தை வலியுறுத்தி போதிக்கிறது. அதை படிக்கவைத்து, வேத அறிவைப் பெருக வைக்கிறது. அடுத்து, ஆவிக்குரிய ரீதியில் வளர்க்க தேவையான பாடங்கள் இருக்கிறது. சுவிசேஷகர்களாக, போதகர்களாக உருவாக்கக்கூடிய வேதாகம கல்லூரியாய், நம்முடைய கல்லூரி இருக்கிறது.

இதையடுத்து, இறையியல் வழியாக, சரியான பின்னணியோடு கற்றுக்கொள்ள சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆவியானவர் எந்த நோக்கத்தோடு வேத வசனத்தை கொடுத்தாரோ, அதை புரிந்துகொள்ள வைப்பதற்காக நாங்கள் முயற்சியெடுத்து, பாடங்களை வைத்திருக்கிறோம். எல்லாமே இறையியல் புத்தகங்கள் வழியாக, அருமையாய் கற்றுக்கொண்டு, அநேகர் கர்த்தருடைய ஊழியத்தை சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள். வேதாகம கல்லூரியில் பயிலவேண்டும் என்ற வாஞ்சை, ஒரு போதகருக்கு, ஒரு ஊழியருக்கு தேவை. உங்களுக்காக, ஆன்லைனிலேயே நம்முடைய வேதாகமக் கல்லூரி செயல்படுகிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்கேயும் நீங்கள் அலையவேண்டியது இல்லை. பாடங்களை ஆன்லைனில் ஆடியோ வைத்திருக்கிறோம். உங்களுக்கு வசதிப்பட்ட நேரத்தில் கேட்டு, வீட்டிலேயே இருந்து, பரீட்சை எழுதி தபாலில் அனுப்பினால் போதும், கட்டணம், எங்கும் இல்லாத அளவுக்கு, குறைந்த கட்டணமே வைத்திருக்கிறோம். குறிப்பாக, நீங்கள் B.Th. படிக்க வேண்டும் என்று விரும்பினால், முதல் மாதம் ரூபாய் 185/- மட்டும் செலுத்தி, படிப்பை ஆரம்பிக்கலாம். இந்த கட்டணத்தை நீங்கள் மாதாமாதம் தொடர்ச்சியாக, 3 வருடங்கள் செலுத்தி, வீட்டிலிருந்தே படித்து, பட்டம் பெற்றுவிடலாம். இந்த கட்டணமானது, நுழைவு கட்டணம், மற்றும் தேர்வுக்கட்டணம் போன்றவற்றையும் உள்ளடக்குகிறது. ஆகவே, நீங்கள் ஒவ்வொரு மாதமும் வெறும் 185/- ரூபாய் மட்டும் செலுத்தி படித்துக்கொள்ளலாம். தேவனுடைய காரியத்தைக் கற்றுக்கொள்வதற்கு செலவழிக்க நாம் யோசிக்கவே கூடாது. இது ஆவிக்குரிய ரீதியில் வளர்வதற்கு உதவி செய்கிறது. நம்முடைய பிள்ளைகளை எல்கேஜி, யூகேஜி. படிப்பதற்கு 600 வரை மாத கட்டணம் செலுத்த தயாராக இருக்கிறோம். நாம் கர்த்தருக்குள் உருவாக ஒரு 185/- ரூபாயை மாதக்கட்டணமாக கொடுத்து, B.Th. படிப்பதற்கு நாம் யோசிக்க கூடாது. நீங்கள் இதை சற்று யோசித்துப் பாருங்கள்.

தேவனுடைய காரியத்தை எந்த இடத்தில் வைத்திருக்கிறோம் என்று நாம் சிந்தித்தாலே உங்களுக்கு புரியும். தேவகாரியத்தை முதலிடத்தில் வைத்தீர்களானால், கர்த்தாவே, இது என்னுடைய ஆவிக்குரிய வாழ்வும், மற்றவருடைய ஆவிக்குரிய வாழ்வும் வளர்வதற்கு தேவையான படிப்பு. இதற்கு நான் நேரத்தை செலவழிப்பேன், நேரமே எனக்கு இல்லையென்று சொல்லக்கூடாது. ஒரு மருத்துவன், மருத்துவராய் மாறுவதற்கு MBBS என்ற பட்டப்படிப்பை 5 ஆண்டுகள் வரை படித்து, அதற்காக செலவிட வேண்டும். மூன்றாண்டுகள் படிப்பது ஒன்றும் கஷ்டமில்லை பிரியமானவர்களே. ஒரு வாஞ்சை மட்டும்

வேண்டும், வேதத்தை நான் மறுபடியும் அறிந்து சரியாய் போதிக்க வேண்டும். நம்முடைய வேதாகம கல்லூரியில் வேதத்தை பிரசங்கிப்பது எப்படி? அதை சரியாய் வியாக்கியானம் செய்வது எப்படி? என்று தனித்தனி புத்தகங்கள் வடிவில் நாம் வைத்து, கற்று கொடுக்கிறோம். பவுலின் நிருபங்கள் மற்றும் வேதத்தை முழுமையாய், சரியாய் புரிந்துகொள்வதற்கு, பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று பல விதங்களில் நாம் கற்றுக் கொடுக்கிறோம். வேதத்தை கற்றுக்கொள்வதற்கு ஒரு வாஞ்சை வேண்டும், இனி எங்குபோய் படிக்கப்போகிறோம் என்று சொல்லக்கூடாது. தேவனுடைய ஊழியம் என்றால், அது சிறந்த வேலை, சிறந்த வேலைக்கு சிறந்த விதமாய் நம்மை ஆயத்தப்படுத்தவேண்டியது அவசியம். கிரஹாம் பெல் என்றதொரு பெரிய ஊழியர் ஒருவர் கூறும்போது, 'நான் என்னுடைய ஊழியத்திற்கென ஆயத்தப்பட அதிக ஆண்டுகள் செலவழிக்க முடியாமல் போய்விட்டதே என்று வருந்துகிறேன்' என்று எழுதி வைத்திருக்கிறார்.

பிரியமானவர்களே, இன்று உங்களுக்கு நேரமிருக்குமென்றால், ஏன் இன்னும் ஊழியத்திற்கு வராமல் இருக்கிறீர்கள்? இந்த காரியங்களையெல்லாம் கட்டாயமாக செய்யுங்கள். நேரடியாகத்தான் நமக்கு இந்த நாட்களில் இறையியல் வகுப்புகளுக்கு போக முடியவில்லை, வீட்டிலேயே, நாம் இருக்கிற இடத்திலிருந்து, ஆன்லைன் மூலம் வேதாகம கல்லூரி இருக்கிறது என்றால், அதை நாம் ஏன் பயன்படுத்தக்கூடாது? என்றெல்லாம் யோசித்துப் பாருங்கள். நேரத்தை கர்த்தருக்காக கொடுங்கள், செல்வத்தை கர்த்தருடைய காரியத்தை அறிவதற்காக செலவிடுங்கள். எல்லாம் உங்களுக்கு ஆசீர்வாதமாய் மாறும் என்பதில் சந்தேமில்லை. உங்கள் ஊழியத்திற்கு நீங்கள் ஆயத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம். எந்தவொரு காரியத்திற்கும் ஆயத்தப்பட வேண்டியது உங்களுக்கு தெரியும். ஆகவே ஜெபத்தோடு ஆயத்தப்படுங்கள். நீங்கள், வருகிற காலங்களுக்காக, இப்பொழுது மூலதனமிடுகிறீர்கள் என்றுதான் அதற்கு அர்த்தம். நீங்கள் நேரத்தை செலவிடுகிறீர்கள் என்றால், அது மூலதனம் பண்ணுகிற விஷயமாக இருக்கிறது. நீங்கள் பணத்தை செலவிடுகிறீர்கள் என்றால், ஆத்துமாக்களை கொள்ளைப்பொருளாக பெறப் போகிறீர்கள் என்று அர்த்தம். நீங்கள் செய்கிற எல்லாவற்றிலும் கர்த்தரை நம்பி நன்மை செய்யுங்கள். அவர் உங்களை வர்த்திக்கப்பண்ணுவார் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள். விசுவாசம் என்பது, எனக்கு நல்லது நடக்கும் என்பது மாத்திரமல்ல, அந்த நல்லது நடப்பதற்காக, அநேக விஷயங்களை நாம் மூலதனமாய் இடவேண்டியது அவசியமாக இருக்கிறது. கர்த்தர்தாமே இன்னும் அதிகமாக ஊழியத்தில் ஆயத்தப்படுத்தப் போகிறார், ஆயத்தப்படுகிற உங்களை ஆசீர்வதித்து சிறப்பாக பயன்படுத்தப்போகிறார். ஜெபத்தோடு தொடர்ந்து நமது பாடங்களை படியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பதைக் காண்பீர்கள். ஆமென்!!

## கேள்விகள்:-

1) ஊழியர் திருநிலைப்படுத்தப்படுதலுக்கான ஆயத்தத்தில், பயிற்சியெடுத்து, தகுதியுள்ளவர்களாக மாற வேண்டியதைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
2) ஊழியர் திருநிலைப்படுத்தப்படுதலுக்கான ஆயத்தத்தில், சிறப்பாக செய்ய முடிகிறதில் முன்னேற வேண்டியதைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
3) ஊழியர் தன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாக இருக்கவேண்டியதைக் குறித்து வசன ஆதாரத்துடன் கூறுக?
4) ஊழியர் திருநிலைப்படுத்தப்படுதலின் ஆயத்தத்தில், வளைந்து கொடுத்து, இணக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டியதைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
5) தன்னைத்தான் வெறுத்து, என்று சொல்லுகிறதின் அர்த்தம் என்ன?
6) திருநிலைப்படுத்தப்படுதலின் சுயத்திற்கு மரித்த நல்ல போதகர்களாக ஆயத்தப்பட வேண்டியதின் அவசியத்தைக் குறித்து விளக்கமாக கூறுக?
7) திருநிலைப்படுத்தப்படுதலில், ஊழியர் தன்னை பொறாமைக்கு விலக்கி காத்துக்கொள்ள வேண்டியதைக் குறித்து வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
8) ஊழியர்கள் திருநிலைப்படுத்தப்படுதலுக்கான ஆயத்தத்தில், சிறப்பாக செய்ய வேண்டியதற்கும், முடிந்தவரை செய்ய வேண்டியதற்குமான வித்தியாசத்தை உருவாக்க வேண்டியதைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
9) திருநிலைப்படுத்தப்படுதலின் ஆயத்தத்தில், ஊழியர் அதிகமாக வெளி பயணங்களை செய்ய வேண்டியதின் அவசியத்தை குறித்து கூறுக?
10) காலதாமதம் செய்யாமல், உடனே ஊழியத்தை செய்ய ஆரம்பிக்க வேண்டியது எவ்வாறு ஊழியரின் திருநிலைப்படுத்தப்படுதலுக்கான ஆயத்தமாக இருக்கின்றது என்பதனை விளக்கமாக கூறுக?
11) ஊழியத்திற்கான ஆயத்தத்தைக் குறித்து, கிரஹாம்பெல் என்ற பெரிய ஊழியரின் கூற்று என்ன?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - 7

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நாம் ஊழியத்திற்கு போகும் முன்னர் நாம் அழைக்கப்பட வேண்டியது அவசியம் என்று நாம் கற்றோம். அதிலுள்ள அதிகமான காரியங்களை நாம் வலியுறுத்தி பார்த்து வருகிறோம். நாம் கடந்த வகுப்பிலே சிறந்த கல்வி ஞானத்தை, குறிப்பாக வேதாகம கல்லூரியில் பயிலவேண்டியது மிகவும் முக்கியமானது, மட்டுமல்ல அதுவொரு ஆயத்தமாகவும் இருக்கும் என்று சொல்லி கற்றோம்.

***அடுத்து 11-வது காரியமாய் நாம் சில காரியங்களை பார்க்க இருக்கிறோம். அது நம்முடைய ஸ்தல சபையிலே, நாம் இருக்கிற சபையிலே, நாம் முழு ஈடுபாட்டுடன் செயல்படுகிறவர்களாய் காணப்பட வேண்டும் என்று நாம் சற்று சிந்திக்க வேண்டியது அவசியம்.*** உங்களை வளர்த்து எடுத்தது, உங்களுடைய ஸ்தல சபை. அங்கேதான் ஆவிக்குரிய வளர்ச்சியை பெற்றீர்கள். அங்கே, அநேக காரியங்கள் ஆவிக்குரிய ரீதியிலே கற்றுக் கொடுக்கப்பட்டது, மட்டுமல்ல அழைப்பும் உங்கள் சபையிலிருந்து வருகிறதாக இருக்கிறது. அதை நீங்கள் சற்று உணரவேண்டும். அது நாம் ஜெபிக்கிற இடம், அது அதிக ஈடுபாடு கொள்கிற இடம். அநேக ஆவிக்குரிய தரிசனங்கள், வேத வசனத்தின் அடிப்படையில், பிரசங்கத்தின் அடிப்படையிலே, அந்த சபையிலிருந்துதான் உங்களுக்கு கிடைத்தது. ஆகவே அழைப்பு அங்கிருந்துதான் உங்களுக்கு வந்திருக்கிறது. ஆகவே உங்களுடைய சொந்த சபையை ஒருபோதும் குறை சொல்லாதீர்கள். அது சரீரமாகிய சபை மட்டுமல்ல, ஐக்கியம் கொள்ளுகிற இடம். நீங்கள் ஒருவேளை உங்கள் சபையைத் தாண்டி, ஊழியத்திற்கு அழைக்கப்பட்டாலும்கூட, உங்கள் ஸ்தல சபையின் அந்த போதகரை அந்த இடத்திலிருக்கிற குருவானவரையும் நீங்கள் மதிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவர்களுக்கு கனத்தையும் கொடுத்து, அவர்களுடைய ஆலோசனையையும், வழிநடத்துதலையும் எப்பொழுதும் கேட்டு நடந்துகொள்ள பொறுப்புள்ளவர்களாக இருக்கிறீர்கள். சபைக்கு நீங்கள் பொறுப்புடையவர்களாய் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்று சொல்ல விரும்பகிறேன்.

உங்களுக்கு மேலேயிருக்கிற ஒருவரை, கண்காணியாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அது உங்கள் சபை மக்களாக இருக்கலாம், உங்களை அறிந்தவர்கள், உங்களுக்காக ஜெபிக்க, பலவிதங்களில் உங்களுக்கு உதவி செய்கிறவர்கள், உங்கள் சொந்த திருச்சபையாரே. ஆகவே அவர்களுடைய பங்களிப்பு உங்களுக்கு அவசியமாய் இருக்கிறது. நீங்கள் ஊழியத்திற்கு போவதற்கு ஒரு விதத்திலே நிச்சயமாக அவர்கள் தூண்டுகோலாய் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, உங்களுக்கும், பண விஷயத்திலும்கூட,

பல விதங்களில் உங்களுக்கு துணையாக நின்று உதவி செய்கிற மக்களாக அவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் உங்களுடைய சபைக்கு ஒரு பங்களிப்பாக இருக்கவேண்டும், அதாவது உங்களுடைய பங்களிப்பு, உங்களுடைய ஊழியம், உங்களுடைய ஜெபக்குறிப்பு நீங்கள் அதற்காய் ஜெபிக்கிறது, மக்கள் உங்களுக்காய் ஜெபிக்கிறது, இப்படிப்பட்ட காரியங்கள் இருக்கவேண்டியது அவசியம். உங்கள் திருச்சபையார், உங்களுக்காய் ஜெபிக்கும்பொழுது மிகவும் கரிசனையோடு ஜெபிக்கிறார்கள். காரணம், நீங்கள் அந்த சபையைச் சார்ந்தவர்கள். மட்டுமல்ல அந்த சபையிலே உங்களுக்கு பொறுப்பிருக்கிறது. உங்களைப் பற்றி அவர்கள் அறிந்தவர்கள், புரிந்தவர்கள், மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அநேகர் இருக்கிறதே அந்த சபையில்தான். ஆகவே, நீங்கள் அவர்களின் சேவையை புறக்கணியாதீர்கள். எந்த இடத்தில் உங்கள் ஊழியத்தை நீங்கள் செய்வதாக இருந்தாலும்கூட, உங்களின் பங்களிப்பு உங்கள் சபையில் இருக்கட்டும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். அதிலே நீங்கள் ஒன்றாக இணைந்து ஜெபிக்கிறவர்களாய் வீடுகளுக்கு வரும்போது, உங்கள் சபையிலே நீங்கள் பங்கு பெறுகிறவர்களாய், அங்கே உங்களுடைய கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுகிறவர்களாய், உங்களுடைய ஜெப குறிப்புகளை அனுப்புகிறதாய் இருக்க வேண்டியது அவசியம்.

***12*-வது காரியமாய் சொல்லப்படுகிற இந்த காரியமானது, நடைமுறையான ஆலோசனையாகவும், தேவையானதாகவும் இருக்கிறது. நீங்கள் உலக அனுபவங்களைப் பெற முடிந்தவரை பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.** இதைக் கேட்கும்போது, உங்களுக்கு ஒருவேளை வித்தியாசமாகத் தோன்றலாம். பிரியமானவர்களே, ஊழியத்திற்கு உலக அனுபவங்கள் பல விதத்தில் உதவி செய்கிறதாக இருக்கிறது. நீங்கள் நிறுவனங்களில் வேலைசெய்த அனுபவங்கள், இல்லாவிட்டால், சில வியாபாரத்தில் ஈடுபட்ட அனுபவங்கள், நீங்கள் அதில் பெற்ற கசப்பான, அதேபோல நல்ல அனுபவங்கள் நிச்சயமாய் உங்கள் ஊழியத்தின் பகுதிகளில் உதவி செய்வதாய் இருக்கிறது. நான் ஏன் இப்படி சொல்கிறேன் என்றால், என்னை கர்த்தர் அவ்விதமாக வளர்த்தெடுத்த அந்த காரியத்தை அறிந்திருக்கிறேன். அதேபோல அப்போஸ்தலனாகிய பவுலையும்கூட, கர்த்தர் அவ்விதமாகத்தான் வளர்த்தெடுத்தார். அவர் ஒரு யூதனாக இருந்தபோதிலும், கிரேக்க கலாச்சாரத்தில் வளர்க்கப்பட்டார். யூதர்கள், புறஜாதியாரை வெறுப்பார்கள், மட்டுமல்ல புறஜாதியார் யூதர்களை வெறுப்பார்கள். ஆனால் யூதர்களுக்கும் வேதம் தெரியும். ஆகவே கர்த்தர் இந்த மனிதர்களை தெரிந்துகொண்டு பயிற்றுவித்தார் என்று நாம் சொல்ல வேண்டும். இரண்டு கலாச்சாரத்திலும் அவர் வளர்க்கப்பட்டார், அவருக்கு யூதர்களைத் தெரியும், யூதர்களுக்கும் அவரைத் தெரியும். அதேவேளையிலே, கிரேக்கர்களுக்கும், புறஜாதியாருக்கும் சத்தியத்தைக் கொண்டு போவதற்கு கர்த்தர் இந்த மனிதனைத்தான் தெரிந்தெடுத்து பயன்படுத்தினார். அனுபவங்களை கிரேக்க மக்கள் மத்தியிலே கொடுத்தார்

என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இந்த மனநிலை அவருக்கு தெரியும். அந்த மக்களுக்கு எவ்விதமாய் சத்தியத்தைக் கொண்டுபோக வேண்டுமென்று அவருக்கு தெரியும்.

அதேபோலத்தான் கர்த்தர் கடந்த ஆண்டுகளில் *2001* வரை, என்னுடைய எம்.எட். படிப்புகளுக்கு பிறகு பள்ளியில் ஆசிரியராக வைத்தார், பிறகு பள்ளியில் முதல்வராக வைத்தார். ஒரு பள்ளியை ஆரம்பிக்கவும் வைத்தார், இதிலே பெற்ற நிர்வாக அனுபவங்கள், பல எதிர்ப்பான சூழ்நிலைகளை, எப்படி சந்தித்தோம் என்பதையெல்லாம் நினைவில் கொண்டுவந்து, கர்த்தர் உதவி செய்கிறார். இந்த அனுபவங்களை இன்றும் அப்படியே பயன்படுத்துகிறோம் என்று சொல்வதைவிட, அது ஒரு நம்பிக்கை நமக்கு தந்திருக்கிறது. உலக மனிதர்களையே சமாளித்து விட்டோம். ஆவிக்குரிய ரீதியில் உள்ள மக்களை, நீதியுள்ள மக்களை, சாந்தமான மக்களை நடத்துவது ஒன்றும் கடினமான வேலையில்லை என்பதை உணர்ந்து செயல்படுவதற்கு கர்த்தர் உதவியாக இருக்கிறார். மட்டுமல்ல காரியங்களை எவ்விதமாக செயல்படுத்தவேண்டும், என்ன செய்ய வேண்டும்? என்று ஏற்கனவே பெற்ற அந்த அனுபவங்களை வைத்து, இப்போது வேதாகம கல்லூரியை நடத்தவும், வேதாகம பள்ளியை நிர்வகிக்கவும், மிகவும் உதவியாக இருக்கிறது, பாருங்கள். ஆகவே, ஒரு இடத்திற்கு கொண்டுவரும் முன்னர் உங்களை அதன் வழியாகத்தான் கட்டாயமாக நடத்திக்கொண்டு வருவார், என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதிலே உங்கள் அழைப்புகளை புரிந்துகொள்ள முடியும். அதிலேயே நிறைய காரியங்களை உங்களுக்கு கற்றுக்கொடுத்தவைகளிலிருந்து, நீங்கள் அதில் கற்றுக்கொள்ள வேண்டிய நேரத்தில், கற்றுக்கொள்ளவேண்டும். அதைத்தான் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

ஊழியத்திற்கு ஆயத்தப்படுகிறேன் என்று முயற்சிக்கிறபோது, பரலோகத்திலிருந்து எல்லா காரியங்களும் வெளிப்படுத்தவேண்டும் என்றும், கர்த்தர் பரலோகத்திலிருந்து பேசவேண்டும் என்றும் நினைப்பது மட்டும் போதாது. உங்களுக்கு கொடுக்கிற அழைப்பிலிருந்தும் கர்த்தர் வெளிப்படுத்துகிறார் என்பதுதான் உண்மை, வேதத்திலிருந்து வெளிப்படுத்துகிறார், அது உண்மை, நாம் பெறுகிற அனுபவத்திலிருந்து கர்த்தர் வெளிப்படுத்துகிறார். எந்த இடத்தில் கர்த்தர் உயர்த்தி வைத்திருக்கிறாரோ, அந்த இடத்தின் அனுபவங்களை முழுமையாய் பெற்றுக்கொள்ள நீங்கள் முயற்சி எடுங்கள். மோசேயை அரண்மனைக்கு (அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேரை மீட்டுக்கொண்டு வரும்படி) கொண்டுபோகும் முன்னரே, வளர்த்துக்கொண்டு வந்தார். அங்கே இலவசமாய் பார்வோன் குமாரத்தியின் மகனாய் இருந்தபடியால், மீண்டும் அவர் அங்கே போய் பார்வோனை பார்க்கவேண்டுமென்று சொன்னபோது. அந்த கோட்டை கதவுகள் திறந்தன. காரணம், அவர் ஏற்கனவே அங்கே இருந்தார், மக்களுக்கு அவரை கர்த்தர் அறிமுகப்படுத்தி வைத்திருந்தார். இவருக்கோ அரண்மனை என்றால் என்ன? என்று தெரியும், எப்படி அணுகவேண்டுமென்று தெரியும்? எல்லாமே கர்த்தர் அனுபவத்தில் கற்றுக்

கொடுத்திருந்தார் பிரியமானவர்களே. உங்களை கர்த்தர் எங்கே வைத்து வளர்க்கிறார். எந்த இடத்தை குறித்து பாரம் தருகிறாரோ, அந்த அனுபவங்களையெல்லாம், நீங்கள் சேமித்து வைத்துக்கொள்ளுங்கள். எதிர்காலத்தில் உங்களை ஊழியத்திற்கு பயன்படுத்தத்தான் கர்த்தர் கற்றுக்கொடுத்துக்கொண்டு இருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள். நம்முடைய வாழ்விலே பெறுகிற எந்த அனுபவமாக இருந்தாலும், எந்த படிப்பாக இருந்தாலும், அது நிச்சயமாய் வருகிற நாட்களுக்கு கர்த்தர் தரப்போகிற ஊழியங்களுக்கு பிரயோஜனமானவைகளைத்தான் கற்றுத் தருகிறார், கர்த்தருடைய ஊழியத்திற்காக அவைகள் கற்றுத்தரப்படுகின்றன என்பதை மறந்து விடாதீர்கள்.

***13*-வது காரியம், பொறுமையாக காத்திருங்கள். கர்த்தருடைய ஊழியத்திற்கு ஆயத்தப்படுகிறபோது, இதுவும் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கிறது. பொறுமையாக காத்திருங்கள்,** கர்த்தருடைய வேலைக்காக காத்திருந்து, பிறகு ஈடுபடுகிற காரியத்தை சொல்கிறார். கர்த்தருக்கு காத்திருக்கவேண்டும், அவருடைய வேளைக்கு காத்திருக்க வேண்டும். அதாவது எந்த நேரத்தில் போக சொல்லுகிறாரோ, அந்த நேரத்தில் போகவேண்டும். ஆனால் ஒன்றை கவனிக்க வேண்டும். அதற்காக காத்திருக்கிறேன், காத்திருக்கிறேன் என்று சொல்லி, காத்திருக்கவே கூடாது, அநேகரைப் பார்த்தால், அவர்கள் தவறுகிற இடமே இதுவாகத்தான் இருக்கிறது. அதனால்தான் நான் இதையொரு எச்சரிக்கையாகச் சொல்கிறேன். இன்னும் வேளை வரவில்லை, கர்த்தர் இன்னும் எனக்கு வாசல் திறக்கவில்லை என்று கருதி, வீட்டிலேயே சும்மா உட்கார்ந்து இருப்பார்கள். என்னுடைய ஊழிய அழைப்பின் அடிப்படையில்தான் செய்ய வேண்டும் என்பது உண்மைதான். அது தவறே இல்லை, ஆனால் தேவன் எந்தெந்த விதத்தில் நடத்துவார் என்று உங்களுக்கு தெரியும், அவரை நம்பி முதல் அடி எடுத்து வைக்க வேண்டும் என்பது அவசியம். அதற்கு காத்திருக்க வேண்டும், ஜெபம் செய்து கேட்க வேண்டும். ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட நான், தேவனோடு அதை உறுதி செய்துகொண்டேன், என்னோடு நீர் பேசியிருக்கிறீர், எனக்கு ஆத்தும பாரம் கொடுத்து இருக்கிறீர், ஆகவே ஏற்ற வேலையைச் செய்ய விரும்புகிறேன். நீர் என்னை சரியான நேரத்தில் எடுத்து பயன்படுத்தும் என்று சொல்லி, அந்த எஜமானிடத்தில் நீங்கள் ஜெபிக்க வேண்டியது அவசியம். அதற்கு வாசல் திறக்கும்போது, அந்த வாசலை பயன்படுத்த வேண்டியதும் அவசியம். இந்த இடத்தில்தான் உங்களுடைய அந்த சரியானதொரு அறிவு செயல்பட வேண்டியது அவசியம்.

ஒரு கதை சொல்வார்கள், ஒரு சகோதரி வெள்ளத்தில் மாட்டிக்கொண்டார்கள். மாடியிலிருந்து ஜெபம் செய்து கொண்டிருந்தார்கள். கர்த்தாவே என்னைக் காப்பாற்றும், எனக்கு இந்த சூழலிலிலிருந்து விடுதலை தாரும் என்று சொல்லி, அவர்கள் காத்திருந்து ஜெபிக்கிறார்கள். குறிப்பாக, அந்த வேளையில், அங்கே ஒரு சிறிய படகு தண்ணீரில்

போய்க்கொண்டிருந்தது, அந்த படகில் இருந்த நபர், கீழே இறங்கி வாருங்கள் சகோதரி, நான் உங்களைக் காப்பாற்றுகிறேன் என்று கூப்பிட்டார். அந்த சகோதரி உடனே இறங்கி வரவில்லை. அதன்பின்பு, வெள்ளமானது அதிகமாக பெருக்கெடுத்தது. அந்த சகோதரி மீண்டும் ஜெபித்தார்கள், கர்த்தாவே, என்னைக் காப்பாற்றும் என்று கூப்பிட்டார்கள். வெள்ளம் அதிகமானதினால், ஒரு ஹெலிக்காப்டரில் வந்து, அவருக்கு உதவி செய்து மீட்டுவிடுகிறோம் என்று ஒரு குழுவினர் சொன்னார்கள். உங்களை நாங்கள் காப்பாற்றுவதற்கு முயற்சியெடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ஆனால், அந்த சகோதரி மறுத்துவிட்டார்கள். ஆனால் தொடர்ந்து உறுதியாய் ஜெபம் செய்துகொண்டு இருந்தார்கள். கர்த்தர் என்னை எப்படியாவது காப்பாற்றுவார், என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது, ஹெலிக்காப்டரில் இருந்தவர்கள் மற்றவர்களை காப்பாற்றப்போய் விட்டார்கள். அப்போது இவர்கள், கர்த்தரிடத்தில் என்ன ஆண்டவரே, உம்முடைய பிள்ளையாகிய என்னைக் காப்பாற்றுவதற்கு எந்த முயற்சியும் எடுக்க மாட்டேன் என்கிறீரே, என்னைக் காப்பாற்றும் என்று புலம்ப ஆரம்பித்தபோது, கர்த்தருடைய ஆவியானவர், அவரது உள்ளத்தில் சொன்னாராம், உன்னைக் காப்பாற்றுவதற்குத்தான், இரண்டு முறை நான் ஆட்களை அனுப்பினேன், நீ அந்த வாய்ப்பையெல்லாம் தவற விட்டு, பரலோகத்திலிருந்து தேவதூதர்கள் இறங்கி வந்து, அப்படியே உன்னை ஆச்சரியமாய் தூக்கிக்கொண்டு போவார்கள் என்று நினைத்தாய். அப்படி ஒன்றும் நடக்காது என்று சொன்னார் என்று ஒரு கதையை ஒரு பத்திரிக்கையில் படித்தேன்.

பிரியமானவர்களே, இன்று அநேகர் இப்படித்தான் எதிர்பார்க்கிறார்கள். தேவனுடைய நடத்துதல், தேவனுடைய ஊழியத்தின் வாசல் திறப்பு அற்புதமாய் அப்படியே தேவ தூதன் வந்து திறந்து வைக்கவேண்டும் என்று சிலர் நினைக்கிறார்கள். நீங்கள் கொஞ்சம் கண்களை ஏறெடுத்து பாருங்கள். நீங்கள் ஊழியத்திற்கு போகும்போது, எத்தனையோ முறை கர்த்தர் வலியுறுத்தி உங்களுக்கு வாய்ப்புகளைக் மனிதர்கள் மூலமாய் கொண்டுவந்து தருவார். சில ஊழியர்கள் மூலம் பேசுவார், தீர்க்கதரிசனமாக சொல்வார். உங்களுக்கு மனதில் இப்போது போகவேண்டும் என்று தோன்றும், அப்போதெல்லாம், அப்படியே உட்கார்ந்து விட்டு, ஆண்டவர் எனக்கு வாசலை திறக்கவில்லை என்று சொல்லக்கூடாது. அப்போது ஜெபிக்க வேண்டும், வாசல் திறக்கப்படுகிறதை, எட்டிப்பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். வாய்ப்பு வரும்போது, உடனே பிடித்துக்கொள்ள வேண்டும். இதைச் செய்யாதவர்களுக்கு, வயது போய்க்கொண்டே இருக்கிறது, இன்றைக்கு வரைக்கும் அவர்கள் போகாமலேயே இருக்கிறார்கள், இன்றைக்கு வரைக்கும் ஊழியம் நடைபெறாமல் இருக்கிறது. அதை நாம், விமானம் தரையிலிருந்து மேலெழும்புகிற நிகழ்வை, டேக் ஆ∴ப் என்று சொல்லுவோம். முதலில் விமானம் தரையில் செல்லும், ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு பின்பு, அது வேகமெடுத்து டேக் ஆ∴ப் ஆகும். அதாவது, அதனுடைய சக்கரம்

தூக்கியெழும்பி, முன்பகுதி முன்னோக்கி உயரே எழும்ப ஆரம்பிக்கும். இப்பொழுது பயணிகள் அனைவருக்கும், ஒரு அறிவிப்பைக் கொடுப்பார்கள், இப்பொழுது விமானம் டேக் ஆ.்.ப் ஆகப்போகிறது, அனைவரும், உங்களது இருக்கை பெல்ட்டை கவனமாகப் போட்டுக்கொண்டு, முன்னும் பின்னும் போகாதபடி இருங்கள் என்பார்கள். இதன்பின்புதான், விமானம் வானத்தில் பறக்க ஆரம்பிக்கும். ஆனால், இன்றைக்கு நிறைய பேர், கர்த்தருடைய ஊழியத்தில், தான் அழைக்கப்பட்டதைக் கேட்காமலேயே, பயங்கர வேகத்தில் சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். கர்த்தருக்காக ஓடப்போகிறேன், ஆடப்போகிறேன், அதைச் செய்யப்போகிறேன் என்று சுற்றிக்கொண்டே இருக்கிறார்களேயொழிய, டேக் ஆ.்.ப் ஆகாமல் கீழேயே நடந்துகொண்டிருக்கிறார்கள். விமானம் இந்த பூமியில் சுற்றிக்கொண்டிருப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. அது வானில் பறப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதே. இன்றைக்கு அநேக ஊழியர்களும் அப்படித்தான் இருக்கிறார்கள், ஜெபிக்கிறோம், ஜெபிக்கிறோம், காத்திருக்கிறோம், அழைப்பு வரவேண்டும், தீர்க்கதரிசனமாக வரவேண்டும் என்பதாக இருக்கிறார்கள். வாக்குத்தத்தம் வந்த பிறகும்கூட, அவர்களால் நகர முடியவில்லை. காரணம், அது தேவ காரியம், கர்த்தர் செய்துவிடுவார், பயமாயிருக்கிறது, நான் போனால், எங்கே கஷ்டப்பட்டுவிடுவேனோ என்று பயப்படுகிறேன் என்று பலரும் பயப்பட்டு, உட்கார்ந்துகொண்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். இது வேற மாதிரி தீர்க்கதரிசனம் வரட்டும் என்று எதிர்பார்க்கிற காரியமாக இருக்கிறது. கர்த்தர் உங்களை நாளைக்கு வீடு கட்ட சொல்கின்றார், நீ எழுந்து போ, மகனே, உனக்கு இன்னும் நல்லதொரு கடன்வாய்ப்பு தரப்படுகிறது, என்று சொன்னால் போதும், பறந்துகொண்டு நாளைக்கே, வண்டியை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். தன் காரியம் என்று சொன்ன உடனேயே, செயல்படுவார்கள். ஆனால், கர்த்தருடைய காரியம் என்றால்தான், அவர்கள் நகர மறுக்கிறார்கள்.

பிரியமானவர்களே, நன்றாக யோசித்துப் பாருங்கள். நீங்கள் ஏற்ற வேளையிலே செயல்படுவதற்கு, கர்த்தருக்கு உங்களை அர்ப்பணியுங்கள். ஆண்டவரே நான் முந்திவிடவும் கூடாது, பிந்திவிடவும் கூடாது, சிலரைப் பார்ப்பீர்களானால், துரிதமாய் அவசரப்பட்டு வேலைகளையெல்லாம் செய்வார்கள். அதுவொரு பக்கம், தவறாகவே இருக்கிறது. ஐயோ, இந்தியா அழிகிறது என்று, உணர்ச்சிவசப்படுகிற கூட்டமெல்லாம் மறுபுறம் இருக்கத்தான் செய்கிறார்கள். ஊழியர்கள், நாங்கள் அவ்வாறுதான் சொல்லுவோம், நிச்சயமாய் மக்கள் தொடப்பட வேண்டும் என்பதற்காக, இந்தியா அழிகிறதே, சீக்கிரம் வாருங்கள் என்று சொல்கிறது உண்மைதான், அவ்வாறுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால், யாருக்காவது ஒருவருக்கு கர்த்தர் அந்த வார்த்தையை கொடுத்திருப்பார். நாம் அதைச் சொல்லத்தான் வேண்டும். அதுவொரு தூண்டுதலை கொடுப்பதற்கு, இந்த வார்த்தையை கர்த்தர் தருவார். வட இந்தியா போன சில தம்பிமார்களைத் தெரியும்? திருநெல்வேலியிலுள்ள ஜாண்ஸ் கல்லூரியில் படித்த சில

தம்பிமார்கள், எங்களோடு கூட ஊழியத்திற்கு வருவார்கள். அவர்களெல்லாம் ஊழியத்திற்கு அர்ப்பணித்து இருக்கிறேன் என்று சொல்லி, ஒரு மிஷனெரியோடு நாங்கள் ஊழிய பணித்தளத்திற்கு போகப்போகிறோம் என்று முடிவெடுத்து, அவ்வாறு அர்ப்பணித்து போனவர்களும் உண்டு. அவ்வாறு அங்கு சென்று, ஒருமாதம் கூட ஆகவில்லை, அடுத்த மாதமே ஓடிவந்து விட்டார்கள். ஏனென்று பார்த்தால், அவர்களுக்கு உள்ளார்ந்த வேதத்தின் அடிப்படையிலான இல்லாவிட்டால், சரியான சமயத்தில் போகவேண்டும் என்ற அர்ப்பணிப்பு, அவர்களிடத்தில் இல்லை என்பதை நான் கண்டுபிடித்தேன்.

ஏதாவது ஒன்றைச் சொன்னால், அப்படியே பறந்துபோய் கெட்டுப் போய்விடுகிறார்கள், அவர்கள் அவசரப்பட்டு செய்துவிடுகிறார்கள். அவ்வாறு அவசரப்பட்டு செய்துவிட்டு, பின்வாங்கக் கூடாது. அதேவேளையில், அதிக நாட்கள் காத்திருந்து, காத்திருந்து, நாட்களை வீணாக்கக்கூடாது. கர்த்தரிடத்தில் நீங்கள் கேட்கவேண்டும், ஆண்டவரே, சரியான சமயத்தில், சரியானபடி செய்ய என்னை பயன்படுத்துகிறவரை, என்னை ஏற்றவேளையில், அதாவது நீர் என்னை தாமதம் பண்ணச்சொல்வீரானால், நான் தாமதிக்கிறேன் ஆண்டவரே. எப்படியாவது என் கையைப் பிடித்து வழிநடத்திச் செல்லும், நான் மாறாதபடிக்கு, என்னை நடத்திச்சென்று, என்னை நீர் பயன்படுத்த முடியும் என்று சொல்லி, அவ்வாறே செயல்பட விரும்பிய விசுவாசிகள் அநேகர் இருக்கிறார்கள். உங்களது அழைப்பு எப்படியிருக்கிறது? அந்த இடத்திற்குத்தான் போவேன் என்று உட்கார்ந்துகொண்டு இருக்காதீர்கள். முதலில் இயேசு நேசிக்கிறார் என்ற கைப்பிரதிகளைக் கொடுக்கலாமே. உங்களது பக்கத்தில் இருக்கிற மக்களுக்கு இயேசு நேசிக்கிறார் என்று சொல்வதற்கு, ஒரு பெரிய உழைப்பு வேண்டும் என்பது அவசியமில்லை. இந்த ஊழியத்தைச் செய்வதற்கு, யாரோ வந்து உதவி செய்யவேண்டும் என்பதும் இல்லை. இயேசு உங்களை நேசிக்கிறார், கர்த்தர் உங்களுக்காகத்தான் மரித்தார் என்று உங்களை சந்திக்கிற, போனில் பேசுகிற மக்களுக்கு சுவிசேஷத்தை சொல்லக் கூடாது என்று ஏதாவது தடைகள் இருக்கிறதா? இல்லையே. கர்த்தர் அதற்கு தடையேதும் சொல்ல மாட்டார். ஆக, அவற்றையெல்லாம் முதலில் செய்ய ஆரம்பியுங்கள். கர்த்தர் உங்களைப் பயன்படுத்துவார்.

***14-வது காரியம், நீங்கள் சாகும் வரையிலும் கற்றுக்கொள்வதை நிறுத்திவிடாதிருங்கள், தொடர்ந்து கற்றுக்கொண்டேதான் இருக்கவேண்டும்.*** அந்த மாதிரியாக உங்களுடைய நினைவுகளை, உங்களது சிந்தைகளை மாற்றி வையுங்கள். சிலர் நினைக்கிறது என்னவென்றால், நான்தான் வேதாகமக் கல்லூரியில் படித்து முடித்துவிட்டேனே என்பதாக நினைக்கிறார்கள். இல்லை பிரியமானவர்களே, அது உங்களுக்கு வாசலைத் திறந்து விட்டிருக்கிறது, அவ்வளவுதான். இந்த வகையில்தான் படிக்கவேண்டும், எந்தெந்த வழிகளில் எந்தெந்த ஆசிரியர்கள் எழுதிய இறையியல்

புத்தகங்கள் வழியாக வேதத்தை வாசிக்க வேண்டும் என்று உங்கள் கண்களைத் திறந்து விட்டிருக்கின்றன, அவ்வளவுதான். அந்த சப்ஜெக்ட் மட்டும் படித்து முடித்தவர்களுக்கு படிப்பு நின்று விடாது, இல்லாவிட்டால் எல்லாவற்றையும் கற்றுவிட்டதாக அர்த்தம் ஆகாது. ஆகவே தொடர்ந்து படித்துக்கொண்டே இருங்கள். ஒரு ஆசிரியர் அவர் வேலைசெய்கிற நாள் வரைக்கும் தன்னுடைய அறிவை பெருக்கிக்கொண்டிருக்க வேண்டியது அவசியம், அப்டேட் பண்ணியாக வேண்டும். அதற்கு அரசாங்கமும் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு ஆசிரியருக்கும் இந்தநாள் வரையிலுமுள்ள பாடங்கள் வரைக்கும் அப்டேட் பண்ணுகிறார்கள், அவர்களை தகுதிப்படுத்துகிறார்கள். ஆனால், போதகர்கள் நாம் எப்படியிருக்க வேண்டும், என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நான் அன்றைக்கு ஏதோ ஒன்றை கற்று விட்டோமே. வாலிப வயதிலேயே ஜெபம்செய்து இருப்போம், வேதத்தை வாசித்து இருப்போம், அவ்வளவுதான். இப்போது உட்கார்ந்து வாசிக்கிறதும் இல்லை, அதை நினைக்கிறதும் இல்லை, தேசம் முழுவதையும் சந்திப்பதற்கு, ஏகப்பட்ட ஆத்துமாக்கள் அழிகிறது, என்பது மட்டுமே முக்கியமானதாகத் தெரிகிறது. ஊழியத்திற்காக காத்திருப்பது, ஜெபிப்பது, வேதத்தை ஆராய்வது போன்ற அனைத்தும் நாம் கற்றுக்கொள்வதற்காகவும், நம்மை அதிகமாய் தகுதிப்படுத்திக்கொள்ளவும் ஆகும். மக்கள் அதிகமாய் கற்றுக்கொண்டு வருகிறார்கள். நாம் அதைக் கேட்டு உருவாகி, இன்றைய நாளைக்குரிய அறிவை உடையவர்களாக, இன்றைய கால கட்டத்திற்கேற்ப, போதிக்கிறதற்கு தகுதியுடையவர்களாக இருக்கவேண்டுமென்று வேதம் சொல்லுகிறது. சிலர் அதைக்குறித்து நினைக்கிறதே இல்லை.

பிரியமானவர்களே, நீங்களும், நானும் வாழ்ந்துகொண்டிருக்கிற காலம் மிகவும் அறிவு பெருத்த காலமாய் இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. நீங்கள் என்ன போதிக்கிறீர்கள்? என்பதை சோதனை செய்வதற்கு ஆன்லைன் இருக்கிறது. ஒரு மருத்துவர் நாங்கள் இலவச மருத்துவ முகாம் நடத்தப்போகும்போது எங்களோடகூட வருவார். அவர் சொன்னார், இப்போது மருத்துவம் பார்ப்பதற்கே பயமாக இருக்கிறது. காரணம், நோயாளிகளின் நோய்க்கான மாத்திரைகளை நாங்கள் பரிந்துரைக்கும்போது, அவர்கள் அதைக்கொண்டுபோய் ஆன்லைனில் சரிசெய்து பார்த்துவிட்டு, டாக்டர் இந்த மாத்திரையில் இவ்வாறான பக்க விளைவுகள் இருக்கிறது, இது இந்தந்த விதமான நோய்களுக்கு கொடுக்கிறதல்லவா? என்று நோயாளிகள் கேள்வி கேட்கிற நிலையில் நாங்கள் இருக்கிறோம் என்றார். ஆகவே எங்களுக்கு, எங்கள் துறை சார்ந்த புதுப்பித்தல்கள் அவசியப்படுகிறது, அதிகமான அறிவும் அவசியமாக இருக்கவேண்டியது அவசியம் என்று கூறினார். ஆம் பிரியமானவர்களே, மருத்துவருக்கே இந்த நிலைமை என்றால், வேதத்தைப் பற்றி போதிப்பதற்கு, நீங்களும், நானும் அன்றைய காலகட்டத்திற்கு சொல்லப்பட்ட வசனங்களை, அப்படியே பேசிக்கொண்டு இருந்தால், இந்த

இளைஞர்களுக்கு எடுபடாது. உங்களை நீங்களே தகுதிப்படுத்துங்கள். இன்றைய நாளுக்குரிய அறிவுரையை வழங்குவதற்கு உங்களை மாற்றிக்கொள்ளுங்கள்.

பிரியமானவர்களே, உங்களது ஊழியம் வருகிற நாட்களில் சிறக்கவேண்டுமானால், நீங்கள் கற்றுக்கொள்கிறதை ஒருபோதும் நிறுத்தாதீர்கள். வேதத்தைக் கற்றுக்கொள்ளவும். அது சம்பந்தப்பட்ட அநேக விளக்கவுரை சார்ந்த புத்தகங்களை, கட்டுரைப் புத்தகங்களை, திறந்தவெளி அகராதிகள் போன்றவற்றையும் நீங்கள் படிக்க வேண்டும். மேலும், வேதாகமம் சார்ந்த அநேக புத்தகங்களைப் படித்துக்கொண்டே இருக்க வேண்டும். தினமும் ஏதோவொரு வசனத்தை எடுத்து, இதுதான் இதனுடைய அர்த்தம் அல்லது விளக்கம் என்று சொல்லிவிட்டு போகக்கூடாது. அதிலுள்ள மொழியாக்கங்களைப் படிக்க வேண்டும், ஆங்கில மொழியில் படிக்கவேண்டும். வேதாகமம் எத்தனை மொழிகளில் மொழியாக்கங்கள் செய்யப்பட்டிருக்கிறது? என்பதை அறிந்து, அவைகளைப் படித்து அறிய முயற்சி செய்ய வேண்டியது அவசியம். பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுது படிப்பதை நிறுத்திவிடுகிறீர்களோ, அப்பொழுது, உங்களது ஊழியமும் முற்றுப்புள்ளி வைக்கப்படுகிற இடத்திலிருக்கும் என்பதை புரிந்துகொள்ளுங்கள், தயவுசெய்து கற்றுக்கொண்டே இருங்கள். அது நல்லது. அதில் ஆர்வம் காட்டுங்கள், நிறைய அறியவேண்டும், கற்றுக்கொள்ள வேண்டும். நாளுக்குநாள் புதிது புதிதாய் கற்றுக்கொள்வது ஆசீர்வாதம் என்று சொல்லிப் பழகிப் பாருங்கள், சோதித்துப் பாருங்கள். உங்கள் சபையில் அது வேறுவிதமாய் வளர்ச்சியடையும். இவையெல்லாம் ஆயத்தத்தில் உள்ள காரியங்கள்தான்.

***15-வது காரியம், நம்முடைய கடன்களிலிலிருந்து வெளியே வரவேண்டும்.*** நடைமுறையான ஆயத்தப்படுத்தலை குறித்து நாம் அதிகமாக கற்றுவருகிறோம். ஆவிக்குரிய ரீதியிலும் நீங்கள் ஆயத்தப்பட வேண்டுமென்றால், நாம் கடனிலிருந்து வெளியே வரவேண்டியது அவசியம். ஒரு ஊழியர் கடனோடு காணப்பட்டாரானால், அவர் ஊழியத்தில் வந்து சாதிப்பது கடினமான விஷயமாகத்தான் இருக்கும். ஏன் அவ்வாறென்றால், நீங்கள் ஊழியத்திற்காக ஆயத்தப்படும்போது, கடனை அடைப்பதற்குரிய பணிகளைச் செய்து, வியாபாரத்தைச் செய்து, அதற்கு நீங்கள் ஆயத்தப்பட்டு, அந்த கடனை அடைத்து, விடுதலையோடு, முழு மனதோடு நீங்கள் ஊழியத்திற்கு போகவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். ஆவிக்குரிய காரியங்களை கற்றுக்கொடுப்பீர்கள் என்று பார்த்தால், நடைமுறையான காரியங்களைச் சொல்லுகிறீர்களே? என்று நீங்கள் கருதலாம். பிரியமானவர்களே, நாம் உலகத்தில் வாழ்கிறோம், உலகத்தின் காரியங்களையும் சரிசெய்து ஊழியம் செய்ய வேண்டியது அவசியம். நீங்கள் மிகவும் கடனோடு இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். இதோடு, நீங்கள் ஊழியத்திற்கு போவீர்களானால், ஒரு இடத்தில் நன்றாக சந்தோஷமாக இருக்கிறீர்கள், அப்போது ஒருவர், நம் சபையில் இருக்கிறாரே போதகர், எனக்கு இத்தனை ஆயிரம் கொடுக்கவேண்டுமென்று,

ஒரு டீக்கடையில் வைத்துப் பேசுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்களேன். இதைவொரு, எடுத்துக்காட்டாய் நாம் பார்க்கிறோம். ஆகவே, அந்த இடத்திலே எவ்வளவு ஒரு சாட்சி கெடுகிற காரியமாக அது இருக்கும் என்று கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள அந்த கிராமத்தில் ஒருவேளை ஊழியம் செய்கிறீர்கள் என்றால், மக்களுடைய பார்வை, இவரே ஒரே கடனாய் வாங்கிக்கொண்டு, கஷ்டப்படுகிறார். இவர், கர்த்தர் உங்கள் கடனை மாற்றுவார் என்று பேசிக்கொண்டிருக்கிறார் என்று நிச்சயமாய் பேசுவார்கள். நீங்கள் சொல்லுவதற்கும், உங்களுடைய செய்கைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று பேசுவார்கள். கடனை அடைக்க ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்வார், ஆனால் அதற்கு முன்பே, நீங்கள் ஆண்டவரே நான் உம்மோடு ஒத்துழைக்கிறேன், நான் கடனே வாங்காமல் வாழ்ந்து, உமக்கு சாட்சியாக வாழ எனக்கு உதவி செய்யும், என்று ஜெபித்து, அவரோடு ஒரு உடன்படிக்கைக்குள் வரவேண்டும்.

இரண்டாவது காரியம், உங்களுக்கு கர்த்தர் இப்பொழுது தருகிற அந்த பணத்தின் அடிப்படையில் உங்கள் செலவுகளை மேற்கொள்ளுங்கள். கடன் வாங்கி, வாங்கி, கர்த்தர் சந்திப்பார் என்று சொல்லி, ஆடம்பரமான ஒரு நிலையில் நீங்கள் எதையும் டாம், டீம் என்று செய்து விடாதீர்கள். கர்த்தர் தருகிற நாட்கள் வரும். அப்பொழுது நீங்கள் நன்றாக, உங்கள் ஊழியத்திற்காக, உங்கள் சபைக்காக, குடும்பத்திற்காக, செய்யவேண்டியதுதான். அதை அப்படியே வைத்து வையுங்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால், இப்போது என்னுடைய நிலையை கர்த்தர் இப்படி வைத்திருக்கிறார், எனக்கு எந்தளவுக்கு வருமானத்தை இப்பொழுது கர்த்தர் தருகிறார்? அவர் ஆச்சரியமான விதத்தில்தான் தருகிறார், ஆனால், அதற்கு தகுதிக்கு மிஞ்சி நான், யோசிக்க கூடாது, செலவழிக்கவும் கூடாது என்ற கண்ணோட்டத்தோடு செயல்பட வேண்டும். பிரியமானவர்களே, இவற்றை நான் என்னுடைய அனுபவத்திலிருந்துதான் உங்களுக்கு கற்பிக்கிறேன் என்பதை சற்று புரிந்துகொள்ளுங்கள்.

எனக்கு ஒரு போதகரைத் தெரியும், அவருடைய சபையின் மாத காணிக்கை எவ்வளவு என்றும் எனக்குத் தெரியும். ஆனால் அவர் விசுவாசத்தில், கர்த்தர் என்னை ஒரு கார் வாங்கச் சொல்லுகிறார், நான் இனி அதில்தான் போவேன். ஏனெனில், ஒரு தரிசனத்தை இவ்விதமாகக் கண்டேன் என்று சொல்லிக்கொண்டு, ஒரு காரை வாங்கினார். அவர் வாங்கும்போது, நான் என்ன செய்ய முடியும்? அவர் விசுவாசித்து செய்கிறேன் என்றார். நானும் சரி, செய்யுங்கள் என்றேன். கடைசியில், அந்த காரை வாங்கி சிறிதுநாள் பயன்படுத்திவிட்டு, அதற்கு பெட்ரோல்கூட போடமுடியாமல் போய்விட்டது. அந்தக் காரை இன்னொரு நபரிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கினார். அதைப் பராமரிக்க முடியாதபடி, அதினால் அவர் ஊழியத்தை விட்டு, பின்பு அதிலிருந்து பின்வாங்கி, தன்னுடைய சொந்த ஊருக்குப்போய், அங்கு வேலை பார்த்து, விசுவாசத்தை மறுதலித்து

விடும் அளவுக்கு அவர் வாழ்க்கை சென்றுவிட்டது. ஒரு போதகராய் இருந்த மனுஷன் எங்கே போய்விட்டார் என்றால், ஒரு சாதாரண மனிதனைவிட கேவலமாகப் போய்விட்டார். இந்த சம்பவத்தை வைத்து உங்களை மனமடியச் செய்வதற்காக கூறவில்லை. இவ்வாறெல்லாம் நடக்கிறது என்றுதான் நீங்கள் புரிந்துகொள்வதற்காகக் கூறுகிறேன். கர்த்தர் உங்கள் நிலையை உயர்த்திக்கொண்டு போகிறது, உங்களுக்குத் தெரியும்.

இப்போது, சில காரியங்களை நேர்த்தியாக கையாள முடியும் என்று நடைமுறையிலும் கற்றுக்கொள்ள கர்த்தர் உங்களுக்கு உதவுகிறார். இது சற்று கடினமான விஷயமாக இருக்கலாம். ஆனால் ஆச்சரியமாய், அற்புதமாய் செயல்படுகிற தேவனுடைய கரத்தில் நீங்களும், நானும் இருக்கிறோம். ஆனால், அவற்றை நாம் நடைமுறையாகவும், சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று இப்போது கூறப்போகிற காரியங்கள் உங்களுக்கு கஷ்டமாகத் தெரியலாம். சில காரியங்களை நடைமுறையாகவும் யோசித்துப் பாருங்கள். சில ஊழியங்களைக் குறித்து, தீர்க்கதரிசனங்களைக் குறித்து ஆராய்ந்து பாருங்கள். நாம் மேலே பார்த்த ஊழியரின் வாழ்க்கை சம்பவத்தைப் பற்றி கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அவர் பெற்ற தரிசனம் தவறானதா? இல்லை. கர்த்தரால் அது கூடாமல் போய்விட்டதா? நான் என் வாழ்க்கையில், என் கண்கள் காண நடைபெற்ற சம்பவம் அது. அந்த போதகர் காரை வாங்கி, பயன்படுத்தி, கடனை அடைக்க முடியாமல் போனபின்பு, இன்றைக்கு ஊழியத்தில்கூட இல்லாததைப் பார்த்துவிட்டுத்தான் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். ஆக, இதற்கு நாம் என்ன பதிலை வைத்திருக்கிறோம், இரண்டையும் சேர்த்து பாருங்கள். தேவன் அற்புதமாய்ச் செய்வார். அந்த அற்புதமான தேவன் உங்கள் கைகளை உயர்த்த முடியும். அப்போது நீங்கள் காரியங்களைச் செய்ய முடியும்.

உதாரணமாக, ஒரு 10 இலட்சம் ரூபாய்க்கு ஒரு இடத்தை வாங்க நேரிடுகிறது. அதைக் கர்த்தர் வாங்குவதற்கு சொல்கிறார் என்றால், அதற்கான வரவை நோக்கி கர்த்தர் உங்களை நடத்துகிறார் என்று அர்த்தம். மீதியான பணத்தை வாங்குகிற ஒரு சூழ்நிலை வருகிறது, நெருக்குதல் வருகிறது என்றால், அந்த இடத்தில் நீங்கள் கட்டாயம் செய்துதான் ஆகவேண்டும். அந்த இடத்தில் நீங்கள் கணக்கு பாருங்கள் என்று சொல்ல முடியாது. இதுவொரு கடினமான காரியம் என்று ஏற்கனவே பார்த்தோம். அது தேவனுக்கும், உங்களுக்குமான உறவு. உங்களுடைய விசுவாசத்தை நான் மட்டுப்படுத்த விரும்பவில்லை. ஆனால், கொஞ்சம் நடைமுறையாகவும் சிந்தித்து செயல்படுங்கள் என்றதொரு காரியத்தை நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். அதற்கான ஒரு ஆயத்தத்தைப்பற்றி இப்போது நான் உங்களுக்கு சொல்லிக்கொண்டிருக்கிறேன். உங்களுடைய கடன், சமுதாயத்தில் உங்களுக்கிருக்கிற சில கடமைகள் போன்றவற்றை நீங்கள் ஒதுக்கி வைக்க வேண்டும். அதைச் சரிசெய்ய வேண்டும். தீர்வு செய்யப்பட வேண்டிய விஷயங்களை நீங்கள் விரைவாக தீர்வுசெய்ய வேண்டும். தீர்வுகாண வேண்டும் என்பதற்காக, நான் என்

வீட்டிலுள்ள அனைத்து காரியங்களையும், பிரச்சனைகளையும் சரிசெய்த பின்புதான் ஊழியம் செய்வேன் என்றும், நீங்கள் தாமதம் செய்து விடாதீர்கள். ஆனால் எதுவாக இருந்தாலும் யாரும் உங்களை விரல் நீட்டாதபடி உலக காரியங்களை செய்து, ஊழியத்திற்கு மனதார, சந்தோஷமாக போங்கள். ஏனெனில், நாம் ஊழியத்திற்கு செல்வதான வாழ்வு என்பது, தியாகமான வாழ்வு. அது சம்பாத்தியம் செய்வதற்கான வாழ்வு அல்ல.

சம்பாத்தியம் செய்யவேண்டுமென்றால், ஏதாவது ஒரு கம்பெனிக்கு போய்விடலாம். ஊழியத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். நீங்கள் நினைப்பதுபோல் இல்லை. ஒரு இடத்திற்கு ஊழியத்திற்கு செல்லுகிறீர்கள் என்றால், ஒரு பாஸ்டராக போகிறீர்கள் என்றால், ஒரு பெரிய சம்பளத்தை நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. உலகத்தில், நான் இன்று சொல்லுகிற காலத்தில், சுமார் 10 ஆயிரம் கொடுத்தால்தான் நல்லது. ஓரளவாவது வாழ்க்கையை நடத்த முடியும். அந்த இடத்தில் நீங்கள் ஒரு பாஸ்டராக, போதகராக, ஊழியராக போகிறீர்கள் என்றால், அங்கே ஒருவேளை 5 ஆயிரம் கூட முதலில் கிடைக்காமலும் இருக்கலாம். அது ஒருவேளை உங்களுக்கு அனுபவம் இல்லாத நிலையில் அவ்வளவு தர அவர்கள் உங்களிடம் சொல்லாம். ஆக, நீங்கள் போகிற இடம், ஊழியம் என்பது, அப்படியான நிலையில், சமாதானமாக, சந்தோஷமாக, நிதானமாக செய்யவேண்டிய இடத்திலிருக்கிறது. இப்போது நான்கூட நினைக்கலாம், நான் எம்.ஏ.பி.எட். படித்திருக்கிறேன். இப்போது நினைத்தாலும்கூட வேலைக்குபோய், சம்பாத்தியம் செய்து என்னுடைய குடும்பத்தை நடத்தலாமே. சிலவேளைகளில் தேவைகளோடு கர்த்தரை நம்பி ஜெபிக்க வேண்டியிருக்கிறது. அவர் ஆச்சரியமாக தேவைகளைத் தருகிறார். ஒருபோதும் எங்களை கர்த்தர் பட்டினியாகவோ, அல்லது தேவையோடோ வைத்தது இல்லை. எனக்கு திறமையிருக்கிறது, போய்ச் சாதிப்போம் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை. ஏனெனில் அவர் அல்லவா? அந்த வேலையை விட்டுவிட்டு வரச்சொன்னார்.

நாம் ஊழியத்தில் ஒரு பெரிய இராஜ்ஜியத்தை கட்டிவிட முடியாது. அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் சம்பாத்தியம் செய்வதற்கு ஒரு இயக்கத்தில் போய் பாஸ்டராகவோ, அல்லது மிஷனெரியாகவோ சேரவில்லை, ஊழியம் செய்யப் போகிறோம். அதற்கேற்றபடியான வாழ்வுதான் இருக்கும். ஆடம்பரமான வாழ்வை நாம் அங்கே எதிர்பார்க்க முடியாது, எதிர்பார்க்கவும் கூடாது. அதற்கு முன்னர் நாம் நம்முடைய கடன்களையெல்லாம் தீர்ப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம். உலக வாழ்விலிருக்கிற சில கட்டுப்பாடுகள், நம்மை அழுத்திக்கொண்டிருக்கிற காரியங்களை ஒதுக்கிவைத்து, நாம் விடுதலையோடு கர்த்தருடைய ஊழியத்தில் செய்கிற ஆயத்தம் நமக்கிருக்க வேண்டியது அவசியம்.

16-வது காரியம், உங்களுடைய ஊழியத்தின் பாதையில் அறிவுரையாளரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். வழிகாட்டிகள் (Mentors) என்று ஆங்கிலத்தில்

சொல்வோம். ஊழியத்தில், ஆவிக்குரிய வாழ்வில் உங்களுக்கு அறிவுரையாளர்கள் நடத்தி வைக்கிற விஷயத்திலே, மட்டுமல்ல சில முடிவுகளை எடுக்கிற விஷயத்தில், ஜெப வாழ்விலே, ஆவிக்குரிய ரீதியில் நீங்கள் சில காரியங்களை ஊழியக் கண்ணோட்டத்தோடு பார்ப்பதற்கு அவர்கள் உதவியாக இருப்பார்கள். மட்டுமல்ல, சில வேத வசன விளக்கங்கள் உங்களுக்கு புரியாமல் குழப்படியாக இருக்கும்போது, இந்த அறிவுரையாளர்களின் ஆலோசனை உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்றும்கூட, சபையில் தீர்க்க முடியாத சில பிரச்சனைகளை சபையார் கொண்டுவருவார்கள். அதற்கு நீங்கள் ஒருவராய்ப்போனாலும், தடுமாறிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த மூத்த அறிவுரையாளர்களை நாடும்போது, என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லை, ஜெபம் செய்யுங்கள் என்று கேட்டுவிட்டு, எனக்கு வழிகாட்டுங்கள் என்று சொன்னால், அவர்கள் சொல்லுகிற காரியங்கள் நிச்சயமாய் உங்களுக்கு சில நெருக்கடியான காலகட்டங்களில், சில நெருக்கடியான பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுபிடிப்பதில் உதவியாக இருக்கிறதைப் பார்க்க முடியும். இன்னும் திறமைகளை வளர்த்துக்கொள்வதில் அதைப்போல, பொதுவான விஷயங்களில் கூட, அவர்கள் சொல்லித்தருகிற அந்த அறிவுப்பூர்வமான ஆலோசனைகள் உங்கள் வாழ்விலே, ஊழியத்திலே, சபையைக் கட்டி எழுப்புவதில் உதவியாக இருக்கும்.

இவ்விதமான அறிவுரையாளர்களை சாதாரணமாகவே நம்முடைய வாழ்வில் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். முறைப்படியான அணுகுமுறை இதற்கு வேண்டும் என்றெல்லாம் அவசியமில்லை. ஐயா, எனக்கு நீங்கள் ஒரு அறிவுரையாளர்களாக இருக்க முடியுமா? உங்களிடத்தில் ஒரு சீஷனாக இருந்து கற்றுக்கொள்ள விரும்புகிறேன் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அப்படியொரு முறைப்படியான ஒரு கல்விச்சாலை போன்று இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. அவர் ஒரு ஆசான் என்ற இடத்தில் வைத்து, அதை அறிவுறுத்தி சொல்லி, அதன்பின்பு பெறவேண்டுமென்று முக்கியமில்லை, அவசியமான நிலை இல்லை. நீங்கள் அதற்கு பதிலாக, இந்த மாதிரியான காரியங்கள் வரும்போது, அநேக அறிவுரையாளர்களை நீங்கள் அணுகி ஆலோசனை கேட்கலாம். அதோடு, நீங்கள் என்னுடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு கொடுக்கின்ற ஆலோசனைகள் மிகவும் உதவியாக இருக்கிறது ஐயா, அதனால் எனக்கு உங்களின் அறிவுரைகள் தேவை என்று அவர்களிடம் சொல்லலாம். அறிவுகொடுக்கிறவர்கள், அறிவு புகட்டுகிறவர்கள், வேத ஞானத்தின் அடிப்படையில் ஆலோசனை சொல்லுகிறவரின் சாட்சியுள்ள மனிதர்களின் இந்த வழிகாட்டுதலின் அடிப்படையில் நீங்கள் வாழ உங்களை அர்ப்பணிக்க வேண்டும். மட்டுமல்ல தேர்ந்தெடுக்க வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட அறிவுரையாளர்கள் உங்களுக்கு ஊழியத்தில் தேவை. ஏனெனில் சில வேளைகளில், சில காரியங்களுக்கு முடிவெடுக்க முடியாமல் திணறுகிற நேரங்கள் உண்டு. வேதத்தின் அடிப்படையில், ஏற்கனவே வாழ்ந்துகொண்டிருக்கிற நல்ல முதிர்ச்சியுள்ள, அனுபவமுள்ள மக்களை நீங்கள்

பழகி வைத்துக்கொள்ள வேண்டும். ஆலோசனைகளை அவர்களிடத்தில் கேட்கவேண்டும். அவர்கள் தருகிற ஆலோசனைகளை நீங்கள் பின்பற்றும்போதுதான் உங்களுடைய ஊழியத்தில் நீங்கள் சிறப்பாக சாதிக்கிறவர்களாக இருக்க முடியும். நீங்கள் ஊழியத்தில் வழிதப்பிவிடாதபடி, சறுக்கிவிடாதபடி, தவறான முடிவை எடுத்துவிடாதபடி உங்களுக்கு ஜெயமான ஊழியத்தை செய்ய அதுவே உதவியாக இருக்கும்.

ஆம் பிரியமானவர்களே, ஆலோசனைக்காரர் அநேகர் இருக்கும்போதுதான், வெற்றி கிடைக்கும். ஆலோசனை இல்லாத இடத்தில் நாம் ஊழியத்தை சிறப்பாக செய்ய முடியாது. முக்கியமான இடத்தில் நீங்கள் இருப்பீர்கள். உங்கள் ஒருவருடைய முடிவு, அதாவது, நீங்கள் எடுக்கிற முடிவு அநேகருடைய வாழ்வைப் பாதிக்கும், உங்கள் சபையாரின் வாழ்வைப் பாதிக்கும். உங்கள் குடும்பத்தாரின் வாழ்வைப் பாதிக்கும். ஏனெனில் நீங்கள் முக்கியமான நபர், ஆகவே நீங்கள் ஒரு முடிவை எடுக்கும் முன்னர், நீங்கள் அதிகமாக ஜெபம் செய்யுங்கள், ஆலோசனையைக் கர்த்தரிடத்தில் நாடுங்கள். இது தவிர, உலக மனிதர்களிடத்தில் கேட்க கூடாது என்றெல்லாம் இல்லை, அவர்களிடமும் கேட்க வேண்டும். அதற்கு நல்ல ஆவிக்குரிய தலைவர்கள், அறிவுரையாளர்களை நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். அவர்கள்தான் தங்களின் கடந்த காலத்தில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க உதவி செய்வார்கள். சில பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதிலே மிக எளிதாக அவர்கள் சொல்கிற காரியங்கள் உதவியாக இருக்கும். நம்முடைய சபையை நடத்துகிற விஷயத்தில், ஆவிக்குரிய ஒழுக்கத்தில், தலைமைத்துவத்திலே, திருமணத்தை நடத்துவதில் உங்களுக்கு ஒரு பிரச்சனை என்றவுடனே, உங்களிடம் வருகிறேன். உடனே நீங்கள் என்னோடுபேசி, ஜெபித்து முடிவெடுக்கிற காரியங்கள் மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது என்று சொல்லலாம். அவர்களுக்கும் அது உற்சாகமாக இருக்கும். உங்களுக்காக நேரமெடுத்து ஜெபிப்பார்கள். மட்டுமல்ல நீங்கள் சொன்ன காரியத்திற்காக தொடர்ந்து ஜெபிப்பார்கள். ஜெப உதவி கிடைக்கும். மட்டுமல்ல, நீங்கள் பிரச்சனைகளின் மத்தியில் அவர்களைச் சந்திக்கும்போது, அவர்கள் இல்லாமல் போகும்போது, உங்களை தொலைபேசியில் தொடர்புகொண்டுகூட விசாரிப்பார்கள். அதோடு, நம் பிரச்சனைகள் எப்படியிருக்கிறது? என்று கேட்டு, அதை இவ்வாறு மாற்றிச் செய்து பாருங்கள், தீர்வுசெய்து விடலாம் என்றுகூட கரிசனையோடு பேசி உங்களை உற்சாகப்படுத்துவார்கள். அது உங்களுக்கு நிச்சயமாக மனதளவில்கூட பிரியமனதாக இருக்கும். இவ்விதமாக நீங்கள் தேவ கிருபையோடு, தேவனுடைய மக்களோடு தொடர்புகொண்டு, ஐக்கியம் கொள்ளுங்கள், தேவப்பிள்ளைகளின் ஆலோசனைகளைக் கேளுங்கள். அதனடிப்படையில் செயல்படுங்கள் என்று நான் உங்களுக்கு சொல்லுகிறேன்.

***17-வது காரியம், சிறிய, சிறிய பயிற்சிகளை உங்களுக்கு கிடைக்கிற நேரத்திற்கு தக்கதாக பெற்றுக்கொள்ளுங்கள்.*** ஆம் பிரியமானவர்களே, குறிப்பாக உங்களுடைய சபையிலே, அல்லது நீங்கள் சார்ந்திருக்கிற இயக்கத்திலே அல்லது உங்களுக்குத் தெரிந்த ஆரோக்கியமான வேதாகமக் கல்லூரியில் நடத்தப்படுகிற சிறு பயிற்சி வகுப்புகள், அதாவது 3 மற்றும் 6 மாத பயிற்சிகள் போன்றவற்றை நமது கல்லூரியில் அளிக்கிறோம் அல்லவா? 3 வருடம் படிக்கிற B.Th. படிப்பும் ஒரு பயிற்சிதான். 6 மாத போதக பயிற்சி, 3 மாத பயிற்சியும் நாம் கொடுக்கிறோம். இப்படியான பல பயிற்சிகள் ஆன்லைன் வகுப்புகளின் மூலமாக அவ்வப்போது பெற்றுக்கொள்வது நல்லது. இதுபோக உங்கள் சபைகளில், அதைப்போல ஆவிக்குரிய பாடங்களின் மூலமாக முறையாக ஆவிக்குரிய வகையில் நடத்துகிற இயக்கங்கள் உண்டு. அதுபோக, மேய்ப்பன், போதக ஊழியத்திற்கு போக விரும்புகிறவர்கள், ஒரு ஆழமான போதனைக்கு நேராக கடந்துபோக வேண்டியது அவசியமாக இருக்கிறது. மிகவும் சாதாரணமாக ஒரு சுவிசேஷகர்கள் நடத்துகிறதைப் போன்று உள்ள கூடுகைகளில் நீங்கள் கலந்துகொள்வீர்களானால், அவர்கள் ஆவிக்குரிய ரீதியிலான காரியங்களை அதிகமாக கற்றுக்கொடுக்காமல், உங்களை கர்த்தர் உயர்த்துவார், உங்களுக்கு உதவி செய்வார், நீங்கள் பெரிய காரியங்களைச் செய்வீர்கள் என்று உற்சாகமூட்டுகிற காரியங்களான வெறும் செய்திகளை மட்டும் பேசுவார்கள், அதை மட்டும் கேட்கிறவர்களாக இருக்க கூடாது. நீங்கள் அதைவிட ஆழமாக அதாவது, பாலை உண்ணத்தக்க நிலையிலிருந்து, பிரியாணி உண்ணத்தக்க நிலைக்கு இப்போது நீங்கள் வரவேண்டும். திடமான உணவு, அது செரிக்கக்கூடிய நிலைக்கு இப்போது நீங்கள் வரவேண்டியது அவசியம்.

***அடுத்து 18-வது காரியம், உங்கள் ஊழியத்தில் சில வழிவிலகல்களை சந்திக்க நேரிடலாம். அதையும் நீங்கள் கவனத்தில்கொண்டு வாழவேண்டியது அவசியம்.*** வழிவிலகல்கள், அதாவது, எதைச் சொல்லுகிறேன் என்றால், உங்களது நிலையை விட்டு பின்வாங்குகிறதைச் சொல்லவில்லை. ஆனால், நீங்கள் ஒரு தரிசனத்தோடு செயல்பட்டுக்கொண்டிருப்பீர்கள். ஆனால், அந்த தரிசனத்திற்கு நேராக, உங்களுடைய வாழ்வின் நிகழ்வுகள் செல்லாதபடி வேறுவழியில் அல்லது அதற்கு சம்பந்தமில்லாத வழியில் போகிறதுபோல, சில வேளைகளில் காணப்படலாம். அதாவது, நீங்கள் ஊழியத்திற்காகத்தான் ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். எந்த அழைப்புக்கு நேராக அழைக்கப்பட்டிருக்கிறீர்களோ, அதற்கு நேராகத்தான் நீங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இதன் மத்தியிலே உங்களுக்கு மிக மிக முக்கியமானதொரு காரியத்தை கர்த்தர் செய்வார், உங்களில் தெய்வீக, திவ்விய சுபாவத்தை உருவாக்குவதில் அவர் செயல்பட்டுக்கொண்டே இருப்பார். அது தெய்வீக குணம் (Divine Nature) என்று சொல்லப்படுகிறது, அதாவது திவ்விய சுபாவம். 2 பேதுரு 1:4-ம் வசனம் இவ்விதமாகச் சொல்லுகிறது, 'இச்சையினால் உலகத்தில் உண்டான

கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது' என்று நாம் வாசிக்கிறோம். ஆக, இந்த உலகத்தில் இச்சையினால் உண்டான கேடுகள் நிறையவே இருக்கிறது. அதற்கு நீங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். இந்த இச்சையின் மூலம் உண்டாகிற கேட்டுக்கு தப்பவேண்டுமாகில், இன்னும் உங்களுக்கு என்ன உண்டாகவேண்டுமென்றால், திவ்விய சுபாவம் வரவேண்டும். இந்த திவ்விய சுபாவத்தைப் பற்றித்தான் வேதம் 'Divine Nature' என்று சொல்லுகிறது, அதாவது தெய்வீக சுபாவம். அந்த தெய்வீக சுபாவத்தில் நீங்கள் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, தேவன் வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறாராம். மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும், அவைகளினால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறதை கவனித்துப் பாருங்கள். நீங்கள் தெய்வீக சுபாவத்தில் வளரவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார்.

Godly nature and Character உங்களில் உண்டாக்குவதற்காக, அந்த திவ்விய சுபாவத்தை உண்டாக்குவதற்காக, உலகில் அநேக சூழ்நிலைகளில் நாம் சோதிக்கப்படுகிறோம். சோதிக்கப்படுகிறோம் என்பதை நீங்கள் தவறாக நினைக்க கூடாது. நம்முடைய வாழ்விலே அந்த சுபாவத்தை உருவாக்குவதற்கு பல சூழ்நிலைகளை கர்த்தர் அனுமதிக்கிறார். அந்த சூழ்நிலையின் வழியாக நீங்கள் கடந்துபோகும்போது, உங்களுக்கு அது கடினமாக இருக்கலாம். அது தோல்வியான சூழ்நிலையின் வழியாக கூட சிலவேளைகளில் கர்த்தர் கொண்டுபோகிறதை பார்க்க முடியும். அதன் மத்தியில் நீங்கள் உத்தமமாய் இருக்கிறீர்களா? தேவனுக்கு பணிபுரிய மனதுள்ளவர்களாக, விடாமல் பின்பற்ற மனதுள்ளவர்களாக இருக்கிறீர்களா? என்பதை நிச்சயமாக கர்த்தர் ஆராய்ந்து அறிகிறார். ஆக, இவ்வாறான சூழ்நிலைகள் உங்கள் வாழ்வில் வரும்போது, நீங்கள் பெற்ற தரிசனம் ஒன்று, ஆனால் போகிறது இன்னொரு வழிபோல இருக்ககூடும். அந்த சோதனையின் மத்தியில், வாழ்வின் கடினமான சூழ்நிலைகளிலே உங்களுக்கு பொறுமை அவசியம். நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம் என்று எபிரெயருக்கு எழுதின நிருபத்திலே ஆவியானவர் கூறுகிறதை நாம் பார்க்கிறோம். நமக்கென்று நியமித்திருக்கிற ஒரு ஓட்டம் இருக்கிறது. அதற்கு பொறுமை அவசியம். ஏனெனில் பொறுமையை சோதிக்கும் வண்ணமாக அந்த ஓட்டத்தில் பல காரியங்கள் வரக்கூடும். அதற்கு பொறுமையோடு ஓடவேண்டியது அவசியமென்று அங்கே சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறதை சற்று கவனித்துக் கொள்ளுங்கள்.

இதன்வழியாக நீங்கள் போகும்போது, நோயினால் பலவீனங்கள் வரலாம், சிலவேளைகளில் எதிர்ப்பு வரக்கூடும். சிலவேளைகளில் நீங்கள் கொண்ட தரிசனம் சுக்கு நூறாய் உடைந்துபோவது போலக்கூட காணப்படும். அதன் மத்தியில்கூட, கர்த்தாவே

நீங்கள் சொன்ன அந்த வாக்குத்தத்தத்தின்படி, உடன்படிக்கையின்படி, தரிசனத்தின்படி நீங்கள் சரியாக கொண்டு போவீர்கள். நான் சோர்ந்து போகாது, தொடர்ந்து ஓட எனக்கு பெலன் தாரும் என்று சொல்லி ஓட வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட பிரச்சனைகள் வருகிறதே, கர்த்தரால் என்னைக் காப்பாற்ற முடியாதோ, நான் அவருடைய வழியில் ஓடமுடியாதபடி ஆகிவிடுமோ? என்றெல்லாம் கலங்கவேண்டிய அவசியமே இல்லை. உங்கள் ஊழியத்தை நிறைவேற்றவும், பாதுகாக்கவும் கர்த்தர் வல்லவராக இருக்கிறார். எந்த சூழ்நிலையிலும் நீங்கள் அவரைமட்டும் பிடித்துக்கொண்டு ஓட வைக்கிறார். உங்களுக்கு அவர்தான் முக்கியம், அவரேதான் முக்கியம். அதுதான் அவர் தருகிற பாடம். நீர் மாத்திரம் போதும் என்று பாடுகிறோம், இல்லையா? அந்த மாதிரி பாடுகிறதுபோல வருகிறது அல்ல, ஊழிய காரியங்கள். ஊழியத்திற்கு செல்கிற விஷயமானது, உண்மையாக, மனதார சொல்லுவீர்கள், கர்த்தாவே நீர் மாத்திரம் போதும். அவர் நம்மை உருவாக்க, பல சூழ்நிலைகளில், பல நிலைகளில் நம்முடைய வாழ்வில் ஆண்டவரே சோதனைகளை அனுமதிக்கிறார்.

பிரியமானவர்களே, நீங்கள் இதற்காக அஞ்சவேண்டியது இல்லை. மட்டாய் தண்டித்து உங்களை சரியாக கொண்டுபோகிற தேவன். உங்களை அழித்து விடுவதற்காகவோ, உங்களை ஒழித்து விடுவதற்காகவோ, சோர்வுறச் செய்வதற்காகவோ, அவர் செயல்படுகிற தேவனல்ல. உங்களை உடைத்து, நல்ல சுபாவங்களை உருவாக்குகிற தேவன் அவர், அதற்காக செயல்படுகிற தேவன். மலரானது கசக்கப்பட்டால்தான், அதிலிருந்து மணம் வெளியே வரும். அதுபோல நம்முடைய வாழ்வில் சில சூழ்நிலைகளில்தான் பாடுகள் வரும். எப்போதும் பாடுகளை, உபத்திரவங்களை நமக்கு தருகிறவர் நம் தேவன் அல்ல. என்னுடைய வாழ்க்கையிலும்கூட தேவன் அவ்வாறுதான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். சிலர் எப்போதும் கஷ்டம், கஷ்டம் என்றுதான் அவர் வைப்பார் என்று சொல்லுகிறார்கள். அது வேதத்தின்படி சரியான விஷயம் அல்ல. வேதம் என்ன சொல்லுகிறது என்றால், ஒருவன் எனக்கு ஊழியம் செய்வானானால், அவன் படாத பாடுபடுவான் என்று வேதம் சொல்லவில்லை. அவனை பிதாவானவர் கனம்பண்ணுவார் என்றுதான் வேதம் சொல்லுகிறது. ரோமர் 4:4, ‘கிரியை செய்கிறவனுக்கு வருகிறது கூலி கிருபை என்றெண்ணப்படாமல், கடன் என்று எண்ணப்படும்’ என்று கூறுகிறது. ஆக, கிரியை செய்தால், அது கிருபையினால் கொடுக்கப்படுகிற கூலி அல்ல, அதை கடனாகவே கர்த்தர் கருதுகிறார். அவன் வேலை செய்கிறான், அவனுக்கு நான் கட்டாயமாக கொடுத்தாக வேண்டும். அது என்மேல் விழுந்த கடன் என்று எண்ணுகிற அளவுக்கு அது காணப்படுகிறது. நீங்கள் ஊழியம் செய்தால், அவர் கனப்படுத்துவார். உங்களுக்கு ஒருபோதும் தேவன் கடன்படவே மாட்டார். உங்களுக்கு தரவேண்டிய பலனை அவர் நிறுத்திவைக்கவே மாட்டார்.

பிரியமானவர்களே, இதை நிச்சயமாக நீங்கள் உணர்ந்து செயல்படவேண்டும். சில இடங்களில், சில நேரத்தில் சூழ்நிலைகளினால் சோதிக்கப்படும்போது, கஷ்டங்களைச் சந்தித்தாலும், அது அப்படியே நஷ்டமாகவே போய்விடுவதில்லை. மீண்டும் அதற்குரிய பலனை கட்டாயமாக தருகிற தேவன், நம்முடைய தேவன் என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். அதுதான் வேதம் தருகிற சத்தியம். தேவனுடைய ஆலயத்தில் நீங்கள் ஒரு விளக்கை கொளுத்தினால்கூட அதற்குரிய கூலியைப் பெறுவீர்கள் என்றுதான் வேதம் சொல்லுகிறது. ஆக, ஆலயத்தில், ஊழியத்தில் மற்றும் சுவிசேஷத்தில் நீங்கள் எதைச் செய்தாலும், அவர் கடன்படவே மாட்டார். எந்த விதத்திலும் கொடுத்து தீர்ப்பார் என்பதுதான் வேதம் தருகிற சத்தியம். வேலைக்காரன் கூலிக்கு பாத்திரனாக இருக்கிறான். நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போது, அதற்குரிய கூலியை தருகிறவராக கர்த்தர் இருக்கிறார். நம்முடைய வாழ்வில் தீயின் வழியில் கடந்துபோனால்தான், நம்மிலிருக்கிற களிம்பு நீக்கப்பட்டு, சுத்தமான வெள்ளியாக நாம் விளங்குவோம். நம்முடைய தங்கம், சுத்தப்பொன்னாக மாறுகிறதற்கு இந்த மாதிரி தீயின் வழியாக சில வேளைகளில் போகிற அனுபவங்கள், தலைவர்களுக்கு, மேய்ப்பர்களுக்கு உண்டு. எல்லா ஊழியர்களுக்கும் உண்டு. அது எதற்காக என்றால், நம்மை, உத்தமன் என்று விளங்க வைக்க கர்த்தர் சில வேளைகளில் அவ்வாறு செயல்படுகிறார். அதற்காக நீங்கள் சோர்ந்துபோகும் அளவுக்கு அடிக்கடியாக பாடுகளும், வேதனைகளுமே ஊழியத்தின் பகுதியாக இருக்காது என்று என் அனுபவத்திலிருந்து நான் சொல்லுகின்றேன். நீங்களும் அதை உங்களது வாழ்வில் விசுவாசித்து பெற்றுக்கொள்ள முடியும் பிரியமானவர்களே.

ஏனெனில் ஊழியத்தில் அநேக காரியங்களை சந்திக்க வேண்டியதாக இருக்கும், உதாரணமாக சில காரியங்களை பார்க்கலாம். சில போதகர்கள், ஊழியர்கள் பாலை உண்ணத்தக்க நிலையிலேயே இருந்துவிட்டு, பின்பு போதகராகும்போது, சோர்ந்து போகிறார்கள். காரணம் ஊழியம் என்பது, நாம் ஏற்கனவே கற்றதுபோல, பலதரப்பட்ட விதங்களில் இடையூறு உள்ளதுதான். ஒருவேளை ஆவிக்குரிய ரீதியில் பிசாசானவனுடைய சோதனைகள் மற்ற மனிதர்களைத் தூண்டிவிட்டு, அவன் செய்கிற காரியங்கள், நாம் நல்ல நோக்கத்தோடு செய்யும்போதும், மக்கள் தவறாகப் புரிந்துகொள்கிற நிகழ்வுகள் நடக்கலாம், எதிர்ப்புகள் வரலாம், தடைகள் வரலாம், அரசாங்கத்திலிருந்து தடைகள் வரலாம். மதரீதியான காரியமாக இருப்பதினால் அவைகள் நேரிடலாம். மட்டுமல்ல இது பொதுமக்கள் சம்பந்தப்பட்ட விஷயமாகவும் இருக்கிறது. நீங்கள் பொதுமக்களைக் கூப்பிட்டு வைத்து, ஆராதனை நடத்தப்போகிறீர்கள். பல குடும்பங்களில் அதன் மூலமாக புதிய கலாச்சாரத்திற்குள் வருவதினாலே அவர்கள் வந்து, உங்களைப் பார்க்கும்போதும், முறைத்துப் பார்க்க கூடும். சில நேரம் தவறாகப் பேசுவார்கள், சில நேரங்களில் சிலர் அரிவாளைக் காட்டிகூட மிரட்டலாம், இவையெல்லாம் நடக்கலாம். சில நேரத்தில், நீங்கள் ஒரு குடும்பத்தை சந்தித்து, ஒரு சகோதரி இரட்சிக்கப்பட்டு, ஆலயத்திற்கு வர

ஆரம்பிக்கலாம், அவருடைய கணவர் குடிகாரராய் இருப்பார். எப்போதெல்லாம் அவர் போதை பொருட்களை உபயோகிக்கிறாரோ, அப்போதெல்லாம் சண்டை போடுகிற ஒரு இடத்தில்கூட அவர் இருக்கலாம்.

ஒருமுறை, நான் ஒரு சபைக்கு சென்று ஊழிய பயிற்சி கொடுத்தேன். அது கிராமப்புறத்தில் அமைந்திருந்த ஒரு சபையாகும். அந்த பயிற்சி நேரம் முடிந்தவுடனே, ஒரு சகோதரியின் குடிகார கணவர் குடித்துவிட்டு சண்டைக்கு வந்தார். அதுவும் அவர்கள் சபையின் ஆராதனை வேளைகளில் கலந்துகொள்கிற நாட்களில் எல்லாம், அந்த சகோதரியோடு சண்டை போடுவாராம். மற்றபடி அவர் மிகவும் நல்ல மனிதராக இருப்பார். இந்த மாதிரியான பிரச்சனைகளெல்லாம் வர வாய்ப்பிருக்கிறது. ஊழியம் என்பது பொதுமக்களோடு சம்பந்தப்பட்டது. பல குடும்பங்களோடு சம்பந்தப்பட்ட விஷயம். சமுதாயம், குடும்பம், கிராமம், நிர்வாகம் ஆகியவை சம்பந்தப்படுகிறது. அங்கிருக்கிற தலைவர்கள் நன்றாக இல்லையென்றால், உங்களிடம் பிரச்சனைக்கு வருவார்கள். இப்படியெல்லாம் வரும்போது, உங்களைத் திடப்படுத்தி, தொடர்ந்து ஊழியத்திற்கு போகவேண்டுமென்றால், அதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். அதற்கு திடமனதை உங்களுக்குள் உருவாக்கி, தைரியத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்குத்தான் கர்த்தர் சொல்லுகிறார், ‘திகையாதே, கலங்காதே, நான் உன்னுடனேகூட இருக்கிறேன்’ என்கிறார். அவ்வாறான பிரச்சனைகள், யுத்தங்கள் வரும்போது, நீங்கள் பொறுமையாக காத்திருந்தால், அந்த பிரச்சனை தானாக அகல்கிறதை நீங்கள் பார்க்க முடியும். அப்படி கர்த்தர் செய்கிறதினால், நீங்கள் இன்னும் விசுவாசமாய் மாற ஏதுவாக இருக்கும். அநேக எதிர்ப்புகள், மிகப்பெரிய நெருக்கங்கள் வரும்போது, நீங்கள் கலங்கிப்போய் நிற்பீர்கள். அப்போது, கர்த்தர் வாக்குத்தத்தம் தருவார். அந்தப் பிரச்சனையை அவர் ஆச்சரியமாய் அகற்றுகிறதை உங்கள் கண்கள் காணும். அப்போது இன்னும் உங்களுக்கு விசுவாசம் வரும். கர்த்தர் இப்படியெல்லாம் கிரியை செய்தார் அல்லவா? என்று கருதி, இன்னும் அவர் என்னுடைய ஊழியத்தில் வல்லமையாய் கிரியை செய்வார் என்று விசுவாசித்து நிற்பீர்கள். செங்கடல் போன்ற எத்தனை பிரச்சனைகள் வந்தாலும், அதன் மத்தியில் நீங்கள் துணிந்து நிற்க கர்த்தர், அந்த சூழ்நிலையின் வழியாக கற்றுத்தருவார் என்பதிலே சந்தேகமில்லை.

பிரியமானவர்களே, இதுபோன்ற அநேக காரியங்களை இன்னும் நாம் கற்றுக்கொள்ள இருக்கிறோம். அநேக நடைமுறையான விஷயங்கள் உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். இன்னும் அதிகமான பாடங்கள், பயிற்சிகள் வேதத்தின் அடிப்படையில் கற்றுத்தர இருக்கிறோம். ஜெபத்தோடு பாடங்களை நீங்கள் கேளுங்கள். அநேகருக்கு நம்முடைய பாடத்திட்டங்களை அறிமுகம் செய்து, அவர்களும்

இவ்விதமான பயிற்சியைப் பெற்று, சிறந்த விதத்தில் கர்த்தருக்காக செயல்பட உதவிடுங்கள். கர்த்தர்தாமே உங்களை அதிகமாக ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:-</u>**

1) திருநிலைப்படுத்தலில், ஊழியர் ஸ்தல சபையில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டியதின் அவசியத்தை சற்று விளக்கமாக கூறுக?
2) உலக அனுபவங்களை, முடிந்தவரை பெற்றுக்கொள்ள முயற்சி செய்வது, எவ்வாறு ஊழியரின் திருநிலைப்படுத்தப்படுதலுக்கு அவசியமானதாக இருக்கின்றது என்பதனை விளக்கமாக கூறுக?
3) கர்த்தருடைய ஊழியத்திற்கு ஆயத்தப்படுகிறபோது, பொறுமையாக காத்திருக்க வேண்டியதின் அவசியத்தை குறித்து விளக்கமாக கூறுக?
4) ஊழியர், தான் திருநிலைப்படுத்தப்படுவதற்காக சாகும்வரையிலும் கற்றுக்கொள்வதை நிறுத்திவிடாதிருக்க வேண்டிய அவசியத்தை குறித்து சற்று விளக்கமாக கூறுக?
5) கர்த்தருடைய ஊழியத்திற்கான ஆயத்தத்தில், நடைமுறையான ஆயத்தப்படுதலான, கடன்களிலிருந்து வெளியே வரவேண்டியதைக் குறித்து விளக்கமாக கூறுக?
6) ஊழியத்திற்கான ஆயத்தத்தில், ஊழியத்தின் பாதையில் அறிவுரையாளரை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியதைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
7) கிடைக்கப்பெறுகிற நேரத்திற்கு ஏற்ப சிறிய சிறிய பயிற்சிகளை பெற்றுக்கொள்வது, எவ்வாறு ஊழியத்திற்கு உதவியாக இருக்கின்றது என்பதனை கூறுக?
8) தெய்வீக குணம் குறித்து அப். பேதுரு கூறுகிற காரியத்தை வசன ஆதாரத்துடன் கூறுக?
9) ஊழியத்திற்கான ஆயத்தத்தில் வழிவிலகல்களை கவனத்தில்கொண்டு வாழவேண்டியதின் அவசியத்தைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## *பாடம் - 8*

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தருடைய ஊழியத்திற்கு நாம் எவ்விதமாக ஆயத்தமாக வேண்டும் என்று கடந்த சில பாடங்களில் தொடர்ச்சியாக கற்று வருகிறோம். நாம் ஒவ்வொருவரும் அவருடைய ஊழியத்திற்கு ஆயத்தமாக வேண்டியது அவசியம். அதை எவ்வாறு செய்யவேண்டும், அதற்கு வேதம் என்ன சொல்லுகிறது என்றெல்லாம் நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம்.*

*இந்த பாடத்திலும் ஒரு சில காரியங்களை கற்றுக்கொள்ளலாம்.* ***19-வது காரியமாக, நாம் ஊழியத்திற்கு ஆயத்தப்படும்பொழுது, நீங்கள் தோற்றுப்போகிறவர்களாக, அல்லது கற்றுக்கொள்கிறவர்களாக இருக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.*** *தோற்றுப் போகிறவனுக்கும், கற்றுக்கொள்கிறவனுக்கும் வித்தியாசம் இருக்கிறது. தோற்றுப் போகிறவன் எப்பொழுதும் முறுமுறுப்பான வகையிலே முறையிடுவான். ஒரு காரியத்தைக் குறித்து முறையிட்டுக்கொண்டே, முறுமுறுத்துக்கொண்டே, சலித்துக்கொண்டே இருப்பான். தோற்றுப்போகிறவன் மற்றவர்களை குறைகூறிக்கொண்டே இருப்பான். மற்றவர்கள் மீது பழிசாற்றுவான். ஆனால், கற்றுக்கொள்கிறவன் தன்னை கண்ணாடியில் பார்ப்பான். அதாவது தன்னைக் குறித்து சிந்திப்பான். தன்னிடத்தில் சரிசெய்ய வேண்டியது ஏதோ ஒன்று இருக்கிறது. ஆகவேதான் அவர்கள் ஏதோ ஒரு காரியத்தை சொல்ல விரும்புகிறார்கள். ஆனால் சொல்லத் தெரியாமல் சொல்லுகிறார்கள். ஆகவே அவர்கள் சொல்லுகிறதில் ஏதோவொரு காரியம் என்னிடத்தில் இருக்கிறது, என்று தன்னை உற்றுப் பார்ப்பான். அதைப்போல, தோற்றுப்போகிறவன், அநேக சாக்குப்போக்குகளை சொல்லுவான். அதே வேளையிலே கற்றுக்கொள்கிறவன் தன்னுடைய தோல்விகளிலிருந்து, தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்வான். அடுத்து, தோற்றுப்போகிறவன் அந்த கடந்தகால நிலையிலே நின்றுவிடுவான். குறிப்பிட்ட இடத்திலே அவன்கள் நின்றுவிடுவார்கள். அதைத்தாண்டி வரமாட்டான். பழையதையே பேசிக்கொண்டே இருப்பான். ஆனால் கற்றுக்கொள்கிறவனோ, தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருப்பான்.*

*அடுத்துவொரு காரியத்தை பார்ப்போம். தோற்றுப்போகிறவன் தேவனை தூஷிக்கிறவனாய், இல்லாவிட்டால் தேவனுக்கு கண்ணில்லை, அவருக்கு எதையும் நியாயமாக செய்ய தெரிகிறதில்லை. மற்றவர்களை ஆசீர்வதிக்கிறார், என்னை ஆசீர்வதிக்கவில்லை என்று சொல்லி குற்றம் சாட்டுகிறவனாய் இருப்பான். ஆனால், கற்றுக்கொள்ளுகிறவன் தேவனுடைய முகத்தை மாத்திரம் பார்க்கிறவனாக இருப்பான். நிறைவோ, குறைவோ, கர்த்தாவே நீர் போதும். அதை ஒரு ஊழியர் இவ்வாறு அழகாக*

சொன்னார்: இயேசு மாத்திரம் போதும், இயேசு மாத்திரம் போதும், இயேசுவே நீர் மாத்திரம் போதும் என்று சொல்வதற்கு பதில், காசு மாத்திரம் போதும், காசு மாத்திரம் போதும் என்று பாடுகிற இடத்தில் தோற்றுப்போகிறவன் இருப்பான். தேவனைவிட காசுதான் முக்கியம், அதைத்தான் பவுல் சொல்லுகிறார், அவர்களுக்கு தேவன், அவர்களுடைய வயிறு. சாப்பாடு இருந்தால் போதும், அவர்களுக்கு அதுதான் தெய்வம், பார்த்தீர்களா? இப்படியான ஒரு கூட்டம் இருக்கிறார்கள். அவர்கள்தான் தோற்றுப் போகிறவர்கள். தங்களுக்கு உலகின் காரியங்களில் ஏதாவது குறை வந்துவிட்டால் போதும், ஒரே புலம்பலாக இருக்கும்.

அடுத்து, தோற்றுப்போகிறவன் தன்னைப் பற்றி மாத்திரம்தான் கவனம் செலுத்தி, அவன் செயல்படுவான். நான் நன்றாக இருக்கவேண்டும் என்று சுயநலவாதியாய் இருப்பான் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், கற்றுக்கொள்கிறவனோ, தான் கற்றுக்கொண்டதை மற்றவர்களுக்கு பகிர்ந்துகொடுத்து அவர்களுக்கு நலமாய் இருக்க விரும்புவான். அவன்தான் கற்றுக்கொள்ளுகிற நல்ல ஊழியன். அதைப்போல கற்றுக்கொள்கிறவர்கள், சிறந்த தலைவர்களை உருவாக்குவார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய வாழ்விலே மிகவும் கடினமான வேளையில், தங்களுடைய ஞானத்தை, அதைப்போல தாழ்ந்த சிந்தையை, மனதுருக்கத்தை, அதேவேளையிலே, போராட்டமான சூழ்நிலையிலே தெரியாததை கற்றுக்கொண்டவர்கள். இவர்கள் கற்றுக்கொள்ளுகிற மாணாக்கர்கள் அல்லது சீஷர்கள். நீங்கள் எந்த இடத்தில் இருக்கிறீர்கள்? பிரியமானவர்களே. இதிலிருக்கிற வித்தியாசம் உங்களுக்கு புரியும். நீங்கள் கற்றுக் கொள்ளுகிறவரா, தோற்றுப்போகிறவரா? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். தோற்றுப்போகிற அந்த குணம் இருந்தால், அதையெல்லாம் மாற்றிவிடுங்கள். ஏனெனில், வேதத்தில் பவுல் இவ்விதமாய் அழகாய் வெற்றி முழக்கமிடுகிறார் பாருங்கள். ரோமர் 8:36-39 வசனங்களை வாசிப்போம்,

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?(ரோம 8:36)

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.(ரோம 8:37)

மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,(ரோம 8:38)

உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.(ரோம 8:39)

அதாவது தோற்றுப்போகிறவர்கள், உபத்திரவத்தில் புலம்பி தவிப்பார்கள். வியாகுலத்தில், துன்பத்தில், பசியில், நிர்வாணத்தில், நாசமோசத்தில், உயர்வில், தாழ்வில் அவர்களுடைய

குணாதிசயம் மாறும். ஆனால், பவுல் சொல்லுகிறார், இவை எல்லாவற்றிலேயும் நான் தோற்றுப்போகிறவனல்ல, கற்றுக்கொள்கிறவன். இயேசுகிறிஸ்துவின் உதவியோடு, என்னில் அன்புகூறுகிற இயேசுவின் உதவியோடு நான் கற்றுக்கொண்டு, இவற்றின்மேல் எல்லாம் ஜெயம்கொள்ளுகிறவனாய் இருக்கிறேன், என்று பவுல் கூறுகிறார். நீங்கள் இந்த இடத்தில் இருக்கவேண்டும் பிரியமானவர்களே. தோற்றுப்போகிற இடத்தில் இருக்கவேண்டாம். பலிகடாவாக இருக்காதீர்கள். பிரச்சனைகள் ஏற்படுகிற சூழ்நிலையில் நீங்கள் பலியாகி விடக்கூடாது. அதில் கற்றுக்கொள்ள வேண்டும், முன்னேறி வரவேண்டும், அதுதான் சிறந்த ஒரு ஊழியனின் அடையாளம்.

**அடுத்து 20-வது காரியமாக, திருமணமாகாதவர்கள் ஏற்ற வயதிலே திருமணத்தை செய்துவிட்டு, இந்த போதக ஊழியத்திற்கு செல்லுங்கள்.** சிலரைப் பார்ப்பீர்களானால், அவர்கள் திருமணத்தை, அதைப்போல குடும்பத்தை வேறுவிதமாகவும், ஊழியத்தை வேறுவிதமாகவும் பார்க்கிறதை பொதுவாக நாம் காண்கிறோம். ஆனால் வேதம் சொல்லுகிற விஷயம் என்ன தெரியுமா? குடும்பமும், ஊழியமும் தொடர்புடையது. அதாவது ஊழியத்தை ஒரு இடத்திலேயும், குடும்பத்தை ஒரு இடத்திலேயும் வைத்து நடத்துவீர்களானால், அது சரியல்ல. இரண்டையும் தனித்தனியாக பிரிக்க முடியாது. குடும்பமும், ஊழியமும் ஒன்றாக இணைந்துபோகிற ஒன்றாக இருக்கிறது. குறிப்பாக பார்த்தீர்களானால், போதக ஊழியத்திலிருக்கிற நீங்கள், வாலிபனாய் இருக்கும்போது, உங்களுக்கு கிடைக்கிற அந்த வரவேற்பு குறைவாகவே இருக்கும். ஏனென்றால், வீட்டில் பிள்ளைகள் இருப்பார்கள், இல்லையென்றால், ஒரு வாலிப தம்பி வீட்டிற்கு வந்துபோய்க்கொண்டிருந்தால், மற்றவர்கள் என்ன நினைப்பார்கள். இவ்வாறு பல விதத்தில், அது தடையாய், சரீரம் சார்ந்த பிரச்சனையாய் மாறுகிறது. ஊழிய அனுபவத்தில் இவ்விதமான காரியங்களை நாங்கள் பார்த்திருக்கிறோம். அநேக வயது குறைந்தவர்கள், அவ்வாறு செய்யும்போது, அவர்கள் சந்திக்கின்ற பிரச்சனையைப் பார்த்திருக்கிறோம். ஆகவே உங்களுக்கு ஏற்ற வயது வரும்பொழுது, திருமணம் முடித்தவர்களாய் இருந்தால்தான் ஒரு குடும்பத்தை சந்திப்பதற்கு தகுதியாய் மாறுவீர்கள். ஒரு வீட்டை சந்திக்கப் போகவோ, அல்லது ஆராதனை நடத்துவதற்கு போகும்போது, அந்த ஊழியத்தில் அநேக புறஜாதியார் சபைக்கு வரக்கூடும். வாலிப தம்பியை நம்பி, அவர்களுடைய வாலிப பிள்ளைகளை அனுப்புகிறது குறைவாகவே இருக்கும்.

ஆக, ஒரு குடும்பம் என்றால், நம்பிக்கையோடு வீடு சந்திக்கவோ, இல்லாவிட்டால் அந்த குடும்பத்திலுள்ள அந்த பெண், மற்றும் வாலிப பிள்ளைகள் சபைக்கு வருவதற்கு அது மிகவும் உதவியாகவும், மக்கள் பாதுகாப்பாக கருதுகிறதாகவும் இருப்பதைக் காணமுடிகிறது. மட்டுமல்ல, இன்னும்கூட பார்த்தீர்களானால் ஒவ்வொரு வீடும், ஒரு சபை போன்றது என்று சொல்வார்கள். அந்த அளவிற்குத்தான் வேதம் குடும்பத்தை, வீட்டை

முக்கியப்படுத்துகிறது. *1 தீமோ.3,* மற்றும் தீத்து *1-ம்* அதிகாரங்களை படிக்கும்போது, அங்கே வீட்டிற்கும், சபைக்கும் தொடர்பு இருக்கிறதை கண்டுகொள்ள முடியம். சபை நிர்வாகத்திற்கும், வீட்டு நிர்வாகத்திற்கும் தொடர்பிருக்கிறதை அங்கே அழகாக பவுல் எழுதுகிறார். குறிப்பாக, *1 தீமோ.3:5-ம்* வசனத்தை வாசிப்போம், 'தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?' ஆக, எவ்வளவு தெளிவாக, பவுல் சொல்கிறார், பாருங்கள். ஒரு ஊழியன் தன் சொந்த குடும்பத்தை நன்றாக நடத்தவில்லையென்றால், எப்படி அவன் தேவனுடைய சபையை சரியாக நடத்துவான் என்று கேள்வி கேட்கிறதாக தேவனுடைய வசனம் இருக்கிறது. குடும்ப நிர்வாகத்திற்கும், சபை நிர்வாகத்திற்கும் வேதம் சம்பந்தம் இருக்கிறதாக கருதுகிறது. தன் பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் நடத்துகிறவன்தான், சபையில் உள்ளவர்களையும் நல்லொழுக்கத்தில் நடத்துவான். மட்டுமல்ல, தன் சபையில் உள்ளவர்களை தன்னுடைய பிள்ளைகளாக கருதி, அவர்களுக்கு நல்லொழுக்கத்தை, நல்ல கரிசனையோடு, பிள்ளைகளை கவனிப்பதுபோல், தன்னுடைய சபையை கவனித்து நடத்துவான். ஆகவே, குடும்பத்தில் அவன் பிள்ளைகளை, குடும்ப நிர்வாகத்தை, அதுபோல தன் மனைவியை, அதுபோல குடும்பத்தில் சாட்சியை உடைய ஒரு ஊழியன், சிறந்த சபையை, நிர்வாகத்தை உடையவனாயிருக்கிறான் என்று வசனம் சொல்லுகிறபடியினால், நீங்கள் திருமண வாழ்வை விரும்ப வேண்டும். அதை சீக்கிரமாக, ஏற்ற வயதிலே செய்யவேண்டுமென்று, வேதத்தின் அடிப்படையிலே பார்க்கிறோம்.

பிரியமானவர்களே, உங்களை உங்களுடைய துணைவியார் நன்றாக அறிந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடியாய் சில ஆலோசனைகளை சொல்லுவார்கள். மட்டுமல்ல, உங்களுடைய பரிசுத்த வாழ்விற்கு உங்கள் துணைவியார் மிகவும் உற்ற துணையாய் இருப்பார்கள். இதன் முக்கிய பங்கு, உங்கள் கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆம் பிரியமானவர்களே, உங்களுடைய சபையில், தேவையற்ற பிரச்சனைகள் வராதபடி நீங்கள் எதுவுமே செய்யாதபடி, வாலிபனாய் இருக்கிறதினால், பிரச்சனையை கிளப்பலாம். அவைகள் ஏற்படாதபடியும், அவற்றை தடுப்பதற்காகவும், முன்கூட்டியே உணர்ந்துகொண்டு இந்த ஆயத்தத்தையும் செய்யவேண்டும்.

**இறுதியாக 21-வது காரியமாக, நீங்கள் ஆயத்தம்செய்து பேசுகிறதைவிட, கேட்கிறதற்கு தீவிரம் காண்பிக்க வேண்டும். இதை இன்னொரு விதத்தில் சொல்ல வேண்டுமானால், நீங்கள் பின்பற்றுகிறவர்களாய் முதலாவது இருங்கள்.** பொதுவாக, நாம் எப்படி இருப்போமென்றால், நம்மை அநேகர் பின்பற்ற வேண்டும் என்ற மனப்பான்மை நம் அனைவருக்குமே இருக்கும். அந்த சிந்தை ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. யாராக இருந்தாலும், நான் சொல்லுகிறதை நீங்கள் கேட்டீர்களா? முதலில் நான் சொல்லுகிறதைக் கேளுங்கள் என்று பெற்றோராய்

இருந்தாலும், பிள்ளைகளாய் இருந்தாலும், நண்பர்களாய் இருந்தாலும் அதையே முதலில் சொல்வார்கள். ஒருவர் சொல்லுவதை நாம் கேட்கவேண்டும், அவ்வாறுதான் எல்லோருடைய மனப்பாங்கும் கூட, ஊழியராய் இருக்கிற, போதகராய் மாறப்போகின்ற இல்லாவிட்டால் போதகர்களாய் இருந்துகொண்டிருக்கிற உங்களுக்கு ஒரு நல்ல பண்பு வேண்டும் என்றால், முதலாவது பின்பற்றுகிறவர்களாய் இருங்கள். அதாவது, ஊழியம் என்றாலே, அது சேவை செய்வது என்பதை முதலாவது அறியவேண்டும். அநேகர் நினைக்கிறது, ஊழியம் என்றாலே ஆளுகை செய்வதற்கு வருகிற ஒன்றாக நினைக்கிறார்கள். போதகர் இல்லாவிட்டால் ஊழியர் ஒரு இயக்கத்தின் தலைவர் என்று கருதி, ஒரு இடத்திற்கு வந்தவுடனே, அவர் நினைக்கிறது, நான் ஒரு தலைவர், நான் சொல்லுகிறதை எல்லோரும் கேட்கவேண்டும் என்ற மனப்பாங்கு பொதுவாக வந்துவிடுகிறது. ஆனால், இயேசுகிறிஸ்துவினுடைய தலைமைத்துவத்தை எடுத்துப் பாருங்கள். அது ஒரு மேய்ப்பனின் தலைமைத்துவம், அல்லது வேலைக்கார தலைமைத்துவம் என்றும் சொல்லுவார்கள். இயேசுகிறிஸ்து, வித்தியாசமான தலைமைத்துவத்தை கற்றுக்கொடுத்து சென்றிருக்கிறார். நம்முடைய வேதாகம கல்லூரியிலே தலைமைத்துவத்தைப் பற்றி, இரண்டு பாடங்களை வைத்திருக்கிறோம். சாதாரண தலைமைத்துவம் என்றால் என்ன? முன்னேற்ற நிலையிலான தலைமைத்துவம் என்றால் என்ன? என்பதைப் பற்றி வைத்திருக்கிறோம். ஆக, பொதுவாக தலைமைத்துவம் என்றால், இயேசுகிறிஸ்துவை போன்ற தலைமைத்துவத்தை நாம் கற்றுக் கொடுக்கிறோம். ஆனால், உலக தலைமைத்துவம் எப்படியிருக்கும்? அது இறுமாப்பாய் ஆளுகிற ஒரு தலைமைத்துவம். அதனால்தான் பேதுரு, நீங்கள் இறுமாப்பாய் ஆளக்கூடாது என்று ஆலோசனை சொல்லுகிறார். நமக்கு என்ன வேண்டும்? ஊழிய ஆயத்தத்திலே நல்லதொரு இருதயம் வேண்டும். நான் முதலாவது பின்பற்றுகிறவனாய் இருக்கவேண்டும். எல்லாவற்றிலேயும் முதலாவது தலைமைத்துவத்தில் இல்லாவிட்டால், பொறுப்பிலிருக்கிற ஒரு காரியத்தை விரும்பக்கூடாது. தன்னைத்தான் தாழ்த்துகிறவன்தான் உயர்த்தப்படுவான். ஆனால், நமக்கு பொதுவாய் இருக்கிற மனநிலை, யாராயிருந்தாலும் சொல்லுகிறேன், நமக்கு பொறுப்பு தந்துவிட்டால், நான் சூப்பராக செய்வேன், என்று பல விதங்களில் எண்ணங்கள் வந்துவிடுகிறது இயற்கை. ஆனால் கிறிஸ்துவுக்குள் நாம் தலைகீழாக, அதாவது உலக பழக்கவழக்கங்களுக்கு எதிராக இருக்கும் தலைமைத்துவத்தை பெற்றிருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதனை இயேசுகிறிஸ்து நமக்கு தந்திருக்கிறார். ஏனெனில் உலகப்பிரகாரமான காரியத்திற்காக ஊழியத்திற்கு வரவில்லை. ஆளுவதற்காக வரவில்லை, சேவை செய்வதற்காக வந்திருக்கிறோம். நாம் முதலாவது நம்முடைய உண்மைத்துவத்தை எல்லா பணிகளிலும் காண்பித்தால், ஏற்றவேளையில் உயர்வுகள் நம்மை தானாக தேடி வரும்.

அதனால், நாம் முதலாவது இவ்விதமாக சிந்திக்க வேண்டும். ஒவ்வொருவரும் என்னுடைய ஆசிரியர்களே. ஏனென்றால் ஒவ்வொருவரும், நான் அறியாத ஒன்றை அறிந்தவர்களாக இருக்கிறார்கள் என்று இந்த சிந்தை உங்களுக்கு வேண்டும். எல்லோரிடத்திலும் ஏதோ ஒன்றை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு பார்வை நமக்கு தேவை. இன்றைக்கு அது எந்தளவுக்கு சமுதாயத்திலிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள இயலவில்லை, இன்றைக்கு அது சமுதாயத்தில் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். நாம் ஒருவருக்கொருவர் கனம்பண்ணுவதிலே முந்திக்கொள்ளவேண்டுமென்று வேதம் சொல்லுகிறதேயொழிய, நீ கனத்தை எதிர்பார் என்கிற இடத்திலே இருக்க வேதம் நமக்கு சொல்லவில்லை. பொதுவாக ஊழியர்கள் மற்றவர்களை அப்படி பார்க்கிறார்கள். அவர்கள் ஸ்தோத்திரம், Praise the Lord என்று சொன்ன பிறகுதான் இவர்கள், அவர்களை அப்போதுதான் பார்க்கிறதுபோல், திடீரென்று பார்த்ததுபோல, அவர்களுக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லுகிற இடத்தில் இருக்கிறார்கள். ஆனால், இது நீங்கள் எப்போதுமே ஒரு நபரைப் பார்த்ததுமே, Praise the Lord sister அல்லது Brother என்று சொல்லுகிற, அல்லது ஸ்தோத்திரம் அம்மா, நன்றாக இருக்கிறீர்களா? என்று கேட்கிறீர்கள் என்று வையுங்கள், அவர்கள் தானாகவே உங்களுக்கு, உங்களை முந்திக்கொண்டு ஸ்தோத்திரம் என்று சொல்வார்கள். அவ்வாறு இல்லையென்றால், அவரைப் பார்த்தால், ஸ்தோத்திரம் போடணும் என்று சொல்லி, அவர்கள் விலகி போவார்கள். அதனால்தான் இன்றைக்கு ஊழியத்தில் நிறைய பிரச்சனைகள். ஊழியர்களைக் காண விரும்பாத மக்கள், நேராக வந்து சந்திக்க விரும்பவில்லை, காரணம் அவரிடம் போனால், அவர் பெருமையாக பார்ப்பார், நம்மை ஏளனமாகப் பேசுவார், என்ன? என்று பெருமையாக கேட்பார். இது எதற்கு, நம்ம பாட்டுக்கு ஒரு ஓரமாக நின்றுவிட்டு, அப்படியே போவோம் என்று சொல்லி, இன்று அநேகர் விலகிப்போக காரணமாக இருக்கிறது. அதற்கு ஊழியர்களிடத்தில் காணப்படுகிற இந்த விதமான போக்குதான் காரணம். ஆனால், தாழ்ந்த சிந்தையோடு பழகிப் பாருங்கள், வாருங்கள் சகோதரி, சகோதரா, நன்றாக இருக்கிறீர்களா? என்று அவர்களைப் பார்த்தவுடன், எந்த பெருமையும் இல்லாதபடி, சேவை செய்கிற மனதோடு பேசிப் பாருங்கள், உங்களது ஊழியம் அபரிவிதமான வளர்ச்சியை பெரும். நீங்கள் அவ்விதமாக சொல்கிறதினால், யாரும் உங்களை தாழ்மையாய் நினைக்க மாட்டார்கள்.

நிறைய பேர் நினைக்கிற விஷயம், நான் ஒரு போதகர், நான் ஒரு ஊழியன், இறங்கிபோய் அப்படியெல்லாம் ஸ்தோத்திரம் செய்தால், Praise the Lord சொன்னால் என்ன நினைப்பார்கள்? நாம் ஏதோ அவர்களின் காலில் விழுகிறதுபோல இருக்கிறது என்று கருதுகிறார்கள். அப்படியெல்லாம் இல்லை பிரியமானவர்களே. அவைகளெல்லாம் மாம்சத்தின் சிந்தனைகள். அதையெல்லாம் ஒரு ஓரமாக வைத்துவிட்டு கிறிஸ்துவின் அன்பாக, அன்போடுகூட ஒருவரையொருவர் நேசித்து பாருங்கள். எல்லோரும்

சந்தோஷமாக உங்களிடத்தில் பழகுவார்கள், பேசுவார்கள். தங்களுடைய பாரங்களை பகிர்ந்துகொண்டு ஜெபிப்பார்கள். ஒரு உண்மையான கிறிஸ்துவின் அன்பு அங்கே பெருகும், ஐக்கியம் பெருகும். அதற்கு உங்களை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று சொல்லி வேதம் சொல்லுகிறது. ஆகவே, மற்றவர்கள் சொல்லுகிறதை கேட்க நீங்கள் கவனம் செலுத்துங்கள். யாக்கோபு *1:19*-ம் வசனம் இவ்விதமாய் சொல்லுகிறதை நீங்கள் நினைவு கூறுங்கள். 'ஆகையால் என் பிரியமான சகோதரரே யாவரும் கேட்கிறதற்கு தீவிரமாயும், பேசுகிறதற்கு பொறுமையாயும் கோபிக்கிறதற்கு தாமதமாயும் இருக்க கடவர்கள்.' என்று எழுதுகிறார். மற்றவர்கள் சொல்லும்போது, மிகவும் அமைதியாய் கேட்டு பழகவேண்டும். எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று சொல்லி, அவர்கள் பேசி முடிக்கும் முன்னாலேயே, சிலபேர் பேசுகிறதை நாம் பார்த்திருப்போம். அவர்கள் பாமர மக்களாக இருக்கலாம். சில காரியத்தை விளக்கம் செய்ய தெரியாமல், முதலில் சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆனால், நீங்கள் அமைதியாக கேட்கவேண்டும், என்னங்க, இவ்வாறு சொல்லுகிறீர்கள்? என்று நீங்கள் கேட்கலாம்.

பிரியமானவர்களே, அவர்கள் சொல்ல வருகிற கருத்து உங்களுக்கு புரிந்தாலும், புரியாவிட்டாலும் நாம் சொல்லுகிறதை நம் போதகர் கவனமாக கேட்பார், அதற்கு கரிசனையாய் இருக்கிறார் என்பது, அதன்மூலம்தான் வெளிப்படுமேயொழிய, சரி, சரி போதும், போதும் என்று சொல்லி, நாம் அவர்கள் சொல்லும் முன்பே, அவர்கள் என்ன அர்த்தத்தோடு சொல்ல வருகிறார்கள் என்று புரியாமலே, இதுதானே இதற்காக ஜெபம் செய்துவிடலாம் என்று, தீவிரமாக பதில் சொல்லுகிறவர்களாக இருக்க கூடாது. கேளுங்கள், கவனமாக கேளுங்கள், பேசுகிறதற்கு பொறுமையாய் இருங்கள். பதில் கொடுப்பதற்கு, அதேபோல் சபையை பொறுத்தமட்டில், நிறைய ஆலோசனைகள் கொடுக்க வேண்டியிருக்கும். மேய்ப்புபணி ஆலோசனை ஊழியம் என்று நம்முடைய வேதாகம கல்லூரியில் வைத்திருக்கிறோம். போதகர் ஆலோசனை ஊழியத்தையும், கரிசனை கொடுக்கிற ஊழியத்தையும் செய்யவேண்டியதாக இருக்கிறது. அதற்கு அவர் என்னென்ன விதங்களிலெல்லாம் செயல்படலாம்? என்று வேதம் சொல்லுகிறது என்பதையும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆகவே, இந்த நோக்கத்தோடு, செயல்படுங்கள், பேசுகிறதற்கு பொறுமையாக இருங்கள்.

சிலருக்கு கோபம் மிகவும் வேகமாக வருகிறது. கோபப்படுவதற்கு, கோபப்படாத மனுஷன் உலகத்தில் கிடையவே கிடையாது, எல்லோருக்குமே கோபம் வரும். ஆனால், தாமதமாக இருக்க நம்மால் முடியும். தாமதித்தாலே அந்த கோபம் தணிந்துவிடும் என்பதை புரிந்துகொள்ளுங்கள். அதைத்தான் அழகாய் சொல்வார்கள், உங்களுக்கு கோபம் வந்தால், *1* முதல் *10* வரை எண்ணுங்கள், உங்களது கோபம் போய்விடும் என்று சிலர் சொல்வார்கள். நீங்கள் கோபப்படும்போது, உங்கள் முகத்தை கண்ணாடியில் போய்ப்

பாருங்கள். உங்களுக்கு கோபம் தானாய் போய்விடும். ஏனென்றால், அவ்வளவு கொடூரமாக உங்களது முகம் கண்ணாடியில் தெரியும். ஆக, கோபம் வரும்போது, நமக்கு வேதம் தருகிற ஒரேயொரு தீர்வு என்னவென்றால், தாமதம். அந்த இடத்தில் கோபப்பட்டு, பேசிவிடக் கூடாது. பொது இடத்தில் கோபம் வருகிறது என்பதற்காய் தாறுமாறாய் பேசிவிட கூடாது. அந்த இடத்தை விட்டு நகர்ந்துவிடுங்கள், தனியாக உட்கார்ந்து யோசியுங்கள், ஜெபம் செய்யுங்கள், ஸ்தோத்திரம் செய்யுங்கள். அதன்பின்பு, நீங்கள் பேசும்போது, நிதானமாய் பேசுவீர்கள். இப்படிப்பட்ட அநேக ஆயத்தங்கள் ஊழியர்களுக்கு தேவைப்படுகிறது. இதுவரை நாம் *21* காரியங்களை, கடந்த இரண்டு, மூன்று பாடங்களில் விரிவாக கற்றுக்கொண்டிருக்கிறோம். இவ்வாறான அநேக உபதேசங்கள் வேதத்திலிருந்து இன்னும் உங்களுக்கு சொல்லித்தர வேண்டியிருக்கிறது. அதற்காக நாம் நடைமுறையாக ஆயத்தப்பட வேண்டும்.

## <u>சோதிக்கப்படுதல்:-</u>

அடுத்து, நாம் சோதிக்கப்படுதலைக் குறித்து சற்று கற்றுக்கொள்வோம். அதாவது, இந்த போதக பணிக்கு, அதைப்போல இந்த காண்காணிப்பு செய்கிற இந்த பணிக்கு, இன்னும்கூட உதவிக்காரர் பணிக்கு, எல்லாவற்றிற்கும் சோதிக்கப்பட்ட பிறகுதான், ஒருவரை அந்தப் பணியிலே திருநிலைப்படுத்தப்படுவது அவசியம். இதை கேட்கும்போது ஒருவேளை, வித்தியாசமாய் தோன்றலாம். பொதுவாக இது எங்கே நடைபெற வாய்ப்பாக இருக்கிறதென்றால், ஒரு சபை இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த சபைக்கு போதகரை, அந்த நிர்வாகம் நியமிக்கிறது என்று எடுத்துக்கொண்டால், இது சாத்தியமாகும். ஆனால், பொதுவாக இன்றைய காலகட்டத்தில், நாம் பார்க்கும்போது, அநேக சுயாதீன சபைகள் எழும்பியிருக்கிறதை பார்க்கிறோம், நல்ல விஷயம்தான். ஆனால், அதிலே நாம் சோதிக்கப்படுகிற விஷயமெல்லாம் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் குறைவு. ஏனெனில் அவர்களே ஜெபத்தோடு, விசுவாசத்தோடு, சபைகளை ஸ்தாபிக்கிறார்கள். அங்கே நிர்வாகத்திற்கு, அந்த போதகர் தனக்கு உதவியாக ஒருவேளை ஒரு கமிட்டியை ஏற்படுத்துகிறார். ஆகவே, இங்கே போதகரை பரிசோதித்து, பின்னர் பதவியில் திருநிலைப்படுத்துதல் என்பது நடைபெற இயலாத காரியம். ஆகவே, பொதுவாக இந்த போதகர் பணிக்கு, உதவிக்காரர் பணிக்கு, சபை ஆரம்பிக்கும்போது, இந்த பணிகளை செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. அவர்களை சோதித்து, அதாவது Ordination (திருநிலைப்படுத்துதல்) நடைபெறும் முன்னர், அவர்களை ஊழியம் செய்ய அனுமதிக்க கூடாது. *1* தீமோ.*3:3*-ம் வசனத்திலிருந்து தொடர்ச்சியாக பல காரியங்களைப் பார்க்கிறோம். குறிப்பாக *1* தீமோ.*3:10*-ம் வசனத்திற்கு வரும்போது, 'மேலும் இவர்கள் முன்னதாக சோதிக்கப்பட வேண்டும், குற்றம் சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியம் செய்யலாம்' என்று அந்த வசனம் சொல்லுகிறது. ஆங்கில

வேதாகமத்தில் பார்க்கும்போது, They must first be tested and then if there is nothing against let them serve as decan. முதலாவது, சோதித்து பார்க்கப்பட வேண்டும். அவர்களுக்கு விரோதமாக எதுவும் இல்லையென்றால், (and then, if there is nothing against let them serve) உதவிக்காரராக உதவி செய்யலாம். மேலும் 9-ம் வசனத்தில் சொல்லப்படுகிற ஒன்றும் அவர்களில் காணப்படாத பட்சத்தில், அவர்கள் இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தப்படலாம் என்று அதிலே சொல்லப்படுகிறதை சற்று நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, சோதிக்கப்பட வேண்டும் என்றும், எதிலெல்லாம் சோதிக்கப்பட வேண்டும் என்றும் இந்த அதிகாரத்தில் பார்க்கலாம்.

முதலாவது காரியம், அந்த போதகர், ஊழியக்காரர், உதவிக்காரர் என்பதோடு, overseer மற்றும் mission போன்ற வார்த்தைகளை நீங்கள் இந்த இடத்தில் வைத்து பார்ப்பது அவசியம். 1 தீமோ.3:1-ல் சொல்லப்படுகிறதுபோல, அவர் அந்த நல்ல வேலையை விரும்புகிறதாக இருக்கவேண்டும், ஏனெனில் வசனம் சொல்லுகிறது, ‘கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். ‘விரும்புகிறது’ என்பது சோதிக்கப்படவேண்டும். ஒரு சபைக்கு போதகராய், ஊழியராய் நியமிக்கப்படும்போது, அவருக்கு உண்மையிலேயே வாஞ்சை இருக்கிறதா? இந்த பணிக்கு, இந்த ஊழியத்திற்கு என்று சோதிக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. இது சாதாரணமான வாஞ்சையை குறிக்கவில்லை. மிக மிக ஆழமான, மிகவும் உறுதியான வாஞ்சையைக் குறிக்கிறது. இந்த ‘விரும்புகிற’ என்பதற்கு பயன்படுத்தப்படுகிற கிரேக்க வார்த்தை **ορεπομαι** என்பதாகும். அந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்றால், பண ஆசை எவ்விதமாய் ஒருவருக்கு காணப்படுகிறதோ, அவ்விதமான ஆர்வத்தைக் குறிக்கிறது. பண ஆசையைப் போல, குறிப்பிட்ட பணியின் மீது மிக மிக அதிகமான ஆர்வம் போன்றவற்றை குறிப்பதாக இருக்கிறது. ஆக, இதிலிருந்து என்ன தெரிந்துகொள்கிறோம்? இந்த தேவனுடைய மனுஷன், அந்த போதகர், இந்த ஊழியர், இந்த தகுதி வாய்ந்தவராக தேவனுடைய பணியின்மீது தீராத ஆர்வமுடையவராக இருப்பார் என்பதை அறிய முடிகிறது. இன்றைக்கு, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? சற்று யோசித்துப் பாருங்கள்.

சிலரைப் பார்த்து கேட்கும்போது, அல்லது பார்க்கும்போது, ஊழியத்திற்கான நல்ல சூழ்நிலைகளில், தேவனுடைய ஊழியத்தை, அவ்வளவு ஆர்வமாய் செய்வார்கள். ஆனால் சில சூழ்நிலையில் பார்த்தீர்களானால், ஆர்வமே இருக்காது, இல்லையென்றால், கொஞ்சம் எதிர்ப்பான சூழ்நிலை வந்தால், ஏன் இந்த ஊழியத்திற்கு வந்தோமோ என்று முற்றிலுமாக சலித்துக் கொள்ளுகிறவர்களாய் இருப்பார்கள். சலிப்பும், வெறுப்பும் வராது என்று சொல்லவில்லை. நாம் மனிதர்களாக இருக்கிறோம். எனவே, சில தோல்வி வரும்போது, நிச்சயமாக நாம் சோர்ந்து போகிறோம், அது ஒருபுறம். ஆனால், தேவனுடைய பணியின்

மீது தீராத ஆர்வம் யாருக்கு இருக்கிறதோ, அவர் உண்மையாகவே தேவனால் அழைக்கப்பட்டவராய் இருக்கிறார். அதுமட்டுமல்ல, அந்த திருநிலைப்படுத்தலுக்கு அவர் போதுமானவராய் இருக்கிறார். எனவே, முன்னதாக சோதிக்கப்பட வேண்டும். திருநிலைப்படுத்தப்படுவதற்கு முன்னர் அல்லது ஊழியத்திற்கு ஏற்படுத்தப்படும் முன்னர் இந்த விதமான தேவனுடைய பணியைக் குறித்து, குறிப்பாக போதகராக, ஊழியத்தை செய்வதைக் குறித்து, தீராத வாஞ்சை இருக்கிறதா? என்பதை கொஞ்சம் சோதனை செய்து பாருங்கள். *1 கொரி.9:16*-ம் வசனத்தில் அப். பவுல் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள், 'சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை, அது என்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! எவ்வளவு அழுத்தமாய் சொல்லுகிறார் பாருங்கள். அதாவது சுவிசேஷம் அறிவிப்பது என்மேல் விழுந்த கடமைதான். ஆனால், அதைச் செய்யாதிருந்தால், பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! என்று சொன்னால், அவர் எந்தளவுக்கு உணர்ந்து, அதிலே வாஞ்சையாயிருந்து செயல்படுகிறார் என்று பாருங்கள். இந்த விதமாக ஊழியம் செய்யவேண்டும். ஆனால், ஐயோ! நான் சும்மா இருக்கிறேனே, ஒருவேளை இந்த கொரோனா காலகட்டத்திலே இருக்கிறோம். உண்மையாகவே ஒரு ஊழியத்தை நேசிக்கிற போதகராக இருப்பீர்களானால், ஐயோ, சும்மா இருக்க கூடாது. வேதம் வாசிக்க வேண்டும், ஜெபம் செய்யவேண்டும், யாருக்காவது நான் போன் செய்தாவது, சுவிசேஷத்தை சொல்ல வேண்டும். கிறிஸ்துவிலே வளர்க்கவேண்டும் என்ற தீராத பாரம், அன்பு உங்கள் உள்ளத்தை நெருக்கி ஏவுகிறதாய் இருக்கவேண்டும்.

நீங்கள் ஊழியர்களை, போதகரை ஏற்படுத்தும் முன்னர் இந்த வாஞ்சை இருக்கிறதா? என்று சோதித்து பாருங்கள். அவர்களுக்கு அது இல்லாமல், எனக்கு அந்த அழைப்பு இருக்கிறது, இந்த அழைப்பு இருக்கிறது என்ற நிலையற்ற எண்ணம் இருக்க கூடாது. இல்லாவிட்டால் தன்னுடைய பிழைப்புக்காக தான் இதை செய்ய போகிறதாக நினைக்க கூடாது. **சி.எச். ஸ்பர்ஜன்** என்ற மிகப் பெரிய ஊழியர், போதகர்களுக்கு பயிற்சியளிக்கும் ஒரு கல்லூரியில் பேசும்போது, இங்கேயிருக்கிற மாணவர்களில் நீங்கள் ஒருவேளை எனக்கு விவசாயியாக இருக்க விரும்புகிறேன், மருத்துவராய் இருக்க விரும்புகிறேன், வழக்கறிஞராக இருக்க விரும்புகிறேன், இல்லாவிட்டல் இந்த வேலை செய்ய விரும்புகிறேன், இந்த வேலையில் எனக்கு மாபெரும் வாஞ்சை இருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருப்பீர்களானால், வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தருடைய நாமத்தினால் நீங்கள் உங்களுடைய வழியிலே போக அன்புடன் அழைக்கிறேன். நீங்கள் அந்த வழியாய் போங்கள். ஆனால் அவ்வாறு போக விரும்பவில்லை, அதற்கு மாறாக, நான் இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும், அவரை சார்ந்து வாழ்வதற்குமே விரும்புகிறேன். அதுவே இந்த உலகிலுள்ள காரியங்களைவிட மிகவும் திருப்திகரமாக வாஞ்சை நிறைந்ததாக இருக்கிறது என்று சொல்வீர்களானால், அதுவே

அப்போஸ்தலர் ஊழியத்திற்கு, அதுவே சீஷத்துவ ஊழியத்திற்குரிய அடையாளமாக இருக்கிறது' என்று சொன்னார் என்று, ஒரு பத்திரிக்கையில் எழுதியிருந்தார்கள்.

அவர் சொல்ல வருகிற விஷயம் இதுதான், உங்களுக்கு பெரிய பொறியாளராகி, மருத்துவராகி, சம்பாத்தியம் பண்ண விரும்பினால், அந்த வழியிலேயே போங்கள், அதுதான் உங்களை திருப்திபடுத்த முடியும், இல்லையென்றால், அப்புறம் சொல்லுவீர்கள், ஐயோ, நான் அன்றைக்கே அந்த வேலைக்கு போயிருக்கலாம், இன்னைக்கு ஊழியராக கஷ்டப்படுகிறேன் என்று சொல்லுவீர்கள். ஆனால் உங்களது மனதில் உறுதிபட கர்த்தாவே, நீங்கள் இருக்கிறது உண்மைதான், உங்களுடைய ஊழியத்தை செய்வதுதான் மேன்மை. அதைச்செய்து பரலோகம் வந்துவிடவேண்டும். உலகிலே சம்பாத்தியம் பண்ணி, என்ன செய்ய போகிறேன்? இவைகளெல்லாம் அநித்தியமானவைகள் என்று சொல்லி, நீங்கள் உறுதிபட அதைப்போல, தேவனுடைய பணியில் வாஞ்சையாய் இருப்பீர்களானால், அதுதான் உங்களுடைய சுவிசேஷத்திற்கு, ஊழியத்தின், போதகத்தின் அழைப்பின் அடையாளமாய் இருக்கிறதை, நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். கட்டாயமாய் இது இல்லாதபடி, எப்பொழுதுமே இரண்டு இடத்தில் கால் வைக்க கூடாது. அப்போஸ்தலனாகிய பவுலை எடுத்துக்கொள்ளுங்களேன், பெரிய பணக்காரர். அப்பொழுதே, கப்பலெல்லாம் வைத்திருந்தார் என்று சொல்லப்படுகிறது. பெரிய பணக்காரர், மிகப்பெரிய ஆசிரியர் பாதத்தில், கமாலியேல் பாதத்தில் அமர்ந்து கற்றுக் கொண்டவர். இன்னும் கொஞ்சம் பயிற்சியெடுத்திருந்தால் பெரிய ஆசாரியராய் கூட வந்திருப்பார். ஆக, அவரைக் குறித்து பெருமை பாராட்டவேண்டுமென்று சொன்னால், அநேகமான காரியத்தை சொல்லலாம், அந்தளவுக்கு வாய்ப்புள்ள மனிதர் அவர். ஆனால் அவர் அதை விட்டுவிட்டு, அவை எல்லாவற்றையும் குப்பை என்று சொல்லுகிறார், நஷ்டம் என்று விட்டுவிட்டதாக சொல்லுகிறார். ஆம் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து இருக்கிறது உண்மையென்றால், அவரே முதலிடத்தில் இருக்க வேண்டும், மற்றதெல்லாம் இரண்டாவது இடத்தில் இருக்கவேண்டும். இரண்டாவது இடத்திலிருக்கிறது என்றாலும் சரி, இல்லையென்றாலும் சரி, கர்த்தர் எனக்கு மிகவும் முக்கியம் என்று சொல்லி வாழுகிற போதகராய், வாஞ்சை நிறைந்தவராய், சோதித்து கண்டுபிடிக்கிறவராய், சபையார், மூப்பர்கள் பழக வேண்டும். அந்த சபை நிர்வாகம் பழகவேண்டும்.

இரண்டாவது காரியம், அவருடைய வாழ்வை சோதித்து பார்க்க வேண்டும். முதலாவது நாம் பார்த்தோம், அவருடைய வாஞ்சை, விடாத விருப்பம், தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிற விருப்பம் இருக்கிறதா? என்று அந்த திருநிலைப்படுத்தப்படுதலுக்கு முன்னர் சோதித்து பார்க்க வேண்டும் என்று கற்றோம். வேதத்தின் அடிப்படையில்தான் இவைகளைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். இன்னொரு விஷயம், *1 தீமோ.3*-ம் அதிகாரத்தின் அடிப்படையில், அந்த மனிதனுடைய வாழ்வு சோதித்து பார்க்கப்பட

வேண்டும். இரண்டாவது, வசனத்திலிருந்து வாசித்துப் பாருங்கள். அந்த ஊழியர், குற்றம் சாட்டப்படாதவனாய் இருக்கிறாரா? என்று பார்க்க வேண்டும். குற்றம் சாட்டப்படாதவனாய் இருக்கவேண்டும், மற்றவர்களால் விரல் நீட்டி, குற்றம் சாட்டப்படாதவனாய் இருக்கவேண்டும். ஒரு போதகனாய், ஊழியனாய் மாறுகிறவன், ஒரே மனைவியை உடைய புருஷனாய் இருக்கவேண்டும், ஜாக்கிரதை உடையவனாய் இருக்க வேண்டும். *1 தீமோ.3:4*-வது வசனம் கூறுவதின் கருத்து என்னவெனில், தனது சொந்த குடும்பத்தை அவன் ஒழுங்காக நடத்துகிறானா? என்று சோதித்துப் பாருங்கள். தன் பிள்ளைகளை, சகல நல்லொழுக்கத்திலும் அவன் நடத்துகிறானா? என்று சோதனை செய்து பாருங்கள். அவன் தன் சொந்த குடும்பத்தையே சரியாக நடத்த அறியாதிருக்கிற அவன், எப்படி தேவனுடைய சபையை நன்றாக விசாரிப்பான்? என்று நீங்கள் உணர்ந்து பாருங்கள். *3:6*-ல் பவுல் கேள்வியைக் கேட்கிறார். நூதன சீஷனாய் இருக்கிறானா? என்று அதையும் சற்று சோதனை செய்து பாருங்கள் என்கிறார். நூதன சீஷன் என்றால் என்ன? அதாவது பயிற்சி பெறாத ஊழியன். நூதனம் என்றால், நீங்கள் வேறே ஏதோவென்று நினைத்து விடக்கூடாது. நூதனம் என்றால், New or Novice என்று பொருள்படுகிறது. அதாவது புதிய சீஷனாய் இருக்கக்கூடாது. பயிற்சி பெறாத ஒரு சீஷனாக இருக்ககூடாது. ஊழியத்திற்கும் பயிற்சி பெறவேண்டும் என்பதைக் கவனித்துப் பாருங்கள். ஊழியத்தில், ஜெபத்தில், பரிசுத்த ஆவியானவரோடு நடத்தப்படுதலில், ஒரு ஊழியன் பயிற்சி பெறவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை அழைக்கும்போது, அப்படித்தான் சொன்னார், I will make you, fishers of men என்று சொன்னார். நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாய் மாற்றுவேன். அதை ஆங்கிலத்தில் சொல்லும்போது, I will make you (உருவாக்குவேன்) என்று சொல்லுகிறார். ஆக, இயேசுகிறிஸ்து நம்மை உருவாக்குகிறவர். நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்ணாய் இருக்கிறோம். ஆக, அவர் நம்மை உருவாக்க ஒப்புக்கொடுக்கிற ஒரு ஊழியனாய் நாம் இருக்க வேண்டும். எனவே, நீங்கள் ஒரு ஊழியரை திருநிலைப்படுத்தும்(Ordination) முன்னர், நீங்கள் அவரை சோதித்துப் பார்க்க வேண்டும். தேவையான பயிற்சியைப் பெற்றிருக்கிறாரா? எங்கெல்லாம் ஊழியம் செய்திருக்கிறார்? என்று பார்க்க வேண்டும். தெளிந்து புத்தியாய் இருக்கிறாரா? போதக ஊழியத்திற்கு உரிய பயணத்திற்கு யோக்கியதை உள்ளவனாய் இருக்கிறாரா? அதைப்போல அந்நியரை உபசரிக்கிறவனாய் இருக்கிறானா? என்றும் சோதித்து அறியவேண்டும். சிலரைப் பார்த்தீர்களானால், எல்லாம் செய்வார்கள், ஆனால் உபசரிக்கிற பண்பு என்பது கிடையவே கிடையாது. ஆகவே, உண்மையிலே போதகராய், ஊழியராய் அந்த மனிதன் அந்நியரை உபசரிக்கிற பண்பு உடையவனாய் இருக்கிறானா? போதக சமர்த்தனாய் இருக்கிறானா? அதாவது போதிக்கிறதிலே, நல்ல தாலந்து இருக்கிறதா? என்று பரிசோதித்து பார்க்க வேண்டும்

*1* தீமோ.*3:3*-ம் வசனத்தின் அடிப்படையில், அவன் மதுபான பிரியனாய் இருக்ககூடாது. அதாவது, தண்ணியடிக்கிறவனாய் இருக்கக்கூடாது. அதைப்போல தன் மனைவியை அடிக்கிறவனாக, அதைப்போல இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாக இருக்கிறானா? என்பதை சோதனை செய்து பார்க்க வேண்டும். சிலரைப் பார்த்தீர்களானால், பணம், பணம், பணம், மற்றும் பதவிகளைப் பெறுவதில் மோகம், பதவியைப் பெற ஆசைப்படுவார்கள். உண்மையாய், உத்தமமாய் செய்ய விரும்பாமல், இழிவான ஆதாயத்தை பெறுகிறதையே நோக்கமாய் வைத்திருப்பார்கள். அதாவது இலாபம், அதில் துட்டு அடிக்க முடியுமா? என்ற அந்த எண்ணம் அந்த ஊழியனுக்கு இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். பொறுமை உள்ளவனாக இருக்கிறானா? என்றும் பார்க்க வேண்டும். சண்டை பண்ணாதவனாக இருக்கிறானா என்றும் பார்க்க வேண்டும். பண ஆசை இல்லாதவனாய் இருக்கிறானா? என்றும் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று வசனம் *3:3* சொல்லுகிறது.

நீங்கள் இதற்கு முன்பு ஊழியம் செய்த இடத்தில், எதிலெல்லாம் அனுபவம் பெற்றீர்கள்? என்று கேட்டு, அவரைப் பேசவிட்டாலே, நீங்கள் அவரைப் பற்றி புரிந்துகொள்ளலாம். அங்கே நான் ஊழியம் செய்தேன், எனக்கு தலைவராக இருந்தவர் சரியில்லை, ஊழியம் சரியில்லை, என்ன ஊழியர்கள் அவர்கள்? என்று புலம்பி தள்ளுகிறார் என்றால், அவரிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும். சோதித்துப் பாருங்கள், அவன் நூதன சீஷனாக இருந்தால், இவ்வாறுதான் புலம்பி தள்ளுவான். மற்றபடி, ஒரு அனுபவமுள்ள, கர்த்தருடைய வார்த்தையின்படி வளர்ந்த ஒரு ஊழியனாய் இருந்தால், இல்லைங்க, நான் இப்படி இருந்தேன், கர்த்தருடைய சித்தம் வந்திருக்கிறேன், இந்தெந்த காரியங்களிலே கர்த்தர் என்னை பயன்படுத்துகிறார் என்று சொல்லி, மிகவும் பொறுமையாய், நிதானமாக, மிகவும் மகிழ்ச்சியடைந்த நிலையில் பேசுகிற ஒரு மனிதராய் அவர் இருப்பார். அவருடைய பிரதியுத்திரத்தை வைத்து, நீங்கள் அவரைக் கண்டுபிடிக்கலாம். அவர் வாழ்ந்த இடத்தை அல்லது அவர் ஊழியம் செய்த இடத்தை விசாரித்தும், நீங்கள் அறியலாம். நாம் ஒரு ஊழியத்தை நடத்துகிறோம். ஒருவேளை முன்னே அவர் இருந்த இடம், ஊழியம் செய்த இடம், இல்லாவிட்டால், அவர் வசித்து வந்த இடம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் அங்கே வேலை பார்த்த காரியங்கள், அந்த இடத்தில் வாழ்ந்த ஊழியரை வைத்து கூட விசாரித்து பார்க்கலாம். அவருடைய சாட்சியை, இப்படி கேட்டுப் பார்த்து, திருநிலைப்படுத்தப்பட வேண்டும், அல்லது ஊழியத்திற்கு ஏற்படுத்த வேண்டும். ஏனெனில், *1* தீமோ.*3:7*-ல் பவுல் கேட்கிறார், 'அவர் நிந்தனையில் ஒருவேளை விழுந்து, பிசாசின் கண்ணியில் வீழ்ந்து போய்விடக் கூடாது.' நூதன சீஷனாய் இருந்த அவன் பல விதங்களில் நிந்தனையில் விழுந்துவிடுவான், பிசாசின் கண்ணியிலே விழுந்துவிடுவான், அவ்வாறு விழுந்துவிட்டால், ஊழியத்திற்கு வந்த பிறகு,

ஊழியத்திற்கு ஏற்ப்பட்ட பிறகு மற்றவர்களால் நற்சாட்சி இழந்தவனாய் போய்விடுவான். அதனால், நூதன சீஷனாய் இராமல் பயிற்சி பெற்ற ஊழியனாயிருங்கள்.

பிரியமானவர்களே. ஒரு வார்த்தையை நாம் அதிகமாய் விளக்கலாம். அநேகமான காரியங்கள் இருக்கிறது. இதை வாசித்து பாருங்கள், தியானித்து பாருங்கள். நீங்கள் இதேமாதிரியாக இருக்க கூடாது. உங்களது சபையிலே ஏற்படுத்தப்படுகிற ஊழியரும் அப்படி இருக்கக் கூடாது. தேவனுடைய ஊழியத்திற்கு வருகிறவர்களுக்கு இப்படிப்பட்ட போதனைகள் கொடுக்கப்பட வேண்டும். நீங்கள் இதை கவனித்துப் பார்க்க வேண்டும். நன்றாக படித்திருக்கிறாரா? திறமை வாய்ந்தவராக இருக்கிறாரா? என்று பார்க்க வேண்டும் என்று பவுல் சொல்லவில்லை. அவர் வல்லவராய் இருக்கவேண்டும், பிரபுவாய் இருக்கவேண்டும், பார்ப்பதற்கு அழகாய் இருக்கவேண்டும், என்று வெளித் தோற்றங்களைப் பற்றி சொல்லவில்லை. ஆனால் இந்த காலகட்டத்தில் ஊழியத்தில் வெளித்தோற்றம் மிக முக்கியமான இடத்தை பெறுகிறது. நல்லதொரு காரில் ஊழியக்காரர் வரவேண்டும், அப்படி அவர் வரும்போதே, பெரிய அதிகாரி போல் அவர் இருக்கவேண்டும். அப்போது, வாருங்கள் ஐயா, உட்காருங்கள் ஐயா என்று உலக மக்கள் கொண்டிருக்கிற நிலையைப் போலத்தான், மாதிரியைப் போலத்தான் இன்றைக்கு ஆவிக்குரிய வட்டாரமும் போய்க்கொண்டு இருக்கிறது. ஒரு சைக்கிளில் வருகிற உண்மையான, திறமையான ஆவிக்குரிய ஊழியரை மதிக்கிறதா? இந்த ஆவிக்குரிய வட்டாரம், யோசித்துப் பாருங்கள். இவற்றையெல்லாம், நாம் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இவைகளை கற்றுக்கொண்டிருக்கிறோம்.

நாம் உலக வழக்கத்தின்படி அளக்கிறவர்களாய் இருக்கிறோம். வேதம் என்ன சொல்லுகிறது என்று கவனித்துப் பாருங்கள். தீத்து 1-ம் அதிகாரத்திற்கு வாருங்கள். அங்கே ஒருசில காரியங்களை பவுல் எழுதுகிறார் பாருங்கள். அதாவது, 1 தீமோத்தேயு நிருபத்தில் சொல்லாத காரியங்களை, நாம் இங்கிருந்து எடுத்து தொடர்ந்து கற்றுக் கொள்வோம். ஆக, திருநிலைப்படுத்தப்படுதல்(Ordination) பெறப்படுகிற அல்லது உங்களது சபையிலே ஊழியனாய், ஏற்படுத்தப்படப் போகிற மனிதர் எவ்விதமாய் காணப்படவேண்டும்? தன் இஷ்டப்படி செய்யாதவனாய் இருக்க வேண்டும். ஆக, அதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். தான் நினைத்ததைச் செய்கிற ஊழியனாய் இருக்கக் கூடாது. இந்தக் காலத்தில் பார்த்தால், அநேக ஊழியர்கள், தன் இஷ்டப்படித்தான் ஊழியம் செய்ய விரும்புகிறார்கள். தாங்கள் எதை விரும்புகிறார்களோ, அதைத்தான் செய்ய விரும்புகிறதை, மூத்த தலைவர்கள் இல்லாவிட்டால் பாஸ்டர், போதகர் போன்றோர் சொல்வதை நான் ஏன் கேட்கவேண்டும், என்று அவர்கள் விரும்பியதையே செய்கிறார்கள்.

நல்ல முதிர்ச்சியான ஊழியர்கள் எப்படியிருப்பார்கள் என்றால், கர்த்தாவே மொத்த அதிகாரமும் என்மேலே நீர் தராமல் இல்லை. நான் அப்படியே கீழ்ப்படிகிறேன்

என்று சொல்லுகிற நல்ல ஊழியனாய் இருப்பார்கள். ஆக, பவுல் அதைத்தான் இங்கே சுட்டிக்காட்டுகிறார், தீத்து 1:7-ல், ‘முற்கோபம் இல்லாதவனாய் இருக்கிறானா? என்று சோதனை செய்து பாருங்கள்’ என்று எழுதுகிறார். அதற்கு சில சோதனைகளைக் கூட வைக்கலாம். கூடவே இரண்டு, மூன்று மாதம் இருந்து, அவர் கோபம் உள்ளவரா? இஷ்டப்படி செய்கிறவரா? செய்யாதவரா? என்று தெளிவாக தெரிந்துவிடும். அதற்கு கொஞ்சம் காலமெடுக்கும். பொதுவாக, அநேகருக்கு முற்கோபம் மூக்குமேலதான் இருக்கும். ஏனென்றால், அவர்களால் சில காரியங்களை தாங்க முடியாது, கடுமையாய் கோபப்படுவார்கள். முற்கோபம் இல்லாதவனாய் இருக்கிறாரா? என்று சோதனை செய்து பாருங்கள். தீத்து 1:8-ம் வசனத்தில் நல்லோர் மேல் பிரியமுள்ளவனாய் இருக்கவேண்டும். அதை நேசிக்கவேண்டும் என்று கூறுகிறது. தேவ பிள்ளைகளை, நல்லவர்கள் சிலரைப் பார்க்கும்போது, அவர் பார்க்கத்தான் அப்படியிருக்கிறார், ஆனால் அவர் பண்ணுகிறதெல்லாம் அட்டூழியம் என்று அவர்கள் சொல்லாததை சிலர் சொல்லுவார்கள். ஏனெனில் இவருக்கு அவர்மேல் பொறாமை. மேலதிகாரியாய் இருந்து சில நேரங்களில் இவரை வேலை வாங்கிவிட்டார் என்றால், ஏதாவது குறைசொல்ல வேண்டுமல்லவா? அவ்வாறு இருக்க கூடாது. நல்லோர் மீது பிரியமுள்ளவனாய் இருக்கிறாரா? சோதித்துப் பாருங்கள். சிலருக்கு குழப்பமான புத்தி. அவரும் குழம்பி விடுவார், மற்றவர்களையும் குழப்பிவிடுவார். ஐயோ, இதைச் செய்யலாம் என்று நினைக்கிறேன், என்ன செய்வதென்று தெரியவில்லை என்று கருதி, அவரிடம் பேசின உங்களுக்கு, என்ன செய்யவேண்டுமென்று தெரியாமல் போய்விடும். ஆகவே, தெளிந்த புத்தியுடையவராய் இருக்கிறாரா? என்று சோதித்து பாருங்கள். நீதிமானாய் இருக்கிறாரா? பரிசுத்தவானாய் இருக்கிறாரா? இச்சையடக்கம் உடையவராய் இருக்கிறாரா? என்று சோதித்துப் பாருங்கள். ஆவியானவர் கற்றுத் தருகிறார்.

நீதிமான் யார்? பரிசுத்தவான், இரட்சிக்கப்பட்டவன், இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த பாதையிலே முன்னேறி செல்லுகிறவனுக்கு, இச்சையடக்கம் தேவையல்லவா? இச்சையடக்கம் இல்லாமல் இஷ்டம்போல, கண்களை அலைய விடுகிற ஒரு மனிதனாய் இருக்க கூடாது. இஷ்டம்போல நாவை அடக்காமல், தாறுமாறாய் பேசுகிறவராய், சிலர் சாப்பாட்டு பிரியராய் இருப்பார்கள். அவருக்கு ஏற்றபடி, சாப்பாட்டின் ருசி இல்லையென்றாலோ, அல்லது சபையில் மற்றவர்களுக்கு நல்ல சாப்பாடு கிடைத்து, இவருக்கு சரியாக கொடுக்கவில்லையென்றால் போதும், அந்த ஊழியருக்கு கோபம் வந்துவிடும், இவற்றையெல்லாம் சோதித்துப் பாருங்கள். இச்சையடக்கம் உள்ளவராய் இருக்கிறாரா? அதுபோல ஆரோக்கியமான உபதேசத்தில் புத்தி சொல்லுகிறவராய் இருக்கிறாரா? ஊழியரை பேசவிட்டு பார்க்கவேண்டும், இல்லையென்றால், பாதிக்கப்பட்ட மனுஷர்களுக்கு புத்தி சொல்ல வைத்து, நீங்கள் பார்க்கலாம். அவர் வேத வசனத்திலிருந்து புத்தி சொல்லுகிறாரா? நடைமுறையாய், அது... இது... இப்படியிருக்கிறது

என்று புத்தி சொல்லுகிறாரா? என்று சோதித்துப் பாருங்கள். அதைப்போல எதிர்பேசுகிறவர்கள் சில வேளைகளில் பார்த்தால், எதிர்த்து பேசுவார்கள். பல கேள்விகளைக் கேட்பார்கள், அதை தைரியமாய் நேருக்கு நேர் சந்திக்கிற திறன் உடையவராய் இருக்கிறாரா? கண்டனம் பண்ண தைரியமாய் திறனுடையவராய் இருக்கிறாரா? என்று சோதித்துப் பாருங்கள். அதைப்போல, வேத வசனத்தில் என்ன கேட்டாரோ, அந்த உண்மையான வசனத்திற்கு ஏற்றபடி நன்றாய் அதைப் பற்றிக்கொண்டு வாழ்கிறவராய் அந்த மனுஷன் இருக்கிறாரா? என்று சோதித்துப் பார்க்க வேண்டும்.

பிரியமானவர்களே, இந்த அதிகாரம் முழுவதும் வாசித்துப் பாருங்கள். 1 தீமோ. 3-வது அதிகாரம், தீத்து 1-ம் அதிகாரம் போன்றவற்றின் அடிப்படையில் ஒரு ஊழியர் இருக்கிறாரா? என்று பார்த்துதான், ஒருவரை போதகராய், மேய்ப்பராய், ஊழியராய் பொறுப்பிலே ஏற்படுத்த வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. சில குறைபாடுகள் இருக்கலாம், இல்லையென்று சொல்ல முடியாது. அப்படி எதிர்பார்த்தால், இந்த காலத்திலே ஊழியர்களே கிடைப்பது அரிதாகி விடும். ஓரளவு சரியானபடி வேதத்தின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டு இருக்கிறாரா? மற்றும் இதில் இருக்கிறவைகளையும் பார்க்க வேண்டும். எனவே, வேதம் சொல்லியிருக்கிற தகுதிகளில், அதிகமானவைகளைக் கொண்டிருக்கிற ஒருவரை நீங்கள் ஊழியத்தில் ஏற்படுத்தலாம்.

இதுபோன்ற அநேக காரியங்களை நாம் தொடர்ந்து வருகிற பாடங்களிலே கற்றுக்கொள்வோம். ஜெபத்தோடும், பயத்தோடும் கற்றுக்கொள்ளுங்கள். இந்த வசனங்களுக்கு கீழ்ப்படியுங்கள். நீங்களும் சிறந்த ஊழியர்களாய் உருவாகிக் கொண்டிருக்கிறீர்கள், அதற்காக நாங்கள் கர்த்தரைத் துதிக்கிறோம். கர்த்தர் தாமே, உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:</u>-

1) தோற்றுப்போகிறவனுக்கும், கற்றுக்கொள்கிறவனுக்குமான வித்தியாசங்களை வசன ஆதாரங்களோடு சற்று விளக்கமாக கூறுக?
2) ஏற்ற வயதிலே திருமணத்தை செய்துவிட்டு, போதக ஊழியத்திற்கு செல்ல வேண்டியதின் முக்கியத்துவத்தை வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
3) ஊழியத்திற்கான ஆயத்தத்தில், கேட்கிறதற்கு தீவிரம் காண்பிக்க வேண்டியதைக் குறித்து அல்லது பின்பற்றுகிறவர்களாக இருக்கவேண்டியதைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
4) திருநிலைப்படுத்தப்படுதலுக்கு முன்பு சோதிக்கப்படுதல் நடைபெற வேண்டியதின் முக்கியத்துவத்தை வசன ஆதாரத்துடன் கூறுக?

5) திருநிலைப்படுத்தப்படுதலுக்கு முன்பு ஊழியக்காரர் சோதிக்கப்படுதலில், அவர் நல்ல வேலையை விரும்புகிறதாக இருக்கவேண்டியதைக் குறித்து வசன ஆதாரங்களோடு விளக்கமாக கூறுக?
6) விருப்பத்தை குறிக்கிற கிரேக்க வார்த்தையையும், அதற்கான அர்த்தத்தையும் கூறுக?
7) ஊழியத்திற்கான விருப்பம் குறித்து சி.எச். ஸ்பர்ஜன் கூறும் வாக்கியத்தைக் கூறுக?
8) திருநிலைப்படுத்தப்படுதலுக்கு முன்பு ஊழியக்காரர் சோதிக்கப்படுதலில், அவருடைய வாழ்வை சோதித்து பார்க்க வேண்டியதைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
9) நூதன சீஷன் என்றால் என்ன?
10) திருநிலைப்படுத்தப்படுதலுக்கு முன்பு ஊழியக்காரரின் வாழ்வில் எவை எவைகளையெல்லாம் சோதிக்கப்பட வேண்டும்? (தலைப்புகள் மட்டும்)

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - 9

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த பாடத்தின் தொடர்ச்சியை கற்க போகிறோம். ஒரு போதகர் அல்லது ஊழியர் எந்தெந்த காரியங்களில் சோதிக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து நாம் சிந்திக்கலாம். கடந்த பாடத்தில், ஒரு ஊழியர் அல்லது போதகர், அந்த ஊழியத்தைக் குறித்து மிகவும் வாஞ்சையுடையவராக இருக்க வேண்டுமென்று கற்றோம். அவருடைய வாழ்வு சோதிக்கப்பட வேண்டுமென்று 2-வது காரியமாக கற்றோம்.

**இப்போது, 3-வது காரியமாக, அவருடைய திறமை சோதிக்கப்பட வேண்டுமென்பதை கற்கப் போகிறோம்.** ஒரு போதகனாக ஏற்படுத்தப்பட வேண்டியவர், அவருடைய திறமையைக் குறித்து அறிந்திருக்க வேண்டும். அவருடைய பெலவீனங்களைக் குறித்து அறிந்திருக்க வேண்டும். மட்டுமல்ல அவரை தன்னுடைய சபையில் வைக்கப்போகிறவர்களும், அவருக்கு இந்த ஊழியத்தைச் செய்யக் கூடிய திறமை இருக்கிறதா? என்று சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. தேவனுடைய காரியம்தான், ஆனால் முக்கியப் பொறுப்புகளில் அவர் அந்த இடத்தில் இருப்பதற்கு தகுதியானவரா? என்று பார்க்க வேண்டியது அவசியம். அவருக்கு அந்த திறமை இருக்கிறதா? ஏனெனில் அருமையான மூத்த ஊழியர் ஒருவர் சொல்லுவார், நான் ஊழியத்திற்கு அர்ப்பணித்து, இந்த இயக்கத்தில் சேர்ந்தபோது, ‘தம்பி உங்களுடைய அழைப்பு என்ன? என்பதை உறுதிசெய்து அதை நீங்கள் சொல்ல வேண்டும். ஏனெனில், நீங்கள் வைக்கப்படக்கூடிய இடத்தில் வைக்கப்படவில்லையானால், உங்களுக்கும் பிரச்சனை, எனக்கும் பிரச்சனை. நீங்களும் உங்களுடைய அழைப்பை நிறைவேற்ற முடியாது, நானும் உங்களை பயன்படுத்த முடியாது என்ற இடத்தில் இருப்பீர்கள். ஆகவே தேவனுடைய பணிதான் தடைபடும்’ என்று சொன்னார். ஆம், பிரியமானவர்களே, அதை நன்றாக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். இருக்க வேண்டிய இடத்தில், சரியான பொறுப்பில் நீங்கள் வைக்கப்பட்டால்தான் அது உங்களுக்கும் ஆசீர்வாதம், மற்றவர்களுக்கும் ஆசீர்வாதம். இல்லையெனில், அது உங்களுக்கு தலைவலியாக இருக்கும், மற்றவர்களுக்கும் அது தலைவலியாக இருக்கும்.

அழைப்பை உறுதிப்படுத்திக் கொள்வது எப்படியென்று சொல்லி, கடந்த வகுப்புகளில் கற்றோம். அது உங்களுக்கு தெரியும். அதைப்போல இப்போது, நாம் பார்க்கிறது ஒரு சபையார், அல்லது ஒரு சபை நிர்வாகம், ஒரு போதகரை நியமிக்கும்

முன்னர், எவற்றையெல்லாம் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று பார்த்துக்கொண்டிருக்கிற அந்த கண்ணோட்டத்தில் இப்போது பார்க்கிறோம். நீங்கள்தான் ஒரு சபையை வைத்திருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு போதக அழைப்பு இல்லையென்று கருதி, மற்ற ஒருவரை நியமிக்கப்போகிறீர்கள் என்றால், என்னென்ன காரியங்களை சோதித்துப் பார்க்க வேண்டும் என்பதை நீங்கள் இதிலிருந்து கற்றுக்கொள்ள முடியும் பிரியமானவர்களே.

இப்போது, ஊழியருடைய திறமை, அவரிடம் அழைப்பை நிறைவேற்றும் திறமை இருக்கிறதா? போதக ஊழியத்திற்கு வருகிறாரே, அதை நிறைவேற்றுகிற திறமை இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். இதற்கு நீங்கள் தீத்து *1:9-11* வரையிலான வசனங்கள், *1* தீமோ.*3:5*, *1* பேதுரு *5:2* போன்ற வசனங்களை ஆதாரமாக வாசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். தேவன் ஒரு ஊழியத்திற்கு அழைப்பரானால், அதற்குரிய வல்லமை, வரங்களைக் கொடுத்தே அனுப்புவார். அதை நிறைவேற்றக்கூடிய திறமைகளையும், தாலந்துகளையும் கொடுத்தே அனுப்புவார் என்பதை என்னுடைய ஊழிய அனுபவத்திலேயும், என்னுடைய வாழ்விலும் கண்டிருக்கிறேன். ஆம், பிரியமானவர்களே, உங்களை எங்கே, எதற்காக ஏற்படுத்துகிறாரோ, அதைச் செய்யக்கூடிய அந்த ஆற்றலையும் கொடுத்தே அனுப்புகிறார். அவர் எவரையும், எந்த விதமான காரியத்தையும் செய்யாமல் அழைத்து பயன்படுத்துகிறது இல்லை. அது எப்படியிருக்க முடியும்? சற்று யோசித்துப் பாருங்கள். ஒரு உலக எஜமான்கூட தன்னுடைய வேலைக்காரர்களுக்கு தேவையான காரியங்களை, அதிகாரத்தைக் கொடுத்து, வல்லமையைக் கொடுத்து, அதற்குரிய வாய்ப்புகள், வசதிகள், பணவசதிகள், போக்குவரத்து வசதிகளையெல்லாம் செய்து கொடுத்துதான் அந்த பணியைச் செய்ய வைக்கிறாரேயொழிய, சும்மா நான் இந்த வேலைக்கு உன்னை ஏற்படுத்துகிறேன், இந்த வேலையைப்போய் செய் என்று அவர் அனுப்புகிறதில்லை.

அதைப்போலத்தான் தேவனுடைய பணியைச் செய்வது என்பது மேன்மையானது. ஏனெனில் உலக இராஜா அல்லது உலக அதிகாரிகள்கூட ஞானத்தில் குறைவுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால், நம்முடைய தேவன் ஞானத்திற்கு அவர்தான் ஆதாரம், நீதிக்கு அவர்தான் ஆதாரம், ஆக, அனைத்திற்கும் ஆதாரம் அவர்தான். அப்படிப்பட்ட தேவன் உங்களை சும்மா அழைத்து, அதை நிறைவேற்றக்கூடிய வல்லமையை, வரங்களை, அதிகாரங்களை, வாய்ப்பை, வசதியை, எதையும் தராமல் ஒருபோதும் அனுப்ப மாட்டார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும், பிரியமானவர்களே.

ஆசரிப்பு கூடாரத்தை மோசேயைக் கொண்டு, கட்ட கர்த்தர் நினைத்தபோது, அந்த விசேஷித்த பணியைச் செய்வதற்கு ஆட்களையும் ஏற்படுத்தினார் என்பதைப் பாருங்கள். நீங்கள் யாத்.*31:2-3* வரையுள்ள வசனங்களை வாசித்துப் பார்ப்பீர்களானால், 'நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலை பெயர்

சொல்லியழைத்து, விநோதமான வேலைகளை, அவன் யோசித்து செய்வதற்கும், பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும்… 31:5-ம் வசனம், 'மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்.' என்கிறார். பார்த்தீர்களா? ஆசரிப்பு கூடாரத்தை மோசேயைக் கொண்டு உருவாக்க கர்த்தர் விரும்பினார். அதைச்செய்து முடிக்க தேவ ஆவியினால், அறிவினால், ஞானத்தினால் நிரம்பிய மக்களையும் அவனுக்கு கொடுத்தார். இந்த இடத்தில் நீங்கள் ஒரு காரியத்தை கவனிக்க வேண்டும். தேவனுடைய அழைப்பில் இவ்விதமாக இந்த விசேஷித்த பணிகளைச் செய்வதற்கு 3 விதமான நிலைகள் காணப்படுவதைப் பாருங்கள். 1) அது தனிப்பட்ட அழைப்பாக இருக்கிறது. கர்த்தர் இந்த பெசலெயேலை அழைக்கிறார். அது அவனுக்கான அழைப்பு. 2) அது குறிப்பிட்ட அழைப்பாக இருக்கிறது. அந்த பெசலெயேலுக்கு இந்த காரியங்களை யோசித்து செய்யக்கூடிய, விநோதமான வேலைகளை யோசித்து பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும், வேலைசெய்கிறதற்கு இந்த ஞானமும், புத்தியும், அறிவும் கொடுத்து அந்த குறிப்பிட்ட பணிக்கென தேவன் அழைக்கிறதைப் பார்க்கிறோம். 3) அந்த பணியைச் செய்து முடிப்பதற்குரிய தேவையான எல்லாத் திறமைகளையும் கொடுத்து தேவன் அந்த அழைப்பைக் கொடுக்கிறதைப் பார்க்கிறோம்.

அதாவது, பெசலெயேலுக்கு தனிப்பட்ட அழைப்பு மட்டுமல்ல, அந்த குறிப்பிட்ட பணியைச் செய்வதற்கு அழைப்பு, அது இரண்டாவது காரியம். 3-வது காரியம், அந்த குறிப்பிட்ட பணியைச் செய்வதற்கு தேவையான ஆற்றலை, திறமையைக் கொடுக்கிற ஒரு அழைப்பாய் இருக்கிறது. அந்த திறமைக்கு தேவன் அவனைத் தகுதிப்படுத்தினார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஆம் பிரியமானவர்களே, தேவனுக்கு பெலவீனமானவர்களை பயன்படுத்த ஆசைதான், அவர் பயன்படுத்துகிறார் என்பது உண்மைதான். ஆனால், பெலவீனமான மக்களைக் கொண்டு செய்வதினால்தான், அவருக்கு மகிமை உண்டாகிறது. அதை உண்டாக்குவதற்காக தேவன் பிரபுக்களல்லாத, ஞானவான்களல்லாதவர்களையும் பயன்படுத்துகிறார். மேலும் பிரபுக்களையும் பயன்படுத்துகிறார். ஆனால், அநேகர் இல்லை, பிரபுக்கள் அநேகர் இல்லை, ஞானவான்கள் அநேகர் இல்லை. உங்களைப்போன்ற, என்னைப் போன்ற பெலவீனமானவர்களையே அவர் எடுத்து பயன்படுத்தி, அவர் நாமத்தை மகிமைப்படுத்துகிறார். இவர்களெல்லாம், இந்த ஊழியத்தைச் செய்யப்போகிறார்களா? என்று மனிதர்கள், சாதாரணமானவர்களைக் குறித்து நினைக்கிற மக்களைக் கொண்டு தேவன் பிரசங்கம்பண்ண வைக்கிறார். அதாவது பைத்தியமானவர்களை அவர் தெரிந்துகொண்டு காரியங்களை நடப்பிக்கிறார் என்று அப். பவுல் எழுதுகிறார். அது

உண்மைதான், பெலவீனமானவர்களைக் கர்த்தர் பயன்படுத்துகிறார், அதைத்தான் அவர் செய்கின்றார்.

ஆனாலும், அதற்காக போதகர் என்ற பணிக்கு அவர் கொண்டுவருகிற நபர், அவர் செய்ய இயலாதவொரு நபராக இருக்கிறவரை அவர் ஒருபோதும் வைக்கிறதில்லை. இந்த கருத்தை புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறோம். போதகர் என்று தேவன் ஒருவரை ஏற்படுத்த பயன்படுத்துகிற, அல்லது உருவாக்கப்படுகிற அந்த மனிதனுக்கு, அதைச் செய்யக்கூடிய ஆற்றலையும், திறமையையும் கர்த்தர் நிச்சயம் கொடுப்பார். அதுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டிய நேரிடையான காரியம். ஒருவேளை, ஒரு மனிதருக்கு மிகவும் ஆழமான வாஞ்சையாக இருக்கலாம், போதகராக இருந்து ஊழியம் செய்ய வாஞ்சை இருக்கலாம், நல்ல கிறிஸ்தவ சாட்சி இருக்கலாம். ஆனால் அவ்வாறு இருந்தாலும், அவருக்கு போதுமான ஆற்றல் இல்லையென்றால், திறமை இல்லையென்றால், தாலந்துகள் இல்லையென்றால், அவர் அதைச் செய்யும்படி ஏற்படுத்தாதிருப்பது நல்லது. ரோமர் 12:3-ம் வசனம் சொல்வதை இந்த இடத்தில் வாசித்து, புரிந்துகொள்ளுங்கள். 'அல்லாமலும் எனக்கு அருளப்பட்ட கிருபையினால் நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும், தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்.' என்று பவுல் மூலமாய் ஆவியானவர் கூறுகிறார். இதில் ஆவியானவர் நமக்கு தெளிவாக உணர்த்துகிற விஷயம் என்னவெனில், உன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாதே. அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணுங்கள்' என்று கர்த்தர் நினைவு கூறுகிறார்.

பிரியமானவர்களே, இந்த இடத்தில் நீங்கள் சற்று நடைமுறையாய் சிந்திக்க வேண்டியது அவசியம். ஏனெனில், ஆவிக்குரிய வட்டாரத்தில் இரண்டு காரியங்களும் கலந்தே இருக்கவேண்டும். நடைமுறை மற்றும் ஆவிக்குரிய ரீதியிலான கண்ணோட்டம். ஏனெனில் ஆவிக்குரிய விதமாக பார்க்கவேண்டுமானால், அது இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் செயல்படுகிற காரியம். ஆனால், அதேவேளையில் நடைமுறையாகப் பார்க்கும்போது, அது செயல்முறையில் சிந்திக்கவேண்டிய விஷயமாக இருக்கிறது. இது நடக்குமா? சாத்தியமா? என்று நினைக்கிற முறைக்கு, நடைமுறை எனலாம். இப்போது, இங்கே சொல்லுகிற இந்த வசனத்தை சற்று பாருங்களேன், நடைமுறையான காரியத்தை கூறுகிறார். உன்னால் முடியும், இதே பவுல்தான் சொல்லுகிறார், என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு என்கிறார். ஆனால், இங்கே சொல்வது என்னவென்றால், 'எவனானாலும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்' என்று சொல்லுகிறார்.

உன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாதே, ஆவிக்குரிய அல்லது அற்புதமாக நினைக்கும்போது, எண்ணவேண்டியதற்கு மிஞ்சித்தான் எண்ணவேண்டியிருக்கிறது. தேவன் என்னை மிகவும் பெரிய இடத்திற்கு கொண்டு போவார். நான் 'ஆடி' காரில் வருகிற அளவுக்கு கர்த்தர் உயர்த்துவார் என்று அநேகர் சொல்வதை நாம் பார்க்கிறோம், இல்லையா? அது அற்புதத்தை எதிர்பார்த்து சொல்லுகிற விசுவாச அறிக்கையென்று நாம் சொல்லுகின்றோம். அவருடைய நிலையைப் பார்த்தால், ஒரு கார்கூட வாங்க முடியாத நிலையிலிருப்பார். ஆனால் அவர் விசுவாசத்தில் சொல்வார், ஒருநாள் வரும், அன்று நான் 'ஆடி' காரில் வரக்கூடிய அளவுக்கு உயர்த்துவார் என்று சொல்வதை நாம் பார்த்தால், இப்போது அவர் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணி, பேசுகிறார் என்பது தெளிவாகிறது. போதகராய் உன்னை அழைக்காதிருக்கும்போது, உன் தகுதிக்கு மிஞ்சி, எண்ணாதே என்பதை நீங்கள் இந்த இடத்தில் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம் பிரியமானவர்களே. ஆக, உங்களை தேவன் போதகராக ஏற்படுத்தினால், அதைச் செய்யக்கூடிய வலிமையையும், ஆற்றலையும், திறமையையும் கர்த்தர் தருவார் என்பது முக்கியமான விஷயமாகிறது.

போதகர்களால் என்னென்ன காரியங்கள் சொல்லப்பட வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார், என்பதைக் குறித்து பார்ப்போம். போதகர் என்னென்ன செய்ய முடியும், இல்லாவிட்டால் அவர் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை வசனங்களின் அடிப்படையில் நாம் தெரிந்துகொள்வோம். நாம் ஏற்கனவே சிந்தித்ததுபோல, *1 பேதுரு 5, 1 தீமோ.3, 2 தீமோ. 4* போன்ற அதிகாரங்களிலுள்ள வசனங்களில் நாம் பார்க்கும்போது, ஒரு போதகர் தன்னுடைய மந்தையை மேய்க்க வல்லவராக இருக்கவேண்டும். அதற்கு தேவையான வேத சத்தியம் என்னும் ஆகாரத்தை கொடுக்க வல்லவராய் இருக்கவேண்டும். போதக சமர்த்தனாய் இருக்கவேண்டும். மட்டுமல்ல வேத வசனத்தை, பகுத்து, ஆராய்ந்து மிக ஆழமாக தேவன் என்ன எதிர்பார்க்கிறாரோ, அதனடிப்படையில், குறிப்பாக ஆவியானவர் என்ன நோக்கத்தில் வேத வசனங்களைக் கொடுத்திருக்கிறாரோ, அதை சரியான அர்த்தத்தில் அவர் பகிர்ந்து கொடுக்கிறவராக இருக்க வேண்டும். மட்டுமல்ல, தேவனுடைய அந்த ஆலோசனை முழுவதையும், அவர் போதிக்கிறவராக இருக்கவேண்டும். அப். 20:27-ன் அடிப்படையில் பார்க்கும்போது, எல்லா ஆலோசனைகளையும் அவர் சொல்லுகிறவராக, இருக்கவேண்டும். அவர் நன்றாக வேதத்தை வாசிக்கத் தெரிந்தவராக, தேவனுடைய பணியைச் சிறப்பாக செய்கிறவராக இருக்கவேண்டும், அதாவது ஆங்கில அறிவை நிச்சயமாய் வளர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டாலும் தமிழ் படிப்பிலாவது நல்ல படிப்பை பயில வேண்டும். டிகிரி(பட்டம்) என்ற அர்த்தத்தில் இதைச் சொல்லவில்லை. ஆனால், வேதாகமக் கல்லூரியில் படிக்கிறார்கள் என்றால், அவர்கள் உலகப்படிப்பிலேயும் நல்ல அறிவுள்ளவர்களாக இருந்தார்களானால், வேதத்தை தெளிவாக கற்றுக்கொள்ள அது

உதவியாக இருக்கும். இப்போது நான் என்னைப்பற்றி சொல்லுகிறேன். கர்த்தர் என்னை எம்.ஏ. பி.எட். வரை படிக்க வைத்தார். அந்த கஷ்டமான காலத்தில், நெருக்கடியான குடும்ப சூழ்நிலைகளின் மத்தியிலும், என்னை படிக்க வைத்தது, இயேசுகிறிஸ்து மாத்திரமே. தேவையான அனைத்து கட்டணங்களையும் கட்டி படிக்க வைத்தார். சாட்சிக்காக இவ்வாறு சொல்லுகிறேன். கர்த்தர் என்னை ஆச்சரியமாய் பி.எட். படிப்பையும் படிக்க வைத்தார். அதற்கு பின்பு M.Div. வேதாகமக் கல்லூரியில் படிக்க வைத்தார். டாக்டர் பட்டம் பெறுகிற அளவுக்கு தேவையான அனைத்து படிப்புகளையும் கர்த்தர் எனக்கு கொடுத்தார்.

தொடர்ந்து நான் படித்துக்கொண்டேதான் இருக்கிறேன். ஏன் அவ்வாறு என்றால், தேவனுடைய பணியில் நாளுக்குநாள் நன்கு கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதில் கற்றுத் தேர்ச்சியடைய வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு தேவையான எல்லா காரியங்களையும் நாம் கற்றுக்கொடுக்க முடியும். ஆகவே, ஆங்கில ஞானம் எல்லாம் பெறுவதற்கு நீங்கள் முயற்சியெடுக்கலாம், எடுக்க வெண்டும். தமிழில் நன்றாக வாசிக்க, எழுத, திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். நமக்கு தேவன் தந்திருக்கிற நேரங்களில், அதையும் நாம் உருவாக்க வேண்டும். ஊழியம் மட்டும் செய்துகொண்டே இருக்கிறதாக நம்முடைய நேரம் போய்விடக் கூடாது. நம்மையும் தகுதிப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். ஒருபுறம் ஊழியமும், மறுபுறம் கற்றுக்கொள்வதும் நடக்க வேண்டும். சிலரைப் பார்த்தால் எங்கே நேரமிருக்கிறது? என்பார்கள். ஆத்துமாக்கள் அழிந்து கொண்டிருக்கிறதே என்பார்கள். அதுவும் சரிதான், நீங்கள் உங்களை உருவாக்காமல், அப்படியே இருப்பது நன்றாக இருக்காது. சிலரைப் பார்த்தால், ஊழியத்திற்கு வரும்போது, என்ன படித்திருந்தார்களோ, அப்படியே இருப்பார்கள். மேற்க்கொண்டு எதையுமே அவர்கள் கற்றுக்கொள்ள முயற்சிக்கவில்லை. நீங்களாவது, இப்போது நமது கல்லூரியில் சேர்ந்து இந்தப் பாடத்தை படித்துக்கொண்டு இருக்கிறீர்கள். அதனால்தான் இந்த விஷயத்தை அறிகிறீர்கள். சிலர் அதையும் செய்கிறது இல்லை. அது ஆவியானவர் பேசுவார், அவ்வளவுதான். இது சோம்பேறித்தனத்தின் மற்றொரு வெளிப்பாடான பதில். எனக்கு உழைக்க விருப்பமில்லை, படிக்க விருப்பமில்லை. அதெல்லாம் இந்த வயதான காலத்தில் எங்கே ஞாபகம் இருக்க போகிறது? என்று நினைக்கிற அநேக ஊழியர்கள் உண்டு. இல்லை பிரியமானவர்களே. மற்ற காரியங்களெல்லாம் நினைவில் இருக்கிறது, அல்லவா? சபையின் காரியங்களை நினைவில் வைத்துக்கொள்ள முடிகிறது, பிரச்சனைகளைக் குறித்தும், அவர்கள் அந்த நாளில் அதைச் சொன்னார்கள், இவர்கள் இந்த நாளில் இவற்றையெல்லாம் சொன்னார்கள் என்பது குறித்தும் கூறுகிற போதகர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஞாபக சக்தியெல்லாம் ஒன்றும் குறையவில்லை, ஆர்வம்தான் குறைந்திருக்கிறது.

உழைக்க மனதில்லை, அதாவது படித்து, அதை கற்றுக்கொள்ள விருப்பமில்லை. அதுதான் காரணம். ஆனால் ஒரு நல்ல போதகராய் நாளுக்குநாள் வளரவேண்டுமென்றால், உங்களை நீங்கள் கல்வி அடிப்படையில் உங்களை தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சிலர் அன்றைய காலகட்டத்தில் படித்த படிப்பான 8 அல்லது 10-ம் வகுப்பு வரையில்தான் படித்திருப்பார்கள். அதை இங்கு குறையாக சொல்லவில்லை. இப்போது நினைத்தால்கூட படிக்கலாமே. அதற்கு அநேக வாய்ப்புகள் இருக்கிறது. வீட்டிலிருந்தே படிக்கலாம். 10, 11, 12 எல்லாவற்றையும் 1 முதல் 1 ½ ஆடுகளுக்குள் முடித்துவிட்டு, B.Th.-ம் நமது கல்லூரியில் படித்து, அருமையாக இழந்த தருணங்களை மீண்டும் பெற்றுவிடலாம் பிரியமானவர்களே. உங்களது தகுதியை நீங்கள் உருவாக்கிக் கொள்ளுங்கள். ஏனென்றால், பொதுவான இடத்தில் ஊழியங்களைச் செய்யப்போகிறீர்கள். மக்கள் மத்தியில் ஊழியம் செய்யப் போகிறீர்கள். ஆக, நீங்கள் படித்திருக்கிறீர்கள் என்ற மன திடமிருந்தாலே, படித்தவர்களைப் பார்த்து பேசும்போது உங்களுக்கு அச்சம் இருக்காது. சிலரைப் பார்த்தீர்களானால், அது அவர்களின் மனதிலிருக்கிற குறைபாடாகவே, பாதிப்பாகவே இருக்கிறதினால் அவர்கள், அதாவது ஒரு பாஸ்டர், அல்லது ரெவரண்ட் சொல்வார், நான் அதிகமாக எல்லாம் படிக்கவில்லை என்று தங்களை ஒரு குறைவாக சொல்லிக்கொண்டே வாழ்வார்கள். ஏன் அவ்வாறு வாழவேண்டும். அதற்கு பதில் படித்து விடுங்கள். வீட்டிலிருந்தே படிக்கலாம், எங்களிடம் கேளுங்கள், நாங்கள் சொல்லித் தருகிறோம். என்னென்ன டிகிரியை, எங்கே படிக்க வேண்டும் என்று சொல்லித் தருகிறோம். 40 வயதிற்கு மேலேயும் படிக்கலாம். 40 வயதிற்கு கீழேயிருக்கிறவர்களும் என்ன வேண்டுமானாலும் படிக்கலாம். அரசில் வசதியிருக்கிறது, ஆன்லைனில் வசதியிருக்கிறது, வீட்டிலிருந்தே படிக்கலாம். அந்தவொரு தாழ்வு மனப்பான்மையை உங்களைவிட்டு அகற்றுங்கள். நான் படிக்கவில்லை என்று ஏன் சொல்லவேண்டும்? எதற்கு நாம் மக்கள் மத்தியில் குறைந்தவர்களைப்போன்று காட்ட வேண்டும், வேண்டவே வேண்டாம். உங்களால் முடியும். ஆகவே, நாம் நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1 தீமோ.5, 2 தீமோ. 2-ம் அதிகாரங்களின் அடிப்படையில் நீங்கள் பார்க்கும்போது, நீங்கள் தேவனுடைய வார்த்தையில் மிக மிக ஆர்வமும், கவனமும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்று வேதம் எதிர்பார்க்கிறது. தேவனுடைய பணியில் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கவேண்டுமென்றும் வேதம் கூறுகிறது. குறிப்பாக, 1 தீமோ.5:17-ஐ வாசிப்போம். நன்றாக விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராக எண்ணவேண்டும். இங்கே 'பிரயாசப்படுகிறவர்களை' என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அது சிரத்தையுள்ளவர்கள் என்ற அர்த்தத்தில் வருகிறது. 'சிரத்தையுள்ளவர்களாக' இருக்க

வேண்டும். அதாவது, ஆங்கில வேதாகமத்தில் 'Labours in the word of God and doctrine' என்று சொல்லப்பட்டு, அந்த வார்த்தை உழைக்கிறவர்களாக இருக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் உள்ளது. தேவனுடைய வார்த்தையில், உபதேசத்தில், அதிகமான சிரத்தை உடையவராக போதகர்கள் இருக்கவேண்டுமென்று வேதம் இந்த வசனத்தின் மூலமாகச் சொல்லுகிறது. இன்னும் அநேக காரியங்களை நாம் சொல்லிக்கொண்டே போக முடியும்.

ஒரு ஊழியர் என்பவர், போதகர் என்பவர் எல்லாவிதமான திறமையிலும் தேர்ந்தவராக இருக்க வேண்டும். எல்லாவிதமான திறமை என்றால் என்ன? என்பதை நாம் சற்று முன்னர் கற்றதின் அடிப்படையில் முடிவு செய்து கொள்ளுங்கள். அதற்காக எல்லாம் நமக்கு தெரியவேண்டும் என்று அர்த்தமல்ல. ஆனால் தேவனுடைய காரியங்களில் எந்தெந்த திறமையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று வேதம் கூறுகிறது என்பதைப் புரிந்து, அந்த திறமை அவருக்கு இருக்கிறதா? அவ்வாறு இல்லையென்றால், அந்த திறமையை வளர்த்துக்கொள்கிற அளவுக்கு ஆர்வமிருக்கிறதா? விடாமுயற்சி இருக்கிறதா? சாதிக்கவேண்டுமென்ற எண்ணமிருக்கிறதா? கர்த்தருடைய ஊழியத்தில் மிகச் சிறந்த விதத்தில் நான் செயல்பட வேண்டும் என்பதான ஒரு எண்ணமும், தீர்மானமும், உறுதியும் ஒரு ஊழியரிடம் இருக்கிறதா? என்பதைப் பார்த்து, ஒரு சில காரியங்கள் அவரிடம் இல்லாதிருந்தால், அவர் உருவாக்கிக் கொள்வார் என்ற நம்பிக்கையுடன் அவர் திருநிலைப்படுத்தப்(Ordination) படலாம், அல்லது பரிசோதித்து பார்க்கலாம். அவரால் முடியுமா? என்று பரிசோதித்து பார்த்து அவர்களை சபையின் ஊழியராக, மேய்ப்பனாக, போதகனாக ஏற்படுத்தலாம்.

**நான்காவது காரியம், தேவனுடைய அங்கீகாரத்தின் அடிப்படையில் உறுதிசெய்வது. நாம் இப்போது ஒரு ஊழியரை, போதகரை சபையில் நியமிப்பதைப் பற்றி, அதைப் பரிசோதிப்பதைப் பற்றி கற்றுக்கொண்டிருக்கிறோம்.** இப்போது, இங்கே தேவனுடைய அங்கீகாரம், அவருடைய அழைப்பிலிருக்கிறதா? என்பதையும் நாம் பரிசோதித்து பார்க்க வேண்டியது அவசியம். ஏனெனில், நாம் ஏற்படுத்தப்போகின்ற பணியானது தேவ பணியாகும், ஆவிக்குரிய பணியாகும். இதுவொரு அலுவலகப்பணி அல்ல. நாமாக வேலையை மாற்றி, மாற்றிக் கொடுத்து செய்ய வைக்கலாம் என்ற இடத்தில் இல்லை. அவர்கள், தேவன் அழைத்த அழைப்பை நிறைவேற்றுகிற இடத்தில் இருக்கிறார்கள். ஆகவே அந்த அழைப்பைக் கொடுத்ததும் தேவனே. அந்த அழைப்பை நிறைவேற்ற அவரேதான் உதவியும் செய்யவேண்டும். அதற்கு அவர் என்ன செய்கிறார்? அதை அங்கீகாரம் செய்கிறதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். குறிப்பாக அப்.13:1-3 வரை நீங்கள் பார்ப்பீர்களானால், அங்கே நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம். 'அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையில் பர்னபாவும், நீகர் எனப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடன் வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும்

தீர்க்கதரிசிகளாயும், போதகர்களாயும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டு இருக்கிறபோது, பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த காரியத்திற்காக அவர்களை பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்' என்று வாசிக்கிறோம், பார்த்தீர்களா? அங்கே அவர்கள் உபவாசம்பண்ணி, ஜெபம் செய்கிறார்கள், கர்த்தரை ஆராதிக்கிறார்கள். அந்த வேளையில் கர்த்தருடைய ஆவியானவர் பேசுகிறார், பவுலையும், பர்னபாவையும் நான் அழைத்த ஊழியத்திற்காக, அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று, புறஜாதியார் மத்தியில் அவர்கள் அனுப்பப்பட்டு ஊழியம் செய்வதற்காக, தேவன் அவர்களை அழைத்த அழைப்பிற்காக, பிரித்துவிட சபையாருக்கு கூறுகிறார். காரணம் என்ன? அந்த சபையிலேயே அவர்கள் தீர்க்கதரிசிகளாயும், போதகர்களாயும் இருந்துகொண்டிருந்த வேளையிலே, அப்படியே இருந்துவிடக்கூடாது என்பதற்காக தேவன் இங்கே இடைபட்டார் என்று நான் கருதுகிறேன். இடைபட்டு, ஐயா, நீங்கள் இங்கே இருந்தது போதும், அழைத்த அழைப்புக்கு நீங்கள் புறப்பட்டு போங்கள் என்று அவர்களை அனுப்புகிறதைப் பார்க்கிறோம், பார்த்தீர்களா?

தேவன் அழைத்த அழைப்பை அவர் உறுதிப்படுத்துகிற தேவன். அதை நிச்சயமாக உறுதிப்படுத்துவார். நீங்கள் ஏற்படுத்தப்படப்போகின்ற அந்த சபையிலும், மூப்பர்களுக்கும், தேவப்பிள்ளைகளுக்கும் நிச்சயமாக அந்த அங்கீகாரத்தை வெளிப்படுத்திக் காண்பிப்பார். ஆக, அந்த அங்கீகாரம் தேவை, அது தேவனுடைய ஊழியம். ஆகவே, நீங்கள் இந்த இடத்தையும் மிகவும் கவனமாக கவனிக்க வேண்டும். அந்த சபையார் ஆவிக்குரியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாய், கர்த்தருடைய சித்தத்தை செய்கிறவர்களாய், தேவனுடைய பிள்ளைகளாய் இருந்தால்தான் சரியாக அவர்களுக்கு இந்த வெளிப்பாடும் கிடைக்கும். ஒருவேளை அவர்கள் மாம்சீகத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள் என்றால், அவர்கள் வேதம் வாசித்து, ஜெபம் செய்வார்கள். ஆனால், கர்த்தர், கர்த்தருடைய சித்தம், இரட்சிப்பு என்றெல்லாம் முக்கியப்படுத்தாமல் அநேகர் சபையில் இருக்கிறார்கள். இன்று சபையில் அநேகர் ஆவிக்குரிய நிலையில் இருப்பதாக நினைக்கிறார்கள், ஆனால் இல்லை. அவர்களின் ஜெபமெல்லாம், பிரச்சனை மாறவேண்டும், அவர்களுக்கு உயர்வு வரவேண்டும் என்பதே. இப்படியான அவர்களுடைய ஜெபம் மாறவேண்டும். தேவ சித்தம் செய்வது பற்றியெல்லாம் அவர்கள் கருத்தில் கொள்ளவே மாட்டார்கள். கர்த்தாவே எங்கள் வாழ்வைக் குறித்து என்ன திட்டம் வைத்திருக்கிறீர்? ஆண்டவரே, நீர் எனக்கு வேண்டும், நான் உமக்காய் வாழவேண்டும் என்று சொல்வார்களே தவிர, சீஷர்களாக இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட தலைவர்கள் இன்று அநேகர் சபையில் இருக்கிறார்கள், அவர்கள் தேவ திட்டத்தை எப்படி முக்கியப்படுத்துவார்கள்? யோசித்துப் பாருங்கள். அல்லது ஜெபம் செய்துகூட பார்க்கமாட்டார்கள். அவர்கள் உலகத்திலுள்ள ஒரு

அலுவலகத்திற்கு வேலைக்கு ஆட்களை எடுப்பதுபோல, ஊழியர்களை அவர்கள் எடுப்பார்கள், திருநிலைப்படுத்துவார்கள். அவ்வாறு செய்து, தங்களது சபையில் போதகர்களாக ஏற்படுத்துவார்கள், அது சரியான விஷயம் அல்ல. ஆனாலும் தேவ அங்கீகாரத்தை முதலாவது அந்த மூப்பர்கள் அங்கீகரிக்க வேண்டும், அங்கீகரித்து ஒரு ஊழியர், போதகர் உங்கள் முன் வருகிறார் என்றால், அவரிடம் நீங்கள் பேசிப்பார்க்கும்போது, தேவன் எவ்விதமாய் கடந்த ஆண்டுகளில் நடத்தி வந்தார் என்ற அனுபவத்தை கொஞ்சம் கேட்டுப் பார்த்தால், நன்றாகவே உங்களுக்கு புரிந்துவிடும். ஓ, தேவன் இவருடைய ஊழியத்தை அங்கீகரித்து, அந்த வழியிலே இவர்களை நடத்தி வந்திருக்கிறார். இவரை நாம் அந்த ஊழியத்தில் பரிசோதித்து பார்த்ததின் அடிப்படையில், சரிதான் இவரை அந்த ஊழியத்திற்கே ஏற்படுத்தலாம் என்று கருதி, நீங்கள் இவ்விதமாக பரிசோதித்து அறிய முடியும். ஆனால் நீங்கள் ஒரு காரியத்தை அறியவேண்டும். ஏனெனில், தேவ அங்கீகாரம் இருக்கிறது என்பதை, அந்த சபையார் சரியாக அங்கீகாரம் செய்யவேண்டும் என்று சொன்னேன். அவர்கள் சில வேளைகளில், மாம்சீகப்பிரகாரமாக இருந்தால், அவரை அங்கீகாரம் பண்ணாமல் விட்டுவிட வாய்ப்பிருக்கிறது. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் மானிட அவதாரம் கொண்டுவந்த குமாரனை, இந்த உலகம் புறக்கணித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். பவுலின் ஊழியத்தை, கலாத்தியா சபை புறக்கணித்ததை நீங்கள் அறிவீர்கள். இன்னும் கொரிந்து சபையின் சில இடங்களில், சில வேளைகளில் பவுல் புறக்கணிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இவ்வாறு பல எடுத்துக்காட்டுகளை நாம் வேதத்திலிருந்து பார்க்க முடியும்.

பழைய ஏற்பாட்டில், நீங்கள் பார்க்கும்போது, தீர்க்கதரிசிகள் புறக்கணிக்கப்படுகிறதைப் பார்க்கிறோம். இராஜாக்கள் தேவன் கொடுத்த அந்த எச்சரிப்பை, தீர்க்கதரிசிகள் மூலமாக வருகிற எச்சரிப்பை புறம்பே தள்ளுகிறதையும், அந்த தீர்க்கதரிசிகளை சிறையில் போடுகிறதையெல்லாம் பார்க்கிறோம். ஆக, தேவனுடைய வார்த்தை அங்கீகரிக்கப்படவில்லை என்ற ஒரு காரணத்திற்காகவும் நாம் தவறான முடிவெடுத்துவிடக் கூடாது. இந்த இடத்தில் நீங்கள் மிகக் கவனமாகக் கவனித்து, அந்த ஊழியருடைய அங்கீகாரத்தை கண்டுபிக்கவேண்டியது அவசியம். தேவன் இவருடைய ஊழியத்தை அங்கீகரித்துதான் கடந்த ஆண்டுகளில் அழைத்திருக்கிறார். அந்த வழியில் நடத்தியிருக்கிறார் என்பதை ஆராய்கின்ற, பரிசோதிக்கின்ற ஊழியர்களும் ஆவிக்குரியவர்களாய் இருந்தால் மாத்திரமே, அது சரியாய் நடக்கிற விஷயமாய் இருக்கும்.

**அடுத்து, ஐந்தாவது காரியம், அவர் இந்த சோதிக்கபடுதலில் நிரூபித்துக் காண்பித்தாரா? என்று அதைப் பரிசோதித்து பார்க்கிற ஒரு காரியம், அதாவது பரிசோதிக்கப்டுகிறார்.** இந்த பரிசோதனைக்கு பல காரியங்கள் உட்படுத்தப்பட வேண்டுமென்று நாம் 4 காரியங்களை இதுவரை பார்த்தோம். அதில் அநேக

உட்பிரிவுகளை வைத்தும் விளக்கங்களை கற்றுக்கொண்டோம். இவைகளெல்லாம், அவரால் நிரூபித்துக்காட்ட முடியுமா? என்றதொரு பரிசோதனையையும் நாம் நிகழ்த்தலாம். ஏனெனில், இது தேவனுடைய காரியம். இது முன்பதாக அவர் நிரூபித்துக்காட்ட வேண்டுமென்று 1 தீமோ.3:10-ம் வசனம் சொல்லுகிறது. அவர் பரிசோதிக்கப்படும்போது, அவர் முன்னதாகப் பரிசோதிக்கப்பட வேண்டும். அவர் நிருநிலைப்படுத்தப்பட்ட பின்னர், அவர் நிரூபித்துக் காண்பிக்கிறவராய் இருக்க கூடாது. அந்த பணிக்கு ஏற்படுத்தப்படும் முன்னரே, அவர் நிரூபித்துக் காண்பிக்க வேண்டும். தேவன் சொன்ன அங்கீகாரம் என்னிடம் இருக்கிறது. தேவன் ஊழியத்திற்கு என்னை அழைத்தார். அதில் எனக்கு முழு ஈடுபாடும் தீவிரமான வாஞ்சையும் அதிலிருக்கிறது. எந்தப் பாடுகள் மத்தியிலும் அவரின் ஊழியத்தை நிறைவேற்றவே விரும்புகிறேன். மட்டுமல்ல என்னுடைய வாழ்வில் இந்த நற்குணங்களெல்லாம், சாட்சியுள்ள வாழ்வெல்லாம் காணப்படுகிறது என்பதை அவர் தன்னுடைய நடத்தையில் நிரூபித்துக் காண்பிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அது தானாகவே அவரோடு பழகும்போது, நமக்கு தெரியவரும் பிரியமானவர்களே. அந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் அவருடைய நடவடிக்கையை கவனித்து பார்க்க வேண்டும். அவர் எந்தளவுக்கு பொறுமையாக இருக்கிறார்? அவரிடம் நீங்கள் பேச்சுக்கொடுக்கும்போது, எந்தளவுக்கு பதில் தருகிறார்? எல்லாவற்றையும் வைத்து அவர் பரிசோதிக்கப்பட வேண்டியது அவசியம்.

ஏனெனில், நாம் அவசரப்பட்டு, திருநிலைப்படுத்துதலைச் செய்துவிடக்கூடாது. ஊழியத்திற்கு ஏற்படுத்திவிடக் கூடாது. 1 தீமோ. 5:22-ம் வசனம் அதைத்தான் சொல்லுகிறது. அந்த வசனத்தை வாசிக்கலாம், 'ஒருவன் மேலும் சீக்கிரமாய் கைகளை வையாதே, மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே, உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்'. இங்கே கைகளை வைத்தல் என்பது 'திருநிலைப்படுத்தப்படுதலைத்தான்' குறிக்கிறது. ஆக, பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறார். நீ சீக்கிரமாய் கைகளை வைத்து, அவர்களை அபிஷேகித்து ஊழியத்திற்கு ஏற்படுத்தாதே, நீ நன்றாக சோதித்து அறிந்து, நீ இதைச்செய் என்று ஆலோசனை கூறுகிறார். அதுபோல, சீக்கிரமாக அவசரப்பட்டு இந்த திருநிலைப்படுத்தப்படுதல் என்ற காரியத்தைச் செய்து விடுவாயானால், அவர்கள் செய்யும் பாவங்களுக்கு நீ உடன்பட்டதொரு தவறு நடந்துவிடும். ஆகவே மிகவும் கவனமாய் ஏற்படுத்து, Ordination பண்ணு என்று பவுல் ஆலோசனையாகச் சொல்லுகிறார்.

அடுத்து, அவர்களிலுள்ள கனிகளைச் சோதித்துப் பார்க்க வேண்டும். பரிசோதனை செய்யவேண்டியதிலே மற்றொரு காரியம், அவர்களின் கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் என்று இயேசு சொன்ன வார்த்தையின்படி அவர்களின் கனிகளை நீங்கள் சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியம். யோவான் 15:5-ல் நாம் இவ்வாறு

வாசிக்கிறோம், ‘நானே மெய்யான திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது’ என்று தெளிவுபட இயேசு கூறுகிறதை கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்துவின் உதவியோடு, இவர் ஆவிக்குரிய ஊழியத்தைச் செய்கிறார். அதில் மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவராய் இருக்கிறாரா? என்று சொல்லி, நாம் பரிசோதித்து பார்க்க வேண்டியது அவசியம். அவர் இதற்கு முன்னர் செய்த ஊழியங்களை நாம் கேட்டு அறியலாம். அவர் அதற்கு முன்னர் செய்த ஊழிய இயக்கங்களில் கேட்டு அறியலாம். இவ்வாறு பல விதங்களில் அதை உறுதிசெய்து கொள்ளலாம். மட்டுமல்ல, அவருடைய ஊழியத்திலுள்ள வளர்ச்சியையும் நாம் கேட்டு, இதுவரையுள்ள காரியங்களை, சோதித்துப் பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

தேவனுடைய கிருபையினால், அவர் அழைக்கப்பட்ட அழைப்பிலே, தேவன் ஏற்படுத்தும்போது, யோவான் 15-ம் அதிகாரம் தேவன் ஊழியத்திற்கு ஏற்படுத்துகிறதை, நிலைப்படுத்துகிறதை, திருநிலைப்படுத்தலைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறது. அவ்விதமாய் ஏற்படுத்தப்பட்டவர்கள், மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவர்களாக இருப்பார்கள். அவருடைய அந்த ஊழிய அழைப்பில், அவர்கள் பெற்ற வல்லமை, வரங்களின் அடிப்படையில், இந்த கனிகள் காணப்படும். பிரியமானவர்களே, போதகர்களாக இருந்தாலும், சில விசேஷித்த வரங்களை அவர்களுக்கும் கொடுத்து, பயன்படுத்துவார். ஆனாலும், குறிப்பாக நாமும் உணர முடியும். எல்லாவிதமான வரங்களும் அவர் மூலமாய் செயல்பட வாய்ப்பிருக்கிறது. காரணம் சபை முழுமைக்கும் பல தேவையோடு வருகிற ஜனங்கள் உண்டு. ஆவிக்கேற்றபடி வல்லமை, வரங்களை கொடுக்கிறார். ஏனெனில் ஒரே ஆவியானவர்தான் எல்லாவற்றையும் செய்கிறார். ஆக, அவர் கூடவே இருக்கும்போது, சபைக்கு தேவையான எல்லாவிதமான அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து. அநேக அத்துமாக்களைக் கொண்டுவருகிற, கனிகளைக் கொண்டுவருகிற, காரியத்தினாலே அவர் அதை உறுதிப்படுத்த தேவன் வல்லவராக இருக்கிறார். நீங்கள் 2 தீமோ.4:4-ல் பார்ப்பீர்களானால், ‘நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று’ என்கிறார். இந்த வார்த்தையை நாம் ஆங்கிலத்தில், KJV மொழிபெயர்ப்பில் பார்க்கும்போது, ‘But watch thou in all things endure afflictions, do the work of an evangelist, make full proof of thy ministry’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, உன் ஊழியத்தை நிறைவேற்று என்பதற்கு, ஆங்கிலத்தில் ‘அதை நீ முழுவதுமாய் நிரூபணம் செய்’ என்ற அர்த்தத்தில் வருகிறதைக் கவனியுங்கள். ‘make full proof of thy ministry’. ஆம் பிரியமானவர்களே, நம்முடைய ஊழியத்தின் காரியங்களை நாம் முழுவதுமாக நிரூபித்துக் காண்பிப்பதற்கு கர்த்தர் எதிர்பார்க்கிறார். பவுல் மூலமாக

அதைத்தான் தீமோத்தேயுவுக்கு ஆலோசனையாகக் கொடுக்கிறார். ஆக, தேவன் நம்மோடிருந்து, அழைத்த அழைப்பில் பயன்படுத்தும்போது, அந்த ஊழியத்தில் கனிகள் இருக்கும். அநேக வெற்றிகள் அதிலிருக்கிறதை நாம் பார்க்க முடியும். அதைக் காண்கிற விதத்தில், அந்த வெற்றியிருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். தேவன் உங்களோடிருந்து செயல்படுகிறதை நிச்சயமாக நாம் கண்ணார காண்கின்ற அளவிலே அதனுடைய வெற்றியிருக்கிறதைப் பார்க்க முடியும்.

தேவ கிருபையோடு என்னுடைய வாழ்வில் நடந்தவைகளைச் சாட்சியாகச் சொல்ல முடியும். நான் வாலிபனாக இருக்கும்போது, கர்த்தர் என்னை அழைத்தார். கடன் தொல்லை, குடும்ப பிரச்சனை காரணமாக கர்த்தரிடத்தில் ஜெபித்தோம். நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். அப்போது கர்த்தர் என்னோடு பேசினார். அவரே சொன்னார், நான் உன்னை மேய்ப்பனும், போதகனுமாய் ஏற்படுத்துகிறேன் என்று சொன்னார். நான் அந்தகால கட்டத்திலிருந்த நிலையில் எனக்குத் தெரியும், என் பிரசங்கத்தை நானே கேட்க மாட்டேன், கேட்க முடியாது, என்றதொரு பிரசங்கத்தை நான் செய்தேன். அப்போது கர்த்தர், நான் உன்னை மேய்ப்பனும், போதகனுமாய், ஏற்படுத்துவேன் என்று சொன்னபோது, சரி ஆண்டவரே, நீர் கேட்கிற ஆட்களைத் தந்தால், நான் ஏன் வேண்டாம் என்று சொல்லப்போகிறேன் என்று ஜெபத்திலே ஆண்டவரிடம் சொன்னேன். ஆக, என்னுடைய முழுமையான நம்பிக்கை, நான் அந்தளவுக்கெல்லாம் பயனுள்ளவனாய் மாறுவேன் என்று எனக்கு இல்லைதான். சரி, நீர் தந்தால் நான் பேசுவேன் என்று சொன்னேன். இன்று அவர் சொன்னதை நிறைவேற்றுகிறதைப் பார்க்கிறேன். அநேக தேசங்களிலிருந்து நம்முடைய வேதாகமக் கல்லூரியில் பயிலுகின்ற அளவுக்கு இந்த பிரசங்கத்தின் வழியாய், பாடங்கள் வழியாய், சீஷர்களை உருவாக்குகிற பாக்கியத்தை அவரே கொடுத்தார். சொன்னதைக் கனியின் வழியாக, அதை நேரடியாகப் பார்க்கிற விதமாக, நீங்களே அதற்கு சாட்சிகள், நீங்கள் இதில் கலந்துகொண்டு இருக்கிறீர்கள். பல தேசத்திலுள்ளவர்கள் இந்த பாடத்தை படித்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆக, அவர் சொன்னதை, இந்த கனிகள் வழியாக நிரூபிக்கிறார், பாருங்கள். அதைத்தான் உங்களுக்கு இப்போது சொல்லிக்கொண்டு இருக்கிறேன்.

ஆம் பிரியமானவர்களே, உங்கள் ஊழியத்திலே தேவன் இவ்விதமான அங்கீகாரத்தை காண்கிற வண்ணமாக, கனிகளைக் கொடுத்து நிரூபிப்பார். ஒரு ஊழியரை பரிசோதிக்கும்போது, இவ்விதமான வெற்றியிருக்கிறதா? நிரூபணம் இருக்கிறதா? என்றெல்லாம் நீங்கள் பார்க்க வேண்டியது அவசியம். இந்த இடத்தில் சிலர் ஒருவேளை பார்த்தீர்களானால், வாஞ்சை மற்றும் விருப்பம் இருக்கும். ஆனால், அவர்கள் ஒரு போதகராவதற்கு தகுதியில்லாதவர்களாக இருக்கலாம். போதகராய் இருந்துதான் உபதேசிக்க, பிரசங்கிக்க வேண்டும் என்றெல்லாம் இல்லை, போதகர், போதக சமர்த்தனாய்

கட்டாயம் இருக்க வேண்டும். ஆனால், பிரசங்கிக்கிறவர்கள், போதகராய் இல்லாமல்கூட பிரசங்கிக்கலாம். தேவனுடைய வார்த்தையை அறிவிக்கிறதற்கு, போதிக்கிறதற்கு சபையில் போதகராய் இருக்கிற ஒருவர்தான் உபதேசிக்க, பிரசங்கிக்க வேண்டுமென்ற ஒரு கட்டாயம் இல்லை. இவற்றையெல்லாம் வேதத்தின் அடிப்படையில்தான் கற்றுக்கொடுக்கிறோம். அவர்கள் தனிப்பட்ட முறையில் பிரசங்கிக்கலாம், ஊழியங்களைச் செய்யலாம். அதெல்லாம் ஒன்றும் பிரச்சனை இல்லை.

போதகராக இருக்கிறவர், ஊழியத்திற்கு ஏற்படுத்தப்பட்டவர், அவர் அநேக ஊழியர்களை உருவாக்குகிறவராக இருப்பார். அதிலேயே நாம் கண்டுபிடிக்க முடியும். அவருக்கு அதுதான் பாரமாக இருக்கும். அநேக ஊழியர்கள் உருவாக வேண்டும். அவர்களைக் கொண்டு அநேகரைக் கிறிஸ்துவுக்குள் வளர்க்க வேண்டுமென்ற ஒரு பாரம் அவருக்கு இருக்கும். அந்தளவுக்கு அவர் செய்யும்போது, அநேக அத்துமாக்களை, கனிகளை கர்த்தரிடத்தில் கொண்டுவர முடியும் என்பதை அறிந்து செயல்படுகிறார். மட்டுமல்ல, நிரூபணம் என்பதையும் புரிந்துகொள்ளுங்கள் பிரியமானவர்களே. இதையெல்லாம் நீங்கள் கவனத்தில் வைத்து, பரிசோதித்து பார்க்க வேண்டியது அவசியம். பரிசோதனை செய்கிற இந்த காரியம் தவறான ஒரு விஷயமல்ல. ஊழியர்களையே சோதித்துப் பார்க்கலாமா? என்று ஒருவேளை கேட்கக் கூடும். பரிசோதிக்கப்பட வேண்டுமென்று பவுல் மூலமாக வேதம் சொல்வதை நாம் பார்க்கிறோம். தேவன் சொன்னதுபோல, நாம் அதற்காக ஒரு சோதனைபோல வைத்து, இதைச் செய், அதைச்செய் என்று கருதி செய்யாவிட்டாலும், ஒரு சபையார், தனக்கான போதகர் ஒருவரை ஏற்படுத்தும்போது, இவற்றையெல்லாம் கவனத்தில் வைத்து, அந்த சபைக் கமிட்டி, மற்றும் தலைவர் நிர்ணயம் செய்து, ஏற்படுத்துவது நல்லது. இல்லாவிட்டால் சபையில் தோல்வி ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அந்த சபையில் வளர்ச்சியில்லாமல், நாளுக்கு நாள் ஒருவேளை வளர்ச்சியின்மையை சந்தித்துக்கொண்டிருக்கும். அதுபோல உங்களுக்கும், தேவ இராஜ்ஜியத்தின் விரிவுக்கு அது இடையூறாய் மாறிவிடும். ஆகவே அது ஆவிக்குரிய காரியமாக இருக்கிறதினால், ஆவிக்குரிய ரீதியில் நீங்கள் அதை சோதித்து பார்க்க வேண்டியது அவசியம். மனித அளவுகோலை வைத்து அளக்காமல், தேவனுடைய அளவுகோலை வைத்து, நீங்கள் ஊழியரை நிர்ணயம் செய்ய வேண்டும். அவர்களை உறுதிப்படுத்தி ஏற்படுத்த வேண்டும். கர்த்தர் இவ்விதமாக உங்களுக்கு இன்னும் அநேக காரியங்களை கற்றுத்தருவார். ஆகவே, நீங்கள் பாடங்களை விசுவாசத்தோடு மிகவும் கவனமாக கவனியுங்கள். எல்லாமே வேத வசனத்தின் அடிப்படையிலே அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் சிந்திக்கும்போது, தியானிக்கும்போதுதான் அதிகமான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியம். ஒவ்வொன்றையும் விளக்கமாகச் சொல்ல ஆசைதான், ஆனாலும் பாடங்கள் அதிகமாகப் போய்க்கொண்டே இருக்கும். நீங்கள் புரிந்துகொள்வதற்காக, வசனங்களின் அடிப்படையில் சில காரியங்கள்

கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஜெபத்தோடு இதைக் கேளுங்கள். அதை அப்படியே நடைமுறைப்படுத்துங்கள்.

தேவனுடைய ஊழியத்திற்கு ஊழியர்களை பரிசோதித்து ஏற்படுத்துங்கள். அதுதான் சரியான விஷயம். இதைத் தேவையற்ற விஷயம் என்று நினைக்காதீர்கள். ஏனெனில், வேதம் ஒரு ஊழியரை பரிசோதித்து, பின் ஒரு சபையில் ஊழியராக நியமிக்கப்பட வேண்டுமென்று மிகவும் தெளிவாகச் சொல்லுகிறது. அதை அப்படியே பின்பற்றுங்கள். வேதம் எதைச் சொல்லுகிறதோ, அதுதான் நமக்கு சரி. அதன்வழியாக போவதே சரியான விஷயம். ஆம், பிரியமானவர்களே, ஒருவேளை தனிப்பட்ட முறையிலே சபைகள் வைத்திருக்க கூடும். அப்படியானாலும் நீங்களே உங்களை சோதித்துப் பாருங்கள். மற்ற யாரும் வந்து சோதித்துப் பார்க்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. நான் இந்த ஊழியத்திற்கு தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறேனா? எனக்கு கனிகள், இப்படிப்பட்ட உறுதிப்படுத்துதல், இப்படிப்பட்ட ஒரு தீராத வாஞ்சை தேவனுடைய பணியில், போதக ஊழியத்தில், ஆத்தும பாரத்தில் இருக்கிறதா? மக்களை சரியான சத்தியத்தில் நடத்த வேண்டுமென்ற பாரம் எனக்கு இருக்கிறதா? என்று நீங்களே உங்களை சோதித்துப் பாருங்கள். கர்த்தர் கொடுத்த அழைப்புகளை சரிசெய்து பார்த்துக்கொள்ளுங்கள். அந்த அழைப்பின் அடிப்படையில்தான், நான் இந்த ஊழியத்தைச் செய்கிறேனா? இல்லாவிட்டால், என்னுடைய சொந்த நோக்கத்திற்காக, எல்லோரும் சபை வைத்திருக்கிறார்கள், அந்த சபை வைத்திருக்கிற போதகர் என்ன அழகாக முன்னேறிவிட்டார். நல்ல பெரிய கார், வீடு, என்று என்னவொரு முன்னேற்றம்? அதை மாதிரி நானும் செய்தால், அநேக ஆத்துமாக்கள் வருவார்கள், காணிக்கைகளை அள்ளிக்கொடுப்பார்கள். நானும் முன்னேறிவிடுவேன் என்ற இழிவான ஆதாயத்தை நான் கருத்தில் கொண்டு, செல்கிறேனா? என்றெல்லாம் நீங்கள் கவனமாய் உங்களை வெளிப்படையாய் சோதித்துப் பாருங்கள். யாரும் வந்து உங்களை சோதிக்கப்போகிறதில்லை. ஆனால் இது தேவ பணி. நீங்கள் சோதித்து, சரியானபடி அந்த அழைப்பில் போகும்போதுதான், அது உங்களுடைய ஊழியத்திற்கும் ஆசீர்வாதம். தேவ இராஜ்ஜிய விரிவாக்கத்திலும் ஆசீர்வாதமாய் இருக்கும் என்பதிலே சந்தேகமில்லை.

ஆகவே, இந்த காரியங்களுக்கெல்லாம் அப்படியே கீழ்ப்படிகிற மக்களாகிய நீங்கள், கீழ்ப்படிந்து செயல்பட்டு பாருங்கள். உங்களைக் கொண்டு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்கிறதைப் பார்க்க முடியம். ஏனெனில், எந்த அழைப்பில் நீங்கள் அழைக்கப்பட்டு இருக்கிறீர்களோ, அந்த வழியாகவே போகும்போது, மாபெரும் வெற்றியை நீங்கள் நிச்சயமாய் பார்க்க முடியும். கர்த்தர் அதைச் செய்வார். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1) திருநிலைப்படுத்தப்படுதலுக்கு முன்பு ஊழியக்காரர் சோதிக்கப்படுதலில், அவருடைய திறமை சோதிக்கப்பட வேண்டியதைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
2) விசேஷித்த பணிகளைச் செய்வதற்கு, தேவனுடைய அழைப்பில் காணப்படுகிற மூன்று விதமான நிலைகள் யாவை?
3) ஆவிக்குரிய வட்டாரத்தில் காணப்படுகிற இரண்டு கண்ணோட்டங்கள் குறித்து கூறுக?
4) போதகர்கள் செய்யும்படி தேவன் எதிர்பார்க்கின்ற காரியங்கள் என்னென்ன என்பதனை வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
5) 1 தீமோத்தேயு 5:17-ல் வருகிற பிரயாசப்படுகிறவர்கள் என்பதற்கான அர்த்தத்தைக் கூறுக?
6) திருநிலைப்படுத்தப்படுதலுக்கு முன்பு ஊழியக்காரர் சோதிக்கப்படுதலில், அவருடைய அழைப்பில், தேவனுடைய அங்கீகாரம் இருக்கிறதை பரிசோதிக்க வேண்டும் என்பதனை குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
7) திருநிலைப்படுத்தப்படுதலில், ஊழியக்காரர் தன்னுடைய சோதனைகளை ஜெயமானதாக நிரூபித்துக் காண்பிக்க வேண்டியதைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
8) திருநிலைப்படுத்தப்படுதலில், ஊழியக்காரரின் கனிகள் சோதிக்கப்பட வேண்டியதைக் குறித்து வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - *10*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில் நாம் தொடர்ந்து திருநிலைப்படுத்துதல் என்பதைக் குறித்து சிந்திக்கப் போகிறோம். கடந்த பாடத்தில், ஒரு ஊழியர் எவ்விதமாய் பரிசோதிக்கப்பட வேண்டும் என்பதை கற்றோம். அதைத்தொடர்ந்து, அவர் திருநிலைப்படுத்தப்பட்டு அதிகாரம் அளிக்கப்படுதல் என்பது எவ்வாறு நடைபெறுகிறது என்பதைக் குறித்து நாம் தொடர்ந்து கற்றுக்கொள்ளப்போகிறோம்.

சபை நிர்வாகம் செய்யக்கூடிய காரியம் நமக்கு ஓரளவு தெரிந்தால் போதுமானது என்பதினாலே, அதை சுருக்கமாக சொல்லியிருக்கிறேன். திருநிலைப்படுத்துவது (Ordination) என்பது மிக முக்கியமானதொரு சம்பவமாகும். அதே வேளையில், ஒவ்வொரு சபையாரும், ஒவ்வொரு விதமாக செய்கிறதாக அது இருக்கிறது. அதாவது, ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலே, அல்லது சி.எஸ்.ஐ. சபையிலே, லூத்தரன் சபையிலே, பெந்தேகொஸ்தே சபையிலே, வெவ்வேறு விதங்களில் இந்த திருநிலைப்படுத்தலைச் செய்து, ஊழியர்களை சபையில் ஊழியம் செய்ய வைக்கிறார்கள். ஆனால், பொதுவாக ஒரு காரியம், கைகளை வைத்து, ஜெபித்து அவர்களை ஏற்படுத்துவது என்பதே நடைமுறையில் எல்லா இடங்களிலும் இருக்கிற காரியமாக இருக்கிறதை நாம் பார்க்கிறோம். கைகளை வைக்குதல் என்பதைக் குறித்துதான் நாம் கற்றுக்கொள்ளப்போகிறோம். வசனத்தின் அடிப்படையிலே இந்த திருநிலைப்படுத்துதல் மூலமாக, சபையானது அந்த ஊழியத்தை ஏற்படுத்துகிறது, நியமிக்கிறது. மட்டுமல்லாமல் அந்த ஊழிய அழைப்பிலே உறுதிப்படுத்துகிறது என்றும் சொல்லலாம். ஒரு ஊழியரின் 30-வது வயதிற்கு பின்பதாக இவ்விதமாக அவர் ஏற்படுத்தப்படுகிறார். அவருக்கிருக்கிற அழைப்பை உறுதிசெய்த பின்பதாக தெளிவான, உறுதியான முடிவோடு, அதற்கு அவர் அர்ப்பணிக்கிறார். அர்ப்பணிக்கும்போது, அந்த ஊழியருடைய தனிப்பட்ட வரங்கள், அவருடைய ஆரோக்கிய நிலை போன்றவற்றை கருத்தில் கொண்டு, மட்டுமல்ல அவருடைய குணாதிசயம் போன்றவற்றையெல்லாம் சோதித்துப் பார்த்து அவருக்கு பிரசங்கிக்க கூடிய, கற்பிக்கக்கூடிய ஆற்றல் எல்லாம் இருக்கிறதா? படிப்பு போதுமானதாக இருக்கிறதா? இதையெல்லாம் பார்த்துவிட்டு, கைகளை வைத்து ஜெபித்துவிட்டு, ஊழியத்திற்கு ஏற்படுத்துகிறதுதான், திருநிலைப்படுத்துதல் ஆகும்.

கைகளை வைக்குதல் என்பது பூர்வகாலம் துவங்கி நடைபெற்று வருகிற ஒரு அடையாளமான செய்கையாய் இருக்கிறது. அவ்வாறு கைகளை வைத்து,

ஜெபிக்கும்போது, பகிரங்கமாகவே எல்லோர் மத்தியிலும் ஒருவரை இந்த திருப்பணிக்கு நியமித்து, கட்டளை கொடுத்து, அதிகாரம் கொடுத்து ஏற்படுத்துகிற காரியமாய் அது கருதப்படுகிறது. அது ஆசீர்வதிக்கிற ஒரு செயலாக இருந்தாலும், ஊழியத்திற்கு ஏற்படுத்தும்போதும், இவ்விதமாக கைகளை வைத்து, ஜெபித்தே ஏற்படுத்தப்படுகிறதை நாம் பார்க்கிறோம். மூத்த தலைவர்கள், அவரைவிட தகுதியில் அடுத்த நிலையில் இருக்கிறவர்கள், ஜெபித்து ஏற்படுத்துகிறது பொதுவான வழக்கமாய் இருக்கிறதை நாம் பார்க்கிறோம். இந்த கைகளை வைக்குதல் பொதுவாக, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காக ஜெபிக்கும்போது, ஞானஸ்நானம் கொடுக்கும்போதும், அதைப்போல சுகமாக்குதலுக்காய் ஜெபிக்கும்போதும், ஆசீர்வாதத்திற்கெல்லாம் ஜெபிக்கும்போதும் பயன்படுத்துகிறதைப் பார்க்கிறோம். திருநிலைப்படுத்தும்போதும், இதேவிதமாக கைகளை வைத்து ஏற்படுத்தல் என்பது, வேதாகமம் கூறுகிற முறைதான். ஊழியர்களை, மூப்பர்களை, சபை உதவியாளர்களை, சபையின் பணிகள், ஊழியத்தின் பணிகள், அதைப்போல அருட்பணியாளர்கள், மிஷனெரி பணி என்று சொல்லுகிறோமே, அவ்விதமாக அருட்பணியாளர்களை ஏற்படுத்தும்போதும், கைகளை வைத்து ஜெபித்து அனுப்புகிறது வழக்கமான ஒரு காரியமாகவே இருக்கிறது. அவ்வாறு செய்யும்போது, ஒவ்வொரு சபைகளிலே, சபை பிரிவுகளிலே வித்தியாசமான பண்டிகைகள்போல, அநுசரிக்கப்படுகிறது உண்டு, சாக்கிரமந்துகள் உண்டு, ஆடம்பரமான விழாக்கள் உண்டு, விருந்துகள் உண்டு, எல்லாமே இருக்கிறது.

பிரியமானவர்களே, இவ்விதமாக அந்த ஊழியர்களை ஜெபித்து, தீர்மானித்து ஏற்படுத்தப்படுகிறார், அதிகாரப்படுத்தப்படுகிறார் என்று சொல்லலாம். பழைய ஏற்பாட்டிலும் இவ்விதமான கைகளை வைக்குதல் என்பது இருந்திருக்கிறது. பல நூற்றாண்டுகளாக அது தொடர்ந்து வந்துகொண்டே இருந்திருக்கிறது. அவர் ஏற்படுத்திய பிறகு, அவருக்கு பின் வந்த மூப்பர்கள் கைகளை வைத்து, பதவிக்கு, அல்லது பொறுப்புக்கு ஏற்படுத்தப்படுகிறதைப் பார்க்கிறோம். இவ்விதமாக தலைவர்கள், அடுத்த கட்ட தலைவர்களை கைகளை வைத்து ஏற்படுத்துகிறது வழக்கமாய் இருக்கிறது. உதாரணமாக, மோசே யோசுவாவை ஏற்படுத்தினதைக் குறித்து எண்.27:18-23 வசனங்களில் பார்க்கிறோம். உபாகமம் 34-ம் அதிகாரத்திலும் பார்க்கிறோம். குறிப்பாக நாம் உபா.34:9-ம் வசனத்தை வாசிக்கும்போது, ஒரு காரியத்தை தெளிவுபட அறிந்துகொள்ளலாம். அதிகாரம் கொடுத்தல் நடைபெறுகிறதைப் பார்க்கிறோம். இதைத்தொடர்ந்து, அடுத்தகட்ட தலைவராக யோசுவா ஏற்படுத்தப்படுகிறதைப் பார்க்கிறோம். மோசே கையை வைத்தபிறகு, ஆவியானவர் ஞானத்தின் ஆவியினால் நிறைக்கிறதை பார்க்கிறோம். ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டது, தேவன் அங்கீகரிக்கிறதைக் குறிக்கிறது. மட்டுமல்ல, அவனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதற்கு அடையாளமாக, அந்த வசனத்திலே பார்க்கிறோம்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு கீழ்ப்படிந்து நடந்ததை அங்கு பார்க்கிறோம். அதிகாரம் இப்போது கொடுக்கப்பட்டபடியினால் கீழ்ப்படிதல் நடக்கிறது. நாம் காவல்துறை அதிகாரிகளை பார்த்தவுடன் கீழ்ப்படிகிறோம். காரணம் என்ன? அவருக்கு அதிகாரம் இருக்கிறது, சட்டம் இருக்கிறது, கட்டளை கொடுக்கின்ற ஒரு உரிமையும் இருக்கிறது. ஆக இதைப்போலத்தான், ஊழியர்களை ஏற்படுத்தும்போது, கைகளை வைக்கும்போது, இவ்விதமாக நம்மை அங்கீகரிக்கிறார். ஊழியரும் ஜெபித்து, அவரை அடுத்தகட்ட தலைவராக நியமிக்கிறார். அதிகாரம் அவருக்கு வழங்கப்படுவதினாலே, மற்றவர்கள் அந்த அதிகாரத்திற்கு கீழ்படிகிற இடத்திற்கு வருகிறார்கள். இதேவிதமாகத்தான் புதிய ஏற்பாட்டிலும் நிகழ்வுகள் நடந்ததை நாம் பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டிலே இவ்விதமாக மோசே, யோசுவாவை ஏற்படுத்துகிறார். அதற்கு பின்னாக ஒவ்வொருவரும் அதற்கடுத்த தலைவர்களை ஏற்படுத்தப்படுகிறதை, நாம் பழைய ஏற்பாட்டிலே பார்க்க முடிகிறது. ஆங்காங்கே, அவ்வப்பொழுது ஜெபித்து ஏற்படுத்துகிறதை நாம் பார்க்கிறோம். இந்த நிகழ்வுகள் இரண்டாம் தேவனுடைய ஆலயத்தை கட்டுகிற வரையில், எபிரெய மொழியில், இந்த சுமிதா என்று சொல்லப்படுகிற இந்த கைகளை வைக்குதல் பின்பற்றப்பட்டதாக, வரலாற்றிலே நாம் அறியமுடிகிறது. நாம் புதிய ஏற்பாட்டிற்கு வருவோமானால், அங்கேயும் அவ்விதமாக அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து, அதிகாரத்தை கொடுத்து ஊழியர்களை ஏற்படுத்துகிறதை பார்க்கலாம். இதைக்குறித்து நீங்கள் அப்.6:6, அப்,13:3, 1 தீமோ.4:16 போன்ற வசனங்களிலும் பார்க்க முடியும். அப்.6:6-ம் வசனத்தை பார்க்கிறபோது, அங்கே ஊழியர்களை ஏற்படுத்துகிறதைப் பார்க்கிறோம். குறிப்பாக இந்த பந்தி விசாரணைக்காக ஊழியர்களை தேவனுடைய ஊழியத்தின் பணிகளிலே ஏற்படுத்தும்போது, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து ஜெபித்தார்கள் என்று பார்க்கிறோம். அதில் யாரெல்லாம் என்று பார்க்கும்போது, அப். 6:5-வது வசனத்தில் ஸ்தேவான், பிலிப்பு, பிரோகோ, நிக்கானோ, தீமோன், பர்மோனா. யூத மார்க்கத்த மைந்தனாகிய அந்தோனியா, அதைப்போல நிக்கோலா போன்றவர்களை அங்கே அப்போஸ்தலர்கள் முன்னிலையிலே நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அந்த பந்தி விசாரணை பணிக்கென ஊழியர்களாய் நியமிக்கிறதைப் பார்க்கலாம். அந்த பந்தி விசாரணை செய்கிறதிலே, அப்போஸ்தலர்கள் ஈடுபடவில்லை. அதில் என்ன சொன்னார்கள் என்றால், நாங்களோ ஜெபம் பண்ணுகிறதிலேயும், வேத வசனத்தை போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திரிப்போம். அதனால் நீங்கள், பரிசுத்த ஆவியின் ஞானம் நிறைந்த 7 பேரை உங்களுக்குள்ளாக தெரிந்துகொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அவர்களை இந்த ஊழியத்திற்கென்று ஏற்படுத்துவோம் என்று சொல்லி, ஊழியர்களை ஜெபித்து, கைகளை வைத்து, ஏற்படுத்துகிறதை பார்க்கிறோம்.

அதைப்போல அப்.13:1 - 3 வரையுள்ள வசனங்களை நாம் வாசிக்கும்போது, ‘அந்தியோகியா பட்டணத்தில் உள்ள சபையிலே பர்னபாவும், நீகர் எனப்பட்ட சகோதரரும்,

சிமியோனும், சீரோன் ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே கூட வளர்க்கப்பட்ட மனாயினும், சவுலும் தீர்க்கதரியாகவும், போதகர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்து கொண்டிருந்தபோது, பர்னபாவையும், சவுலையும், நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களை பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்' என்று வாசிக்கிறோம். பார்த்தீர்களா, அந்த ஊழியத்திற்கு பிரதிஷ்டை பண்ணுகிற விதமாக புறஜாதிகள் மத்தியிலே இந்த சவுலும், பர்னபாவும் ஊழிம் செய்ய செல்வதற்கு ஜெபம் பண்ணினார்கள், கைகளை வைத்து, அனுப்பினார்கள் என்று பார்க்கிறோம். ஆக, ஒரு ஊழியத்திற்கு அப்போஸ்தலனாக, மிஷனெரியாக அனுப்புவதற்கும், இவ்விதமாக ஜெபித்து, கைகளை வைத்து அதிகாரம் கொடுத்து அவர்களை அனுப்புகிறதைப் பார்க்கிறோம். திருநிலைப்படுத்துதலில் அதிகாரம் கொடுக்கிற ஒரு நிகழ்வுகளை, கைகளை வைக்குதல் மட்டுமல்ல, அவர்களை அபிஷேகித்து, அந்த பணிக்கு ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது என்பதை இந்த நிகழ்வுகளிலிருந்து, நீங்கள் அறிந்துகொள்ள முடியும். அதுபோல, 2 தீமோ.4:14-ஐயும் நான் இதிலே விளக்கப்படுத்த விரும்புகிறேன். அந்த வசனத்தை வாசிப்போம், 'மூப்பராகிய சங்கத்தார் உன் மீது கைகளை வைத்தபோது, தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே' என்று அங்கே பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதை பார்க்கிறோம். ஆக, இந்த கைகளை வைக்கிற இந்த காரியமானது, ஊழியத்திற்கு ஏற்படுத்தி, நியமித்து, திருநிலைப்படுத்தின காரியத்தையே குறிக்கிறதென்று நாம் அறிய முடிகிறது.

அடுத்து, அப்.14:20-ம் வசனம் சொல்லுகிறதைப் பாருங்கள், 'அல்லாமலும் அந்தந்த சபைகளிலே மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து, ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்து பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்' என்று நாம் படிக்கிறோம். ஆக, இவ்விதமாக ஒவ்வொரு காரியமும், அவர்களை ஊழியத்திற்கு ஏற்படுத்துவதற்கு முன்பாக, கைகளை வைத்து, அபிஷேகம் செய்து ஏற்படுத்துகிறதை வெளிப்படுத்துகிறது. அந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினதற்கு அது அடையாளமாய் காணப்படுகிறது. அதிகாரம் அளிப்பதை காண்பிக்கிறது, பரிசுத்த ஆவியானவர் அந்த வேலையிலே அவர்களை உறுதிப்படுத்துகிறதையும் காண்பிக்கிறது. இவ்விதமாக கைகளை வைத்தல் என்பது, தேவனுடைய சபைக்கு, தேவனுடைய சபையில் உள்ள ஊழியங்களுக்கு, போதகர்களாய், இன்னும்கூட மேய்ப்பர்களாய் அதைப்போல, சபையிலுள்ள மற்ற பணிகளுக்கு ஊழிய விஷயமான பணிகளிலே ஏற்படுத்துகிற காரியங்களையெல்லாம், கைகளை வைக்குதல் மூலமாக நடைபெற்றதாக நாம் அறிகிறோம். இவ்விதமாக அதிகாரமளித்தல் என்பது நடைபெறுகிறது, பொறுப்பு அளிக்கப்படுதல் என்பதும்

நடைபெறுகிறது. அந்த ஊழியத்தில் ஏற்படுத்தி விட்டோம் என்பதை அது உறுதிப்படுத்துகிற விஷயமாய் இருக்கிறது.

**தொடர்ந்து நாம் மேய்ப்பனின் செயல்பாடுகளைக் குறித்து சிந்திக்க ஆரம்பிக்கிறோம்.** அவர் எவ்விதமாய் செயல்பட்டார்? எவ்விதமான செயல்பாடுகள் அவர் சபையிலே செய்யவேண்டும்? என்று எதிர்பார்க்கப்பட்டார்? அதைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது? தேவப்பிள்ளைகள், ஊழியர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் குறித்து நாம் ஆராயப்போகிறோம்.

மேய்ப்பு பணியினுடைய முக்கியமான செயல்பாடுகளைக் குறித்து, கி.பி.4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த 'கிரிஷோஸ்டம்' என்ற தேவ மனிதர் தன்னுடைய எழுத்தாக்கத்திலே, ஆசாரியத்துவத்தைக் குறித்து கூறுகிறார். அந்த ஆசாரியன், இல்லாவிட்டால் மேய்ப்பன் எவ்விதமாக செயல்படவேண்டும்? என்று 3 முக்கிய காரியங்களை கூறியிருக்கிறார். அவைகளைக் குறித்து நாம் தொடர்ந்து கற்கப்போகிறோம். **முதலாவது காரியம், திருநிலைப்படுத்தப்பட்ட ஒரு ஊழியர், அந்த மேய்ப்பன், போதகன், சாக்கிரமந்துகள் கொடுக்கவேண்டியவராக இருக்கிறார்.** இது அவருடைய முதலாவது செயல்பாடுகள் இல்லாவிட்டால், சாக்கிரமந்துகளை கொடுக்கிற ஒரு செயல்பாடு அவருக்கு அளிக்கப்படுகிறது. **இரண்டாவது காரியம், ஒழுங்கு நடைவடிக்கைகள், நிர்வாகம் குறித்த செயல்பாடுகளை நடப்பிக்கிறவராய் இந்த மேய்ப்பர் அல்லது போதகர் இருக்கிறார்.** சபையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள், நிர்வாகம் எல்லாவற்றையும் அவர்தான் பார்ப்பதற்கு பொறுப்பெடுக்கிறார். அவருக்கு உதவி செய்வதற்கு நிர்வாக கமிட்டி இருக்கலாம். ஆனால் அதை ஒழுங்குபடுத்தி நடத்தப்போகிற பொறுப்பு இந்த போதகர் கையில் கொடுக்கப்படுகிறது. **மூன்றாவது காரியம், கற்பித்தல், சுவிசேஷப்பணி போன்ற செயல்பாடுகளை அவர் செய்ய வேண்டியவராய் இருக்கிறார்.** அவர் தவறான போதனையை கண்டனம் செய்து, விசுவாசம் உள்ளவர்களை, வேத வசனத்தினால் கட்டியெழுப்பி உற்சாகப்படுத்த வேண்டிய இடத்திலும் இருக்கிறார். விசுவாசிகளுக்கு அந்த காரியத்தை அவர் செய்யவேண்டும், ஜெபிக்கவேண்டும், நன்றாக பிரசங்கிக்க வேண்டும். சுவிசேஷ பணிக்கு அழைத்து செல்லவேண்டும், சுவிசேஷ பணி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்று அவர் போதனையில் சொல்லவேண்டும். இப்படி பல விதங்கள் இருக்கிறது. அவ்விதமான ஒரு ஊக்குவிப்பு பணியில் போதிக்கிற பணியும், மேய்ப்பனுடைய கரங்களிலேயே கர்த்தர் கொடுத்து இருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ரிச்சர்ட் பக்ஷர் என்ற தேவ மனிதர் இந்த மேய்ப்பனைக் குறித்து கூறுகிற சில காரியங்களைக் குறித்து நாம் சிந்திக்க இருக்கிறோம். அவர், ஒரு மேய்ப்பன் எப்படி இருக்க கூடாது என்று விளக்குகிறார். **முதலாவது,** அவர் கூறுகிறதைக் கவனியுங்கள், ஒரு மேய்ப்பனின் பணியானது,

ஊழியமானது விசேஷித்தது. இதை இலேசாக யாரும் எண்ணிவிடக் கூடாது. ஒரு மேய்ப்பனாக பணிபுரிய வாஞ்சிக்கும் ஒருவரிடம் மிக உயர்ந்த தகுதி எதிர்பார்க்கப்படுகிறது. ஜனங்கள் மத்தியிலே பரிசுத்தத்தில் விருப்பம் இல்லாதவன், அக்கிரமங்களை வெறுக்காதவன், சபையின் தூய்மையையும், ஐக்கியத்தையும் நேசிக்காதவன், தர்க்கங்களையும், பிரிவினைகளையும் எதிர்க்காதவன் தன்னுடைய விசுவாசிகளோடுகூட தேவனுக்கு ஆராதனை செய்வதில் பிரியப்படாதவன் எவனோ, அவன் சபையின் மேய்ப்பனாக இருக்க தகுதியற்றவன் என்றார். இதைக் கேட்கும்போதே உங்களுக்கு தெளிவான ஒரு கருத்து கிடைத்திருக்கும். ஒரு மேய்ப்பனுடைய பணி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் இதிலிருந்து அறிய முடிகிறது. அவருடைய விசேஷித்த தன்மை, அவர் எப்படிப்பட்ட செயல்பாடு உடையவராய் இருக்கவேண்டும்? என்பதை இந்த வார்த்தைகளிலே நீங்கள் அதிகமாக அறிந்துகொள்ள முடியும். ஒரு மேய்ப்பனுடைய செயல்பாடுகளைக் குறித்து, அவன் வெவ்வேறு விதங்களில் செயல்பட எதிர்பார்க்கப்படுகிறவனாக இருக்கிறான். மேய்ப்பன் என்ற பணி ஒருவேளை இதுதான் நீங்கள் செய்யவேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருந்தாலும், அநேக சந்தர்ப்பங்களில் அந்த மேய்ப்பன் தன்னை பலவிதமான செயல்பாடுகள் வழியாக, அந்த பணியைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த ஊழியத்தை அவர் செய்ய வேண்டியதாக இருக்கிறது. காரணம் அவர் அநேக மக்களின் தேவையை நிவர்த்திசெய்ய வேண்டியிருக்கிறது. விசுவாசிகளின் தேவைகள், சபை நிர்வாக தேவைகள், சபைக்கு வெளியேயிருந்து வருகிற அச்சுறுத்தல்கள் இப்படி பல வேலைகளில், பல பணிகளில் அவர் ஈடுபட வேண்டியதாக இருக்கிறது. அதைக்குறித்து நாம் இப்போது சற்று விளக்கமாக சிந்திக்கப் போகிறோம்.

ஒன்று, மேய்ப்பனாக அவர் என்ன செய்ய வேண்டியதாய் இருக்கிறது? நமது பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவின் பணியை, ஊழியத்தை நாம் தொடர்ந்து பூமியில் செய்து கொண்டிருக்கிறோம். அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்று வேதம் தெளிவுபட கூறுகிறது. *1* பேதுரு *5:2-4* வரை வாசித்து பார்ப்பீர்களானால், தேவன் தன் மந்தையை நடத்தி, அதை மேய்க்கின்ற பொறுப்பை நமக்கு கொடுத்திருக்கிறார். ஆகவே இந்த பணியை, ஊழியத்தை கட்டாயமாகவோ, இழிவான உலக ஆதாயத்திற்காகவோ அல்லது இறுமாப்போடோ செய்யாமல், மனப்பூர்வமாயும் உற்சாகத்துடனும் இந்த ஊழியத்தை செய்கிறவர்களாய் இருக்கவேண்டுமென்று பேதுரு அந்த பகுதியிலே மிகத் தெளிவாக விளக்குகிறதை, நன்றாக புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். நீங்கள் பழைய ஏற்பாட்டை ஆராய்ந்து பார்ப்பீர்களானால், அங்கே அநேக கள்ள மேய்ப்பர்களைக் குறித்து நாம் பார்க்கிறோம். அந்த கள்ள மேய்ப்பர்களுக்கு எதிராக தேவன் உரைத்த தீர்க்கதரிசனமான எச்சரிப்பான வார்த்தைகளையும் நாம் பழைய ஏற்பாட்டிலே வாசித்து பார்க்கிறோம். மந்தைகளுக்கு செய்யவேண்டிய பொறுப்புகளை, ஊழியத்தை அவர்கள் நிறைவேற்றாமல் தங்களுடைய சுய இலாபங்களுக்காக அந்த

மந்தையை மேய்க்கிற பணியை நிறைவேற்றி, அலட்சியமாக அந்த ஜனங்களை வழிநடத்தினவர்களை, கர்த்தர் எவ்விதமாய் கண்டனம் பண்ணுகிறார் என்று வாசித்துப் பார்க்க முடிகிறது. அந்த தலைவர்களையும், கள்ள தீர்க்கதரிசிகளையும் கர்த்தர் வெறுத்தார், தண்டித்தார் என்று சொல்லி, நாம் பழைய ஏற்பாட்டில் அநேக வசனங்கள் வாயிலாக அறிய முடிகிறது. புதிய ஏற்பாட்டிலும், நீங்கள் எடுத்து பார்ப்பீர்களானால், இவ்விதமான வழிதவறிய தலைவர்களை இயேசு கடிந்து கொண்டதை நீங்கள் பார்க்க முடியும். உண்மையான கரிசனையும், வழிநடத்துதலையும் அளிக்கிற மேய்ப்பர்களாக நீங்களும், நானும் இருக்கவேண்டும் என்றுதான் தேவன் எதிர்பார்க்கிறார். தேவனுக்கு முன்பாக நாம் உத்தமமாய், இந்த காரியங்களை செய்தவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லி வேதாகமம் சொல்கிறது.

வாழ்க்கையின் பல்வேறு தேவைகள், எதிர்பார்ப்புகள், பிரச்சனைகள், குழப்பங்களோடு இருக்கிற மக்களைத்தான் நாம் உலகத்திலே எங்கும் பார்க்கிறோம். ஆகவே, அவர்களுக்கு நாம் சரியான மேய்ப்பு பணியை வழங்குகின்ற மேய்ப்பர்களாக இருக்கவேண்டும் என்பது எவ்வளவு அவசியம். இந்த உலகத்திற்கு நாம்தான் வெளிச்சம், நாம்தான் வழி காட்டவேண்டும், நாம்தான் நம்பிக்கையை ஊட்ட வேண்டும். ஆனால், இன்றைக்கு அநேக சபையார் அவர்கள்தான் நம்பிக்கையற்று இருக்கிறார்கள், உலகத்திற்கு வழிகாட்டவேண்டிய அவர்கள் ஓரமாய் இருந்துவிட்டபடியினால், உலக மக்களின் நம்பிக்கையும் முற்றிலுமாய் இல்லாமல் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த உலகத்திற்கு எல்லா காரியத்தையும் கற்றுக்கொடுக்க வேண்டிய இடத்தில்தான் சபை இருக்கிறது. சபைதான் உலகத்தை தாக்கத்துக்குள்ளாக வேண்டுமேயொழிய, உலகம் சபைக்குள்ளாக வரக்கூடாது. ஆனால், இன்று ஆவிக்குரிய வட்டாரத்தில் நன்றாக கவனித்து பார்க்க வேண்டும். உலகம் ஆவிக்குரிய வாழ்வை பாதித்திருக்கிறது, சபையை பாதித்திருக்கிறது, விசுவாசிகளைப் பாதித்திருக்கிறது, உலகத்தை வெறுத்து, இயேசுவின் பின்னே போகவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. அந்த கருத்தை உலகத்திற்கு கொடுக்காமல் உலக மக்கள் விரும்புகின்ற ஆடம்பரம், உலக மக்கள் விரும்புகிற பலதரப்பட்ட அந்த உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தையே இன்று சபையில், ஊழியத்தில், விசுவாசிகள் மத்தியில், ஊழியர்கள் நிலைநாட்டி பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இவ்வாறு தவறான ஒரு காரியத்தைப் போதிக்கிறார்கள்.

கடன், நோயெல்லாம் நீங்க வேண்டியது அவசியம்தான், ஆனால் அதையே பேசி, அதிலேயே நாம் வளர வேண்டும், அதிலேயே மேன்மையாய் வருகிறதுதான் ஆசீர்வாதம் என்று ஒரு கண்ணோட்டத்தை கொடுக்கும்போது, மக்கள் திகைக்கிறார்கள், புரியாமல் வாழ்கிறார்கள், என்ன சொல்லுகிறார்கள் இவர்கள்? உலகத்தில் நிம்மதி இல்லையென்றுதான் சபைக்கு வருகிறோம், இங்கேயும் அதையேதான் சொல்லுகிறார்கள், சபையிலேயும்

ஆடம்பரம், பெருமை, பணம் உள்ளவர்களையே மதிக்கிறார்கள். ஆக, நிம்மதியற்று உலகம் வேண்டாமென்று உதறிவிட்டு சபைக்குள்ளே வந்த மனுஷன், இங்கேயும் மீண்டும் நிம்மதியற்று வாழ்கிறான். ஏதோ பெரிய உலகம் தரக்கூடாத சமாதானத்தை இயேசு தருகிறார் என்று வந்தால், இங்கே அரசியல், சண்டை சச்சரவுகள், சபையிலே காணப்படுகிறதே என்று சொல்லி, அநேகர் வெறுப்படைந்து, கிறிஸ்தவத்தையும் விட்டு போய்விடுகிறார்கள். காரணம் உலகம் சபைக்குள் வந்துவிட்டது. உலகத்தைப்போலவே, பேசுகிறார்கள், உலகிலுள்ள மனிதர்கள்போலவே நடத்துகிறார்கள், பணக்காரன், ஏழை என்கிற வித்தியாசத்தை காண்பிக்கிறார்கள். உண்மையான அன்பு இல்லை, வேதம் சொல்லுகிற அந்த செயல்பாடுகளெல்லாம் இல்லையென்றால், அவன் எங்கே செல்வான்? யோசித்துப் பாருங்கள். குழப்பத்தோடு இருக்கிற இந்த சபை மக்களுக்கு, உலக மக்களுக்கு, எதிர்பார்ப்புகளுக்கு நீங்கள்தான் பிரச்சனையை தீர்க்கிற, பதில் தருகிற ஒரு இடத்திலிருக்கிற மேய்ப்பனாக இருக்கிறீர்கள்.

**இரண்டாவது, ஒரு மேய்ப்பன் ஆலோசனை ஊழியராக இருக்கின்றார்.** ஆலோசனை ஊழியர், இந்த ஆலோசனை ஊழியராக அவர் எவ்விதமாக செயல்பட வேண்டும்? அவ்வாறு அவர் செய்படுகிறாரா? என்று வேதத்தின் அடிப்படையிலே சற்று சிந்திப்போம். வாழ்க்கையில் பிரச்சனைகள், குழப்பங்கள், விரக்திகள் போன்றவை ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும், மற்றும் எல்லோர் வாழ்விலும் இருக்கக்கூடிய ஒன்றுதான். மனிதனுடைய பாவத்தின் விளைவினால் சீரழிந்துபோன நிலையிலே, மனிதன் வாழ்ந்துகொண்டிருக்கிறான். தனக்குள்ளேயே சமாதானமின்றியும், மற்றவர்களோடு சமாதானமின்றியும், எல்லாவற்றிற்கும் மேலாக தன்னைப் படைத்த கர்த்தரோடு சமாதானமின்றியும் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். கிறிஸ்துவுக்குள் நிச்சயமாக மறுபடியும் பிறக்காவிட்டால், இரட்சிக்கப்படாவிட்டால், இந்தநிலைதான் எல்லா மனிதருக்குள்ளும் காணப்படும். ஆனால் இரட்சிக்கப்பட்ட, ஆவியின் அபிஷேகம் பெற்ற ஊழியராகிய மேய்ப்பன், போதகன் என்ன செய்ய வேண்டும்? இந்த மக்களுக்கு தகுந்த ஆலோசனையை கொடுத்து, சரியான வழிகாட்டுதலை காண்பித்து, சீர்படுத்தி, குணப்படுத்தி எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தரோடும், மற்றவர்களோடும் அந்த மனிதனை ஒப்புரவாக்கி மேய்ப்பு பணியை செய்ய வேண்டியதாய் இருக்கிறது. சபையிலே மேய்ப்பு பணியோடுகூட ஆலோசனை பணி மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது.

பல பிரச்சனைகளோடு விசுவாசிகள் வருகிறார்கள். ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும், பிரச்சனையோடு உள்ளவர்கள்தான், சபைக்கே மாற்றமடைந்து வந்திருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளுங்கள். நீங்களும் அப்படிப்பட்டவர்களைத்தானே அழைத்தீர்கள். ஐயா, உங்களுக்கு பிரச்சனையா, கவலையா? கண்ணீரா? வாருங்கள் என்றுதானே அழைத்தீர்கள். ஆகவே, பிரச்சனையோடு உள்ளவர்கள்தான் உங்களிடத்தில் வருகிறார்கள்.

அவர்களுக்கு தீர்வுகளை, இயேசுகிறிஸ்துவின் உதவியோடு வேதத்தின் உதவியோடு நீங்கள்தான் கொடுக்கிற இடத்தில் இருக்கிறீர்கள். ஆகவே இந்த பணி முக்கியமான பணி என்பதை புரிந்து கொள்ளுங்கள். ஆலோசனைப் பணியாளனாக நீங்கள் இருக்கும்போது, வெறுமனே அறிவுரை, ஆலோசனைகள் மட்டும் கூறிவிட்டால் வேலை முடிந்துவிடாது. பாதிக்கப்பட்ட மக்களை நன்றாக விளங்கிக்கொண்டு, இரக்கத்தோடு அவர்களை அணுகி, உண்மையாகவும், கரிசனையாகவும் அந்த மக்களுடைய பிரச்சனைகளுக்கு நீங்கள் செவிகொடுத்து, வழிநடத்த வேண்டும். மட்டுமல்ல, உண்மையான தீர்வையும் நீங்கள் ஏற்படுத்தி கொடுக்கிற இடத்தில் இருக்கிறீர்கள் என்பதையும் புரிந்துகொள்ளுங்கள். ஆலோசனை பணியாளராக உங்களுடைய பொறுப்பு மிக முக்கியமான இடத்தில் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

**மூன்றாவது, ஒரு ஆசிரியனாக, பிரசங்கியாக இந்த மேய்ப்பன் இருக்கிறான்.** ஒரு மேய்ப்பன், போதகன், போதக சமர்த்தனாக இருக்கவேண்டியது அவசியம். ஏனெனில், அந்த மந்தைக்கு, அதாவது அந்த சபைக்கு அவர்தான் முக்கியமான ஒரு ஆதாரமாயிருக்கிறார். தேவனுடைய வார்த்தைக்கு ஆதாரம் அவர்தான். அங்கிருந்துதான் மக்கள் சத்தியத்தை கேட்க வேண்டும். இன்று பலர் பலவிதமாக உபதேசித்தாலும், போதகருடைய அந்த உபதேசம் மிகவும் முக்கியமானது. ஏனெனில் மக்களுடைய நிலையை அறிந்து, மக்களுடைய அந்த நிலைக்கு ஏற்றபடி வார்த்தைகளை உபயோகித்து, புரியுமளவிற்கு சொல்லப்போகிறவர், போதகர்தான். உதாரணமாக, நான் முன்பு ஆசிரியராக பணிபுரிந்திருக்கிறேன். அப்போது, பி.எட். படிக்கும்போது, நீ ஆங்கில பாடம் கற்றுக்கொடுக்க போகிறாய். அவ்வாறு கற்றுக்கொடுக்கும்போது, நீ நன்றாக ஆங்கிலத்தை வாசிக்க வேண்டும், நீ முதலாவது அதனுடைய இலக்கணத்தை நன்றாக அறிந்து, தெளிவாக சொல்லிக் கொடுக்க வேண்டும். நீயே சொல்லிக்கொடுக்கவில்லை என்றால், அந்த மாணவர்கள் எப்படி ஆங்கில பாடத்தை படிப்பார்கள்? ஆக, நீதான் ஆதாரமாயிருக்கிறாய். ஆங்கில படிப்பை அவன் வேற எங்கேயும்போய் கேட்க முடியாது. இரண்டாவது அதற்குத்தான் உனக்கு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உனக்கு ஆசிரியர் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது, நீ கற்றுக்கொடுக்கவில்லை என்றால், யார் அவர்களுக்கு சொல்லிக் கொடுப்பார்கள்? என்று எங்களை உற்சாகப்படுத்துவார்கள். ஆம் பிரியமானவர்களே, அதைப்போல, ஒரு சபைக்கு நீங்கள்தான் பொறுப்பு, நீங்கள்தான் உறவுகளைக் கட்டி எழுப்பிவிட்டு, அவர்கள் பார்க்கிற முன்மாதிரியாய் இருக்கிறீர்கள். நீங்கள் சொல்லுகிறதுதான் எடுபடும். டிவியிலேயோ, யூடியுப்பிலேயோ பார்க்கிற பிரசங்கங்கள் எல்லாம் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தாது. ஏனெனில் அந்த ஊழியரைப் பற்றி இவருக்கு தெரியாது. அவரோடு அன்பு ஒன்றும் இவருக்கு கிடையாது, ஐக்கியம் கிடையாது. ஆகவே பொறுமையாக தேவனுடைய செய்தியை மட்டும்தான் கேட்பார். ஆதலால், நீங்கள் போதக சமர்த்தனாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

வேத வசனத்தில் தேறினவனாக இருக்க வேண்டியது அவசியம். *1* தீமோ.*3:2*-ம் வசனத்தை வாசிப்போம், 'ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும்.' என்று வேதம் தெளிவுபட கூறுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் மூலமாக ஆவியானவர் தெளிவாக இந்த காரியத்தை வலியுறுத்துகிறார். ஒரு போதகன், ஒரு மேய்ப்பன், போதக சமர்த்தனாயிருக்க வேண்டும். மிகவும் திறமையாக இருக்க வேண்டும் என்று வேதம் தெளிவுபட கூறுகிறது.

பிரியமானவர்களே, நாம் சாதாரணமாக இருக்க கூடாது. தேவனுடைய வார்த்தை தானாக செயல்படும் என்று சொல்லிவிட்டு, ஒரு சமர்த்தனாய் அதிலே தாலந்து உள்ளவனாய், செய்யாமல் நாம் இருந்துவிடக்கூடாது. திறமையோடு, போதக சமர்த்தனாக நீங்கள் செயல்பட வேண்டும். அதைப்போல *2* தீமோ.*2:23*-ம் வசனம் இவ்விதமாய் சொல்கிறதைக் கவனித்துப் பாருங்கள், 'கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்.' என்று மீண்டும் பவுல் மூலமாய் ஆவியானவர் இங்கே நினைவுபடுத்துகிறதைக் கவனித்துப் பாருங்கள் பிரியமானவர்களே. போதக சமர்த்தன், பிரசங்கிக்கிற, கற்பிக்கிற ஊழியத்தை ஒரு மேய்ப்பன் சிறப்பாக செய்யவேண்டும். இதைவிட ஒரு பெரிய பொறுப்பு அந்த மேய்ப்பனுக்கு, போதகனுக்கு இருக்க முடியாது. ஏனென்றால், விசுவாசிகளைப் போஷிக்கிற பொறுப்பு, குறிப்பாக வேத வசனத்தின், ஆழத்திற்குள்ளே நடத்தி போகிற பொறுப்பு அந்த போதகர் கையில்தான் இருக்கிறது. பிரசங்கமானது விசுவாசிகளுக்கும், தேவ வார்த்தைக்குமிடையில் பாலத்தைப்போல் இருக்கிறது. தேவ வார்த்தை என்ன சொல்லுகிறதோ, அதற்கு பாலம்போல நீங்கள் பிரசங்கிக்கிறீர்கள், அந்த வார்த்தை மக்களைச் சென்றடைகிறது.

பிரியமானவர்களே, விசுவாசிகள் கையில் வேதம் இருக்கிறது உண்மைதான். ஆனால் அவர்களுக்கு புரியாதவொரு பிரச்சனை இருக்கிறது. தேவன் உங்களை அதற்குத்தான் பயிற்றுவித்திருக்கிறார். இல்லாவிட்டால், நீங்கள் இப்போது அவரால் பயிற்றுவிக்கப்படுகிறீர்கள். நீங்கள் வேதத்தைப் பற்றி அதிகமாக அறிந்திருக்க வேண்டியது அவசியம். அதற்காக ஏராளமான புத்தகங்களை நீங்கள் படிக்க வேண்டும். ஏராளமான புத்தகங்கள் என்றால், ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருக்கிறது. ஆனால், எது ஆவிக்குரிய முதிர்ச்சியை தரக்கூடிய புத்தகம் என்று பார்த்து, சரியாய் படிக்க வேண்டும். மிகவும் சாதாரணமான புத்தகங்கள், மற்றும் மாயாஜாலப் புத்தகங்கள் போன்றெல்லாம், ஆவிக்குரிய புத்தகங்கள் வருகிறது, அவைகளெல்லாம் மிகவும் அவசியம் இல்லை. ஆழமான சத்தியத்திற்குள், குறிப்பாக ஆரோக்கியமான இறையியல் புத்தகங்களை நீங்கள்

வாசிக்க வேண்டியது அவசியம். அதை வாசித்தால்தான் நீங்கள் சிறப்பாக உங்களுடைய விசுவாசிகளுக்கு பிரசங்கிக்க முடியும். ஜெபம் செய்யவேண்டும், வேதம் வாசிக்க வேண்டும், அதற்கு உதவியான நூல்களையும் நீங்கள் படிக்கவேண்டும். அதற்குத்தான் வேதாகம கல்லூரியில் பயில வேண்டுமென்று நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம். நீங்கள் அதோடகூட, இந்த மாதிரியான புத்தகங்களை வாசிக்க, வாசிக்க அநேக காரியங்களை கற்றுக்கொள்வீர்கள். மக்களுக்கு ஆழமான வேத சத்தியத்தை கற்றுக் கொடுப்பீர்கள். அவர்களுக்கு வேத வசனத்தின் மீது விருப்பம் வரும். ஒரு வாஞ்சை அதிகமாய் ஏற்படும். அவ்வாறு வாஞ்சை ஏற்பட்டால்தான், அதிகமாய் தியானிப்பார்கள். அது அவர்கள் வாழ்விலே சமாதானத்தைக் கொடுக்கும், விடுதலையைக் கொடுக்கும், வாழ்வில் உயர்வைக் கொடுக்கும். இன்றைக்கு அதைத்தான் ஊழியர்கள் செய்ய மறந்துவிட்டார்கள். வேதம் வாசிக்கிறதை முக்கியப்படுத்துகிறதே இல்லை. எதற்கெடுத்தாலும், உங்களுக்கு பிரச்சனையா, என்னை தொலைபேசியில் அழையுங்கள் என்று சொல்லுகிற ஊழியர்கள்தான் இன்றைக்கு இருக்கிறார்கள். வேதம் வாசித்து, ஜெபியுங்கள் என்று சொல்லுகிற ஊழியர்களும் இருக்கிறார்கள். ஜெபம் பண்ணு, ஜெபம் பண்ணு, ஜெபம் பண்ணு என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அது ஒரு விதத்தில்தான் சரி, முழுவதும் நீங்கள் ஜெபத்தை சார்ந்திருக்க கூடாது. ஜெபத்தைக் கேட்கிற கர்த்தரை நீங்கள் சார்ந்திருக்க வேண்டும். அவருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது? என்பதை நீங்கள் அதிகமாய் தியானிக்க வேண்டும். அதன் வழியாகப் போகவேண்டும். அதுதான் மிகவும் முக்கியம். அதைத்தான் நீங்கள், உங்கள் சபையாருக்கு போதிக்க வேண்டும் பிரியமானவர்களே.

பிரசங்கித்தல் அல்லது கற்பித்தல் என்பது, கடினமான ஒரு பணிதான். நிறைய வாசிக்கவேண்டும். உங்களிடம் அதிகமான தகவல்கள் இருந்தால்தான், நீங்கள் மற்றவர்களுக்கு நிறைய கற்றுக்கொடுக்க முடியும், இல்லையென்றால், நீங்கள் பிரசங்கத்தை ஆரம்பித்து பின்பு, யோசித்து, யோசித்து அது வேதம் என்ன சொல்லுகிறது என்றால், இங்கே பார்த்தீர்களானால் என்று இழுத்துக்கொண்டே இருப்பீர்கள். மக்களுடைய கவனம் சிதைக்கப்பட்டு விடும். ஒரு பிரசங்கத்தை ஆரம்பித்தால், அது அப்படியே ஒரு மடை திறந்த வெள்ளம்போல், தொடர்ச்சியாக வந்துகொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கும் ஆர்வமாயிருக்கும். உங்களிடம் நிறைய சரக்கு இருக்க வேண்டியது அவசியம். வேதத்தைப் பற்றி நிறைய தெரிந்திருக்க வேண்டும். ஒரு வார்த்தையை எடுத்து பேச ஆரம்பித்தால், அது சம்பந்தமான அநேக காரியங்களைச் சொல்ல உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அதிக நேரம் வேதம் வாசித்து, இப்படிப்பட்ட புத்தகங்களை வாசித்து, நீங்கள் அதைத் தயாரித்துதான் அந்த பிரசங்கத்தை, வேத பாடத்தை வழங்க முடியும். அந்த மக்களை விளங்க வைக்க வேண்டிய பொறுப்பில் நீங்களும், நானும் இருக்கிறோம். ஒரு பிரசங்கத்தை குறைந்தது ஒரு வாரமாவது, நீங்கள் ஜெபித்துவிட்டு தயாரிக்க வேண்டும். அப்படி என்றால், ஒரு வாரம் முழுவதும் உட்காாந்துகொண்டே

இருக்கவேண்டும் என்று அர்த்தமல்ல. திங்கள் கிழமையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை, கர்த்தருடைய கிருபையோடு எடுக்கிறீர்கள் என்று வையுங்களேன். கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறீர்கள். அவர் ஒரு வார்த்தையை தருகிறார், அந்த வசனத்தைக் குறித்து அதிகமாய் சிந்திக்கிறீர்கள். பிறகு அது சம்பந்தமான துணை வசனங்கள், இணை வசனங்களை கர்த்தர் தொடர்ந்து தருவார், அதை நீங்கள் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். ஒத்த வாக்கிய வேதாகமத்தை படிக்கிறீர்கள், இப்படி ஒவ்வொன்றாக படிக்க வேண்டும். மேலும், நான் நன்றாக பிரசங்கிப்பது எப்படி? சிறப்பாக பிரசங்கிப்பது எப்படி? என்கிறதான தலைப்புகளிலுள்ள குறிப்புகளைக் கொண்டு பிரசங்கத்தை தயாரிப்பது எப்படி என்று சொல்லியே, கர்த்தருடைய கிருபையினால், ஒரு தனி விளக்க பாடத்தை பதிவிட்டிருக்கிறேன், அதை நீங்கள் கேட்கவேண்டும். ஏனெனில், அதை இங்கே கொண்டு வந்தால், நேரம் அதிகம் நமக்கு தேவைப்படும்.

ஆகவே பிரியமானவர்களே, நீங்கள் இவ்விதமாக பிரசங்கத்தை தயாரிப்பதற்கு ஒரு வார காலத்தைக்கூட செலவழிக்க வேண்டியதாக இருக்கும். ஆகவே மக்களுக்கு நான் இதைக் கொடுக்கும்போது, அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆவிக்குரிய ரீதியில் வளரவேண்டும். வேத வசனத்தின் மீது விருப்பத்தை கொடுக்க வேண்டிய இடத்தில் நீங்களும், நானும் இருக்கிறோம். பிரசங்க பீடத்தை மக்கள் தாக்குகிற மேடையாக இன்று பயன்படுத்துகிறதை நாம் பார்க்கிறோம். இதுதான் வாய்ப்பு, சபைக்கு வந்துவிட்டார், இனி நம்முடைய கட்டுப்பாடுதான் என்பதுபோல, தசமபாகம் தாரத நபர்கள், இல்லையென்றால் ஞானஸ்நானம் எடுக்காத நபர்கள், சபைக்கு ஒழுங்காக வராத மக்களையெல்லாம் வைத்து சாடு, சாடு என்று சாடி, சத்தம் போட்டு, பயப்படுத்தி, பேசுகிற சில ஊழியர்களை நாம் பார்க்கிறோம். மேலும் சாபமிடுகிற ஊழியர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அதுதான் ஒரு ஊழியர் சொல்வார், மக்களே பாவம், அவர்கள் ஆறுநாளும் கஷ்டப்பட்டு, நொந்துபோய்தான், ஏழாவது நாள் ஒரு ஆறுதலான வார்த்தையை கேட்க வருகிறார்கள், இங்கே போதகர் சாபமிடுகிறார் என்று சிலர் சலித்துக்கொள்கிற இடத்திலே, சில சபைகள் காணப்படுகிறதைப் பார்க்கிறோம். கண்டித்து உணர்த்த கூடாது என்று நாம் சொல்ல முடியாது. ஆனால் கண்டித்து உணர்த்துவதிலும் சாந்தமாய் கண்டித்து உணர்த்துவதைத்தான் வேதம் வலியுறுத்துகிறது என்பதை புரிந்துகொள்ளுங்கள். அவர்களுக்கு புரியவும் வேண்டும், ஆனால் வருத்தமும் அதிகமாய் ஏற்பட்டு சோர்ந்து போகாதபடிக்கு நாம் அவர்களை நடத்த வேண்டிய இடத்தில் இருக்கிறோம்.

ஏனெனில் ஒரு தகப்பன் தன் பிள்ளையை தண்டிக்கிறது போலத்தான் நாம் போதகனாயிருந்து தண்டிக்கிற இடத்திலிருக்கிறோம். நீங்கள் உங்கள் பிள்ளையை எந்தளவுக்கு தண்டிப்பீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். எந்தளவுக்கு திட்டுவீர்கள் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அவனை அப்படியே மனமடிவாக்கி, இல்லாமலே

போகுமளவுக்கு நீங்கள் பேசுவீர்களா? துரத்துவீர்களா? அவனை வெளியே போக சொல்லுவீர்களா? இல்லையே. அதைப்போலத்தான் ஒரு தந்தையைப்போல, சபை மக்களை நடத்துகிற ஒரு தந்தையின் இருதயம் உங்களுக்கு தேவை. மேய்ப்பனின் இருதயத்தை பாருங்கள். அந்த மேய்ப்பன் எந்தளவுக்கு தன்னுடைய மந்தையின் மீது கரிசனை உள்ளவனாய் இருப்பான், யோசித்துப் பாருங்கள். பழைய ஏற்பாட்டில் அதைத்தான் மிகவும் தெளிவாக பிதாவானவர் கூறுகிறார். நசல் கொண்ட, காயம்பட்ட ஆடுகளை எவ்வளவு தூரம் கரிசனையாய் அந்த மேய்ப்பன் கவனிக்கிறார், பாருங்கள். தேவையான இரையை கொடுக்கிறார், புல்லுள்ள இடங்களில் மேய்க்கிறார். அமர்ந்த தண்ணீர்கள் அண்டையிலே நடத்திக்கொண்டு போய்விட்டு அதை செழுமையாக, கொழுமையாக வளர்க்கிறார், எவ்வளவு பாசம் பாருங்கள். உங்கள் மந்தையின் மீதும், அந்தளவுக்கு பாசம், ஒரு தந்தையின் பாசம் இருக்க வேண்டும். அவர்கள் உங்களைவிட்டால், யாரிடம் போவார்கள், நீங்கள் சரியாய் வழிநடத்தவில்லை என்றால், அவர்கள் எப்படி ஆறுதலைப் பெற முடியும்? நீங்கள்தான் பொறுப்பில் இருக்கிறீர்கள், முக்கியமான இடத்தில் இருக்கிறோம் என்ற அந்த தாழ்ந்த சிந்தையோடு நடத்துவதற்கு கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

இப்போது *1* பேதுரு *5:2-4* வரையுள்ள வசனங்களை ஒருமுறை நீங்கள் வாசித்து, நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். உங்களிடத்திலுள்ள 'தேவனுடைய மந்தையை' என்று வசனம் ஆரம்பிக்கிறதை கவனியுங்கள். அதாவது உங்களிடத்தில் அந்த மந்தையை பொறுப்பாக கர்த்தர் கொடுத்திருக்கிறார் என்பதை இந்த வசனத்தில் கவனித்துக் கொள்ளுங்கள். *1* பேதுரு *5:2-4* வசனங்கள்: 'உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.' அங்கே வேதம் தெளிவுபட சொல்லுகிறதை கவனித்துப் பாருங்கள். ஆக, மந்தையை இறுமாப்பாய் ஆளுவார்கள் என்பதை வேதம் ஏற்கனவே தரிசனமாய் கண்டு, அங்கே சொல்லுகிறது. சில போதகர்கள் அவ்வாறு எழும்புவார்கள், இறுமாப்பாய் ஆளுவார்கள். ஏனெனில், அந்த மந்தை, ஆடுகள் ஏதாவது ஒரு விதத்தில் எதிர்த்து செயல்பட முடியுமா, கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஆடுகள் முற்றிலும் கட்டுப்பாட்டிலுள்ள காரியம், சரியற்ற ஒரு மேய்ப்பன் கையில் மாட்டிக்கொண்ட ஆடுகள், அவைகள் பரிதாபமான ஆடுகளே. என்ன நினைத்துனாலும் அதைச் செய்யலாம், அந்த ஆடுகளை கசாப் போடலாம், அந்த ஆடுகளை வெளியே விற்றுவிடலாம். அந்த ஆடுகளை இந்த மேய்ப்பன் கண்டுகொள்ளவில்லை என்றால், அது நோயுற்று பெலவீனமடைந்து இல்லாமலே போய்விடும். இன்றைக்கு

சபையிலே இதுதான் நடந்துகொண்டிருக்கிறது. சில சபைகளிலே ஆடுகள் கவனிக்கப்பட வில்லை. தங்களுடைய காரியத்தை மாத்திரமே கவனம் பண்ணுகிற அநேக போதகர்கள் எழும்பி விட்டார்கள். அவர்கள் ஆவிக்குரிய ரீதியிலெல்லாம் கவலைப்படாமல், தங்களுடைய காரியம் நடக்கிறதா? என்பதை மாத்திரம் முக்கியப்படுத்துகிறார்கள். இறுமாப்பாய் ஆளுகிறார்கள், மந்தைக்கு எந்த மாதிரியாகவும் அவர்கள் இல்லாமல், அதாவது, எடுத்துக்காட்டாக இல்லாமல், தவறான எடுத்துக்காட்டுகளாகத்தான் இன்று போதகர்கள் இருக்கிறார்கள். குறைசொல்லுகிறேன் என்ற கண்ணோட்டத்தோடு பார்க்காதீர்கள். இன்றைய சபையின் நிலையைக் குறித்துதான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

ஆக, இதெல்லாம் முன்னே வேதம் கண்டுதான் சொல்லுகிறது. மேய்ப்பனே! சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகை செய்யாதே, நீ மந்தைக்கு ஒரு மாதிரியாயிரு, எடுத்துக்காட்டாய் இரு, நீ கவனமாய் கண்காணிப்பு செய்து, உன் மந்தையை நீ மேய்த்துக்கொண்டு வா என்று சொல்லுகின்றார். அதை கட்டாயமாய் நீ செய்யாதே, வேற வழியில்லை என்று சொல்லி, மந்தையை மேய்க்காதே, மனப்பூர்வமாய் அந்த மந்தையை மேய்த்து, உலக இலாபத்திற்காக, இழிவான ஆதாயத்துக்காக, அதை மேய்க்காமல், உற்சாக மனதோடு இந்த ஊழியத்தை செய் என்று பேதுரு மூலமாய் கர்த்தருடைய ஆவியானவர் நமக்கு இந்த வசனங்களிலே சொல்கின்றார். பிரியமானவர்களே, நமக்கு பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் தேவனுடைய மந்தையை சரியாக போஷிக்காத பட்சத்தில், நாம் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க இயலாது. ஏனென்றால் தேவன் ஒரு பெரிய பொறுப்பை கொடுத்துவிட்டு, பெரிய காரியத்தை உங்களிடத்திலிருந்து எதிர்பார்க்கிறார். எவனுக்கு அதிகம் கொடுக்கப்படுமோ, அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும். போதக ஊழியம் முக்கியமான ஊழியம். அதைக்குறித்து யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லும்போது, யாக்.3:1, ‘என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.’ என்கிறார். பாருங்கள், அதிக ஆக்கினை ஏன் வருமென்றால், தேவன் அதிக பொறுப்பை போதகர் கையில் கொடுத்து இருக்கிறபடியினால், அதிக காரியத்தை கர்த்தர் எதிர்பார்ப்பார். ஆனால் அந்த எதிர்பார்ப்புபடி இந்த போதகர் செய்யாதபொழுது அதிக ஆக்கினை வரும் என்று யாக்கோபு அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆகவே, போதகராகாதிருப்பீர்களாக என்று எச்சரிக்கிறார், இதனால் அவர் உங்களை அல்லது போதகர்களை சோர்ந்துபோகச் செய்வதற்காக அவ்வாறு சொல்லவில்லை, மாறாக கவனமாயிருங்கள் என்று சொல்வதற்காகவே, இந்த வார்த்தையை அவர் பயன்படுத்துகிறார். ஏனென்றால், அதிக பொறுப்பு மேய்ப்பனுடைய கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நீங்கள்தான் உத்திரவாதம் பண்ணுகிறீர்கள். அந்த ஆத்துமாக்களை வளர்த்து, அவர்களின் பெலவீனங்களில் உதவி செய்து, அவர்களின் தேவைகளில் உதவி செய்து விசாரிக்க

வேண்டிய இடத்தில் விசாரித்து, உலகப்பிரகாரமாக உதவி செய்வதிலும், உதவி செய்து, ஒரு தந்தையைப்போல பராமரிக்கிற இடத்திலே நீங்கள் இருக்கிறீர்கள். உங்களுடைய பிரசங்கம் அல்லது கற்பித்தல் மக்களை சத்தியத்தில் வளர்க்கிறதாயிருக்க வேண்டுமேயொழிய, அவர்கள் வாழ்வில் மாற்றத்தை கொண்டு வரவேண்டும் என்பதாக இருக்க வேண்டுமேயொழிய, வேறே எந்த நோக்கத்தோடும் உங்களுடைய செய்தி இருக்க கூடாது. ஒரு சரியான கற்பித்தல் போதனை, உங்கள் வாழ்விலிருந்து வெளிப்பட வேண்டும். உங்களுடைய வார்த்தைகளிலிருந்தும் வெளிப்பட வேண்டும். போதிக்கிற நீங்கள் நல்ல குணாதிசயத்தோடு, நல்ல மனநிலையோடு இருந்தால்தான், உங்கள் வாழ்க்கையை பார்க்கிற அவர்கள், உங்களின் வார்த்தையையும் சேர்த்து கவனித்து, தங்கள் வாழ்க்கையில் அப்படியே பின்பற்றுவார்கள். பெருமை உள்ளவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார் என பேசுகிற நீங்களே, பெருமையோடு செயல்பட்டால், அவர்களுக்கு அது திகைப்பாய் இருக்கும். என்ன சொல்லுகிறார் புரியவில்லையே, என்னுடைய போதகர் இவ்வளவு பெருமையாக இருக்கிறார். அவர் எப்படி இந்த வார்த்தையை சொல்கிறார்? எனக்கு ஒன்றும் புரியவில்லை என்று சொல்லி, மக்கள் திகைத்து போய் விடுவார்கள். உங்கள் சொல்லுக்கும், செயலுக்கும், உங்களுடைய குணத்திற்கும் மனநிலைக்கும், பிரசங்க வாக்கியங்களுக்கும் கட்டாயம் தொடர்பு இருக்க வேண்டியது அவசியம். F.D. மாரீஸ் என்பவர் இவ்விதமாய் கூறுகிறார், ஒரு பிரசங்கி தான் என்ன சொல்கிறாரோ, அதனுடைய வாய்க்காலாக இருக்கவேண்டுமே ஒழிய, அதனுடைய ஊற்றாக மட்டும் இருக்க கூடாது என்கிறார். ஆக, உங்கள் வழியாக வாய்க்கால் போல, அந்த வார்த்தைகள் கடந்துபோகவேண்டும். ஊற்றுபோல பேச்சு வந்துகொண்டே இருந்தால் மட்டும் போதாது, வாய்க்கால்போல ஓடி செழிப்பை உண்டாக்க வேண்டும். அநேகருடைய வாழ்விலே நீங்கள் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். அந்த மாற்றத்தை கொண்டு வருவதற்குத்தான் நீங்கள் போதிக்கிறீர்கள். ஏதோ கடமைக்காக பிரசங்கிக்கவில்லை, பிரசங்கம் என்று ஒரு நேரம் இருக்கிறதே என்பதற்காக பிரசங்கம் செய்ய வரவில்லை. உங்களது சபையாரை வளர்க்கிற இடமே பிரசங்கம்தான், கற்பித்தல்தான் என்பதை மறந்து போகாதிருங்கள். ஆகவே, உங்களுடைய உபதேசங்கள், போதனைகள் எதுவாக இருந்தாலும், தேவனுடைய வார்த்தையிலிருந்துதான் நீங்கள் எடுத்து பேசவேண்டும். அதுதான் அடிப்படை, அதன் கருத்து மாறாமல் பேச பழக வேண்டும். உங்களுக்கு ஏற்றபடி அந்த வார்த்தையை மாற்றக் கூடாது, வசனத்தை மாற்ற கூடாது. நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ, அதற்கேற்றபடி, அந்த வசனத்தை வளைக்க கூடாது. நீங்கள்தான் அதற்கு வளைந்து போகவேண்டும். வேத வசனத்திற்கு ஏற்றபடி உங்களுக்கு பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும், வேத வசனத்திற்கேற்றபடி உங்களை மாற்றியமைத்து பேசுங்கள். அந்த வசனம் அவ்வாறுயில்லை என்று சொல்லி, வேறு அர்த்தத்தை போதித்தீர்களானால், நீங்கள்தான் வேத வசனத்தோடு வார்த்தைகளை கூட்டுகிற அந்த தவறைச் செய்கிறீர்கள். பாவத்தை

செய்கிறீர்கள். அது மிகப்பெரிய தண்டனையைக் கொண்டு வந்துவிடும். ஆகவே அந்த அர்த்தம் அறிந்து பேசுங்கள். ஒரு எழுத்தாகிலும், உறுப்பாகிலும் கூட்ட கூடாது என்று கர்த்தர் ஏன் சொல்லுகிறார் என்றால், அந்த கமா, புள்ளி, அது அர்த்தத்தை மாற்றி விடும். எனவே, அர்த்தம் மாற்றி பேசுகிறதுதான், ஒரு எழுத்தை, ஒரு வார்த்தையை கூட்டுவதற்கு சமம். அதை நீங்கள் புரிந்துகொண்டு பேசுங்கள் பிரியமானவர்களே.

வேதாகமத்தின் அர்த்தத்தை தெளிவுபட கற்றுக்கொள்ளுங்கள். அந்த வேதத்தின் ஆக்கியோனாகிய, ஆசிரியராகிய பரிசுத்த ஆவியானவரை சார்ந்து கொள்ளுங்கள். என்ன நோக்கத்தோடு இந்த வார்த்தையை கொடுத்தீர் ஆண்டவரே, அந்த வார்த்தையை நான் பெறவேண்டும். அதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார், மட்டுமல்ல இந்த துணை நூல்கள் உதவி செய்து, வேதாகம கல்லூரி உதவி செய்து, எப்படி படிக்க வேண்டும்? எப்படி தியானிக்க வேண்டும்? எப்படி விளக்கம் சொல்லவேண்டும்? என்று சொல்லுகின்ற அந்த நடைமுறை விதிமுறைகள், உங்களுக்கு மிகவும் அதிகமாய் உதவியாயிருக்கும். ஆகவே சரியான வேத வசனத்தை எடுத்து, சரியானபடி, சரியான விளக்கத்தை வேத வசனங்களுக்கு நீங்கள் கொடுக்க பழகவேண்டும். சத்தியத்தைப் பேசுவதற்கு பயப்படாதீர்கள். *2 தீமோ.2:16-ம் வசனம் இவ்விதமாய் சொல்கிறது, 'சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு, அவைகளால்(கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்.'* என்று அங்கே சொல்லப்படுகிறதை கவனித்து பாருங்கள். ஆகவே, உங்களுடைய ஊழியம் எப்படியிருக்கவேண்டும் என்பதை தெளிவுபட கூறுகிறார். சத்திய வசனத்தை, நிதானமாக பகுத்து போதிக்க வேண்டுமாம். அவசரப்படக்கூடாது. பகுத்து, பிரித்து இந்த ஜீவனுள்ள வார்த்தையை துண்டு துண்டாக வெட்டினாலும் அது சாகாது, மட்டுமல்ல பகுத்து பிரிக்க, பிரிக்க அநேக அர்த்தங்களை நீங்கள் கண்டுபிடிக்க முடியும். நீங்கள் அப்படிப்பட்ட போதனையை செய்யும்போதுதான், தேவன் முன்பாக உத்தமனாக நிற்க முடியும், உத்தமனாக எல்லாவற்றையும் சரியாக செய்தவனாக நிற்க முடியும் என்பதை மறந்து போகாதீர்கள். அதற்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எளிதாக அந்த வேலை முடிந்துவிடாது, மிகவும் ஜாக்கிரதையாயிருந்து, அந்த ஊழியத்தை செய்ய கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

பிரியமானவர்களே, அப்படிப்பட்ட கிருபைகளை கர்த்தர் உங்களுக்கு தருவாராக, அடுத்த பாடத்திற்கும் ஜெபத்தோடு காத்திருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்*!!*

## <u>கேள்விகள்:-</u>

1) ஊழியர்களுக்கான திருநிலைப்படுத்தப்படுதலில், எவ்வாறு கைகளை வைத்து ஜெபித்து, அதிகாரம் அளிக்கப்படுதல் நடைபெறுகிறது என்பதனை வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
2) திருநிலைப்படுத்தப்படுதல் (Ordination) என்றால் என்ன?
3) கைகளை வைக்குதல் என்பது எவ்வாறு வேதாகம முறையாக இருக்கின்றது என்பதனை வசன ஆதாரங்களோடு சற்று விளக்கமாக கூறுக?
4) கி.பி. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரிஷோஸ்டம் என்ற தேவ மனிதர், தன்னுடைய எழுத்தாக்கத்திலே கூறுகிற மேய்ப்பு பணியினுடைய முக்கியமான மூன்று செயல்பாடுகள் யாவை?
5) ஒரு மேய்ப்பன் எப்படி இருக்ககூடாது என்று 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ரிச்சர்ட் பக்ஷர் என்ற தேவ மனிதர் கூறுகின்ற காரியங்களை விளக்கமாக கூறுக?
6) மேய்ப்பனின் பிரசங்கத்தைக் குறித்து F.D. மாரீஸ் என்பவரின் கூற்று என்ன?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - *11*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில் நாம் மேய்ப்பனின் செயல்பாடுகளில் 4-வது காரியத்தைக் குறித்து தொடர்ந்து சிந்திப்போம். சங்.30:4-ம் வசனம், 'கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம்பண்ணி அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்' என்று வாசிக்கிறோம். சங்கீதக்காரன், பரிசுத்தவான்களை எல்லாம் அழைக்கிறார். சேர்ந்து ஆராதிக்க வாருங்கள், கீர்த்தனம்பண்ணுங்கள், நாம் சேர்ந்து அவரைக் கொண்டாடுவோம் என்று ஆராதனைக்கு நேராக நடத்துகிறதைப் பார்க்கிறோம். ஜீவனுள்ள தேவன் தம்மை ஆராதிக்க விசுவாசிகளைத் தேடுகிறார். தேவன் தம்மை தொழுதுகொள்ளுகிற ஜனங்களை தேடுகிறார், எதிர்பார்க்கிறார். ஜனங்கள் தம்மை ஆராதித்து போற்றி புகழவேண்டுமென்று வாஞ்சிக்கிறார் என்று பார்க்கிறோம்.

உண்மையாகவே நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால், மற்றெல்லா ஊழியங்களைவிட இந்த ஆராதனை செய்ய வைக்கின்ற ஊழியமே சிறந்த ஊழியம். அதாவது, ஆராதனை நடத்துவதே மிகச்சிறந்த ஊழியம். அதாவது, ஆராதனை நடத்துவதே மிகச் சிறந்த ஊழியம் என்று நாம் அறிய முடியும். ஏனெனில் தேவன் அதை வாஞ்சிக்கிறார். ஆக, நாம் ஆராதனையை நடத்தி, தேவனை வணங்குவதற்கு, தொழுதுகொள்ளுவதற்கு விசுவாசிகளை வைப்போமானால், அதுவொரு பெரிய பாக்கியமான விஷயம். அதற்காக தேவன் உங்களை அதிகமதிகமாக ஆசீர்வதித்து மேன்மைப்டுத்துகிறதை நாம் பார்க்கமுடியும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தேவனை ஆராதிப்பது, மனதார ஆராதிப்பதுதான் இரண்டாவது இடத்திற்கு போய்விட்டது. சும்மா ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், ஏதோ உணர்ச்சிவயப்பட்டு கொண்டிருக்கிறதை மாத்திரம் ஆராதனை என்று நினைக்கிறார்கள். அதைக்கூட பெரியதொரு தவறாக நான் சொல்ல விரும்பவில்லை. உண்மையாகவே நீங்கள் இரட்சிக்கப்பட்டு மனதில் மகிழ்ச்சியோடு, அதுவும் வெளியில் அவ்வளவதூரம் ஆட வேண்டும் என்ற அவசியமில்லை என்றுதான் நான் சொல்வேன். உங்களது அறையைக்கூட பூட்டிக்கொண்டு ஆடவேண்டுமென்றால் ஆடுங்கள். அதைப்பற்றி ஒன்றுமில்லை. யாரும் பார்க்காமல் தேவனுக்கும், உங்களுக்கும் தெரியத்தக்கதாக ஆடுங்கள், பாடுங்கள், கொண்டாடுங்கள். ஆனால் ஒரு பொதுக்கூட்டத்தில் பெண்கள் அவ்விதமாக ஆடுவது எவ்வாறு இருக்குமென்று பாருங்கள். அதைப்போல வாலிப தம்பி தங்கச்சி எல்லாம் ஆடி, குதித்து, விசிலடித்து, நாம் எங்கேயே போய்க்கொண்டிருக்கிறோம் பிரியமானவர்களே.

ஆனால் உண்மையான ஆராதனை என்பது இயேசுவை உணர்ந்து, அதாவது கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்து ஆவியானவர் உதவியோடு, ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளுகிற அந்த நல்ல ஆராதனை இருக்கவேண்டியது அவசியம் பிரியமானவர்களே. அதுதான் முக்கியமான நல்ல ஆராதனை, அதுவும் குறிப்பாக வேதம் சொல்லுகிறது, ஜீவ பலியாக உங்களை ஒப்புக்கொடுத்து ஆராதியுங்கள் என்று அப். பவுல் எழுதுகிறார். நம்முடைய சித்தத்தையெல்லாம் ஒப்புக்கொடுத்து, ஆண்டவரே, நான் உயிரோடு வாழ்கிறேன், நான் எனக்காக வாழவில்லை, உமக்காக வாழ்கிறேன். நான் ஜீவ பலியாக, ஜீவனோடும் இருக்கிறேன், பலியாகவும் ஆகிவிட்டேன் என்ற இரண்டு வார்த்தைகளைக் கவனியுங்கள். ஜீவபலியாக வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்று ஆராதிக்கிற ஆராதனை இருக்கிறதே, அது தேவனுக்கு மிகவும் பிரியமான ஆராதனை. ஒரு போதகன், மேய்ப்பன், தன் சபை மக்களை இரட்சிக்கப்பட்ட மக்களாய் மாற்றவேண்டியது அவசியம். வெறும் பாடலுக்காக, இசைக்காக ஆடி, கொண்டாடுகிற கூட்டமாய் மட்டும் இராமல், நீங்கள் இரட்சிப்பு இல்லாமல் உண்மையான இரட்சிப்பின் மகிழ்ச்சி இல்லாமல், சும்மா குதிப்பதும், விசிலடிப்பதும் சரியானதாக இருக்குமா? என்று யோசித்துப் பாருங்கள்.

ஒரு நல்ல மேய்ப்பன் தன்னுடைய ஜனங்களை, அதாவது அந்த சபையிலுள்ள ஜனங்களை தேவனைத் தொழுதுகொள்ள வழிநடத்தி, தேவனுடன் உள்ள உறவை வளர்க்கிற ஒரு காரியத்தை முக்கியமாக செய்ய வேண்டும். அதுதான் ஒரு போதகரின் செயல்பாடுகளில் ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் தேவனை அவர்கள் தொழுதுகொள்ள, தொழுதுகொள்ள, தங்களுடைய வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்து அவர்கள் முழுமையாக வாழ முடியும். தேவ நாமம் மகிமைப்படும், அவரின் ஆசீர்வாதமும் தங்கும். ஆகவே இந்த விதமாக ஒரு மேய்ப்பன். தன்னுடைய சபை மக்களை ஆராதிக்க நடத்துகிறான். அதோடுகூட தானும் நல்ல ஆராதனை செய்கிற தலைவனாக அவர் இருப்பார். இதை அவர் சிறப்பாக செய்ய வேண்டும். மக்களை மனதார துதிக்க வைக்க வேண்டும். அதற்குத் தேவையான இசைக்கருவிகளை பயன்படுத்திக் கொள்வதில் தவறேதும் இல்லை. அதே வேளையில் வேத வசனத்தின் அடிப்படையில் ஒருமனப்பட்டு, தேவையற்ற சிந்தனைகள் இல்லாதபடி மக்கள் ஒருமனதாய்ப் பாடி, ஆடி, துதிக்கிற ஒரு காரியத்தைச் செய்யலாம். அதை போதகன் முன்னின்று நடத்துகிறவராய் இருக்கிறார். அவருடைய செயல்பாடுகளில், ஊழியத்தில் முக்கியமான ஒன்று தேவனை தொழுதுகொள்ளுகிற தலைவனாக அவர் இருக்கிறார். மக்களை தொழுதுகொள்ள வைக்கின்ற தலைவராக இருக்கின்றார்.

5-வது காரியம் ஒரு போதகன், நிர்வாகியாக இருக்கிறார். சபை என்று எடுத்துக்கொண்டாலே பல வேலைகள் இருக்கிறது, ஊழியங்கள் இருக்கிறது.

பலதரப்பட்ட செயல்பாடுகள், நிகழ்வுகள் உள்ளதுதான் சபை. அதுவொரு ஸ்தாபனம், அதுவொரு இயக்கம். ஆகவே பல பணிபுரிகின்ற மக்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு வேலையைக் கவனிக்கிற ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆக, ஒன்றுக்கும் மேற்பட்ட ஊழியர்களை இந்த மேய்ப்பன்தான், போதகன்தான், கவனம் செய்து நேர்த்தியாக நடத்த வேண்டியது அவசியம். எல்லா ஊழியத்தையும், எல்லா ஊழியர்களையும் தொடர்புகொண்டு, தொடர்புபடுத்தி, இணைத்து, சரியான தரிசனத்தை நோக்கி சபையைக் கொண்டு செல்கின்ற நல்ல நிர்வாகத்தை இந்த போதகர், மேய்ப்பர் செய்ய வேண்டியது அவசியம். நிர்வாகம் மிகவும் முக்கியம். நமக்கென்ன? வேதம் வாசித்தோம், ஆராதனை நடத்தினோம், போதித்தோம், மீதியைக் கமிட்டி பார்த்துக்கொள்ளும் என்று போகக்கூடாது. அந்த மாதிரியான ஒரு வஞ்சனை நடந்தால், சபை வளராது. நிர்வாகம் செய்பவர் தன்னுடைய வேலையைப் பார்த்துக்கொண்டிருப்பார். ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்றால், வரக்கூடியவர்கள் வருவார்கள் என்று என்றைக்கு ஒரு நினைப்பு வந்ததோ, அன்றைக்கு சபையின் வளர்ச்சி, தரிசனம் எல்லாம் போய்விடும். இதெல்லாம் நிர்வாகியாக ஒரு போதகர் செய்யவேண்டியது அவசியம். எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து தன்னிடமிருக்கிற, சபையிலிருக்கிற அந்த ஏதுக்கள், வாய்ப்புகள், அதிலிருக்கிற வளங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து, அதை எல்லா பணியாளர்களும் ஒன்றாக அமர்ந்து, ஆலோசனை செய்து, இருக்கிற வளங்களைப் பயன்படுத்தி சபையை வளர்க்க வேண்டும். நம்முடைய தரிசனம் என்ன? அந்த தரிசனத்தை நோக்கி சரியாய்ப் போய்க்கொண்டிருக்கிறோமா? எந்த இடத்தில் நாம் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்? என்று சொல்லி அடிக்கடியாக திட்டமிட்டு, செயல்படுத்தி அதை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். ஒரு போதகர், அந்தந்த துறைகளில் திறமையான தலைவர்களை ஈடுபடுத்தி, அந்த சபையின் வளர்ச்சிக்கு அதை பயன்படுத்த வேண்டியது அவசியம். அதை மேற்ப்பார்வையிட்டு, அதை ஒழுங்குபடுத்தலாம். இவ்வாறு பல காரியங்களை செய்தால்தான் சபை வளரும். அது One man show கிடையாது. ஒரே போதகர், அவர் சொன்னதுதான் நடக்கவேண்டும் என்று வைத்தோமானால், போதகருக்கு பணியின் பளு கூடிவிடும். அவர் எல்லாவற்றையும் கவனமாக செய்ய முடியாது. அவர் தன்னுடைய பணியையே செய்கிறதில் திணறிவிடுவார் என்பதை புரிந்துகொள்ளுங்கள். எல்லாவற்றையும் ஆலோசனை செய்து, வழிகாட்டி, சபையை நடத்திச் செல்லுகிற ஒரு நிர்வாகியாகவும் இந்த போதகர் இருக்கின்றார்.

6-வது காரியம், இந்த போதகர் திட்டமிடுகிறவராக இருக்க வேண்டும். திருச்சபையானது நல்ல திட்மிடுகிற ஒரு இயக்கமாக இருக்கவேண்டியது அவசியம். லூக்கா *14:28-32* வரையான வசனங்களைப் பார்த்தீர்களானால், அங்கே இயேசு கிறிஸ்துவானவர் திட்டமிடுதலைக் குறித்து கூறுகிறதை நீங்கள் ஒருமுறை கட்டாயம் வாசித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக *30*-ம் வசனத்தில் சொல்லுகிறார் பாருங்கள்.

அதைக் கட்டி தீர்க்கிறதற்கு தனக்கு நிர்வாகம் உண்டோ? இல்லையோ? என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லும் செலவை கணக்கு பார்க்காமல் இருப்பானோ? என்று சொல்லுகிறதைக் கவனியுங்கள். ஒரு கோபுரத்தைக் கட்ட விரும்புகிற ஒருவன், அதை கட்டும் முன்னரே திட்டமிட்டு என்ன செலவாகும்? என்று திட்டமிடுகிறான். ஏனெனில் அவன் அதைக் கணக்கு பார்க்காமல், அஸ்திபாரம் போட்டுவிட்டான் என்றால், அதை முடிக்க முடியாமல் ஒருவேளை போய்விட்டால், பார்க்கிறவர்கள் எல்லோரும் அவனைக் கேலி செய்வார்கள் என்று சொல்லி, நினைவுபடுத்திவிட்டு இயேசு சொல்லுகிறார், ஆனபடியினால் கணக்கு பார்க்க வேண்டும்.

பிரியமானவர்களே, நாம் விசுவாச வாழ்வை நடத்துகிறோம், உண்மைதான், ஆனால் விசுவாசத்தின் ஆதாரமாக இருக்கிற இயேசு சொல்லித்தருகிற காரியம் என்னவென்று பாருங்கள், திட்டமிட வேண்டும். விசுவாசத்தோடு தேவன் தந்தால் எந்தவொரு காரியமாக இருந்தாலும் ஆரம்பிக்க வேண்டியதுதன். ஆனாலும் நீங்கள் நடைமுறையான காரியங்கள் சிலவற்றை எப்போதும் பார்க்கவேண்டும் என்றுதான் வேதம் போதிக்கிறது என்பதை நீங்கள் மறந்துபோகாதீர்கள். சில ஊழியர்களைப் பார்த்தால், அவர்கள் தங்களின் தகுதிக்கு மிஞ்சி அநேக காரியங்களைச் செய்து, கர்த்தர் செய்வார், செய்வார் என்று ஒரு பெரிய கடனை வாங்கி, ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டி கடனாகி, ஊழியத்தைவிட்டு சென்ற சிலரை என்னுடைய வாழ்வில் பார்த்திருக்கிறேன். எல்லோரும் அவ்வாறு போய்விடுவார்கள் என்று சொல்ல முடியாது, சோர்வுறச் செய்ய விரும்பவில்லை. ஆனால் இவ்வாறு சிலர் தோற்றுப்போனதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நிச்சயம் பார்த்திருப்பீர்கள். என் நண்பர் பழைய நாட்களில், வாலிபர் கூட்டம் நடத்தும்போது, அவ்வாறுதான் சொல்வார். ஆபிரகாமைப் பாருங்கள், அவ்வளவு வசதியாக இருந்தான். அதைமாதிரி கர்த்தர் எனக்கு பெரியதொரு புல்லட் பைக்கை தரப்போகிறார். ஏனெனில் நான் அவருடைய பிள்ளை, இராஜாதி இராஜாவின் பிள்ளை. நான் இப்படி சைக்களில் போகிறது அவருக்கு பிரியமான விஷயம் அல்ல, என்று சொல்லி, புல்லட் பைக் வாங்குவதற்கான Quotation-ஐ வாங்கி, இப்போது தந்துவிட்டார், தந்துவிட்டார் என்று ஏமாற்றமடைந்து, அவர் நடத்தின வாலிபர் கூட்டத்தில் அநேகர் அவரை கேலி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். என்ன அண்ணே! பைக்கை காணவில்லை, புல்லட் பைக் இன்னும் வரவில்லை என்று அடிக்கடி அநேகர் கேலி செய்கிறதை நான் பார்த்திருக்கிறேன். அவர் விசுவாசத்தில் பின்வாங்கிப் போய், பிறகு இப்போது மீண்டும் எப்படியோ எழும்பி ஊழியம் செய்கிறார் என்று நம்புகிறேன்.

பிரியமானவர்களே, திட்டமிட வேண்டும், நடைமுறையாகவும் கொஞ்சம் சிந்தியுங்கள். கர்த்தர் உறுதிபட சொல்வாரானால், நீங்கள் தைரியமாக அவரை நம்பி இறங்கலாம், அவர் கட்டாயம் செய்வார். ஆனாலும் செல்லும் செலவை கணக்குப் பாருங்கள் என்று அவரே அதை சொல்லும்போது, நாம் கணக்கு பார்க்க வேண்டியது, திட்டமிட வேண்டியது

அவசியம். திட்டமிடாதவர்கள் தோற்றுப்போக திட்டமிடுகிறார்கள் என்று சொல்லி ஒரு பழமொழி இருக்கிறது. நீங்கள், கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார், நாம் எதையும் திட்டமிட வேண்டியதில்லை என்று நீங்கள் திட்டமிடாமலிருந்தால், நீங்கள் தோற்றுப்போக வேண்டுமென்றே திட்டமிடுகிறீர்கள் என்று பழிமொழி சொல்லுகிறது. ஆகவே ஒரு நிர்வாகம் சிறப்பாக இருக்கவேண்டுமென்றால், ஒழுங்கான திட்டமிடுதலும், அந்த அதிகாரப் பகிர்வும் மிகவும் அவசியமான விஷயம். ஒரு காரியத்தை செய்ய வேண்டுமென்று திட்டமிட்ட பிறகு, நானே எல்லாம் செய்வேன் என்று சொல்லி, ஒரு தலைவன், ஒரு போதகன் இருக்க கூடாது. அதை மற்றவர்களோடு அந்த பணிகளை பகிர்ந்துகொடுக்க வேண்டியது அவசியம். அதை எப்படிச் செய்யப்போகிறோம் என்று திட்டமிட வேண்டியதும் அவசியம். அதற்கு என்னென்ன? வசதிகள் நம்மிடத்தில் இருக்கிறது? ஆள் பலம் எப்படியிருக்கிறது? என்றெல்லாம் சிந்திக்கிறது ஒன்றும் தவறில்லை.

குறிப்பாக, ஒரு மேய்ப்பன் தன்னுடைய திட்டங்களை சரியாக திட்டமிட வேண்டும். மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதின் அடிப்படையாக இருந்தால், அவன் செயல்மிக்க தலைவனாக இருக்கிறான். அவனுடைய செயல்பாடுகள் மிக சிறந்ததாக இருக்கும். அப்படிச் செய்வது மிக அவசியமானதாகவும் இருக்கிறது. நீங்கள் நெகேமியாவின் தலைமைத்துவ பண்புகளைப் பற்றி வேதத்தில் படித்துப் பார்ப்பீர்களானால், மிகவும் உதவியாக இருக்கும். 52 நாட்களில் மிகப்பெரிய வேலைத்திட்டம் ஒன்றை அவர் செய்து முடிக்க காரணமாய் இருந்தார். அதற்கு ஒரே காரணம் ஒழுங்கான திட்டமிடுதல், பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விஷயம். சரியான நபரைப் பார்த்து, பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும். எந்தெந்த நபர், எந்தெந்த அழைப்பை பெற்றிருக்கிறார்? மட்டுமல்ல எதிலே திறமைபெற்றவராய் இருக்கிறார்? என்று நீங்கள் அனுபவத்தில் கற்றுக் கொள்ள வேண்டும். அந்த நபருக்கு சரியான பொறுப்பை நீங்கள் பகிர்ந்து கொடுத்தீர்களானால், அவர் நேர்த்தியாக அந்த பணியைச் செய்வார். மட்டுமல்ல நான் ஏற்கனவே கூறியதுபோல, தனியொரு நபராக செயல்படுவதை நீங்கள் தவிர்க்க வேண்டும். அந்தந்த வேலைகளை செய்யக்கூடிய நபர்களின் கையில் பகிர்ந்தளிக்க வேண்டும். ஏனெனில், இது பொதுவான காரியம். மட்டுமல்ல சபை என்பது எல்லோருடைய ஈடுபாட்டையும் உள்ளடக்கியது. நீங்கள் அவர்களை ஈடுபடுத்தாமல், அலைந்து, திரிந்து நீங்களே செய்யலாம். ஆனால் அவ்வாறு செய்தீர்களானால், நாளைக்கே உங்களுக்கு ஒருவேளை தேவையென்றால், அந்த மக்கள் வரமாட்டார்கள். ஏனெனில், முக்கியமான பணிகளை செய்யும்போது, யாரையுமே ஈடுபடுத்தாமல் எல்லாக் காரியத்தையும் தன் தலைமேல் வைத்துக்கொண்டு, ஒரு போதகர் செய்வாரானால், பிறகு ஒரு பெரிய நிகழ்ச்சியை நடத்துகிறீர்கள் என்றால், அவர்களை ஈடுபடுத்த முடியாது. நீங்கள் சொன்னால், அவர்கள்: அவர் பெருமைக்கு செய்வார் என்று சொல்வார்கள். இப்போது தேவையென்று வருகிறதினால், நம்மைப் பார்த்து வருகிறார் என்பார்கள். ஆனால்

அவர்களை முக்கியமான பணிகளில் ஏற்படுத்தி, அவர்களை நீங்கள் பயன்படுத்தி வருவீர்களானால், இப்போது ஒரு பணியிருக்கிறது என்று சொன்னவுடனே அவர்கள் வருவார்கள்.

காரணம், நீங்கள் அவர்களை முக்கியமான தருணங்களிலும், அவர்களுக்கு கனம் வருகிற தருணங்களிலும் பயன்படுத்தினீர்கள். மற்ற நேரங்களிலும் சொன்னவுடன் அவர்களுக்கு கனமே வராவிட்டாலும்கூட, வெளியில் நின்று மிகக் கடுமையான வேலையை உங்களது சபைக்காக, உங்களுக்காக செய்வார்கள். எப்போதுமே இப்படிப் பழகவேண்டும். அநேகரை அழைத்து, சிறிய வேலையாக இருந்தாலும், சகோதரரே நீங்கள் அதைப் பொறுப்பெடுத்து செய்யுங்கள் என்று சொல்லி, அவர்களுக்கு ஆலோசனை கொடுத்து, நன்றாகப் பழகவேண்டும், இனிவருகிற காலங்களில் நன்றாக செய்யவேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது அவசியம். அப்.6:1-7 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். அதிலும் அதிகாரம் எவ்விதமாய் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது? மற்றவர்கள் எவ்விதமாய் தலைமைத்துவத்திற்கு கொண்டுவரப்படுகிறார்கள்? என்பதையெல்லாம் அறிந்துகொள்ளுங்கள் பிரியமானவர்களே. அதிகாரப் பகிர்வு, திட்டமிடுதல், இருக்கிற எல்லா வளங்களையும் ஒன்றுபடுத்தி, பிரித்துக்கொடுத்து பயன்படுத்துகிற பண்பு, பரந்த மனது, நல்ல குணம், அரவணைத்து பேசுகிற, அரவணைத்துப் போகிற ஒரு தாழ்ந்த சிந்தையோடு பேசுகிற ஒரு பண்பு ஒரு போதகனுக்கு இருந்தால், அவர் சாதிப்பார். இதையெல்லாம் நீங்கள் உருவாக்கிக் கொள்ளுங்கள். எல்லாம் தானாக வந்துவிடாது. நீங்கள் அதை உருவாக்கிக்கொள்ள கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

## <u>மேய்ப்பருடைய தனிப்பட்ட ஜீவியம்:</u>-

இதைத்தொடர்ந்து நாம், மேய்ப்பருடைய தனிப்பட்ட ஜீவியத்தை பார்ப்போம், அதாவது ஒரு போதகருடைய தனிப்பட்ட வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும்? என்று வேதம் என்ன சொல்லுகிறது? நடைமுறையில நாம் அதை எவ்வாறு கைக்கொள்ள முடியும்? என்றெல்லாம் நாம் இப்போது சிந்திக்க இருக்கிறோம். ஒரு மேய்ப்பு பணி ஊழியத்திற்கு வந்திருக்கிற அந்த ஊழியர் தனிப்பட்ட ஜீவியத்தைக் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ஏனெனில் நீங்கள்தான் மந்தைக்கு மாதிரி, மாடல் நீங்கள்தான். நீங்கள் எப்படி பேசுகிறீர்கள்? செயல்படுகிறீர்கள்? நடந்து கொள்கிறீர்கள்? உங்களுடைய நடை, உடை, பாவனை எப்படியிருக்கிறது? உங்களுடைய உடை உடுத்துகிற விதம்கூட மக்களைப் பாதிக்கும். அந்த சபையாரைப் பாதிக்கும். எங்கள் போதகர் இப்படியெல்லாம் போடுவாரே. நீங்கள் என்ன இப்படி அணியாதீர்கள் என்று சொல்லுகிறீர்கள்? என்று சொல்லி உங்களைத்தான் மாதிரியாக வைப்பார்கள். ஆகவே, உங்களுடைய நடை, உடை, பாவனை எப்படியிருக்கிறது? பேச்சு, செயல்பாடு, எவ்விதமாய் ஒரு காரியத்தை

அணுகுகிறீர்கள்? நீங்கள் எவ்விதம் பணிவோடு செயல்படுகிறீர்கள்? அல்லது பெருமையோடு செயல்படுகிறீர்கள்? என்பது போன்ற எல்லாவற்றையும் உங்கள் சபையில், உங்கள் ஆடுகள் கவனிக்கிறது. *1* தீமோ.*4:16*-ம் வசனத்தில் பவுல், தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கூறி வலியுறுத்துகிறதை வாசிக்க முடியும், 'உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும், உன் உபதேசத்தை கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்' என்று பவுல் அழகாக எழுதுகிறார் பாருங்கள். உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கையாக இரு என்று மட்டும் சொல்லவில்லை. உன் பிரசங்கத்தைக் குறித்தும் எச்சரிக்கையாக இரு என்றும் சொல்லவில்லை. உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் என்று இரண்டையும் சேர்த்து சொல்லுகிறதை பாருங்கள், பிரியமானவர்களே.

அதாவது, வார்த்தை பேசுவதைவிட, வாழ்க்கை பேசவேண்டும் என்று ஊழியர்கள் சொல்வார்கள். நம்முடைய வாழ்க்கைதான் பேச வேண்டும், வார்த்தை குறைவாக பேசவேண்டும், வாழ்க்கை அதிகமாய்ப் பேச வேண்டும். உங்கள் செயல்பாடுகள், நீங்கள் நடந்துகொள்ளுகிற விதங்களெல்லாம், அதிகமாய்ப் பேசவேண்டும், பிரசங்கத்தை சபையில் *1* மணிநேரம் பேசுவீர்கள், இல்லையா? ஆனால் வாழ்க்கையை எப்போதும், அதாவது *24* மணிநேரமும், அல்லது *12* மணிநேரம் என்று வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய நடவடிக்கைகளைப் பார்க்கிறார்கள். அதிகம் பேசுகிறது எது? வாழ்க்கை தான், வார்த்தைகள் அல்ல. அதனால் உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் ஜாக்கிரதையாக இருக்கும்படி, பவுல் ஆலோசனை சொல்லுகிறார். எச்சரிக்கையாக இருந்து, அதில் நிலைகொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையில், நல்ல ஒழுக்கத்தில், நாம் நிலைகொண்டு இருந்தால்தான், உறுதியாக இருந்தால்தான், அப்படியே போய்க்கொண்டு இருந்தால்தான் நம்மையும், நம்முடைய உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ள முடியும். அல்லது நம்முடைய இரட்சிப்பும் போய்விடும், உங்களுடைய உபதேசத்தை கேட்டவர்களின் இரட்சிப்பும், வாழ்வும் போய்விடும். பின்வாங்கிப்போய் விடுவார்கள். ஆம் பிரியமானவர்களே, உங்கள் வாழ்வு மற்றவர்களின் வாழ்வோடு சம்பந்தப்பட்ட வாழ்வு. உங்களுடைய வாழ்வு, கிறிஸ்துவை பிரதிபலிக்கிற வாழ்வு. அப்படிப்பட்ட அந்த சாட்சியான வாழ்க்கை உங்களுக்கு மிகவும் அவசியமானது. உங்களுடைய குடும்ப வாழ்க்கை, தனிப்பட்ட, ஆவிக்குரிய வாழ்க்கை எல்லாவற்றையுமே வேதம் முக்கியப்படுத்துகிறது. ஊழியத்தில் அது மிக மிக அவசியமானது என்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

முதலாவது ஜெப வாழ்க்கையைக் குறித்து நாம் சற்று சிந்திப்போம். ஒரு மேய்ப்பனுடைய, போதகனுடைய ஜெப வாழ்வு எப்படியிருக்க வேண்டும்? ஜெபம் என்று சொல்ல ஆரம்பித்தால், நாம் ஒரு பெரிய புத்தகமே எழுதிவிடலாம். அவ்வளவு

காரியங்கள், வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதம் அவ்வளவு தூரம் ஜெபத்தை முக்கியப்படுத்துகிறது. ஆனால் ஒன்றை இந்த இடத்தில் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஜெபமே, ஜெயம் என்று சொல்லி, ஜெபத்தை முக்கியப்படுத்தி விட்டு, இயேசுவை விட்டுவிடக் கூடாது. இன்றைக்கு நிறையபேர் ஜெபிக்கிறார்கள். ஆனால் ஜெபத்தின் நாயகர், அல்லது ஜெபத்தைக் கேட்கிறவராகிய கர்த்தரை விட்டுவிட்டு, தங்கள் ஜெபத்தை முக்கியப்படுத்துகிற இடத்திலிருக்கிறார்கள். நான் ஜெபம் செய்து விட்டேன், கர்த்தர் பதிலைக் கொடுத்து விடுவார் என்பதை, கர்த்தர் கிருபையாய் பதில் தரவேண்டுமென்று எதிர்பாராமல், நான் உபவாசித்தேன், ஜெபம் செய்துவிட்டேன், நான் செயல்பட்டுவிட்டேன், என்னுடைய செயல்பாட்டுக்கு அவர் உறுதியாக பதில் தந்துவிட வேண்டும் என்று சொல்லி, சிலர் தவறாக நினைக்கிறார்கள் என்று கூறவிரும்புகிறேன். நீங்கள் உங்களுடைய விசுவாசத்தில் அதிகமாக ஜெபம் செய்யவேண்டும். உண்மைதான், ஆனால் உங்களுடைய ஜெபத்தை கட்டாயமாய் கேட்கவேண்டும் என்றெல்லாம் கர்த்தருக்கு கட்டாயமில்லை. அப்படியென்றால், என்ன அர்த்தம்? கிருபையாய் கேட்கிறார் என்று எப்பொழுதும் நினையுங்கள். என்னுடைய ஜெபத்தால் எல்லாவற்றையும் செய்துவிடலாம் என்று எண்ணாதிருங்கள். அப்படியென்றால், கர்த்தரே தேவையில்லையே, கர்த்தருடைய சித்தம் என்று ஒன்றும் இல்லையே. நீங்களே நினைத்து, முடிவுபண்ணி, உபவாசம் செய்து, ஜெபத்தை நடத்தி விடுவீர்களானால், தேவ சித்தம் என்று ஒன்று இருக்க முடியாதே. சற்று யோசித்துப் பாருங்கள். நான் சொல்லுகிறதை மனம் திறந்து கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், அது புரியாது. தவறான உபதேசத்தை சொல்வதுபோல் உங்களுக்கு தோன்றும்.

உதாரணமாக, உங்களை கர்த்தர் ஆப்பிரிக்க தேசத்திற்கு மிஷனெரியாக அனுப்புவதற்கு விரும்புகிறார் என்று? வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் 40 நாட்கள் உபவாசமிருந்து விடாப்பிடியாய் ஜெபம் செய்கிறீர்கள், கர்த்தாவே இந்த ஊரிலேயே என்னை வையும். நான் இங்கிருந்தே சிறப்பான ஊழியத்தை, நீர் விரும்புகிறதைச் செய்வேன், செய்யப்போகிறேன், நீர் அதைக் கட்டாயமாகத் தர வேண்டும். யாக்கோபைப்போல போராடி ஜெபிக்கிறேன், நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய விடவே மாட்டேன் என்று ஜெபம் செய்கிறீர்கள் என்று வையுங்கள். கர்த்தரும் அதைக்கேட்டு மயங்கி, என் பிள்ளை போராடி ஜெபம் செய்கிறான் என்று ஆப்பிரிக்க தேசத்திற்கு போகிறதை நிறுத்திவைத்து விட்டு, உங்களை இந்த ஊரிலேயே வைத்து விடுவாரா? அப்படி வைப்பார் என்றால், இயேசு பெரியவரா? அல்லது உங்களது ஜெபம் பெரியதா? தேவ சித்தம் முக்கியமா? அல்லது உங்களுடைய சித்தம் முக்கியமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், தேவன் ஒரு திட்டத்தை உங்களுக்காக வைத்திருக்கிறார். அதனால்தான் சீஷர்கள் ஜெபம் செய்வார்கள், கர்த்தாவே எங்கே நீர் போகச் சொன்னாலும், போவேன், என்ன செய்யச் சொன்னாலும், செய்வேன் என்று சீஷன் ஜெபம் செய்வான். விசுவாசி

எப்படி ஜெபம் செய்வானென்றால், ஆண்டவரே அதெல்லாம் எனக்குத் தெரியாது, நான் நினைக்கிறதை நடப்பித்து தாரும் ஆண்டவரே. என் பிள்ளை வெளிநாட்டுக்கு போகவேண்டும், அவனை அனுப்பித் தீரும் ஆண்டவரே, என்ன செய்வீரோ, எனக்குத் தெரியாது என்று ஜெபிக்கிறவனின் பெயர் விசுவாசி என்பதாகும்.

அவ்வாறு நாம் நம் இஷ்டப்படி ஜெபம் செய்து, நமது விருப்பத்தை நிறைவேற்றுவோமானால், நாம் தேவ திட்டத்தை நிறைவேற்ற முடியாது. நம்முடைய அறிவு குறைவுள்ளது. நம்முடைய ஞானம் குறைவுள்ளது. நாமாய் தெரிந்தெடுத்து, தெரிந்தெடுத்து இதுதான் சரியென்று சொல்லி, முடிவு செய்து வாழ முடியாது. அப்படி வாழ்ந்த மக்கள் சிலர் தவறு செய்து வீழ்ந்துபோனதை, நாம் வேதத்திலேயும் வாசித்துப் பார்க்கிறோம். அநேகருடைய வாழ்விலும் பார்க்கிறோம். யோனாவின் முடிவைப் பாருங்கள், அவராய் முடிவு செய்து, அவராய் செயல்படும்போது, தேவன் அதை அனுமதித்தாரா? பிரியமானவர்களே, நமக்கு 1000 விருப்பங்கள் இருக்கும். ஆனால், கர்த்தாவே நீங்கள் என்ன விரும்புகிறீரோ, உம்முடைய சித்தம், என்னவோ அதைச் செய்வது எனது பாக்கியம். வேதாகமக் கல்லூரியில் பயிலுகின்ற நீங்கள் இப்படிப்பட்ட நல்ல அருமையான ஜெப வாழ்வை உடையவர்களாக இருங்கள், ஜெபம் முக்கியம். அப்போஸ்தலர்களும் ஜெபத்தை தங்களுடைய வாழ்வில், ஊழியத்தில் முக்கியமான இடத்தில் வைத்திருந்தார்கள். உதாரணமாக, அப்.6:4-ம் வசனம், 'நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும், தேவ வசனத்தை போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்' என்று அப்போஸ்தலர்கள் சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம். ஆக, எங்களுக்கு மற்ற பணிகளைவிட, ஜெபம் செய்கிறது, வேத வசனத்தைப் போதிக்கிறது, தியானம் செய்கிறது, இதுதான் எங்களுக்கு முக்கியமான காரியம் என்று அவர்கள் சொன்னார்கள். ஜெபம் செய்வதை முதலிடத்தில் வைத்தார்கள். வேத வசனத்தின் அடிப்படையில் ஜெபம் முக்கியம், அந்த ஜெபத்தை முக்கியப்படுத்தி செய்கிற நல்ல ஊழியக்காரனாய், போதகனாய், அப்போஸ்தலனாய் நீங்கள் இருக்கவேண்டும். ஏனெனில் அப்போஸ்தலர்கள் அப்படித்தான் செய்தார்கள். நம்முடைய குருவாகிய இயேசுகிறிஸ்துவும் அதைத்தான் செய்து காண்பித்தார், இரவு பகலாக அவர் ஜெபித்ததை நாம் அறிவோம்.

அநேக ஊழியர்கள் இதை மறந்துபோனார்கள் என்றுதான் வருத்தமாக சொல்லவேண்டியிருக்கிறது. ஊழியத்தைப் பெருக்கிவிட்டு, ஜெபத்தை குறுக்கிவிட்டார்கள். அலட்சியப்படுத்துகிறார்கள். அதெல்லாம்தான் கர்த்தருக்கு தெரியுமே. நீங்கள் சில முழுநேர ஊழியர்களைக் கேட்டீர்களானால், ஐயா, நீங்கள் இன்றைக்கு 1 மணிநேரமாவது ஜெபித்தீர்களா? என்றால் அதுகூட இல்லாதபடியான ஊழியர்கள் இருக்கிறார்கள். அது தவறு பிரியமானவர்களே, ஜெபம்பண்ண வேண்டும், நினைக்கும்போதெல்லாம் ஜெபம் செய்ய வேண்டும். 1 மணிநேரமாவது தனியாய், முழங்கால்படியிட்டு, வேதம் வாசித்து,

ஜெப நேரம் என்று ஒன்றை வைத்திருக்க வேண்டியது அவசியம். எப்போதும் ஜெபம் செய்கிறோம் என்பதற்காக 1 மணிநேர, ஜெபநேரத்தை, தியான வேளையை விட்டுவிடக்கூடாது. பிரியமானவர்களே, அவ்விதமாக ஒரு பக்தன் கூறுகிறதைப் பாருங்கள். தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பது. இலகுவான பணி, ஆனால், ½ மணி நேரமாவது ஜனங்களுக்காக, மற்றவர்களுக்காக, ஊழியத்திற்காக, ஜெபிப்பது கடினமாக இருக்கிறது என்று அவர் கூறுகின்றார். நம்முடைய ஊழியங்களைப் பொறுத்தவரை, நம்மைப் பொறுத்தவரை, இதை மறுக்கவே முடியாது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். ஆம், இன்றைக்கு அநேகர் ஜெபம் செய்கிறதை அவ்வளவாக முக்கியமான இடத்தில் வைக்கிறதில்லை. மற்றவர்களைச் ஜெபம் செய்யச் சொல்வார்கள், ஆனால் அவர்கள் ஜெபம் செய்ய மாட்டார்கள். ஒரு ஆராதனை நடத்தும்போது, அதிக நேரம் ஜெபம் செய்வார், தனியாக ஜெபம் செய்ய சில ஊழியர்கள் நேரம் கொடுப்பதில்லை என்ற கருத்தையும், இந்த இடத்தில் நான் பதிவிடுகிறேன்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் ஜெபிப்பதின் அவசியத்தை அவர் அதிகமாய் வலியுறுத்தி காண்பிக்கிறதை நாம் வேதத்தில் பார்க்க முடியும். அவர் எடுத்துக்காட்டாய் செய்து காண்பித்திருக்கிறார். தேவகுமாரனாகிய அவர் ஜெபம் செய்ய வேண்டும் என்றதொரு அவசியமில்லை. அவர் தேவனுடைய அவதாரமாக, தேவனாகயிருந்த அவர், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் 2-ம் நபராகிய இயேசுகிறிஸ்து, அவர் கட்டாயம் ஜெபம் செய்துதான் காரியங்களை செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் உங்களுக்காக, எனக்காக, அதைச் செய்து காண்பித்தார். அப்போஸ்தலர்களைத் தெரிவு செய்யும்போதும் ஜெபித்தார். லூக்கா 6:12-16 வரையான வசனங்களை வாசித்துப் பாருங்கள். சுருக்கமாக சொல்லவேண்டுமானால், அவருடைய அந்த ஆரம்ப காலத்திலிருந்து, சிலுவை அதாவது, மரணபரியந்தம் அவர் ஜெபத்தில் நிலைத்திருந்து நமக்கு முன்மாதிரியைக் காண்பித்திருக்கிறார். ***ஸ்மித் விக்கிள்ஸ் வொர்த்*** என்ற பக்தன் சொல்லும்போது, 'நான் என்னை ஜெபத்தில் குளிப்பாட்டுகிறேன்' என்று சொல்லுகிறார். அதாவது, ஜெபத்தில் நான் மூழ்கிப்போயிருக்கிறேன் என்பதுதான் அதற்கு அர்த்தம். அதிலே குளித்துக்கொண்டிருக்கிறார், என்ன சந்தோஷம் பாருங்கள். ஆக, இது உங்களுடைய சந்தோஷமாக, வாழ்க்கையாக மாறவேண்டும். ஜெபம்தான், எப்போது பார்த்தாலும் ஜெபம்தான். நின்றுகொண்டிருக்கும்போது, நடக்கும்போது, பயணம் செய்யும்போது, உங்களுடைய வாய் ஜெபம் செய்துகொண்டே இருக்கவேண்டும். எதெல்லாம் நினைவுக்கு வருகிறதோ, அவற்றுக்கெல்லாம் துதிக்கும்போது, மிகுந்த சந்தோஷம் உண்டாகும். கர்த்தாவே நீர் செய்கிற நன்மைகளுக்காய் நன்றியென்று சொல்லி தேவனைத் துதிக்கிற அனுபவம் ஒரு நல்ல மேய்ப்பனுக்கு அவசியம். அந்த அனுபவம் அநேக ஆத்துமாக்களை அவருடைய சபைக்கு கொண்டு வரும். உங்களுடைய சிந்தனைகளுக்காக சில கேள்விகளை இங்கு வைக்கிறேன். உங்களை நீங்களே கேட்டு

ஆராய்ந்து வளருங்கள். நான் ஜெபிப்பதற்கு எவ்வளவுநேரம் ஒதுக்குகிறேன்? ஏனையோருக்காக, குறிப்பாக எனக்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள ஜனங்களுக்காக, சபையாருக்காக பரிந்து மன்றாடுகிறேனா? அதைப்போல பிரசங்கத்தை ஆயத்தப்படுத்தும்போதும், பிரசங்கிக்கும் முன்னரும், பிரசங்கித்த பின்னரும், நான் எவ்வளவுநேரம் ஜெபிக்கிறேன்? இவற்றையெல்லாம் உங்கள் மனதில் அடிக்கடியாய் கேட்டுப் பாருங்கள் பிரியமானவர்களே. உங்களுடைய வாழ்வில் ஜெபம், ஜெபம், ஜெபம் என்பது மிகவும் முக்கியம். அதற்காக உங்கள் ஜெபத்தை மட்டும் நம்பாதீர்கள். ஜெபத்தைக் கேட்கிறவரை முற்றிலும் நம்புங்கள். ஆண்டவரே நான் எத்தனைதான் ஜெபம் செய்தாலும், எவ்வளவுநேரம் ஜெபம் செய்தாலும், எனக்கு நீர்தான் முக்கியம். நீர்தான் பதில் தரப்போகிறீர், உமது கிருபையை நம்பி ஜெபிக்கிறேன், நான் விரும்புகிறேன் என்று எதையும் தந்துவிடாதிரும். நீங்கள் விரும்புகிறதை செய்வதற்கு எனக்கு கிருபை தாரும் என்று ஜெபித்துக் கொள்ளுங்கள்.

அடுத்து, **தியான வாழ்வைக் குறித்து ஒருசில காரியங்களை கற்றுக்கொள்வோம்.** இது உங்களுக்கு அதிகமாக தெரிந்த விஷயம்தான். ஆனாலும், ஒரு மேய்ப்பன், போதகன், ஊழியன் என்ற விதத்தில், வேதத்தைக் குறித்து அல்லது தியான வேளையைக் குறித்து அறிந்துகொள்வது அவசியம். தேவனோடு நமது தனிப்பட்ட வாழ்வு நெருங்கியதாக இருக்கவேண்டும், அதைக் காத்துக்கொள்ள வேண்டும். தேவனோடு தனிப்பட்ட விதத்தில் ஐக்கியம் கொள்வது எப்படி? வேதம் வாசிப்பது, தனியாக உட்கார்ந்து கதவைப் பூட்டிக்கொண்டு, நீங்களும், இயேசுவும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியான தேவனாகிய, திரியேக தேவன் இருக்கிறார் என்ற எண்ணத்தோடு, நீங்கள் தனிப்பட்ட வேளையில், தனிப்பட்ட முறையில், தேவனோடு பேசுதல் அல்லது இணைதல்தான் தனிப்பட்ட உறவு என்பதாகும். தேவனோடான தனிப்பட்ட உறவு, வேதம் வாசிப்பதில் இருக்கிறது, துதியில் இருக்கிறது, ஜெபத்தில் இருக்கிறது. நான்குபேர் மத்தியில் இருக்கும்போது, ஜெபத்தை நன்றாக செய்வீர்கள், அதுவும் போதகர்களுக்கு சொல்லவே வேண்டாம். அநேகர் வந்தால், அதிலேயொரு சந்தோஷம். அதுவொரு தவறான விஷயம் அல்ல. ஆனால், இந்த தியான வாழ்வும், தனி ஜெபமும், தனிப்பட்ட முறையில் தேவனோடிருக்கிற உறவும்தான், உங்களை அதிகமாக பெலப்படுத்தி, ஆத்துமாக்களை வளரச்செய்யும், பெருகச் செய்யும், எல்லாமே நடக்கும்.

இதை நீங்கள், நாளுக்குநாள் பெருக்கிக்கொண்டே போகவேண்டும். குறுகிக்கொண்டே போகக்கூடாது. ஜெப நேரம் பெருகவேண்டும். வேதத்தை வாசிக்கிற நேரம் பெருக வேண்டும். இது வாழ்க்கையில் முன்னுரிமை கொடுக்க வேண்டிய ஒன்று, குறிப்பாக மேய்ப்பன், போதகன், ஊழியனாயிருக்கிற ஒருவர் கொடுக்க வேண்டிய முக்கியமான விஷயத்தில் இதுவும் ஒன்று. தேவனோடு நமக்கிருக்கிற உறவுதான், நம்மை

விசுவாசத்தில் திடமாய் வைக்கும், பெலனாய் வைக்கும், அந்த விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக் காக்கும், சபைக்கு வருகிற ஆத்துமாக்களையும் பெலப்படுத்திக்கொண்டு வரும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தேவனோடிருக்கிற உறவை நாம் எவ்விதம் அளக்கலாம் என்றால், தேவன் நம்முடைய ஊழியங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிறதில்லை. நம்முடைய தனிப்பட்ட வாழ்வின் தரத்தையே எதிர்பார்க்கிறார் என்பதை நீங்கள் உணரவேண்டும். நிறையபேர் பொதுவாக நினைக்கிற விஷயம் என்னவென்றால், எண்ணிக்கையைப் பெருக்கவேண்டும், அநேகர் பலனடையவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அது சபையாக இருந்தாலும், ஒரு கூடுகையாக இருந்தாலும் நிறையபேர் வரவேண்டும் என்பதை மட்டுமே நாம் அனைவரும் முக்கியப்படுத்துகிறோமேயொழிய, நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் தரம் இருக்க வேண்டும் என்று கருதுவதில்லை. Quality of our life என்பது இருக்கவேண்டுமென்று ஆர்வம் காட்டவேண்டும். நாம் என்ன நினைக்கிறோம் என்றால், நாம் நம்முடைய பணியின் பெருக்கத்தை அல்லது சேவையில் அதிகமான மதிப்பை எதிர்பார்க்கிறோம். எவ்வளவு ஊழியம் செய்கிறேன்? எவ்வளவு ஆத்துமாக்களைக் கொண்டுவருகிறேன்? என்பதுதான் அநேகருடைய முக்கியமான காரியமாக இருக்கிறது. ஆனால் தரம் மிகவும் முக்கியம். தனிப்பட்ட விதத்தில் தேவனோடிருக்கிற உறவு நன்றாக இருந்தால்தான், தரம் நன்றாக இருக்கும் பிரியமானவர்களே.

ஆவிக்குரிய வாழ்வை நாம் காத்து நடப்பித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய கிறிஸ்தவ குணாதிசயங்கள், ஆவிக்குரிய ரீதியில், வேதத்தின் அடிப்படையில், ஆவிக்குரிய கனிகளெல்லாம் நாளுக்குநாள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றால், தியான வாழ்வு அதிகமாய் இருக்கவேண்டியது அவசியம். வேதத்தை வாசித்து, தியானித்து, அதற்கு அர்ப்பணித்து ஜெபிக்கிற ஜெபத்தில்தான் உங்களுடைய வாழ்வின் தரம் இருக்கும். *யோவான் 15-ம் அதிகாரம், 2 பேதுரு 1-ம் அதிகாரம்* போன்ற அதிகாரங்களை வாசித்து, தியானிப்பீர்களானால், மிகவும் உதவியாக இருக்கும் பிரியமானவர்களே.

அடுத்து, மேய்ப்பன் தன்னை எவ்விதமாக அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லி பார்க்கப் போகிறோம். அதாவது, மேய்ப்பன் சபையை மேய்க்கிற பொறுப்பிலிருக்கிறார். சகல சத்தியங்களை கற்றுக்கொடுக்கிற, பிரசங்கிக்கிற, மேய்க்கிற இடத்தில் இருக்கிறார். உண்மைதான், ஆனாலும் அதேவேளையில் அவர் அந்த ஆவிக்குரிய ஆகாரத்தைக் கொடுப்பதற்கு, போதகர் அதிகமான அளவில் வேதத்தைக் கற்பதோடு, பல விதங்களில் அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு தேவையான அறிவையும், ஞானத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனெனில் ஜனங்களின் தேவைகள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டு போகிறது. சவால்கள் காலகட்டத்திற்கு ஏற்ப, அநேக விதங்களில்

மாறிக்கொண்டு வருகிறது. அந்த பழைய காலகட்டத்திலேயே ஒரு போதகர் இருந்துகொண்டிருக்ககூடாது. நான் அன்று இரட்சிக்கப்பட்டேன், நான் அன்றைக்கு வேதத்தைக் கற்றேன், இன்று எனக்கு நேரமேயில்லை என்று சொல்லுகிற ஒரு இடத்தில், ஒரு மேய்ப்பனோ, போதகனோ இருக்க கூடாது. பிரியமானவர்களே, அவர் தன்னை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியது அவசியம். உலகப்பிரகாரமான ஆசிரியப் பணியைக்கூட எடுத்துக்கொள்ளுங்களேன். ஆசிரியர்களாய்ப் பணிபுரிகிறவர்கள், அவர்கள் இன்றுவரையுள்ள ஞானத்தில், தகவல்களில் வளர்ந்தால்தான், இன்றைய மாணவ, மாணவியருக்கு சொல்லிக்கொடுக்க முடியும் என்பதை அரசு அறிந்து, அவர்களுக்கு அடிக்கடியாக, அபிவிருத்தி திட்டத்தை அல்லது வகுப்புகளை நடத்தி, அவர்களை இன்றைய காலகட்டத்திற்கேற்ப உருவாக்குகிறார்கள். ஆனால் நமக்கு அவ்வாறு எல்லாம் இல்லை. ஒரு ஒழுங்கான, முறைப்படியான, இந்தவிதமான அமைப்புகள் எல்லாம் இல்லாததினால், சுயாதீன ஊழியர்கள் மற்றும் சுயாதீன சுவிசேஷகர்கள் தங்கள் இஷ்டம்போல அல்லது தங்களுக்கு தெரிந்த வழக்கத்தின்படியே ஊழியத்தை செய்துகொண்டிருக்கிறார்களேயொழிய, இந்த காலகட்டத்திற்கு ஏற்ப தங்களை அவர்கள் அபிவிருத்தி செய்துகொள்வதில்லை என்பதுதான் ஒரு வருத்தமான விஷயம் பிரியமானவர்களே. ஆகவே, அபிவிருத்தி செய்துகொள்ள அவர் தன்னை அர்ப்பணிக்க வேண்டும். இந்த காலகட்டத்துக்கேற்ப அவர் தன் ஊழியத்தை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டியது அவசியம். விசில், ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் போன்றவைகளைப் பற்றி இங்கு சொல்லவில்லை. இந்த காலகட்டத்திற்கு ஏற்ப, அந்த வாலிப சகோதர, சகோதரிகளுக்கு, அந்த அறிவு வளர்ச்சிக்கேற்ப ஒருவர் போதக ஊழியம் செய்ய வேண்டியது அவசியம்.

உதாரணமாக, சபையில் நிறைய வாலிப தம்பி, தங்கைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு ஆன்லைன் சம்பந்தமான அறிவு அதிகமாக இருக்கிறது. ஆன்லைன், வாட்ஸ்அப், பேஸ்புக் போன்ற எல்லாம் அவர்களுக்கு தெரியும். ஆகவே நீங்கள் நன்றாக அவர்களுக்கு புரியும்வண்ணமாக, அவர்களைக் கவரும் வண்ணமாய் பிரசங்கிக்கவில்லை என்றால், அவர்கள் பின்னால் உட்கார்ந்துகொண்டு, அவர்களின் இஷ்டம்போல், வாட்ஸ்அப்பில் தகவல்களை போட்டுக்கொண்டே இருப்பார்கள். உங்களின் பிரசங்கத்திற்கோ, உங்களின் ஊழியத்திற்கோ, வேறு யாரும் போட்டியாக இருக்கிறார்கள் என்று நினைக்காதீர்கள். இப்பொழுதுள்ள தொழில் நுட்ப வளர்ச்சியே போட்டியாய், பொறாமையாய் வளர்ந்து வந்துகொண்டிருக்கிறது. நீங்கள் சரியாக செய்யவில்லை என்றால், அவர்களின் கவனத்தைப் பிடிக்கவில்லையென்றால், வாட்ஸ்அப் அவர்களை பிடித்துக்கொண்டு போய்விடும். அவர்கள் சபையில் இருந்தாலும், பேஸ்புக் மூலமாக அவர், நான் அங்கே வருகிறேன் அல்லது இங்கே வருகிறேன் என்று சார்ட் செய்துகொண்டு, தகவல்களைப் பரிமாறிக்கொண்டிருப்பார்கள்.

ஆகவே, அவர்களுக்கேற்ப நகைச்சுவையாக, உயிரோட்டமாக, நேரடியாய்ப் பேசுகிற ஒரு ஊழியத்தை, அவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வைக் கொடுக்கிற அளவுக்கு உங்களுடைய அறிவும், போதனையும், பிரசங்கமும் இருக்கவேண்டியது அவசியம். பிரசங்கம் வேறு, போதனை வேறு, சத்தியங்களை விளங்கப்பண்ணுகிறது போதனைகள்தான். பிரசங்கம் என்பது அதே மாதிரிதான் இருக்கும். ஆனால் பெரும்பாலும் மற்றவர்களைத் தேற்றுகிறதாக, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காரியத்தை, ஓரளவு விளக்கப்படுத்துவதுபோல இருந்தாலும், போதனைபோல் இருக்காது. ஆகவே பிரசங்கம், மற்றும் போதனை என்று வித்தியாசப்படுத்தி கற்றுக்கொடுக்கிறோம். போதகருக்கு பிரசங்கிக்கவும் தெரிய வேண்டும், போதிக்கவும் தெரியவேண்டும். போதனை என்று வரும்போது, அதில் உபதேசங்கள் வரும். Doctrines (கோட்பாடுகள்), உதாரணமாக, மறுபடிப்பிறத்தலைக் குறித்து ஒரு உபதேசம் சொல்ல வேண்டியிருக்குமானால், அதை ஆழமாக ஆரம்பத்திலிருந்து போதிக்க வேண்டியது அவசியம். மனிதனைப் பற்றிய உபதேசம், இரட்சிப்பை பற்றிய உபதேசம், பாவத்தைப் பற்றிய உபதேசம் போன்ற பல உபதேசங்களை நாம் வேதாகமக் கல்லூரியில் கற்றுக் கொடுக்கிறோம். அந்த மாதிரியான உபதேசங்களை நாம் எப்படி சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பதை ஒரு போதகர் நன்றாக அறிந்திருக்க வேண்டும். அந்த போதனை அதிகமாக இருக்கிற ஒரு சபையில்தான் மக்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் அபரிவிதமாக பெருகுவார்கள். வெறும் பிரசங்கம் மட்டுமிருக்கிற சபையில் மக்கள் விசுவாசத்தில் மட்டும் வளர்வார்கள், ஆறுதலில் வேண்டுமானால், அவர்கள் பெருகக் கூடும்.

ஆனால் போதனையைக் கொடுக்க, கொடுக்கத்தான், அவர்கள் சத்தியத்தில் வளர்வார்கள். உண்மையான விசுவாசத்தில், இயேசு எதிர்பார்க்கிற விசுவாசத்தில் வளருவார்கள், அப்பொழுதுதான் அவர்கள் ஊழியம் செய்கிறவர்களாய் இருப்பார்கள். அவரின் சீஷர்களாயும் மாறுவார்கள், இல்லையென்றால், விசுவாசிகளாய் மட்டும்தான் இருப்பார்கள். பிரசங்கமானது, வெறும் பிரசங்கமாய் மட்டும் இருக்குமானால், அவர்கள் விசுவாசிகளாய் இருப்பார்கள், ஆனால் சீஷர்களாய் மாறமாட்டார்கள். ஆனால், இயேசு சீஷர்களாய் மாற்றுங்கள் என்றுதான் கூறினார். ஆனால் அவ்வாறான ஒரு கூட்டம், விசுவாசிகளாக மட்டும் இருக்கிறார்கள். அவர்கள் கேட்பதெல்லாம், ஆண்டவரே, நீர் எங்களுடைய தகப்பன், நான் இயேசுவின் பிள்ளை, சாதாரணமாக, நான் ஒரு ஏழையாய் இருக்க முடியாது. ஒரு சிறிய காரில் எல்லாம் போக முடியாது. நான் இயேசு இராஜாவின் பிள்ளை என்று விசுவாசிக்கத்தான் பழகியிருக்கிறார்களேயொழிய, இயேசுவுக்காய் தியாகமாய் வாழ்கிற சீஷத்துவத்தில் வளரவில்லை. அவ்வாறு வளர்க்கவும், சபைகள் பிரயாசப்படவில்லை. அதைச் சொன்னால் எங்கே கேட்பார்கள் என்கிறார்கள், இல்லை பிரியமானவர்களே, அவர்கள் கேட்கிற விதமாக பிரசங்க கலையை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மற்ற காரியங்களில் உதவிசெய்து, அன்பை பெற்றுக்கொள்ள

வேண்டும். ஆலோசனை கொடுத்து, அவர்கள்மீது நீங்கள் காண்பிக்கிற அந்த அன்பிற்காகவே, சரி போதகர் ஏதோ சொல்லுகிறார், கேட்போம் என்று கேட்டு, பின்பு ஆண்டவருக்கு அர்ப்பணித்து விட்டார்கள் என்றால், ஆவியானவரின் போதனைகளில் அற்புதமாக வளர்த்துத் தருவார்.

இயேசுகிறிஸ்துவின் போதனைகளைக் கேட்ட ஜனங்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள் என்று நாம் வேதத்தில் வாசித்துப் பார்க்கிறோம். காரணம், அவரின் போதனைகளிலிருந்த அதிகாரம். மக்கள் அதை, எளிதாக புரிந்துகொண்ட விதம், போன்றவற்றை வைத்து, நாம் சொல்லலாம். அதனால்தான் அவர்கள் அவரின் போதனையைக் கேட்டு ஆச்சரியமடைந்தார்கள். புரிந்தால்தானே ஆச்சயரியமடைவார்கள். இன்றைக்கு சிலர், பிரசங்கிக்கிற காரியங்கள், மக்களுக்கு புரியவே இல்லை, ஏதோ ஆணித்தரமாக சொல்லுகிறார்களேயொழிய, அதிலுள்ள கருத்துக்கள் அவர்களைச் சென்றடையவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்து எளிமையாக போதித்தார் பாருங்கள். அதே வேளையில் எளிதாகவும் விளக்கம் செய்தார். அவரிடம் கேட்கப்பட்ட பலதரப்பட்ட கேள்விகளுக்கு ஏற்ற பதிலைக் கொடுத்தார் என்பதையும், நீங்கள் கவனியுங்கள். வேத அறிவு இயேசுவுக்கு இருக்கும், தானாகவே இருக்கும். அவ்வாறு இருந்து, அவர் சொன்ன பதில்களையெல்லாம் நாம் படித்துப் பார்க்க முடியும், அல்லவா? எனவே, ஞானம் தேவை. வேதத்தைக்குறித்த முழுமையான ஞானம் தேவை, அதுவும் போதகருக்கு, மேய்ப்பனுக்கு மிக மிக அவசியம்.

ஒரு சபைக்கு நான் சென்றிருந்தேன். அந்த போதகர் வயதான ஒருவராக இருந்தார். அவருக்கு பிரசங்கமே செய்யத் தெரியவில்லை, அவருக்கு படிப்பறிவும் இல்லை. அவர் அடிக்கடி வெளியிலிருந்துதான் போதகர்களை அழைத்து பேச செய்வார். மக்கள் சரியான ஒரு விசுவாசத்தில் வளராமல், என்ன சொல்ல வருகிறார் என்றே தெரியாமல், வருவார்கள், ஆராதிப்பார்கள், ஜெபம் செய்வார்கள், அவர் ஜெபித்தால், அற்புதம் நடக்கும், அவ்வளவுதான், சுகமான பின்பு போய்க்கொண்டே இருப்பார்கள். சத்தியத்தைப் பற்றி கவலையேபடாமலிருந்த அந்த சபை மக்களைப் பார்த்து நான் மிக மிக வருத்தமுற்றேன். பிரியமானவர்களே, இன்று அவ்வாறுதான் சபை என்றால், சபை தானே, ஏழை மக்கள்தானே. ஏதோவொரு செய்தியைக் கொடுத்துவிட்டு வாருங்கள் என்று செய்தியை அல்லது சத்தியத்தை இரண்டாம் இடத்தில் வைத்திருக்கிறார்கள். ஒரு பள்ளிக்கூடத்தில் அவ்வாறு நடத்தினால், அந்த பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைச் சேர்ப்பார்களா? எவ்வளவு தரமானதாக இருக்கிறது? என்றுதான் பார்க்கிறார்கள். ஆனால், சபை என்று வந்தால், அதைக் கட்டுகிற விதத்தை எடுத்துக்கொண்டால், புறம்போக்கு இடத்தில், சபையைக் கட்டுகிறார்கள். மக்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள், ஆனால் இவர்கள் சபைதானே, புறம்போக்கு நிலத்தில் கட்டினால் போதும் என்கிறார்கள்.

பிரியமானவர்களே, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிற, திரியேக தேவன் வாசம் பண்ணுகிற இடம் புறம்போக்கா? கொஞ்சம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நீங்கள் தேவனை முக்கியப்படுத்திப் பாருங்கள், அவர் உங்களை முக்கியப்படுத்துகிறதைப் பார்க்க முடியும். ஒரு ஊழியர் என்பவர் ஊழியத்தை முக்கியமானதாகக் கருத வேண்டும். சபையை முக்கியமானதாகக் கருதவேண்டும். அதை நேசிக்கிற நேரம் அதிகமாக இருக்கவேண்டும். சரீரமாகிய சபை, அது இயேசுகிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், பிதாவானவர் வாசம் செய்கிற இடம். மக்கள் சந்தாஷமாக இருந்து ஆராதிக்கிறபடியினால், அதற்கேற்ற வசதியோடு சபையைக் கட்டவேண்டும் என்று நாம் நினைக்க வேண்டும். நன்றாக கட்டவேண்டுமென்று விரும்பவேண்டும். அதைப்போல இயேசுகிறிஸ்துவிடம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், அவர் எவ்வளவு ஆச்சரியமாக பதில் கொடுத்தார் என்பதை கவனியுங்கள். இராயனுக்கு கொடுக்க வேண்டியதை குறித்த விளக்கம், அதாவது இராயனுடையதை, இராயனுக்கு கொடு என்று விளக்கப்படுத்தினார், அல்லவா? அதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உயிர்த்தெழுதலைக் குறித்து சதுசேயர்கள் கேட்ட கேள்விகளுக்கு, அவர் எவ்வளவு சரியான பதிலைக்கொடுத்து நடத்தினார் பாருங்கள். அவர்களின் வாயை அடைத்தார், மட்டுமல்லாமல் அதை சரியாக புரிந்துகொள்ளாமல் இருக்க முடியாது. அந்தளவுக்கு சரியாக அதை விளக்கப்படுத்தினார்.

அதைப்போல அப். பவுலின் போதனைகளைக் கொஞ்சம் பாருங்கள். எவ்வளவு விஷயங்களை அவர் வலியுறுத்திக் கூறினார் பாருங்கள். கிறிஸ்துவுக்கு அடுத்து, இயேசுகிறிஸ்துவின் அனைத்து காரியங்களையும் நமக்கு நடைமுறையாகச் சொன்னவர் அப். பவுல்தான். புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு அடிப்படை, பவுலின் உபதேசங்கள்தான். எவ்வளவு காரியங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறார். இன்று அநேகருக்கு பவுலின் நிருபங்கள் புரிகிறதே இல்லை. ரோமருக்கு எழுதின நிருபத்தை, அநேகருக்கு வாசித்து அர்த்தம் கொள்ளவே தெரியவில்லை. எபேசியர், கலாத்தியர் நிருபம், அதிலெல்லாம் அவர் என்ன சொல்கிறார்? இதெல்லாம் நமக்கு சரிப்படாது. இரட்டிப்பான நன்மையைத் தருவார் என்ற வசனத்தை எளிதாக எடுத்து, வாசித்து, கடந்த ஆண்டில் என்னை அப்படி வைத்திருந்தார். இந்த ஆண்டில் அவர் என்னுடைய எல்லா ஆசீர்வாதங்களையும் 2 மடங்காக மாற்றி விட்டார் என்று சொல்லி பேசி வருகிறார்கள். இதைத்தான் யார் வேண்டுமானாலும் பேசிவிடுவார்களே, மிகவும் எளிதாக அவரையும் ஆண்டவர் 2 மடங்காக ஆசீர்வதித்தார், உன்னையும் எளிதாக ஆசீர்வதிப்பது மிகவும் உறுதி என்று சொல்லிவிட்டு செல்வது, பிரசங்கம் மட்டுமல்ல, அது விசுவாச வளர்ச்சியை கொடுத்துவிடும் என்று எண்ணாதீர்கள். இயேசுகிறிஸ்துவினுடைய போதனைதான், விசுவாசத்தைக் கொடுத்து, கனிகொடுக்கிற வாழ்வைக் கொடுத்து, தியாகமான வாழ்வைக் கொடுத்து, அர்ப்பணிப்புக்கு கொண்டுவந்து, உங்கள் சபையில், உங்களின் உடன் ஊழியராக வருமளவிற்கு அவர்களை

இந்த போதனைதான் வளர்க்கும். அதை நீங்கள் முக்கியப்படுத்துங்கள், அதை நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள், அதைச் செய்யுங்கள்.

1 தீமோ.4:15-ம் வசனத்தைப் பாருங்கள், ‘நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு’ என்று சொல்லுகிறார். தேற வேண்டும், நாளுக்கு நாள் தேற வேண்டும், வளர்ச்சியடைய வேண்டும் என்பதை பவுல் எழுதுகிறார், பாருங்கள். அதிலே நிலைத்திரு, வளர்ந்துகொண்டேயிரு என்றுதான் பவுல் கூறுகிறார். அடுத்து 2 தீமோ.2:14-ம் வசனத்தைப் பாருங்கள், ‘நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதையாக இரு’ இங்கேயும் மீண்டும் பவுல் நினைவுபடுத்துகிறார். நீ சத்திய வசனத்தை, நிதானமாய் பகுத்து, போதிக்கிறதில் வளர்ச்சி பெறவேண்டும். அப்படி செய்தால்தான் நீ தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிற்பாய். அதாவது, தேவன் கொடுத்த பணியை சிறப்பாக செய்து முடித்தவனாய், உத்தம, உண்மையுள்ளவனாய் இருப்பாய் என்ற அர்த்தத்தில் பவுல் கூறுகிறதை கவனித்து பாருங்கள். ஆகவே, ஊழியர்கள் நாளுக்கு நாள் தேறுகிறது அவசியம், அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியது அவசியம். தங்களுடைய தாலந்துகளை பெருக்கிக்கொண்டே போகவேண்டும். நாளுக்குநாள் படித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

வேதாகமக் கல்லூரியில் படிக்கவேண்டும் என்று சிலரிடம் சொல்லும்போது, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், எனக்கு இப்போது, வயதாகி விட்டது, 40 – 50 வயது என்றும் வேறு சிலர் 50 அல்லது 55 வயதாகி விட்டது என்று சொல்லுகிறதை கேட்கிறோம். ஆனால், ஒன்றை நீங்கள் யோசிக்க வேண்டும், 60 வயதானவர்களுக்கு அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறது என்று வையுங்கள். 60 வயதானவர்கள் ஒரு 6 மாதம் அல்லது 1 வருடம் படிப்பை படித்தால், அதற்குப் பின்பு மாதம் 1 இலட்ச ரூபாய் சம்பளம் கொடுக்க அரசு முடிவுசெய்து இருக்கிறது என்று அரசு சொல்லட்டுமே. 60 வயது என்று சொல்வது எல்லாம் மறந்துபோய்விடும். எல்லோரும் படிக்க ஆரம்பித்து விடுவார்கள், அதற்கென்ன? ஞாபக சக்தி தானாக வந்துவிடும். விருப்பம் தானாக வந்துவிடும். 1 இலட்சம் ரூபாய், மாதம் கிடைக்கப்போகிறது, இல்லையா? 6 மாதம் எப்படியாவது கஷ்டப்பட்டு படித்துவிட்டால், அதிக தூரம் சென்று தங்கி அந்த படிப்பை படிக்க வேண்டும் என்றால் கூட போய்விடுவார்கள். சென்னை போய், அங்கே தங்கி படிக்க வேண்டுமென்றால்கூட, அங்கே போவதற்கும் தயங்க மாட்டார்கள். ஏனெனில் மாதம் 1 இலட்சம் ரூபாய் அல்லவா? ஆக, எது தூண்டுகோலாய் இருக்கிறது? பணம். ஆனால் 60 வயது அல்லது அதற்கு மேலாகிறது, கர்த்தருக்காக ஊழியம் செய்தால், அவர் அதைவிட மேன்மையான ஆசீர்வாதத்தை தருவார் என்று யார், நினைக்கிறார்கள்? கர்த்தருடைய ஆசிர்வாதம் என்றால் அது யாருக்குமே கவர்ச்சியாக இருப்பதில்லை. அவர் சொல்லுவார்,

அவர் ஆசீர்வாதத்தை என்றைக்கு தரப்போகிறார்? என்று சொல்லிவிட்டு, அவர் பணம் தருவாரா? என்று கேட்கிற, பண ஆசை பிடித்த மக்களாக, கிறிஸ்தவர்கள் இன்று அநேகர் மாறிப்போனார்கள். இயேசு சொன்ன தியாகம், இயேசுவின் உண்மையான சமாதானம், எல்லாம் அவர்களுக்கு வரவில்லை. காரணம் அவர்கள் எதிர்பார்க்கிறது, பணம், பணம், என்றால், பின்பு எப்படி சமாதானம் வரும்? அவரை நேசிக்கிற நேசம், வசனம், ஜெபம், கர்த்தருக்காக, அந்த மாதிரி வாழ்கிற வாழ்வை நினைத்துதான் வந்தார்கள். ஆனால் சில ஊழியர்கள் பணத்தின் பின்னே திருப்பி விட்டுவிட்டார்கள். உன்னை கர்த்தர் இவ்விதமாய் ஆசீர்வதித்து உயர்த்தப் போகிறார், உயர்த்தப் போகிறார் என்று சொல்லி, சொல்லியே அவர்கள் வந்த இலக்கை மறந்து விட்டார்கள். நிம்மதியாக இருந்தால் போதும் என்றுதான் சபைக்கு வந்தார்கள். வந்த இடத்தில், ஊழியர்கள் மறுபடியும் உலகத்திற்கு நேராய் திருப்பி விட்டார்கள். அந்த தவறைச் செய்யக்கூடாது போதகர்களே, ஊழியர்களே.

வருகிற மக்களுக்கு இயேசுவைச் சொல்லுங்கள், சத்தியத்தைச் சொல்லுங்கள். சத்தியத்தை, சத்தியமாகச் சொல்லுங்கள். இரட்சிக்கப்பட வேண்டும், தியாகமாய் வாழ்க்கை நடத்த வேண்டும். உலகத்தில் எது இருந்தாலும், இல்லாவிட்டாலும், இயேசு உனக்கு தேவை என்று சொல்லிக் கொடுங்கள். இரட்சிப்பு மிகவும் அவசியம். நீ இரட்சிக்கப்பட்டு, அவர் சென்ற உண்மையான வழியில், நியாயமான வழியில், வாழ்க்கையை நடத்து, நீ ஆசீர்வதிக்கப்படுவாய் என்று சொல்லிக் கொடுங்கள் பிரியமானவர்களே. அதற்கு நீங்கள் உங்களை அபிவிருத்தி பண்ணிக்கொள்ள வேண்டியது அவசியம்.

தொடர்ந்து அடுத்த பாடத்திலும், மேய்ப்பன் தன்னை எவ்வாறு அபிவிருத்தி செய்து கொள்ளலாம்? என்று கற்றுக்கொள்வோம். ஜெபத்தோடு படியுங்கள். கர்த்தர் உங்களை அசீர்வதிப்பாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1) மேய்ப்பனுடைய செயல்பாடுகள் என்னென்ன என்பதனை வரிசைப்படுத்தி கூறுக? (தலைப்புகள் மட்டும்)
2) மேய்ப்பனுடைய செயல்பாடுகள் என்னென்ன என்பதனை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக?
3) மேய்ப்பனானவன் தன்னுடைய தனிப்பட்ட ஜீவியத்தைக் குறித்து கவனமாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
4) மேய்ப்பனுடைய தனிப்பட்ட ஜீவியத்தில் காணப்பட வேண்டிய ஜெப வாழ்க்கையைக் குறித்து வசனம் மற்றும் வேதாகம ஆதாரங்களோடு விளக்கமாக கூறுக?
5) ஸ்மித் விக்கிள்ஸ் வொர்த், ஜெபத்தைக் குறித்து கூறும் வாக்கியம் என்ன?

6) மேய்ப்பனுடைய தனிப்பட்ட ஜீவியத்தில் காணப்பட வேண்டிய தியான வாழ்வைக் குறித்து வசன ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
7) மேய்ப்பன் தன்னை எவ்விதமாக அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும் என்பதனைக் குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
8) மேய்ப்பன் தன்னை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியதைக் குறித்து, அப். பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுகிற வசனங்களை கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - *12*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில், மேய்ப்பன் நாளுக்கு நாள் தன்னை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியது அவசியம். இன்றுவரையான ஒரு வளர்ச்சியை, சரியான அபிவிருத்தியை, முன்னேற்றத்தை, நாளுக்குநாள் எல்லாத் தகவலையும் பெற்றிருக்க வேண்டியது ஒரு ஊழியருக்கு அவசியமான காரியமாக இருக்கிறது. அதற்கான பல காரணங்களை நாம் சென்ற பாடத்தில் கற்றோம். ஏனெனில் இன்றைய காலகட்டம், நாம் நினைப்பதுபோல, ஒரு சாதாரன காலகட்டம் அல்ல. அறிவு பெருத்த காலம். நீங்கள் போதிக்காவிட்டால், அநேகர் யூடியூப் வழியாக செய்திகளைப் பெற்றுவிடுகிற காலம். இல்லாவிட்டால், ஆன்லைனில் ஏகப்பட்ட புத்தகங்கள் கிடைக்கிறது. நீங்கள் சரியாக போதிக்கவில்லையென்றால், வேற புத்தகத்தையோ, அல்லது வேற பிரசங்கத்தையோ படித்துக்கொண்டு அவர்கள் போய்க்கொண்டே இருப்பார்கள். ஆகவே, நாம் நம்முடைய செய்தியைக் கேட்கிற அளவுக்கு அவர்களைக் கவர்ந்திழுக்க வேண்டுமானால், நீங்கள் ஒவ்வொருவரும் அதிகமாய் அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். அதிலுள்ள ஒரு காரியத்தை முதலாவது பார்ப்போம்.

வாசிக்கின்ற பழக்கத்தை நீங்கள் அதிகமுடையவர்களாக இருக்க வேண்டும். அதிகமான புத்தகங்களை வாசிக்க வேண்டும். ஆவிக்குரிய புத்தகங்கள், குறிப்பாக ஆவிக்குரிய புத்தகங்கள் என்றவுடன், உங்களை ஒரு சாதாரணமான புத்தகங்களை படிக்கச் சொல்லி நான் தூண்டவில்லை. வேதாகம விளக்கங்களுக்கு தேவையான, வேதத்தை வியாக்கியானம் பண்ணுகிற, நிறைய திருக்குறளுக்கு இருக்கிற பொழிப்புரையைப்போல, விளக்கவுரை புத்தகங்கள் அநேகம் இருக்கிறது. அவைகள் என்னென்ன? இருக்கிறது என்ற நாம் தொடர்ந்து வருகிற பகுதியில் பார்ப்போம். அவ்வாறு நிறைய புத்தகங்களை வாசித்து, உங்கள் உள்ளத்தில் அதிகமான கருத்துக்களை சேர்த்து வைத்துக்கொள்ளுங்கள். அதைக்கொண்டு, நீங்கள் நிறைய கருத்துக்கள் மற்றும் தகவல்களை வைத்திருந்தால்தான், நீங்கள் உங்களது சபையாருக்கு அநேக காரியங்களை கற்றுக்கொடுக்க முடியும். நீங்கள் தொடர்ந்து கற்றுக்கொள்ள, கற்றுக்கொள்ள, வேதத்தின் அடிப்படையில், வேதத்திற்கு உகந்த, தேவையான காரியங்களை சொல்லிக்கொடுக்கும்போது, உங்கள் செய்தியைக் கேட்கிற சபை மக்கள் வேறெங்கேயும் போகமாட்டார்கள். அங்கே போகாதே, இங்கே போகாதே என்று சொல்லி நிறுத்துவதினால், அவர்களை நிறுத்திவிட முடியாது. நீங்கள் இதைச் செய்தால், எங்கள் போதகர் நன்றாகப் பேசுவார், அருமையாக உபதேசிப்பார், என்று சொல்லி தேடி வருகிற ஒரு இடத்தில் விசுவாசிகள் இருப்பார்கள். ஆகவே நீங்கள்

செய்ய வேண்டியதைச் செய்யுங்கள். அதிகமாக வாசிக்கிற பழக்கம் உங்களுக்கு வேண்டும். Reading habit நிறைய இருக்க வேண்டும். தொடர்ந்து வாசித்துக்கொண்டிருக்க வேண்டும். நேரம் போகவில்லை அல்லது நிறைய ஊழியமிருக்கிறது என்றெல்லாம் சொல்வதற்கு இல்லை. உங்களைத் தகுதிப்படுத்த வேண்டியிருக்கிறது. ஆத்துமாக்களை சந்திக்க வேண்டியிருக்கிறது, ஜெபிக்க வேண்டியிருக்கிறது. ஒரு ஊழியருக்கு நேரமே இருக்காது என்பதுதான் உண்மை. ஆனால், சிலரைப் பார்க்கிறோம், நான் ஊழியம் செய்கிறேன், ஆனால் என்ன ஊழியம் இருக்கிறது? ஏதாவது கூடுகை வந்தால், நான் போவேன், ஏதாவது மீட்டிங் இருந்தால், போவேன் என்று சொல்லுகிறவர்களைப் பார்க்கிறேன். நீங்கள் உங்களைத் தகுதிப்படுத்திக்கொண்டு, ஜெபித்து, வேதம் வாசித்து, தியானித்து, உபவாசித்து இப்படி உங்கள் பணிகள் செல்லும்போது. ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியான ஒன்றாக இருப்பது மட்டுமல்ல, உங்களது சபையாருக்கு ஆசீர்வாதமாக மாறுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

தினமும் வேதவாசிப்பு, அதற்கு சம்பந்தமான ஆராய்ச்சி நூல்கள், இது நமக்கு பல அனுபவங்களைத் தருகிறது. உங்களுடைய பிரசங்கத்தில், போதனைகளில் நல்ல மாற்றத்தையும், உயர்வையும், அதாவது ஆழமான கருத்துக்களை கொடுப்பதினால் மக்கள் விரும்புவார்கள். உங்கள் பிரசங்கத்தில் நீங்களே வித்தியாசத்தைக் காண முடியும். நீங்கள் வேதாகமக் கல்லூரியில் படிப்பது மட்டுமல்ல, என்னென்ன புத்தகங்கள் கூடுதலாக படிக்க வேண்டும் என்று சொல்வது சிலதுதான். ஏனெனில் எல்லாவற்றையும் சொன்னால், உங்களுக்கு நினைவில் இருக்காது. ஆனால் வேதாகமக் கல்லூரியில் எல்லா பாடமுமே உங்களுடைய தேவ அறிவிற்கும், மக்களுக்கு எவ்விதமாய் போதிக்கவேண்டும்? கற்று கொடுக்கவேண்டும்? என்பதற்கும் அதிகமதிகமான கருத்துக்களை தருகிறதாக இருக்கும். ஆகவே தினமும் அந்த அதிகமதிகமான ஆவிக்குரிய புத்தகங்களை, வேதாகம விளக்க புத்தகங்களைப் படியுங்கள். அதற்கென்று தனி நேரத்தை ஒதுக்குங்கள். பெரும்பாலும் காலை நேரம், சிறந்தொரு நேரம். அதைப்போல இரவுவேளையான 9 அல்லது 10 மணிக்கு மேல்கூட, நீங்கள் படிப்பதற்காக ஒதுக்கலாம். ஏனெனில், இடையூறு இல்லாத நேரங்கள் இவை. அவ்வாறு ஒதுக்கி நீங்கள் படிக்க வேண்டும். அதற்கொரு ஒழுக்கமும் வேண்டும். அதாவது ஒரு சிறிய நூலகத்தை வைத்துக்கொள்வது மிகவும் நல்லது. ஒரு ஊழியர் என்பவர், தன்னுடைய வீட்டில் ஒரு சிறிய நூலகத்தை வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அதில் அநேக ஆவிக்குரிய புத்தகங்கைள வாங்கி, அதில் வைத்து, அடிக்கடி படிக்க வேண்டியது அவசியம். அதற்கு குறிப்பிட்ட சில புத்தகங்களை சொல்லுகிறேன். விளக்கவுரை புத்தகங்கள் (Commentary), நிறைய வாங்க வேண்டும். அவைகளின் விலையானது, 1,000, 2,000 மற்றும் 3,000 என்று இருக்கும். அதுதான் உங்களுக்கு சொத்து. Mathew Hentry Commentary Book இருக்கிறது, மிகவும்

அருமையான ஒரு விளக்கவுரை புத்தகம். உங்களது மொபைலில் இலவசமாகவே பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விளக்கவுரை புத்தகங்கள் அதிகமாக இருக்கிறது. சில புத்தகங்கள் இலவசமாகவும் கிடைக்கும். சிலதை நீங்கள் பணம் கொடுத்து வாங்கி, உங்களது சிறிய நூலகத்தில் வைத்துகொள்ளுங்கள். மூல பாஷைகளான எபிரெய மற்றும் கிரேக்கு மொழியில் படிப்பதற்கான Software கிடைக்கிறது. அதைப்போல சொல்லகராதிகள் (Dictionary), தமிழிலும் கிடைக்கிறது. ஆக, வேதத்தில் காணப்படுகிற பழைய மொழியாக்கத்தில் உள்ள வார்த்தைகளுக்கு, நீங்கள் அர்த்தத்தைக் கண்டுபிடித்து படிக்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு காரியத்தைச் சொல்லுகிறேன், ‘சிட்சை’ என்ற தமிழ் வார்த்தைக்கான அர்த்தம் என்ன? என்று உங்களது சபையாரைக் கேட்டுப் பாருங்களேன். சிட்சை என்றால், ‘தகப்பன் தன் பிள்ளையை சிட்சிக்கிறதுபோல’ என்று வாசிக்கும்போது, தகப்பன் தன் பிள்ளையை அடிப்பதுபோல, நானும் உன்னை அடிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறதுபோல, நிறையபேர் நினைக்கிறார்கள். ஆனால், இந்த சிட்சை என்ற வார்த்தையின் அர்த்தத்தை அறிவதற்கு, நீங்கள் சொல்லகராதியைப் பார்க்க வேண்டும். அதற்கு ஆங்கில வேதாகமத்தில் அல்லது மூல பாஷையில் என்னவென்று பார்க்கலாம். அவ்வாறு பார்க்கும்போது, ‘Training’ என்று அதாவது, ‘பயிற்சியளிப்பது’ என்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. பயிற்சியை எப்படிக் கொடுப்பார்கள்? சிறப்பாய் செய்தால் பரிசளிப்பார்கள், தோற்றுப்போனால், அவர் ஒருவேளை அவமானத்தைச் சந்திப்பார். அதே மாதிரிதான், ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு எப்படி பயிற்சியளிப்பார்? தம்பி, நீ நன்றாக படித்து, 10-ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் வாங்கினால், நல்லதொரு கைக்கடிகாரம் வாங்கித் தருகிறேன். அதை வாங்கித் தருகிறேன் என்று சொல்லி அவனை உற்சாகப்படுத்துகிறார். அதே பையன், புகை பிடிக்கிற கெட்ட பழக்கத்தை பழகிக்கொண்டு வந்தானானால், அவனுடைய தகப்பன், உடனே மட்டாய் தண்டித்து, சிட்சிக்க எண்ணுவார். அதேபோலத்தான், கர்த்தருக்கு பிரியமாய் ஒருவன் நடக்கும்போது, உங்களை அதிகமாக ஆசீர்வதிக்கிறார், அவரை விட்டு நீங்கள் பின்வாங்கிப் போகும்போது, வேதம் வாசிப்பதை, ஜெபம் செய்வதை குறைத்துக்கொள்ளும்போது, அவர் உங்களை திருத்துவதற்காக, மட்டாய்த் தண்டிக்கிறார். ஏனெனில் உங்களது ஆத்துமா மிகவும் முக்கியம் என்பது உங்களுக்கு தெரிகிறதைவிட, கர்த்தருக்கு அதிகமாகத் தெரியும். நமது ஆத்துமாவைக் குறித்து நன்றாக அறிந்திருப்போமானால், எவ்வளவு கவனமாக ஊழியம் செய்வோம், தெரியுமா? நிறைய பேருக்கு தெரிகிறதே இல்லை. இந்த ஆத்துமா நரகத்திற்கு போய்விட்டால் என்ன ஆகும்? என்று வேதம் சொல்லுகிற அந்த சீரிய விளைவுகளை அநேகர் அறியாமல் இருக்கிறார்கள், அதாவது பாவத்தில் வாழ்ந்து, நரகத்திற்கு போய்விடுவீர்களானால், அது மிகவும் கொடியது என்று உணர்ந்துதான் பிதாவாகிய தேவன்

உங்கள் மீது அன்புகொண்டு, அவரது சொந்த குமாரனை, இயேசுகிறிஸ்துவை சிலுவையில் மரிக்குமளவிற்கு அவரை ஒப்புக்கொடுத்தார். ஏனெனில் நீங்கள் நரகத்திற்கு போய்விட்டால், அதிகமாக கஷ்டப்படுவீர்கள் என்பதற்காக, தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையே, சிலுவையில் ஒப்புக்கொடுத்து, உங்களை மீட்டெடுத்தாரென்றால், நரகம் எவ்வளவு கொடியது என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். அது மிகவும் மோசமானது, அங்கே சாக இயலாது, எப்போதும் வேதனை, அழுகை, கூக்குரல், போன்றவை காணப்படும், கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நமக்கு, நம்முடைய ஆத்துமாவின் விலையேறப்பெற்ற தன்மை தெரியவில்லை. அது தப்புவிக்கப்பட வேண்டும் என்பது நமக்கு தெரியவில்லை. ஏதோ வாழ்கிறோம், ஏதோ ஊழியம் செய்கிறோம், ஊழியம் செய்தால், பிழைப்பு நடக்கும் என்பதுபோல, இல்லாவிட்டால் ஏதோ, தப்பிக்க வழியில்லை, இவரிடம் வந்து மாட்டிக்கொண்டோம், ஊழியம் செய்யவில்லை என்றால், அவர் வந்து தண்டிப்பார். அந்த வழியிலேயே போய்விடுவோம் என்று சொல்லி, சிலர் கடமைக்காக ஊழியம் செய்கிறதையும் நாம் பார்க்கிறோம். ஆனால், அப்படியிருக்கிறது சரியான விஷயமல்ல பிரியமானவர்களே. ஒரு உத்வேகத்தோடு, மகிழ்ச்சியோடு, வெறியோடு ஊழியம் செய்யுங்கள். வெறி என்றவுடனே, நீங்கள் தவறாக நினைக்காமல், அந்தளவுக்கு சாதிக்கவேண்டும் என்றதொரு வேட்கை இல்லாவிட்டால், சாதிக்க முடியாது. சாதாரணமான ஒரு ஊழியத்தைச் செய்துவிட்டுத்தான் நீங்கள் கடந்து போவீர்கள்.

அதைப்போல கலைக்களஞ்சியம் என்ற புத்தகங்கள் ஆன்லைனில் வாங்கலாம், ஆன்லைனில் படிக்கலாம். Encyclopedia என்ற புத்தகம் வேதாகமத்திற்கென்றே நிறைய இருக்கிறது. Encyclopedia Brittanica-வில் நீங்கள் நிறைய வேதாகம வரலாறு சம்பந்தப்பட்ட அந்த வார்த்தைகளை போட்டுகூட படிக்கலாம். ஆவிக்குரிய தியான நூல்கள்(Devotional Books) அது இறையியல் அடிப்படையில் இருக்கிறதா? என்று பார்த்துக்கொள்ள வேண்டும். எல்லாமே வெளியிடுகிறார்கள், ஆனால் அநேகர் அதை விளக்கப்படுத்தி, அவனை உயர்த்தியவர், உன்னையும் உயர்த்துவார் என்று முடிப்பார்கள். அதுவொரு பெரிய தியான புத்தகம் அல்ல, கொஞ்சம் தேறுதல் இருக்கலாம். ஆனால் அதில் சத்தியம் விளக்கப்பட வேண்டும். அதை நீங்கள் கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் முதிர்ச்சி நிலையை நோக்கி செல்லவேண்டும் என்பதற்காக, நான் சொல்லிக்கொண்டு இருப்பதினால், ஆரம்பகட்ட தியான நூல்களையெல்லாம் நீங்கள் படியுங்கள் என்று சொல்லுகிறது இல்லை. நீங்கள் வளர்ந்து விட்டீர்கள், இனி நீங்கள் ஊழியர்கள். நீங்கள் விபரமாக, ஆழமாகப் பேச வேண்டிய இடத்திலிருக்கிற ஊழியர்கள். ஆகவே, ஆவிக்குரிய தியான நூல்கள் நிறைய படியுங்கள். நிறைய சுய சரிதைகள், மிஷனெரி வரலாறு சம்பந்தமான புத்தகங்களைப் படியுங்கள். என்னென்ன முறைகளில்

அவர்கள் சுவிசேஷத்தை அறிவித்தார்கள்? என்பது போன்றவைகள் எல்லாம் உங்களுக்கு அதிகமான விஷயங்களில் தூண்டுதல்களாக இருக்கும்.

மேலும், ஒத்தவாக்கிய வேதாகமத்தையும் நீங்கள் வாங்கி, உபயோகிக்க வேண்டும். ஏனெனில் ஒரு வசனத்திற்கு ஒத்த சில அல்லது பல வசனங்களைக் கண்டுபிடிப்பதற்கு அது உதவியாக இருக்கும். ஆன்ட்ராய்டு மொபைலில், 'தமிழ் பைபிள் ஆப்' ஒன்றை பதிவிறக்கம் செய்து கொண்டீர்களானால், அதில்கூட தேடுவீர்களானால், எந்த வார்த்தையை வேண்டுமானாலும் கண்டுபிடித்துக்கொள்ளலாம். இல்லையென்றால், கூகுளில் சென்று, நீங்கள் குறிப்பிட்ட வேத பகுதியை தட்டச்சு செய்தால், அதற்கான விளக்கவுரையும் கிடைக்கும், அர்த்தமும் கிடைக்கும், சொல்லகராதியும் கிடைக்கும், எல்லாமே கிடைக்கும். இப்போது எல்லா வசதிகளும் இருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், நீங்கள் நூலகங்களைத் தேடிப்போக வேண்டியதிருந்திருக்கும், இப்போது உங்களைத் தேடி, வீடு தேடி வந்திருக்கிறது. பயன்படுத்துவதற்கு நமக்கு விருப்பமும், அதற்கு கொஞ்சம் அறிவும், புத்தியும் நன்றாக கர்த்தருடைய கிருபையோடு வேலை செய்ததானால், ஏகப்பட்ட வாய்ப்புகள், வசதிகள் ஆன்லைனில் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு நிறைய விதங்களில் உங்களுடைய வாசிக்கும் அந்த தன்மையை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள், அதிகமதிகமாய் வாசித்து ஆயத்தப்பட வேண்டியது அவசியம்.

அடுத்து மேய்ப்பு பணியாளரின், அதாவது மேய்ப்பனுடைய, போதகனுடைய உறவுகள் எப்படியிருக்க வேண்டும்? என்பது பற்றி சற்று பார்க்கலாம். ஒரு ஊழியன் அல்லது மேய்ப்பன் அல்லது போதகன், அவருடைய ஊழியங்களை எவ்வளவுதான் சிறப்பாக செய்தாலும், குடும்பத்தோடு அவருக்கிருக்கிற உறவு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. ஏனெனில், எல்லா உறவுகளும் தேவனுடைய சித்தப்படி ஏற்படுத்தப்பட்ட ஒன்று. திருமணம் செய்யாமல் ஊழியம் செய்கிறவர்கள் உண்டு. ஆனாலும் அதே வேளையில் தேவன் உங்களை குடும்பமாக இணைத்திருக்கிறார். கணவன், மனைவி, உறவு நன்றாக இருக்க வேண்டும். தகப்பன், அதைப்போல தாய், மகள், மகன் உறவெல்லாம் நன்றாக இருக்கவேண்டியது அவசியம். இதைக்குறித்து அப். பவுல், அப். பேதுரு போன்றவர்கள் தங்களுடைய நிருபங்களில் மிகத் தெளிவாக கூறியிருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும்.

ஒரு மேய்ப்பன் தன்னுடைய குடும்பத்தை எப்படி நடத்துகிறான் என்பது மிக முக்கியம். அதைப் பொறுத்துதான் அந்த சபையும் இருக்கும். ஏனெனில், வேதம் சொல்லுகிறதை நாம் வாசிக்கிலாம், 1 தீமோ.5:8-ம் வசனம் இவ்விதமாகச் சொல்லுகிறது, 'ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாய்

இருப்பான்' என்று ஊழியரைக் குறித்து எவ்வளவு கடினமாய் சொல்லுகிறார் பாருங்கள். அவன் அவிசுவாசியிலும் கெட்டவனாய் இருப்பான் என்கிறார். இன்னொரு இடத்தில் பவுல் எழுதுகிறார், தன் சொந்த குடும்பத்தை விசாரிக்காதவன், எப்படி சபையை விசாரிக்க முடியும்? பார்த்தீர்களா? குடும்ப நிர்வாகம்தான், சபையின் நிர்வாகம். இங்கே தாய், தகப்பன்போல இருக்கிறவர்தான், சபையிலும் தாய், தகப்பனாய், ஆவிக்குரிய ரீதியில் மக்களுக்கு இருக்கிறார்கள். குடும்பத்தை நன்றாக நடத்துகிறவர்கள்தான், சபையையும் நன்றாக நடத்துவார்கள். மேய்ப்பனுக்கும், அவனுடைய மனைவிக்குமிடையேயான உறவு மிகவும் முக்கியமானதாக, சாட்சியுள்ளதாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. குறிப்பாக மேய்ப்பன், போதகன், அந்த ஊழியன், அவருடைய மனைவியை நேசிக்கிறவராக, மிகவும் அன்பு செலுத்துகிறவராக இருக்கவேண்டும். ஆனால், இதற்கு நேர்மாறாகவும் அநேகர் இருக்கிறார்கள். குடும்பத்தை நன்றாக கவனிப்பார்கள், சபையை கவனிக்க மாட்டார்கள். ஆகவே, குடும்பத்தையும், சபையையும் சமமாக ஒரு போதகர் அல்லது மேய்ப்பன் கவனிக்க வேண்டும். குடும்பத்தை, மனைவியை நன்றாக நேசிக்க வேண்டும். ஒருவேளை சாட்சி கேடாய், மனைவி கணவரைக் குறித்து சொன்னாலோ, அல்லது கணவர், மனைவியைக் குறித்து சபையார் முன்னிலையில் ஒருவேளை சொல்லுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த இடத்தில், விசுவாசிகள் சொல்வார்கள், போதகரே இப்படித்தான் இருக்கிறார், நம்முடைய வீட்டில் சண்டை இருக்காதா? இதிலென்ன பெரிய விசேஷம் இருக்கிறது? அவர் வேதத்தை நன்றாக போதிக்கறார், மனைவியும், கணவனும் எப்போதும் சண்டைதான் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்று அதைத்தான் விசுவாசிகள் அதிகமாகப் பேசுவார்களேயொழிய, வேத வசனத்தை, உங்களுடைய பிரசங்கத்தை அதிகமாக கேட்க மாட்டார்கள். நீங்கள், உங்கள் வாழ்வில் மனைவி, கணவனையும், கணவன், மனைவியையும் புரிந்து, குறிப்பாக இந்த ஊழியர்கள் மிக அதிகமாய் வாழ்ந்து, காண்பிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. உங்களுடைய விருப்பு, வெறுப்புகளை எல்லாம், நீங்கள் ஓரமாக வைக்க வேண்டும். மனைவியை, கணவனை புரிந்துகொண்டு உங்கள் வாழ்வை நடத்த வேண்டும்.

சில போதகர்களைப் பார்க்கிறோம், ஊழியம், ஊழியம் என்று ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். பிள்ளைகளையும், மனைவியையும் கவனிக்காமல், ஊரெல்லாம் சுற்றித் திரிகிற சிலரைப் பார்க்கிறோம். அவர்கள் சொல்லுகிறது என்னவென்றால், எனக்கு ஊழியம்தான் மிகவும் முக்கியம் என்கிறார்கள். பிரியமானவர்களே, ஊழியம் முக்கியம்தான், அதையொரு ஊழியர், ஒழுங்குபடுத்தி சொன்னார், முதலில் தேவன், இரண்டாவது நீங்களும், உங்களது குடும்பமும், அதற்குபின்பு, ஊழியம் என்ற வரிசை இருக்கவேண்டும் என்றார். அதைவிடுத்து, கர்த்தர், ஊழியம், அதன்பின்பு குடும்பம் என்று வைத்தீர்களானால், உங்களுக்கு நிம்மதியில்லாத நிலை வந்துவிடும். குடும்பத்தில்

பிரச்சனை இருக்கும்போது, சபையில் பிரச்சனை, அப்படியாக தொடர்ந்து ஒன்றுக்கொன்று உதைத்துக்கொண்டுதான் இருக்கும்.

பிரியமானவர்களே, வேதம் ஒரு முறையைச் சொல்லுகிறது என்றால், அதுதான் சரியான முறை. ஊழியம் தேவைதான், நீங்கள் ஊழியத்திற்கு அதிகமான நேரங்களைக் கொடுப்பதற்கு முன்னர், குடும்பத்திற்கும், ஒருவேளை குறைந்தது வாரத்திற்கு ஒரு நாளையாவது ஒதுக்கி, குடும்பத்தோடு நேரத்தை செலவழிக்க வேண்டும். ஒருவேளை அது திங்கள் கிழமையாக இருக்கலாம். ஞாயிற்று கிழமை அதிகமான ஊழியங்கள் உங்களுக்கு இருக்கிறது. திங்கள்கிழமை உங்களுக்கு விடுமுறை நாள், என்பதுபோல நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும். சபையிலும் சொல்லிவிட வேண்டும், திங்கள்கிழமைகளில் எங்களுடைய உறவினர்களைப் பாாக்கப்போவோம், குடும்பத்தோடு அநேக வேலைகள் இருக்கும், தயவுசெய்து, ஞாயிற்றுக்கிழமை வரைக்கும் நீங்கள் எதைவேண்டமானாலும், சொல்லுங்கள். ஏதாவது விசேஷ நிகழ்ச்சிகள் என்றாலும் சொல்லுங்கள். தவிர்க்க முடியாத தருணங்களாக இருப்பின், அந்த நாட்களில் தகவல் சொல்லுங்கள். ஆனால், கூடுமானவரைக்கும், திங்கள்கிழமை, எனக்காக, குடும்ப காரியங்களுக்காக, நீங்கள் ஒதுக்க அனுமதி தரவேண்டும் என்பதுபோல் வைத்துக்கொள்வது நல்லது. இந்தமாதிரியாக, குடும்பத்திற்கு நேரம் கொடுக்கும்போதுதான், நீங்கள் உங்கள் பிள்ளைகளோடும், மனைவி மக்களோடும், சந்தோஷமாக திருப்தியான ஒரு ஊழியத்திற்கு போவதற்கு அது அடித்தளமாக இருக்கிறதை நீங்கள் பார்க்க முடியும். சபை, அந்தக் குடும்பத்தைப் பார்க்கிறது, சபை, அந்த சாட்சியைக் காணவேண்டும். மனைவி தன் கணவரை எவ்வளவாய் நேசிக்கிறார்? என்பதை அந்த சபை மக்கள் பார்க்க வேண்டும், மட்டுமல்ல அந்த மனைவியும் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் உண்மையாகவே என்னை நேசிக்கிறார், சும்மா நடிக்கவில்லை, என்பதை மனைவி உணரவேண்டும். சுருக்கமாக சொல்லவேண்டுமானால், அந்த மேய்ப்பன் தன் சொந்த குடும்பத்தை நன்றாக நடத்துகிறவராக இருக்கவேண்டும். அதைப்போல ஒரு மேய்ப்பன் என்பவர், தகப்பன் ஸ்தானத்தில் இருக்கிறார். தன்னுடைய சபையாரை, பிள்ளைகளைப்போலவே பார்க்க வேண்டும். அந்தவொரு தகப்பன் இருதயத்தோடு பார்க்கிற பழக்கம் வந்துவிட்டால், சபையாரை சாபம் போடுகிற பழக்கம் மறைந்துவிடும். இன்றைக்கு அநேக சபைகளிலிருக்கிற பிரச்சனை அதுதான். அந்த போதகர், நாம் தசம பாகம் மற்றும் காணிக்கைகளைக் கொடுக்கவில்லை என்றால், சாபமிடுவார், அந்த சாபம் நமக்கு எதற்கு? அந்தவொரு தேவ மனிதருடைய சாபம் நமக்கெதற்கு? என்று சொல்லி, சிலர் சொல்லுகிறதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு தகப்பன் ஸ்தானத்தில் இருந்தால், நீங்கள் உங்கள் பிள்ளையை சபிப்பீர்களா? யோசித்துப் பாருங்கள். ஆனாலும் ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.. காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது, அது ஒன்றும் செய்யாது, பயப்படாதீர்கள். ஊழியர்கள் மீதும் மக்கள் இடுகிற சாபம் எதுவும்

செய்யாது. ஊழியர்களும் மக்கள் மீது சாபமிடுகிறது ஒன்றும் செய்யாது, பயப்பட வேண்டியது அவசியமில்லை. வேதம் சொல்லுகிறதுதான் முக்கியம்.

பழைய ஏற்பாட்டில்தான், சாபம் சொன்னால் நிறைவேறுகிற ஒன்றாக இருந்தது. சபிக்கப்படுவானாக, என்று சொல்லும்போது, ஆமென் என்று சொல்வது, பழைய ஏற்பாட்டில். ஆனால் புதிய ஏற்பாட்டில் அப்படிச் சொல்லுகிற காரியம் இல்லை. நீங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டியவர்கள் என்று அறிந்து மற்றவர்களை ஆசீர்வதியுங்கள் என்பதுதான், புதிய ஏற்பாட்டின் கிருபையின் காலம். இதில், நாம் ஆசீர்வதிக்கத்தான் அழைக்கப்பட்டிருக்கிறோம். பழைய ஏற்பாட்டிலுள்ள வசனங்களை வைத்து ஊழியர்கள் சாபமிடுகிறதை பார்க்கிறீர்கள். இல்லாவிட்டால், மக்களை ஊழியர்கள் பயங்காட்டுகிறார்கள். அதையெல்லாம் அவ்வாறு ஒருபோதும் செய்யாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு தகப்பனாயிருந்தால், உங்கள் பிள்ளையை சபிப்பீர்களா? என்பதை மட்டும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு தகப்பனாயிருந்தால் உங்கள் சபைப் பிள்ளைகளை, சபையை விட்டு போகச் சொல்லுவீர்களா? சில ஊர்களில் ஒரு சபைதான் இருக்கும். அந்த சபையின் போதகர் மிகவும் அதிகமாக பிகு பண்ணுவார். ஏதாவது ஒரு காரியத்தைச் சொல்லி, இது விசுவாசத்திற்கே துரோகம் செய்வதுபோல் இருக்கிறது என்பார். அந்த சபையின் ஒழுங்கின்படி, விசுவாசப் பிள்ளைகளின் திருமணத்தை சபையில் நடத்துவதில்லை. ஆனால், வேண்டுமானால் திருமண மண்டபத்தில் வைத்துக்கொள்ளுங்கள், என்று அந்த போதகர் சொல்லிவிட்டார். இவைகளைப் பற்றி சிந்திக்கும்போது, இது என்ன நிலை? அல்லது என்ன விசுவாசம் என்பது தெரியவில்லை. இவர் வேதம் சொல்வதற்கு புறம்பாக, தங்கள் விசுவாசத்தை முக்கியப்படுத்துகிற கூட்டமாக இருக்கிறவர்கள். நாங்கள் இப்படித்தான் விசுவாசித்து வளர்ந்துவிட்டோம் என்கிறார்கள், அது என்ன நிலை? திருமணம் என்பது புனிதமாகக் கருதப்படுகிறது. தேவன் நியமித்த திருமணத்தை, சபையில் வைத்து நடத்தினால், புனிதம் கெட்டுவிடும் என்று சொல்வது எந்த விதத்தில் நல்லதாக இருக்குமென்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

ஆக, உபதேசம் சரியாக பின்பற்றப்படவில்லை என்பதற்காக, மக்களை சபிப்பது என்பது, சரியற்ற காரியமாகவே இருக்கிறது. உபதேசமானது இரண்டாம் இடத்தில் இருக்கிறது. வேதம் எதை நலம் என்று சொல்லுகிறதோ, அதை நன்மையாகவும், எதை பாவம் என்று சொல்லுகிறதோ, அதை பாவமாகக் கற்றுககொடுக்க வேண்டும். அந்த இடத்தில் ஊழியர்கள் வளரவேண்டியது அவசியம், அது மிகவும் முக்கியம். மக்களைச் சபிக்கிற நிலையானது தவறான பின்பற்றுதலாகும். தகப்பனின் இருதயமுள்ளவர்கள், பிள்ளைகளைச் சபிக்காததுபோல, சபையாரையும் சபிக்க மாட்டார்கள். தகப்பனுடைய கண்காணிப்பும், கரிசனையும், பிள்ளைகள் என்ற நிலையில், தனிப்பட்ட விதத்தில் அந்த சபையாருக்கு கிடைக்கும். ஆக, பிள்ளைகள் திருப்தியான நிலையில் வளர்வார்கள்.

இதுதான் அவர்கள் விசுவாசமுள்ள பிள்ளைகள் என்ற பெயருடன் வளரும் பிள்ளைகளாக மாற்றும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஆகவே நீங்கள் விசுவாசிகளுக்காக நேரத்தை செலவழிக்க வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. தகப்பனாகி விட்டீர்களல்லவா? ஆகவே அது உங்களது குடும்பம், குடும்பத்தின் நிகழ்ச்சிகள் என்ற அந்த பாரத்தோடு, கலந்துகொள்ளுகிற நல்ல போதகர்களாக, மேய்ப்பர்களாக இருக்க கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

அடுத்து, மேய்ப்பனும், தலைமைத்துவமும் என்பது பற்றிய ஒருசில காரியங்களை கற்றுக்கொள்வோம். ஒரு மேய்ப்பன் என்பவன், ஒரு தலைவன் (Leader). அவர் அந்த தலைமைத்துவத்தை எவ்விதமாக கைக்கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து நாம் பார்க்கலாம். சரியான தலைமைத்துவம் ஒரு சபைக்கு தேவை. சரியான தலைமைத்துவம் எந்தவொரு இயக்கத்திற்கு இருக்கிறதோ? அது சபையாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டால் எந்தவொரு கிறிஸ்தவ நிறுவனமாக இருந்தாலும் சரி, அது தன்னுடைய இலக்கை எளிதாக சென்றடைவது மட்டுமல்ல, அந்த இயக்கம் சாதிக்கும். இன்றைக்கு தலைமைத்துவத்தில் குறைவுபாடுகள் இருக்கிறது. சரியான தலைவர்கள் இல்லை. தரிசனமுள்ள தலைவர்கள் ஆரம்பித்துவைத்த இயக்கங்கள் இன்று தரிசனமில்லாத தலைவர்கள் கையில் மாட்டிக்கொண்டு, சிக்கிக்கொண்டு திணறுகிறது. உங்களைப் பொறுத்த மட்டில் நீங்கள் நல்ல தலைமைத்துவத்தை உடையவர்களாக இருக்கவேண்டும். வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வேதம் சொல்லுகிற தலைமைத்துவம் எது தெரியுமா? மேய்ப்பனின் தலைமைத்துவம் (Shepherd Leadership) என்று சொல்வார்கள். மேய்ப்பனுடைய தலைமைத்துவம் அதாவது, உலக தலைமைத்துவத்தைப் பார்த்தீர்களானால், அது இறுமாப்பாய் ஆளுகிற தலைமைத்துவம். நான்தான் அதிகாரி, நான் சொல்லுகிறதைக் கேட்க வேண்டும் என்பதில்தான் அவர்கள் நிற்பார்கள். அதுதான் உங்கள் மந்தையை இறுமாப்பாய், உலக மனிதர்களைப்போல ஆளுகை செய்யாதீர்கள் என்று அப். பேதுரு எழுதுகிறதை நாம் பார்க்கிறோம். நம்முடைய தலைமைத்துவம் இறுமாப்பாய் இருக்கக் கூடாது. மேய்ப்பனுடைய தலைமைத்துவம், ஒரு மேய்ப்பன் ஆடுகளை நடத்துகிற தலைவன். ஆனால் அவன் எந்தளவுக்கு இறங்கிப்போக வேண்டுமென்று கவனியுங்கள். தேவையான இரையை ஆடுகளுக்கு அருகில் கொண்டுபோய் கொடுக்கிறான். அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில், அந்த ஆடுகள் அடங்காமல், பிரச்சனைகளை எழுப்பி இருந்தாலும்கூட, அவைகளைத் தட்டிக்கொடுத்து விடுகிறான்.

ஒருவேளை அந்த ஆடுகளுக்கு காயம் ஏற்பட்டால், காயத்தை நிவர்த்தி செய்ய பிரயாசம் எடுக்கிறார், அதற்கு கரிசனை காட்டுகிறார். காணாமல் போய்விட்டால், அதைத் தேடிப் போகிறார். இப்படியான பல வேலைகளை அந்த மேய்ப்பன் செய்கிறார். அதை

நம்முடைய வேதாகமக் கல்லூரியில் *2* நிலைகளில் நாம் சொல்லிக் கொடுக்கிறோம். B.Th.–ல் ஒரு சாதாரணத் தலைமைத்துவம், M.Div.-ல் முன்னேற்றமான தலைமைத்துவம் (Advanced Leadership) ஆகிய இரண்டு நிலைகளைப் பெற்ற தலைவர்களாய் மேய்ப்பர்கள் இருக்கிறார்கள். தன்னுடைய நிறுவனத்தை, சபையை நேர்த்தியாக நடத்திச் செல்லுகிறதை நாம் பார்க்க முடியும். நீங்கள் உங்களுடைய இலக்கை சிறப்பாக அடைவதற்கு நல்ல தலைமைத்துவத்தைக் கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தானாய் தலைமைத்துவம் வந்துவிடாது. இயேசுகிறிஸ்து நமக்கு நல்ல மாதிரியாக இருக்கிறார். அதுபோக, அவர் கொடுத்த பாடங்களை நாம் முழுமையாகத் தெரிந்துகொண்டு, அந்த தலைமைத்துவத்தை பின்பற்றுகிறவர்களாக இருக்கவேண்டியது அவசியம். தேவன், சரியான ஆவிக்குரிய தலைவர்களை, அல்லது தலைமைத்துவத்தை நடத்தக்கூடிய தலைவர்களை தேடி ஏற்படுத்த விரும்புகிறார். ஆனால் சபைதான் பாவம், சரியான தலைவர்கள் கிடைக்கிறதில்லை. போட்டி, பொறாமை, தேவையற்ற பேச்சுக்களை பேசுகிறவர்கள் என்று பலவிதங்களிலிருக்கிற, தரிசனத்தை முக்கியப்படுத்தாத, தங்கள் சுயத்தை முக்கியப்படுத்துகிற தலைவர்கள் இன்று எழும்பியிருக்கிறார்கள்.

தலைமைத்துவம் என்பதற்கு பலர் பலவிதமான வரைவிலக்கணங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றையும் இப்போது கற்றுக்கொள்ள முடியாது. காங்கல் என்பவர் கூறியதை பார்க்கலாம். அவர் கூறுவது ‘தலைமைத்துவம் என்பது தேவனுடைய அழைப்பின் கீழாக (Call of God), ஒருவன் தன்னுடைய ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தி, குறிப்பிட்ட மக்களுக்கு சேவையாற்றுவதின் மூலம் கிறிஸ்துவை மகிமைப்படுத்ததக்கதாக தேவன் அவர்களுக்கு கொடுத்திருக்கும் இலக்குகளை அவர்கள் அடையும்படியாக அவர்களுக்கு சேவையாற்றுவதே தலைமைத்துவம்’ என்கிறார். இதுதான் தலைமைத்துவம், அவர் அழைக்கப்பட்ட ஒரு அழைப்பை உடையவராக இருக்கிறார். அந்த அழைப்பை நிறைவேற்ற தன்னுடைய ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துகிறார். அதற்கு தன்னுடைய குறிப்பிட்ட சபை மக்களாகிய தன்னுடைய உறுப்பினர்களுக்கு ஊழியத்தைச் செய்கிறார். அந்த ஊழியத்தின் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படத் தக்கதாக செயல்படுகிறார். தேவ நாமத்தை மகிமைப்படுத்த, அவர் கொடுத்த தரிசனம் இருக்கிறதே, இலக்குகள் இருக்கிறதே, அதை நிறைவேற்றும்படியாய் இந்த ஊழியத்தை, சேவையை ஆற்றுகிறார் என்று அவர் கூறுகிறார். இதைக் குறித்து நாம் சற்று விளக்கமாக சிந்திக்கலாம்.

இந்த தலைமைத்துவத்திற்கு நாம் உதாரணமாக ஆபிரகாம், மோசே, யோசுவா, பவுல் அதைப்போல எல்லாவற்றுக்கும் எடுத்துக்காட்டாய் வருகிற இயேசுகிறிஸ்து. அவர்தான் நமக்கு மிகவும் முக்கியம். மட்டுமல்ல அவர்தான் எல்லாவற்றையும் செய்தும்

காண்பித்திருக்கிறார். ஆக, தலைமைத்துவத்திற்கு இயேசுகிறிஸ்துதான் சிறந்த எடுத்துக்காட்டு. சரி, இப்போது தலைமைத்துவ பண்புகளைப்பற்றி, ஒரு சிலவற்றை பார்ப்போம். முதலாவது. அவர் அழைக்கப்பட்டவர். மேய்ப்பன் என்பவர் அழைக்கப்பட்டவர். உதாரணமாக, *1* தீமோ.*1:12*, ‘என்னைப் பெலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, என்னை உண்மையுள்ளவன் என்று எண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன்’ என்று கூறுகிறார். ஏற்படுத்தினார் என்று கூறுகிறதை தெளிவாகப் பாருங்கள். ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், ஆம், தேவன்தான் ஊழியத்திற்கு மனிதர்களை ஏற்படுத்துகிறவர். எனக்கு தொழில் ஏதும் ஓடவில்லை, அதனால் நானாக ஊழியத்திற்கு வந்துவிட்டேன் என்று சொல்லுகிற சிலரை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நாமாக ஊழியத்திற்கு வரவில்லை, ஊழியத்திற்கு நீங்களாக வந்திருக்க முடியாது. கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஊழியம் செய்ய அழைக்கிறார். நீங்களாக வந்திருக்க வேண்டும், வரவில்லையென்றால், அவர் வரவைப்பார், அதுதான் தேவனுடைய வல்லமை. நீங்களும், நானும் ஜெபம் செய்ய ஆரம்பித்து விட்டால், நீங்கள் விரும்புகிற வழியிலே அவர் நடத்துவார் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். நாம் புலியின் வாலைப் பிடித்து விட்டோம், புலியின் வாலைப்பிடித்த பின்பு, அதை விட முடியுமா? முடியாது. விட்டால் கடித்து விடும். நீங்களும் சுற்ற வேண்டும், அதுவும் சுற்ற வேண்டும், அதுதான் நடக்கும். அதே மாதிரி, தெரிந்தோ, தெயாமலோ கர்த்தரிடம் வந்துவிட்டீர்கள். இனி நீங்கள் அவர் வழியில் செல்லுவதுதான் நல்லது. இதை நான் உங்களை பயப்படுத்துவதற்காக கூறவில்லை. என்னாலன்றி, உன்னால் எதுவும் செய்யவும் முடியாது என்று அவர் கூறுகிறார். ஆகவே, அவரைவிட்டு விட்டு, நம்மால் வாழவும் முடியாது. அவர் வழியில் போகவும் நம்மால் முடியாது என்று நான் சொல்லவில்லை. என்னைத் தவறாக நினைத்து விடாதீர்கள். அவர் வழியில் போனால், நலமான, ஆசீர்வாதமான வழியில் கொண்டுபோவார். இப்போது, யோனாவுக்கு நினிவேக்கு போகிறது பிடிக்கவில்லை. தர்ஷீசுக்கு தப்பி ஓடுகிறார். ஆனால் தேவன், தான் நினைத்ததைத்தான் செய்கிறார். அதுதான் நம்முடைய வாழ்விலும் இருக்கிறது. நீங்கள் ஏதோவொரு விதத்தில் கர்த்தரிடம் வந்துவிட்டீர்கள், கடன் மாறும்படி நீங்கள் வந்து இருப்பீர்கள், நோய் மாற அவரிடம் வந்து இருப்பீர்கள். வீட்டில் ஏதோ பிரச்சனை அல்லது ஏதோ ஒரு அற்புதம் நடைபெற்றதால் வந்து இருப்பீர்கள். ஆனால் அப்படியே அற்புதத்திற்கு மட்டும் உங்களை வைத்திருப்பார் என்று நினைக்காதீர்கள், அற்புதம் செய்துகொண்டே இருப்பார். நீங்கள் ஜெபம் செய்துகொண்டே இருப்பீர்கள். உங்களுக்கு தேவையானதைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார் என்று நினைக்காதீர்கள். அவர் வழிக்கு உங்களை உருமாற்றிக்கொண்டே வருவார், உருவாக்கிக்கொண்டே வருவார். அவர் செய்ய நினைத்ததை, உங்களைக்கொண்டு செய்வதற்கு உங்களில் செய்படுவார். அதை நாம் செய்யாதபோது, அவர் வழிக்கு நம்மைக் கொண்டுவர அவர் முயற்சியெடுத்து

செயல்படுவார். ஆக, இதுதான் ஆவிக்குரிய வாழ்வில் நடைபெறுகிற காரியம். அதைப் புரியாமல் சிலர் சொல்லுகிறது, நான் தொழில் நிறைய செய்து பார்த்தேன், அது நஷ்டமடைந்துபோய் விட்டது, எல்லாம் சாத்தான் நஷ்டமாக்கி விட்டான், வேறுவழியில்லை, ஊழியத்திற்கு வந்துவிட்டேன். இன்று ஆவிக்குரிய வட்டாரத்தில் பார்த்தால் அநேகர் சொல்லுகிறது சாத்தான் கிரியை செய்துவிட்டான். தூக்கம் வந்தாலும் சாத்தான், தூக்கம் வராவிட்டாலும் சாத்தான். நன்றாக சாப்பிட்டாலும், சாத்தான், நன்றாக சாப்பிட முடியாவிட்டாலும், சாத்தான்தான் காரணம் என்று கூறுகிறார்கள். நாம் தொழுதுகொள்ளுகிற கர்த்தர் எங்கே போனார்? ஊழியர்கள் கொஞ்சம் சிந்தித்து, ஒழுங்காக மக்களை நடத்துங்கள். எதற்கெடுத்தாலும், எந்த தோல்வியான காரியங்களுக்கும் சாத்தான்தான் காரணம் என்று சொல்லிக் கொடுக்காதீர்கள். அவன் பிறகு கர்த்தரை தொழுதுகொள்கிறதை விட்டுவிட்டு எப்போது பார்த்தாலும், மறைமுகமாக சாத்தானுக்குத்தான் மகிமையைச் செலுத்துவான். எனக்கு சாத்தான் இதைச் செய்துவிட்டான், அதைச் செய்துவிட்டான் என்று சொல்லுவான் என்றால், அது சாத்தானுக்கு சந்தோஷமாக இருக்கும். அவன் எதுவும் செய்யாமலிருந்திருப்பான், இப்போது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும். பரவாயில்லையே, நான் எதுவுமே செய்யவில்லை. ஆனால் அந்த பையன், இந்த மகள், நான் இந்த தொழிலை, படிப்பை கெடுத்ததாக சொல்லுகிறான் என்று சொல்லி, அவன் மிகுந்த வல்லமை உள்ளவன் என்று நினைத்துக்கொள்ளுவான், இல்லையா? அவ்வாறு கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஆம், பிரியமானவர்களே, சாத்தானுக்கு மகிமையைச் செலுத்தாதீர்கள். சாத்தான், சாத்தான் என்று சொல்லி, எதற்கெடுத்தாலும் சாத்தானை முக்கியப்படுத்தாதீர்கள். உன் தொழிலில் சாத்தான் கை வைத்துவிட்டான், சாத்தான் உன் குடும்பத்தை கெடுத்து விட்டான், இந்த பிரச்சனைகள் எல்லாம் சாத்தானால்தான் நடைபெற்றது என்று சொல்லாதீர்கள், இல்லையில்லை. நீங்கள் பெருமைப்பட்டுக்கொண்டே இருந்தால், கர்த்தரே எதிர்த்து வருவார் என்பதை சொல்லிக் கொடுங்கள், நீங்கள் கர்த்தரிடம் உபவாசமிருந்து ஜெபம் செய்கிறீர்கள், அவர் உங்கள் வாழ்வில் செயல்படவே மாட்டாரா? நீங்கள் கேட்கிற பணத்தை கொடுப்பதற்கும், நோயை மாற்றுவதற்கும், உங்களை ஆசீர்வாதமாக வைப்பது மட்டும்தான் அவர் வேலையா? வேறே எதுவுமே அவர் உங்களிடம் சொல்லிவிடக்கூடாது, உங்களைப் பயன்படுத்தி விடக்கூடாது. உங்களைப் பார்த்து, மகனே, மகளே, என் சித்தத்தை செய்வாயா? என்று கேட்டுவிடக் கூடாது. நீங்கள் எளிதாக வருவீர்கள், வந்து அவரிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு போவீர்கள். அவர் ஒரு ஓரமாக உட்கார்ந்து இருப்பார். ஆனால் செய்வதெல்லாம் சாத்தான்தான் என்கிறீர்கள். இதற்கு என்ன அர்த்தம்? ஆவிக்குரிய விழிப்புணர்வு கிறிஸ்தவர்கள் மத்தியில் இல்லை பிரியமானவர்களே. ஏதோ ஒருவிதத்தில் கிறிஸ்தவத்தை தள்ளிக்கொண்டிருக்கிறோம். போதகர்களாகிய நீங்கள்தான் அதை சரிபண்ண சொல்லிக் கொடுக்கவேண்டும். வேதம் சொல்லுகிறபடி சொல்லிக் கொடுங்கள். கர்த்தர் உங்கள்

வாழ்வில் எல்லாக் கட்டுப்பாட்டையும் உடையவராய் இருக்கிறார். சாத்தான் வந்து, உங்களை சோதிக்கிறதாக இருந்தாலும், அவன் கர்த்தரிடம் அனுமதி பெற்றுத்தான் வரவேண்டும். அவன் தீமைசெய்கிற காரியத்தைகூட, தேவன் நன்மையாக மாற்றுவார் என்றுதான் வேதம் சொல்லுகிறது. நீங்கள் கர்த்தரை முறையாக, முழுமையாக பிடித்துக்கொண்டு, சரியாக அவரை தொழுதுகொண்டிருப்பீர்களானால், எல்லாம் சரியாய்ப்போகும், நிம்மதியாகப் போகும், சமாதானமாகப் போகும். நீங்கள் இந்த ஆரோக்கியமான விசுவாசத்திற்குள் வராமல், எதற்கெடுத்தாலும் சாத்தான்தான் காரணம் என்று சொல்லுவீர்களானால், உங்களது நிம்மதியை நீங்கள்தான் கெடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். அதை நான் தெளிவாக சொல்லி விட்டேன் பிரியமானவர்களே.

எது நடந்தாலும், அதாவது ஒரு கடன், ஒரு கஷ்டம், ஒரு நோய், வந்துவிட்டாலே, உடனே சாத்தான், சாத்தான் தான் காரணம் என்று சொல்லுவீர்களானால், ஐயோ, சாத்தான் வந்துவிட்டானே, என்ன செய்வது என்ற கலக்கம்தான் வருமேயொழிய, மாறாக என் கர்த்தருடைய கட்டுப்பாட்டில் நான் இருக்கிறேன், அவர் சரியாக நடத்துவார், இதெல்லாம் மாறிப்போகும். இது ஏதோவாரு சூழ்நிலையில் வந்திருக்கலாம், சாத்தான் இதற்கு காரணம் என்று சொல்லமாட்டேன், என்று மனதிற்குள் உறுதியாக நீங்கள் இருப்பீர்களானால், உங்களுடைய நாவுகள் கர்த்தரைத் துதிக்கும். கர்த்தாவே இந்த சூழ்நிலையில் நான் உம்மைத் துதிக்கிறேன். நீர் என்னை சரியாக நடத்துவீர், உம்முடைய கட்டுப்பாட்டை மீறி எதுவுமே நடக்காது, எல்லாம் உம்முடைய சித்தத்தின் அடிப்படையில் நடக்கிறது என்ற ஒரு ஆரோக்கியமான விசுவாசம் இருக்குமென்றால், தேவன் என்னை ஊழியத்திற்கு ஏற்படுத்தி இருக்கிறார் என்று நம்புவீர்கள். பவுல் அதைத்தான் உணர்ந்து சொல்லுகிறார், நான் ஊழியத்திற்கு ஏற்படுத்தப்பட்டேன் என்று தெளிவாகக் கூறுகிறார். அதற்கு, அந்த ஊழியக்காரனின் தலைமைத்துவத்தில், அவனைப்பற்றி என்ன சொல்லப்படுகிறது? அவனுடைய பண்பு என்ன? அவன் ஊழியக்காரன், அவன் ஒரு சேவகனாக இருக்கிறான்.

தலைமைத்துவ பண்புகளில் மற்றொன்று, அவன் ஊழியக்காரன், தலைமைத்துவத்தில் நீங்கள் இதை உணரவேண்டும். நான் ஒரு ஊழியக்காரன். இயேசுகிறிஸ்து எப்படி ஒரு ஊழியக்காரராய் இருந்தார்? பாருங்கள். அவர் தம்மைத்தாமே தாழ்த்தி, ஒரு ஊழியக்காரனைப்போல ஊழியம் செய்து காண்பித்தார், ஊழியக்காரனாகவே வந்தார் என்றுதான் மாற்கு, தன்னுடைய சுவிசேஷப் புத்தகத்தில் அப்படித்தான் சித்தரிக்கிறார். மாற்கு 10:45-ம் வசனத்தில், ‘அப்படியே மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தன்னுடைய ஜீவனையும் கொடுக்கவே வந்தார்’ என்று கூறுகிறதைப் பாருங்கள். ஆக, அவரைப்போன்ற ஊழியக்காரனுடைய இருதயம் நமக்கு தேவை. ஊழியம் கொள்ளும்படி அவர் வரவில்லை, ஊழியம் செய்யும்படி வந்திருக்கிறார். ஊழியர்களாகிய நாம் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நாம் ஊழியம் கொள்ளும்படி வரவில்லை, ஊழியம் செய்யும்படி வந்திருக்கிறோம். எல்லாவற்றையும் நான்தான் செய்வேன் என்று சில போதகர்கள் நிற்கிறதை நாம் பார்க்கிறோம், அவ்வாறு இல்லை. உங்களது அழைப்பில் நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். உங்களது காரியத்தில், அதாவது, நீங்கள் போதனை ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள், ஒரு போதகராக இருக்கிறீர்கள். ஆகவே, செய்தியை ஆயத்தப்படுத்துவது, அந்த சபையை நடத்துவது, ஆலோசனை கொடுப்பது, அதற்காய் ஜெபிப்பது போன்றவற்றை முக்கியமாகச் செய்யவேண்டும். அதில் மற்ற தலைவர்களை ஏற்படுத்தி, அவர்களையும் நீங்கள் பயன்படுத்த வேண்டும். உங்களுக்கு தேவை, ஒரு ஊழியக்காரனின் இருதயம், அதாவது Humble heart, தாழ்ந்தவொரு சிந்தையோட, ஊழியத்தை, இயேசு செய்ததுபோல நீங்களும் செய்ய பழகவேண்டும். அது தலைமைத்துவத்தில் ஒரு பங்கு. இயேசு கூறுகிற தலைமத்துவம் இதுதான்.

*3*-வது காரியம், தலைவன் என்பவன் முன்மாதிரியானவன். ஆம், நீங்கள் ஒரு மேய்ப்பனாக, போதகனாக இருந்தீர்களானால், முன்மாதிரியானவர்களாகிய நீங்கள்தான் தலைவர்கள். மற்றவர்கள் தங்களை பின்பற்றக்கூடியவாறு வார்த்தையிலும், நடக்கையிலும் முன் மாதிரியைக் காண்பிக்க வேண்டுமென்று நீங்கள் *1* கொரி.*4:16*, *1* பேதுரு *5:3* போன்ற வசனங்களில் பார்க்க முடியும். நடத்தையில், வார்த்தையில், இரண்டிலும் மாதிரியாக இருக்க வேண்டும். சிலர் வார்த்தையில் எடுத்துகாட்டை காண்பிப்பார்கள். நான் அப்படியிருப்பேன், இப்படியிருப்பேன் என்று பேசுவார்கள், ஆனால் நடத்தையில், ஆளைக் காணாது போய்விடும். பெருமை பயங்கரமாக இருக்கும். வார்த்தையில் மனதுருக்கம் வரும், ஆனால் நேரடியாக மனதுருக்கம் வராது, அதாவது, செயலில் மனதுருக்கத்தைக் காண முடியாது. அதனால்தான் வேதம் தெளிவுபட கூறுகிறது, ஐயா, வார்த்தையிலும், நடத்தையிலும் முன்மாதிரியைக் காண்பி என்று வேதம் சொல்லுகிறது. நீங்கள் நல்ல தலைவனாக இருந்தால், உங்களது வார்த்தையும், செயலும் இணைந்து போகும். *1* கொரி.*4:14*-ல், 'ஆகையால் என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள் என்று உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்' என்று பவுல் எவ்வளவு தைரியமாய்ச் சொல்லுகிறார் பாருங்கள். அந்தளவுக்கு தன்னை முன் மாதிரியாக வைத்துப் பேசுகிறார். என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள். நான் இயேசுவைப் பின்பற்றுகிறதுபோல, என்னைப் பின்பற்றுங்கள் என்று சொல்லக்கூடிய தைரியம் வேண்டும். நீங்கள் சிலரைப் பார்த்தீர்களானால், என்னையைப் பார்க்காதீர்கள், இயேசுவைப் பாருங்கள், மனிதர்களாகிய நாம் பெலவீனமானவர்கள்தான், கோபப்படுவோம், சண்டை போடுவோம். அவையெல்லாம் இயற்கை என்று சொல்லுகிற சிலரைப் பார்க்கிறோம். பவுலைப்போல உங்களால் சொல்லக்கூடுமா? சொல்ல வேண்டும். ஆம், முன்மாதிரியாய் உங்களை வைத்து,

மற்றவர்களைப் பின்பற்ற அழைப்பைக் கொடுக்கிற நல்ல தலைவர்களாய் இருக்கிறவன்தான் சிறந்த தலைவன்.

4-வது காரியம், தலைவன் என்பவன் தரிசனமுடைய மேய்ப்பனாக இருப்பான், அதாவது ஒரு ஊழியன் தனது ஊழியம், அழைப்பு, அதை எப்படியாக நிறைவேற்ற முடியும்? போன்றவற்றைக் குறித்த கரிசனையும், பாரமும் உள்ளவனாக இருப்பான். அவன் மிஷனெரியாக இருப்பான். மிஷனெரியாக இருக்கிறவன் தரிசனமுடையவனாகவும் இருப்பான். தரிசனமுடைய நல்ல தலைவனாக, ஒரு மேய்ப்பன் இருக்கிறான். தன் சபை இப்படியாக வளர்ச்சியடைய வேண்டும், இவ்விதமான ஆவிக்குரிய வளர்ச்சியடைய வேண்டும், ஆத்துமாக்களினால் இவ்வாறக நிரம்பவேண்டும். தன்னுடைய சபையின் வளர்ச்சி, இந்த விதமான ஆவிக்குரிய ரீதியில் மிகவும் தரமானதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் ஒரு கரிசனையும், தரிசனமும் உடையவன்தான் மேய்ப்பன். அப்படிப்பட்ட தரிசனமுடையவனாக இருக்கிறவன், தலைவன்.

5-வது காரியம், பகிர்ந்தளிக்கிறவனாக இருப்பான், அதாவது ஒரு ஊழியன், மேய்ப்பன், தன்னுடைய வேலையை, அதிகாரத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுகிற ஒரு தலைவனாக இருப்பான். அப்படி, வேலையை, பணியை, ஊழியத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுகிற ஊழியன், அந்த வேலையை செவ்வையாகச் செய்வான், திறம்படச் செய்து முடிப்பான். எல்லோருடைய பெலனையும், ஆற்றலையும் பயன்படுத்த முடியும். அதோடுகூட தன்னுடைய அழைப்பை விட்டுக்கொடுக்காமல், அதிலேயும் நாம் திறமையாக இருக்க முடியும். அவரவர்கள் திறமையைப் பார்த்து, அவர்களின் திறமையை பயன்படுத்துகிறவனாய் இருக்கிறவன்தான் தலைவன். சிறந்த தலைவனுக்கு இருக்க கூடிய இன்னுமொரு பண்பைக் குறித்து நாம் சிந்திப்போம். இந்த பகிர்ந்தளிப்பவன் என்பவன் நல்ல தலைவன். அடுத்து, இந்த சிறந்த தலைவன் ஒரு நல்ல உக்கிராணக்காரன்போல், தன்னையே நிர்வாகம் செய்யக்கூடியவனாகவும் இருப்பான். தனது நேரம், பணம், சக்தி, வாஞ்சைகள், அனைத்தையும் ஏற்ற விதத்தில் பயன்படுத்துகிறவனாய் இருப்பான். ஆம் பிரியமானவர்களே, உக்கிராணக்காரன், அதாவது உங்களுக்கு நீங்களே நல்ல அதிகாரியாக இருப்பீர்கள். நேரத்தை சரியாக பயன்படுத்த வேண்டும். ஒரு ஊழியன், ஒரு முக்கியமான இடத்திற்கு வந்தவுடன், உங்களது நேரம் மிகவும் முக்கியம். கதை பேசுகிறதிலும், நேரப்போக்கிலும் உங்களுடைய நேரங்கள் போகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுடைய பணம், உங்களுக்கிருக்கிற சக்தி, பெலன், வாஞ்சை போன்ற அனைத்தையும் சரியான நோக்கத்தோடு, சரியான முறையில் வலியுறுத்தி பயன்படுத்துகிறவன்தான் நல்ல தலைவனாக இருக்கிறான்.

அதைப்போல, சிறந்த தலைவன் நல்ல பயனுள்ள விதத்தில் தொடர்புகொள்ளுகிறவனாக இருப்பான். அவனுடைய தகவல் தொடர்பு மிகவும்

பயன்தரத்தக்கதாக இருக்கும். தன்னுடைய எண்ணங்களை, கருத்துக்களை, செய்தி போன்றவற்றை மற்றவர்கள் புரியும்வண்ணமாக, இலகுவாகச் சொல்லுவான். மட்டுமல்ல, அதை வலயுறுத்திக் கூறி மனதில் தாக்கத்தை சென்றடையுமளவுக்கு அவன் பேசுகிறவனாய் இருப்பான். நீங்கள் சிந்தைக்கு பேசாமல், இருதயத்திற்கு பேச வேண்டும். இருதயத்தைச் சென்றடைகிற அளவுக்கு உங்களது கருத்துக்களைக் கொண்டுபோய்ச் சேர்க்க திறமையுள்ள தலைவனாக இருக்கவேண்டியது அவசியம். ஒரு மேய்ப்பன் அப்படித்தான் இருக்க வேண்டும். சும்மா, எல்லோரும்தான் செய்தி கொடுக்கிறார்கள். நீங்கள் கொடுக்கிற செய்தி வித்தியாசமாக இருதயத்தை சென்றடைந்து, அவர்கள் அர்ப்பணிக்க கூடிய அளவில் இருக்க வேண்டியது அவசியம்.

மேலும், சிறந்த தலைவனாகிய மேய்ப்பன், தீர்மானம் எடுப்பதிலே ஞானத்தோடு நடந்து கொள்ளுவான். அதாவது தீர்மானம் எடுப்பதிலும், அதை நிறைவேற்றுவதிலும் ஞானமுள்ளவனாக இருப்பான். சும்மா, சும்மா தீர்மானம் எடுத்துவிட மாட்டான். சும்மா, சும்மா முடிவெடுத்து எதையும் செய்துவிட மாட்டான். ஒன்றை முடிவுசெய்வதற்கும், அதிகமாய்ச் சிந்திப்பான். அதை முடிவுசெய்த பிறகு அதை நிறைவேற்றுவதில் தீவிரமாக இருப்பான். அவன்தான் சிறந்த தலைவன், ஊழியன், மேய்ப்பன். அடுத்து, சிறந்த தலைவன் ஜனங்களை அரவணைத்து, அவனோடு அழைத்து செல்லக்கூடியவனாய் இருப்பான். மக்களை விரட்டுகிறவனாகவோ. சாபமிடுகிறவனாகவோ, இழுத்துக்கொண்டு ஓடுகிறவனாகவோ இல்லாமல், சிறந்த அணுகுமுறையில் மனதுருக்கத்தோடு, அன்போடு, ஞானத்தோடு அந்த மக்களை அணுகி, தான் கொண்டிருக்கிற இலக்கை நோக்கி, அருமையாக அழைத்துச் செல்லுகிற நல்ல தலைவனாக அவன் இருப்பான்.

பிரியமானவர்களே, இன்னும் அநேக காரியங்களை வருகிற பாடங்களிலும் கற்றுக்கொள்ள இருக்கிறோம். தலைவன் எவ்விதமாக இருக்கிறான்? அதுவும் மேய்ப்பனும், போதகனுமாய் இருக்கிறவனுடைய தலைமைத்துவம் எப்படியிருக்கும்? என்பதான அநேக காரியங்களை தொடர்ந்து கற்றுக்கொள்ளப் போகிறோம். ஜெபத்தோடு பாடங்களை கற்றுக்கொள்ளுங்கள், கர்த்தர்தாமே உங்களை அதிகமாக ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1) மேய்ப்பன் தன்னை அபிவிருத்தி செய்துகொள்வதில், அதிகமாக வாசிக்க வேண்டியதைக் குறித்து விளக்கமாக கூறுக?
2) நம்முடைய ஆத்துமாவின் விலையேறப்பெற்ற தன்மையை அறிந்துகொள்ள வேண்டியதின் அவசியத்தைக் கூறுக?
3) வாசிப்பதற்கு உதவியாக நமக்கிருக்கிற ஏதுக்களை வரிசைப்படுத்திக் கூறுக? (புத்தகங்களின் பெயர்கள், வாய்ப்புகள்)

4) மேய்ப்பன் அல்லது போதகனுடைய உறவுகள் எப்படியிருக்க வேண்டும் என்பதனை வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
5) புதிய ஏற்பாட்டு, கிருபையின் மேன்மை எத்தகையது?
6) மேய்ப்பன் தலைமைத்துவத்தை எவ்வாறு கைக்கொள்ள வேண்டும் என்பதனை தலைமைத்துவ மாதிரிகளுடன் விளக்கமாக கூறுக?
7) தலைமைத்துவத்தைக் குறித்து காங்கல் என்பவர் கூறியிருக்கிற வரைவிலக்கணத்தைக் கூறுக?
8) தலைமைத்துவத்திற்கு உதாரணமாக வேதத்தில் கூறப்பட்டுள்ள பாத்திரங்களை குறித்தும், அவர்களிலிருந்து நாம் கற்றுக்கொள்கிற தலைமைத்துவ பண்புகளைக் குறித்தும் வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
9) தலைமைத்துவ பண்புகளை வரிசைப்படுத்திக் கூறுக? (தலைப்புகள் மட்டும்)

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - *13*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். சென்ற பாடத்தின் இறுதியில் ஒரு மேய்ப்புபணி தலைமைத்துவத்தின் பண்புகள் எப்படியிருக்கும் என்பதைப் பற்றி கற்றோம். அதுகுறித்து மேலும் சிலவற்றை நாம் இந்தப்பாடத்தில் கற்றுக்கொள்ளப்போகிறோம்.

**சிறந்த தலைவன் கிரையம் செலுத்தவும் தயங்காதவனாக இருப்பான்.** அதாவது ஊழியத்திற்கென நேரத்தை, பணத்தை தன்னுடைய சக்தியை, பெலனை எல்லாவற்றையும் செலவழிக்க, அதைக் கிரையமாய்ச் செலுத்த அவன் தயங்க மாட்டான். காரணம், ஊழியம் என்பது, கிரையம் செலுத்தக்கூடியது. கிரையம் செலுத்தாமல், எதையுமே செய்யாமல், நாம் ஊழியம் செய்ய இயலாது பிரியமானவர்களே. *2* தீமோ.*4:4-5* வசனங்கள், ‘நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. ஏனென்றால் நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தைவிட்டு பிரியும் காலம் வந்தது’ என்று பவுல் கூறுகிறார். அடுத்து *4:6*-ம் வசனத்தில், ‘நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்’ என்று சொல்லுகின்றார்.

இவை எல்லாவற்றையும் சேர்த்து வைத்துப் பாருங்கள். ஊழியக்காரனுடைய வேலையைச் செய், அதாவது ஊழியத்தை நிறைவேற்று, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், இதற்கென சில தீங்குகளை அநுபவிக்க வேண்டியதிருக்கும். நீ அதனால் மனத்தெளிவுள்ளவனாக இருந்து, தீங்கு அநுபவி, பொறுத்துக்கொள், சகித்துக்கொள். நான் அப்படித்தான் சகித்து, நல்ல போராட்டத்தைப் என்னுடைய ஊழிய வாழ்வில், விசுவாச வாழ்வில் போராடினேன். விசுவாச வாழ்வு என்றாலே, ஊழியத்தோடு இணைந்ததுதானே. ஆகவே நான் அதைக் காத்துக்கொண்டேன். அப்படி காத்துக்கொண்டு என்னுடைய வாழ்வே பானபலியாக வார்க்கப்பட்டுப்போய் விட்டது. பானபலியைக் குறித்து நாம் எண்ணாகமம் *15*-ம் அதிகாரத்தில் வாசிக்க முடியும். இன்னும் வேறுசில இடங்களிலும் சில குறிப்புகள் இருக்கின்றன. ஆட்டுக்குட்டி போன்றவற்றை பலிசெலுத்தும் முன்னர் பானபலியாக காற்படி திராட்சை இரசத்தையும் படைக்க வேண்டுமென்று எண்.*15:5*-ல் சொல்லப்பட்டிருக்கிறது. எண்.*15:7*, ‘பானபலியாக *3* படியில் *1* பங்கு திராட்சை இரசத்தையும் கர்த்தருக்கு சுகந்த வாசனையாகப் படைக்க வேண்டும்’ என்று அங்கே சொல்லப்பட்டிருக்கிறதைப் பாருங்கள். ஆக, இவ்விதமாக பானபலியாக பவுல் தன் வாழ்க்கையை ஊற்றிவிட்டதாக கூறுகிறார். அது சுகந்த வாசனையான படைப்பாக இருக்கிறது. அவருடைய வாழ்வு, ஊழியமெல்லாம், கர்த்தருக்கு சுகந்த வாசனையான

காணிக்கையாய், பலியாக இருக்கிறதாக அர்த்தம் கொள்ளலாம். ஆம் பிரியமானவர்களே, நீங்கள் இவ்விதமாக உங்கள் வாழ்வை கர்த்தருக்காக ஊற்றிவிட வேண்டுமென்றுதான் பவுல் வலியுறுத்துகிறார். தியாக சிந்தையோடு, ஊழியத்தின் பொருட்டு தீங்கு அநுபவிக்ககூட தலைவர்கள் முன்வருவார்கள். அவர்கள்தான் சிறந்த தலைவர்கள். இயேசுகிறிஸ்துவின் வாழ்வையும், பவுலின் வாழ்வையும் இந்த இடத்தில் சற்று சிந்தித்துப் பாருங்கள், எவ்வளவு தீங்கநுபவித்தார்கள்? பவுல் ஊழியத்தினிமித்தமாக எவ்வளவு பாடுகளை சகித்தார்? அவரே அந்த நிருபங்களில் சொல்லுவதை நீங்கள் வாசித்து அறிய முடியும்.

பிரியமானவர்களே, ஊழியத்தினிமித்தம் பல பாடுகள், சில தீங்குகள் செய்யாத காரியங்களுக்காக குற்றம் சாட்டப்படுகிற பல காரியங்கள் வரலாம், குறைவுகள் வரலாம், பொருளாதார குறைபாடுகள் கூட ஏற்படலாம். ஆனால் சற்று சகித்தால் ஏற்றவேளையில் தேவன் அதற்கு உதவுகிறதையும் நீங்கள் பார்க்க முடியும். ஆனால் கிரையம் செலுத்த நீங்கள் தயங்காமல் இருக்க வேண்டுமென்பதுதான் உங்களைப் பொறுத்தமட்டில் கர்த்தர் எதிர்பார்க்கிற காரியம். ஆகவே நீங்கள் ஊழியத்தில் எனக்கென்ன இலாபம் என்பதை மாத்திரம் பார்க்காமல், சில இடங்களில், அதாவது கிரையம் செலுத்த வேண்டிய இடத்தில் செலுத்த தயங்காதவர்களாக இருக்கவும் கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆனால், பொதுவாக, எனக்கென்ன இலாபம்? ஊழியம் செய்தால், என்னை கர்த்தர் எந்த விதத்தில் ஆசீர்வதிப்பார்? எனக்கென்ன உயர்வு? என்றுதான் எல்லோருடைய மனமும் பார்க்கிறதாக இருக்கிறது. நமக்கு எதிர்பார்ப்பு இருக்க வேண்டும்தான். நான் ஊழியம் செய்வதினால் எந்த நஷ்டத்தையும், சில தீங்குகளையும் சகிப்பதினால் ஆத்துமாக்கள் கர்த்தரண்டை வருவார்கள் என்றால், அதையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறேன் என்று கடந்துபோகிற ஊழியனே, சிறந்த தலைவனான, சிறந்த மேய்ப்பனான, ஊழியனாக இருக்கிறார்.

**அடுத்து, சிறந்த தலைவன் எப்போதுமே, விசுவாசத்தோடுகூட நேர்மறையான விதத்திலே சிந்திக்கிற ஒரு தலைவனாக இருப்பான்.** நேர்மறையான சிந்தனை தேவை. பிரியமானவர்களே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லுகிறார்கள், ஆனால் நேர்மறையாக, சிந்திக்கிற சிந்தை சில ஊழியர்களுக்கு இல்லவே இல்லை. எதைக்குறித்தும் எதிர்மறையாகவே பேசுவார்கள், எதிர்மறையாகவே சிந்திப்பார்கள். நல்லது நடக்கும், கர்த்தர் நன்மையாக முடியப்பண்ணுவார் என்ற மாதிரியான எண்ணமில்லாமல், இப்படியாகி விட்டால் என்ன செய்வது? ஐயா, நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான். ஆனால் கொஞ்சம் நடைமுறையாகவும் பார்க்க வேண்டுமல்லவா? என்று சிலர் சொல்லுவார்கள். விசவாசத்தோடு நேர்மறையாக சிந்திக்கவோ, நேர்மறையாக இறங்கி செயல்படவோ மாட்டார்கள். முன்னே, அவர் ஆரம்பித்து என்ன வெற்றியைக் கண்டுவிட்டார்? நாம் செய்துவிடுவதால், மாற்றம் ஏதும் நிகழ்ந்து விடாது என்று சொல்லுகிற அநேக தலைவர்களை, ஊழியர்களை பார்க்க முடியும். அவர் முயற்சி வேறு, உங்களுடைய

முயற்சி வேறு, அவரின் அழைப்பு வேறு, உங்களின் அழைப்பு வேறு, அவருக்கிருக்கிற தாலந்து வேறு, உங்களுக்கிருக்கிற தாலந்து வேறு. நீங்கள் அணுகவேண்டிய விதத்தில் மக்களை அணுகுகிற ஒரு நல்ல அனுபவத்தை பெற்றவர்களாக இருப்பீர்கள். நீங்கள் அந்த காரியத்தை மக்களுக்கு அருமையாக, எளிமையாக, உற்சாகமாக எடுத்துச் சொல்வதினால், நீங்கள் சாதிக்கும் திறமையுடையவர்களாக இருப்பீர்கள். அது அந்த மனிதரிடத்தில் இல்லாமலிருக்கலாம் அல்லவா? அதை சற்று யோசிக்க மாட்டோம் என்கிறோம்.

உதாரணமாக, ஒரு சகோதரரிடத்தில், ஐயா, நீங்கள் உங்கள் சபையில் 'Spoken English' வகுப்பு ஒன்றை ஆரம்பித்து, அவர்களை நீங்கள் ஊழியத்தில் பயிற்சி கொடுக்கலாம். உங்களிடம் வருகிறவர்களிடத்தில் இயேசுவைப் பற்றி அறிவித்து அவரண்டை கொண்டுவரலாமே என்றேன். உங்களிடம் நன்றாக ஆங்கில அறிவு (Knowledge) இருக்கிறது என்று கூறினபோது, இல்லை, அப்படி யாரும் படிக்க வரமாட்டார்கள், ஏனெனில் இதற்கு முன்னே ஒரு ஊழியர் அப்படி ஆரம்பித்தபோது, ஒரேயொருவர் மாத்திரமே வந்தார், தோற்றுப்போய்விட்டார். அவர் ஆரம்பித்த அவருடைய முயற்சி தோல்வியடைந்து விட்டது. ஆகவே நான் அதைச் செய்ய விரும்பவில்லை. அது ஏற்கனவே தோற்றுப்போன விஷயம் என்றார். நான் உடனே அவரைப்பார்த்து, அவர் ஆரம்பித்து அணுகுகிற விதம் வேறு, அவர் ஒருவேளை சும்மா ஆரம்பித்து, வாருங்கள் என்ற அறிவிப்பை மட்டும் கொடுத்து முடித்திருப்பார். ஆனால், நீங்கள் மக்களோடு மக்களாகப் பழகுகிறவர், அன்பானவர், உங்களுடைய அணுகுமுறைக்கே சிலர் வருவார்கள் அல்லவா? அப்போது, நீங்கள் சற்று விளக்கப்படுத்தி, கொஞ்சம் அவர்களுக்கு புரியும்வண்ணம் சொல்லி, இதன் முக்கியத்துவத்தைச் சொல்லி வருகிற நாட்களில் ஊழியத்திற்கு, வேலைக்கு, நேர்காணலுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று விளக்கப்படுத்தி, அன்பாய்ச் சொல்லும்போது, நீங்கள் ஒருவேளை சாதிக்க முடியும் அல்லவா? வெற்றிபெற முடியுமல்லவா? என்று கூறினேன். இதை நீங்கள் முதலாவது உணரவேண்டும். அதைவிட்டு யாரோ பலர் தோற்றுப் போனார்கள் என்பதற்காக, நீங்கள் செய்யலாமலிருப்பது தவறு. கர்த்தர் உங்களுக்கு அழைப்பைத் தந்திருக்கிறார், தாலந்துகளைத் தந்திருக்கிறார், நல்ல பேசும் திறமையைத் தந்திருக்கிறார். உங்கள் அணுகுமுறை வேறு, சாதனையாளர்களின் அணுகுமுறையே வேறு, அவர் எப்பொழுதும் நேர்மறையாக சிந்திப்பார். முயற்சியெடுத்து அதை சாதிக்கவேண்டுமென்ற வெறியோடு செயல்படுவார். இரவு, பகலாய் அதற்கென ஒரு smart work செய்வார், கடின உழைப்பெல்லாம் பழைய காலம். இப்போது smart work செய்ய கற்றுக்கொண்டு சிறப்பாக செயல்படுகிற இடத்தில் நீங்கள் இருக்கும்போது வெற்றிதான் என்பதை நினைவில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் பிரியமானவர்களே. அப். பவுல் சொல்லுகிறதுபோல, என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால், எல்லாவற்றையும் செய்ய

எனக்குப் பெலனுண்டு என்ற நேர்மறையான அறிக்கையை தன்னுடைய அடித்தளமாகக் கொண்டிருப்பவன்தான் சிறந்த தலைவன் பிரியமானவர்களே.

**அடுத்து சிறந்த தலைவன் மற்றவர்களை விளங்கிக் கொள்ளுகிற இடத்திலிருப்பான்.** ஆம், சபைக்கு பலதரப்பட்ட மக்கள் வருவார்கள். பல சூழ்நிலைகள், பின்னணிகள், பிரச்சனைகள், இதன் மத்தியில்தான் அவர்கள் சபைக்கு வருவார்கள். நல்ல நிலையில் கர்த்தரைத் தேடி வருகிற கூட்டம் மிகவும் குறைவு. நிச்சயமாய் பிரச்சனையோடுதான் அவர்கள் சபைக்கு வருவார்கள். இயேசுவைத் தேடி வருவார்கள். ஆக, ஒவ்வொருவரின் பிரச்சனை வேறு, வேறுவிதமாக இருக்கும். அந்த பிரச்சனைக்கேற்ற விதமாய், அந்த மக்களுக்கேற்ற விதமாய், அணுகுவது எப்படியென்று ஒரு சிறந்த தலைவனுக்கு தெரியவேண்டும். அப்படித் தெரிந்து செயல்படுகிறவன்தான் சிறந்த தலைவன், சிறந்த ஊழியம். பிரியமானவர்களே, மற்றவர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சில ஊழியர்களைப் பார்க்கிறோம், அவர்கள் விசுவாசத்தை மட்டும் சொல்லுவார்கள், சூழலைப் பார்க்கவே மாட்டார்கள். ஐயா, போதகரே, எங்கள் வீட்டில் இந்த நிலை என்று நிறையபேர் சொல்லுவார்கள், எந்த நிலையாக இருந்தால் என்ன? விசுவாசத்தில் புறப்பட்டு வா, உன் கணவனுக்கு சோறு சமைப்பாயோ, இல்லையோ, போட்டுவிட்டு ஓடிவா, கூடுகைக்கு நீ முன்னாடி வந்து இருக்கவேண்டும், அவ்வளவுதான் என்று சில போதகர்கள் கடினமாகச் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். அவிசுவாசியான கணவனை வீட்டில் வைத்துவிட்டு, சாப்பாடுகூட பொங்கிப் போடாமல், ஒரு மனைவி சபைக்கு போய்விட்டு வருகிறாள் என்று வைத்துக் கொள்ளுங்களேன். பிறகு பிரச்சனை உருவாகும். கடைசியில் அந்தப் பெண்மணியின் விசுவாச வாழ்வுக்கு வாய்ப்பே இல்லாமல், வீட்டில் அவரை பூட்டி வைக்கப்படுகிற நிலை உண்டாகும், அல்லது வரவிடாமல் தடுத்துவிடுவார் அல்லது அந்த குடும்பம் பிரிந்துபோகிறதைப் பார்க்கலாம். பிரியமானவர்களே, அதற்கு ஏற்றவிதமாக நீங்கள் சற்று சீக்கிரம் எழும்பி, கணவருக்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்துவிட்டு வாருங்கள் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். அந்த சூழ்நிலையைப் புரிந்து சொல்லுகிறவர்தான் நல்ல ஊழியராய், சிறந்த தலைவராய் இருக்கின்றார்.

**அடுத்து, சிறந்த தலைவன், ஊழியன் எப்போதும் மற்றவர்கள் சிறப்பாக ஒரு காரியத்தைச் செய்யும்போது, பாராட்டுகிறவனாய் இருப்பான்.** இந்த பாராட்டுகிற பண்பு, ஒரு ஊழியனுக்கு, தலைவனுக்கு அல்லது மேய்ப்பனுக்கு மிக மிக தேவை. மக்கள் பொதுவாக பாராட்டை விரும்புவார்கள். அது யாராக இருந்தாலும் சரிதான், பாராட்டுதலை எல்லோருமே விரும்புவார்கள். ஒரு புத்தகத்தில் ஒரு சம்பவத்தைப் பற்றி வாசித்தேன். சிலருக்கு, புகழ்வது அல்லது புகழ்ந்தால் அவருக்கு பிடிக்காது என்று சிலர் சொல்லுகிறதைப் பார்ப்பீர்கள். அந்த மக்களிடம் நான் என்ன சொல்லவேண்டும் தெரியுமா? உங்களுக்கு புகழ்ச்சியே பிடிக்காது. அதனால் நான் எதையும் சொல்லவில்லை என்றாலே,

அதுவே அவருக்கு புகழ்ச்சியாக மாறிவிடும். அவர் அதிலே விழுந்துவிடுவார் என்று சொல்லி ஒரு பத்திரிக்கையில் வாசித்திருக்கிறேன். அப்படியென்றால், உங்களுக்கு புகழ்ச்சி பிடிக்காது என்று சொன்னால்கூட, அதுவொரு புகழ்ச்சியாக மாறுகிறது பாருங்கள். யாராக இருந்தாலும், அவர்கள் செய்த காரியத்தை பாராட்ட வேண்டும் என்பது இயற்கை. சின்ன பிள்ளையாக இருந்தாலும், அது பாராட்டை எதிர்பார்க்கிறது. அது நடக்கும்போது, கொஞ்சம் நடந்து அது போகும்போது, நின்று எல்லோரையும் பார்க்கிறது, எதற்கு தெரியுமா? பாராட்டை எதிர்பார்க்கிறது. ஏய், மிக மிக நல்லது என்று கை தட்டி உற்சாகப்படுத்துகிறதை ஒரு சிறிய பிள்ளையே எதிர்பார்க்கிறதைப் பாருங்கள். சின்ன பிள்ளைகள் முதற்கொண்டு, பெரியவர்கள் வரையிலும் பாராட்டை எதிர்பார்க்கிறது, அது இயற்கையான சுபாவம்.

ஆக, நீங்கள் ஒரு நல்ல ஊழியன் என்றால், மற்றவர்களை, நன்றாகச் செய்தீர்கள் என்று பாராட்டுங்கள். பாராட்டுகிறது என்பது, அவர்கள் செய்கிற காரியத்தை ஏற்ற வேளையில் சுட்டிக்காட்டி நன்றாக செய்தீர்கள் என்று மற்றவர்கள் மத்தியில் சொல்லுகிறதுதான். முகஸ்துதி என்பது வேறு, அவர்கள் செய்யாத காரியத்தை செய்ததுபோல சொல்லுகிறது முகஸ்துதி. நீர் நல்லவர், வல்லவர், வானத்தையே நீங்கள் வில்லாக ஒடித்துக்கொண்டு வந்து தந்துவிடுவீர்கள் என்று எதுவுமே செய்யாத ஒரு நபரைப் பார்த்து சொல்வது, முகஸ்துதி, அது தேவையில்லை, ஆனால் பாராட்டுங்கள். அவ்விதமாக பாராட்டி, மக்களுக்கு தைரியத்தைக் கொடுப்பது, அவரவருடைய திறமைகளை, ஆற்றல்களை வெளியே கொண்டுவருவதற்கு, அது உதவி செய்கிறதாக இருக்கும். அவர்கள் நாளுக்குநாள், ஓகே, நம்முடைய போதகர் சரியாக சொல்வார், என்னை அவர் இவ்வாறு சொல்லிவிட்டார், நன்றாக பாடுகிறதாக சொல்லி விட்டார் என்று சொல்லி, வீட்டிற்கு சென்று பாடல் பாடிப்பாடி அவர் பார்ப்பார். மிகச் சிறந்த விதத்தில் சாதிப்பார். அதை விடுத்து, கொஞ்சமாக பாடுகிற ஒருவரைப் பார்த்து, நீயெல்லாம் பாட்டுபாட வேண்டியதுதான், கழுதை கனைக்கிறதுபோல இருக்கிறது என்று ஒருவேளை நாம் சொல்லி, அதைரியப்படுத்தி விட்டோமானால், அவருக்கிருக்கிற திறமையும் போய்விடும் பிரியமானவர்களே. அவர் ஆராதனைக்கு ஆர்வமாக வரமாட்டார். நீங்கள், அது உண்மையான நிலையாககூட இருந்தாலும், பரவாயில்லை, உன்னால் சாதிக்க முடியும், இவ்வளவாவது சிறப்பாக செய்தாய், அல்லவா? என்று உற்சாகப்படுத்திப் பாருங்களேன். உங்களது சபை வளரும், உங்களைச் சுற்றி ஒரு கூட்டம், உங்களுக்காய் உழைக்கிற ஒரு கூட்டம், ஊழியத்தில் ஒரு குழு நின்று வேலை செய்வதற்கு அது மிக மிக உதவியாக இருக்கிறதைப் பார்க்க முடியும்.

**இறுதியாக, சிறந்த தலைவன் விமர்சனங்களைக் கண்டு பயப்பட மாட்டான்.** அதாவது, பல விமர்சனங்கள் ஊழியக்காரருக்கு வர வாய்ப்பிருக்கிறது. எப்படியாயினும்

விமர்சனத்தைப் பெறுவதை தடுக்கவே முடியாது. ஏனென்றால், எந்தக் காரியத்திலும் இரண்டு நிலைகள் இருக்கத்தான் செய்யும். தவறுசெய்தவர்கள் இருக்கத்தான் செய்வார்கள், ஒருவர் தவறு செய்யாதவர். தவறு செய்யாதவர் பட்சத்தில் நின்று பேசினீர்களானால், தப்பு செய்தவர் அதை ஒத்துக்கொள்ள மாட்டார். தாம் செய்த தவறை ஒப்புக்கொள்ளவே மாட்டார். மாறாக, பாஸ்டர், அந்த போதகர், அவருக்குத்தான் சாதகமாக பேசுகிறார். அவரிடம் பணமிருக்கிறது என்றவுடன், நல்ல வசதி இருக்கிறது என்றவுடனே, நல்ல குடும்பம் என்றவுடனே அவர் சார்பாக நிற்கிறார் பாருங்கள், என்று விமர்சனங்கள் பண்ணுகிறதை நீங்கள் கேட்கத்தான் வேண்டியதாக இருக்கும். அதற்கு வேறே வழியே இல்லை. இந்த உலகில் எந்தக் காரியமாக இருந்தாலும், இப்படித்தான் விமர்சனத்திற்கு தப்ப இயலாது. ஊழியக்கார தலைவனாகிய நீங்கள், விமர்சனத்தைக் கண்டு பயப்படாதீர்கள். உலகம் அவ்வாறுதான் சொல்லும். நான் நியாயமாக வேதத்தின் அடிப்படையில், செய்யவேண்டியதைச் சரியாய் செய்வேன் என்று எப்போதும் முன்னேறிச் செல்ல வேண்டியது அவசியம். அந்த விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு, அதை மாற்றவேண்டிய காரியங்கள் ஏதாவது இருக்கிறது என்று சொல்வார்களானால், அதையும் மாற்றிக்கொண்டு, அதற்கேற்றபடி செயல்பாடுகளை திருத்தியமைத்துக் கொள்கிறவன்தான் சிறந்த தலைவன்.

பிரியமானவர்களே, இந்த தலைமைத்துவம் உங்களிடத்தில் இருக்கிறதா? யோசித்துப் பாருங்கள். அநேக காரியங்கள் இதுபோல வேதத்தின் அடிப்படையில் இருக்கிறது. நாம் இதுவரை அவைகளிலுள்ள முக்கியமானவைகளை மட்டும் கற்று இருக்கிறோம். நல்ல தலைவராய், மேய்ப்பராய், ஊழியராய் இருக்கிற உங்களுக்கு இந்த தலைமைத்துவ பண்புகள் இருக்க வேண்டியது அவசியம். அவ்வாறு இல்லாத பட்சத்தில் நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டியதும் அவசியம். தானாக தலைமைத்துவம் வந்துவிடாது. எந்தக் காரியமாக இருந்தாலும், நாம் பயிற்சியை செய்யவேண்டியது, அனுபவத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியது, என்பது நிறைய இருக்கத்தான் செய்கிறது. எல்லோருமே எல்லா பண்புகளோடும், எல்லாத் திறமைகளோடும் நடந்துவிடுவதில்லை. தேவன் நமக்கு சில பண்புகளை, திறமைகளை வைத்திருக்கிறார். அதோடகூட நாம் அநேக காரியங்களை தேவ சந்நிதியில் கற்றுக்கொண்டு, இவ்விதமான பயிற்சிகளை பெற்றுக்கொண்டு உங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம்.

அடுத்து, முக்கியமானதொரு காரியத்தைப் பார்க்க இருக்கிறோம். மேய்ப்புபணி ஊழியத்தில் இலக்குகளும், முன்னுரிமைகளும் என்பது பற்றி சில காரியங்களை கற்றுக் கொள்ளலாம். ஊழியத்தில் நமக்கு இலக்குகள் தேவை. திட்டமிட்டு அந்த இலக்குகளை அடைவதற்கு என்னென்ன முன்னுரிமைகள் உங்கள் வாழ்வில் இருக்கவேண்டுமென்பது பற்றி சிந்திப்பது அவசியம் பிரியமானவர்களே.

நம்முடைய வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், நமக்கு அநேக விருப்பு, வெறுப்புகள் இருக்கும். அதைப்போல, வாழ்க்கையில் செய்து முடிக்க வேண்டிய வேலைத் திட்டங்கள் என்பதான பல காரியங்கள் நம்முடைய வாழ்விலிருக்கும். ஒரு ஊழியர் என்று எடுத்துக்கொண்டாலும், அவருக்கும் விருப்பு, வெறுப்புகளெல்லாம் இருக்கும். வேலைத் திட்டங்களான, என்ன செய்ய வேண்டும்? எப்படி, எப்போது செய்யவேண்டும்? என்று அநேக விஷயங்கள் இப்படி இருந்தாலும், நமக்கு முக்கிய இலக்குகள் என்ன? ஊழியர்களாகிய நாம் கட்டாயமாய் அவைகளை நிர்ணயித்துக்கொள்ள வேண்டியது அவசியம். எதற்கு நாம் முன்னுரிமை கொடுக்கிறோம்? எந்த இலக்கை நாம் முக்கிய இடத்தில் வைக்கிறோம்? என்பது நம்முடைய தீர்மானத்தில்தான் இருக்கிறது. நீங்கள் என்ன தீர்மானம் செய்கிறீர்களோ, அதைத்தான் நிறைவேற்றுவீர்கள். சற்று யோசித்துப் பாருங்கள், இதை இன்று எப்படியாவது செய்து முடித்துவிட வேண்டுமென்று உறுதியாக தீர்மானம் எடுத்துவிட்டால், அதைச் செய்து முடித்துவிடுவீர்கள். அப்படி இல்லையென்றால், நாளைக்கு பார்க்கலாம், இது இப்போது தேவையில்லையென்று சொல்லுவோம். இவ்வாறு விஷயங்களை சிந்திப்பீர்களானால், அது ஒரு நாளும் நடைபெறாத விஷயமாகவே இருக்கும், தீர்மானம் முக்கியமானது. ஒரு சிறந்த மேய்ப்பன் என்ற வகையில், எந்த ஊழியத்திலாகிலும் சரி, தனிப்பட்ட வாழ்வானாலும் சரி. நமது இலக்குகளும், முன்னுரிமைகளும், தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியம். வசனம் என்ன சொல்லுகிறது? அதனடிப்படையில் தான் என்னுடைய தீர்மானம் இருக்கவேண்டும். நமது வாழ்விலும், ஊழியத்திலும் தேவன் எதை முக்கியமாக எதிர்பார்க்கிறார்? என்று நாம் அறிந்திருக்கிறோம். அவ்வாறு அறிந்துகொள்ளவில்லையென்றால், ஜெபத்தோடு அதை முடிவுசெய்ய வேண்டும். தேவன் எதை என்னிடத்தில் எதிர்பார்க்கிறார்? ஒரு ஊழியக்காரனாய் நான் இருக்கிறேன், என்னிடத்தில் அவர் என்ன எதிர்பார்க்கிறார்? ஆத்துமாக்களை மட்டுமா? அல்லது என்ன செய்ய எதிர்பார்க்கிறார்? என்று தேவனுடைய வசன வெளிச்சத்தின் அடிப்படையில் முடிவு செய்து, தீர்மானித்து, அதை முக்கிய பகுதியாய்க் கொண்டு, ஊழியம் செய்யவேண்டியது அவசியமானதாக இருக்கிறது பிரியமானவர்களே.

சில சரியான, நேர்மறையான இலக்குகளை நாம் பார்க்கும் முன்னர், தவறான அல்லது எதிர்மறையான இலக்குகளைப் பற்றி தெரிந்துகொண்டால்தான், சரியானவைகளை நாம் எளிதாக புரிந்துகொள்ள முடியும். பொதுவாக இன்றைய காலகட்டத்தில் அநேக ஊழியர்கள் இப்படிப்பட்ட தவறான, எதிர்மறையான இலக்குகளை உடையவர்களாக இருக்கிறார்கள். அது என்னவென்று தெரிந்துகொண்டால், நாம் அதைத் தவிர்த்து விடலாம், அல்லவா?

முதலாவது தவறான இலக்குகளைப் பார்ப்போம். **நமது சொந்த இராஜ்ஜியத்தை கட்டுவது என்பது நமக்கு இலக்காக இருக்ககூடாது.** இது தேவனுடைய ஊழியம், ஆகவே நான் அவருக்குப் பயந்து, அவருடைய இராஜ்ஜியத்தைக் கட்டவேண்டுமென்ற எண்ணம் இருக்கவேண்டுமேயொழிய, எனது ஊழியம், என்ற எண்ணத்தோடு செயல்படுவது தவறான இலக்காகும். இது என்னுடைய ஊழியம் என்று இன்றைக்கு சிலர் சொல்லுகிறதைப் பார்க்கிறோம், உங்களுடைய ஊழியம்தான், ஆனால் உங்களைக் கர்த்தர்தான் கருவியாகப் பயன்படுத்துகிறார், அவ்வாறுதான் அந்த எண்ணம் எப்போதும் இருக்கவேண்டும். கர்த்தாவே நீர் என்னை கிருபையாய் பயன்படுத்துகிறீர். இது உம்முடைய காரியம் என்று சொல்லுகிற மனது வேண்டும். மாறாக, என்னுடைய ஊழியம், என்னுடைய ஊழியத்திலுண்டான கனி, என்னுடைய ஊழியத்தால்தான் அவர் இரட்சிக்கப்பட்டார். அது என்னுடைய கனி, அது என்னைவிட்டுப்போக நான் சம்மதிக்க மாட்டேன் என்று சொல்லி சிலர் இருக்கிறதை நீங்கள் பார்க்கிறீர்கள். நீங்கள் நடத்துகிற ஒரு ஊழியத்தை, என்னுடைய ஊழியம் என்று சொல்வது உங்களுடைய மனநிலையைத்தான் அது பாதிப்பதாக இருக்கும். உங்களுடைய நிம்மதியை அது கெடுத்து விடும் பிரியமானவர்களே.

***2-வது தவறான இலக்கு, நான் பிரபலமானவனாக வேண்டும் என்பதாகும்.*** எல்லோரும் மதிக்கக்கூடிய இடத்தில் நான் இருக்கவேண்டும் என்றதைப்போன்றதொரு எண்ணம், இயற்கையாகவே எல்லோருக்குள்ளும் இருக்கிறது. ஆனால், வேதம் சொல்லுகிற முறை அதுவல்ல. யோவானுடைய வாழ்வைப் பாருங்கள். நான் சிறுகவும், அவர் பெருகவும் வேண்டுமென்ற எண்ணம். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைப் பாருங்கள், அவர் பிறந்ததிலிருந்து அப்படியே புகழ்ச்சி, கீர்த்தி எல்லாம் ஜனங்கள் மத்தியில் பெருகுகிற இடத்திற்கு வந்தார். ஆனால், அதற்குப் பின்பு பார்க்கிறபோது, தன்னை குறுக்கிக்கொண்டே வருகிறதைப் பார்க்கிறோம். கீர்த்தி குறைகிறது, அது பாடுபடுகிற காலமாய் மாறுகிறது, மரணத்திற்கு நேராய் அவருடைய ஊழியம் செல்லுகிறது. பிறகு உயிர்த்தெழுந்த ஒரு மகிமை, நாளுக்குநாள் அவர் விருத்தியடைந்தார் என்பதை விட அவர் தன்னுடைய ஊழியத்தில் தன்னை குறுக்கிக்கொண்டே போகிறதைத்தான் நீங்கள் கவனமாய் கவனித்துப் பார்த்தால் தெரியும்.

மேலும், கீர்த்தி எங்கும் பரவின காலத்திற்குப் பின்பாக, அவருடைய மறைவான ஊழியம் அதிகமாய் காணப்பட்டது. காரணம், தன்னை சுருக்கிக்கொண்டு ஊழியம் செய்கிற அனுபவம். ஆனால், நாம் பொதுவாக எப்படி நினைக்கிறோம், தெரியுமா? நாளுக்குநாள் பிரபலமாகிக்கொண்டே போகவேண்டும். அநேக ஆத்துமாக்களைச் சம்பாதிக்க வேண்டும் என்ற நினைப்பது நல்லது, அது தவறான விஷயமல்ல. ஆனால், நான் செய்கிற ஊழியம் டாம், டீம் என்று இருக்கவேண்டும்மென்று சிந்திக்கிறோம். அப்படியே மதிக்கப்பட

வேண்டும் என்கிற இடத்திலிருக்கிறோம். இது தவறான இலக்கு, இதைச் சொல்லுகிறதினால், ஒருவேளை வித்தியாசமாகத் தோன்றலாம், அல்லது இவர் பெரிய வித்தியாசமாக சொல்லுகிறார் என்று நினைக்கலாம். ஆனால் உட்கார்ந்து சிந்தித்துப் பாருங்கள். இந்தக் கருத்துக்களையெல்லாம் வேதத்தின் அடிப்படையில்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை எடுத்துக்காட்டாய் கூறினேன். அதைப்போல யோவானின் ஊழியத்தை எடுத்துக்காட்டாய் கூறினதையெல்லாம் வைத்துப் பாருங்கள். என்னுடைய தாலந்துகள், என்னுடைய ஊழியங்கள், என்னுடைய சபை, என்னுடைய குடும்பம், மிக உயர்ந்த இடத்திலிருக்க வேண்டும். ஏனையோருக்கு முன்பாக பிரபலமாக வேண்டும். எனது பதவியை, அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும். இதுபோன்ற தவறான எண்ணம் நம்முடைய உள்ளத்தில் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது பிரியமானவர்களே. அது நம்மை தவறான பாதையில் நடத்திச் சென்றுவிடும். தேவ சித்தத்திற்கு மாறாக செயல்பட வைத்துவிடும், நம்முடைய நிம்மதியைக் கெடுத்துவிடும். மிகவும் கவனமாக இருக்கவேண்டிய இடம் இங்கேதான் பிரியமானவர்களே.

3-வது தவறான இலக்கு என்ன? **நமக்கென்று மக்கள் கூட்டத்தைச் சேர்க்க வருகிறதொரு எண்ணம்**. பெரும்பாலான ஊழியங்கள் இப்படித்தான் காணப்படுகிறது. இயேசுவை நோக்கி திருப்பாமல், தன்னை நோக்கி திருப்புகிற ஊழியங்கள், மந்தை தேவனுடையது என்ற உணர்வு நமக்கு தேவை. *1 பேதுரு 5:2-4* வரையான வசனங்களை வாசித்துப் பாருங்கள். அந்த மந்தையை தேவன்தான் நமக்கு தந்திருக்கிறார், அது தேவனுடையது. நீங்கள் குறிப்பாக *2 பேதுரு 5:2*-ம் வசனத்தைக் கவனித்தீர்களானால், தேவனுடைய மந்தை உங்களிடம் இருக்கிறது. அது உங்களது மந்தை அல்ல, தேவனுடைய மந்தை என்று அவர் தெளிவுபட சுட்டிக்காட்டுகிறதைக் கவனித்துப் பாருங்கள். ஆகவே, மந்தை தேவனுடையது. ஆனால், இந்த நினைவு நமக்கு அடிக்கடி இல்லாமல்போய், நாம் என்ன செய்கிறோம்? நம்மைச் சுற்றியே மக்களை கட்டியெழுப்ப முயல்கிற ஒரு தவறான காரியத்தில் இறங்கி விடுகிறோம். கிறிஸ்துவை மையப்படுத்தி, சபையைக் கட்டாமல், நம்மை மையப்படுத்தி கட்டுவதினால், மக்கள் கிறிஸ்துவைப் பார்ப்பதை விட்டுவிட்டு, நம்மை மட்டுமே பார்க்கிற இடத்திற்கு வந்துவிடுகிறார்கள். அதனால்தான் நிறைய சபைகளில் பிரச்சனைகள், பிரிவினைகள், அந்த ஊழியர் இடம் மாற்றப்பட்டால், உடனே மக்கள் சோர்ந்து போகிற அனுபவம். காரணம் அந்த மனிதரைச் சுற்றி அவர் கட்டியிருக்கிறார். கிறிஸ்துவை மட்டும் நோக்கிப் பார்க்கிற ஒரு இடத்தில் அவர் இருப்பாரென்றால், ஊழியர் மாறிப்போனால், மக்கள் சோர்ந்துபோக மாட்டார்கள், காரணம் அவர்கள் கிறிஸ்துவை நோக்கி கட்டப்பட்டிருக்கிறார்கள். உங்களுடைய இலக்கு இப்படி எதிர்மறையான, தவறான இலக்குகளாக இருந்தால், இதையெல்லாம் மாற்றிக்கொண்டு, நேர்மறையான இலக்குகளை

நோக்கி, நீங்கள் பயணப்படவேண்டியது அவசியம். அதைக்குறித்து நாம் சிந்திக்க இருக்கிறோம்.

அடுத்து, சரியானதும், நேர்மையானதுமான இலக்குகளைக் குறித்து நாம் இப்போது சிந்திக்க இருக்கிறோம், அதாவது எது தவறான, எதிர்மறையான, இலக்கு? என்பதை நாம் சற்று முன்னர் கற்று இருக்கிறோம். இப்போது, சரியான மற்றும் நேர்மையான இலக்கு எது? என்று கற்றுக்கொண்டால், அதை நீங்கள் உங்கள் வாழ்க்கையில், ஊழியத்தில் கைக்கொள்ளும்போது, நிச்சயமாய் அது தேவனுடைய இராஜ்ஜிய விரிவில் பியோஜனமுள்ளதாக இருக்கும் என்பதிலே சந்தேகமில்லை.

முதலாவதாக, சரியான இலக்கு என்ன? **தேவனுடைய மந்தையைப் போஷிக்க வேண்டும்.** இது நாம் இந்த பாடத்தின் துவக்கத்திலிருந்தே, அதாவது இந்த மேய்ப்புபணி இறையியல் என்ற முழுப்பாடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் சிந்தித்து வந்துகொண்டிருக்கிற காரியம்தான். பலமுறை நாம் இதைக்குறித்து சிந்தித்திருக்கிறோம். ஆனாலும், இது தேவையான விஷயம். அதனால் மீண்டும், மீண்டும் சொல்லுகிறேன். ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் சில போதகர்கள் சபையைப் போஷிக்கவும் இல்லை. ஏனெனில் அவர்களுக்கே சத்தியம் தெரிகிறது இல்லை. சத்தியத்தை அவர்கள் தெரியாமல் புல்லுள்ள இடங்களில் மக்களை மேய்க்காமல், காய்ந்துபோன இடங்களில் மேய்க்கிறார்கள். அதாவது, சத்தியத்தை சத்தியமாய் போதிக்காமல், ஆறுதல் மட்டும் செய்துகொண்டே இருக்கிறார்கள். கவலைப்படாதீர்கள், உங்கள் கடனைக் கர்த்தர் மாற்றுவார், உங்களது பிரச்சனையைத் தீர்ப்பார் என்று comforting message-ஐ மட்டும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை செழுமை சுவிசேஷம் (prosperity Gospel) என்று பொதுவாக அழைப்பார்கள். அநேக செழிப்பு உபதேசம் மட்டும் இன்று போதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த கருத்தை எல்லோரையும் குறை சொல்லுவதற்காக சொல்லவில்லை பிரியமானவர்களே. மக்களை ஆற்றக்கூடாது, தேற்றக்கூடாது என்று அர்த்தமல்ல. ஆனால் ஆற்றுகிறதும், தேற்றுகிறதும் மட்டுமே செய்தியாய் இருக்க கூடாது, அல்லவா? அதைக் குறித்துதான் பேசிக்கொண்டிருக்கிறேன். நாம் கைக்கொள்ள வேண்டிய காரியங்கள், தான் உபதேசித்த காரியங்களை அவர்கள் கைக்கொள்ளும்படி போதிக்கத்தான் கர்த்தர் சொல்லியிருக்கிறார். அதைவிட்டுவிட்டு, அவர் செய்கிற அற்புதத்தைப்பற்றி பேசுகிறோம், சுகமாக்குதலைப்பற்றி பேசுகிறோம். அவரால் வருகிற உலக ஆசீர்வாதங்களைப் பற்றி மட்டும் பேசிக்கொண்டிருப்பது முழுமையான வளர்ச்சி அல்ல. அதைத்தான் நாம் இப்போது கற்றுக்கொண்டிருக்கிறோம். முழுமையாக நீங்கள் போஷிக்கவேண்டும். காய்ந்த புல்லைக் கொடுத்துவிட்டு, கலங்கின தண்ணீரைக் கொடுத்தீர்களானால், அந்த ஆடு, எந்தளவுக்கு ஆரோக்கியமாக இருக்கும் என்று சற்று யோசித்துப் பாருங்கள். ஆனால், கர்த்தர் நம்மை எப்படி நடத்துகிறாராம், புல்லுள்ள

இடங்களில் மேய்த்து, அதாவது பச்சையான புல்வெளியில் நம்மை மேயவிட்டு, அமர்ந்த நல்ல தண்ணீரண்டை கொண்டுபோய் விடுகிற தேவன். அவர் அவ்விதமாகப் போஷிக்கிறவர். அனால் இன்று சில சபைகளில் இவ்விதமான சரியான போதனை இல்லாதிருக்கிறதைத்தான் நாம் பார்க்கிறோம். அவர்கள் வேதாகமக் கல்லூரிக்கு சென்று பயில விரும்பவில்லை. ஆவியானவர் கற்றுத்தருவார் என்று மட்டுமே சொல்லுகிற ஒரு இடத்தில் இருக்கிறார்கள். ஆவியானவர் சொல்லித் தருவார் நிச்சயமாக, ஆனால் வேதாகமத்தை ஆராய்ந்து படிக்காமல், அதில் முழுமையாக கற்றுத் தேறாமல், எப்படி ஆவியானவர் வேதத்தை எல்லாம் விட்டுவிட்டு, உங்களுக்கு எல்லாவற்றையும் கற்றுத்தருவார் என்று நினைப்பது சரியான விஷயமாக இருக்குமா? என்று சற்று யோசித்துப் பாருங்கள். சத்தியமானது, உங்களுக்கு, விசுவாசிகளுக்கு, சபைக்கு தேவை என்பதினால்தானே, இந்த வேதாகமத்தை அன்றிலிருந்து இன்றுவரை பாதுகாத்து உங்கள் கைகளில் தந்து இருக்கிறார். இதற்காக எத்தனைபேர் மரித்திருக்கிறார்கள்? உயிரைக்கொடுத்து, எழுதி, பாதுகாத்துக்கொண்டுவர கர்த்தர் செயல்பட்டிருக்கிறார், எதற்காக நீங்கள் அதை வாசிக்க வேண்டும்? தியானிக்க வேண்டும், அதை ஆழமாக படிக்க வேண்டும்? அவ்விதமாக படிக்கும்போதுதான், ஆவியானவர் உங்களுக்கு கற்றுத் தருவார்.

சிலர் வேதத்தையே வாசிக்க விரும்புகிறதில்லை, கண்களை மூடி அவ்விதமாக அமைதியாக இருந்தால், ஆவியானவர் கற்றுக்கொடுத்துக்கொண்டே இருப்பார் என்று நினைத்து, வேதத்தை முக்கியப்படுத்தாமல், ஆவியானவரை முக்கியப்படுத்துவது சரியான விஷயமல்ல. வேதத்தின் ஆக்கியோனாகிய அந்த பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு நீங்கள் முழங்காலில் நின்று வேதத்தை வாசித்து, கற்றுத்தாரும் கர்த்தாவே என்று கேட்பீர்களானால், உங்களுக்கு ஆழமான சத்தியத்தை புரிய வைப்பார். பிரியமானவர்களே, அப்படி கற்றுக்கொண்டே, சத்தியத்தை சபையாருக்கு கொடுக்கிறதுதான் சரியான போஷிப்பாய் இருக்கும். ஆக, இதுவொரு முன்னுரிமை கொடுக்க வேண்டிய முக்கியமான காரியம். ஊழியனுடைய, போதகனுடைய, மேய்ப்பனுடைய முக்கிய கடமைகளில் இதுதான் தலையாய கடமை என்று சொல்லலாம். யோவான் 25:15-17 வரையான வசனங்களை நீங்கள் பார்த்தீர்களானால், அங்கே இயேசு பேதுருவிடம் கேட்ட கேள்வி மிகத் தெளிவாக இதை விளங்கப்பண்ணுகிறது. என்னுடைய ஆடுகளை மேய்ப்பாயாக! என்று அங்கே இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

ஆடுகளை மேய்ப்பாயாக என்பதுதான், கர்த்தருடைய பாரம் பிரியமானவர்களே. நீங்கள் நல்லதொரு ஊழியராக, ஆடுகளுக்கு மேய்ச்சலை உண்டுபண்ணுகிற நல்ல ஊழியர்களாக இருக்க வேண்டும். நல்ல மேய்ச்சலைக் காட்டி, நீங்கள் போஷிக்கும்போது, சபையை நீங்கள் விசுவாசத்தில், வளர்க்க முடியும். தேவ பக்தியுள்ள வாழ்வில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை, இதுதான் தேவை.

விசுவாசத்தில் வளரவேண்டும் என்று அநேக எடுத்துக்காட்டுகளைச் சொல்லுகிறீர்கள். அநேகர் வாழ்வில் இப்படி நடந்தது, என்னுடைய ஊழியத்தில் இப்படி நடந்தது என்று சொல்லுகிறீர்கள். அதனால் மட்டும் விசுவாசம் வளர்ந்து விடாது. வேத வசனத்தைக் கொடுப்பதினால்தான், அந்த விசுவாசம் வேரூன்றி வளரும். ஏனெனில் அதில்தான் ஆவி இருக்கிறது, ஜீவன் இருக்கிறது. அதை விடுத்து, எத்தனை அற்புதங்களை படம்போட்டு காட்டினாலும்கூட, அந்த நேரம் கர்த்தாவே ஸ்தோத்திரம் என்று மட்டும் சொல்வார்கள். அதன்பின்பு, மறந்துபோய் விடுவார்கள். காரணம் என்னவென்றால், ஜீவனுள்ள வார்த்தை அவர்களுக்குள் போகாததினால், அவர்கள் விசுவாசத்தில் குறைந்தவர்களாய் இருப்பார்கள், நம்புகிறேன் என்று சொல்வார்கள், ஆனால் உண்மையில் அவர்களின் செயல்பாடுகளில் நம்பிக்கை இருக்காது.

அதைப்போல வாழ்க்கையில், தேவ பக்தியின் வளர்ச்சியானது சரியானபடி வேத வசனத்தை போஷிப்பதினால் மட்டுமே வருமேயொழிய, அந்த மேய்ப்பன் தவறாகப் போஷித்தால், தவறாகவே ஒரு ஆடு அல்லது விசுவாசி வளருவான். அவருக்கு நீங்கள் இயேசு இராஜாவின் பிள்ளை, பெரிய பணக்காரனாக, நீங்கள் ஆடம்பரமாக, பகட்டாக வரவேண்டுமென்று சொல்லவேண்டும். தேவாதி தேவனின் பிள்ளை, சாதாரணமாக வருவதா? 'ஆடி' காரில் அல்லவா வரவேண்டும், அப்படி வரவில்லையென்றால், நீ விசுவாசத்தில் சரியாக வளரவில்லை என்றுதான் அர்த்தம் என்று சொல்லி, சொல்லி வளர்த்தோமானால், அவன் உடனே முயற்சிபண்ணுவான். 'ஆடி' கார் கிடைக்கவில்லையென்றால், அவன் தனக்குள்ளே ஒரு கேள்வியை, நான் விசுவாசத்தில் தோற்றுப்போனேனோ? என்று இவ்வாறு கேட்பான். நான்தான் சரியாக வளரவில்லையோ? என்று அவன் பின்வாங்கிப்போய் விடுவான். ஆகவே, நாம் சரியாக வளர்க்காத, தவறான ஊழியர்களாய்ப் போய்விடுவோம். இயேசுகிறிஸ்து அவ்வாறு போதித்தார், தன்னைக் கேட்டவர்களை, சீஷர்களை அழைத்தார். நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்பதுதான் அவர் கொடுத்த இலக்கு. I will make you fishers of men என்றுதான் சொன்னார். அவர் ஊழியர்களை அழைக்கும்போதே, என்ன இலக்கை அல்லது குறிக்கோளை கொடுத்தார், பாருங்கள். நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன். இப்போது நீங்கள் மீன் பிடிக்கிறீர்கள், இனி நீங்கள் மனிதர்களைப் பிடிக்கப்போகிறீர்கள் என்றார். அதற்கு உன்னை உருவாக்குவேன் என்று கூறினார். நீங்கள் எப்படியான குறிக்கோளை உங்கள் விசுவாசிகளுக்கு கொடுக்கிறீர்கள் என்பது மிகவும் முக்கியம் பிரியமானவர்களே.

நீங்கள் மாறான குறிக்கோளை, அதாவது அவர் கர்த்தருக்குள் வந்தார், பாருங்கள் கொஞ்ச நாளிலேயே 2 பங்களா கட்டிவிட்டார், அடுத்து நல்ல தொழில், ஏகப்பட்ட பணம், அவருக்கு கர்த்தருடைய கிருபையினால் உண்டாகிவிட்டது என்று போதித்து, அதுதான்

ஆசீர்வாதத்தின் வெளிப்பாடு, ஊழியம் என்று சொல்லி விசுவாசிகளை ஒரு போதகர் வளர்ப்பாரானால், அந்த குறிக்கோளானது விசுவாசிகள் மனதிலும் தவறாக விழுந்துவிடும். அவர்களும் நினைப்பார்கள், இதுதான் வாழ்க்கை போலிருக்கிறது. கர்த்தரிடத்தில் வந்தால் ஆசீர்வாதம் என்றும், இப்படித்தான் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரியாத அந்த விசுவாசி வளருவான், கடைசியில் தோற்றுப் போவான். ஆக, இயேசு கொடுத்த போஷிப்பையே கொடுக்க வேண்டும். அந்த குறிக்கோளையே கொடுங்கள். நல்ல தேவ பக்தியுள்ள வாழ்க்கையில் ஜனங்கள் வளருவார்கள் பிரியமானவர்களே. இது கற்றுக் கொள்வதற்கு இரசிக்கிற மாதிரியாக இருக்காது. இப்படியாக நாம் ஊழியம் செய்தால், நம்மால் ஒரு ஆத்துமாவைக்கூட ஆதாயம் செய்யமுடியாது என்றுகூட நீங்கள் நினைக்கலாம். இல்லை பிரியமானவர்களே. இதற்கென ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அந்த வழியில் நீங்கள் போகும்போது, அதற்கான ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. ஐயா, கள்ள உபதேசம் செய்தாலும் அதற்கும் ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்யும். நீங்கள் அதை பிரசங்கிக்கிற விதத்தைப் பார்த்து மக்கள் உங்கள் பின்னால் வரத்தான் செய்வார்கள். அதற்கு பதிலாக வேதத்தின் அடிப்படையில் நல்ல உபதேசத்தில் வளர்த்துப் பாருங்கள். மிகவும் திடமான, உறுதியான ஆத்துமாக்கள், தேவ பக்தியில் உங்களோடுகூட சேர்த்து வளருவார்கள். உங்கள் ஊழியம் ஒரு நிலையான வளர்ச்சியைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

*2-வது சரியான, நேர்மையான இலக்கு என்ன?* **தேவையான, முழுமையான சத்தியத்தை அறிவிப்பது உங்களுடைய இலக்காக இருக்க வேண்டும்.** *சற்று முன்னர் நாம்* பார்த்ததில் பாதி காரியங்கள் இதுவாகத்தான் இருக்கிறது. தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நீங்கள் மறைத்து வைக்காமல், அதைப் பிறகு சொல்லலாம் என்று கருதாமல், உடனே அதை அறிவிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு வரவேண்டும். அப். பவுலுக்கு அப்படித்தான் இருந்தது. அப்.20:26-27 போன்ற வசனங்களில் அவர் மனந்திறந்து சொல்லுகிறதை வாசிப்போம், 'தேவனுடைய ஆலோசனையை ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் நான் அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன் என்பதற்கு உங்களை இன்றைய தினம் சாட்சியாக வைக்கிறேன்' என்று கூறுகிறார் பாருங்கள். தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்கக்கூடாது. நான் எல்லாவற்றையும் என் சபையாருக்கு அறிவிக்க வேண்டும். இது மிகவும் முக்கியமான விஷயம். இன்றைக்கு அநேக ஊழியர்கள் அவையெல்லாம் இந்த மக்களுக்கு தெரியாது, புரியாது என்று அநேக சத்தியங்களை சொல்லுவதில்லை. எப்போதும் ஒரே சத்தியத்தை பாடிக்கொண்டே இருப்பார்கள். மனந்திரும்பு, காணிக்கை கொடு, ஞானஸ்நானம் கொடு. இவ்வாறான நாலைந்து சத்தியங்களை வைத்து போதித்துக் கொண்டேயிருப்பார்கள். சிலர் கேலியாகச் சொல்வார்கள், எங்களுடைய போதகர், குருவானவர், முதல் வாரம் இதைப் பேசுவார், அதாவது மனந்திரும்புகிறதைப் பற்றி

பேசுவார். *2*-வது வாரம் ஞானஸ்நானம் எடுப்பதைப் பற்றி பேசுவார். *3*-வது வாரம் காணிக்கை கொடுக்கிறதைப் பற்றி பேசுவார். *4*-வது வாரம் தொழில்வளத்தைப் பற்றி பேசுவார், இப்படி ஒவ்வொரு வாரத்திற்கும் ஒரு தலைப்பில், வழக்கமாக பேசுவார். அவர் ஏற்கனவே தலைப்பு போட்டு, பிரித்து வைத்திருப்பார் போலிருக்கிறதே என்று சொல்வார்கள். அவ்வாறு இருக்க கூடாது பிரியமானவர்களே.

தேவனுடைய ஆலோசனையில் நீங்கள் ஒன்றையும் மறைத்து வைக்ககூடாது. இவைகள் எல்லாம் நீங்கள் அவரிடத்திலிருந்து பெறுகிறதையே குறிக்கிறது. இந்த வாரத்தில் நான் என்ன சொல்லவேண்டும்? அவ்வாறு ஜெபித்து, காத்திருக்கும்போது, அந்த சபையாருக்கு தேவையான செய்தியை கர்த்தர் நிச்சயமாய் உங்களுக்குத் தருவார். உட்கார்ந்து கர்த்தருடைய செய்தியை தயாரிக்க வேண்டும். தேவனுடைய பாதத்தில் அமர்ந்து ஆயத்தம் செய்யாமல், அந்த இடத்தில் போய், ஆவியானவர் பேசுவார் என்று சொல்லாமல், முன்னமே ஜெபம் செய்து குறிப்பெடுக்க வேண்டும். அதற்கு பல புத்தகங்களை பயன்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே கற்று இருக்கிறீர்கள், அல்லவா? விளக்கவுரை புத்தகங்கள், களஞ்சியங்கள், வேதாகம அகராதிகள், ஒத்தவாக்கிய புத்தகங்கள் போன்றவையான நிறைய புத்தகங்கள் இருக்கிறது. அவைகளைப் படித்து, அந்த செய்தியை ஆழமான பின்னணியத்தோடு, எந்த சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்ற காரியத்தை விளக்கி, அதிலிருந்து மக்களுக்கு என்ன செய்தியை கர்த்தர் தருகிறார்? என்று சொல்லிப் பாருங்கள். முழுமையான தேவனுடைய ஆலோசனையைக் கொடுக்க முடியும். தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தின காரியத்தை உங்களுக்கு மறைத்து வைக்காமல், உடனே சொல்லிவிட விரும்புங்கள். இதுவொரு சரியான இலக்காய் இருக்கிறது. நேர்மறையான, நேர்மையான இலக்கு இதுதான்.

*3*-வது இலக்கு என்ன என்பதைப் பார்ப்போம். **எந்த மனுஷனையும், தேறினவனாக கிறிஸ்துவுக்கு முன்பாக நிறுத்தவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்குத் தேவை.** கொலோ.*1:28-29* வசனங்களில் பவுல் இவ்விதமாய்க் கூறுகிறார், ‘எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளே தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் ஞானத்தோடும், உபதேசம்பண்ணுகிறோம். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடி பிரயாசப்படுகிறேன்’. என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனித்துப் பாருஙங்கள். கிறிஸ்துவினிடத்தில் வருகிற எந்த மனுஷனையும் நான் அவருக்குள் தேறினவனாக அதாவது, தேர்ச்சியடைந்தவனாக நிறுத்த வேண்டும் என்ற குறிக்கோள் உங்களுக்குள் இருக்கவேண்டும் என்று கூறுகிறார். அதனால்தான் நாங்கள் இயேசுவை அறிவிக்கிறோம், எங்களையல்ல, அவரையே நாங்கள் அறிவிக்கிறோம். ஒவ்வொரு மனிதனுக்கும் புத்தி சொல்லுகிறோம், உற்சாகப்படுத்துகிறோம், எல்லா

ஜனத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம். சாதாரணமான உபதேசம் அல்ல, எல்லா ஞானத்தோடும், அதுதான் முக்கியமான விஷயம் பிரியமானவர்களே.

ஆக, ஒரு மனிதன் தேறினவனாக மாறவேண்டுமென்றால், வேதவசனம் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணப்பட வேண்டியது அவசியம். சும்மா, ஒரு கருத்தை மட்டும் எடுத்துப் பேசுகிறது ஒரு பெரிய விஷயமல்ல. நிறையபேர் செய்கிற பிரசங்கம்: யோபுவை கர்த்தர் அவனுடைய பின்நிலைமையை 2 மடங்கு ஆசீர்வதித்தார், அல்லவா? உன்னையும் 2 மடங்கு ஆசீர்வதிப்பார். அவரிடம் வந்த குருடனை சுகமாக்கினார் அல்லவா? உன்னையும் சுகமாக்குவார், இவையெல்லாம் ஒரு சாதாரணமான விஷயம் பிரியமானவர்களே. ஏன் அது சாதாரணமான விஷயம் என்றால், இதற்கொரு வேதாகமக் கல்லூரியில் படிக்கவேண்டியது அவசியமில்லை. இது யாராக இருந்தாலும் உபதேசம் பண்ணிவிடலாம். அதுவல்ல பிரசங்கம், அதுவல்ல ஊழியம், அதுவல்ல உபதசம். எல்லா ஞானமும் நிறைந்த உபதேசம் பண்ணுகிறோம் என்று பவுல் இந்த வசனத்தில் கூறுகிறதை வாசித்து, தியானித்து பாருங்கள். அந்த வசனத்தைக் குறித்த எல்லா ஞானமும் வேண்டும். பின்னணி வேண்டும், அதனுடைய மூல பாஷையில் என்ன அர்த்தத்தில் இயேசு கூறினார்? பவுல் அல்லது அப்போஸ்தலர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்று கேட்கவேண்டும். அதனுடைய உண்மையான அர்த்தத்தை அதன் ஆசிரியர் என்ன நோக்கத்தோடு இந்த வார்த்தையைச் சொன்னார் என்று அந்த அர்த்தத்திற்கு நீங்கள் போய் படிக்கிற இடத்திற்கு நீங்கள் வரவேண்டும்.

நாம் இப்போது பொதுவாக என்ன பண்ணுகிறோம் என்றால், நமக்கு என்ன அர்த்தம் விளங்குகிறதோ, அதை வாசிக்கிறோம், அப்படியே சொல்லி விடுகிறோம். இதுதான் இன்று சாதாரணமாக நடைபெறுகிறது. ஆனால், அதைத்தாண்டி நாம் எல்லா ஞானத்தோடும், உபதேசம் பண்ணுகிற இடத்திற்கு வரவேண்டும். அதற்குத்தான் வேதாகமக் கல்லூரி தேவை. அது சம்பந்தப்பட்ட இறையியல் புத்தகங்கள் தேவை. வரலாற்றுப் புத்தகங்கள் தேவை. இந்த புத்தகம் என்ன பின்னணியில், யாருக்கு எழுதப்பட்டது என்ற அறிவு வேண்டும். எல்லாவற்றையும் பார்க்கும்போதுதான் நீங்கள் எல்லா ஞானத்தோடும் வேத வசனத்தை உபதேசம் பண்ணுகிற இடத்திற்கு வருவீர்கள். அதற்காக நீங்கள் சாதாரண ஆட்களாக இருக்க முடியாது. அந்த வசனம் என்ன சொல்லுகிறது பாருங்கள், ‘அதற்காக என்னில் வல்லமையாய் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடி பிரயாசப்படுகிறேன்’ என்கிறார். அவ்வாறு செய்கிறது சாதாரண விஷயமாக இல்லை என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இதற்கு ஆவியானவர் நமக்குள் போராடிக்கொண்டு இருக்கிறார், வல்லமையாய் கிரியை செய்கிற, செயல்களை நடப்பிக்கிற பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தோடு நீங்களும் போராடி பிரயாசப்பட்டு, எந்த மனுஷனையும் தேறினவனாக நிறுத்த வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. அதுவொரு

ஆழமான வசனம் பிரியமானவர்களே. இவ்வளவுதூரம் நீங்கள் சிந்திக்க கர்த்தர் அழைக்கிறார். எந்த மனுஷனையும் தேறினவனாக நிறுத்தவேண்டும் என்ற எண்ணம் கொள்ளுங்கள். அந்த சரியான போதனையில் நீங்கள் நடத்துங்கள். அதுவே ஜனங்களை பூரணமான வாழ்க்கைக்கு நேராக வழிநடத்தும்.

4-வது ஒரு இலக்கு, **தேவனுடைய ஜனங்களை தேவனுடைய வேலைக்காக ஆயத்தம் செய்தல் என்ற ஒரு குறிக்கோள் உங்களுக்கு இருக்கிறது.** இதை நீங்கள் சற்று கவனித்துப் பாருங்கள். நிறைய சபைகளில் இது கிடையாது. அதாவது தேவனுடைய ஊழியத்திற்காக மக்களை, விசுவாசிகளை ஆயத்தம்பண்ண வேண்டும் என்கிற எண்ணம் நிறைய போதகர்களுக்கு, குருவானவர்களுக்கு இல்லை. அவர்கள் நினைக்கிறது எல்லாம் சபைக்கு வரவேண்டும், ஆராதிக்க வேண்டும், போய்க்கொண்டே இருக்கவேண்டும், காணிக்கை ஒழுங்காக கொடுக்கிறார்களா? தசமபாகம் ஒழுங்காக கொடுக்கிறார்களா? நமது சபையில் உறுப்பினர்களாக இருந்துகொண்டு ஒழுங்காக இருக்கிறார்களா? மற்ற சபைக்கு போகாமல் ஒழுங்காக இங்கேயே இருக்கிறார்களா? என்றுதான் கவனிக்க விரும்புகிறார்களேயொழிய, அவர்களை தேவனுடைய ஊழியத்தைச் செய்கிற இடத்திற்கு கொண்டுவரவேண்டுமென்று நிறையபேர் நினைக்கிறது இல்லை. அப்படி நினைத்தால்தான் அது சரியான இலக்கு. பிரியமானவர்களே, எப்பொழுதும் சொல்வார்கள், சபை விசுவாசிகள் யானை போன்றவர்கள், அதாவது யானை போன்று என்று சொல்வதின் அர்த்தம் என்னவென்றால், அந்த யானையை கட்டிப்போட்டு, தீனி கொடுப்பார்களானால், அள்ளி, அள்ளி போடவேண்டியதுதான், ஒருபோதும் அதுவும் வளராது, உங்களது சபையும் வளராது. அதேவேளையில் அந்த யானைக்கு நீங்கள் பயிற்சியைக் கொடுத்தீர்கள் என்றால், நீங்கள் செய்ய முடியாத வேலையை அது செய்யும். நீங்கள் தூக்கமுடியாத கட்டைகளை அது தூக்கிக்கொண்டு போகும். அதற்கு தேவை ஒன்றே ஒன்று, பயிற்சிதான். ஆக, இன்றைக்கு உங்களுடைய சபை வளர்வதற்கு என்ன செய்யவேண்டும், தெரியுமா? சும்மா விசுவாசிகளை வந்துபோக விட்டு, நீங்கள் அவர்களுக்கு எந்த ஊழியமும் கொடுக்கவில்லை என்றால், சண்டை போட்டுக்கொண்டே இருப்பார்கள். ஏனெனில், அவர்களுக்கு இலக்கு ஏதும் இல்லை, இல்லையா? எந்தக் குறிக்கோளும் இல்லை என்றவுடன் வருவார்கள், சும்மா வந்து இருப்பார்கள், ஏதாவது செயல்பட்டால்தானே, அவர்களுக்கு நேரம் போகும். ஆகவே, போதகரைக் குறை சொல்லுவார்கள், அல்லது அடுத்த குடும்பத்தை அல்லது விசுவாசியை குறை சொல்லி, உங்களிடம் பேசிக்கொண்டிருப்பார்கள். சண்டையை இழுப்பார்கள், ஏதாவது பிரச்சனையைக் கிளப்பிக்கொண்டே இருந்தால்தான், அவர்களுக்கு நேரம் போகும்.

ஏனெனில் அவர்கள் வெளியுலக, நேரப்போக்கையெல்லாம் விட்டுவிட்டு, இப்போது சபைக்கு வந்துவிட்டார்கள், இல்லையா? அதனால் இனி உங்களுக்கு சபைதான் முக்கிய

இடத்தில் இருக்கிறது என்று சொல்லிக்கொடுத்தும் விட்டீர்கள். அதற்கு மேல் நீங்கள் ஒன்றும் சொல்லிக்கொடுக்கவில்லை. அதனால் சபையில் ஏதாவது பிரச்சனையைக் கிளப்பிக்கொண்டுதான் இருப்பார்கள். ஒன்று செய்யவேண்டும், நீங்கள் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அது எந்த வேலையென்றால், தேவனுடைய ஊழியத்தைப் பற்றிய பயிற்சி. அதற்காக, சபை நிகழ்ச்சிகளில் சோறு சமைப்பதும், அதுபோன்ற வேலைகளில் மட்டும் ஈடுபடுத்துவதும் அல்ல, அதுவும் செய்யலாம். ஆனால், அவர்தான் ஊழியம் செய்கிறார், அழகாய் பந்திவிசாரிக்கிறார், நல்ல வரவேற்பார் என்று உலக வேலைகளோடு மட்டும் நிறுத்திவிடாமல், அவர்களுக்கு பிரசங்கிப்பது எப்படி, அல்லது அவர்களுக்குள்ளிருக்கிற தாலந்துகளை கண்டுபிடித்து, அதை வெளியே கொண்டு வருவதற்கு, ஒரு போதகர் செயல்பட வேண்டும். அப்போதுதான் உங்களது சபை வளரும். உங்களது சபையிலேயே வேதாகமக் கல்லூரி வகுப்புகளை ஆரம்பிக்கலாம். நாங்கள்தான் வந்து நடத்தவேண்டுமென்று இல்லை, நீங்களே நடத்தலாம். நீங்கள் முலாவது அதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

பிரியமானவர்களே, சபையானது வேதத்தில் வளரவேண்டும். சத்தியத்தில் வளரவேண்டும், தேவ பக்தியில் வளரவேண்டும். எல்ல அவயவங்களும் செயல்பட்டாக வேண்டும். அப்படி செயல்படவில்லை என்றால், அது எப்படியிருக்கும் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்களேன். உங்களது சரீரத்தில் ஒரு கை மட்டும் வேலை செய்கிறது, இன்னொரு கை வேலை செய்யவில்லை. ஒரு கால் மட்டும் வேலை செய்கிறது, இன்னொரு கால் வேலை செய்யவில்லை என்றால், அது எப்படியிருக்கும் என்று சற்று யோசித்துப் பாருங்கள். விசுவாசிகள் எல்லோரும் சபையின் அவயவங்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும், அவரவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை, பணியைச் செய்தால்தான், சரீரம் முழுமையான செயல்பாட்டில் இருக்கிறது என்று அர்த்தம். உதாரணமாக, கைகள் இரண்டும் செயல்படவில்லை என்றால், அது உணவு உண்டாக்கும் விஷயத்திலிருந்து பாதிப்பை உண்டாக்கும் இல்லையா? அதைப்போல அந்த குறிப்பிட்ட அவயவம், உங்களது சபையில் செயல்படவில்லை என்றால், அந்த குறிப்பிட்ட பகுதியானது வளர்ச்சியில்லாமல் இருக்கும். அதைப்போல போதனையிலும் சற்று கவனித்துப் பாருங்களேன். நீங்கள் போதிக்கிறீர்கள், உங்களது போதனையில் விசுவாசம், விசுவாசம் என்று மட்டும் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள், மற்ற எதையும் கொடுக்கவில்லை என்றால், அதுவும் குறைபாடுதான். ஒரு கை மட்டும் வளர்ச்சியடைந்து, மற்றொரு கை வளர்ச்சியடையாமல், சூம்பி போயிருந்தால், எப்படியிருக்கும். அதனால் சபையில் சிலரைப் பார்த்தால், பயங்கர விசுவாசியாக இருக்கிறார்கள், ஆனால் நடைமுறையான சத்தியம் தெரியவில்லை. விசுவாசிப்பதற்கு மட்டும் சொல்லத் தெரிகிறது. ஏனெனில் போதகர் வெறும் விசுவாசத்தைப் பற்றி மட்டும் போதித்து இருக்கிறார்.

பிரியமானவர்களே, கிருபையைப் பற்றி போதிக்கவேண்டியிருக்கிறது, உபத்திரவத்தின் பாதையில் கர்த்தர் கற்றுத்தருகிற, உடைத்து உருவாக்குகிற சத்தியங்கள் போன்ற அநேக சத்தியங்கள் வேதத்திலிருந்து பிரசங்கிப்பதற்கு நமக்கு இருக்கிறது. எல்லாவற்றையும் கற்றுக்கொடுத்தால்தான், தேவனுடைய சபையில், அவர்களை ஊழியத்திற்கு ஆயத்தம் செய்ய முடியும். எபே.4:11, 'மேலும் நாம் அனைவரும் தேவனைப் பற்றிய விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி' என்பதிலிருந்து நாம் கவனிக்க வேண்டும். இங்கே விசுவாசத்தை மட்டும் அவர் சொல்லவில்லை, அறிவிலும் நாம் வளரவேண்டுமென்று கூறுகிறார் பாருங்கள். சபையில் நீங்கள் விசுவாசத்தை மட்டும் போதித்துக்கொண்டே இருந்தால், தேவனைக் குறித்த அறிவில் அவர்கள் வளராமல் போனால், சபை ஒரு பகுதியில் மட்டும் வளர்ச்சியைப் பெற்றிருக்கும், மற்றொரு பகுதி வளர்ச்சியில்லாமல் சூம்பிப்போய் இருக்கிறது என்பதை போதகர்களாகிய நீங்கள் கவனிக்க வேண்டும். ஆக, இந்த வசனங்களை வேதத்திலிருந்து எடுத்து வாசிக்க வேண்டும். 'விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்' என்று கூறிவிட்டு இவ்வாறு வளர்ந்தால்தான் நிறைவான வளர்ச்சியிருக்கும் என்று கூறுகிறது. அடுத்து எபே.4:12, 'பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்' என்று சொல்லுகிறார். ஆக, அந்த சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய வேண்டும், சுவிசேஷ வேலையாகிய ஊழியத்தைச் செய்ய வேண்டும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்த வேண்டும், இவ்வளவு வேலை சபையில் இருக்கிறது.

ஆம் பிரியமானவர்களே, இதற்கு நீங்கள் உங்களுடைய விசுவாசப் பிள்ளைகளை ஆயத்தம் செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் சுவிசேஷ வேலையை, கர்த்தருடைய ஊழியத்தை செய்தாக வேண்டும், சீர்பொருந்தி ஓடவேண்டும், கர்த்தருடைய காரியத்தில் சீர்பொருந்தி ஓடவேண்டியது அவசியம். இன்றைக்கு அநேக பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். ஆனால் சீர்பொருந்தி ஓடவில்லை, அதைத்தன் சொல்லுகிறார், சீர்பொருந்தி என்றால், சரியாகப் பொருந்தி ஓடவேண்டும், சும்மா பொருந்தி ஓடுகிறது ஓட்டம் அல்ல. வேதம் வாசிப்பார்கள், ஜெபம் செய்வார்கள், ஓடுவார்கள். ஆனால் கர்த்தர் நினைத்த சீர்பொருந்தல், அதாவது சரியாகப் பொருந்தி ஓடுகிற அந்த ஓட்டம் நிறைந்த வாழ்வு அவர்களுக்குள் இருக்காது. அதைத்தான் கர்த்தர் சொல்லுகிறார். ஆக, இவ்விதமாக பிரியமானவர்களே, விசுவாசிகளின் ஆற்றல், தாலந்துகளை இனங்கண்டு, தலைவர்களாக நாம் அவர்களை உருவாக்க வேண்டும். அவர்களுக்குள் மறைந்து கிடக்கிற

அந்த தாலந்துகளை வெளியே கொண்டுவந்து பிரகாசிக்க வைக்க வேண்டியது, அந்த மேய்ப்பனின் முக்கிய பணியாக இருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியையும், ஊழியத்தில் பயிற்றுவித்து, சுவிசேஷப்பணி, சாட்சி கூறுதல், போதகம், ஒருவேளை ஒருவரை அப்போஸ்தலனாய் அழைத்திருந்தால், அப்போஸ்தல ஊழியத்திற்கு, தீர்க்கதரிசியாக அழைத்திருந்தால், தீர்க்கதரிசன ஊழியத்திற்கு, இவ்விதமான 5 வித ஊழியத்திற்கு அவர்களைப் பயிற்றுவித்து உருவாக்க வேண்டியது உங்களுடைய இலக்காய் இருக்கிறது பிரியமானவர்களே.

5-வது காரியமாக, **மந்தையைக் குறித்த கரிசனம் தேவை, உங்களுடைய தனிப்பட்ட வாழ்வைக் குறித்த அக்கறையும் வேண்டுமென்ற குறிக்கோள் எப்பொழுதும் இருக்க வேண்டும்.** இது எளிதான காரியம், ஆனால் முக்கியமான காரியம். மந்தையைக் குறித்து எப்போதும் கரிசனை உடையவர்களாக இருக்கவேண்டுமென்ற ஒரு இலக்கு, உங்களுடைய தனிப்பட்ட வாழ்வைக் குறித்து மிகவும் கவனமாக இருக்கவேண்டுமென்ற ஒரு இலக்கு தேவை. 1 தீமோ.4:16-ல், 'உன்னைக் குறித்தும், உன் உபதேசத்தைக் கேட்கிறவர்களைக் குறித்தும் கவனமாயிருப்பாயாக' என்று பவுல் கூறுகிற அந்த ஆலோசனையை உங்கள் மனதில் எப்பொழுதும் நிறுத்தி உங்களுடைய ஊழியத்தைச் செய்யுங்கள். பிரியமானவர்களே, உங்களைக் குறித்தும், உங்களுடைய உபதேசத்தைக் குறித்தும், உங்களுடைய உபதேசத்தைக் கேட்பவர்களைக் குறித்தும் கவனமாய் இருக்கவேண்டும் என்ற இலக்கு வேண்டும். ஏதோ, ஏனோதானோ, என்று உபதேசிப்போம், ஏதோவொரு சபை, இதெல்லாம் ஒரு சபையா? ஏழைகள், எனக்கென்று ஒரு சபை இருக்கிறது பாருங்கள் என்று வெறுத்து ஊழியம் செய்யக்கூடாது. நீங்கள் கொஞ்சத்தில் உண்மையாக இருந்தால்தான், உங்களை அநேகத்தின்மேல் அதிகாரியாக வைப்பார். சின்ன ஊழியமாக இருக்கட்டும், பரவாயில்லை, அதை நேசித்து செய்யுங்கள். அது மாறப்போகிறது என்ற விசுவாசத்தோடு செய்யுங்கள். இதில் நீங்கள் உண்மையாக இருந்தால்தான், ஒருவேளை அங்கே 4 அல்லது 5 பேர் இருந்தாலும், உண்மையும் உத்தமுமாய் வசனத்தை 1000 பேருக்கு பிரசங்கிப்பதுபோல, மிகவும் சீரிய முறையில் பிரசங்கம் செய்யுங்கள். தயார் செய்யுங்கள், ஜெபம் செய்யுங்கள், அந்த குறிப்புகளை சேர்த்து வையுங்கள். ஒருநாள் வரும், கர்த்தர் உங்களை உயர்த்தி பெரிய கூட்டத்திற்கு பயன்படுத்துவார். அதைவிட்டு, எதிர்மறையாக நீங்கள் சிந்திப்பீர்களானால், இவர்களுக்கெல்லாம் நான் எதை ஆயத்தம் செய்து பிரசங்கிக்க வேண்டும்? எதுவும் தேவையில்லை, படிக்காதவர்கள், ஏழைகள், நான் சொல்லுவதில் என்ன பெரிய ஊழியம் நடந்துவிடப் போகிறது என்று நினைத்து நீங்கள் அப்படிப்பட்ட நேரங்களை வீணாக்கி, விருப்பமும் இல்லாமல், சரியான ஆயத்தமும் படாமல், செய்துகொண்டிருப்பீர்களானால், உங்கள் ஊழியத்தை நீங்களே மட்டுப்படுத்துகிறீர்கள் என்று அர்த்தம். நிச்சயமாய் நீங்கள் ஒரு பெரிய தேவனோடு இணைந்து, அவருக்காய் ஊழியம் செய்கிறீர்கள். வானத்திலும், பூமியிலும் எல்லா

அதிகாரமும் உடைய கர்த்தரின் கீழே நீங்கள் ஊழியம் செய்கிறீர்கள். உலகமெங்கும் புறப்பட்டுப் போகச்சொன்ன கர்த்தரின் கீழ் ஊழியம் செய்கிறீர்கள். உங்களின் ஊழிய எல்லையை அவரால் விரிவாக்கம் செய்ய முடியும். நீங்கள் விசுவாசிக்க வேண்டும், அதுதான் உண்மை. நீங்கள் அதை நம்பிக்கையோடு, கொஞ்சமான மக்கள் எந்த இடத்தில் இருக்கிறார்களோ, அந்த இடத்தில் உண்மையும், உத்தமுமாய் கர்த்தருக்கு பயந்து ஊழியம் செய்யுங்கள். உங்களின் மேலதிகாரி, உங்களுக்கு மேலேயிருக்கிற போதகர் ஆகியோரைப் பார்க்கவேண்டியதில்லை. கர்த்தர் உங்களுடைய எல்லா செயல்களையும், முயற்சிகளையும் பார்க்கிறார். கர்த்தருக்காகவே செய்கிறீர்கள், கர்த்தர் உங்களை ஏற்றவேளையில் கனப்படுத்தி, அநேகருக்கு ஆசீர்வாதமாக வைக்கிறதை நீங்கள் காண்பீர்கள்.

தொடர்ந்து கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கப்போகிறார். வருகிற பாடத்திலும், நாம் வேறொரு தலைப்பின் கீழ் பாடங்களைக் கற்றுக்கொள்வோம். கர்த்தர்தாமே உங்களை வழிநடத்தி அசீர்வதிப்பாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1) தலைமைத்துவ பண்புகளில், சிறந்த தலைவன் கிரையம் செலுத்தவும் தயங்காதவனாக இருப்பான் என்பதனைக் குறித்து வசன ஆதாரத்துடன் விளக்கமாக கூறுக?
2) பானபலியைக் குறித்ததான சிறு குறிப்பினை வசன ஆதாரத்துடன் தருக?
3) தலைமைத்துவ பண்புகளில், விசுவாசத்தோடுகூட நேர்மறையான சிந்தனை தலைவனுக்கு இருக்கவேண்டியதைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
4) சிறந்த தலைவன், மற்றவர்களை விளங்கிக்கொள்கிற இடத்திலிருப்பான் என்கிற தலைமைத்துவ பண்பினைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
5) சிறந்த தலைவன், மற்றவர்கள் சிறப்பாக செய்யும் காரியங்களை பாராட்டுகிறவனாக இருப்பான் என்கிற தலைமைத்துவ பண்பினைக் குறித்தும், அதனால் ஏற்படுகிற விளைவுகளைக் குறித்தும் விளக்கமாக கூறுக?
6) சிறந்த தலைவன் விமர்சனங்களைக் கண்டு பயப்படாதிருக்க வேண்டியதின் முக்கியத்துவத்தினை சற்று விளக்கமாக கூறுக?
7) மேய்ப்புபணி ஊழியத்தில் இலக்குகளும், அதற்கான முன்னுரிமைகளும் காணப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தைக் கூறுக?
8) மேய்ப்புபணி ஊழியத்தில், மேய்ப்பனுக்குள் இருக்க கூடாத தவறான இலக்குகளை வரிசைப்படுத்தி, வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
9) மேய்ப்புபணி ஊழியத்தில், மேய்ப்பனுக்குள் காணப்படவேண்டிய சரியான இலக்குகளை வரிசைப்படுத்தி வசன ஆதாரத்துடன் விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - *14*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்திலும் போதக ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிற மேய்ப்பர்கள், போதகர்கள், ஊழியர்கள் இவர்களுடைய சில குறிப்பான முன்னுரிமைகள் குறித்து நாம் கற்றுக்கொள்ளப்போகிறோம். கடந்த பாடத்தில், சரியானதும், நேர்மையானதுமான இலக்குகள் என்ற தலைப்பின் கீழே சிந்தித்து கற்றோம். இந்தப் பாடத்தில் சில குறிப்பிட்ட முன்னுரிமைகள் என்று சொல்லப்படுகிறவைகளைக் குறித்து பார்ப்போம். ஒரு ஊழியருக்கு எது முக்கிய இடத்தில் இருக்கவேண்டும்? ஊழியர்களாய் இருக்கின்ற அல்லது போதகர்களாய், மேய்ப்பர்களாய் ஆகப்போகின்ற உங்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும் என்பதிலே சந்தேகமில்லை.

**முதலாவது, அவருடைய பக்திக்குரிய வாழ்க்கை மிக மிக முக்கியமான முன்னுரிமை பெற்ற இடத்தில் இருக்கவேண்டும்.** எப்போதும் அவர், தான் ஒரு ஊழியர் என்பதை மறந்து போகவே கூடாது. அதற்காகவே அவர் அழைக்கப்பட்டிருக்கிறார், அதற்காகவே அந்த ஊழியத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதற்காகவே அவர் வாழ்கின்றார், ஆகவே எல்லாமே அதை சுற்றித்தான் இருக்கவேண்டும். உதாரணமாக, ஒரு விளையாட்டு வீரர் இருக்கிறார் என்று எடுத்துக்கொள்ளுங்கள். அவர் முற்றிலுமாய் அதைக்குறித்து தான் சிந்திப்பார். அதற்கான உணவைத்தான் எடுப்பார், அதற்கான பயிற்சியைத்தான் மேற்கொள்வார், அதற்கான புத்தகத்தைத்தான் படிப்பார். அது சம்பந்தப்பட்டதையே சிந்தித்துக் கொண்டிருப்பார். அதை குறித்து பத்திரிக்கைகளிலும் வாசிப்பார், செய்தி கேட்டாலும், அதைக்குறித்தே தான் சிந்திப்பார். அந்த விளையாட்டிலே, யார் இப்பொழுது முதலிடத்தில் இருக்கிறார்கள் என்றும், என்ன? ஏது? என்பதையெல்லாம் குறித்து அவருக்கு இதேதான் சிந்தனையாய் இருக்கும். அதைப்போல, ஒரு மேய்ப்பனாய், போதகனாய் இருக்கிற உங்களுக்கும் தேவபக்திக்குரிய வாழ்வே முதலிடத்தில் முன்னுரிமை பெற்றதாய் இருக்கவேண்டும். அதற்கான ஜெபவாழ்வு, வேத வாசிப்பு, தியானம், அது குறித்த ஆவிக்குரிய பயிற்சிகள், தலைமைத்துவ பயிற்சி போன்ற எல்லாமே இருக்கும். நாம் கடந்த பாடங்களில் இதைக் குறித்து சிந்தித்தோம். ஆனாலும் சுருக்கமாக, இதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வோம். எல்லாவற்றையும் உடையவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். தேவனோடு இருக்கின்ற உங்கள் உறவை கவனமாக காத்து கொள்வதிலே ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும், அதில் வளர்கிறதில், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

**இரண்டாவது முன்னுரிமை, குடும்பத்தில் இருக்கவேண்டும்.** முதலாவது தேவன், அதற்கு பிறகு குடும்பம். அதற்குப் பிறகுதான் ஊழியம் என்றதொரு வரிசைக் கிரமத்தை

நீங்கள் கைக்கொள்ள வேண்டியது அவசியம். ஆம் பிரியமானவர்களே, சிலரைப் பார்த்தீர்களென்றால், குடும்பத்திற்கு முதலாவதும், தேவனுக்கு இரண்டாவதும், ஊழியத்திற்கு மூன்றாம் இடத்தையும் கொடுப்பார்கள். அது அப்படியில்லை, நீங்கள் உங்களுடைய குடும்பத்திற்கு வாரத்திற்கு ஒரு நாளாவது முழுமையாய் கொடுக்க வேண்டும். அதை ஏற்கனவே நாம் கடந்த வகுப்பிலே சிந்தித்து இருக்கிறோம், அதை இப்போது நினைவு கூறுங்கள். குடும்ப உறவின் முக்கியத்துவத்தை நாம் நன்கு அறிந்தவர்களாய் இருக்க வேண்டும், மட்டுமல்ல வேதமும் குடும்பத்தைக் குறித்து மிக தெளிவாக கூறியிருக்கிறதை கடந்த வகுப்புகளில் படித்ததை நினைவுகூறுங்கள். தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்தான், சபையை, ஊழியத்தை நன்றாய் நடத்துவான் என்று நாம் சிந்தித்தது, உங்களுக்கு நினைவிலிருக்கும். ஆகவே, குடும்பத்தை நன்றாக நடத்திக் காட்டுவது முதலாவது காரியம். மட்டுமல்ல, ஒரு குடும்பத்தின் விரிவாக்கம் தான், சபை என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். சபையும், குடும்பமும்தான் ஒன்றாக இருக்கிறது. அங்கே நீங்கள் தகப்பனாய் இருக்கிறீர்கள், அங்கே வருகிற பிள்ளைகளெல்லாம் உங்களுடைய ஆவிக்குரிய பிள்ளைகள். ஆக, குடும்ப உறவுதான் அதனுடைய விரிவாக்கம். அதுதான் சபை. ஆகவே குடும்ப உறவை முதலிடத்தில் வையுங்கள். அது முக்கியமான இடத்தில், முன்னுரிமை பெற்ற இடத்திலிருக்க வேண்டும்.

**மூன்றாவது காரியம், உண்மைத்துவம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.** அது அவசியம். ஒரு ஊழியன் நம்பத்தக்க இடத்தில் இருக்க வேண்டும். உண்மை இல்லையென்றால், நம்பவே மாட்டார்கள். நீங்கள் உங்கள் வார்த்தையை மதிக்க வேண்டும். எதைச் சொல்லுகிறீர்களோ, அதை அப்படியே நிறைவேற்ற வேண்டும். நீங்கள் சொன்னவைகளிலே, எத்தனை நஷ்டம் வந்தாலும் சரி, இல்லையில்லை, நான் சொல்லி விட்டேன், கர்த்தருடைய பிள்ளையாகிய நான் ஊழியக்காரனாகிய நான், அந்த வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி, உறுதியாய் இருக்க வேண்டும். அதனால் எந்தவொரு விஷயத்திலும் உங்களுடைய உண்மைத்துவத்தை, உண்மையாக நீங்கள் காண்பிக்க வேண்டும், காத்து நடக்க வேண்டும். ஆணையிட்டதில் நஷ்டம் வந்தாலும், தவறாமல் இருப்பவனே உத்தமன் என்று வேதத்தின் அடிப்படையில் நாம் கற்றது, உங்களுக்கு நினைவில் இருக்கலாம். ஆக, உங்களது வார்த்தையை மதியுங்கள். வளவளவென்று, அதிகமாக பேசி உங்களது வார்த்தையை உதிர்த்து தள்ளிவிடாதீர்கள். எதைச் சொன்னீர்களோ, அதைக்குறித்து நினைவில் வையுங்கள். அதை அப்படியே நிறைவேற்ற பழகுங்கள். அப்பொழுதுதான் உங்களது வார்த்தையை அவர்கள் மதிப்பார்கள், மற்றவர்களுக்கு நீங்கள் சொன்னதை, நீங்கள் நிறைவேற்றாவிட்டால், பிறகு நீங்கள் எதைச் சொன்னாலும், அதைக் கேட்கிறவர்கள், அவர் அப்படித்தான் வானளாவ பேசுவார், எதையுமே அவர் செய்கிறதில்லை என்ற இடத்திற்கு வந்துவிடும். ஆகவே உங்களுடைய உண்மைத்துவத்தைக் குறித்து நீங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டியது

அவசியம். உங்களுடைய குணாதிசயம், உங்களுடைய பேச்சு, உங்களுடைய நம்பிக்கை, நீங்கள் மற்ற இடங்களுக்கு போகும்போது, ஒழுக்கமாய் நடந்துகொள்ளுகிற அந்த உண்மைத்துவம், எல்லாம் இருக்கவேண்டும். அது உங்களை நல்ல மதிப்பான இடத்திலே வைக்கும். பிரியமானவர்களே, விளையாட்டாககூட உங்களது சபையாரிடத்திலே நீங்கள், தீங்காக பேசாதீர்கள், பொய்யாக, ஏமாற்றும் விதமாக, பித்தலாட்டமாக, திட்டங்களை சொல்லாதீர்கள். அப்போது, உங்களைப் பற்றிய அந்தவொரு நல்ல கருத்தை அது கெடுத்துவிடும். நீங்கள் விளையாட்டுக்குத்தான் சொல்லுவீர்கள். ஆனாலும், ஒரு பாஸ்டருக்கு வருகிற இந்த சிந்தனையெல்லாம், பரிசுத்தமாய் இருக்கவேண்டும். பேசுகிறார், ஆனால் இவருடைய சிந்தனையே இப்படி இருக்கிறதே என்று சொல்லி நம்மை அவர்கள் கணக்கிடுவார்கள் என்பதை கவனித்து கொள்ளுங்கள் பிரியமானவர்களே.

**நான்காவது காரியம், அன்புகூறுதல் மிகவும் முக்கியமான இடத்தில் உங்கள் வாழ்க்கையில் இருக்கவேண்டும்.** நீங்கள் ஊழியத்தில், கிரியைகளில், செயல்பாடுகளில் வெற்றியுள்ளவர்களாக இருக்கலாம். உங்களுடைய ஆற்றல்கள், தாலந்துகள், வரங்கள் ஆகியவற்றை நீங்கள் வல்லமையாய் வெளிப்படுத்துகிற ஊழியராகவும் இருக்கலாம். ஆனால், உங்கள் சபை விசுவாசிகளிடத்தில், மற்றவர்களிடத்தில் அன்புகூறாமல், நீங்கள் இதெல்லாம் செய்தால், பிரயோஜனமில்லை என்றுதான் *1 கொரி.13-ம்* அதிகாரத்திலே வாசித்துப் பார்க்கிறோம். ஆக, அன்பு மிகவும் முக்கியமான இடத்திலே இருக்கிறது, அன்போடுகூடிய பேச்சு, அன்போடுகூடிய கிரியை, அன்போடு கூடிய ஊழியம், கருணை மற்றும் இரக்கத்தோடு தாழ்ந்த ஒரு சிந்தனையோடு பேசுகிற பண்பு போன்றவையெல்லாம் உங்களுக்கு முன்னுரிமையாய் இருக்கவேண்டும். ஒருவரையொருவர் கனப்படுத்துவதில் முந்திக்கொண்டு, நீங்கள் சபையார் உங்களுக்கு ஸ்தோத்திரம் செய்யவேண்டும், praise the Lord சொல்லவேண்டும், அதற்கு பின்புதான், அவர்களைப் பார்த்து பேசுவேன் என்கிற மாதிரியாக இல்லாமல், அவர்களைப் பார்த்தவுடன், தானாகவே அவர்களுக்கு praise the Lord என்று சொல்லுகிற பழக்கம் வருகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள், ஸ்தோத்திரம் உடனே அவர்களுக்கு சொல்லுகிறீர்கள் என்ற வைத்துக்கொள்ளுங்கள். உடனே உங்களுக்கு மதிப்பு அவர்களிடமிருந்து கிடைக்கும். நீங்கள் தாமதம் செய்தாலும், செய்யாவிட்டாலும், அவர்களிடமிருந்து அது தானகவே வரும். ஆகவே, இப்படிப்பட்ட நல்ல உறவுகள், மதிப்பு, மரியாதையெல்லாம் உங்கள் முன்னுரிமையில் இருக்கவேண்டியது அவசியம்.

ஆக, நீங்கள் எதை முன்னுரிமை கொடுத்து நடத்துகிறீர்கள் என்பதைக் குறித்து சற்று யோசித்துப் பாருங்கள். உங்கள் பெருமையை முதலிடத்தில் வைக்கிறீர்களா? நான் போதகர், நான் மேய்ப்பன், நான்தான் இந்த சபைக்கு தலைவன், நான்தான் இந்த ஊழியத்தை ஏற்படுத்தினேன், நான் வீடுவீடாகச் சென்று, இவ்வளவு ஆத்துமாக்களை

சந்தித்து, சபைக்கு கொண்டுவந்தேன் என்றதொரு எண்ணங்களையெல்லாம் கொண்டிருக்க கூடாது பிரியமானவர்களே. கர்த்தருடைய கிருபை உங்களோடுகூட இருந்து செயல்பட்டதினால்தான், ஆத்துமாக்கள் வந்தார்களேயொழிய, உங்கள் உழைப்பினால் வருகிறது அல்ல. ஊழியத்தில் வருகிற கனிகள் எல்லாமே நீங்கள், தேவனோடு இணைந்து செயல்படுகிறீர்கள் என்பதுதான் உண்மை. நீங்கள் அவரோடு இணைந்து, ஒப்புக்கொடுத்து போனீர்கள், அவர் உங்களோடுகூட இருந்து, கிரியை நடப்பித்தார். அதனால்தான் இவ்வளவு ஆத்துமாக்கள், இவ்வளவு சபைகள், இவ்வளவு கட்டிடங்கள் எல்லாம். ஆகவே நீங்கள் மகிமையை, கனத்தை, கர்த்தருக்கு செலுத்த வேண்டும். இதை முன்னுரிமை கொடுத்து, நீங்கள் எப்போதும் கர்த்தருக்கு மகிமையைச் செலுத்த ஒருபோதும் மறந்துபோகக் கூடாது. எந்த நேரத்திலும் உங்கள் ஊழியர்கள், உங்களுடைய சக ஊழியர்கள் இல்லாவிட்டால் உங்கள் விசுவாசிகள் வந்து எந்தக் காரியத்தைச் சொன்னாலும், எல்லாம் கர்த்தருடைய கிருபை, அவருடைய கிருபையினால் இவைகளெல்லாம் நடக்கிறது என்று சொல்லி, ஒவ்வொரு முறையும் கர்த்தருக்கு மகிமை செலுத்தி பாருங்கள். உங்களது ஊழியம் இன்னும் அதிகமாய் வளரும் என்பதிலே சந்தேகம் இல்லை.

அடுத்து, ஊழியர்களுக்கு இருக்கிற சில சவால்களைக் குறித்து நாம் கற்றுக்கொள்வோம். ஒரு மேய்ப்பன் அல்லது போதகனுடைய ஊழியம் பார்ப்பதற்கு எளிதாய் தோன்றலாம். ஆனால் மிகக் கடினமான ஊழியம்தான். ஏனென்றால், ஒரு குடும்பத்தை மேய்க்கிறது ஒரு பெரிய பாடாக இருக்கிறது, அதில் ஏகப்பட்ட குடும்பங்கள், அத்தனை பேருடைய காரியங்கள், அவர்களுடைய எதிர்பார்ப்புகள், அவர்களுக்கு நேரம் செலவழிக்கிறது என்கிறதான பல வேலைகள் இருக்கிறது. அவர்களுடைய மதிப்பையும், மரியாதையையும் பெறுகிற இடத்தில் ஊழியர்கள் இருக்க வேண்டும். அவர்களுடைய அன்பைப்பெற வேண்டிய இடத்திலே ஊழியர்கள் இருக்கிறார்கள். ஒரே மனிதனாய் என்ன செய்வார், பாருங்கள், அவரால் என்ன செய்ய முடியும்? ஆக, இதுவொரு பெரிய சவால் நிறைந்த காரியம். அதுவும் சபை மிகவும் பெரியதாய் இருக்கிறது என்று வையுங்களேன், அதாவது 1000 முதல் 2000 பேர் அல்லது 4000 பேர் என்று பெருக்கமாய் போகிறது ஒரு பெரிய பிரச்சனை அல்லது பளுவான வேலை. ஒரு அருமையான ஊழியரை எனக்கு தெரியம். அவர் 20 பேருக்கு ஒரு ஊழியன். அவரால் 20 பேரைத்தான் சந்திக்க முடியும். ஒரு ஊழியர் என்ற அந்த இடத்தில் அவரை வைத்துப் பாருங்கள். அவர் தலைமைப் போதகர், ஒரே சபைதான், அந்த சபைக்குள் 20 பேருக்கு ஒரு போதகர். அவர் வீடு சந்திப்பார், அவர்களுடைய பிரச்சனைகளுக்கு, ஆலோசனை கொடுத்து, சந்தித்து, நடத்தி சிறப்பாக ஊழியத்தைச் செய்தார், ஏனென்றால் அது சிறிய சபையாக இருந்தது. நீங்கள் அவ்வாறுகூட யோசித்துப் பார்க்கலாம். பெரிய சபையாக வளரவேண்டும், பலர் வரவேண்டும், ஆயிரக்கணக்கான பேர் வரவேண்டும் என்றெல்லாம் நினைக்காதீர்கள். தயவுசெய்து திரள் கூட்டமான மக்களை, சுவிசேஷ கூட்டங்களில் வேண்டுமென்றால்

எதிர்பார்க்கலாம். நிறையபேர் வந்து ஒரே நேரத்தில், நீங்கள் பேசி, அவ்வாறு நடத்துகிறது என்பது வேதத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். அந்த முறையை விட தனிப்பட்ட முறையில் இல்லாவிட்டால், குறைந்த கூட்டத்தை வைத்து நடத்துகிறதுதான் தரம் நிறைந்த ஒரு கூடுகையாய் இருக்கும் என்பதிலே சந்தேகமில்லை. அவர்கள்தான் ஆவிக்குரிய வாழ்க்கையிலே நன்றாக வளர்வார்கள், தனிப்பட்ட முறையில் மேய்ப்பனோடு தொடர்பு இருக்கும். ஆலோசனை கொடுக்க முடியும், ஜெபம் செய்ய முடியும், அவர்களுடைய வீட்டின் காரியங்களில் பங்கேற்க முடியும். அங்கு அவர்களுடைய வீடுகளில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளில் பங்கேற்க முடியும், அதற்கு மட்டும் நேரம் இருக்கும், எல்லாம் நடக்கும். அவைகளெல்லாம் நிர்வாகம் செய்யக்கூடிய வகையில் இருக்கவேண்டும்.

ஒரு சபையானது, ஒரு சரியான சபையாகவும், நிர்வாகம் செய்யக்கூடிய அளவிலேயும் இருப்பது அவசியம். அதாவது அது ஒரு 20 பேர் அல்லது 100 பேர், மிஞ்சிப்போனால் 200 பேர் இருக்கலாம். ஆனால் 20 பேருக்கு ஒரு போதகர் என்பதுபோல் ஒரு கட்டுப்பாட்டை நீங்கள் கொண்டு வரலாம். இதுவொரு ஆலோசனையாக நான் இங்கு கூறுகிறேன். இப்பொழுது நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், சபை நிர்வாகத்திலிருக்கிற பிரச்சனையை கருத்தில் கொண்டு சொல்கின்றேன். சபையானது நிர்வகிக்ககூடிய அளவிலே பிரிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஒரே இடத்தில் மக்களை கூட்டம் கூட்டமாய் சேர்க்கிறதைக் காட்டிலும், ஆங்காங்கே சின்ன, சின்ன கிளை சபைகளாக நீங்கள் ஏற்படுத்தலாம். மாதத்திற்கோ, வருடத்திற்கோ, அல்லது 6 வாரத்திற்கு ஒரு முறையோ, 3 மாதத்திற்கு ஒரு முறையோ, அதாவது சிறு சபையிலுள்ளவர்களை, பெரிய சபைக்கு நீங்கள் அழைக்கலாம். மற்றபடி ஆங்காங்கே அவர்கள் ஆராதிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையில் ஒரு 5 குடும்பம், ஓரிடத்தில் கடந்து வருகிறார்கள் என்றால், அங்கிருந்து, தலைமை சபைக்கு வருகிறதைக் காட்டிலும், அந்த 5 குடும்பம் இருக்கிற இடத்தில் ஆராதனையை ஆரம்பிப்பது, பக்கத்திலுள்ள வீட்டிலுள்ளவர்கள் உடனே அங்கே வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். எடுத்தவுடனே நீங்கள் மக்களை சந்தித்து, உடனே ஆராதனைக்கு அங்கிருந்து புறப்பட்டு, இங்கே வந்து ஆராதியுங்கள் என்று சொல்ல முடியாது. ஆக, நீங்கள் அங்கேயிருக்கிற இடத்திலேயே சபையை ஆரம்பித்து நடத்துகிறீர்கள் என்று வையுங்கள். சபையின் வளர்ச்சி அபரிவிதமாய் இருக்கும், பக்கத்தில் இருக்கின்றபடியால், அநேக மக்கள் புதிது புதிதாக வருவார்கள். உங்கள் சபை விரைவில் வளர்ச்சியடையும். இவ்வாறான பல காரியங்கள் இருக்கிறது. நம்முடைய வேதாகம கல்லூரியில் சபை வளர்ச்சி யுக்திகள் என்பதைக் குறித்து அநேகமான நுட்பங்களையெல்லாம் கற்றுக்கொடுத்திருக்கிறோம். விரும்புகிறவர்கள் நீங்கள் அதிலும்கூட சேர்ந்து, அவ்விதமான சபை வளர்ச்சி யுக்திகள் எவ்விதமாக வேதத்தின் அடிப்படையிலே நடந்தன? என்றெல்லாம் நீங்கள் கற்றுக்கொள்ள முடியும். வளருங்கள், உங்களை எதிர்பார்க்கிறோம். எங்களோடு இணைந்து கொள்ளுங்கள்.

இப்போது இந்த சபை ஊழியத்திலிருக்கிற போதகருக்கு, மேய்ப்பனுக்கிருக்கிற சவால்கள் என்னென்ன என்பதை அறிவோம்.

**முதலாவது காரியம், நேரமின்மை என்ற சவால்.** ஏன் அவ்வாறு சொல்கிறேன் என்றால், ஒரு சபை போதகர் தன்னுடைய குடும்பத்திற்கு நேரம் கொடுக்க வேண்டியது இருக்கிறது. இதற்கு பிறகு அந்த சபையாருக்கு நேரமும் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, சற்று முன்னர் பார்த்ததுபோல, சொந்த குடும்பத்தை நன்றாக நடத்துகிறவன்தான், சபையை நடத்த முடியும் என்று வேதம் சொல்லுகிறது. எனவே, ஒரு சாதாரண மனிதனைவிட ஒரு போதகர், மேய்ப்பர், தன் குடும்பத்தின் மீது அதிக அக்கறையுள்ளவராகத்தான் இருப்பார். ஏனென்றால், கிறிஸ்துவின் அன்பு, அந்த அன்பைக் கொடுத்துவிடும். ஆகவே, அதிக நேரம் அங்கேயும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதற்குப் பின்பு சபையாருடைய தேவைகளையும் கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு நேரம் கொடுத்து பழகவேண்டியிருக்கிறது. அவர்களுடைய நிகழ்ச்சிகளில் பங்குபெற வேண்டியதிருக்கிறது என்ற பல சவால்கள் இருக்கிறது. மட்டுமல்ல, ஒரு இடத்திற்கு போகும்போது, எல்லோருமே நன்றாக, சுருக்கமாகவும், இனிமையாகவும் பேசி அனுப்புவார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு வீட்டிற்கு போதகர் சந்திக்க போகிறார் என்றால், பாஸ்டர் வந்திருக்கிறார், குருவானவர் வந்திருக்கிறார் என்று எல்லா காரியங்களையும் கொட்டி தீர்க்கத்தான் மக்கள் விரும்புவார்கள். அங்கே, அவரால் நேரத்தை கைக்கொள்ள இயலாது. உதாரணமாக, ஒரு 5 மணிக்கு ஒரு வீடு சந்திப்பை நிகழ்த்த ஆரம்பிக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். குறைந்தது 2 – 3 மணி நேரம் வீடு சந்திக்க போகவேண்டும். மாலை 8 அல்லது 9 மணி வரை தன்னுடைய சபையார் வீட்டிற்கு போகவேண்டும் என்று அவர் புறப்பட்டு போவார். அப்படி போகும்போது, சில வீடுகளில் அந்த 3 மணி நேரமும் அதிலேயே போய்விடும், காரணம் அவர் ஒரு பிரச்சனையை சொல்வார், இந்த பிரச்சனையை சொல்வார், இதை கேட்கவேண்டும், அதற்கு ஆலோசனை சொல்லவேண்டும். ஆக, அவர் எதிர்பார்த்தது போல, ஒருவேளை தன்னுடைய சபையார் அந்த மக்களுக்கு சொல்லியிருப்பார், நான் இன்றைக்கு வீடு சந்திப்பு செய்வதற்கு வருகிறேன். உங்களது பகுதிக்கு இன்று வந்துவிடுவேன் என்று சொல்லியிருப்பார். இவர் 3 மணி நேரம் அந்த வீட்டில் பிரச்சனையை பேசும்போது, இவர் என்ன செய்வார், பாவம், பாதியில் விட்டு எழுந்து வரவும் முடியாது, ஏனெனில் ஊழியர், பாதியில் எழுந்து வருவதற்கு இது எளிதான காரியமல்ல. பேசி நாளைக்கு வாருங்கள், அலுவலகத்தில் பேசிப்போம் என்று சொல்ல முடியாது. இது அன்பு மற்றும் கரிசனை கலந்த விஷயம். இது உலக விஷயம்போல சுருக்கமாகவும், இனிமையாகவும் செய்துவிட்டு, நான் சென்றுவருகிறேன் என்று சொல்கிற விஷயமல்ல, அது முடியாது. இங்கே அவருக்கு நேரமின்மை என்பது ஒரு பெரிய சவாலாக இருக்கிறது. சொன்ன நேரத்திற்கு அவரால் வர முடியாது, ஏனெனில் அவருடைய நேரம் மக்களோடு

தொடர்புடைய நேரமாய் இருக்கிறது. இல்லாவிட்டால் விசுவாசிகள் கோபப்படுவார்கள், பாதியில் விட்டுவிட்டு வந்தாலும், அவர் என்ன அவசரப்படுகிறார் என்று சொல்வார்கள். எல்லாவற்றையும் பார்க்க வேண்டும், இல்லையா? அருமையான ஊழியர்களே, நீங்கள் இவற்றையெல்லாம் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள், புரிந்துவைத்துக்கொள்ளுங்கள். இந்த நடைமுறையான பிரச்சனைகளை அறிந்து, அதற்கு என்ன தீர்வுகள் எடுக்க வேண்டுமென்று நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும். நேரத்தை கையாளுகின்ற திறன் மிகவும் தேவை. ஆனால் நாம் நினைத்ததுபோல, நேரப்பராமரிப்பு எல்லாம், இங்கே கொண்டுவர முடியாத நிலை. நீங்கள் ஊழியத்திற்குள் இறங்கும்போது இதனை பார்ப்பீர்கள், ஒன்று செய்யலாம், சபையாரிடம், நீங்கள் ஏற்கனவே சொல்லவேண்டும், இப்படியான நிலையில் நான் இருக்கிறதினால், நான் ஒன்றும் சுருக்கமாக பேசிவிட்டு உடனே வரமுடியாது. மொத்தத்தில் அறிவிப்பு கொடுக்கும்போது, அவர்கள் ஒன்றும் நினைக்க மாட்டார்கள். அதனால், விறுவிறுவென்று நான் வீடு சந்திப்பு வேலையை எல்லா வீடுகளுக்கும் செய்தாகவேண்டும் என்கிற காரியத்தை சொல்லி, சுருக்கமாக 5, 10 நிமிஷம் ஒரு வீட்டில் இருப்பேன் என்கிற தகவலை சொல்லலாம். பிரச்சனையை கையாளுவதற்கு, நீங்கள் சபைக்கு வரலாம். அதற்கென்று ஒருநாள் நீங்கள் ஒதுக்கிக்கொள்ளலாம். இந்த நாளில் வாருங்கள், நாங்கள் உங்களது பிரச்சனைகளைப் பற்றி பேசுவதற்கு காத்திருக்கிறோம், வெளியே எங்கும் செல்லாமல், அலுவலகத்திலேயே அல்லது சபையிலேயே இருப்பேன் என்றும் தெரிவிக்கலாம்.

அந்த குறிப்பிட்ட நாளில், நீங்கள் எந்தக்காரணம் கொண்டும் வேறெந்த நிகழ்ச்சிக்கும் நேரம் கொடுக்காதீர்கள். ஆக, மக்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். இன்று நாம் போனால், போதகரைப் பார்த்து வரலாம். ஆகவே, நம்பிக்கையோடு அந்த பிரச்சனையிலுள்ள நபர்கள் உங்களைத் தேடி வந்து அன்று குறிப்பிட்ட, அந்த மதியவேளை முழுவதும் இருக்கிறீர்கள் என்றால், உங்களைப் பார்த்து சந்திப்பார்கள், ஆலோசனை பெற்று செல்வார்கள். வீடு சந்திப்பு என்பது ஒருவேளை நீங்கள் போய்விட்டு, நீங்கள் எல்லோரும் நலமாக இருக்கிறீர்களா? மிகவும் சந்தோஷம் என்று சொல்லிவிட்டு, ஜெபம் செய்துவிட்டு வருகிற வேளையாக நீங்கள் மாற்றியமைக்கலாம். இவ்வாறு நீங்கள் ஒருவேளை இதற்கு தீர்வு உண்டாக்கலாம். ஒரு போதகருக்கு இருக்கிற பெரிய சவால், நேரம் என்ற சவால் இருக்கிறது. எதுவுமே குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க முடியாதபடி அவர் திணறுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ஞானமாய், கர்த்தருடைய உதவியோடு நீங்கள் திட்டமிட்டால் அதையும் நீங்கள் மேற்கொள்ள முடியும்.

**அடுத்து, எதிர்பார்ப்பு என்ற சவால் இருக்கிறது.** சபையாருடைய எதிர்பார்ப்பை எல்லாம் நிறைவேற்ற முடியாது. அதை சீக்கிரத்தில் நீங்கள் ஊழியத்திற்கு போன உடனே கண்டுபிடித்து விடுவீர்கள். இல்லையென்றால், ஊழியத்தில் இருக்கிறவர்கள் ஏற்கனவே

கண்டுபிடித்து இருப்பீர்கள். எல்லாருடைய தேவையையும் நம்மால் நிறைவேற்ற முடியாது. இல்லாவிட்டால், இரண்டு குடும்பங்களுக்கிடையே பிரச்சனை. ஒரு குடும்பத்தின் சார்பாக, உண்மையிருக்கிற பக்கம் நாம் நின்று நிச்சயமாய் தீர்ப்பு வழங்கத்தான் செய்ய வேண்டும், வேற வழியில்லை. ஆக, அதில் பாதிக்கப்படுகிறவர் நிச்சயமாய் நம்மை வெறுப்பார், அவருடைய எதிர்பார்ப்பின்படி நாம் செய்யாதபடியினால், நம்மை அவர் குறை சொல்வார், அவர் ஊரெங்கும்போய் வேறு குறை சொல்வார். என்ன ஊழியர் இவர் என்று சொல்லி, அவருக்கு சாதகமாய் நாம் இல்லாதபடியினால், அவர் குறைகூறுவதை நாம் தவிர்க்கவே முடியாது. நாம் மற்றவர்களை சில வேளைகளில் இவ்விதமாய் சோர்ந்துபோகவிட வேண்டியிருக்கிறது. வேறு வழியும் இல்லை. நீங்களும் அதற்காக பழி ஏற்க வேண்டியதுமாகவே இருக்கிறது. இதுவொரு பெரிய சவாலாக இருக்கிறது பிரியமானவர்களே. மக்களுடைய எல்லா தேவைகளையும் சந்திக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். ஏனெனில், நீங்கள் ஒரு நபராக இருக்கிறீர்கள், மட்டுமல்ல மக்களுடைய காரியங்களில் சில தீர்ப்புகளை வழங்கும்போதும், நீங்கள் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கேற்றபடி தீர்ப்பு சொல்லாததினால், பழிச்சொல் ஏற்க வேண்டிய இடத்திலும் இருக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. இது தவிர்க்க முடியாத நிலை என்பதை புரிந்து கொள்ளுங்கள். அதற்கு உங்கள் மனதை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம்தான்.

***மூன்றாவது காரியம், உணர்வு பூர்வமான பிரச்சனை.*** இதுவொரு சவால், அதாவது நாம் மக்கள் மத்தியில் சுவிசேஷத்தை விதைக்கிறதினால், அதை பிரசங்கிக்கிறதினால், நம்மால் நம்முடைய பிரச்சனையை விசுவாசிகள் மத்தியில் போய் பேச முடியாது. நீங்கள் அவ்வாறு சொன்னீர்கள் என்றால், ஐயா, நீங்களே இப்படி சொன்னால், நாங்கள் எப்படி கர்த்தரை நம்புவோம் என்று சொல்லிவிடுவார்கள். உங்களுக்கு ஒரு கிராமத்தில் ஊழியம் செய்யும்போது, உங்களுக்கு வேற ஊழியருடைய ஐக்கியம் இல்லையென்று வையுங்களேன். அந்த இடத்திலே நீங்கள் மட்டும்தான் ஊழியராய் இருக்கிறீர்கள் என்று வையுங்களேன், என்ன செய்வீர்கள்? பாவம் யாரிடம்போய் கொட்டி தீர்ப்பீர்கள்? உங்களுக்கு உணர்வுபூர்வமான சவால்கள், சரீரப்பிரகாரமான பிரச்சனைகள், உங்களுக்கு ஒரு தேவையென்றால், யாரிடம் போய் சொல்ல இயலும். மக்களுடைய ஆவிக்குரிய தேவைகளை உங்களுக்கு தெரிந்த வகையில் சொல்லிக் கொடுப்பீர்கள். ஆனால், உங்களுக்கு இன்னும் ஆழமாய் சொல்லித் தருவதற்கு யார் இருக்கிறார்கள்? ஆக, இவ்விதமான சவால்கள் ஒரு ஊழியருக்கு, எந்த ஊழியராக இருந்தாலும், அதிலும் குறிப்பாக போதகருக்கு இருக்கிறது. சிலவேளைகளிலே மிகவும் சோர்ந்துபோய் களைப்படைந்த நிலையிலேயும் போதகர்கள் இருப்பார்கள், அதிகமான வேதனையிலே இருப்பார்கள், தேற்றுவதற்கோ யாருமில்லாத நிலையிலும் இருப்பார்கள். ஆக, ஒவ்வொரு நாளும் இந்த சூழ்நிலையிலிருந்து அவர்கள் வெளியே வரமுடியாதபடி கூட சில

வேளைகளில் அவர் திணறுகிற நிலை உண்டாகிறது. இதுவொரு மிகப்பெரிய சவால், ஏனெனில் பிசாசானவனும், இந்த மனதை நோகடிக்கிறான், சிந்தையில் போராட்டத்தை கொண்டுவரவே அவன் விரும்புகிறான், நேரடியாக வந்து உங்களோடு ஒருவேளை யாரும் தாக்குதல் நடத்தவேண்டும் என்று அவசியமில்லை. அதைக்கூட நீங்கள் தாங்கிவிடுவீர்கள், அதைக்கூட நீங்கள் போதுமென்று நினைப்பீர்கள். ஆனால் மனதளவில் உங்களைச் சோர்வடைய வைத்துவிட்டால், நீங்கள் உங்கள் ஊழியத்தில் முன்னேறிப்போக மாட்டீர்கள், அப்படியே சோர்ந்து உட்கார்ந்து விடுவீர்கள் என்பது அவனுக்கு தெரியும். ஆகவே பலவிதங்களில் இவ்விதமாய் சமுதாயத்தால், அதாவது சபைக்கு வெளியில் உள்ளவர்களால், சபைக்கு உள்ளே உள்ளவர்களால், குடும்பத்தால் இந்த உணர்வுகள் சவால் நிலையை சந்திக்கிறது, இது மிகவும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கிறது. இதற்கு நீங்கள் ஆயத்தமாகவும், இதை சமாளிப்பதற்கு நல்ல அறிவுரையாளர்கள், நல்ல ஆவிக்குரிய தலைவர்களை நீங்கள் உருவாக்கி வைத்துக் கொள்ளவேண்டும். உங்களுக்கு, உங்களது பாரங்களை பகிர்ந்துகொள்ள, மனம்விட்டு பேசுவதற்கென்று, குறைந்தது கைபேசியிலாவது பேசக்கூடிய அளவிலே உங்களுக்கு நல்ல தலைவர்களை ஏற்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய உணர்வுகளை புரிந்துகொண்டு, உங்களுக்காக ஆலோசனை சொல்லவும், ஜெபிக்கவும், உற்சாகப்படுத்தவும் நல்ல ஊழியர்கள் உங்களுக்கு தேவை.

**நான்காவது காரியம், தகுதி என்ற சவால்**. நாம் ஒரு மேய்ப்பனாக இருப்பதனால் மக்கள் நிச்சயமாய் ஒருவிதத்தில் நம்மை உயர்வாகவேதான் கருதுகிறார்கள், காரணம் என்னவென்றால், நம்முடைய ஒழுக்கம், அற்புதமான சாட்சி, இவையெல்லாவற்றையும் கேட்கும்போது, நிச்சயமாக உங்களை ஓரிடத்தில் வைத்து, அவர்கள் மதிப்பார்கள். அவ்வாறு இருக்கின்றபடியால், சில வேளைகளில் உங்களுக்கு, சில பிரச்சனைகளும் இருக்கிறது. எனக்கு தெரியும், ஒரு போதகர் அவர் பார்க்க ஒருபோதும் கஷ்டப்பட்டதாகவே தெரியாது. அதனால் அவருக்கு என்ன குறை? அவர் நன்றாக வசதியாகத்தான் இருக்கிறார் என்று கருதி, அவரை யாரும் கண்டுகொள்கிறதேயில்லை. பார்ப்பதற்கு அவருடைய தோரணை அப்படியிருக்கும். ஆகவே ஒருமுறை சபையில் சொன்னார், எங்களை பார்க்கும்போது, நீங்கள் எங்களுக்கு எல்லா தேவையும் நிறைவு பெற்றதாகவே நினைப்பீர்கள். ஆனால் நாங்கள் அவ்வளவு தேவையோடு இருக்கிறோம் என்பது, எனக்கு மட்டுமே தெரியும் என்று சொல்லி, சில காரியங்களை பகிர்ந்து கொண்டார். அப்போதுதான் மக்களுக்கு தெரிந்தது, ஓ இவ்வளவு தேவையோடு, இவ்வளவு பிரச்சனையோடு இருக்கிறார் என்று சொல்லி புரிந்துகொண்டார்கள், பார்த்தீர்களா? ஆக, மக்கள் ஒருவிதமான கருத்தை, ஊழியர்களைக் குறித்து ஒரு நல்ல மேன்மையான கருத்தை வைத்திருப்பது நல்லதுதான். ஆனால், அதுவே பிரச்சனையாக சிலவேளையில், சவாலாய் மாறுகிறது. அவர்கள் தேவைகள், அதனால் சந்திக்கப்படாமல், அவர்களுக்கு உதவுவதற்கு

முன்வராமல், இல்லாவிட்டால் ஆலோசனை சொல்வதற்கு சில பிரச்சனைகளில் சில கருத்துக்களை சொல்லக்கூட முன்வரமாட்டார்கள். காரணம், அவருக்கு தெரியாததா? அவர் ஒரு பெரிய தேவனுடைய ஊழியர் அல்லவா? என்று அவரை தள்ளி வைத்தே பார்க்கிற ஒரு சமுதாயம்தான், நம்முடைய சமுதாயம். ஆகவே இவ்விதமாக சில வேளைகளில் அவர் பிரச்சனைக்குரிய இடத்தில், சவாலை சந்திக்கிற இடத்தில் இருக்கிறார் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

**ஐந்தாவது காரியம், சபை உறுப்பினர்களால் ஏற்படுகிற பிரச்சனைகள்.** அதுவொரு சவால், பார்த்தீர்களென்றால், சிலர் இரட்சிக்கப்படாமல், இரட்சிக்கப்பட விரும்பாமல், சபையில் பிரச்சனையைக் கிளப்புவதற்கென்றே இருப்பார்கள். பிரச்சனை பண்ணுகிறதே அவர்களின் வேலை. எதற்கெடுத்தாலும், எதிர்மறையாகத்தான் கேட்பார்கள். நாம் அவர்களை வெளியே போங்கள் என்றும் சொல்ல முடியாது, ஏனெனில், நாம்தான் அவர்களை சபையில் கூப்பிட்டு, இரட்சிப்பிற்குள் கொண்டுவர அழைத்து வந்தவர்கள், ஊழியர்களாயிருந்து கொண்டு, அவர்களை சபையை விட்டு செல்லுங்கள் என்றும் சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் பண்ணுகிற அட்டூழியம் தாங்கவே முடியாது. ஏகப்பட்ட பிரச்சனை, சண்டை, குடும்பத்தில் பிளவை ஏற்படுத்தி விட்டுவிடுவார்கள். போதகர்களுக்கு எதிராக பேசி அவரைத் தூண்டி விட்டுவிடுவார்கள். இல்லையென்றால், ஒரு குடும்பத்தாருக்கு எதிராக மற்றொரு குடும்பம் பிரச்சனையை கிளப்பி, ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பார்கள். ஏனெனில், ஒற்றுமையை குலைப்பதற்காக அவர்களுடைய செயல்பாடுகள் இருக்கும். அவர்களுக்கு அதில்தான் மகிழ்ச்சி. ஆக, இதையொரு போதகர் வாரத்தில் பாதிநாள் இதைப்பற்றித்தான் பேசிக்கொண்டும், சிந்தித்துக்கொண்டும், அந்த காரியங்களில், வருத்தமுற்றுக்கொண்டும் இருக்க வேண்டிய சவால்கள் இருக்கிறது. ஆம் பிரியமானவர்களே, சபையானது நல்ல முதிர்ந்த விசுவாசிகளையும் உடையதாய் இருக்கும், நடுத்தர விசுவாசியும் இருப்பார்கள், இரட்சிக்கப்படவே மாட்டோம் என்று சொல்லுவதில் உறுதியாயிருக்கிற சில உறுப்பினர்களும் இருப்பார்கள். நீங்கள் நேற்று ஊழியம் செய்து, இன்றைக்கு சபைக்கு வந்த புதிய சபையாரும் இருப்பார்கள். இத்தனை கூட்டத்தையும் மேய்க்க வேண்டிய பொறுப்பில் ஊழியர் இருக்கிறார். ஆகவே, புதிதாய் வந்தவர் ஒன்றுமே புரியாமல், எதையாவது பேசிக்கொண்டே இருப்பார், மிகவும் முதிர்ச்சி அடைந்தவர், அதிக சத்தியத்தை எதிர்பார்ப்பார், நடுத்தர விசுவாசத்தில் இருக்கிறவர்கள், ஒரு விதமாய் உங்களிடத்தில் எதிர்பார்ப்பார்கள், இரட்சிக்கப்படவே மாட்டோம் என்று உறுதியாய் இருக்கிறவர்கள், மற்றவர்களுடைய வாழ்வில் தொந்தரவு செய்துகொண்டுதான் இருப்பார்கள். இவைகளெல்லாவற்றையும், சவால்களாக உடையவராக ஒரு ஊழியர் இருக்கின்றார். இவர்களெல்லாரையும் நீங்கள் சமாளிக்கவேண்டும், இதற்கு ஒரு தீர்வை உண்டாக்க ஒருபோதும் கூடாது. ஆனால் பிரச்சனை இருந்துகொண்டேதான் இருக்கும். அதற்கு

நீங்கள் ஞானமாக செயல்பட்டு மேற்கொள்ள வேண்டியது அவசியம். அதுதான் ஊழியம் என்பது சவால் நிறைந்தாகவே இருக்கிறது. ஆனால் இது சுவராஸ்யமாகவும் இருக்கும். ஒருவரின் பிரச்சனையை தீர்த்து முடிப்பார்கள், அடுத்து ஒரு பிரச்சனை வரும், ஜெபத்தோடே அடுத்து தீர்த்து வைத்துக்கொண்டே இருக்க வேண்டும். அங்கு வேறு வழியேதும் கிடையாது. இவ்விதமாக சபையில் பிரச்சனைக்குரிய நபர்களால் வருகிற பாடுகள், சவால்கள் இருக்கிற ஒன்றாகவே இருக்கும்.

**ஆறாவது காரியம், சபையிலே வயதானவர்கள் என்ற பிரச்சனை.** அதாவது சபையிலே வயதானவர்கள் அதிகமாக, அதிகமாக, அதிலே பிரச்சனைகள் எழத்தான் செய்கிறது. அவர்களுக்கு செய்யவேண்டிய சேவைகள் அதிகமாய் இருக்கிறது. அதற்காக வயதானவர்கள் இருக்க கூடாது என்ற அர்த்தத்தில் கூறவில்லை. ஆனால், அதினாலும் என்ன பிரச்சனை என்றால், வயதானவர்கள் சொல்வார்கள், நான் இத்தனை ஆண்டுகள் இந்த சபையிலே இருக்கிறேன், ஆனால் இப்படியொரு போதகரைப் பார்க்கவில்லை என்று சொல்லி உங்களை எளிதாக குறை சொல்லிவிடுவார்கள். ஆக, வயதானவர்கள் முன்பிருந்தே அங்கு இருப்பதனால், சபையில் தங்களுடைய அனுபவத்திலிருந்து சில பிரச்சனைகளை, சில காரியங்களை சொல்லக்கூடும். மட்டுமல்ல அவர்கள் உங்களுக்கு எதிராய் இருக்கும்போது, சபையாரிடத்தில் சொல்லும்போது, அந்த வயதான தாத்தாவே இப்படி சொல்கிறார், என்று சொல்லி அவர் சொல்கிறதைத்தான் கேட்பார்களேயொழிய, போதகர் சொல்கிறதை முக்கியமான இடத்தில் வைக்க மாட்டார்கள். இப்படி அதுவும் ஒரு சவாலாக இருக்கிறது. மட்டுமல்ல, அவர்களை பராமரிப்பது, குடும்பத்தில் பராமரித்தல் என்று சொல்லி, அவருக்கு உதவுவது போன்ற பல பிரச்சனைகள் ஒருவேளை போதருக்கு சவாலாய் இருக்கிறது.

**ஏழாவது காரியம், தொடர்பு கொள்வதில் இருக்கிற குறைபாடு**, அதாவது போதகருக்கு எல்லா விஷயமும் தெரியும் என்று சொல்ல முடியாது. அதாவது சபையில் ஏதாவது பிரச்சனை இருக்கலாம். சிலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவருக்கு தெரியாமல் இருக்க வாய்ப்பு இருக்கிறது. எல்லோரும் போதகருக்கு போன்பண்ணி சொல்லிக்கொண்டு, போகிறதில்லை. ஆக, கடைசியில் போதகருக்கு தெரியாதா? அவர் வருகிறது இல்லை, பாருங்கள். ஏழை வீடா இருந்தால், எங்கே வருவார்? என்று சொல்லி குறை சொல்லிவிடுவார்கள். எனவே, போதகருக்கு அதுவொரு சவாலாய் இருக்கிறது. மற்றவர்கள் தகவல் தெரிவிக்காதபோது, இல்லாவிட்டால் அதைக்குறித்த ஒரு கவனகுறைவினால், அவர் அங்கே போகவில்லையென்றால், சபையார் அதையொரு சவாலாக எடுத்து, நாங்கள் இவ்வளவு உடம்புக்கு சரியல்லாமல் கஷ்டப்படுகிறோம். ஏதாவது போதகர் செய்கிறாரா, பாருங்கள் என்று சொல்லி குறைசொல்வதற்கு அநேக வாய்ப்புகள் இருக்கிறது, ஆகவே, தொடர்பு கலையில்

போதகர் மிகவும் கவனமாக இருக்கவேண்டியது அவசியம். அவர் அடிக்கடியாய் குறிப்பிட்ட சபை மக்களோடு தொடர்பில் இருந்தால்தான், அவர்கள் சபையிலே நடக்கிற காரியங்களை போதகருக்கு தெரிவிப்பார்கள். ஆக, அதைப்பார்த்து போதகர் செயல்பட வேண்டிய இடத்தில் அவர் இருக்கிறார்.

**எட்டாவது காரியம், போதகர் மாத்திரமே செயல்படுகிற பிரச்சனை.** பொதுவாக அநேக சபைகளில் உள்ள பிரச்சனை, போகதர்தான் இருக்கிறார் இல்லையா? அவர் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான் என்று சொல்லி, எல்லா பணியையும், அந்த போதகர்மேல் போடுகிறது வழக்கம்தான். சில சபையார் சொல்லுகிறது உண்டு, அவருக்குத்தான் (போதகரை) நாம் காணிக்கை கொடுத்து வைத்திருக்கிறோம், சபையிலிருந்து மாதம் சம்பளம் கொடுக்க காரணம் என்ன? அவர் அதைச் செய்யத்தான் என்று சொல்லி, எளிதாக சொல்லிவிடுவார்கள். ஆனால், போதகருக்கு ஏகப்பட்ட பணிகள் ஏற்கனவே இருக்கும். ஆக, எல்லா விஷயத்திலும் அவரே தலையிட வேண்டும், அவரே செயல்பட வேண்டும் என்று சொல்லி, சபை எதிர்பார்க்கிறது ஒரு பெரிய சவாலாய் இருக்கிறது. சில போதகர்கள் சொல்வார்கள், அநேக வயதான முதிர்ந்த அனுபவமுள்ள மக்கள் தங்களுடைய ஊழியத்தில் உதவிக்காக பயிற்சி கொடுப்பார்கள். ஆனால், வாஞ்சையுள்ள மக்கள் அவருக்கு கிடைப்பது கடினம். ஆனால், எந்த ஊழியராக இருந்தாலும், தனக்கு உதவி செய்யும்படி மூப்பர்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம். எல்லா இடங்களுக்கும், போதகரே போக முடியாது. எல்லா இடங்களுக்கும் இவரே ஜெபம்செய்ய போக முடியாது. இல்லாவிட்டால், விசாரிக்க செல்ல முடியாது. மூப்பர்கள் தேவை. சபையானது எதிர்பார்க்கிறது, எல்லா இடங்களுக்கும் போதகர் வந்தே ஆகவேண்டும் என்று சொல்லும்போது, அதுவொரு சவாலாக இருக்கிறது என்றே பார்த்தோம். அவர்கள் என்னதான் சொன்னாலும், மூப்பர்கள் வந்தார்கள், அவரை அனுப்பியிருந்தேன் என்று சொன்னாலும், இல்லை, போதகர் வருகிறதற்கு அவருக்கு என்ன இதைவிட பெரிய வேலை இருக்கிறது? என்று அநேகர் சொல்லுகிறதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இப்படிப்பட்ட சவால்களும் இருக்கத்தான் செய்கிறது.

**ஒன்பதாவது காரியம், மருத்துவமனை விசாரிப்பு,** இதுவொரு பெரிய சவாலாகத்தான் போதகர்களுக்கு இருக்கிறது. இதையெல்லாம் செய்யக்கூடாது என்ற அர்த்தத்திலே நான் சொல்லவில்லை. ஆனால் இதெல்லாம் சவாலாக இருக்கிறது என்ற அர்த்தத்திலே சொல்லிக்கொண்டிருக்கிறேன். அநேக சபையிலிருக்கிற பிரச்சனை இதுதான். ஒவ்வொரு சபையையும் பார்க்கும்போது, இந்த பிரச்சனை இருக்கிறதை காணமுடிகிறது. மருத்துவமனைக்கு நோய்வாய்ப்பட்ட விசுவாசிகளை பார்க்க அவர் அடிக்கடியாய் செல்ல வேண்டியிருக்கிறது, செல்லத்தான் வேண்டும், வேற வழியில்லை. ஏனென்றால் அதை விசாரிக்கிறதுதான், அன்பை வெளிப்படுத்துகிற ஒரு காரியம். ஆக, அடிக்கடியாக இவர்

போய்விட்டு வந்திருப்பார். சிலரையெல்லாம், சபைக்கு பக்கத்தில் அட்மிட் பண்ணாமல், ஒரு மாவட்டம் விட்டு இன்னொரு மாவட்டத்திற்கு கொண்டுசென்று மருத்துவமனையில் சேர்த்திருப்பார்கள். அங்கேயும்கூட வந்தாரா? என்று கேள்வி கேட்கிறவர்களாகத்தான் விசுவாசிகள் இருக்கிறார்கள். அவ்விதமாக நிறைய போதகர்களுக்கு வீடு சந்திப்பு, மருத்துவமனை சார்ந்த ஒரு விசாரிப்பு, இப்படியான பல காரியங்களுக்கு போகிறதினால், அவருடைய உண்மையான ஊழியம் பாதிக்கப்படுகிறது. அதாவது உண்மையான ஊழியம் என்றால், போதனை ஊழியத்திற்கென்று அவர் ஆயத்தப்பட முடியாதபடி, பிரசங்கம் தயாரிக்ககூட நேரம் இல்லாதபடி பல காரியங்களில் அவர் ஈடுபட்டு மிகவும் சுறுசுறுப்பாகி விடுகிறார். அவருக்கு உண்மையான ஊழியம் அல்லது செய்யவேண்டிய ஊழியம் என்பது, சபையை போஷிக்கவேண்டும், வளர்க்க வேண்டும், வழி நடத்தவேண்டும் என்று அநேக காரியங்களை ஏற்கனவே கற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால், அதைச் செய்ய முடியாதபடி, அதிகமாய் இவ்வாறு அலைந்துகொண்டேயிருக்கிற இடத்தில் போதகர் இருக்கிறார். மட்டுமல்ல, அடிக்கடி விசுவாசிகள் அவர்களுக்கு நேரம் போகவில்லை என்றால், சபைக்கு வந்துவிடுவார்கள். வந்து, போதகர் ஐயாவோடு பேச விரும்பினேன், உங்களிடம் பேசினாலே சந்தோஷமாக இருக்கிறது, எனக்கு விசுவாச வளர்ச்சி அப்போதுதான் வருகிறது என்று சொல்லி, தினமும் பேச வந்துவிடுவார்கள். நீங்கள் அவற்றை தவிர்க்க முடியாது. எனக்கு வேற வேலை இருக்கிறது, என்று நீங்கள் அவர்களை தவிர்த்து, பேசுவீர்கள் என்றால், இந்த போதகர், மக்களோடு பழகுகிறதே இல்லை என்றதொரு குற்றச்சாட்டை முன்வைக்கிற வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே பிரியமானவர்களே, இப்படி அதிக நேரங்கள் பேசுவதிலும், பழகுவதிலும், ஜெபிக்க போகிறதிலும், வீடு சந்திப்பிலும், மருத்துவமனை விசாரிப்பிலும், மேலும் பல காரியங்களைக் கேட்டு தீர்த்துவைப்பதிலும், அவருடைய முக்கியமான பணிகளில் அதிகமானவை பாதிக்கப்படுகிற, சவால்களை உடையவராக ஒரு போதகர், மேய்ப்பர் இருக்கிறார்.

இவற்றை நாம் ஏன் கற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால், இனி ஊழியம் செய்யப்போகிற நீங்கள் இதை திட்டமிட்டு, அதைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்று நீங்கள் ஆவியானவர் உதவியோடு, அந்த சபைக்கேற்றபடி திட்டமிட வேண்டும். இதற்கான தீர்வை நாம் சொன்னோம் என்றால், ஒரே மாதிரியாக எல்லா இடத்திலும் உங்களுக்கு செயல்படாது. அதனால்தான் நீங்களே அந்த சூழ்நிலைக்கேற்றபடி, விசுவாசிகளுக்கேற்றபடி, எடுத்து சொல்லவேண்டும். பக்குவமாய் சொல்லி தீர்வை உண்டாக்கி, ஊழியத்தை மனநிம்மதியோடு சரியாய், அருமையாய் செய்யவேண்டும். ஆனால் என்னென்ன சவால்கள் இருக்கிறது என்று தெரியவேண்டும் என்பதற்காக, நீங்கள் அனுபவப்பட்டு, நஷ்டப்பட்டு தெரிந்துகொள்வதைவிட, நாங்கள் ஊழியத்திலே பெற்ற காரியங்கள், மற்ற

ஊழியர்களிடமிருந்து கற்றுக்கொண்ட காரியங்களை, உங்களுக்கு கற்றுத்தருகிறது நல்ல விஷயம்தானே. அதை நீங்கள் பின்பற்றுங்கள் பிரியமானவர்களே.

**பத்தாவது காரியம், போதுமான ஊழியம் இல்லாவிட்டால், உதவிபணம் கொடுக்காதபடி சபைகள் காணப்படுகின்றன.** ஊழியம் என்றாலே குறைவாக கொடுக்கவேண்டும், மாத சம்பளம் குறைவாக கொடுக்கவேண்டும், மீதியை கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற மனநிலை சபைகளிலே இருக்கிறது. மிஷன் பணியாக இருந்தாலும் சரி, எந்த ஊழியமாய் இருந்தாலும் சரி, அங்கு அதைக்கொண்டு வாழ்க்கை நடத்த முடியாதா? அவர்கள் தியாகமாய் ஊழியம் செய்வதற்குத்தானே வந்திருக்கிறார்கள் என்று சொல்லி, மிகக் குறைந்த சம்பளத்தை கொடுக்கிறது பல கிறிஸ்தவ ஊழிய நிறுவனங்கள். அவ்வாறு கொடுப்பதினால், ஒரு ஊழியர் தன்னுடைய தேவைகள் சந்திக்கப்பட முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார் என்பது உண்மை. அதனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், சில போதகர்கள், மற்ற சில வேலைகளை எடுத்தும் செய்கிறார்கள். வேலைகள் என்று சொல்வதைவிட வேறு ஊழியத்தில் சில ஈடுபாட்டை கொள்ளத்தான் செய்கிறார்கள். அதை தவறென்று நாம் சொல்ல முடிவதில்லை. ஆனால் அந்த சபையானது நிறைவாக கொடுத்து, தாங்கியிருந்தால் முழுநேரப்பணியை அவர் சிறப்பாக செய்வார். ஆகவே, பகுதிநேர சம்பளத்தைக் கொடுத்துவிட்டு, முழுநேர ஊழியத்தை செய்யும்படி சபை எதிர்பார்க்கிற ஒரு பெரிய சவால் இருக்கிறது. ஊழியர் என்றாலும், அவருக்கும் வயிறு இருக்கிறது, பசி எடுக்கும், அவருக்கும் குடும்பம் இருக்கிறது, அவருக்கும் இந்த விலைவாசி மத்தியில் தேவை இருக்கிறது. அதெல்லாம் உணராதபடி, இயக்கங்களும், சபைகளும் மிகக் குறைந்த சம்பளத்தைக் கொடுத்து, உதவி பணத்தைக் கொடுத்து, அவர்களை மற்ற வேலைகளைச் செய்யும்படி, மறைமுகமாக தூண்டுவதுபோல ஆகிவிடுகிறது. அதினால், அவர் மற்ற வேலைகளையும் செய்துவிட்டு, சபை ஊழியத்தையும் செய்துவிட்டு, குடும்பத்தையும் பார்த்துவிட்டு எத்தனை சவால்கள் இருக்கிறது என்று யோசித்து பாருங்கள் பிரியமானவர்களே. இதையெல்லாம் நினைவிலே கொண்டு, நீங்கள் செயல்படுங்கள், மட்டுமல்ல, சில போதகர்கள் வீடு சந்திப்பதற்காக, ஜெபிக்க வருகிறார்கள் என்றால், அவர் காணிக்கைக்கு வந்துவிட்டார் என்று சொல்லி, முகத்தை சுழிக்கிற அநேக விசுவாசிகளும் உண்டு என்பதை கொஞ்சம் நினைவில் கொள்ளுங்கள். தேவனுடைய பணியைச் செய்கிறார், அவர் கூலிக்கு பாத்திரவானாய் இருக்கிறார் என்ற எண்ணத்தோடு, அநேகர் கொடுக்கிறதில்லை, காரணம் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை, ஊழியத்தை முக்கியமாக கருதவில்லை. அதனால், அவர்கள் அப்படித்தான் செயல்படுவார்கள். அதையொரு பாரமாக கருதுகிற அநேக விசுவாசிகள் உண்டு.

பிரியமானவர்களே, தேவனுடைய பணியிலே இத்தனை சவால்கள் இருக்கிறது. இன்னும் அதிக சவால்கள் இருக்கிறது என்பதை நீங்கள் வாழ்க்கையில், நடைமுறையில் பார்க்க முடியும். இன்னும் நிறைய சபைகளில் பார்த்தீர்களென்றால், அரசியல் வேறு போய்க்கொண்டிருக்கிறது. அரசியல் சார்ந்த சவால்கள். அந்த கட்சிக்கு ஓட்டு போட்டவர், இந்த கட்சிக்கு உதவிசெய்ய மாட்டார், போதகரையும் மதிக்க மாட்டார், குருவானவரையும் மதிக்க மாட்டார். இல்லாவிட்டால் இந்த கட்சி ஜெயித்துவிட்டதானால், அந்த கட்சியில் உள்ளவர்களெல்லாம் சபைக்கு வரமாட்டார்கள். அவர்களுக்கு சபை முக்கியமல்ல, ஆராதனை முக்கியமல்ல, ஆட்சிதான் முக்கியம், அரசியல்தான் முக்கியம், தான் நிறுத்தின மக்கள் ஜெயிக்கவில்லையே. ஆகவே, ஆராதனைக்கு போகாதே என்று சொல்லுகிற காரியங்களையும் பார்க்க முடிகிறது. இவ்வாறான அநேக சவால்கள் இருக்கிறது. உண்மையான பக்தியுள்ள விசுவாசிகள், ஊழியர்கள் போன்றோரை மதியுங்கள். ஆனால் சும்மா, கடமைக்கு இவர் வேலைதான் பார்க்கிறார் என்ற எண்ணத்திலே நினைக்கிற சிலர் உண்டு. பெரிய பணக்காரர்கள் என்ற திமிர் சிலருக்கு உண்டு. அவர்கள் தாங்கள் செய்கிற காரியத்தினாலே, சபைக்கு சில காரியங்களைச் செய்துவிட்டு, அதற்காக போதகர் தனக்கு பணிந்துபோக வேண்டுமென்று எதிர்பார்ப்பார். உதாரணமாக, சபைக்கு ஒரு குளிரூட்டி(AC) வைத்தால் நன்றாக இருக்கும் என்று அவர் சொல்லுவார், அப்போது அந்த போதகர், சரி நல்ல விஷயம்தானே என்று சொல்லி, சுயாதீன ஊழியர், இது நல்ல விஷயம்தான், சபைக்கு அவர் செலவழித்து செய்கிறார் என்று வைக்கச் செய்வார். அதை மாட்டிய பிறகு, மெதுவாக அந்த பணக்காரர் சொல்லுவார், ஐயா, நீங்கள் அந்த நபருக்கு கொடுக்க கூடாது, இந்த சபையின் காரியங்களை இல்லாவிட்டால், அந்த சிறப்பு நிகழ்ச்சிகளுக்கெல்லாம், AC-ஐ போடக்கூடாது, அது தேய்ந்துவிடும், மின்கட்டணம் அதிகமாக வந்துவிடும் என்று சிலர் செயல்படுகிறதை நீங்கள் பார்க்கலாம், சொல்லுகிறதைப் பார்க்கலாம்.

அவர்கள் இந்த ஊழியத்திற்காக செய்யாமல், பெருமைக்காக செய்திருக்கிறார்கள் என்று நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும். இப்படியொரு கூட்டமும் சவாலாக ஊழியருக்கு இருக்கிறது. பணம் அதிகமாக இருக்கிறதினால், தான் சொன்னதை செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிற சில பணக்காரர்கள் செய்கிற பிரச்சனைகள் அநேகம். பிரியமானவர்களே, இவ்வளவான காரியங்கள் அனைத்தையும் தாண்டித்தான் நீங்கள் ஊழியம் செய்யவேண்டியிருக்கிறது என்பதை புரிந்துகொள்ளுங்கள். இதற்காக சோர்ந்து போக வேண்டாம், பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். எந்த இடத்தில் பிரச்சனைகள் இல்லை சொல்லுங்கள் பார்க்கலாம். ஒரு கம்பெனியில் வேலைபார்த்தாலும், அங்கேயும் பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது. அதைப்போல நல்ல போராட்டத்தை நீங்கள் போராடுகிறீர்கள் என்ற விசுவாசத்தோடு, நீங்கள் போராடுங்கள், கர்த்தர் இதற்கான பலன் தருவார். உங்களை குறைவுபட விட மாட்டார். உலக மக்கள், சபையார், போதகர்களாகிய

உங்களை பல சவால்கள் மத்தியில் நடத்திக்கொண்டு போகலாம், பிரச்சனையின் மத்தியில் நீங்கள் இருக்கலாம், ஆனால், நீங்கள் ஒரு பெரிய பலனுக்கேதுவான ஊழியம் செய்கிறீர்கள், உங்கள் எஜமான் இந்த உலகத்திலுள்ள எஜமான்களல்ல. பரலோக பிதாவே உங்களைக் கனம்பண்ணுகிற காரியத்தை செய்வார். உங்கள் தேவைகள் அனைத்தையும் சந்திப்பார். எத்தனை சவால்கள் இருந்தாலும், அத்தனையையும் சந்தித்து, பிரச்சனைகளையும் தாண்டி, நீங்கள் ஊழியம் செய்கிறது கர்த்தருக்கு சந்தோஷமான விஷயம். என் பிள்ளை எவ்வளவு நெருக்கடியின் மத்தியில், மன உளைச்சல் மத்தியில் எனக்கு ஊழியம் செய்கிறான் என்று கர்த்தர் பார்ப்பார். ஆகவே, நீங்கள் செய்கிற ஊழியத்தை அவர் கனப்படுத்துகிறதை நீங்கள் பார்க்க முடியும் பிரியமானவர்களே.

பிரியமானவர்களே, இப்படியாக அநேக ஊழியர்களின் ஊழியத்தில் ஏற்படுகிற சவால்களை நாம் சிந்தித்தோம். அவற்றையெல்லாம் நாம் மேற்கொண்டு, கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்ய கர்த்தர்தாமே பெலப்படுத்துகிறவராக, அதற்கு நீங்கள் வேதம் சொல்லுகிறபடி உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆயினும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை நம்பி, உலகத்தில் பிரச்சனை உண்டுதான், மகனே, மகளே. ஏதோ ஒருவிதத்தில் பிரச்சனை இருக்கத்தான் செய்யும். ஆனால், நீ சோர்ந்து போகாமல் எப்படி நான் உலகிலே வாழ்ந்தபோது, எனக்கு முன்னிருக்கிற அந்த மாபெரும் பந்தயபொருளை பெறுவதற்காக, அதாவது நான் சிலுவைப்பாடுகள் மத்தியிலே கடந்துபோகவேண்டும் என்று பிதாவானவர் நியமித்த போதும், அதை நான் சந்தோஷமாய் தாங்கி ஓடினேன், காரணம் அந்த பிரச்சனையை நான் பார்க்காமல், சிலுவையில் நான் மரித்து, உயிர்த்தெழுந்த பிறகு, ஒரு பெரிய மீட்பு அநேக ஜனங்களுக்கு உண்டாக வேண்டுமே என்ற காரியத்தை நினைத்தே, நான் ஓடி உலகத்தில் ஓட்டத்தை ஜெயமாய் முடித்தேன். அதே மாதிரி இந்த உலகத்தில் நீங்கள், பாடுகள் மத்தியில் போனால், பிரச்சனைகள், எதிர்ப்புகள், சவால்கள் மத்தியில் சென்றாலும், நீங்கள் உங்கள் கண்களை பரலோகத்திற்கு நேராக திருப்பி, அதன்மேலேயே உங்கள் கண்களை பதியுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒரு பெரிய பலன் உங்களுக்காய் காத்திருக்கிறது. நான் கொடுக்கும் பலன் வருகிறதாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்கிறார். அதை எதிர்பார்த்து, நாம் செயல்படுவோம். நிச்சயமாய் ஒருவன் எனக்கு ஊழியம் செய்வானானால், பிதாவானவர் கனம்பண்ணுவார் என்ற வார்த்தையின்படி உங்களை கர்த்தர் நிச்சயமாய் கனப்படுத்துவார். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து பெருகப்பண்ணுவாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1) மேய்ப்பர்களுக்கான குறிப்பான முன்னுரிமைகளில், அவர்களுடைய பக்திக்குரிய வாழ்க்கை குறித்து சற்று விளக்கமாக கூறுக?

2) குடும்பத்திற்கான முன்னுரிமை, எவ்வாறு மேய்ப்பர்களுக்கான குறிப்பான முன்னுரிமையாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
3) மேய்ப்பர்களுக்கான குறிப்பான முன்னுரிமைகளில், அவர் உண்மைத்துவம் நிறைந்தவராக இருக்கவேண்டியதின் முக்கியத்துவத்தை சற்று விளக்கமாக கூறுக?
4) அன்புகூறுதல் என்பது எவ்வாறு மேய்ப்பர்களுக்கான முன்னுரிமைகளில் முக்கியத்துவம் நிறைந்ததாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
5) மேய்ப்பனுக்கு இருக்கின்ற சவால்களில் நேரமின்மை என்கிற சவாலைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
6) மேய்ப்பர்களுக்கான சவால்களில், எதிர்பார்ப்பு என்கிறதான சவாலைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
7) மேய்ப்பர்களுக்கான சவால்களில் உணர்வுப்பூர்வமான பிரச்சனைகளைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
8) சபை உறுப்பினர்களால் உண்டாகிற பிரச்சனைகள் எவ்வாறு மேய்ப்பனுக்கு சவாலாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
9) மேய்ப்பர்களுக்கான சவால்களில் சபையிலுள்ள வயதானவர்களால் எழுகின்ற பிரச்சனைகளைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
10) தொடர்புகொள்வதில் இருக்கின்ற குறைபாடு எவ்வாறு மேய்ப்பனுக்கான சவாலாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
11) மேய்ப்பர்களுக்கான சவால்களில், போதகர் மாத்திரமே செயல்படுகிற பிரச்சனை என்கிற சவாலைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
12) மருத்துவமனை விசாரிப்பு, எவ்வாறு மேய்ப்பர்களுக்கான சவாலாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
13) சபையில் காணப்படுகிற அரசியல் எவ்வாறு மேய்ப்பர்களுக்கான சவாலாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - *15*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நாம் கற்றுக்கொள்ளுகிற பாடங்களோடு, ஆவியானவரின் உதவியையும் பெற்று கற்றுக்கொள்ள வேண்டும். அதை எந்த வழியில் கற்றுக்கொள்ள வேண்டும்? எது வழியாக போகவேண்டுமென்ற ஒரு வழிமுறையை நாம் இந்தப் பாடங்களின் மூலம் கற்றுக்கொள்கிறோம். இது துவக்கம்தான், இதைத்தொடர்ந்து நீங்கள்தான் ஆவியானவர் உதவியோடு கற்றுக்கொள்ளப்போகிறீர்கள். நீங்கள் எந்த வழியில் போகவேண்டும் என்று தெரியாதபோது, உங்களால் கற்றுக்கொள்ள முடியாது என்பதற்காகத்தான், இந்த இறையியல் பாடங்களை கர்த்தர் நமக்கு தந்திருக்கிறார். எந்த வழியில் சிந்திப்பீர்கள்? எப்படி செயல்படுவீர்கள்? என்பதற்கும் மேலான காரியங்களை பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு கற்றுத்தருவார். மேலும் அவர் உங்களுக்கிருக்கிற நல்லதொரு போதகர், பெரிய மேய்ப்பன், உங்களுக்கு அவ்வப்பொழுது சொல்லித்தந்து, ஊழியத்தில் நேர்த்தியாய் நடத்துகிறவர். ஏனெனில் அவர்தான் மேய்ப்பர், அவர்தான் இன்சார்ஜ், உங்கள் ஊழியத்தின் தலைவரே அவர்தான். உலகப்பிரகாரமான எத்தனையோ தலைவர்கள் இருக்கலாம். உங்களுக்கு மேலாக ஒரு ஊழியர் இருக்கலாம், பாஸ்டர், ரெவரெண்ட் மற்றும் பிஷப் இருக்கலாம், யாராக இருந்தாலும், அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். அதே வேளையில், உங்களுக்கு உண்மையான இன்சார்ஜ் யார் என்றால், தேவன்தான், கர்த்தர்தான். அவருக்கு நீங்கள் கணக்கு ஒப்புவிக்கவேண்டிய இடத்திலிருக்கிறீர்கள். அவர் உங்களை வழுவாதபடிக்கு காப்பார், அது மட்டுமல்ல, பல சோதனைகள், சவால்கள் இருக்கிறது என்று கடந்த பாடங்களில் கற்றோம், அது உங்களுக்கு நினைவிலிருக்கும்.

அதன் தொடர்ச்சியாக, இன்னும் சில சோதனைகள், ஆபத்துக்கள் குறித்து இந்த பாடத்திலும் கற்றுக்கொள்வோம். எந்த ஊழியமாக இருந்தாலும், எதிர்ப்புகள் உண்டு, பிரச்சனைகள் உண்டு, சவால்கள் உண்டுதான். அதேவேளையில் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறேன், ஊழியத்தில் மட்டுமல்ல எந்த பணியிலும், உலக பணியிலும்கூட இருக்கலாம். நீங்கள் அரசியல்வாதிகளைப் பார்க்கிறீர்கள், அதிகாரத்தில் இருக்கும்பொழுது, நன்றாக ஜாலியாகத்தான் இருக்கிறார்கள், அதோடு எத்தனையோ சவால்கள், எத்தனையோ குறைகூறல்கள் போன்றவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு, பணம் வருகிறது, புகழ் வருகிறது என்பதற்காக, முதலாளிகள், தொழிலாளிகள், பணக்காரர்கள் எல்லோருமே, சவாலோடுதான் வாழுகிறார்கள். யாரும் சவால் இல்லாமல் வாழவில்லை, உலகத்தில் ஆவிக்குரிய வாழ்வு மட்டும்தான் பிரச்சனை என்று ஒருபோதும் நாம் நினைக்க கூடாது. அந்த கண்ணோட்டத்தை தயவுசெய்து மாற்றுங்கள், எனக்கு ஊழியத்தில் மிகவும்

பாடுகள், ஊழியத்தில் மிகவும் அதிகமான வேலை இருக்கிறது என்று சிந்திக்காதீர்கள். அது அவ்வாறில்லை, உங்களைவிட அதிகமாக வேலைசெய்கிற எத்தனையோ பணியாளர்கள் இருக்கிறார்கள், கொஞ்சம் அவர்களைப் பாருங்கள். அவர்கள் உலகத்திற்கு அழிந்துபோகிற செல்வத்திற்காய் பணிபுரிகிறார்கள். ஆனால், நீங்களும், நானும் ஒரு அழியாத செல்வத்திற்காக, அழியாத இராஜ்ஜியத்திற்காக, நித்திய நித்தியமாக வாழப்போகிற அந்த வாழ்வுக்காக, தேவாதி தேவனிடத்திலிருந்து பெறப்போகிற பரிசுக்காக, சன்மானத்திற்காக, நாம் செயல்படப்போகிறோம். பரலோகம் போகிறது மட்டும் நம்முடைய முக்கிய நோக்கமல்ல. ஏதோ இரட்சிக்கப்பட்டு, ஏதோ வாழ்ந்தோம், இதோ போகிறோம், என்று நினைத்தாலும், நமக்கு அவ்வாறு போக அனுமதி தரமாட்டார். நிச்சயமாய் நாம் ஊழியம் செய்ய அவர் எதிர்பார்க்கிறார்.

பிரியமானவர்களே, மேய்ப்பு பணியில், நிறைய சோதனைகளும் வர வாய்ப்பிருக்கிறது. தேவனுடைய திட்டங்களுக்கு விரோதமாக சாத்தான் எப்பொழுதுமே செயல்படுவான் என்பதை நீங்கள் மறந்துபோகக் கூடாது. அது மட்டுமல்ல, அதற்கு தடைசெய்துகொண்டே அவன் இருப்பான் என்பதை நீங்கள் உணர்ந்து, எப்பொழுதும் அவனுடைய தந்திரங்களுக்கு எதிராக, விழிப்பாக இருக்கவேண்டியது அவசியம். யார் மூலமாகவும், அவன் தடை செய்ய செயல்படுவான், உங்களுடைய மனைவி மூலமாக, உங்கள் நண்பர்கள் மூலமாக, ஏன் நீங்களே, சில வேளைகளில் அவிசுவாசத்தினால் தடைகளாக மாறிப்போக வாய்ப்பு இருக்கிறது. கர்த்தருடைய பரலோக கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லையென்றால், நீங்கள் தேவ திட்டத்திற்கு எதிர்த்து நிற்பீர்கள். அது வேண்டாம், இது வேண்டாம் என்று சொல்வீர்கள். ஆனால், இதை இவ்வாறு செய்யவேண்டும் என நான் நினைக்கிறேன் மகனே என்று கர்த்தர் சொல்வார், நீங்களோ அவிசுவாசத்தினால், இது சரியான சமயமல்ல, இப்பொழுது இது வேண்டாம் என்று சில வேளைகளில் தேவ திட்டதிற்கு நீங்களேகூட எதிர்த்து நிற்கிற வாய்ப்பிருக்கிறது. அதற்காக பிசாசானவன் உங்கள் மனதில், உங்கள் சிந்தையில் போராட்டத்தைக் கொண்டு வந்து, தேவனுடைய திட்டத்தை தடைசெய்ய அவன் பல விதங்களில் முயற்சி செய்வான். இயேசுகிறிஸ்து தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற உலகத்திற்கு வந்தார். அவர் சிலுவையில் மரிக்க வேண்டுமென்ற திட்டத்திற்கு அவன் எவ்வளவு தந்திரமாய் பேசுகிறான் பாருங்கள். எதற்கு சிலுவையில் மரிக்கவேண்டும்? நீர் பேசாமல் என் காலில் விழுந்து, என்னை வணங்கிவிடும். நான் உமக்கு இந்த உலகத்தையும், மகிமையையும் தந்துவிடப்போகிறேன், இதை விட்டுவிட்டு நீர் சிலுவையிலே மரித்து பாடுபட வேண்டுமா? என்று சொல்லி, தேவன் கொடுத்த திட்டத்தை குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடம் வஞ்சனையாகப் பேசி தடுக்க பார்க்கிறான் பாருங்கள். மட்டுமல்ல, பிரதான ஆசாரியரையே பயன்படுத்துகிறான், ஆளுநர்களைப் பயன்படுத்துகிறான், என்னவெல்லாமோ செய்து, இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தைத் தடுக்கப் பார்க்கிறான். அவருடைய ஊழியத்தை

தடுக்கப் பார்க்கிறான், போதனைகளைத் தடுக்கப் பார்க்கிறான், அற்புதங்கள் நிகழாதவாறு தடுக்கப் பார்க்கிறான். எத்தனை தடைகள் பிரியமானவர்களே.

லூக்கா *23:31*-ல் இயேசு சொல்வதைப் பாருங்கள், 'பச்சை மரத்திற்கு இவைகளை செய்தால், பட்ட மரத்திற்கு என்ன செய்ய மாட்டார்கள்' என்று இயேசு கேட்கிறதைப் பாருங்கள். அவர் பச்சை மரம், அவருக்கே இவ்வளவு பாடுகள், தடைகள் இருக்கும்போது, நீங்களும், நானும் பட்டமரம் போல்தான் இருக்கிறோம். ஆனால் நாம் நினைக்கிறோம், நாம் கனிகொடுக்கும் மரம், செழிப்பான மரம் என்ற பலவேளைகளில் நம்மைக் குறித்து பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆம் பிரியமானவர்களே, நாம் பெரிய காரியங்களை செய்துவிட முடியாது, ஆனால் நான் சொல்லுகிற காரியம் என்னவென்றால், இவ்விதமான பல தடைகளை பிசாசானவன் கொண்டுவர முயற்சிக்கிறான். அது மிகவும் ஆர்வமானதுதான், சிங்கங்கள் வரும்பொழுது, அவைகளை பிளக்கிற ஒரு அற்புதத்தை நீங்கள் பார்க்க முடியும், இல்லையென்றால் அதுபோல வாழ்க்கையில் தடைகள் வர, நீங்கள் கர்த்தருடைய உதவியோடு ஜெயம்பெற உங்கள் விசுவாசத்தால் மட்டுமே கூடுமேயொழிய, வேறெதுவும் செய்ய முடியாது, சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்துகிற கர்த்தர் உங்களோடு, என்னோடு இருப்பதினால், அவன் தீங்கான சில காரியங்களைக் கொண்டுவரும்பொழுது, அது நன்மையாக முடியப்போகிறது. நீங்கள் அவற்றை கண்ணார காண முடியும். அவ்விதமாக ஆச்சரியமாய் நடத்துகிற தேவன் உங்களோடு இருக்கிறபடியால், நீங்கள் சோர்ந்துபோக மாட்டீர்கள், நானும் சோர்ந்து போவதில்லை.

இவ்விதமாக சாத்தான் தடைகளைச் செய்துகொண்டே இருப்பான், இந்த தடைகள், குறுக்கீடுகள், இவைகளெல்லாம் வரும்பொழுது, ஒரு தலைவன், ஒரு மேய்ப்பன், ஒரு ஊழியன், கர்த்தரோடு உறுதியாக இல்லாத பட்சத்தில் அவன் வீழ்ச்சியுறுகிறான். அவனுக்கு பொதுவாக வருகிற வீழ்ச்சிக்கான மூன்று காரணங்கள். எல்லோரும் பொதுவாக சொல்லுகிற ஒரு விஷயம் மண்ணாசை, பொன்னாசை, மற்றும் பெண்ணாசை என்பது. அதே மாதிரியே, அநேகர் நினைக்கிறார்கள், இந்த உலகத்தில் நான் அநேகமான இடங்களை, வயல்களை வாங்கவேண்டும் என்ற ஆசையோடு இருக்கிறார்கள், அங்கே பெரிய அளவில் பங்களா ஒன்றை கட்டவேண்டும், ஒரு பெரிய இராஜ்ஜியத்தை உருவாக்க வேண்டும் என்றதொரு ஆசை. குறிப்பாக, அவர்களுடைய வெளிப்பாடு என்னவென்றால், மகிமையை நாடுகிற அனுபவம், அதிகமான செல்வங்கள், பிளாட்டுகள், அல்லது ஒரு பெரிய நிறுவனத்தை உருவாக்கி, அதினால் கிடைக்கிற மகிமையை விரும்புகிற காரியங்களில் விழுந்துவிடுகிறார்கள். இவைகள் இல்லையென்றால், பெண்ணாசை, இது ஒரு ஊழியரை வீழ்த்துவதற்காக தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கும். அடுத்து,

பொன்னாசை, இதை ஆங்கிலத்தில், Gold, Glory and Girl என்று சொல்வார்கள். பொன், மகிமை, மாது, இல்லையென்றால், மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை.

பிரியமானவர்களே, நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டிய பகுதி இது. இதைத்தவிர மற்ற சின்ன, சின்ன காரியங்களும் இருக்கிறது. ஆனால் அவைகளை இந்த மூன்று காரியங்களில் நாம் அடக்கிவிடலாம். மண்ணாசை, மகிமை நாடுகிற பழக்கம், பெண்ணாசையில் இச்சையை நிறைவேற்றத் துடிக்கிற ஆசை, பொன், செல்வத்தின் மீதிருக்கிற பற்று, ஏகப்பட்ட பணம் சம்பாதிக்க வேண்டும், பணம், பணம் என்ற ஆசை உடையவர்களாய் இருக்கிறபடியால், தொடர்ந்து மக்களை இவ்விதமான ஆசை உடையவர்களாக இருக்கும்படி ஊழியர்கள் தூண்டுகிறார்கள். நீங்கள் பணம் முன்னேற்றம், செல்வம் மகிமையை பெறுவீர்கள் என்று சொல்லி, மறைமுகமாக இதே காரியத்தை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை போன்றவற்றை தூண்டிவிடுகிற காரியமாகத்தான், அவர்களுடைய செயல்பாடுகளும் இருக்கும். அதாவது, அவர்கள் பேசுகிறது வேதம், ஆனால் செயல்பாடுகள் இவற்றை வெளிப்படுத்தி, அதனால் விசுவாசிகளும் என்ன நினைப்பார்கள் என்றால், அவ்வளவு பெரிய ஊழியரே அதைச் செய்கிறார், பிறகு நான் இதைச் செய்தால் என்ன? அவரைக்கொண்டு கர்த்தர் அற்புதத்தை செய்கிறார், ஆக, கர்த்தர் அதை அங்கீகரிக்கிறார் என்றுதானே அர்த்தம் என்று சொல்லி, மாபெரும் வீழ்ச்சிக்கு இந்த ஊழியர்கள் விழுந்துவிடுகிறார்கள் பிரியமானவர்களே.

இவ்விதமான பல காரியங்கள் இருக்கிறது, அதைக்குறித்து சற்று விளக்கமாக நாம் சிந்திப்போம். நமது ஆவிக்குரிய தலைமைத்துவத்தில், நாம் அநேக ஆபத்துக்களை, அபாயங்களை, சோதனைகளை, தடைகளை நாம் சந்திக்கிறோம் என்பதை நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதைக் குறித்து சிந்திக்கும்பொழுது, நீங்கள் பரந்த மனதோடு, இதை ஏற்றுக்கொள்ள உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆவிக்குரிய சோதனைகள் ஒரு ஊழியக்காரனாய், மேய்ப்பனாய், போதகராய் இருக்கிறவர்களுக்கு, ஆவிக்குரிய பெருமை என்ற சோதனை வர வாய்ப்பிருக்கிறது. இன்றைக்கு அநேகர் அப்படித்தானிருக்கிறார்கள். நான் ஊழியர்களை மட்டும் சொல்லவில்லை, விசுவாசிகளையும் சேர்த்துதான் சொல்லுகிறேன். சில சபைகள் தங்களை அறியாமலேயே, ஆவிக்குரிய வைராக்கியம் என்று சொல்லுகிறார்கள், ஆனால் அது ஆவிக்குரிய பெருமைக்கு கொண்டுபோய் விடுகிறது. தாங்கள் சிறந்த பக்திமான்கள், விசுவாசிகள் என்ற எண்ணத்தோடு, மற்ற சபையாரோடு அவர்கள் பழக மாட்டார்கள், ஐக்கியம் கொள்ள மாட்டார்கள், இல்லையென்றால், நான் ஜெபம்பண்ணினால்தான் கர்த்தர் கேட்பார், நான் அவ்வளவு பெரிய ஊழியன், என்னிடத்தில்தான் கர்த்தர் பேசுவார் என்ற விதமான ஒரு பெருமை, அது பெருமை மாதிரி தெரிகிறது. ஆனால், இது பெரிய ஆபத்தாய் இருக்கிறது பிரியமானவர்களே. பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து

நிற்கிறார், பெருமை கொள்ளக்கூடாது என்று நான் சொல்லுகிறேன். ஒரு வேத வசனத்தின் அடிப்படையில், நீங்கள் கொண்டால், அது உங்கள் விருப்பம். அதனுடைய விளைவை நாம்தான் சந்திக்க வேண்டும். இதையொரு மிரட்டலாக எடுத்துக்கொள்ளாமல், சற்று சிந்தியுங்கள். இவற்றையெல்லாம் நாங்கள் ஏற்கனவே வாழ்வில் அனுபவித்துவிட்டுத்தான் உங்களுக்கு கற்றுக்கொடுக்கிறோம். பெருமையோடு செயல்பட்ட அநேக மக்கள், இன்று எங்கு இருக்கிறார்கள் என்பதையும் நான் பார்த்திருக்கிறேன். பெருமை நமக்கு ஆபத்தை கொண்டுவரும். அதுவொரு சோதனை, அதுவும் ஊழியத்தில் வருவதற்கு அதிகமான வாய்ப்புகள் உண்டு, நிறைய மக்கள் உங்களை மதிப்பார்கள், வானளாவ பேசுவார்கள், பாஸ்டர் ஜெபித்தார், கர்த்தர் எனக்கு பெரிய காரியத்தைச் செய்தார் என்று சொல்லும்போது, உங்களுக்கு மெய்சிலிர்க்கும், நீங்கள் உங்களை அறியாமலேயே பெருமையுடையவர்களாய் மாறிவிடுவீர்கள். கர்த்தர் என்னுடைய ஜெபத்தைத்தான் கேட்கிறார் என்று அந்த குருவானவர், மேய்ப்பர், போதகர் பெருமையடைய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அந்த சோதனையை மேற்கொண்டேயாக வேண்டும், அதில் உறுதிவேண்டும். இதிலே எவ்வளவு கர்த்தர் உயர்த்தினாலும், நான் தாழ்ந்த சிந்தையோடு இருப்பேன் ஆண்டவரே என்றதொரு பொருத்தனையோடு, நீங்கள் செயல்படுங்கள். அது இன்னும், இன்னும் கர்த்தர் உங்களை உயர்த்துவதற்கு, ஆசீர்வதிப்பதற்கு ஒரு வாய்க்காலாய் அமையும்.

அடுத்து, இரண்டாவது காரியம், ஆவிக்குரிய சோதனை உங்களுக்கு, ஊழியக்காரருக்கு வரவேண்டிய அல்லது வரக்கூடியதாக இருக்கிறது. அது ஆவியானவருக்கு இடங்கொடாமல் செயல்படுவது என்பதாகும். இதுவொரு சோதனையாகவே இருக்கிறது. நாம் சொல்லுவோம், ஆவியானவர் சொன்னார், ஆவியானவர் சொன்னார் என்று. ஆனால், ஆவியானவர் சொல்லாததைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அநேக ஊழியர்கள், போதகர்கள், மேய்ப்பர்கள், ஏன் இவ்வாறு சொல்லுகிறார்கள்? ஆவியானவர் வேதத்தில் சொன்ன கருத்திற்கு விரோதமாக பேசுகிறார்கள் என்றால், அவர்கள் ஆவியானவருக்கு இடம் கொடுக்கவில்லை என்றுதானே அர்த்தம். இன்றைக்கு வேத வசனத்தை எந்த அர்த்தத்தில் நாம் பேசுகிறோம்? நாம் விரும்புகிற அர்த்தத்திற்கு நாம் மாற்றிக்கொண்டு பேசவிரும்புகிறோம். நமக்கு எது சவுகரியமோ, எது ஆசீர்வாதமாய் அல்லது ஆறுதல்படுத்துகிறதாக இருக்குமோ, அதைக்குறித்து நாம் பேச விரும்புகிறோம். அதை தவறு என்று நான் சொல்லவில்லை, ஆனால் அதுவே செய்தியாக இருக்க கூடாது. ஆவியானவர் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்றபடி, சபைக்கு செய்தியை கொடுக்க விரும்புகிறார். உங்களுடைய சபைக்கான செய்தியை அவர் தருவார், ஆனால் நீங்கள் இதையெல்லாம் சொன்னால், எங்கே மக்கள் கேட்பார்கள் என்று கருதி, ஆவியானவர் உணர்த்துகிற அந்த வார்த்தைகளையே ஓரமாக வைத்துவிட்டு, நீங்கள் வேறுவிதமாய் உங்கள் செய்தியை அல்லது ஆராதனையை நிறைவு செய்துவிடுகிறீர்கள். அதாவது, அவர் அன்று இவ்விதமாய் இருந்தார், இன்று அவர்

நலமாக இருக்கிறார் என்று சில சாட்சிகளை சொல்லிவிட்டு, ஒரு ஆறுதலான செய்திகளைக் கொடுத்து, போய்க்கொண்டே இருக்கிறீர்கள். அவ்வாறென்றால், ஆவியானவருக்கு நீங்கள் இடம்கொடுக்கவில்லை என்றுதானே அர்த்தம், தவறுதலாக நாமே சொல்லுகிறோம், ஆவியானவர் என்னோடு பேசினார், இதைச் சொல்லச் சொன்னார் என்று தவறாய் சொல்வதைவிட, தான் நினைத்ததை கர்த்தர் சொன்னதாகச் சொல்லுகிற அல்லது பிரசங்கிக்கிற அநேக ஊழியர்கள் இன்று எழும்பியிருக்கிறார்கள். தேவனுடைய ஊழியத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம் பிரியமானவர்களே.

மூன்றாவது காரியம், ஆவிக்குரிய சோதனை என்னவென்றால், தனிப்பட்ட அனுபவங்களை வலியுறுத்தி பேசுகிற பிரசங்கங்கள் சபையில் இன்றைக்கு அதிகமாக இடம்பெறுகிறது. அநேக போதகர்கள், அவர்களின் பிரசங்கத்தை ஆரம்பித்தவுடன், நான் சிங்கப்பூர் சென்றபோது, என்று ஆரம்பித்து, அவருடைய அனுபவத்தைத்தான் சொல்லி முடிக்கிறார், அனைவரையும் சிரிக்கச் செய்வதற்கான வார்த்தைகளாகவும், ஜாலியாக இருப்பதற்கும், வேதத்தைத் தவிர மீதி எல்லாமே அவர்களின் பிரசங்கத்தில் இருக்கும். ஆனால் தனிப்பட்ட அனுபவம் வேறுவிதமாக இருக்கும். அவர் பயணப்பட்ட அனுபவத்தைச் சொல்வார், தன்னுடைய வாழ்க்கையில் தான் பெற்ற ஆவிக்குரிய அனுபவத்தை விசுவாசிகளுக்கு கற்றுக்கொடுப்பதே இல்லை. ஆனால் அவர் தவறாகக் கற்றுக்கொண்ட அனுபவத்தை பேசிக்கொண்டே இருக்கிறார் பாருங்கள், அதுதான் ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கும். வேதத்திற்கு முரணாக தான் பெற்ற அனுபவத்தை சொல்லுவது அதிகமாக இருக்கிறது. உதாரணமாக உங்களுக்கு ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். எங்கள் ஊருக்கு அருகே வள்ளியூர் என்ற ஓரிடத்தில் ஒரு ஊழியர் கர்த்தர் எனக்கு சொன்னார், இந்த இடத்தை இயேசுவின் பரலோகத்தின் பெயரில் பதிவு செய் என்று சொன்னார். ஆகவே, எனக்கு கர்த்தர் சொல்லிவிட்டார். அதை பதிவுசெய்யத்தான் போகிறேன் என்று சொல்லி, அந்த பத்திர பதிவுசெய்யும் அலுவலகம் போய், பதிவாளர், இந்த இடத்தை யார் பெயரில் பதிவு செய்கிறீர்கள் என்று கேட்டபோது, இயேசு பெயரில் பதியவேண்டும் என்றார். அதற்கு பதிவாளர், எங்கே இருக்கிற இயேசு பெயரில் என்று கேட்டார். அதற்கு அந்த ஊழியர், பரலோகத்திலிருக்கிற இயேசுவின் பெயரில், இதை பதிவு செய்யுங்கள், ஏனெனில், இந்த சபை இருந்த இடம், இயேசுவுடையது. ஆகவே அவருடைய பெயரிலேயே பதிவுசெய்ய விரும்புகிறேன் என்று சொல்லி, தன்னுடைய மனதில் தோன்றியதை, பதிவாளரிடம் கூறிக்கொண்டிருந்தார். அந்த அலுவலகத்தில் நடந்த இந்த நிகழ்ச்சி, ஒரு கேலிக்கூத்தாக மாறிவிட்டது, பார்த்தீர்களா பிரியமானவர்களே. வேதம் அவ்வாறு சொல்லியிருக்கிறதா? என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இப்படி, தனிப்பட்ட அனுபவங்களை சாட்சியாக நிறையபேர் சொல்வதை நீங்கள் பார்க்கலாம். ஏதோவொரு காரியத்தை, அவர்களுடைய மனதில் தோன்றியதை அல்லது ஏதோவொரு கனவு கண்டுகொண்டு, அதாவது தரிசனம் இல்லையென்று

சொல்லுகிற, அல்லது தரிசனம் கண்டு, ஆனால் எது சரியான சொப்பனம் என்று தெரியாமல், நிறையபேர் இஷ்டம்போல கதையளப்பதுதான் பெரும் பிரச்சனையான விஷயம்.

நான் பரலோகம் சென்றேன், அங்கே மூன்றாம் வானத்தில் இயேசு, டீ ஆற்றிக்கொண்டிருந்தார், இல்லையென்றால், நான் நேற்று மாவு ஆட்டிக்கொண்டே இருந்தேன். சில சகோதரிகள் சொல்கிறதுபோல, மாவு ஆட்டிக்கொண்டு இருக்கும்போது, நீ மிகவும் கஷ்டப்படுகிறாய், என்று சொல்லி, இயேசு என்னோடுகூட உட்கார்ந்து மாவு ஆட்டுவதிலே உதவிசெய்தார் என்று சொல்கிற அளவில்தான் இன்றைய பிரசங்கங்களும், சாட்சிகளும் காணப்படுகிறது. பிரியமானவர்களே, இப்படி தனிப்பட்ட அனுபவங்களை எடுத்து சாட்சியாக சபையில் சொல்லி, கர்த்தர் என்கூடத்தான் இருக்கிறார், பார்த்தீர்களா? என்று சொல்வதில் ஒரு பெருமை. அது மட்டுமில்லை, அந்த அனுபவத்தைக் கூறுவதினால், மக்கள் அதுதான் ஆவிக்குரிய சபை என்று கருதி, ஒருசில இடத்திற்குபோய், சீரழிந்துகொண்டிருக்கிறார்கள், பிரியமானவர்களே. நீங்கள் உண்மையான ஆவிக்குரிய சபையாய் சபையை வளர்த்தெடுங்கள் போதகர்களே, அதைத்தான் உங்களை கேட்டுக்கொண்டிருக்கிறேன். இதேமாதிரி இஷ்டம்போல, இவ்வளவு பேசுவார்கள். ஆவியானவர் என்னோடுகூட, இதைமாதிரியான தரிசனத்தை நான் கண்டேன், இல்லாவிட்டால், இன்னொரு சாட்சி சொல்லுவார்கள். பக்கத்துவீட்டு கோழி, எங்கள் வீட்டில் மிகவும் இடைஞ்சல் பண்ணிக்கொண்டு இருந்தது. நான் ஜெபித்தேன், இன்றுகாலை அந்தக் கோழியின் கால், பைக்கில் மாட்டி இறந்துவிட்டது, கர்த்தர் அவைகளுக்கு ஆப்புவைத்து விட்டார் என்று சொல்லுகிற மக்களின் அனுபவத்தை, உங்களோடு ஜோக்காக சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்த காலகட்டத்தில் நடக்கிறதைத்தான் நான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். கிறிஸ்தவமும், சபையின் அனுபவங்களும் எந்த நிலையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் தெரியவேண்டும் என்பதற்காக சொல்லுகிறேன்.

ஆவியானவர் உங்களோடு எந்தளவுக்கு பேசினார், சொப்பனமெல்லாம் தந்தார், உங்களுடைய சுபாவத்தில் ஆவியானவர் எந்த மாற்றத்தையும் தரவில்லையா? பக்கத்து வீட்டு கோழி உங்களுக்கு இடைஞ்சல் பண்ணுகிறது என்பதற்காக, அதற்கொரு ஆப்பு வைக்கிறதா அவருடைய வேலை. அதிலே நீங்கள் பெருமைகொண்டு, அல்லேலூயா சொல்லி, எல்லோருடைய மத்தியிலும் தேவன் இந்த மாதிரியானவர் என்று காட்டுகிறீர்கள். ஆக, தேவன் அன்பானவர், அவருடைய குணாதிசயத்தை நீங்கள் கெடுக்கிறது எந்த விதத்தில் சரியென்று யோசித்துப் பாருங்கள். பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று தன்னை சிலுவையில் அறையும்போதுகூட மக்களுக்கு மன்னிப்பு கோரி, ஜெபிக்கிற அந்த இயேசுவே, பக்கத்துவீட்டு கோழி, உங்களுக்கு இடைஞ்சல் பண்ணினது என்பதற்காக,

அவர்களைப் பழிவாங்குகிற மாதிரி, இயேசுவை நீங்கள் காண்பித்தால், அது சரியாக இருக்குமா? என்று யோசித்துப் பாருங்கள். ஆவிக்குரிய அனுபவம் என்றால் என்ன? என்று தெரியாதபடி கிறஸ்தவ வட்டாரங்கள் இன்று போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் இப்போது போதக ஊழியத்தை செய்வதற்காக பயிற்சிபெறுகிறீர்கள். அது மட்டுமல்ல, வேதாகம கல்லூரியில் படிக்கிற நீங்கள், இதையெல்லாம் உணர்ந்து, வேதம் சொல்லுகிறபடி சரியாய் ஒரு சபையை நடத்துங்கள். வேதம் சொல்லுகிறபடியான சாட்சியை உற்சாகப்படுத்துங்கள். தனிப்பட்ட அனுபவங்களையே வலியுறுத்தி பேசிக்கொண்டு இருக்காதீர்கள். பிரசங்கத்தில் முழுவதும் தனிப்பட்ட அனுபவம் சொல்லப்படுகிறது, வேதவசனத்தையே தேடி எடுக்கவேண்டியிருக்கிறது. அதையொரு பிரசங்க பீடத்தில் எழுதிவைத்திருந்தார்கள், ஐயா, உங்களுடைய பிரசங்கத்தில் இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று சொல்லி, அவர் பார்க்கிற மாதிரி பிரசங்க பீடத்தில் எழுதி வைத்தார்களாம். ஏனெனில், இயேசுவைப் பார்க்க முடியவில்லை. இன்றைக்கு பிரசங்கங்களில், வேதத்தை தேடி எடுக்க வேண்டியிருக்கிறது. முழுவதும் தனிப்பட்ட அனுபவங்கள், அடுத்தவர்களை குறைசொல்லி பேசுகிற அனுபவங்கள், விசிலடியுங்கள், கொண்டாடுங்கள், ஆடுங்கள், பாடுங்கள், கர்த்தர் உயர்த்துகிறார், சந்தோஷமாயிருங்கள் என்கிறார்கள். இவ்வளவுதான் இருக்கிறதேயொழிய எந்த சந்தோஷம் தேவன் தருகிறார்? எப்படி சந்தோஷத்தை தருவார்? என்று வேதத்திலிருந்து கொடுக்கவில்லை, வேதத்தை சொல்லிக்கொண்டே இருந்தால், சந்தோஷம் தானாக பிறக்கும் பிரியமானவர்களே.

வேத வசனத்தை நீங்கள் ஆழமாக பேசிக்கொண்டிருக்கும்போது, மக்களுக்கு தானாய் சந்தோஷம் வரும், இதில் ஒரு செயற்கையான மகிழ்ச்சி உண்டாக்க வேண்டிய அவசியமில்லை. சில ஊழியர்கள், மக்களை சிரிப்பூட்டுவதாக நான் கேள்விப்படுகிறேன், பார்த்ததில்லை, நேராக போனதேயில்லை. இந்த திருநெல்வேலியில் அப்படிப்பட்ட சபைகள் உண்டு, பார்த்தீர்களென்றால், அவர்கள் மற்றவர்களை சிரிக்க வைக்க வயிற்றிலிருந்து கிச்சு, கிச்சு காட்டுவார்கள், இல்லையென்றால், இப்படி காட்டி சிரியுங்கள், சிரியுங்கள், இது வேதம் சொன்ன காரியம் என்று பிரசங்கிக்கிற சூழலில் நாமிருக்கிறோம்.

அடுத்து, பரிசுத்தமானவற்றில் பழக்கப்பட்டு பயபக்தி அற்றுப்போதல் என்றதொரு சோதனை. இதெல்லாம் ஆழமாக சொல்லவேண்டிய காரியம். நேரம் குறைவாக இருக்கிறதினால், மிகவும் சுருக்கமாகவும், மிகவும் தேவையானதாகவும் இருக்கிறதினால், சற்று விளக்கமாகவும் கூறுகின்றேன். அதுதான் வழக்கமான செயல். ஆகவே, ஜெபம், ஜெபம், அதுவே ஒரு கடமையாக மாறிப்போகிறது. அதாவது பரிசுத்தமானவற்றில் வழக்கமாகி பயபக்தி அற்றுப்போகிற ஒரு அனுபவம். ஆலயத்திற்கு போனால், ஆவியில் தானே நிரம்ப வேண்டும், நிரம்புகிறேன். ஆனால் சிந்தனையை எங்கேயோ வைக்கவேண்டியது, வேதம்தான் வாசிக்கிறோம், வாசிக்கிறேன் என்று ஆழமாக வாசிக்கிறது

இல்லை, சிந்திக்கிறது இல்லை, கடமைக்காக நான் வாசிக்கிறேன் என்று ஷோ காட்டுகிற கூட்டம் இன்றைக்கு நிறைய இருக்கிறது. அவ்வாறு தேவன் தராத தரிசனத்தை இவர்களே கண்டதாக எடுத்து பொய் சொல்லுகிறது. சிலபேரைப் பார்த்தீர்களானால், அவர்கள் அதனுடைய பிரச்சினைகளை பகிர்ந்துகொள்ளும்போது, உடனே சொல்லுவார்கள், எனக்கும் கர்த்தர் நேற்று காண்பித்தார். அதில் நீங்களும் இருந்தீர்கள், தெரிஞ்சிருந்தால், நான் உங்களுக்கு போன்செய்து, எச்சரித்து இருப்பேன். ஆனால், எனக்கு இப்போதுதான் தெரிகிறது. இப்படி கர்த்தர் சொன்னார், யாரோ ஒருத்தர் இந்த பிரச்சனைக்கு மாட்டப்போகிறார்கள் என்று தரிசனம் பெறாததை பெற்றதாக பேசி, அதில் பெருமையடைகிற ஒரு கூட்டம் ஒன்று இருக்கிறது. ஏனெனில், பயபக்தி அற்றுப்போகிறது, வழக்கமாக தரிசனம் கண்டு கண்டு, அதிலேயே பழகிப்போய் பயமேயில்லை. இப்போது, ஆவிக்குரிய வட்டாரத்தில் இருக்கிறேன் என்று சொல்லுகிற சிலருக்கு பயமே இல்லை. தேவனுடைய இராஜ்ஜியத்தில்தான் விளையாட்டு, அந்த சபையில்தான் விளையாட்டு நடக்கிறது, சிலருக்கு தேவ காரியத்தில், ஊழியத்தில், அவர்கள் இஷ்டம்போல தைரியமாக பேசி, அவர்கள் இடையூறு செய்கிறார்கள். ஐயா, கொஞ்சம் யோசித்து, இது தேவனுடைய பணி, தேவனுடைய ஊழியம், சரீரமாகிய சபை என்கிற ஒரு பயம் வேண்டும். பரிசுத்தமானவற்றில் பழக்கப்பட்டு, பயபக்தி அற்றுப்போதல் என்றதொரு, சோதனை ஊழியர்களுக்கு வரவாய்ப்பிருக்கிறது, விசுவாசிகளுக்கு வரவாய்ப்பு இருக்கிறது. நீங்கள் வழக்கமாக ஊழியம் செய்கிறதினால், பிரசங்கம் செய்கிறதினால், அதிலே பழக்கமாகிவிடும். பிறகு பயபக்தியில்லாமல், இஷ்டம்போல செய்கிறது எல்லாம் செய்துவிட்டு, முந்தின நாள் கர்த்தாவே மன்னியும் என்று ஜெபித்துவிட்டு, ஐயா, கோபப்படாதீர்கள் என்று சொல்லி பயபக்தியாய் பேசுகிறது சரியான விஷயமல்ல. இந்த சோதனைக்கு உங்களை நீங்கள் தப்புவித்துக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து, மாம்சத்தில் ஆரம்பித்தல் என்ற சோதனையைப் பற்றி சிறிகு பார்ப்போம். நாம் அடிக்கடியாக, கர்த்தர் சொன்னதை செய்வார் என்று கருதி, பல காரியங்களை மிகவும் இயல்பாக எடுத்துக்கொள்கிறோம். பிறகு அதுவே பழக்கமாகி, அவர் என்ன செய்வார் என்றால், தன் முடிவுப்படியே செயல்பட ஆரம்பித்து விடுவார். ஒரு போதகர், மேய்ப்பர் என்றால், இப்படித்தான் இருக்கும் என்று சொல்லி, ஒரு முடிவோடு செயல்பட்டு, தன் பலத்தை நம்ப ஆரம்பித்துவிடுகிறார்கள். இப்போது மக்கள் நிறையபேர் வந்துவிட்டார்கள் என்கிற முடிவோடு செயல்படுவது தன் பலத்தை நம்புவதற்கு சமமாக இருக்கிறது. முன்பு மக்களே இல்லாதபோது, கர்த்தர் சொன்னால்தான் செய்வேன் என்று மிகவும் வைராக்கியமாய் இருந்த அவர், இப்போது நிறைய மக்கள் சபைக்கு வந்துவிட்டார்கள், நிறைய செல்வம், காணிக்கை வந்துவிட்டது, ஏகப்பட்ட மூப்பர்கள் வந்திருக்கிறார்கள், மதிக்கத்தக்க இடத்தில் இப்போது இருக்கிறார். கர்த்தரிடத்தில் காத்திருப்பதற்கு இவருக்கு நேரம் இல்லை, அதனால் மாம்சத்தில் இவர் செயல்பட்டு, இப்படித்தான் கர்த்தர்

செயல்படுவார் என்று செயல்படுகிற ஒரு சோதனை இருக்கிறது, பிரியமானவர்களே. தாவீதினுடைய வாழ்க்கையை சற்று யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு விதமாய் தேவன் அவரை நடத்துகிறார். ஒரே முறையில் அவர் நடத்தவில்லை. யுத்தத்திற்கு இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது, எவ்வாறு போகவேண்டும்? எப்படி செயல்பட வேண்டும்? முசுக்கொட்டை செடிகளில் உள்ள இலைகள் அசைவைப் பொறுத்து செயல்பட்டு, ஒரு சமயம் யுத்தம் செய் என்பார், எழுந்து போய் யுத்தம் செய் என்பார். இப்படி பல முறைகள் இருக்கிறது. ஒரே முறையில் யுத்தத்திற்கு போ, என்று சொல்லவில்லை. ஆகவே, நீங்கள் அவற்றை புரிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய முறைகள் மற்றும் நடத்துதல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாய் இருக்கும். ஒரே பிரச்சனையாய் இருக்கலாம், அந்த ஒரே பிரச்சனைக்கு, தீர்வை தேவன் பல விதங்களில் செயல்பட்டு உங்களுக்கு தர விரும்புவார். ஆக, மாம்சத்தில் நீங்கள் செயல்பட்டு விடாதீர்கள். அந்த ஆபத்திற்கு, சோதனைக்கு உங்களை விலக்கி காத்து, எப்பொழுதும் ஆவிக்குரிய வழிநடத்துதலுக்கு காத்திருங்கள். நீங்கள் ஆண்டவரிடம், நீர் விரும்பாததை எதையும் நான் செய்யக்கூடாது ஆண்டவரே என்று தாழ்மையுடன் அவருக்கு பணிந்துபோகிற தன்மை உங்களுக்கு இருக்க வேண்டியது அவசியம்.

அடுத்து, ஆறாவது ஒரு சோதனை, நம்மை நாமே முன்னிலைப்படுத்தி காண்பிக்கிற ஒரு சோதனை. சிலர் எதைச் செய்தாலும், உதவி போதகர் செய்ய வேண்டியதையும், நான் செய்வேன் என்று விரும்புகிற ஒரு பண்பு. நான் மட்டும் அப்படி சிந்தித்தால், எனக்கு அதை அழகாக சொல்லுவார்கள். கர்த்தர் எனக்கு ஏற்ற வேளையில் சரியாக அந்த இடத்தில் சொன்னார், பாருங்கள். நானும் அதை உடனே உணர்ந்து சொன்னேன், அதனால் பிரச்சனை தீர்ந்துவிட்டது என்று சொல்லி, சில பேர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். நாங்கள் ஆவியானவரை முக்கியப்படுத்தி, தேவனை மிகைப்படுத்தாமல், நான் சொன்ன மாதிரி ஒரு எண்ணம் நமக்கு வேண்டாம், அது கூடாது, அது நமக்கு நல்லதில்லை, அப்படியான ஒரு எண்ணம் வரும். அதாவது, நான் மட்டும் வந்து அன்றைக்கு திட்டம் பண்ணாமலிருந்திருந்தால், என்ன நடந்திருக்கும்? என்று சொல்லத் தோன்றும், விருப்பமாய் இருக்கும், இதுவும் பெருமைதான் பிரியமானவர்களே. நம்மை நாமே முக்கியப்படுத்தாமல் சொல்ல வேண்டும். கர்த்தர், கர்த்தர், கர்த்தர்தான், இந்தக் காரியத்தைச் செய்தார் என்றும், முன்நின்று நடத்தினார் என்று அவரை உயர்த்த வேண்டும். அந்த ஞானத்தை கொடுத்தது உண்மைதான், அதை செயல்பட்டு தந்ததும் உண்மைதான். ஆனால் எல்லா மகிமையும், கனமும், புகழும் கர்த்தருக்கே என்று எப்பொழுதுமே அனைவர் முன்னிலையிலே சொல்லிப் பழகுங்கள். சபையாரும் அப்படியே பழகுவார்கள். இல்லாவிட்டால், பாஸ்டர் எல்லாம் உங்களால்தான் ஐயா, உங்களால தான் அவ்வாறு

நடந்தது என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஏனென்றால், நீங்கள் அதை விரும்புகிறீர்கள் என்பதினால், அவர்கள் அவ்வாறு சொல்வார்கள்.

ஏழாவது காரியம், பயப்படுதல், அதாவது தைரியமாய் போய்க்கொண்டு இருப்போம், திடீர் என்று ஒரு பயம் வரும், பிசாசானவன் கொண்டு வருவான், இல்லையென்றால் நாம் இவ்வளவு பெரிய காரியத்தை எடுத்து செய்கிறோமே, அதை நம்மால் செய்ய முடியுமா என்று ஒரு அதைரியம் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. தைரியமாய் போகிற நாம், அதைரியம் அடைவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதனால்தான், கர்த்தர் சொல்லுகிறார், பயப்படாதே, நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று. அவ்வாறு சொல்லக் காரணம், யோசுவாவுக்கு பயம் வந்து இருக்கவேண்டும். இல்லை பயம் வந்ததினால் அதைரியம் வந்தவனாக அவ்வளவு இலட்சக்கணக்கான மக்களை நடத்த முடியுமா? என்று அதைரியம் வந்ததினால், கர்த்தர் சொல்லுகிறார், பயப்படாதே, கலங்காதே, திகையாதே, அது உனக்கு வருகிறது என்று நான் அறிகிறேன், ஆனால் நான் சொல்கிறேன், நீ எதற்கும் அஞ்சாதே, நான் உன்னுடன்கூட இருக்கிறேன், நான் உன்னை விட்டு விலக மாட்டேன், உன்னை கைவிடமாட்டேன், இதே வாக்குத்தத்தத்தை புதிய ஏற்பாட்டிலும் கர்த்தர் தந்திருக்கிறார், பாருங்களேன். கர்த்தர் ஒருபோதும் நம்மை விட்டு விலகாத தேவன், அவர் இருக்கும்போது, நீங்கள் ஏன் அதைரியம் அடைய வேண்டும், என்னால் எப்படி செய்ய முடியும்? என்று. உங்களால் செய்ய முடியாது தான், ஆனால் கர்த்தர் அதை செய்ய முடியும். தேவன் அந்த திட்டத்தை தருகிறாரா? என்பதுதான் முக்கியம். அவர் தந்தால், எப்படியும் சரியாக அதை நடத்திச் செல்வார். அதற்கு நீங்கள் காரணமாய் இருக்க வேண்டியது அவசியம்.

எட்டாவது காரியம், சடங்காச்சாரம் என்றதொரு சோதனை. சடங்கு, ஆச்சாரம் எதுவானாலும், மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. சடங்கு, ஆச்சாரம் என்றவுடன் நீங்கள் பாரம்பரியம் என்று மட்டும் யோசிக்க கூடாது. உங்களது ஜெபமே சடங்காச்சாரமாய் மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. கடமைக்காக ஜெபம் செய்வது, அதை சற்று முன்னே, இன்னொரு கண்ணோட்டத்தில் நாம் கற்றோம். அதாவது, பரிசுத்தவானைப் போல் பழக்கப்பட்டு, பயபக்தி அற்றுப்போதல் என்ற மாதிரிதான், ஜெபமும் ஒரு சடங்கு, ஆச்சாரமாக வேண்டிய ஒரு நிலைமைக்கு போய்விடும். உங்களை அறியாமலேயே அது அப்படியே ஒரு பாரம்பரியமாக மாறிவிடும். தேவ வாசிப்பு வழக்கமாக இதுதானே. அவர் ஒரு முறையான காரியமாக எதையும் வைக்காமல், கர்த்தர் நடத்துகிறபடி, புதுமையாக ஒவ்வொன்றையும் செய்வார். புதிய பாடல் ஆராதனை, வித்தியாசமான சிந்தனைகள் உங்களுக்கு தேவை. சடங்காச்சாரமாய் எதையும் மாற்றாதீர்கள். ஜெபமாக இருக்கட்டும், வேதவாசிப்பாக இருக்கட்டும், தியானமாக இருக்கட்டும், வேதாகம கற்பித்தல் அல்லது

குழுவாக இணைந்து வேத வசனங்களை பற்றி படிப்பதாக இருக்கட்டும், நீங்கள் அவற்றை, ஒரு சடங்காச்சாரமாய் அல்லது ஒரு கடமையாய் மாற்றிவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஒன்பதாவது, இணக்கமின்மை என்றதொரு சோதனை. அதாவது பொதுவாக சபையில் பார்க்கும்போது, சபையின் நிர்வாகத்திற்கும், போதகருக்குமிடையில், இணங்கி செல்லாத நிலையை அதிகமாய் பார்க்க இயலும், நிர்வாகம் ஒன்றைச் சொல்லும், போதகர் ஒன்றைச் செய்வார். ஆகவே நிர்வாகத்திற்கும், அதாவது கமிட்டிக்கும், போதகருக்கும் இடையில் பெரும்பாலும் இந்தவிதமான பனிப்போர் காணப்படுவதை, அதாவது இரகசியமான தகராறு போய்க்கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது. இவற்றை எல்லாம் அனுபவத்திலிருந்துதான் நான் உங்களுக்கு கற்றுக்கொடுக்கிறேன். பிரியமானவர்களே, நான் எந்த சபையிலும் போதகராக இருந்து பணியாற்றினேன் என்று கூற இயலாது, ஆனால் அநேக சபைகளுக்கு சென்று வருகிறபடியினால், ஊழியத்தினிமித்தம் எப்படியாவது இதைப் பற்றி கேள்விப்படுதல் வருகிறதாக இருக்கிறது. அதை வைத்துதான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். இணங்கி செல்வது என்ற காரியத்தில், சோதனையை சபை போதகர் கொண்டு வந்தால், அந்த திட்டத்தை, எதிர்கட்சிபோல் கட்டாயமாய் மறுப்பதை சில சபைகளில் பார்க்க முடிகிறது. நிர்வாகம் மற்றும் ஒரு எதிர்கட்சி, இல்லாவிட்டால், இரண்டுபேர் போட்டியிடுவார்கள், தேர்தல் முறையில் தேர்ந்தெடுப்பார்கள். கடைசியில் தோற்றுப் போனவர்கள், அங்கே வருவதில்லை, வந்தாலும் ஏதாவது பிரச்சனை கிளப்பி, இணங்கி செல்லாமல், சபை மிகவும் சீரழிந்து கொண்டிருப்பதை பார்க்க முடிகிறது. இந்த சோதனையை மேற்க்கொள்ள வேண்டியது அவசியம். விட்டுக்கொடுத்தல் என்பது இல்லாத பட்டசத்தில், இவ்விதமாய் இணைந்து செல்லாத நிலை இருக்கும். நான் ஏற்கனவே கூறியது போல, சபை என்பது தேவனுடைய சரீரம். அதில் விளையாடக் கூடாது. உங்களுக்கு பிடிக்கவில்லை என்பதற்காக, நிர்வாகம் கொண்டுவருவதற்கு இடையூறு செய்யக்கூடாது. நிர்வாகத்திற்கு, போதகருக்கு பிடிக்கும் என்பதற்காக, போதகர் சொல்கிற ஆலோசனைகளையும் நிராகரிக்க கூடாது, அவ்வாறு நிராகரிப்பதினால், சபை பாதிக்கப்படும் என்பதை மறந்து போகாதீர்கள். அந்த சபை தேவனுடைய, அதாவது கிறிஸ்துவுடைய சரீரமாக இருக்கிறது. அதில் விளையாடாதீர்கள், அரசியல் விளையாட்டெல்லாம் விளாயாடாதீர்கள் என்று உங்களுக்கு சுட்டிக்காட்டி கூற விரும்புகிறேன்.

பத்தாவது காரியம், பிரபலமடைய நாடுதல் என்ற சோதனை. பொதுவாக போதகருக்கு, மேய்ப்பருக்கு, தான் ஒரு பிரபலமான ஊழியராக மாறவேண்டுமென்ற எண்ணம் இருப்பது இயற்கைதான். அது அவருக்கு மட்டுமல்ல, எந்த ஊழியராக இருந்தாலும், அந்தவொரு எண்ணம்தான் காணப்படும், பிரபலமடைய வேண்டும், நாளுக்குநாள் விருத்தியடைய வேண்டும். தேவகிருபை விருத்தியடைய வேண்டியதுதான், தன்னுடைய ஊழியம் வளர வேண்டியதுதான். ஆனால் நோக்கம் எதுவென்று பார்க்க

வேண்டும். உங்கள் ஊழியம் வளர்கிறதினால், என்ன மகிமையைத் தேடுகிறீர்கள்? உங்களது மகிமையையா? தேவ இராஜ்ஜியத்திற்கு நிறைய பேர் இருக்கிறார்கள் என்று தேவ மகிமையை நாடுகிறீகளா? எது உங்களுடைய முக்கிய நோக்கமாய் இருக்கிறது என்று கவனித்து பார்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நீங்கள் யோவானுடைய வாழ்க்கையை பார்த்தீர்கள் என்றால், அவர் நாளுக்குநாள் குறுகிச் செல்வதையும், தேவ நாமம் பெருகுவதையுமே விரும்பினார். அதுபோல இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியத்தை பார்த்தீர்கள் என்றால், அவருடைய கீர்த்தி, தேசமெங்கும் பரவிற்று, அவருடைய ஊழியம் பிரசித்தமான இடத்திற்கு வந்தது. அதே வேளையில் நாளாவட்டத்தில் அவர் ஊழியத்தை விட்டு விலகி, சென்று ஊழியம் செய்தார். ஆனால் பிரபலமான ஒரு ஊழியத்தை, சேவகத்தை அவர் நாளுக்குநாள், தம்மைக் குறுக்கி கொண்டே வந்து, சிலுவையின் மரணபரியந்தம் தம்மை தாழ்த்தி, மிகவும் பொறுமையான ஒரு அளவிலேயே அவருடைய ஊழியத்தை நிறைவேற்றி முடித்தார். அதற்கு பின்பு தேவனை மகிமைப்படுத்தினார், அவருடைய நாமத்தை உயர்த்தினார். எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் மட்டுமல்ல, பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மகிமையையெல்லாம், அதற்கு பின்பாக நடந்தது. ஆனால் அவருடைய ஊழியத்தைப் பொறுத்தமட்டில், நாளுக்குநாள் பிரபலமடைவது என்பது குறைந்துகொண்டே வந்ததை நீங்கள் பார்க்கலாம். அதேபோலத்தான், உங்களுடைய ஊழியத்தைப் பொறுத்த மட்டில், ஊழியம் வளரலாம், பெருகலாம், ஆத்துமாக்கள் பெருகிக் கொண்டு வருவதெல்லாம் தரிசனமாய் இருக்கிறது நல்லதுதான். ஆனால் உங்களுக்குள்ளே ஒரு சோதனை உண்டாகிறது, நானும் அந்த போதகரைப்போல, இந்த பட்டணத்தில், பெரியதொரு சபைக் கட்டிடத்தை கட்டவேண்டும், ஒரு பெரிய போதகர் என்ற பெயரையெடுக்க வேண்டும், என் ஊழியத்தில் அற்புதங்கள், வல்லமைகள், வரங்கள் அப்படியே நடக்க வேண்டும், நான் கையை நீட்டினால் எல்லோரும் கீழே விழ வேண்டும் என்கிற மாதிரி பிரபலமடைகிற ஒரு எண்ணம், சோதனையாய் உங்களுக்கு வருவது இயற்கைதான்.

பிரியமானவர்களே, அது வரும், அதை மேற்க்கொள்ள நீங்கள் கர்த்தருடைய சிந்தையை தரித்துக்கொள்ள வேண்டியது அவசியம். உங்களை நீங்களே கட்டுப்படுத்தி, உங்களை நீங்களே கர்த்தருக்கு மகிமை செலுத்துகிற இடத்திற்கு உங்கள் இருதயத்தை திருப்பி, கர்த்தாவே உம்முடைய நாமமே மகிமைப்படட்டும், உம்முடைய மகிமையிலே ஒரு துளிகூட நான் எடுக்க கூடாது ஆண்டவரே, அவ்வாறு எடுத்தால், எனக்குத்தானே இடையூறு. நான் பெருமைகொண்டால், கர்த்தர் எனக்கு எதிர்த்து நிற்பார். நீர் உம்முடைய மகிமையை எடுத்துக்கொண்டால், நான் ஆசீர்வதிக்கப்படுவேன் என்ற மனப்பான்மை உங்களுக்கு வேண்டும். நான்தான் இதைச்செய்தேன், கர்த்தர் செய்வதற்கு முன்னால், நான்தானே செய்தேன், என்னுடைய ஜெபத்தினால் அவர் இரட்சிக்கப்பட்டார், என்னுடைய ஜெபத்தினால் அவர் சுகமானார், நான் ஜெபித்தேன், கர்த்தர் அற்புதம் செய்தார் என்று சொல்லாமல்

கர்த்தருக்கே மகிமை என்று சொல்லும் இடத்திற்கு, உங்களை எப்பொழுதும் தாழ்த்தி, ஒப்புக்கொடுத்து பாருங்கள் பிரியமானவர்களே. ஆக, பிரபலமடைய நாடுதல் என்பது, ஒரு சோதனையாக இருக்கிறது.

அடுத்து நமக்கு இயல்பாகவே ஏற்படக்கூடிய சோதனைகள் சிலவற்றை நான் கூற விரும்புகிறேன். நாம் இதுவரை 10 ஆவிக்குரிய முக்கியமான சோதனைகள் பற்றி கற்றிருக்கிறோம். ஆனால் இப்பொழுது இயல்பாக நம்முடைய சரீரத்திலேயே ஏற்படக்கூடிய சோதனை பற்றி சிலவற்றைப் பார்க்கலாம். அதில் ஒன்று, சோம்பேறித்தனம், இதுவொரு பெரிய சோதனை, அதாவது உலக வேலையை செய்கிறவர்கள் கூட, 8 மணிநேரம் அல்லது 10 மணி நேரம் வேலையை வாங்குகிறார்கள். ஆனால் நாம் ஊழியத்திற்கு வந்த புதிதில், ஒருவேளை ஆத்தும பாரமெல்லாம் இருந்தது, அதிகமாக ஊழியம் செய்திருப்போம், பிறகு அதுவொரு நடைமுறையாக, பழக்கமாக ஆனபிறகு, அதில் மற்றவர்களை ஈடுபடுத்த வாய்ப்பு இருப்பதினால், நிறைய தன்னார்வ ஊழியர்களை ஏற்படுத்தி விட்டு, சோம்பலாக இருக்க வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது. தன்னார்வ ஊழியர்களை ஏற்படுத்தியது, அதுவொரு காரணமாக இருந்தாலும் நாள்பட அதுவே ஒரு சோம்பேறித்தனமாய், ஒரு வீடு சந்திக்கப்போகிறது கூட இல்லாமல், அதுவொரு சோம்பேறித்தனமாய் மாறியிருக்கும், ஜெபம் செய்வதுகூட ஒரு சோம்பேறித்தனமாக இருக்கும். ஒரு ஆராதனை நடத்தப்போவதாக இருந்தாலும்கூட, நீங்கள் செய்யுங்கள் என்று மற்றவர்களை செய்ய வைத்துவிட்டு, ஓரமாய் இருப்பதற்கு மனதில் தோன்றும். சோம்பல் என்ற சோதனை அது. பிரியமானவர்களே, கர்த்தர் நிர்விசாரமாய் அவருடைய காரியங்களைச் செய்வதை வெறுக்கிறார். சோம்பேறித்தனமாய் செயல்படுகிறதை வெறுக்கிறார். ஒரு ஊழியன் சுறுசுறுப்பாய் இருப்பதையே அவர் விரும்புகிறார். ஆகவே, சோம்பல் என்ற அந்த ஆபத்தான சோதனை வரும்போது, நீங்கள் அதை தள்ளிவிட்டு, இல்லையில்லை, உலக மனுஷன் தன்னுடைய வியாபாரத்திற்காக, எவ்வளவு மணிநேரம் கடுமையாக உழைக்கிறான், ஒரு விவசாயி எவ்வளவு கடினமாக உழைக்கிறான், நான் கர்த்தருடைய பணிகளை அதிகமாய் இரவு, பகல் என்று பாராமல் மிக கவனமாய் ஊழியம் செய்யவேண்டுமென்ற நோக்கில், அந்த சோம்பேறித்தனத்தை உதறித் தள்ளிவிட்டு செயல்பட வேண்டும். சோம்பேறி பற்றி வேதம் எச்சரிக்கிற நிறைய வசனங்களை நீங்கள் அறிவீர்கள். இப்போது நான் அதை சுட்டிக்காட்ட விரும்பவில்லை.

அடுத்து, உலக ஆசை, இது நமக்கு சரீரத்திலேகூட, உலகத்தை மயக்க கூடியதாய் இருக்கிறது. அந்த போதகர் கார் வாங்கி விட்டார், ஐயோ, நமக்கு கார் இல்லையே, என்ன ஊழியம் செய்கிறேன், ஊழியத்தில் கர்த்தர் என்ன ஆசீர்வதித்தார்? என்று புலம்பிக்கொண்டிருக்கிற ஒரு அனுபவம் வருவதை பார்க்க முடிகிறது. உலக ஆசை நம்மை மேற்க்கொள்ளத் துடித்துக்கொண்டிருக்கும், உலகம், மாமிசம், பிசாசு ஆகிய இந்த

மூன்று சோதனைகளும் மிகவும் முக்கியமாக, நமக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த உலகம் நம்மை ஊழியத்தில், உலக ஆசை பிடிக்கச்செய்ய வைக்கிறதைப் பார்ப்பீர்கள். திருமண வீடுகளுக்கு போகும்போது, மற்றவர்களெல்லாம் டாம், டீம் என்று ஆடம்பரமான உடை, மற்றும் வாகனங்களில் வரும்போது, ஐயோ, நான் படித்த படிப்பிற்கு, வேலைக்கு மட்டும் போயிருந்தால், என் குடும்பத்தை எவ்வளவு செல்வாக்காக வைத்திருப்பேன் என்பதான ஒரு எண்ணம் சிலருக்கு வருவதைப் பார்க்க முடிகிறது. ஆனால், ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும், இந்த ஆடம்பர வாழ்வினால் மகிழ்ச்சி இல்லை, கர்த்தருக்குள் இருக்கிறதினால்தான், மகிழ்ச்சி என்பதை எப்பொழுதும் உறுதிபட நாம் வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியம். நாம்தான் உலகத்தை வெறுத்து வந்தோம், நாமே அதில் உறதியாக நிற்க வேண்டும்.

அடுத்தது, கோபம். பொதுவாக ஒரு ஊழியருக்கு வருகிற ஒரு பெரிய சோதனை, கோபம். ஏனெனில், அவர் ஒரு முக்கியமான இடத்தில் வைக்கப்பட்டு இருப்பதினால், போதகர் ஐயா, என்று சொல்லி எல்லோரும் கூப்பிடுவார்கள். அதனால் அவருக்கு மற்றவர்கள் மீது எளிதாய் கோபம் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏனெனில் அது நம்முடைய சபை விசுவாசி தானே, அவரை கடிந்துகொண்டால், தப்பேதுமில்லை என்றதொரு தைரியம் மட்டுமல்ல, 4 பேர் மத்தியில் அவ்வாறு கோபப்பட்டு சொல்லுகிறது, தன்னை உயர்ந்த இடத்திற்கு கொண்டு போகும் என்று ஒரு சில போதகர்கள், ஊழியர்கள் நினைத்து அவ்விதமாய் செய்கிறார்கள். ஆனால், நாம் யோசிக்க வேண்டும், நம்மைவிட அதிகமான தகுதியுடையவர்கள் மத்தியில் மிகவும் அடக்கி வாசிப்போம். ஆக, நம்மைவிட எளியவர்கள் என்ற எண்ணத்தில், விசுவாசிகளை, ஏழைகளை பார்த்தவுடன் கோபம் கடுமையாக வருவதைப் பார்க்கிறோம். இன்னும் பெருமையினால் கோபம் வரும். அப்படியான பல காரணங்கள் இருக்கிறது. ஆனால், அதுவொரு சோதனை என்பதை பலர் அறிவதில்லை. ஒரு மேய்ப்பனாய் ஊழியம் செய்வதிலே, கோபம் என்பது அதிகமாக வருவதைப் பார்க்கிறோம்.

அடுத்து, பண ஆசை, நான்காவது காரியமாக நாம் இதைப் பார்ப்போம். இது எல்லோருக்குமே உள்ள ஆசைதான், ஆனால் ஊழியருக்கு அது வரக்கூடாது, பணம், பணம், பணம் என்று பணத்தை இன்றைக்கு அநேகர் ஊழியத்தில் முக்கியப்படுத்துகிற காரியமாக இருக்கிறது. ஆகவே, விசுவாசிகள் அதிகமாக காணிக்கை கொடுக்க வேண்டுமென்று, ஊழியர்கள் பல திட்டங்களை சபையிலும் சரி, தங்களது போதனைகளிலும் சரி கொண்டுவந்து, அதை வெளிப்படையாக அறிவிக்கிறார்கள். இவ்வளவான காணிக்கை கொடுத்தால், இதை தருவோம், அதைச் செய்வோம், என்னிடத்தில் நேரடியாக வந்து ஜெபியுங்கள், எங்களிடம் ஜெபித்த அநேகர் மிகவும் நன்றாக இருக்கிறார்கள், அந்த குடும்பம் நன்றாக இருக்கிறது. ஆகவே, நீங்கள் இதில் ஒரு உறுப்பினராக மாறுங்கள்,

இத்தனை ஆயிரங்களை மட்டும் கட்டுங்கள் என்று சொல்லி, சந்தாதாரர்களை பிடிக்கிறதை நாம் பார்க்கின்றோம். பிரியமானவர்களே, தேவனுடைய ஊழியத்திற்காக காணிக்கை பெறுவது என்பது தவறான விஷயமல்ல, ஆனால், காணிக்கைக்காகவே ஊழியம் என்று இருக்கக்கூடாது. ஊழியத்திற்காகவே, காணிக்கையேயொழிய, பணத்திற்காக ஊழியம் அல்ல. ஆக, உங்களுடைய ஊழியம் உண்மையாகவே, தேவையோடு போகிறதை, கர்த்தர் நிச்சயமாய் அறிந்து உதவுகிற மக்களைத் தருவார் என்பதில் சந்தேகமேயில்லை. உங்களது ஆசையை நிறைவேற்றுவார், ஆனால் பேராசையை நிறைவேற்ற மாட்டார் என்ற அந்தக் கோட்பாட்டை எப்பொழுதும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் தேவைகள் நிச்சயம் கர்த்தரால் நிறைவேற்றப்படும். என்ன ஊழியம் நீங்கள் செய்ய தேவன் நினைக்கிறாரோ, உங்கள் உள்ளத்திலும் வாஞ்சை இருக்கிறதோ, அந்த ஊழியத்தை செய்வதற்குரிய எல்லா தேவைகளையும் கர்த்தர் நிச்சயமாய் சந்திக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆக, பண ஆசை என்ற சோதனையானது ஒரு போதகருக்கு, ஊழியருக்கு வருவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

அடுத்து, மிகைப்படுத்தல் என்ற சோதனை. ஆம் பிரியமானவர்களே, காரியத்தை மிகைப்படுத்திக் கூறுவது என்பது இன்று ஊழியத்தில் அதிகம் காணப்படுகிறது, இது முன்பிருந்தே காணப்படுகிறது, ஆனால் இன்றைய நாட்களில் அதிகமாகக் காணப்படுகிறது. அது வாட்ஸ் அப்பில், ஒரு 10 குழுவில் அவர்கள் செய்தியை பகிர்வு செய்தபின்பு, நாங்கள் 10 ஆயிரம் நபர்களுக்கு வாட்ஸ்அப் மூலமாக ஊழியம் செய்கிறோம் என்று தகவல் கொடுக்கிற சிலரை நீங்கள் பார்ப்பீர்கள். அடுத்தவர்கள் குழுவில் போட்டிருப்பார்கள், அந்த குழுவிலிருக்கிற எல்லோரும் இவர்களின் செய்தியைக் கேட்டதுபோல 10 ஆயிரம் நண்பர்களுக்கு தினமும் நான் கர்த்தருடைய செய்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் என்று மிகைப்படுத்தி பேசுகிற ஒரு எடுத்துக்காட்டை நான் கூறுகிறேன். அவ்வளவுதான், இது மாதிரியான எத்தனையோ இருக்கிறது. ஆனால் ஒரு ஊழியருக்கு, தன் ஊழியத்தை மிகைப்படுத்தி காட்டுவது என்பது ஒரு பெரிய சோதனையாக இருக்கிறது. அவ்வாறு சபையில் சொன்னால்தான், காணிக்கை ஒழுங்காய் வரும், இல்லையென்றால் தன்னுடைய ஊழியத்தை, பெரிய ஊழியமாய் நினைப்பார்கள், அப்போதுதான் விசுவாசிகள் சபைக்கு ஒழுங்காக வருவார்கள் என்று கருதி, அதற்காக பெரிய பெரிய ஊழியர்களைக் கூட அழைத்து, பேனர்களை வைத்து, ஒரு மிகப்பெரிய கூடுகையாக வைத்து நடத்துகிறதை விரும்புகிற மக்களுக்காக, ஊழியர்கள் செய்கிறதைப் பார்க்கிறோம். ஏனென்றால், அந்த பகுதியிலேயே எங்களது சபைதான் பெரிய அளவிலான சபை என்று சொல்லவேண்டும் என்பதற்காக அவற்றைச் செய்கிறார்கள். அது மட்டுமல்ல பெரிய ஊழியம் நடைபெறுவதாக மக்களுக்கு காண்பிக்க வேண்டும், ஆத்துமாக்களைக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டு செய்வதை தவறாக கூறவில்லை பிரியமானவர்களே. ஆனால் மிகைப்படுத்தல் என்பது, உள் நோக்கமாக இருந்தால் அது தவறு என்பதை மாத்திரம் நான்

கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இப்படியாக இயல்பாக ஏற்படக்கூடிய சோதனைகள் அநேகம் இருக்கிறது, அதில் ஐந்து காரியத்தை உங்களுக்கு சுட்டிக்காட்டி சொல்லியிருக்கிறேன் பிரியமானவர்களே.

உங்களுக்கு ஒருவேளை இப்படிப்பட்ட சோதனைகள் வரும். உங்களுக்கு வரக்கூடாது என்றுதான் என்னால் சொல்ல முடியும், ஆனால் கட்டாயமாக வராது, இருக்காது என்று என்னால் சொல்லமுடியாது. சோதனைகளை எதிர்நோக்கக்கூடிய இப்படிப்பட்ட சவால்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால், நீங்கள் அதை எப்படி மேற்கொள்ள ஓடுகிறீர்கள் என்பதில்தான் வெற்றி இருக்கிறது. தேவன் இவற்றையெல்லாம் வெற்றிகொள்வதற்கு தேவையான ஆன்மீக பலத்தை, அதற்குத் தேவையான சர்வாங்க ஆயுதவர்க்கத்தை எல்லாம் உங்களுக்கு கொடுத்திருக்கிறார். இவைகளை எல்லாம் மேற்கொள்ள முடியாத காரியம் என்று ஒருபோதும் வேதம் சொல்லவில்லை. அதற்கு ஆவியானவர் இருக்கிறார், வேத வசனம் இருக்கிறது, ஜெபம் இருக்கிறது, கர்த்தரோடு நீங்கள் பழகுகிற அந்த தனிப்பட்ட ஐக்கியம் இருக்கிறது. இவைகள் எல்லாம் உங்களை வெற்றிபெறச் செய்யும். இதற்கு ஏதோவொரு விதத்தில் விசேஷித்த பயிற்சி எடுக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. எந்த சோதனையாக இருந்தாலும், எந்தவொரு ஆபத்தாய் இருந்தாலும், எந்தவொரு காரியமாய் நம்மை கட்டுப்படுத்த வந்தாலும், அதை கட்டுப்படுத்தி மேற்க்கொள்வதற்கு, நமக்கு தேவையான எல்லா விடுதலையையும் தருகிற கருவிகள் எல்லாம் வேதத்தில் இருக்கத்தான் செய்கிறது. அதை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும், கற்று இருக்கிறீர்கள். வேதம் வாசிக்க வேண்டும், ஜெபம் செய்ய வேண்டும், தேவனோடு ஐக்கியம் கொள்ள வேண்டும், இது தெரியாமல் அல்ல. ஆனால், அதை செய்கிறது இல்லை என்பதுதான் ஒரு மேய்ப்பனின் மற்றும் போதகனின் காரியமாய் இருக்கிறது, மேலும் ஒரு ஊழியரின் காரியமும் அப்படித்தான் இருக்கிறது, ஒரு விசுவாசியும் அப்படித்தான் இருக்கிறார். ஒரு மணிநேரம் ஜெபிக்க வேண்டுமென்று தெரியும், ஆனால் ஜெபிக்க மாட்டோம், அதிக நேரம் கர்த்தரிடத்தில், தனிப்பட்ட முறையில் வேதத்தை வாசிக்க வேண்டும். இரட்சிக்கப்பட்ட புதியதில், பல மணிநேரம் உபவாசித்து ஜெபித்தோம். இப்போது அது பழகிப்போனது.

பிரியமானவர்களே, இந்த ஆபத்துகளையெல்லாம் தாண்டி வாருங்கள். இந்த சோதனைகளையெல்லாம் தாண்டி வாருங்கள். கர்த்தருடைய உதவியோடு ஒரு வல்லமையான ஊழியர்களாய் எழும்புங்கள் என்று சொல்லி உங்களை நான் உற்சாகப்படுத்த விரும்புகிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. நாம் படித்துக்கொண்டிருக்கிற இந்த பாடமானது, முக்கியமான நடைமுறையான பாடமாக இருக்கின்றபடியினால், அதிகமான விளங்கங்களோடு கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1) தேவனுடைய திட்டங்களுக்கு விரோதமாக காணப்படுகிற சாத்தானின் செயல்பாடுகள் எவ்வாறு மேய்ப்பர்களுக்கான சவாலாக இருக்கின்றது என்பதனை வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
2) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பொதுவாக வருகிற வீழ்ச்சிக்கு மிக முக்கியமான மூன்று காரணங்கள் யாவை?
3) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற ஆவிக்குரிய பெருமை என்ற சோதனையைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
4) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில் ஆவியானவருக்கு இடங்கொடாமல் செயல்படுகிற சோதனை குறித்து சற்று விளக்கமாக கூறுக?
5) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில், பிரசங்கங்களில் தனிப்பட்ட அனுபவங்களை வலியுறுத்தி பேசுகிற சோதனை குறித்து உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?
6) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில் 'பரிசுத்தமானவற்றில் பழக்கப்பட்டு பயபக்தி அற்றுப்போதல்' என்ற சோதனையைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
7) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில் 'மாம்சத்தில் ஆரம்பித்தல்' என்ற சோதனையைக் குறித்து உதாரணங்களுடன் விளக்கமாக கூறுக?
8) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில் 'தன்னை முன்னிலைப்படுத்திக் காண்பிக்கிற' சோதனையைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
9) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில் பயப்படுதல் என்ற சோதனையைக் குறித்து கூறுக?
10) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில் சடங்காச்சாரம் என்கிற சோதனையைக் குறித்து கூறுக?
11) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில் இணக்கமின்மை என்கிற சோதனையைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?

12) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் வருகிற சோதனைகளில் ‘பிரபலமடைய நாடுதல்’ என்ற சோதனையைக் குறித்து கூறுக?
13) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இயல்பாக ஏற்படக்கூடிய சோதனைகளில் சோம்பேறித்தனம் என்கிற சோதனையைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
14) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இயல்பாக ஏற்படக்கூடிய சோதனைகளில் உலக ஆசை என்கிற சோதனையைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
15) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இயல்பாக ஏற்படக்கூடிய சோதனைகளில் கோபம் என்கிற சோதனையைக் குறித்து கூறுக?
16) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இயல்பாக ஏற்படக்கூடிய சோதனைகளில் பணஆசை என்கிற சோதனையைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?
17) மேய்ப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இயல்பாக ஏற்படக்கூடிய சோதனைகளில் மிகைப்படுத்தல் என்கிற சோதனையைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக?

# மேய்ப்புபணி இறையியல்

## பாடம் - *16*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடமானது, மேய்ப்புபணி இறையியல் என்ற பாடத்தின் இறுதி பாடமாகும். மேய்ப்புபணியில் இயல்பாக ஏற்படக்கூடிய சோதனைகள், சவால்கள் போன்ற காரியங்களை கடந்த பாடங்களில் நாம் கற்றோம். இந்தப்பாடத்தில், மேய்ப்புபணியில் ஏற்படுகிற ஆபத்துக்கள் மற்றும் எதிர்ப்புகள் எந்த விதங்களில் நம்முடைய ஊழியத்திற்கு சவாலாய் இருக்கிறது என்பது குறித்து சிந்திக்கப்போகிறோம்.

**ஒரு மேய்ப்பனுடைய பணியில் மிகவும் சவாலாக இருக்கின்ற விஷயம் என்னவென்றால், தனிமை என்பதாகும்,** அதுவொரு ஆபத்தாகவும் இருக்கிறது. தனிமையாய் இருந்தால் பிரச்சனை வராது என்று பொதுவாக நாம் நினைக்கின்றோம். அதற்காகத்தான் மற்ற மதங்களில், காடுகளில் சென்று தனிமையாக எவருடைய இடையூறும் இல்லாமல் இருந்துவிட வேண்டுமென்று சிலர் சொல்வதை நாம் பார்க்கின்றோம். ஆனால் தெய்வபக்தி என்பது மனதோடு சம்பந்தப்பட்ட விஷயம், அது நம்மைநாமே தனிமைப்படுத்திவிடுவதினால், பிரச்சனை முடிந்துவிடுகிற விஷயம் அல்ல. அதைப்போன்று ஒரு சன்னியாசிபோல காட்டில் வாழ்ந்துவிடுகிற ஒரு வாழ்வையும் தேவன் எதிர்பார்க்கவில்லை. நாம் சமுதாயத்தோடு இருந்தால்தானே பிரச்சனை, பேசாமல் காட்டில்போய் உட்கார்ந்து விடலாம் என்று இருக்கவும் முடியாது. அதைக் குறித்து அழகாய் சொல்வார்கள், கப்பல் புயல் மத்தியில் பயணிக்க தக்க விதமாக வடிவமைக்கப்பட்டு, கடலுக்குள் செல்வதற்குத்தான் உருவாக்கப்பட்டிருக்கிறதேயொழிய, அதை கடற்கரை ஓரமாக கட்டி வைத்திருந்தால், பாதுகாப்பாக இருக்கும். ஆனால் அவ்விதமாக வைப்பதற்காக அது உருவாக்கப்படவில்லை என்று கூறுவார்கள்.

ஆம் பிரியமானவர்களே, மேய்ப்பனும், போதகனுமான ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறேன் என்று சொல்லுகிற நீங்களும், நானும், இல்லாவிட்டால் ஈடுபடப்போகிற சிலரில் நீங்களாக இருக்கலாம். அப்படி ஈடுபடுவதற்கு நீங்கள் முனையும்போது, தனிமை என்னும் ஒரு பிரச்சனை இருக்கிறது. தனிமையாய் இருந்துவிட்டால், பிரச்சனை தீராது, அதேவேளையில் தனிமையில் இருக்கும்போதும், சோதனைகள் வர வாய்ப்புகள் அதிகமாக இருக்கத்தான் செய்கிறது. பிரசங்கி 4:9-ம் வசனம் இவ்வாறு கூறுகிறது, ஒண்டியாய் இருப்பதைப் பார்க்கிலும், இருவர்கூடி இருப்பது நலம். அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலன் உண்டாகும்' என்று பார்க்க முடிகிறது. மேலும் 4:10-ம் வசனம், 'ஒருவன் விழுந்தால் அவனுடைய உடனாளி அவனைத் தூக்கி விடுகிறான், ஒண்டியாக

இருந்து விழுகிறவனுக்கு ஐயோ! அவனைத் தூக்கிவிட துணை இல்லையே' என்று சொல்லி அழகாக சாலொமோன் எழுதுகின்றார். ஆக, ஐக்கியம் தேவை, குறிப்பாக போதகராக இருக்கிறவர்கள், ஊழியர்களாக இருக்கிறவர்கள், குடும்பமாய் இருக்க வேண்டியது அவசியம் என்று ஏற்கனவே நாம் பார்த்தோம், இல்லையா? தனிமையாக இருக்கின்ற ஒருவர் மீது தேவையில்லாத குற்றச்சாட்டுகள், அதிக அதிகமாய் வர வாய்ப்புகள் இருக்கின்றது என்று ஏற்கனவே நான் கூறியது உங்களுக்கு நினைவிருக்கலாம். அது மட்டுமல்ல, தனிமையாய் இருக்கிற ஒருவனுடைய இருதயம் சாத்தானுடைய தொழிற்சாலையாக இருக்கிறது என்று சொல்வார்கள். பல பாவ எண்ணங்கள் வரலாம், தேவையற்ற சிந்தனைகள், தேவையற்ற கவலைகள், மட்டுமல்ல தேவையற்ற பலதரப்பட்ட எண்ணப்போராட்டங்கள் சிந்தையில் வர வாய்ப்புகள் இருக்கிறது. ஆகவே தனிமையை ஒரு போதகர் தவிர்க்க வேண்டும். ஒரு மேய்ப்பர் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஏற்கனவே நாம் படித்தோம், அல்லவா? ஏனெனில் ஒரு தந்தையின் ஸ்தானத்திலிருந்து அந்த சபையை மேய்க்கப் போகிறீர்கள், வாலிப வயதில் ஊழியம் செய்யக் கூடாது என்றில்லை, அவ்வாறு ஒருவேளை வாலிப வயதில் உங்களுடைய ஊழியம், போதக ஊழியம் ஆரம்பமானால், ஒரு போதகருக்கு கீழேயிருந்து, உதவிப் போதகராக பணிபுரிய ஈடுபட்டு செய்யலாம்.

**இரண்டாவது ஆபத்து என்னவென்றால், எதிர்பாலருடனான உறவுகள்,** அதாவது ஒரு ஆண், ஆணோடு பழகுவது பற்றி பெரிய பிரச்சனை இல்லை. ஆனால் ஒரு ஆண், ஒரு பெண்ணுக்கு ஊழியம் செய்யும்போது, பலதரப்பட்ட பிரச்சனைகள் எழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மனம் திறந்து ஒருவேளை பேச இயலாது, அந்தப் பெண்ணுக்கு அப்படி மனம் திறந்து பேசினால் பலதரப்பட்ட தவறான கருத்துக்களும், தவறான உறவுகளும் ஆரம்பமாவதற்கு அது வாய்ப்பாக மாறும். ஆக, ஒரு ஆணோடு, ஒரு பெண் தன்னுடைய குடும்பத்திலுள்ள பிரச்சனைகள், கணவனோடு இருக்கிற பிரச்சனைகள் பல காரியங்களை பகிர்ந்துகொள்ளும்போதுதான், அங்கே எதிர்ப்பாளர்களுக்குள் ஏற்படுகிற பிரச்சனைகள் சபையிலே தோன்றுகிறதைப் பார்க்கிறோம். பிரியமானவர்களே, ஊழியர்களாய் இருந்தாலும்கூட கவனமாக ஆணும், பெண்ணும் பழக வேண்டியது அவசியமாக இருக்கின்றபடியினால், ஆண், ஆணுக்கு ஆலோசனை கொடுத்து ஊழியத்தில் நடத்த, இரட்சிப்பில் நடத்த முயற்சி செய்யவேண்டும். ஒரு போதகர், அவருடைய மனைவி, பெண்களுக்கு ஊழியம் செய்து, அவர்களை கிறிஸ்துவண்டையில் நடத்துகிற ஆலோசனை கூட்டத்தை நடத்துகிற காரியத்தைச் செய்ய வேண்டும். ஆகவே, ஆணுக்கு, ஆணும், பெண்ணுக்கு பெண்ணும் ஊழியம் செய்வதுதான் பாதுகாப்பான ஊழியம். ஆனால் சில இடங்களில் தவறுகள் ஏற்பட காரணமாய் இருக்கிறது. இந்த உறவுகளில் ஏற்படுகிற பிரச்சனைகளை ஒரு பெண், அந்த பெண் போதகரோடு திறந்த மனதோடு பகிர்ந்துகொள்வாள். அப்போது, அன்புகூர்ந்து சில காரியங்களை சொல்ல வேண்டித்தான்

இருக்கும். அந்த அன்பை அந்த பெண் தவறாக புரிந்துகொண்டால், பிறகு இருவரும் அந்த அன்பை தவறாக புரிந்துகொண்டால், அது பிரச்சனையாய் மாறிவிடுகிறது.

**மூன்றாவது காரியம், கடன் என்ற பிரச்சனையானது ஒரு ஆபத்தாக இருக்கிறது.** ஆம் பிரியமானவர்களே, ஊழியர்களுக்கு இதுவொரு பிரச்சனையாகத்தான் இருக்கிறது. தேவனுடைய பணியிலே, தேவனை நம்பி தாராளமாக செலவழிக்கிற ஊழியர்கள் அனேகர் உண்டு. அப்போது அவர்கள் திட்டமிடாமல் செலவழித்து, விசுவாசம் என்பதன் அடிப்படையில் மாத்திரம் சிந்தித்து செயல்பட்டு சில கடன்களை வாங்கி, துன்புறுவதை நாம் பார்க்கிறோம். அது மட்டுமல்ல, நான் ஏற்கனவே கூறிய ஒரு நடைமுறையான பிரச்சனையை நீங்கள் அறிவீர்கள். ஊழியர்கள் என்றாலே, குறைவாக கொடுப்பதே வழக்கம். எவ்வளவு விலைவாசி கூடினாலும், சபையில் காணிக்கை படைப்பதோ, இல்லாவிட்டால் ஊழியருக்கு காணிக்கை கொடுப்பது, ஒரு 50 ரூபாய் அல்லது 100 ரூபாய் கொடுக்கிறதே பெரிய விஷயம். அந்த காணிக்கையைக் கொண்டு, இல்லாவிட்டால் ஒரு சபையில் ஒரு போதகராக நியமிக்கப்படுகிறார் என்றால், உலக நிறுவனங்களில் கொடுக்கிறதில், ஒரு பாதிதான் ஊழிய நிறுவனங்கள் கொடுக்கிறது. ஒருவேளை கணவனும், மனைவியும் வெவ்வேறு பணிகளைச் செய்தார்கள் என்றால், அது அவர்களுக்கு போதுமானதாக இருக்க கூடும். ஆனால் ஊழியத்தையே நம்பி முற்றிலுமாய் வருகிற ஒரு நபருக்கு, இந்த சபையானது, நிர்வாகமானது, மற்ற காரியங்களுக்கு ஆடம்பராய் செலவழிக்கிறது, ஆனால் ஊழியர்களுக்கு கொடுக்கிற அந்த மாத ஊழிய சம்பளம் மிகக் குறைவானதாகவே இருக்கிறது. ஆகவே ஒரு நோய் வரும்போது, ஒரு தேவை ஏற்படும்போது, அந்த ஊழியர் கடன் வாங்கி செலவழிக்க நேரிடுகிறது. பிறகு அது கடனாக மாறிவிடுகிறது. அதுவொரு பிரச்சனையாக, கவலையாக மாறுகிறது. ஆகவே அவரால் விடுதலையோடு ஊழியம் செய்ய இயலவில்லை என்ற பொருளாதார பிரச்சனையும் ஒரு ஆபத்தாக இருக்கிறது. சில வேளைகளில், சில ஊழியர்கள் விசுவாசம் என்பதன் பெயரில் மிக அகலமான ஒரு அடியை எடுத்து வைத்தும் பிரச்சனையில் மாட்டிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருசிலரை நான் அறிவேன். அவருக்கு வருகின்ற காணிக்கை குறைவாக இருக்கும். ஆனால் அவர்கள் பெரியளவில் தரிசனத்தை உடையவராய் இருந்து, ஆடம்பரமாக பொருள்களை வாங்குவார்கள். டிவி நிகழ்ச்சியில் ஈடுபடுவார்கள், பல ஆயிரங்களை செலவழிப்பார்கள். கடைசியில் கடனோடு உட்கார்ந்து விடுவார்கள். எனக்குத் தெரியும், மிக நெருக்கமான ஒரு ஊழியர், கர்த்தர் என்னை கார் வாங்க சொல்லுகிறார் என்று சொல்லி, மிக குறைந்த விலையில் கிடைக்கிறதே என்று 25 ஆயிரம் கொடுத்து ஒரு காரை வாங்குவதற்கு முடிவுசெய்து, தன்னுடைய ஊழியத்திற்கென பயன்படுத்தப்போகிறேன் என்று வாங்கினார். ஆனால், 25 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு கார் வருகிறது என்றால் அதை தொடர்ந்து பராமரிப்பதற்கான செலவினங்கள் அதிகமக வரும் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறான காரை வாங்கினபின்பு, ஒன்று

ஒன்றாக செலவழித்து, அந்த 25 ஆயிரம் கடனோடு, அவர் அந்த காரை வாங்கினார். பிறகு அதற்கு தேவையான உதிரிபாகங்கள் வாங்கிப்போட்டு, பெட்ரோல் நிரப்பி தொடர்ந்து, காரை பயன்படுத்த முடியாமல், கடனோடு கடனாகி, ஊழியத்தையும் விட்டுவிட்டு, இன்று ஒரு டிரைவராக வேலைசெய்கிறார். பாஸ்டராக இருந்தவர், டிரைவராக மாறிவிட்டார்.

பிரியமானவர்களே, ஒரு ஆவிக்குரிய வாழ்வு என்பது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அதாவது, தேவன் பெரிய காரியங்களைச் செய்வார், ஆனால் அதை நீங்கள் ஆவிக்குரிய ரீதியில் சரியாக உணர்ந்துகொள்ள வேண்டும். எப்பொழுதும் நடைமுறையைப் பாருங்கள் என்று இங்கு சொல்லவில்லை, ஆவிக்குரிய ரீதியில் உங்களுடைய வாழ்க்கை அற்புதமாய் போகவேண்டும் என்று பார்க்காதீர்கள். பவுல் அதைத்தான் சொல்கிறார், 'தகுதிக்கு மிஞ்சி நாம் எண்ணக்கூடாது' என்ற அர்த்தத்தில் கூறுகின்றார். எங்களுக்கு எது முடியும்? எது தகுதியாய் இருக்கிறதோ, அதைத்தான் நாங்கள் சிந்திப்போம் என்கிறார். தேவன் அற்புதம் செய்ய வல்லவர், அவரால் அபரிவிதமான காரியத்தையும் செய்ய முடியும். ஆனால் அவர் சொன்னாலும், அது மிகவும் முக்கியம். அவர் சொல்லாத காரியத்தை நாமாகவே முடிவுபண்ணிவிட்டு, அவரால் சந்திக்க முடியுமென்று நாமாகவே ஒரு பொருளை வாங்கிவிடும்போது, ஒருசில பிரச்சனைகள் வருகிறது. அநேக ஊழியர்கள் படுகிற அந்த பாடுகளைப் பார்த்துவிட்டுத்தான் சொல்கின்றேன். கடன் என்ற பிரச்சனை, அதுவொரு ஆபத்தாக இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

**அடுத்து, வீணான கவலை என்ற ஒரு ஆபத்து ஊழிர்களுக்கு ஏற்பட வாய்ப்புகள் இருக்கிறது.** வீணான கவலைகள், அதாவது, கர்த்தர் கவலைப்படாதே என்று சொன்னார், ஆனால் இவர் தேவையில்லாமல் கவலைப்படுகிற ஒருவராக இருக்கிறார். இவ்வாறு முழுநேர ஊழியத்திற்கு வந்துவிட்டோமே, எப்படி என் பெண் பிள்ளையை கரையேற்றப் போகிறேன்? எப்படி என் வாழ்க்கையில் சாதிக்கப்போகிறேன்? ஒரு பைக் கூட வாங்க முடியாமல் எப்படி நான் ஊழியம் செய்யப் போகிறேன்? எப்படி நான் பயணப்பட போகிறேன்? என்ற தேவையற்ற கவலைகள் ஊழியர்களுக்கும் ஆபத்தாகவும் இருக்கிறது. வீணான கவலைகள், உங்கள் ஊழியத்தை ஒடுக்கிவிடும். ஆகவே, கர்த்தருக்குள் ஆரோக்கியமாய் கவலைப்படாதபடி கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு என்று வேதம் சொல்லுகிறபடி, கர்த்தர்மேல் பாரத்தை வைத்துவிட்டு, தொடர்ந்து ஊழியம் செய்வதற்கு உங்களுக்கு பழக்கம் வேண்டும், தைரியம் வேண்டும், அதற்கான விசுவாசம் வேண்டும் பிரியமானவர்களே.

தொடர்ந்து, நாம் மேய்ப்பு பணியில் அநேக சவால்கள், ஆபத்துக்கள், சோதனைகள் எல்லாவற்றையும் இதுவரை பார்த்தோம். இதில் நாம் இன்னும் அதிகமாய் சோர்வுறுகிற காரியங்கள் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் ஊழியத்திலும், தனிப்பட்ட வாழ்விலும்,

*குடும்பம் மற்றும் சமுதாய வாழ்விலும் அதிகமாய் சோர்வுறச் செய்து, பாதிப்பை உண்டாக்குகிறது. போராட்டங்கள், எதிர்ப்புகள் போன்றவை எப்படியெல்லாம் வருகிறது என்று 2 தீமோ.4:14-18 வரையிலான வசனங்களை நாம் அதை அறிந்துகொள்ள முடிகிறது.*

கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக.(2தீமோ 4:14)

நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்து நின்றவன்.(2தீமோ 4:15)

நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக.(2தீமோ 4:16)

கர்த்தரோ எனக்குத் துணையாகநின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்.(2தீமோ 4:17)

கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.(2தீமோ 4:18)

*பார்த்தீர்களா? இதிலே தனிமை என்ற பிரச்சனை இருக்கிறது. அதாவது எல்லோரும் கைவிட்டார்கள், தனியாகவிட்டுப் போய்விட்டார்கள் என்று பவுல் சொல்லுகிறார். அதுபோல அலெக்சாண்டர் என்ற மனிதனுடைய தீமையான செய்கைகள், அவன் மிகவும் ஊழியத்தை எதிர்த்து நின்ற காரியமான ஆபத்தைக் குறித்து சொல்லுகின்றார். அதைப்போல சிங்கத்தின் வாயிலும், அதாவது எதிராளிகள் விழுங்கத்தக்கதாக செயல்பட்ட அந்த நிகழ்ச்சியிலிருந்து கர்த்தர் என்னை இரட்சித்தார். இன்னும்கூட கர்த்தர் எல்லா தீமையினின்றும் என்னை இரட்சிப்பார் என்று நம்பிக்கையோடு கூறுகிறதை நாம் வாசிக்கிறோம் பிரியமானவர்களே.*

*இவ்விதமாக ஆபத்துக்கள், உபத்திரவங்கள் ஊழியத்தில் வரக்கூடும். வெளி.12:10-ம் வசனம், 'அப்பொழுது வானத்திலிருந்து பெரிய சத்தம் உண்டாகி, இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய இராஜ்ஜியமும் அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றம் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றம் சாட்டுகிறவன் தாழத்தள்ளப் பட்டுப்போனான்' என்று பிசாசானவனுடைய குணாதிசயமான குற்றம் சாட்டுகிற செய்கையைக் குறித்து இந்த வசனத்தில் சொல்லபடுகிறதை நாம் அறிய முடிகிறது. இவற்றையெல்லாம் கவனத்தில் வைத்து பார்க்கும்போது, மூன்றுவிதமான பிரச்சனைகள் வர வாய்ப்பிருக்கிறது. பொதுவாக நம் வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் வியாதி, பாடுகள்,*

துயரங்கள், இழப்புகள், விபத்துக்கள் போன்றவைகள் இருக்கிறதை நாம் அறிவோம். இவைகள் நமக்கு மட்டுமல்ல, எல்லா மனிதர்களுடைய வாழ்விலும் நிகழ்கிறவைகள்தான். வேதம் வாசிக்கிறேன், ஜெபிக்கிறேன், எனக்கு நோய் வராது என்று சொல்ல முடியாது, துயரங்கள், இழப்புகள், விபத்துக்கள் போன்றவை பொதுவான பிரச்சனையாக இருக்கிறது.

இரண்டாவது காரியம், ஏனையோரால் ஏற்படுத்தப்படுகிற பிரச்சனைகள், தவறான குற்றச்சாட்டுகள், தவறான புரிந்துகொள்ளுதல் காரணமாக நமக்கு நாம் செய்கிறதை அவர்கள் தப்பான கண்ணோட்டத்தில் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள் என்றால், அது பிரச்சனைதான். தவறான குற்றச்சாட்டுகள் சொல்லுகிற மக்களும் உண்டு, நிச்சயமாய் நம்மை பிடிக்காதவர்கள் என்று ஒரு கூட்டம் சபையில் இருக்கும். ஏதோவொரு விதத்தில் நாம் செய்த காரியம், சொன்ன காரியம் அவர்களுக்குப் பிடிக்காமல் போயிருந்தால், இவ்விதமான செயல்பாடுகளில் அவர்கள் இறங்கிவிடுவார்கள்.

மூன்றாவது காரியம், தேவனுடைய ஊழியத்தின் நிமித்தமாக ஏற்படுத்தப்படுகின்ற உபத்திரவங்கள். நீங்கள் பிரச்சனையை பண்ணாவிட்டாலும், நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறதினால் பாடுபடுகிறீர்கள். கிறிஸ்துவின் ஊழியத்தை செய்கிறதினால் பல பாடுகள், எதிர்ப்புகள் வரும். ஏனெனில் நீங்கள் மற்ற மதத்திலிருந்து அவர்களைக் கூப்பிட்டுக்கொண்டு வருகிறீர்கள். அப்போது அந்த மதத்தைச் சார்ந்தவர்கள் நிச்சயமாக எதிர்ப்பார்கள். ஏதாவது ஒரு பிரச்சனை பண்ணுவார்கள், வழக்கு தொடுப்பார்கள், இல்லாவிட்டால் குடும்பத்தில் இதைச் செய்கிறார், அதைச் செய்கிறார் என்று பல்வேறு அபாண்டமான குற்றங்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. இவ்விதமாக ஊழியத்தின் நிமித்தமாக ஏற்படுகிற உபத்திரவங்கள் மூன்றாவது வகை. இவ்விதமாக பலதரப்பட்ட பிரச்சனைகள் மத்தியிலே, சவால்கள் மத்தியிலே, ஆபத்துக்கள் மத்தியிலே, ஊழியர் என்பவர் செல்ல வேண்டியதாயிருக்கிறது. பிரியமானவர்களே, உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று ஏற்கனவே இயேசு கூறிவிட்டார், ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன், ஆகவே ஜெயம் பெறுவீர்கள் என்றுதான் கர்த்தர் சொல்லுகிறார்.

தொடர்ந்து நாம் இந்த மேய்ப்புபணி ஊழியத்திற்கு தேவன் தருகிற ஆசீர்வாதங்களைக் குறித்து சில காரியங்களை சிந்தித்துப் பார்ப்போம். இந்த மேய்ப்புபணி மற்றும் போதக ஊழியத்தில் கர்த்தருக்கு என்று செய்கிற ஊழியத்திலே அநேக ஆசீர்வாதங்கள் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அப்.20:28-வது வசனம், 'ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்' என்று கூறுகிறது. என்னவொரு பாக்கியத்தைக் குறித்து வேதம் சொல்லுகிறது பாருங்கள்.

தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் அதைச் சம்பாதித்தார். நீங்கள் ஒரு காரியத்தை இதில் சிந்திக்க வேண்டும். இயேசுகிறிஸ்து இரத்தத்தை சிந்தினார், ஆனால் இங்கே வேதம் சொல்லுகிறது, தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே என்று வசனம் கூறுவதிலிருந்து, இயேசு தன்னை தெய்வமாக எங்கேயாவது சொல்லியிருக்கிறாரா? தேவனாக சொல்லியிருக்கிறாரா? என்றால் இந்த வசனங்கள் அதை உறுதி செய்கிறது என்பதை கவனித்துப் பாருங்கள். தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட, அதாவது அவ்வளவுதூரம் விலையேறப்பெற்ற ஒரு சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்தாராம். ஆக, ஒரு விலையுயர்ந்த, ஒரு மதிப்பு மிக்க பரிசுத்த ஆவியானவர் உங்களை கண்காணியாக வைக்கின்றார், என்னவொரு ஆச்சரியமான, பாக்கியமான அனுபவம், அதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். உதாரணமாக, உலகிலே மிகப்பெரிய மற்றும் மிகச் சிறந்த தலைவராக உலகத்தாரால் மதிக்கப்படுகிற அமெரிக்க ஜனாதிபதி உங்களிடம் விலையேறப்பெற்ற ஒன்றை தருகிறார் என்றால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும், இல்லையா? அதைப்போலத்தான் இங்கே தம்முடைய இரத்தத்தாலே சம்பாதித்த, சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக நியமித்திருக்கிறது என்பதை இந்த வசனத்தின் அடிப்படையில் நாம் உறுதிசெய்துகொண்டு, நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும் பிரியமானவர்களே.

இந்த மாபெரும் பாக்கியத்தை கர்த்தர் உங்களுக்கு தந்திருக்கிறார். தேவன் உங்களை உண்மையுள்ளவர் என்று எண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறார், அதுமட்டுமல்ல, இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையானது, நாம் நினைக்கிறதுபோல ஒரு கட்டிடம் அல்ல. சபையானது, இரட்சிக்கப்பட்ட மக்கள் கூடிவருவதற்கு பயன்படுகிறதேயொழிய மற்றபடி அதுவொரு கட்டிடம்தான். அதுவொரு சிறிய கட்டிடமாக இருக்கலாம், அல்லது பெரிய கட்டடிடமாக இருக்கலாம். இரண்டுபேராவது, மூன்று பேராவது இயேசுவின் நாமத்தில் கூடியிருக்கிற ஒரு இடம் என்பதே சபையினுடைய அளவுக்கு கர்த்தர் வைத்திருக்கிற அளவாக இருக்கிறது. ஆக, குறைந்த நபர், அதிக நபர் என்பதெல்லாம் ஒரு பிரச்சனை இல்லை. சிறிய கட்டிடம், பெரிய கட்டிடம் என்பதும் பிரச்சனை இல்லை. ஆனால், அந்த சபையை தம்முடைய இரத்தத்தாலே சம்பாதித்து, நீங்கள் அதை கண்காணிப்பு செய்யும்படி உங்கள் கையிலே கொடுத்து, நீங்கள் மேய்ப்பர்களாக இருந்து அந்த பொறுப்பை வகியுங்கள் என்று உங்களிடம் தந்திருக்கிறார். அந்த பாக்கியத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்ற உணர்வோடு, ஒவ்வொரு நாளும் செயல்படவேண்டியது அவசியம் பிரியமானவர்களே.

அடுத்து ஒரு பாக்கியமான மற்றும் ஆசீர்வாதமான காரியத்தைக் குறித்து நான் உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன். எபிரெயர் 13:17-ம் வசனம், ‘உங்களை நடத்துகிறவர்கள்

உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாக விழித்திருக்கிறவர்களானபடியால் அவர்கள் துக்கத்தோடு அல்ல, அதை சந்தோஷத்தோடு செய்யும்படி அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடு அப்படி செய்தால் அது உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கமாட்டாதே' என்று கூறுகிறதைப் பாருங்கள். எவ்வளவு பெரிய பாக்கியத்தை தருகிறார் என்று பாருங்கள், என்னதொரு அசீர்வாதம்! நீங்கள் ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் பண்ணுகிற இடத்தில் இருக்கிறீர்கள். உங்கள் கைகளில் கொடுக்கப்பட்ட ஆத்துமாக்களுக்கு நீங்கள் உத்தரவாதம் பண்ணுகிற அந்தப் பொறுப்பை கர்த்தர் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். அதை துக்கத்தோடு செய்யாமல், சந்தோஷத்தோடு செய்யுங்கள். அதற்கு மற்றவர்கள் கீழ்ப்படிந்து அடங்கி செல்லும்படி சொல்லுகின்றார். ஆகவே, சபையார் உங்களுக்கு கீழ்ப்படிந்து செல்லவேண்டும் என்பது தேவனுடைய திட்டமாயிருக்கிறது. படித்தவர்களாக இருக்கலாம், உங்களைவிட செல்வத்தில் கூடியவர்களாக இருக்கலாம், அவர்களுக்கு நீங்கள் உத்தரவாதம் பண்ணுகிறீர்கள், தேவனுடைய சந்நிதியிலே அவர்களுக்காக திறப்பில் நிற்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, கர்த்தர் சொல்லுகிறார் உங்களுக்கு கீழ்ப்படிந்து அடங்க வேண்டும் என்று சபையாருக்கு கட்டளையிடுகிறார். இந்த பாக்கியத்தை போதகர்களாகிய, மேய்ப்பர்களாகிய நீங்கள் பெறுகிறீர்கள். அது தேவனே தருகிற ஒரு அதிகாரமாய் இருக்கிறது, அதற்காக அடக்கியாள வேண்டுமென்று அர்த்தமல்ல. ஆனால் அவர்கள் அடங்கிச்செல்ல உங்கள் கைகளில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். அதாவது என்ன சொல்ல வேண்டுமென்றால், பெரிய, பெரிய மக்களாய் இருப்பார்கள். ஆனால், உங்களிடம் வந்து மிகவும் பணிவாக தங்களுடைய பிரச்சனைகளை சொல்லுகிறது. அதற்காக நீங்கள் ஜெபிக்கிறது, அந்த பாக்கியத்தை நீங்கள் பெறுகிறீர்கள். அது மட்டுமல்ல, அவர்களுடைய வீடுகளிலுள்ள அந்த விழாக்களில் பங்குபெறுகிற பாக்கியத்தை பெறுகிறீர்கள். மதித்து உங்களுக்கு ஒரு இடத்தைக் கொடுத்து நீங்கள் ஜெபிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிற, அடங்கி செல்லுகிற ஒரு பாக்கியத்தை கர்த்தர் உங்களுக்கு தந்திருக்கிறார். அவர்களின் வீட்டிலிருக்கிற பிரச்சனைகள், அவர்களின் வீட்டிலிருக்கிற மகிழ்ச்சியான காரியங்கள், மற்றும் குடும்பத்தோடு குடும்பமாய் உங்களை கருதுகிற ஒரு பாக்கியம், நீங்களும் உங்கள் குடும்பத்தாரும், பிள்ளைகளும் அவர்களோடுகூட வளர்கிறது போலவே ஒரு பெரிய சமுதாயம் யாருக்கு கிடைக்கும் இந்த பாக்கியம்? பெரிய பணக்காரராக இருந்தாலும், அவர்கள் பணத்தை வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம், ஆனால் அவர்களுக்கு மனிதர்களை சம்பாதிக்கிற பாக்கியம் கிடையாது. ஏனென்றால் பணம் வந்த உடனேயே அவர்களுக்குள்ளே ஒரு பெருமை, இல்லாவிட்டால், அவர் பெருமையாக இல்லாவிட்டாலும் மக்கள் அவர் பேசுவதை, பெருமையாக எடுத்துக்கொள்வார்கள். அவர் எப்பொழுதும்போல எளிமையாகத்தான் இருப்பார். ஆனால் இவர்கள் வந்து அவரை மிகவும் பெருமையாக நினைக்கிறார் என்று நினைப்பார்கள். ஆனால் இங்கே ஒருவருக்கொருவர் கனம்

பண்ணுவதற்கு முந்திக்கொள்கிற ஒரு சமுதாயம் உங்களுக்கு முன்னிலையில் இருக்கிறது. நீங்கள் சொல்வதைக் கேட்கிறதற்கும், நீங்கள் சொல்லுகிற ஆலோசனைகளை வேதத்தின்படி அவர்களுக்கு சொல்லி நடத்துகிறதை கேட்கிற உங்களைவிட தகுதியில் கூடிய மக்களும்கூட அடங்கி, ஒடுங்கிப்போகிற ஒரு பெரிய பாக்கியத்தை கர்த்தர் உங்களுக்கு தந்திருக்கிறார். அது ஆச்சரியமாய் இருக்கும். அந்த உறவுகள் தான் மிகப்பெரிய பாக்கியமான அனுபவம் பிரியமானவர்களே.

அதனால்தான் உங்கள் கைகளில் கொடுக்கப்பட்ட அந்த தேவனுடைய மந்தையை நீங்கள் இறுமாப்பாய் ஆளக்கூடாது என்று சொல்லி, பேதுரு எழுதுகின்றார். எனவே, இறுமாப்பாய் ஆளக்கூடிய அளவுக்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதை இறுமாப்பாய் ஆளாதீர்கள், அவர்கள் அடங்கிப் போகிறார்கள், கீழ்ப்படிந்து போகிறார்கள், அதற்காக நீங்கள் இறுமாப்பாய் ஆளக்கூடாது என்று பேதுரு எழுதுகிறார், பார்த்தீர்களா? இது உண்மையிலே ஒரு அன்பான உறவாய் இருந்தால், அதைவிட ஒரு மகிழ்ச்சியான உறவு அல்லது ஒரு மகிழ்ச்சியான பொறுப்பு வேறு என்ன இருக்கிறது? நீங்கள் சொல்வதை கேட்கிறதொரு பெரிய குடும்பம் உங்கள் கைகளில் இருக்கிறது. அவ்வளவு ஆத்துமாக்களும் உங்கள் குடும்பங்கள் தானே. ஐயா, போதகரே, குருவானவரே, சொல்லுங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்கிற அளவுக்கு பெரிய பணக்காரர்கள், படித்தவர்கள் எல்லோருமே உங்களை மதிக்கிற இடத்தில் கர்த்தர் வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்து வாழுங்கள் பிரியமானவர்களே.

இரண்டாவது பாக்கியம் என்ன என்பதை வேதத்திலிருந்து உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். *1 தீமோ.3:1*-ம் வசனம் இவ்விதமாய் சொல்லுகிறது, 'கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை' ஆங்கிலத்தில் இவ்விதமாய் வாசிக்கிறோம், 'Here is a trustworthy saying: Whoever aspires to be an overseer desires a noble task. King James Version இவ்விதமாய் சொல்லுகிறது, This is a true saying, if a man desire the office of a bishop, he desireth a good work என்று சொல்லப்பட்டிருக்கிறது பாருங்கள். ஆக, இது உண்மையான ஒரு வார்த்தை. என்ன தெரியுமா? ஓவர்சீராக இல்லாவிட்டால், பிஷப்பாக இல்லாவிட்டால், கண்காணியாக இருக்கிற ஸ்தானத்தை விரும்புகிறவன். கண்காணி என்பதின் அர்த்தம், கண்காணிக்கிற போதக மேய்ப்பன் என்பதாகும். அவன் நல்ல வேலையை விரும்புகிறான், ஒரு மேன்மையான பணியை விரும்புகிறான் என்ற அர்த்தத்தில் இந்த வசனங்கள் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது பிரியமானவர்களே, பார்த்தீர்களா?

உலகிலேயே நல்ல வேலை என்று அரசாங்க வேலையைத்தான் என்று நினைத்தோம். அவருக்கு என்ன? ஒரு கவலையும் இல்லை, அரசாங்க வேலை, பெரிய

அதிகாரி என்று சொல்லுகின்றோம். முதலமைச்சர், பிரதம மந்திரி இல்லாவிட்டால் அமெரிக்க ஜனாதிபதி என்று நாம் அவர்களைப் பாராட்டுகிறோம். அது ஒரு விதத்தில் நல்ல வேலைதான். ஆனால் அவருக்கு இருக்கிற அளவில்லாத மற்றும் பதட்டமான பிரச்சனைகளை நீங்கள் பக்கத்தில் போய் பார்த்தால்தான் உங்களுக்கு உணர முடியும். வெளியிலிருந்து பார்க்கிறபோது, எல்லாப் பதவிகளிலும், எல்லாப் பொறுப்புகளிலும் இருக்கிறவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்றுதான் இருக்கும். ஆனால், அந்த பொறுப்பு இல்லாவிட்டால், அந்த தலைமை பதவியிலிருந்து அவர் செய்யவேண்டிய பணிகள், ஏற்கவேண்டிய ஏகப்பட்ட நிந்தனைகள், அவமானங்கள் மற்றும் எதிர்கட்சிக்காரர்கள் கூறுகிற வார்த்தைகள், அதேபோல் உள்கட்சியிலிருந்து வருகிற அழுத்தங்கள் இருக்கிறதே அது மிகவும் அளவில்லாதது. ஐயா, இந்த வேலையைச் செய்துகொடுங்கள், அந்த மாவட்டத்தில் நடக்கிற திட்டங்களை சீக்கிரம் முடித்துவிட உத்தரவிடுங்கள் என்று சொல்லுகிற அநேகர் மனுக்களை கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இதையும் தாண்டி அவர்கள் சுதந்திரமாக முடிவெடுத்து, அவர் திறமையாக நடத்திப்போகிறார் என்றால், எவ்வளவு பெரிய காரியம். நமக்கு வெளியிலிருந்து பார்க்கும்போது, அவர்கள் ஜாலியாக இருப்பதுபோல் இருக்கும். அவர்கள் மதிக்கத்தக்க இடத்தில் நிச்சயமாய் இருக்கின்றார்கள், ஆனால் என்னதான் மதிப்பு என்று ஒன்று இருந்தாலும், பிரச்சனை இல்லாவிட்டால், இதையெல்லாம் தாங்குகிற இருதயம் வேண்டும் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்.

வேதத்தில், நமக்கு ஒரு நல்ல வேலை சொல்லப்பட்டிருக்கிறது, ஒரு காண்காணியாய், ஒரு மேய்ப்பனாய், போதகனாயிருந்து கவனிக்கிற வேலையைச் செய்கிறவன், அந்த வேலையை விரும்புகிறவன், ஒரு உன்னதமான பணியை, மேன்மையான பணியை, நல்ல வேலையை விரும்புகிறான். அது கனப்படுத்தப்படுகிற ஒரு இடத்திற்குரியதாய் இருக்கிறது. அதை கர்த்தர்தான் சொன்னார், ஒருவன் எனக்கு ஊழியம் செய்வானானால், பிதாவானவர் அவனை கனம்பண்ணுவார் என்று. எவ்வளவு பெரிய கனம் என்று பாருங்கள். வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தர் உங்களை கனம் பண்ணுகிறாராம், மேய்ப்பனாய், போதகனாய், ஊழியனாயிருந்து செய்கிற உங்களை கனம் பண்ணுகின்றார். உலக மனிதர்கள் கனம் பண்ணுகிறதைப்போலவே, உதாரணமாக, அமெரிக்க ஜனாதிபதி என்னை, ரமேஷ் ஜோஸ்வா, இங்கே வா என்று சொல்லி உலக மக்களுக்கு முன்பாக அவர் நிற்கிற மேடைக்கு அழைக்கிறார் என்று வையுங்களேன், என்னே மகிழ்ச்சி, இல்லையா? ஆனால் இதைவிட மேன்மையான உலகத்தை, வானத்தையும், அண்ட சராசரங்களையும் படைத்த கர்த்தர் நம்மை கனப்படுத்துகிறார். யாரைத் தெரியுமா? ஊழியம் செய்கிற உங்களைத்தான், மேய்ப்பனாய், போதகனாய் எத்தனையோ இடையூறுகள் மத்தியில், அவருக்காய் சகித்து போகிறீர்களே உங்களை அவர் கனப்படுத்துகிறார். அந்த நல்ல வேலையை நீங்கள் தெரிந்துகொண்டபடியினால், உங்களை அவர் நல்ல மேன்மையான இடத்தில் வைப்பார், ஆசீர்வாதமாக வைப்பார். எல்லா

தேவைகளையும் சந்தித்து, உங்களை ஆச்சரியமாய் அனுதினமும் நடத்துவார். நீங்கள் பிதாவால் கனப்படுத்தப்படுகிற ஒரு பாக்கியத்தை அடைவீர்கள், என்னதொரு பாக்கியம், என்னதொரு ஆசீர்வாதம் என்று சிந்தித்துப் பாருங்கள் பிரியமானவர்களே.

மற்றொரு பாக்கியம் இருக்கிறது, ஒரு நித்தியமான பலனுக்கு ஏதுவான ஊழியத்தை செய்கிறீர்கள், அதாவது உலகில் எந்த வேலையும் நிரந்தரமான ஒரு விளைவை தரக்கூடியது அல்ல. ஆனால் நீங்கள் செய்கிற பணிகள் மட்டும் நித்தியமான விளைவை உண்டாக்கப்போகிறது, நீங்கள் செய்கிற கிரியைகளுக்கு பலனுண்டு. அதோடு நீங்கள் அநேக மக்களுக்கு நித்திய ஜீவனுக்கேதுவான ஒரு நிரந்தரமான பலனைப் பெற்றுக் கொடுக்கின்ற மாபெரும் பாக்கியமான காரியத்தை செய்கிறீர்கள். உலகிலே மனிதர்கள் மற்றவர்களுக்கு உதவுகிறார்கள், உதவுவதில் எதை அவர்கள் கண்டுகொள்கிறார்கள்? அதில் ஒரு மகிழ்ச்சி, அவ்வளவுதான். அவரைப் பற்றி பேசப்படுவதைப் பார்த்தவுடன் இவரும் சந்தோஷப்படுகிறார். அவர் மிகவும் நன்றி ஐயா, என்று சொல்லுகிற வார்த்தையைக் கேட்டு, இவர் மனமகிழ்ந்து போகிறார், அவ்வளவுதான் செய்ய முடியும். நீங்கள் கொடுத்த அந்தவொரு நன்மை, ஒரு ஆசீர்வாதம் கொஞ்ச நாட்களுக்கு நிலைக்கும். மறுபடியும் அவர் இன்னொரு பிரச்சனையோடு வந்து நிற்பார். ஆனால், நீங்கள் கர்த்தரை கொடுக்கிறீர்கள், ஜீவனுக்கு ஏதுவாக, அவர்களை வளர்க்கிறீர்கள், கூடவேயிருந்து ஆவியானவர் உதவியோடு சத்தியத்தை அறிவித்து, நித்திய நித்தியமான வாழ்வுக்கு நேராக அந்த மக்களை நடத்துகிறீர்கள். ஆக, எவ்வளவு பெரிய ஆசீர்வாதத்தை பெறுகின்ற வாழ்க்கையை மற்றவர்களுக்கு கொடுக்கிறீர்கள் என்று உணர்ந்து வாழுங்கள் பிரியமானவர்களே. அந்த சந்தோஷத்தை பெறுங்கள். நீங்கள் கொடுக்கின்ற காரியம் நித்தியமான தீர்வை உண்டாக்கக்கூடியது.

இந்த உலகத்தில் ஏற்படுகிற பிரச்சனைகளுக்கு கொடுக்கப்படுகிற தீர்வுகளெல்லாம், தற்காலிகமானது, சில நாட்களுக்கு அல்லது சில மாதங்களுக்குத்தான், மறுபடியும் அவை புதிய வடிவில் வெளிவரும். ஆனால் தேவனிடமிருந்து வருகிற தீர்வானது, நித்திய ஜீவனை மட்டுமல்ல, வேத வசனத்தைக் கொடுத்து, ஆவியானவரைக் கொடுத்து, ஒரு மனுஷனை வளர்த்துவிட்டோம் என்றால், அவன் நாளுக்குநாள் ஆசீர்வாதமாய் வளர்கிறதை நீங்கள் பார்ப்பீர்கள். ஒரு மனிதனுடைய வாழ்வு இரட்சிக்கப்படுகிறதை பார்ப்பீர்கள். ஒரு மனிதனுடைய குடும்ப சீரழிவிலிருந்து, அந்த குடும்பம் மீட்கப்பட்டு, நலமாய், வளமாய் வளர்கிறதே, அதைப் பார்த்து நீங்கள் பல விதங்களில் கர்த்தரைத் துதிக்கிற இடத்திற்கு வருவீர்கள். அநேகர் உங்களை வாழ்த்துகிற இடத்தில் நீங்கள் இருப்பீர்கள். பாஸ்டர் ஐயா, நீங்கள் அன்றுமட்டும் அதைச் செய்யவில்லை என்றால், என் வாழ்வு எங்கேயோ போயிருக்கும் என்று உணர்ந்து சொல்லுகிற, அநேக மக்கள் உங்களோடு இருப்பார்கள் பிரியமானவர்களே. நீங்கள் செய்கிற பணி நித்தியத்திற்கு ஏதுவான ஒரு ஊழியமாக

இருக்கிறது, நித்திய நித்தியமான பலனைக் கொடுக்கிற ஒரு ஊழியமாயிருக்கிறது. குடிகாரர்கள் சிலரை நீங்கள் திருத்தி, கிறிஸ்துவுக்குள் கொண்டுவந்து இருப்பீர்களானால், அந்த குடும்பங்கள் வாழ ஆரம்பித்திருக்கும். அநேக கொடிய திருடர்கள், கொலைகாரர்கள் போன்றோர்களுக்கு நீங்கள் இயேசுவை கொடுத்ததினால், அவர்கள் இரட்சிக்கப்பட்டு, நித்திய ஜீவனை உடையவர்களாய் வாழ்வார்கள்.

ஆகவே, மனிதர்களுடைய வாழ்விலே குணம் மாறுதல்கள், வாழ்விலே உயர்வுகள் காணப்பட்டு, அவர்கள் என்றென்றுமாய் மகிழ்கிற ஒரு வாழ்வுக்கு நேராய் நீங்கள் பணி செய்கிறீர்கள். இந்த பணி சாதாரணமான பணி அல்ல. இது யாருக்கு கிடைக்கும்? எந்த பதவியில் இருந்தாலும், இந்தப் பணியைச் செய்ய முடியாது. ஏனென்றால், அதிகாரத்தில் இருக்கிறவர்கள் மிரட்டலாம், நீங்கள் அதைச் செய்ய இயலாது, ஒருவரைப் பார்த்து இப்படிச் செய்துவிடுவேன், அல்லது தொலைத்துவிடுவேன் என்றெல்லாம் பேச முடியாது. ஆனால், இது தானாகவே மனமுவந்து ஒரு மனிதன் மனந்திரும்பி கர்த்தரண்டையில் வருகிற ஒரு மாபெரும் காரியத்தை இது செய்துவிடும் பிரியமானவர்களே. நீங்கள் செய்கிற ஊழியம் நித்தியமான பலனை தரக்கூடியது.

இப்போது நாம் 1 தெச.5:12-13-ம் வசனங்களை வாசிப்போம், ‘அன்றியும் சகோதரர்களே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாய் உங்களுக்கு புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையின் நிமித்தம் அவர்களை அன்பாய் நீங்கள் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்கிறோம்.’ ஆக, என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள். விசாரணை செய்கிறவர்கள் மேய்ப்பர்கள், போதகர்கள் பிரயாசப்பட்டு, உங்களை விசாரணை செய்கிறதினால், உங்களை நடத்துகிறதினால் உங்களுக்கு புத்திசொல்லி, அநேக காரியங்களை செய்கிறதினால், நீங்கள் அவரை மதிக்க வேண்டும். அது மட்டுமல்ல அவருடைய செயல்பாடுகள் மற்றும் வேலையின் நிமித்தம் நீங்கள் அன்பாய் அவர்களை வைத்திருக்க வேண்டுமென்று சொல்வதைக் கவனியுங்கள், பவுல் அவ்விதமாய் எழுதுகிறார். ஆக, ஒரு பாதிக்கப்படத்தக்க இடத்தில் கர்த்தர் இந்த ஊழியத்தின் நிமித்தம் வைக்கின்றார், ஒரு பெயர் சூட்டுகின்ற காரியமாய் இருக்கட்டும், பிள்ளையின் பிறந்த அந்த சம்பவம் முதலில் பார்க்கிற ஒரு பாக்கியம்கூட, அதேப்போல, முக்கியமான ஒரு வீட்டின் நிழ்வுகள் எல்லாவற்றையும் மதித்து உங்களிடம் வந்து கேட்கிறார்கள், பாருங்கள். ஆகவே, உண்மையாகவே போதகரை மதிக்கிற மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் சிலர்தான் மதிக்கிறதில்லை, அதுவொன்றும் பிரச்சனை இல்லை. இவ்விதமாக மதிக்கிற இடத்தில் உங்களை தேவன் வைத்திருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளுங்கள் பிரியமானவர்களே.

எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் அந்த மேய்ப்பன், போதகன் என்ற ஒரு பொறுப்பில் தேவனைத் தவிர வேறு யாராலும் வைக்க முடியாது. அந்த ஆசனத்தில் அமர்ந்து நீங்கள் செய்யக்கூடிய கடமைகள் இருக்கிறது. மக்களுக்குச் செய்கின்ற அந்த பணிகள் மதிக்கப்படத்தக்கதாய் இருக்கிறது. நீங்கள் அதற்கு மாதிரிகளாய் இருக்க வேண்டும், எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்று பல காரியங்களை நாம் முதலிலிருந்தே சிந்தித்து வந்துகொண்டிருக்கிறோம். தேவன் உங்களை ஒரு மதிப்பான இடத்தில்தான் வைத்திருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளுங்கள். அந்த மதிக்கிற தன்மையை நீங்கள் சந்தோஷமாய் பயன்படுத்தவேண்டுமேயொழிய, அதை தவறாக பயன்படுத்திவிடக்கூடாது. பிரியமானவர்களே, இவ்விதமாய் அநேக காரியங்களைக் கர்த்தர் நமக்கு ஆசீர்வாதமாய் தந்திருக்கிறார். மதிக்கப்படத்தக்க இடத்தில் வைத்திருக்கிறார், ஒரு குடும்பமாய் வாழ்கிற பாக்கியத்தைத் தந்திருக்கிறார். நீங்கள் சொல்லுகிற புத்திமதியை அவர்கள் கேட்கிற இடத்தில் கர்த்தர் வைத்திருக்கிறார், கடிந்துகொள்ளுகிற உரிமையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள், எவ்வளவு பெரிய பணக்காரராக இருந்தாலும், எவ்வளவு பெரிய பொறுப்பில் இருந்தாலும், நீங்கள் கடிந்துகொண்டால், அவர்கள் கேட்கக்கூடிய இடத்தில் இருக்கிறார்கள், மட்டுமல்ல நிகழ்ச்சிகளைக் குறித்து, குடும்ப நிகழ்வுகளைக் குறித்து, நீங்கள் ஆலோசனை சொல்லுகிற இடத்தில் இருக்கிறீர்கள். மக்கள் யாவரையும் நல்வழியில் நடத்துகிற ஒரு முக்கியமான இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள், அவர்கள் வாழ்விலே சமாதானத்தைக் கொண்டுவருகிற இடத்தில் இருக்கிறீர்கள். அநேகருடைய உண்மையான வாழ்வுக்கு நீங்கள் காரண கர்த்தாவாக இருக்கிறீர்கள். மற்றவர்களெல்லாம் பொய்யான வாழ்வில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள், ஆனால் நீங்கள்தான் மெய்யான வாழ்வைப் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் நடத்துகிற அதாவது, ஒவ்வொரு அடியெடுத்து வைத்து அவர்களை அழைத்துச் செல்கிறீர்கள். ஒவ்வொன்றும் பரலோகத்திற்கு நேரான பாதை, ஒவ்வொரு நிமிடமும் கர்த்தருக்காக உங்கள் வாழ்வில் செலவழிக்கப்படுகிறது. நீங்கள் அவர்களுடைய திருமண காரியத்தில் கலந்துகொண்டால்கூட, அது ஊழியனாகிய நீங்கள் போனால்தான்தானே, அவர்கள் அடுத்து சபைக்கு ஒழுங்காக வருவார்கள். ஆகவே, நீங்கள் ஒரு மகிழ்ச்சியான சமுதாயத்தோடு இணைந்து இருக்கிறீர்கள், நீங்கள் அதை நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும் பிரியமானவர்களே.

இப்போது ஒரு டாக்டர் இருக்கிறார் என்று வையுங்களேன், அவர் எப்போதும் தொய்ந்துபோன முகம் உள்ளவர்களையே பார்ப்பார், காரணம் நோயோடு உள்ளவர்கள்தான் மருத்துவமனைக்கு வருவார்கள். மருத்துவமனைக்கு வருகிற எல்லோருமே சிரித்துக்கொண்டே வருவார்கள் என்று சொல்ல முடியாது, நோயோடு, வேதனையோடு, அழுகையோடு வருகிற மக்களை தினமும் மருத்துவர்கள் சந்திக்கிறார்கள், அதில் பலர் உயிருக்காக போராடுகிறவர்களாக இருக்கிறார்கள், எனவே, மருத்துவர்களும் அவர்களைக் காப்பாற்ற போராடுகிறார்கள், எப்படியாவது அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற

கரிசனை அவர்களுக்கு இருக்கிறது. ஆக, ஒவ்வொரு மனிதன் படுகிற பாடுகளையும் அவர் உண்மையாகவே, ஐயோ, இந்த பிரச்சனையிலிருந்து அவர்கள் வெளியே வந்துவிட்டால், நன்றாக இருக்கும் என்று சொல்லித்தான் அவர்கள் அநேக நோயாளிகளைப் பார்க்கிறார்கள். அத்தனை பேரையும், அவர் அதே மனநிலையோடுதான் பார்க்கவேண்டும், பழக வேண்டும். முதன்முதலில் நோயோடு வந்தவர்கள், தோய்ந்துபோன முகமுள்ளவர்களாய் வந்தவர்கள், கவலையோடு வந்தவர்கள், அவர்களின் நோய் சுகமானபின்பு, மிகவும் நன்றி என்று அந்த மருத்துவரிடம் சொல்லுவார்கள். ஆனால் அவர்கள் அதிகம் பார்க்கிற முகங்கள் கவலையோடு உள்ளவைகளாகத்தான் இருக்கிறது. அதே கண்ணோட்டத்தோடு உங்கள் சபையைப் பாருங்கள், மகிழ்ச்சியோடு துதிக்கிற மக்கள் எப்பொழுதும் உங்களோடு வந்து, ஐயா, இதற்காக ஜெபம்பண்ணிக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிற மக்கள், உங்களைப் பார்த்துவிட்டு போகலாமே என்று கருதி, உங்களிடம் வந்து பாஸ்டர் இதற்கு என்ன செய்யலாம்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று சொல்லி உங்களிடம் ஆலோசனை கேட்கிற கூட்டம், மதிக்கிற ஒரு கூட்டம் உங்களைச் சுற்றிலுமாய் எப்போதும் இருக்கிற ஒரு பாக்கியத்தைப் பெற்றிருக்கிறீர்கள். இதைவிட பாக்கியமான காரியம் வேறென்ன வேண்டும்? பிரியமானவர்களே. இவற்றையெல்லாம் உணர்ந்து நீங்கள் ஊழியம் செய்யுங்கள். ஊழியத்தை இரசித்து, ருசித்து செய்யுங்கள், தேவனுடைய திட்டத்தின்படி செய்யுங்கள், தேவனோடு இணைந்து செய்யுங்கள். தேவன் அவருடைய திட்டத்தில் இணைந்திருக்கிற மக்களை அழைத்து, அது யாராக இருந்தாலும், அதாவது ரோமர் 8:30-ம் வசனத்தின்படி, எவர்களை முன் குறித்தாரோ, அவர்களை அழைத்தும் இருக்கிறார், எவர்களை அழைத்தாரோ, அவர்களை நீதிமான்களாக்கியும் இருக்கிறார், எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியும் இருக்கிறார் என்ற வசனத்தை நினைவில்கொண்டு, இந்த ஊழியத்தைச் செய்யுங்கள் பிரியமானவர்களே. உங்களை முன்குறித்து, மேய்ப்பனாக, போதகனாக ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். உங்களை அழைத்தவர், நீதிமான்களாக்கியும் இருக்கிறார், உங்களை நீதிமான்களாக்கி, ஊழியக்காரராக்கி, பயன்படுத்துகிற அவர் உங்களை மகிமைப்படுத்தவும் செய்வார் என்று இந்த வசனம் சொல்கிறது.

ஆக, ஒருமைப்படுத்தப்படுகிற ஒரு இடத்திற்கு, நாளுக்குநாள் கனப்படுத்தப்படுகிற ஒரு இடத்திற்கு கொண்டுவருகிற தேவன், நம்முடைய தேவன். ஆகவே நீங்கள் இவ்விதமாய் இருந்துவிடப்போகிறது இல்லை. நாளுக்குநாள் உங்கள் ஊழியம் வளரும், நாளுக்கு நாள் உங்களை வல்லமையாக எடுத்து கர்த்தர் பயன்படுத்துவார். அதற்காக அவர் மகிமைபடுத்துகிற இடத்தை நோக்கி உங்களை நடத்திச் செல்கிறார் என்பதை புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் அவரோடு, அவருடைய திட்டத்தோடு மட்டும் இணைந்து செல்லுங்கள். உங்களை ஆசீர்வாதமான இடத்திற்கு கர்த்தர் கொண்டுபோய் வைப்பார் என்பதில் சந்தேகமில்லை. கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து, சிறந்த போதகராக,

மேய்ப்பர்களாக, ஊழியர்களாக வைத்து, தம்முடைய இராஜ்ஜியத்திற்கென்று பயன்படுத்துவாராக! ஆமென்!!

**ஜெபம்:** கிருபையும் இரக்கமும் நிறைந்த தகப்பனே, இவ்வளவாய் மேய்ப்புபணி இறையியல் பாடத்தை பயிலுவதற்கு எங்களுக்கு உதவினீரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம். கர்த்தர் எவ்வளவாய் வழிநடத்தி, நீர் ஆசீர்வதித்து கற்றுக் கொடுத்தீர், புரிய வைத்தீர். ஒரு மகிமையான ஊழியத்தை இவர்களுடைய கையிலே கொடுத்து இருக்கிறீர் என்ற நம்பிக்கையை கொடுத்தீர், அதற்காக ஸ்தோத்திரம். எத்தனையோ இடர்கள், ஆபத்துக்கள், சோதனைகள் இருந்தாலும், நாங்கள் ஒரு பாக்கியமான ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறோம். மாபெரும் பாக்கியத்தை கொண்டுவரக்கூடிய ஊழியத்தை செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே எங்களுக்கு முன்னேயிருக்கிற அந்த சந்தோஷத்தை நாங்கள் மனதில் கொண்டு ஓட உதவி செய்யும். ஒரு மபெரும் அறுவடையையும், மாபெரும் வளர்ச்சியையும் எங்களைக் கொண்டும், ஒருகூட்ட ஜனங்கள் கிறிஸ்துவில் நித்திய நித்தியமான வாழ்வுக்கு ஏதுவான பலனுள்ள அந்த வாழ்வைப் பெற்றுக்கொள்கிறார்கள், அதற்காக ஸ்தோத்திரம். இந்த ஊழியத்தின் மூலமாக, இந்த பாடங்களைக் கேட்டு உருவாகிக்கொண்டிருக்கிற போதகர்களை, மேய்ப்பர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பீராக. சிறந்த பணியை அவர்கள் உம்முடைய திராட்சை தோட்டத்தில் செய்ய கர்த்தர் உதவி செய்யும். அநேக ஆத்துமாக்கள் கிறிஸ்துவுக்குள் வளர உதவி தாரும், கிருபையாக கற்றுக்கொடுக்கிற பாக்கியத்தை கொடுத்தீர். இவர்களையும், எங்களையும் ஆசீர்வதித்து, தொடர்ந்து வழிநடத்தும், உம்முடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வேண்டிக்கொள்கிறோம், பிதாவே. ஆமென்!!

## <u>கேள்விகள்:-</u>

1) தனிமை என்பது எவ்வாறு மேய்ப்பனுடைய பணியில் சவாலாக இருக்கின்றது என்பதனை வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
2) எதிர்பாலருடனான உறவுகள் எவ்வாறு மேய்ப்பனுடைய பணியில் ஆபத்தாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
3) கடன் பிரச்சனை எவ்வாறு மேய்ப்பனுடைய பணியில் ஆபத்தாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
4) வீணான கவலை எவ்வாறு மேய்ப்பனுடைய பணியில் ஆபத்தாக இருக்கின்றது என்பதனை சற்று விளக்கமாக கூறுக?
5) மேய்ப்புபணியில் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்புகள் எவ்வாறெல்லாம் வருகிறது என்பதனை 2 தீமோ.4:14-18 வரையிலான வசனங்களின் அடிப்படையில் சற்று விளக்கமாக கூறுக? (மூன்று வகை பிரச்சனைகள்)

6) 1 தீமோத்தேயு 4:14-18 வரையிலான வசனங்களின் அடிப்படையில் ஊழியர்களுக்கான பொதுவான மூன்று பிரச்சனைகள் என்னென்ன?

7) மேய்ப்புபணி ஊழியத்திற்கு தேவன் தருகிற ஆசீர்வாதங்கள் என்னென்ன என்பதனை கூறுக? (தலைப்புகள் மட்டும்)

8) மேய்ப்புபணி ஊழியத்திற்கு தேவன் தருகிற ஆசீர்வாதங்களை வரிசைப்படுத்தி வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?